உ

கணபதி துணை.

தென்காசி

கவிராஜ பண்டிதரியற்றிய

# திருச்செங்கோட்டுப்

# புராண மூலம்.

சிற்றம்பலக் கவிராயரியற்றிய

உரை

OFFICE OF THE REGISTRAR ... 1932

இதைப் பழயகோட்டைப் பட்டக்காரர்

மகா-ா-ா-ஸ்ரீ

ராய பஹதூர்-உத்தமக்காமிண்ட

நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்கள்

விருப்பத்தின்படி

தி. அ. முத்துசாமிக் கோனாரால்

தமது

திருச்செங்கோடு

விவேக திவாகரன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூ. 2—0—0.

ஆங்கீரஸ வருஷம்.

1932.

Copyright Registered.

இப்புத்தகம் விலைக்குக் கிடைக்கும் இடங்கள்:—

தி. அ. முத்துசாமிக் கோனார்,
விவேக திவாகரன் அச்சுக்கூடம்,
திருச்செங்கோடு P. O.

ஸ்ரீ நாககிரி பண்டிதர்,
,, சேனாபதி குருக்கள்,
,, அர்த்தநாரி பிள்ளை, உபாத்தியாயர்,
,, அ. மாரிப்பூசாரி,
,, தம்பி-செங்கோடப்பூசாரி.

120797

## நன்கொடை அளித்தவர்கள்.

B

பழயகோட்டை மகா-ள-ள-ஸ்ரீ ராயபஹதூர் உத்தமக்காமிண்ட நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்கள் ரூ. 100.

Dr. P. சுப்பராயன் M. A., B.C.L., LL.D., Bar-at-Law, M.L.C. 50.

கோக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ R. கணபதிக் கவுண்டரவர்கள் ரூ. 30.

பாண்டமங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ வீரப்பபிள்ளையவர்கள் ரூ. 25.

## புஸ்தகங்களுக்கு முன் பணம் கொடுத்தவர்கள்.

| நாமதேயங்கள். | புத்தகம் | நாமதேயங்கள். | புத்தகம் |
|---|---|---|---|
| திருச்செங்கோடு. | | S. நஞ்சப்ப கவுண்டர் மிட்டாஜமீன்தார் சித்தளந்தூர்.. | 1 |
| ஸ்ரீ நாககிரி பண்டிதர் .... | 5 | N. நல்லப்ப கவுண்டர் மிட்டா ஜமீன்தார் மேழிப்பள்ளி ... | 1 |
| சேனாபதி குருக்கள் .... | 50 | சுப்பராய கவுண்டர் மரப்பறை மிட்டா ஜமீன்தார் ... | 1 |
| அர்த்தநாரிக் குருக்கள் .... | 5 | R. ராஜாக் கவுண்டர் காட்டுப்பாளையம் .... | 1 |
| சதாசிவ குருக்கள் .... | 1 | திருச்செங்கோடு. | |
| கணபதி குருக்கள் .... | 1 | V. V. C. R. வையாபுரி முதலியார் .... | 5 |
| வி. சு. நாகசுந்திரக்குருக்கள். | 1 | T. V. நடேசமுதலியார் ... | 10 |
| நடராஜ குருக்கள் .... | 2 | R. K. பாலசுப்பிரமணிய முதலியார் .... | 5 |
| மு. குலோத்துங்கவேதநாயக குருக்கள் .... | 1 | S. V. அர்த்தநாரி செட்டியார் | 2 |
| . சிவராம குருக்கள் .... | 1 | தே. ப. சின்னப்ப செட்டியார் | 2 |
| மா. சுந்தரக் குருக்கள் .... | 1 | வையாபுரி செட்டியார் மண்டி .... | 1 |
| கைலாச குருக்கள் ... | 1 | இரத்தினவேலு முதலியார் புரோப்ரைட்டர், ஷண்முகாபிரிண்டிங் ஹவுஸ் ... | 1 |
| குலசேகர சுப்பிரமணிய குருக்கள் .... | 10 | C. ராமுண்ணி நாயர் லோகல் பண்டு ஓவர்சியர் ... | 1 |
| T. S. வெங்கட்டரமண அய்யர் பாங்கர் ... | 15 | | |
| V. T. ராமசாமி அய்யர் B. A., B. L, தருமகர்த்தா. விட்டம்பாளையம். | 1 | | |
| ராஜாக் கவுண்டர் .... | 5 | | |
| சேனாபதி ராமலிங்ககவுண்டர்.. | 5 | | |
| சுந்தரக்கவுண்டர். தருமகர்த்தா | 1 | | |
| S. முத்துசாமி கவுண்டர் மிட்டாஜமீன்தார் புளியம்பட்டி | 1 | | |

| | |
|---|---|
| வரதராஜுலுநாயுடுகாருரி-இ. | 1 |
| பொன்னய்ய உபாத்தியாயர் குமாரர் அர்த்தநாரி பிள்ளை .... | 10 |
| அர்த்தநாரிப்பூசாரி .... | 1 |
| தம்பி செங்கோடப்பூசாரி .... | 2 |
| அ. மாரிப்பூசாரிமூங்கில்கடை | 10 |
| T. G. நடேச முதலியார் | 1 |
| வையாபுரி பிள்ளை ஷாப் | 1 |
| ரா. மு. வாசுதேவசெட்டியார் | 2 |
| ராமசாமி முதலியார் ஜவுளிக்கடை .... | 1 |
| சிவயோக முதலியார் .... | 1 |
| முருகேசன் செட்டியார் .... | 1 |
| மாரிமுத்து செட்டியார் | |
| பருத்திக்கொட்டை மண்டி | 1 |
| கணைக்கர்மடம் சண்முக பண்டாரம் .... | 1 |
| பொ. அ. மாரிமுத்து முதலியார்.... | 1 |
| சுப்பராய செட்டியார் மகன் பொன்னைய செட்டியார்.... | 1 |
| நடேசம் பிள்ளை வாக்ல் நேட்டர் ... | 1 |
| தாண்டவராய செட்டி தத்துப் புத்திரன் | |
| இராமலிங்கம் செட்டியார் ... | 1 |
| வீரபத்திர ஆச்சாரி ... | 1 |
| ராமசாமி ஆசாரி .... | 1 |
| சின்னு படையாச்சி .... | 1 |
| பழக்கடை அ. நாராயணசாமி செட்டியார் .... | 1 |
| தம்பரான் படையாச்சி மகன் முத்துப்படையாச்சி .... | 1 |
| ஆ. கு. லெட்சுமண செட்டியார் மளிகை .... | 1 |
| ர. மதன் சிங்கு .... | 1 |
| ராஜமய்யர் மண்டி ... | 2 |
| அ. அப்பாவு கவுண்டர் மளிகை .... | 1 |

| | |
|---|---|
| ஆ. வெ. அர்த்தநாரி செட்டி . | 1 |
| மு. அர்த்தநாரி செட்டியார்.... | 1 |
| நாகசுரம் நாராயண முதலி .... | 1 |
| சூரியம்பாளையம் சிற்றம்பல முதலியார் .... | 1 |
| சோமசுந்திர முதலியார் ... | 1 |
| பட்லூர். | |
| அ. செங்கோட கவுண்டர் .... | 1 |
| குமாரமங்கலம், | |
| ஆறுமுகம் பிள்ளை கி. மு. ... | 1 |
| உ. கந்தசாமி முதலியார் .... | 1 |
| எ. ஓங்காளி முதலியார் .... | 1 |
| எ. நடேசம் பிள்ளை .... | 1 |
| க. பழனி மூப்பன் ... | 1 |
| தல்லாரி பச்சான் தோட்டி .... | 1 |
| …ர்த்தம்பாளையம் கணக்கு அங்குமுத்து பிள்ளை ... | 1 |
| மோழுக்கவுண்டம்பாளையம் அருணாசல கவுண்டர் ... | 1 |
| ராசிபுரம்முத்துக்காளிப்பட்டி அடப்புக்காடு வரதப்ப கவுண்டர் ... | 1 |
| காளமங்கலம் | |
| உத்தண்டிபாளையம். | |
| ஆய்க்கவுண்டர் மகன் பழனியப்ப கவுண்டர் .... | 1 |
| மன்னாதன்பாளையம். | |
| மாலைகட்டி ராமசாமி மகன் முத்துசாமி .... | 1 |
| மண்டகப்பாளையம் சுப்பராய கவுண்டர் .... | 1 |
| Y. A. ரங்கசாமி இடைப்பாடி ... | 1 |
| வ. ராமசாமி செட்டியார் .... | 1 |
| சௌதாபுரம் கர்ணம் A. ஷண்முகம் பிள்ளை.. | 1 |
| மக்கிரிபாளையம் வ. ஆறுமுகஞ் செட்டியார். .... | 1 |
| புதூர் வையாபுரி முதலியார்.... | 1 |

| | |
|---|---|
| தேவணாங்குறிச்சி. | |
| ந. செங்கோட கவுண்டர் .... | 1 |
| கிணற்றுப்பாளையம் கோ. முத்துக் கவுண்டர் .... | 1 |
| காளத்திஞகர் ஆதீனம்-வேட்டுவராயர் குலகுரு சகலவல்லவராய மடம்-ப. சி. பழனி சாமி குருக்கள் .. | 1 |
| சின்னத்தம்பிபாளையம். | |
| பெரியாக் கவுண்டர் கி. மு .... | 1 |
| வேலத்தோட்டம்இராமசாமிக் கவுண்டர் .... | 1 |
| புதுப்பாளையம், | |
| நல்லய கவுண்டர் .... | 1 |
| திருமங்கலம். | |
| சுப்பிரமணியகவுண்டர் கி. மு. | 1 |
| கருமாபுரம். | |
| பழனிவேல கவுண்டர் .... | 1 |
| நெய்க்காரப்பட்டி. | |
| சடைய கவுண்டர் தருமகர்த்தா | 1 |
| நெ. ச. அர்த்தநாரிக் கவுண்டர். | 1 |
| ராஜாகவுண்டபாளையம் | |
| ராஜாக்கவுண்டர் லோ. ப. மே | 1 |
| நாச்சிமுத்துக் கவுண்டர் கி. மு. பாப்பம்பாளையம் ... | 1 |
| வட்டூர். | |
| பழனிவேல கவுண்டர் கி. மு.. | 2 |
| வேல கவுண்டர் மகன் ரெங்கய கவுண்டர் .... | 1 |
| பள்ளிபாளையம். லட்சுமண கவுண்டர் மகன் பொன்னு கவுண்டர் .... | 1 |
| நல்லய கவுண்டர் மகன் லிங்க கவுண்டர் .... | 1 |
| V. முத்து செட்டியார் .... | 1 |
| பெத்தாம்பட்டி அ. திருமலை கவுண்டர் .... | 1 |
| கொத்துக்கார பழனிக் கவுண்டர் .... | 1 |

| | |
|---|---|
| தண்ணீர்பந்தப்பாளையம் | |
| மாரப்ப கவுண்டர் .... | 1 |
| வையாபுரி கவுண்டர் .... | 1 |
| தர்மகர்த்தா.................. கவுண்டர் .... | 1 |
| ஷெயார் தம்பி சுப்பராய கவுண்டர் .... | 1 |
| பன்னிக்குத்திபாளையம். | |
| குப்புசாமிக் கவுண்டர் கி. மு. | 1 |
| இலங்கக்குட்டை. | |
| இராமசாமி ஐயர் கர்ணம் .... | 1 |
| குதிரைப்பள்ளம் பழனிக் கவுண்டர் மகன் முத்துக் கவுண்டர் .... | 1 |
| பாமத்தி. | |
| G. குழந்தைச் செட்டியார் டிப்டி. தாசில்தார் ... | 1 |
| பாண்டமங்கலம் | |
| தர்மகர்த்தா முத்துசாமி பிள்ளை .... | 1 |
| மகாமுனி பிள்ளை மகன் அ. மதுரவீர பிள்ளை .... | 1 |
| பாலசுப்பிரமணிய பிள்ளை .... | 1 |
| அருணாசலம் பிள்ளை, வெங்கடாசலம் பிள்ளை .... | 1 |
| வீராண்டி பிள்ளை மகன் வெளிச்சியா பிள்ளை .... | 1 |
| முத்துசாமி முதலி மகன் பழனியப்ப முதலி .... | 1 |
| சிவன்கோவில் அர்ச்சகர் முத்தீசுவர குருக்கள்.... | 1 |
| சங்கீதம் மதுரமுத்து .... | 1 |
| கணக்குM ராஜகோபாலஐயர் | 1 |
| மாஜி கணக்கு விசுவநாத குருக்கள் மகன் பால சுப்பரமணிய குருக்கள்.. | 1 |
| தபால் ஆறுமுகம் பிள்ளை மகன் மருத பிள்ளை .... | 1 |
| மு. ம. பிரம பிள்ளை .... | 1 |
| சுந்தரய்யர்குமாரன் S. குழந்தைசாமி ஐயர்கணக்கு .... | |

பழயகோட்டை
வெங்கட்டரமணசாமிக் கவுண்
டர் .... 5
இராமய பிள்ளை சம்பரதி .... 2
பூந்துறை
துரைசாமிக் கவுண்டர் கி. மு. 1
அவிநாசிக் கவுண்டர் கி. மு... 1
ஒல்லப்பட்டி.
சுப்பராய கவுண்டர் ... 1
ஜமீன் தார், தர்மகர்த்தா... 1
S. ரங்கய கவுண்டர்
ஜமீன் தார் .... 1
ராசிபுரம்.
கவுண்டன்பாளையம்
வரதப்ப கவுண்டர்
ஜமீன் தார் ... 1
அத்தியண்ண கவுண்டர்
ஜமீன் தார் ... 1
கொக்கராயன்பேட்டை.
சபாபதி முதலியார் கணக்கு.. 1
ஓடப்பள்ளி.
நாச்சியப்ப கவுண்டர் கி. மு.... 1
முத்துசாமிக் கவுண்டர்
கி. மு பாப்பம்பாளையம். 1
தொப்பைபட்டி.
செங்கோட கவுண்டர் .... 1
தோக்கவாடி.
குப்புசாமிக் கவுண்டர் .... 1
குட்டிக்காபாளையம்.
K. P. ராமசாமிக் கவுண்டர்
கி. மு. ... 1
படைவீடு.
அத்தியண்ண கவுண்டர் கி.மு 1
வீராச்சிபாளையம்.
ஒருக்காமலைக் கவுண்டர் கி மு I
திருச்செங்கோடு.
சுந்திர நாயுடுகாரு
கிளர்க்-தேவஸ்தான கமிட்டி... 1
R. S. கிருஷ்ணப்ப
செட்டியார் ... 1
காளதிப்பரதேசி மடம்
ராஜாக் கவுண்டர் ... 1

பெரிய பூசாரி வீடு
செங்கோடப் பூசாரி .... 1
தி. மு சாமிநாதபிள்ளை
வில்லேஜ் முன்சிப்
ராஜாப்பாளையம்... 1
S. A. K. அருணசல செட்டி
யார் தாய்நாடு அச்சாபீஸ்
சொந்தக்காரர் ... 1
சின்னப்பக் கோனார்
வக்கீல் குமாஸ்தா .... 1
லோகய்யா
பெண்பாடசாலை
உபாத்தியாயர் .... 1
சங்ககிரி
R. குப்புராசுக் கோனார்
போர்டு ஸ்கூல்... 1
காங்கயம்பட்ட காரர்
கணபதிப்பல்லவராயரவர்கள் 1
சங்கரண்டாம்பாளையம்
பட்டக்காரர்
வேணுவுடையாரவர்கள் .... 1
கோபிசெட்டிபாளையம் புதூர்.
முத்துவேலப்ப கவுண்டரவர்.. 1
கொங்கணாபுரம்.
செங்கோட்டுவேல கவுண்டர்
ஜமீன் தார்.... 1
நாச்சியப்ப கவுண்டர்
வைஸ்பிரசிடெண்டுஜமீன் தார் 1
R. நாச்சியப்ப கவுண்டர்
ஜமீன் தார் .... 1
அக்கமாப்பேட்டை.
பரமசிவக் கவுண்டர்
ஜமீன் தார் .... 1
வமப்பள்ளி
பழனியப்ப பிள்ளை. கர்ணம் ... 1
காடச்சிநல்லூர்.
ரங்கசாமி பிள்ளை கர்ணம் ... 1
வேலப்ப கவுண்டன் மகன்
கி. மு. அத்திாண
கவுண்டர் ... 1
திருச்செங்கோடு நாகசுரம்
ராஜமாணிக்க முதலி ... I



சேலம்.
நாகேசுரக் குருக்கள் .... 1
சுகவன குருக்கள் பெண்ஜாதி
தங்கம்மாள் ... 1
சீத்தாராமய்யர் வக்கீல் ... 1
செவ்வாய்ப்பேட்டை.
செ. அ. க. அர்த்தநாரி
செட்டியார் ... I
மு வெ. காருமசிவ செட்டியார் 1
கோபால செட்டியார் ... 1
வாருகராப்பட்டி
பொன்னுசாமி பிள்ளை கர்ணம் 1
மூளசி.
ரங்கசாமிக் கவுண்டர் கி. மு.. 1
ஏாப்பள்ளி.
தண்டிகைவேல் கவுண்டர்கி.மு 1
பழனியப்ப பிள்ளை கர்ணம்... 1
ராமசாமிக் கவுண்டர் கி மு. 1
நயனாபாளையம்
கட்டாங்குட்டை.
பழனி பண்டாரம் மகன்
செங்கோட பண்டாரம்
உபாத்தியாயர் ... 1
ராமசாமிக் கவுண்டர் மகன்
ரங்கசாமிக் கவுண்டர் ... 1
கொங்கணாபுரம் உலகனூர்
ராமசாமிக் கவுண்டர் மகன்
முத்துக்கவுண்டர் ... 1
ஈரோடு.
V. V. C. R. முருகேச
முதலியார் நூல்வியாபாரம்... 5
V. V. C. V பெரியசாமி
முதலியார்வியாபாரம் ... 5
V.V.C R.V காவேரி முதலி
யார் நூல் வியாபாரம்... 5
தெய்வசிகாமணி கவுண்டர்
தமிழ்ப்பண்டிதர்.... 1
கிருஷ்ணம்பாளையம்.
வெங்கிடாசலம் பிள்ளை
ஆப்காரிகண்ட்ராக்டர்... 1

நாராயணசாமி பிள்ளை
ஆப்காரிகண்ட்ராக்டர்... I
மருதப்ப பிள்ளை
ஆப்காரிகண்ட்ராக்டர்... I
மாணிக்கம் பிள்ளை
ஆப்காரிகண்ட்ராக்டர்... I
A. அப்பாஜி, கம்பாஸ்டர் .... 1
பெரியஅக்கிராரம்.
அங்கப்பத் தேவர் மிராஸ்தார் I
சே. இராமசாமிக் கோனார்..... 1
காட்டூர்.
பெத்து ரெட்டியார் ... I
சீத்தாரம்பாளையம்
மாரப்ப கவுண்டர் .... 1
இராஜாக்கவுண்டன்பாளையம்
த மு. அங்கப்ப முதலி
மகன் அர்த்தநாரி முதலி
யார் .... 1
தேவணாங்குறிச்சி முன்சீபு
செலம்பகவுண்டர் மகன்
நல்லய கவுண்டர் .... 1
கஸ்தூரிப்பட்டி கி. மு.
பழனிவேல கவுண்டர் .... 1
பாதரை க. வேலப்பசெட்டி
யார் .... 1
பல்லக்காபாளையம் கி. மு.
மக்கிரிபாளையம் பழனிவேல
கவுண்டர் .... 1
நெட்டவேலம்பாளையம்
ந. முத்துக் கவுண்டர்.... 1
பழனிசாமிக் கவுண்டர்
கி. மு. .... 1
வீரப்பம்பாளையம் முப்பாடு
செ. பழனிக் கவுண்டர் .... 1
கட்டிபாளையம் தம்பி என்ற
பழனிக் கவுண்டர் .... 1
சின்னூர்பாளையம் முப்பாடு
கைலாச கவுண்டர் .... 1
லட்சுமம்பாளையம் செ ராம
சாமிக் கவுண்டர் .... 1

கோட்டப்பாளையம்.
R. திருவேங்கடம் பிள்ளை கர்ணம் .... 1

இலுப்பிலி.
S. அருணாசலம் பிள்ளை மிராசுதார் .... 1
A. முத்துசாமி பிள்ளை V. M. புள்ளாக்கவுண்டன்பட்டி .... 1

கூத்தப்பூண்டி.
சுப்பிரமணிய பிள்ளை கர்ணம் 1

அகரம்.
ஷண்முகம் பிள்ளை கர்ணம் இளச்சிபாளையம் .... 1

ராமாபுரம்.
அப்புசாமி பிள்ளை கர்ணம் .... 1

பல்லசமுத்திரம்.
சிவமலை பிள்ளை கர்ணம் .... 1
சி. பழனிவேல பிள்ளை கொளங்கண்டை.... 1

கருங்கல்பட்டி
K. A. பழனிவேல் பிள்ளை மிராசுதார் .... 1

கடனூர் கர்ணம்.
கோவிந்தசாமி பிள்ளை ... 1

கோக்கலை.
சின்னுசாமி பிள்ளை V. M..... 1

கள்ளிப்பட்டி.
இராமசாமி கவுண்டர் ... I
K.M. சென்னிமலைக்கவுண்டர் 1
செ. மாரப்ப கவுண்டர் .... 1
K. R. சாளியண்ண கவுண்டர் 1
K. N. ராமசாமிக் கவுண்டர் 1
K. S நல்லசாமிக் கவுண்டர். 1
குமாரசாமிக் கவுண்டர் பெண்சாதி அங்கம்மாள்... 1

வேலூர்.
ஈசுவர ஐயர் மிராசுதார் ... I
ஓடப்பள்ளி கணக்கு சுப்பிரமணிய பிள்ளை ... I

திருப்பூர்
P. K ஆறுமுகம் செட்டியார் ... 1

இலுப்பிலி.
பழனிவேல பிள்ளை .... 1

கத்தேரி கர்ணம்.
தியாகராஜ அய்யர் ... I

எலந்தக்குட்டை.
சுப்பிரமணிய அய்யர் ... I

கனககிரி கர்ணம்
சுப்பிரமணிய அய்யர் ... I

காளிக்கவுண்டம்பாளையம்
பொன்னுசாமி அய்யர் ... I

புதூர்.
பழனிசாமி அய்யர் ... I

செட்டியாங்குரிச்சி
சின்னுசாமி அய்யர் .... I

தப்பக்குட்டை,
சுப்பிரமணிய அய்யர் .... I

கண்ணாந்தேரி.
சிதம்பர அய்யர் .... I

ஆனங்கூர்.
இராமசாமி அய்யர் .... I

எரணாபுரம்.
சுப்பிரமணிய அய்யர் ... I

காளிபட்டி.
பூ. லட்சுமண கவுண்டர் .... I

மாமரப்பட்டி.
தம்பி-செங்கோட கவுண்டர் தருமகர்த்தா .... I
லத்திவாடி கணக்கு சுப்பராய பிள்ளை .... I

ஈரோடு
பழனியபமுதலியார் இரும்புக் கடை ... I

குழாயநிலை
வ. கந்தப்ப முதலியார் வியாபாரம் .... 1

இடைப்பாடி.
சால்டு சப்இன்ஸ்பெக்டர் அருணகிரி முதலியார் .... I



திருச்செங்கோடு.
...வநாம சிற்சங்க பஜனை .... 2
திருஞானசம்பந்தசுவாமிகள் பக்தஜனசபை .... I
கூ. அ சுப்பராய முதலியார் 5
சி அர்த்தநாரி முதலியார் நாட்டாண்மை .... 1
வேலாயுத முதலியார் தருமகர்த்தா .... 1
மொ. வெ. ப. காளியப்ப முதலியார் வைத்தியர் .... I

சூரியம்பாளையம்.
மு. சி. க. பச்சையண்ண முதலியார் ... I
மா. அ. சிதம்பர முதலியார்.. 1
சி. ப. பெரியண முதலியார்.... 1
அ. வை. ர. கந்தசாமி முதலியார் .... 1
அ சீ. அருணாசல முதலியார். 1

நாமக்கல்.
க. னு. சோமசுந்தரம் செட்டியார் தருமக்கர்த்தா நரசிம்ம ஸ்ரீரங்கநாதசுவாமி தேவஸ்தானம் .... 1
P. ராஜமாணிக்க முதலியார் கண்டிறாக்டர் .... 1

ராசிபுரம்.
N. வள்ளியப்ப செட்டியார் தர்மகர்த்தா (ஈசுவரன் கோவில்)ஸ்ரீ கைலாசநாதர்.... 1

நாமகிரிப்பேட்டை.
கந்தசாமி செட்டியார் தருமகர்த்தா ஸ்ரீபொன்னுவரதராஜபெருமாள்.... 1

சீராப்பள்ளி.
சின்ன காளி கவுண்டர் தருமகர்த்தா ஸ்ரீசெவந்தீசுவரசுவாமி .... 1

மல்லூர்
...ணங்காட்டு அப்பாவு கவுண்டர் யூனியன் சேர்மென் .... 1

கஞ்சமலை-காடயாம்பட்டை. 1
M. பொன்னுசாமி கவுண்டர் ஸ்ரீ சித்தேசுவரசுவாமி. 1

சேலம்.
அப்பாவு செட்டியார் மானேஜிங் & எக்ஸிகியூடிவ்டிரஸ்டி ஸ்ரீ சுகவனேசுவரர்கோவில்.. 1

பூலாம்பட்டி.
நகுலன் செட்டியார் ஸ்ரீகைலாசநாதர் தேவஸ்தானம் .... 1

புதுப்பட்டி.
M. பெரியகாளி கவுண்டர் ஸ்ரீ துலுக்கசூடாமணியம்மன் கோவில் .... 1

ஒடுவன்குறிச்சி.
S. செல்லப கவுண்டர் காசிவிசுவநாதசுவாமி கோவில் 1

கொங்கணாபுரம்.
நல்லையகவுண்டர் தருமகர்த்தா மிட்டாதார் .... 1

இடைப்பாடி,
E. V. ஆறுமுகம் செட்டியார் நஞ்சுண்டேசுவரசுவாமி கோவில் .... 1

பரமத்தி.
K. கந்தசாமி கவுண்டர் ஸ்ரீ கோதண்டராம சுவாமி பீமேஸ்வரசுவாமி கோவில்தருமகர்த்தா.... 1

பாளி.
சிங்கப்ப கவுண்டர் ஜமீன்தார். 1

மோகனூர்.
பழனியாண்டி கவுண்டர் தருமகர்த்தா ஸ்ரீ நித்தியகல்யாணசுவாமி & அசலதீபேசுவரசுவாமி கோவில்கள் 1

சேந்தமங்கலம்.
ஐராவத உடையார் தருமகர்த்தா, ஸ்ரீ லட்சுமிநாராயணசுவாமி 1

சிவமயம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளருளிய

# தேவாரம்.

——:o:——

### திருக்கோடிமாடச் செங்குன்றூர்—பண்—விழாக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற (க)
வந்தணனைத்தொழுவாரவலம்மறுப்பாரே.

அலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந்தாக
மலைமகள்கூறுடையான்மலையாரிளவாழைக்
குலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற (உ)
தலைமகனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே.

பாலனநீறுபுனைதிகழ்மார்பிற்பல்வளைக்கைநல்ல
வேலமலர்க்குழலாளொருபாகமமர்ந்தருளிக்
கோலமலர்ப்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மல்கு (ங)
நீலநன்மாமிடற்றான்கழலேத்தல்நீதியே.

வாருறுகொங்கைநல்லமடவாள்திகழ்மார்பினண்ணு
காருறுகொன்றையொடுங்கதநாகம்பூண்டருளிச்
சீருறுமந்தணர்வாழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற (ச)
நீருறுசெஞ்சடையான்கழலேத்தல்நீதியே.

பொன்றிகழாமையொடுபுரிநூறிகழ்மார்பினல்ல
பன்றியின்கொம்பணிந்துபணைத்தோளியோர்பாகமாகக்
குன்றனமாளிகைசூழ்கொடிமாடச்செங்குன்றூர்வானின் (ரு)
மின்றிகழ்செஞ்சடையான்கழலேத்தல்மெய்ப்பொருளே.

ஓங்கியமூவிலைநற்சூலமொருகையன்சென்னி
தாங்கியகங்கையொடுமதியஞ்சடைக்கணிந்து
கோங்கணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்வாய்ந்த (சு)
பாங்கனதாடொழுவார்வினையாயபற்றறுமே.

நீடலர்கொன்றையொடுநிமிர்புன்சடைதாழவெள்ளை
வாடலுடைதலையிற்பலிகொள்ளும்வாழ்க்கையனைக்
கோடல்வளம்புறவிற்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற (எ)
சேடனதாள்தொழுவார்வினையாயதேயுமே.

மத்தநன்மாமலரும்மதியும்வளர்கொன்றையுடன்றுன்று
தொத்தமலர்செஞ்சடைமேற்றுதையவுடன்சூடிக்
கொத்தலர்தண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
தத்துவனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (அ)

செப்பொனின்மேனியனும்பிரமன்றிருமாலுந்தேடநின்ற
வம்பவளத்திரள்போலொளியாயவாதிபிரான்
கொம்பணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
நம்பனதாடொழுவார்வினையாயநாசமே. (கூ)

போதியர்பிண்டியரென்றிவர்கள்புறங்கள்கூறும்பொய்ந்நூ
லோதியகட்டுரைகேட்டுழல்வீர்வரிக்குயில்கள்
கோதியதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வேதியனைத்தொழநும் வினையானவீடுமே. (௰)

அலைமலிதண்புனல்சூழ்ந்தழகார்புகலிந்நகர்பேணுந்
தலைமகனாகிநின்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமூவிலையான்கொடிமாடச்செங்குன்றூரேத்து
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருநீலகண்டம்—பண்—வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (க

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தா
லேவினையாலெயின்மூன்றெரித்தீரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்துமலரடிபோற்றுதுநாமடியோந்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம்.

முலைத்தடமூழ்கியபோகங்களுமற்றெவையுமெல்லாம்
விலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீ
ரிலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (ரு

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோந்
திண்ணியதீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (ச

மற்றினையில்லாமலைதிரண்டன்னதிண்டோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுந்தன்மைகொலோ
சொற்றுணைவாழ்க்கைதுறந்துந்திருவடியேயடைந்தோஞ்
செற்றெமைத்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம்.



மறக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப்
பிறப்பில்பெருமான்றிருந்தடிக்கீழ்ப்பிழைபாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணியடியோஞ்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (கூ-எ)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே
யுருகிமலர்கொடுவந்துமையேத்துதுநாமடியோஞ்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரே
திருவிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (அ)

நாற்றமலர்மிசைநான்முகனாரணன்வாதுசெய்து
தோற்றமுடையவடியுமுடியுந்தொடர்வரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுநாமடியோஞ்
சீற்றமதாம்வினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (கூ)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும்
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றும்விட்டார்
பூக்கமழ்கொன்றைபுரிசடையீரடிபோற்றுகின்றோந்
தீக்குழித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௰)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா
னிறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்க
டிறம்பயில்ஞானசம்பந்தன்செந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

### கபிலதேவநாயனார் அருளிச்செய்த
### சிவபெருமான்திருவந்தாதி.

சிவன்மாட்டுகவெழுதநாணுநதுமென்னுஞ்
சிவன்மேய செங்குன்றூ ரென்னுஞ்—சிவன்மாட்டுங்
காவிங் கனநினையு மாயிழையீ ரங்கொன்றை
யாவிங் கனநினையு மாறு.

குமரன்துணை.

### அருணகிரிநாதரருளிய
## திருப்புகழ்.

அன்பாகவந்து நின்றாள் வணங்கி ஐம்பூதமொன்ற நினையாமல்
அன்பால்மிகுந்து நஞ்சாருகண்களம்போருகங்கள் மூலதானும்
கொந்தேமிகுந்து வண்டாடிநின்று கொண்டாடுகின்ற குழலாரைக்
கொண்டேநினைந்து மன்பேதுமண்டி குன்றாமலைந்து மலைவேனோ
மன்றாடிதந்த மைந்தாமிகுந்த வம்பார்கடம்பை யணிவோனே
வந்தேபணிந்து நின்றார்பவங்கள் வம்பேதொலைந்த வடிவேலா
சென்றேயிடங்கள் கந்தாஎனும்பொ செஞ்சேவல்கொண்டுவரவேணும்
செஞ்சாலிகஞ்ச மொன்றாய்வளர்ந்த செங்கோடமர்ந்த பெருமாளே.

கரையறவுருகுதல் தருகயல்விழியினர்
கண்டானசெஞ்சொல் மடமாதர்
கலவியில்முழுகிய நெறியினிலறிவுக
லங்காமயங்கும் வினையேனும்
உரையையுமறிவையும் யிமையையுமுணர்வையும்
உன்பாதகஞ்ச மலர்மீதே
உரவொடுபுனைதர நினைதருமடியரொ
டொன்றாகஎன்று பெறுவேனோ
வரையிருதுணிபட வளைபடுசுரர்குடி
வந்தேறஇந்த்ர புரிவாழ
மதவிதகஜரத துரகதபத்தியின்
வன்சேனைமங்க முதுமீன
திரைமலிசலநிதி முறையிடநிசிசரர்
திண்டாடவென்ற கதிர்வேலா
ஜெகதலமிடிகெட விளைவனவயலணி
செங்கோடமர்ந்த பெருமாளே.

சாலநெடுநாள்படந்தை காயமதிலேயலைந்து
சாமளவதாகவந்து புவிமீதே
சாதகமுமானபின்பு சீறியழுதேகிடந்து
தாரணியிலேதவழ்ந்து விளையாடி
பாலனெனவேமொழிந்து பாகுமொழிமாதர்தங்கள்
பாரதனமீதணைந்து பொருள்தேடி
பார்மிசையிலேயுழன்று பாழ்நரகெய்தாமலொன்று
பாதமலர்சேர அன்பு தருவாயே
ஆலமமுதாகவுண்ட ஆறுசடைநாதர்திங்கள்
ஆடரவுபூணர்தந்த முருகோனே
ஆனைபடுவாயிலென்று மூலமெனவோலமென்ற
ஆதிமுதல்நாரணன்றன் மருகோனே
கோலமலர்வாவியெங்கு மேவுபுனம்வாழ்மடந்தை
கோவையமுதூறலுண்ட குமரேசா
கூடிவருசூரடங்க மாளவடிவேலெறிந்த
கோடைநகர்வாழவந்த பெருமாளே.



பொன்றாலைப்பொய்க் கும்பிறப்பைத் தும்பறுத்திட்டின்றுநிற்கப்
புந்தியிற்சற் றுங்குறிக்கைக் கறியாமே
பொங்கிமுக்கிச் சங்கைபற்றிச் சிங்கியொத்தச் சங்கடத்துப்
புண்படைத்துக் கஞ்சமைக்கட் கொடியார்மேல்
துன்றுமிச்சைப் பண்டனுக்குப் பண்பளித்துச் சம்ப்ரமித்துத்
தும்பிபட்சிக் கும்ப்ரசச்செம் பதிமீதே
தொண்டுபட்டுத் தெண்டனிட்டுக் கண்பெற்றத் தண்டைவர்க்கத்
துங்காரத்நப் பங்கயத்தைத் தருவாயே
குன்றெடுத்துப் பந்தடித்துக் கண்சிவத்துச் சங்கரித்துக்
கொண்டலொத்திட் டிந்த்ரனுக்கிச் சுரலோக
கொம்புகுத்திச் சர்ப்பமுத்தித் திண்டலத்திற் றண்டுவெற்பைக்
கொண்டமுக்கிச் சண்டையிட்டுப் பெரும்வேழம்
சென்றுரித்துச் சுந்தரிக்கச் சந்தவிர்த்துக் கண்சுகித்துச்
சிந்தையுட்பற் றின்றிநித்தப் களிகூரும்
செண்பகத்துச் சம்புவுக்குத் தொம்பதத்துப் பண்புரைத்துச்
செங்குவட்டிற் றங்குசொக்கப் பெருமாளே.

ஏறுனாலே நீறுய்மாயாவேளேவாசக் கணையாலே
ஏயாவேபா மாயாவேயா லாமேலோசைத் துளையாலே
மாறாயூறா யீறாய்மாலாய் வாடாமானைக் கழியாதே
வாராய்பாராய் சேராயானால் வாடாநீபத் தொடைதாராய்
சீறாவீறாஈரேழார்சூழ் சீரார்தோகைக் குமரேசா
தேவாசாவா மூவாநாதா தீராகோடைப் பதியோனே
வேறாய்மாறா யாறுமாசூர் வேர்போய்வீழப் பொருதோனே
வேதாபோதா வேலாபாலா வீராவீரப் பெருமாளே.

கானிடலத் தணுகாதே - காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான - தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே - மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே - நாகசிரிப் பெருமாளே.

பொற்சித்தாப் பச்சைப்பட்டுக் கச்சிட்டுக் கட்டிப்பதம்ப்
புட்பத்துக் கொப்பக்கற்பித் திளைஞோர்கள்
புட்பட்டுச் செப்பத்துப்பற் கொத்தப்பொற் றித்தத்திட்பப்
பொட்பிற்பெற் றுக்ரச்சக்ரத் தனமானார்
கற்சித்தச் சுத்தப்பொய்ப்பித் தத்திற்புக் கிட்டப்பட்டுக்
கைக்குத்திட் டிட்டுச்சுற்றித் திரியாமல்

# VI

கற்றுற்றுச் சித்திக்கைக்குச் சித்திப்பப் பக்ஷத்திற்சொற்
கற்பித்தொப் பித்துக்கொற்றக் கழல்தாராய்
குற்சித்துக் கொட்டுக்கொட்டுத் துக்கச்சத் துக்குக்குக்குக்
குக்குக்குக் குக்குக்குக்குக் கெனமாறு
குட்சிக்குப் பக்ஷிக்கைக்குக் கக்ஷத்திற் பட்சத்தக்
கொட்டிச்சுட் டிக் கொக்கிக்குக் குடதாரி
சற்சித்துத் தொற்புத்திப்பட் சத்தர்க்கொப் பித்தட்சத்துச்
சத்தத்தைச் சத்திக்கொச்சைப் பதிவாழ்வே
தட்சப்பற் றுக்கொப்பத்திற் செற்பற்றைச் செற்றிடுச்சச்
சற்பப்பொற் றைக்குட்சொக்கப் பெருமாளே.

கொடியமறலியு மவனது கடகமு
மடியவெருநுதின மிருபதம்வழிபடு
குதலையடி யவனினதருள்கொடுபொரு மமர்காண
குறவர்மகள்புணர் புயகிரிசரமகமு
மறுமுகமும்வெகு நயனமும்ரவியுமிள்
கொடியயகிலமும வெளிபடஇ ருதிசை யிருநாலும்
படியுநெடியன எழுபுணரியுமுது
திகிரிகிரியும் வருகெனவருதரு
பவுரிவருமொரு மரகததுரகத மிசையேறிப்
பழயஅடியவ ருடனிமையவர்கண
மிருபுடையுமிகு தமிழ்கொடுமறைகொடு
பரவ வருமதி லருணையிலொருவிசை வரவேணும்
சடிலதரவிட தரபணிதரதர
பரசுதரசசி தரசுசிதரவித
அநகமிருக தரமணிதரசிர தரபரத்
தரணிதரதனு தரவெகுமுககுல
தடினிதரசிவ சுதகுணதர பணி
சபிலவிதரண தருபுரசசிதரு மயில்வாழ்வே
நெடியவுடலுரு இருளெழுமிலவெழ
எயிறுசுழல்விழி தழலெழஎழுகிரி
நெரியஅதிர்குரல் புகையெழஇடியெழ நெடுவானும்
நிலனும்வெருவர வருநிசிசரர்கள
நிகிலசகலமு மடியவொர்மடைதொடு
நிருபகுருபர சுரபதிபரவிய பெருமாளே.

# VII

## கந்தரலங்காரம்.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநா
னைவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கண் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோட னைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பெருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
றருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
யாலித் தனந்தன் பணாமுடி தாக்க வதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
வெங்கே நினைப்பினு மங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

## கந்தரந்தாதி.

தினகாரக்கர தங்கெடுத்தார்குரு தேசிகர்சேந்
தினகாரக்கர மாறுடையார்தெய்வ வாரணத்தந்
தினசாரக்கர சத்தியின்றாகிலத் தேவர்நண்ப
தினகாரக்கர தந்தீர்வரீர்வர் செகமெங்குமே.

செவிக்குன்றவாரண நல்கிசைபூட்டவன் சிந்தைபம்பு
செவிக்குன்றவாரண மஞ்சமெலன்றுண்டது நீண்டகன்மச்
செவிக்குன்றவாரண வேலாயுதஞ்செற்ற ஆற்றனகட்
சேவிக்குன்றவாரண வள்ளிபொற்றுண்மற்றென் றேடுவதே.

தெண்டன்புரந்தர வக்குன்றில்வாழ்கந்த சிந்துவினுத்
தெண்டன்புரந்தர லோகஞ்செறுதுசெற் றேய்களைவாய்
தெண்டன்புரந்தர நற்கேள்சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன்புரந்தர வின்படிநூக்கிய தீரகே.

தினந்தினத்து தாச்செல்வர்பாற்சென் றெனக்கென்பதோர்
தினந்தினத்து மூதரானலஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தினந்தினத்து னிகளைசெங்கேட்டினன் செந்திலந்நீர்
தினந்தினத்து தவத்துப்பிரசதஞ் செய்யவற்றே.

சிகண்டிதத்தத்த மாவாரிவிட்ட திதிபுத்ரார
சிகண்டிதத்தத்த நகபூதரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத்தத்த மலர்மேற்குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத்தத்த கற்போபலமென் னுஞ் சேகரனே.

சேகரவாரண வேல்வீரனேடச் சிறுமிபத
சேகரவாரண மேவும்யயாசல தீவினையின்
சேகரவாரண வெற்பாளநாளுந் த்ரியம்பகனு
சேரணவாரண நின்கையில்வாரணஞ் சேவனென்றே.

தென்றலையப்பு புனைவார்குமார திமிர முந்நீர்த்
தென்றலையம்புய மின்கோமருக செழுமறைதேர்
தென்றலையம்பு சகபூதரலவநி சிந்தியன்றற்
றென்றலையப்பு படுநெறிபோயுயர் தீர்க்கின்றதே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## முகவுரை.

வெந்தவெண் ணீறணிந்து விரி நூறிகழ் மார்பி னல்ல
பந்தண வம்விரலா ளொரு பாகம மர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடி மாடச்செங் குன்றூர் நின்ற
வந்தண னைத்தொழுவா ரவலம்ம றுப்பாரே.

திருக்கொடிமாடச்செங்குன்றூரான திருச்செங்கோட்டுக்கு நாககிரி மஹாத்மியம், அர்த்தகிரி மஹாத்மியம், அர்த்தநாரீசுர மஹாத்மியம் என மூன்று சரித்திரங்களிருப்பதாகத் தெரிகின்றன. காந்தமுதலிய புராணங்களிற் கூறப்பட்ட நாககிரி மஹாத்மியம், அர்த்தகிரி மஹாத்மியம் என்னும் இரண்டையுஞ் சேர்த்துத், தென்காசி கவிராஜபண்டிதர் என்னும் பெரியார் ௲௨௱௨௰௩ செய்யுட்களால் திருச்செங்கோட்டுப் புராணம் என இயற்றியுள்ளார். சரித்திர நடைகள் சிறப்புடைத்தாகும். அர்த்தபாகச் சருக்கத்தைப் படித்தாலும், படிக்கக்கேட்டாலும் வருணனை கூறிபிருக்கும் நேர்த்தியானது பிரத்யக்ஷமாக அம்மனும் அப்பாருமாகிய ஈருருவமும் ஓருருவமாக எழுந்தருளிவந்து நிற்பதாகக் கொண்டு பரவசமுறச்செய்யும். அருச்சனைச் சருக்கத்தில் ஆலய பூசை செய்ய அருகமான ஆசாரியன், விடியற்காலை எழுந்தது முதற்செயயவேண்டிய வைதீக சைவ நித்தியகருமவிதிகளை ஒழுங்குபெறக்கூறுவதுமன்றி ஆன்மார்த்த பரார்த்த பூஜைமுறைகளை மிகுவிவரமாகவும், கந்தர்பூசைச்சருக்கத்தில் சுப்பிரமணிய மூர்த்தங்களின் ரூபத்தியானங்களும் மந்திரத்தியானங்களும் பூஜை நெறிகளும் ஒழுங்குபெறக் கூறப்பட்டுளது. இதுவன்றி முருகர் அர்ச்சனைப்படலத்தில் சிவபிரானையும் பிராட்டியாரையும் பஞ்சாட்சரத்தில் சிவ பீஜ சக்திபீஜாக்ஷரங்களை மாறி மாறிச் சபித்துக்கூறும் மந்திர அநுபவமுறையை, வைதிக சைவ ஆசாரிய புருடர்கள் பாராட்டிப் பாராட்டிக் கொண்டாடுகிறார்கள். வள்ளிநாயகியார் திருமணச்சருக்கத்தில் ஐந்திணை இயல்புகளைச் சுருக்கிச்சொல்லும் இயல்புமிகுந்த அழகுவாய்ந்துள்ளது.

பூர்ண கதை ஆரம்பத்தில் உலகில் பஞ்சமஹா பாதகங்கள் இன்னவை என்றும், அவை செய்தவர்கள் யமதூதர்களால் நரகத்திற்கொண்டு சேர்த்துக் குற்றங்களை எடுத்துக்காட்டிப் பலவகை நரகவேதனைக்குள்ளாக்குவார்கள். அப்படித்துன்பப்படாது நீங்கிக்கொள்ள சிவபரஞ்சுடரின் அருள் வேண்டுமென்றும், அதை அடைதற்குத் தலம் தீர்த்தம் மூர்த்தியின் உபாசனை முறையாகத் தொடங்கவேணடும் என்றும், நாகாசலபதி தேவதீர்த்த முதலிய தீர்த்தங்கள், சுப்பிரமணியக் கடவுள் அர்த்தநாரீசுரரிடத்துத் தரிசனம், உபாசனை முறைப்படி செய்தல்வேண்டும் என நன்றாக எடுத்துரைக்கப்படுகிறது.

அந்தந்தத் தீர்த்தங்களில் மூழ்கித்தவஞ்செய்தவர்கள் பெற்றபேறு முதலியவற்றை நன்கு விளக்கப்பெற்றுள்ளது. இதனைப்படித்தோர், கேட்டோர் சிவபெருமானின் அருள் வெள்ளத்தில் மூழ்கித்திளைக்குமாறு அன்பு சுரந்து ஊட்டவல்லது ஆகும்.

ஐம்பத்தெட்டு வருஷங்களின் முன் இப்புத்தகம் அச்சிட்டதாக இருப்பினும் பலவகை சிரமம்கொண்டு பழைய ஏட்டுப்பிரதிகள் தேடித் திருத்துப்பாடு செய்து இப்பொழுது அச்சிடவேண்டி நேர்ந்தது. இப்பதிப்பிற் காணப்படுங் குற்றங்களை என்னுடையன வென்றெண்ணிப்பொறுக்கும்படி பெரியார்களை மிகவேண்டுகிறேன்.

இந்நூலைப்போலவே, இனிப்பதிப்பிக்கக்கருதிய நூல்கள் ஒவ்வொன்றையும் கருதியவண்ணம் பதிப்பித்துநிறைவேற்றுதற்பொருட்டும், பதிப்புதவி, பொருளுதவி, ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளை அன்புடன் செய்தவர்கள் பெருவாழ்வடைந்து மகிழ்வெய்துதற்பொருட்டும் திருவருள் பாலிக்கும்படி மங்கையோர்பங்கனுடைய திருவடித்தாமரைகளைச் சிந்திக்கின்றனன்.

ஆங்கீரஸ-வருஷம்<br>
ஐப்பிசி-மாதம் உ

தி. அ. முத்துசாமிக் கோனார்.

உ

சிவமயம்.

K

## நூலாசிரியராகிய
## தென்காசி-கவிராஜ பண்டிதரின் வரலாறு.

—:O:—

இந்நூலாசிரியராகிய தென்காசி-கவிராஜ பண்டிதர் என்பவர் பாண்டிவளநாட்டிலுள்ள தென்காசி நகரிற்பிராமணவருணத்தில் ஸ்மார்த்தர்களில் திய வேப்பத்தூர் சோழியர் வகுப்பில் போதாயன சூத்திரம் காசிபகோத்திரத்தில் பக்தி கல்விவாய்ந்த குடும்பத்தில், இந்தத் தென்காசிக்குத் தமிழ்ச் செய்யுளாகத் தலபுராணம் பாடிய சங்கர நாராயணய்யரின் தவப்புத்திரர். இவருக்கு சிற்றம்பல நம்பி யென பிரசித்த நாமம் உண்டு. வீரை கவிராஜ பண்டிதர் என மற்றொருவர் உளராதலின் இவரைத் தென்காசி-கவிராஜ பண்டிதர் என வழங்கலாயினர். திருச்செங்கோட்டுப் புராணத்தைத்தவிர வேறு என்ன நூல்கள் இயற்றியுள்ளாரென்பது தெரியவில்லை.

### தென்காசி என்பது.

தென்காசி விசுவநாதர் கோவிலை அரிகேசரிபராக்கிரம பாண்டியன் கட்டவெண்ணி சகம் 1368 வைகாசி மாதம் 10-ந் தேதி மீனராசியில் ஆரம்பித்து, அடுத்த வருஷத்தில் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம் வரை முடித்து, சக 1369-ல் உடையவரைத் தென்காசி சிவாலயத்துள் மண்டபம் அமைத்துத் தெள்ளமுதமூட்டினான்.

ஒன்பது நிலைக்கோபுரம் கட்டவெண்ணி கலி 4558-க்கு சாலி 1379ல் ஆரம்பித்தான். 6-வருஷத்தில் முடித்தான் இவ்வரசனுக்குப்பின் பட்டந் தரித்தவன் ஜடிலவர்மனான குலசேகரதேவன். பின்பு திருநெல்வேலி மாறனான வீரவேற் குலசேகரன். இவன் சகம் 1474 பரிதாபி சித்திரை 29-தேதி முடி சூடினான். இவனுக்குப் பின் இவன் மகன் அதிவீரராம பாண்டியன் என்னும் ஸ்ரீ வல்லபதேவன் (சீவலன்) சக1486 ரத்தாக்ஷி வருஷம் சித்திரை மாதம் 20-ந் தேதி ஞாயிறு. இவனுக்குப்பின் அபிராமன் என்னும் வீரபாண்டியன் கலி 4186. இந்த விவரங்கள் விசுவநாதர் கோவில் சிலாசாசனப் பாட்டுகளால் நன்கு தெரிகின்றன.

வேப்பத்தூர் என்பது குலசேகர பாண்டியன் என்பவன் அகரமேற்படுத்த நினைந்து சாகேதபுரி என்ற ஊரிலிருந்து பிராமணர் இரண்டாயிரத்தெண்மரை அழைப்பித்து, அவர்கள் பெயரைப் பதிந்துகொண்டு முறையே ஒவ்வொருவருக்கும், மனையும், நிலமும் கொடுத்துக்கொண்டே வரும்போது கணபதி என்பவர் வரவில்லை. அப்பொழுது ஸ்ரீ மஹாகணபதி, யான் கணபதி என்று கூறி மறைந்துவிட்டார். அரசன் பரவசனாய் அந்த மனையில் கோவில் கட்டி, அந்த மஹா கணபதிக்கே மானியமாகக் கொடுத்துவிட்டனர். வேப்பத்தூரில் அமைத்துள்ள விநாயகருக்கு இரண்டாயிரத்தெண் விநாயகர் என்னும் திருநாமம் வழங்குகிறது. இவ்வூருக்குக் குலசேகர சதுர்வேதி மங்கலம், வேம்பத்தூர் என்பது இவ்வூர் பெருமாள் கோவில் கர்ப்பக்கிரகச் சுவரின் வெளியே உள்ள சிலாசாசனத்தால் அறியலாகும். கடைச்சங்க காலத்திலிருந்து வேம்பற்றூர் புலவர்களாற் சிறப்புற்ற ஊர் என்பதும், வேம்பத்தூர் சங்கத்தார் எனப்பிரசித்தமுற்றதாகும். பண்டைக்காலத்திருந்த அரசர் முதலியோர் இவர்கள் சந்ததியார்களின் கல்வித்திறமையை நன்குமதித்துமுற்றூட்டாக அவர்கள் கொடுத்த ஊர்களைத்தமக்கு இருப்பிடமாக வைத்துக்கொண்டு தமிழ் நூலாராய்ச்சி செய்தும் வந்தனர் எனத்தெரிகிறது. அவர்கள் இருந்த ஊர்களுள் இப்போது தெரிந்தவை வீர சோழன் அல்லது விரை, தென்காசி, கீழைப்பாலூர், வல்லநாடு, இருப்பையூருணி, திருநெல்வேலி, சரிவலம் வந்தநல்லூர், கற்குளம், பனையூர், குறுங்காவனம் என்பன ஆனாலும் இவர்களை வேம்பற்றூராரென்றே அழைக்கப்படுவார்கள். இவ்வாறு புவியரசர்களாலும், கவியரசர்களாலும் சிறப்புற்று வாழ்ந்திருந்தது. இப்புராணம் பாடியவர் இவ்விதசிறப்புற்ற ஊரில் தோன்றியவராவர்.

## இப்புராணத்துக்கூறிய
## ஆக்கியோன் பெயர் முதலியன.

உலவுபோதபோதாயின சூத்திரமுடையவ னியற்காசித்
தலபுராணிகன் சங்கரநாரணன் றரவருகவிமேகங்
குலவுகாசிப கோத்திரந்தனில்வருங் குருபதமுடிக்கோமா
னிலவுகார்கவி ராஜபண்டிதன்றமிழ் நெறிமுறையுரைசெய்தான்.



## உரையாசிரியர் வரலாறு.

திருச்செங்கோட்டில் பல வருணத்தினர்களுக்குந்தனித்தனி மடங்களிருக்கின்றன. அந்த மரபினர் பெரும்பான்மை தங்கள் மடத்திலேயே தங்குவார்கள். வந்தவர்களுக்கிடம், மற்றும் வேண்டுவன உதவுதற்கு ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு பண்டாரங்கள் குடும்பத்துடனிருந்து வருகின்றார்கள் இவர்கள் தாங்கள் இருக்குமிடத்துக்கு உரியவர்கள். இத்தலத்தில் கோவிலுக்கு ஏற்படுத்தியுள்ள மாலை, சந்தனம், தீபம் முதலியவைகளைக் கண்காணித்து நடத்துவார்கள். இதுவன்றி தேவஸ்தானத்தில் நித்தியக்கட்டளை, மாலை, சந்தனம், கோபுரவாயில், வரடிடிகல், அறுபதாம்படி முதலிய இடத்துத்தீபங்களும், இவர்கள்தான் வைப்பவர்கள். தேவஸ்தானத்தில் சடபளம் உம்பளமுண்டு.

இவர்கள் லிங்கதாரணர்களான வீரசைவர்கள், பச்சக்கதந்த உடையார், கேதார உடையார் ஆதீனத்தைச்சேர்ந்தவர்கள். கும்பகோணம் சிவப்பிரகாச சுவாமி; வழக்கப்படி பல்லக்கில் எழுந்தருளி திருச்செங்கோட்டுக்கு வரும்பொழுது கேதாரஉடையார் மடத்தார் ஏவலின்படிமுன்னின்று இந்தத்தலத்துள் சிவிகை ஏறிச்செல்லொண்ணாது பாதசாரியாகச்செல்க என முன்னின்று தடுத்து நடந்து செல்லுமாறு செய்த வீரசைவக் கூட்டத்தார்கள் இவர்களேயாம்.

முக்கியமாகச் சொல்லப்படுகின்ற பதினைந்து மடங்களுள் கருணீகர் மடமும் ஒன்று. கருணீகர் மடத்துப் பரம்பரையில் தோன்றியவர் சிற்றம்பல பண்டாரத்தையா என்பவர், இளமையிலேயே நற்குண நற்செய்கைகளோடிருந்து, தமிழில் மிகுந்த ஆசைகொண்டு நல்லாசிரியர்களை அடுத்துக்கற்கத்தொடங்கினார். இலக்கண இலக்கியங்களில் வல்லவரானார். இசை நூல்களும் பயின்றார். திருச்செங்கோட்டுப் புராணத்துக்கு உரை எழுதினார். இவர்பாடிய திருச்செங்கோட்டு மாலை, பாகம்பிரியா அம்மன் ஊஞ்சலான, சிறுபிரபந்தங்கள் மாத்திரங்கிடைத்திருக்கின்றன. கீர்த்தனங்கள், பதங்கள், சொற்சுவை, பொருட்சுவையோடுஉள்ளது தாளக்கட்டு, இசைக்கட்டுகளோடு செறிந்து சுரஸாஹித்தியங்களும் அமைக்கப்பட்டு மிகுந்த வியப்பைத் தரத்தக்கதான பல இருக்கின்றன.

மற்றொரு தமிழ்ப்புலவரைக் கண்டால் ஒருவிதமான அருவருப்படைந்து ஒருவரை ஒருவர் குறைகூறுவது உண்டு. ஆனால் இச்சிற்றம்பலக்கவிராயர் அப்படியல்லர். வந்த புலவரை முகமலர்ச்சியுடன் வணக்கமாக வரவேற்று சமயமறிந்து தங்குவசதி, உணவு வசதிகளையெல்லாந்

தேடிக்கொடுத்து இருத்திஉடனிருந்து அங்குள்ள உபகாரிகளிடம் அறிமுகப்படுத்தி, விசேஷமாக எடுத்துரைத்துத் தக்க சன்மானம் புரிவிப்பர். தன் மனதுக்குக்குறைவென்று கண்டால் எடுத்து இடித்துரைத்துஉபகரிக்கச்செய்வர் ஆனால் இவ் வழக்கம் கொங்குநாட்டினருடன் பிறந்ததிலொன்றாகும் நன்குகற்றார் அல்லாராயினும் தான் புதிய செய்யுளியற்றிக்கொடுத்தும், உரைகூற வல்லரல்லாராயினும் தான் அதில் நுழைந்து மிகுசிறப்பாகக்கூறியும் அவையினரைமகிழ்வித்தனுப்பும்உயரிய பெருங்குணம் வாய்ந்தவர்.

## உரை எழுதத் தொடங்கியது.

சாலி சகாப்தம் 1897.

—:O:—

ஏர்விள்ம்பிவருடமதிற் சிரவணத்திங்களிற் பதினொன் கினியதேதி
சீர்விளம்பி மதிக்கிழமை யமரபக்கம் பதின்மூன்றாந் திதிநாட்பூசம்
தேர்விளங்கு திருவீதி நாககிரி மான்மியத்தைத் தெளிந்து தேர்ந்து
சூர்விளங்குபுலனமைசிற் றம்பலவனுரைபெழுதத் தொடங்கினனே.



## சோழன் கோராஜகேசரி வன்மன் கா[illegible]த்தது

## நாகர்குன்றின் மேல்பக்கமுள்ள[illegible]

[இன்னதெய்வம் என விளங்காதசாசனம்.]

ஸவஸ்திஸ்ரீகோராஜ கெஸரிவன்மற்குயாண்டுபதி.
னொலாவது இவ்வாண்டு திருச்செங்கோட்டுத்திருவாதி
ரைக்கணப் பெருமக்கள் கையில்லி செங்கோனடி
கள் தேவியார் ஸ்ரீகாமக்கனார் எகவீரதிவாகரதேவரே
சார்த்திவைத்த செம்பொன்கா செட்டாங்கல்லால்இ
ருபதின் கழஞ்சு இப்பொன்னின் பலிசைகொண்டு
திருவாதிரை தோறுந்திங்களிருபதுபிராமணரைசந்
திராதித்தவல் ஊட்டுவதாக என்னுந்திருவாதிரைக்க
ணபெருமக்களோம்[!11]

## சோழன் பரகேசரிவன்மன் காலத்தது

ஸ்வஸ்திஸ்ரீ [II] கொப்பர கெசரிபன்மக்கு செல்லா
நின்றயாண்டு இருபத்தெட்டாவது இவ்வாண்டு திருச்
செங்கோட்டு திருமலைமேல் தவாக்சிக்கும் திருவாதிரை
திருவோணத்துக்குமாக சந்திராதித்யவல் ஊட்டுவதாக நாந்தன
வச்ச செம்பொன் முக்கழஞ்சு இப்பொன் ப்பலிசய்[ு]காண்[டு]
[இரு]கலம் ஊட்டுவோமானோம் மூன்று கணப்பெருமக்களோ[ம்]
பெருமக்கள் ரக்ஷை.

## மதுரை நாயக்கர் காலத்தது

## கைலாயநாதர் கோபுரத்திலுள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்த ௲௪௱௮௰ இதின் மேல் செல்லாநின்ற சோபகிருது வருஷம் ஆவணி மாதம் ஸ்ரீ விசுவநாத சொக்கலிங்கநாயக்காய்யனவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகையில்.

வெண்பா.

நணியகைலாயனாதருக்குப் பூசை
அணிகிளருங்கோபுரமுண்டாக்கிப் பணிமலைமேல்,
காசிவிசுவேசருக்குக் கற்கோவிலும் பாணித்தான்
நேசருணைச் சேஷாத்திரி,

விஜயநகரம் வீரப்பிரதாப

# ...ணதேவ மஹா ராயர்

## சாசனம்.

### குமாரர் கோவில் வடபுரம்

### குமுதவரியிலுள்ளது

---

சுபமஸ்து-ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹாமண்டலேசுவர ஹரிஹர ராயவிபாடந் பாஷைக்குத்தப்புவராய கண்டன் மூவராயகண்டன் துலுக்க தளவிபாடன் ஒட்டியதளவிபாடன் கண்ட நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் எம்மண்டலமும் திறைகொண்டு வென்றருளிய ராஜாதிராஜன் ராஜபரமேசுரன் பூர்வதக்ஷிண பச்சிமஉத்திர சமுத்திராதிபதி கஜவேட்டை கண்டருளிய ஸ்ரீ வீரப்பிரதாபன் ஸ்ரீ கிருஷ்ணதேவராயன் பிரிதிவிராஜ்யம் பண்ணியருளாநின்ற கலியுக சகாப்தம் ருசாசயச இதன்மேல் செல்லாநின்ற சித்திரபானு வருஷம் விரிச்சிக ஞாயிற்று பூர்வபக்ஷத்தில் துவாதசியும் சுக்கிரவாரமும் ரேவதி நக்ஷத்திரமும் சித்தயோகமும் பாலவகரணமும் பெற்ற இற்றநாள் கொங்கான வீர சோழமண்டலத்துக் குன்றத்தூர் துர்க்கம் சூழ்ந்த பன்னிரெண்டு பற்றும் திரியம்பக உடையார் ..............................கீழ்கரைப் பூந்துறை நாட்டில் அர்த்தநாரீசுவரமுடைய தம்பி..............................

உத்திராட நட்சத்திரத்தில் துசாளேகணமும் ரேவதி நட்சத்திரத்தில் தெப்பத்திருநாள் நடத்துதற்குக்கட்டளையிட்டு இந்தத் திருநாள் செலச்சத்துக்குச் சந்தையிலுண்டான சுங்கந் தாகு மகமை எறுசம்மாதம் ஆகும் முகலிடக்கொடுத்தோம். திருநாள் நடத்தக் கட்டளையிட்டு அர்த்தநாரீசுவரமு..................................................பிள்ளை சந்நிதியிலே உத்தானத்துவாதசி புண்ணிய காலத்திலே கட்டளையிட்டுத் தாரை வார்த்துக்கொடுத்தேன். இந்தத் தன்மத்தைக் குன்றத்தூர் துர்க்கத்துக்கு வந்த ராஜாக்களும், இத்தானத்துக்கு வந்த அதிகாரியும் இந்த நாட்டாண்மைக்காரக் கவுண்டர்களும் இந்தத் திருநாளை பரிபாலனம் பண்ணி நடத்தினவர்களுக்கு நூறு கோடி அசுவமேத யாகம் பண்ணின பலன். கங்கைக்கரையிலே ஆயிரங்கோடி கபிலை கோதானம் பண்ணின பலன் உண்டாகக்கடவதாகவும் இந்தத்திருநாள் நடத்தாமல் அகிதம் பண்ணினவனுக்கு தங்கள்.... ..............கங்கைக் கரையிலே போகக்கடவராகவும்.

---





## திருச்செங்கோட்டுப்புராணத்துளடங்கிய பாகங்கள்.


திருச்செங்கோட்டுத் தேவாரம்
திருப்புகழ்
முகவுரை
நூலாசிரியர் வரலாறு
உரையாசிரியர் வரலாறு
சாசனங்கள்

பர்வதகாண்டம்.

பாயிரம்
நாககிரிச்சருக்கம் ... 11
கிரிவரலாறு .... 24
வந்தியாபாடாணம் .... 31
உமைதவம் ... 36
அர்க்கபாகம் .... 46
அருச்சனை ... 54
கந்தர் பூசை .... 62
விஷ்ணு பூசை ... 67
பிரமன் பூசை ... 75
துர்க்கை பூசை .... 81
ஆதிசேஷன் பூசை .... 84
பதினெண்புராணம் .... 88

காந்தகாண்டம்.

தாருகன் செயற்கைச்சருக்கம்... 93
சண்முகருற்பத்தி .... 101
சண்முகர் செயற்கை ... 112
தாருகன் வதை ... 119
சூரபதுமன் வதை .... 127
முருகர் சிவார்ச்சனை .... 139
குமாரர் திருமணம் ... 144
கிருஷ்ணசரித்திரம் .... 150
வள்ளிநாயகி உற்பத்தி .... 157
வள்ளி திருமணம் .... 166

தீர்த்தகாண்டம்.

கணபதி தீர்த்தச்சருக்கம் .... 178
விஷ்ணு தீர்த்தம் .... 184
பிரம தீர்த்தம் .... 191
துர்க்கை தீர்த்தம் ... 195
நாக தீர்த்தம் ... 198
சிவதீர்த்தம் ... 201
குமாரதீர்த்தம் .... 203
பாவநாசம் .... 212
தன்மதீர்த்தம் .... 220
இந்திரதீர்த்தம் ... 226
வயிரவதீர்த்தம் ... 230
வாணதீர்த்தம் .... 238
தேனுதீர்த்தம் ... 241
கோதீர்த்தம் ... 243
சண்முகதீர்த்தம் ... 247
சர்வதீர்த்தம் .... 251
தீர்த்தவிலை ... 254
சிங்கவன்மன் ... 257
சிங்கவன்மன்சாபவிமோசனம்... 267
திருவிழா ... 274
பாண்டவர் ... 283
பாண்டீசுரர் .... 289
பணிமலை காவலர் .... 300

உ

நாரிகணபதி துணை.

திருக்கொடிமாடச் செங்குன்றூர்

என்கின்ற

# திருச்செங்கோட்டுப்

## புராண மூலமும்-உரையும்.

## பாயிரம்.

—:0:—

### காப்பு.

நீர்கொண்ட திருச்செங்கோ டேர்கொண்டு சீர்கொண்டு நிதியங்கொண்டு
பேர்கொண்ட வியாசமுனி பெருந்தகைய சூதருரை பிறழாவண்ணம்
பார்கொண்ட நாரிகண பதியென்று மழகியகற் பகமென்றும்போர்த்
தார்கொண்ட வேணியர்த்த நாரீசர்தருகளிற்றின் சரணம்போற்றி.

(இதன்பொருள்.)

புண்ணியதீர்த்தங்கள் பொருந்தி அழகும், புகழும், வளமுமுடைத்தாய் விளங்கிய திருச்செங்கோட்டுத் தலபுராண மான்மியத்தை, வேதவியாசரிடத்தில் கேள்வியுற்ற சூதமுனிவர் வாக்கியமான கிரந்தத்தை முறைபிறழாமல் மொழிபெயர்த்துத்தமிழினால்பாடவேண்டியதைநிறைவேற்றும்படியாகக் கொன்றைமாலை சூடிய சடையினையுடைய அர்த்தநாரீசருடைய மூத்தகுமாரனாகியநாரிகணபதியாரென்றும் அழகிய கற்பக விநாயகரென்றும் பெயரையுடைய யானைமுகத்து விநாயகமூர்த்தியினது சீர்பாதங்களைத் தொழுது வணங்குவாம்.—என்றவாறு.

### பரமசிவம்.

அருவாயு முருவாய் மருவுருவ மாகியவை யல்லாதாயுந்
திருமாலு நான்முகனுந் திருவடியுந் திருமுடியுந் தேடிக்காணு
மொருசாய லோருருவா யெவ்வுயிர்க்குந் தாய்தந்தை யாமேயென்ன
மருவாருங் கொடிமாடச் செங்குன்றூர் நின்றவன்றாள் வணக்கஞ்செய்வாம்.

(இ-ள்.) அருவமாகியும் உருவமாகியுமருவுருவமாகியுமவையல்லாதபொருளாகியும், அரிபிரமரிருவருந் திருவடியுந் திருமுடியுந் தேடிக்காணாதஅக்கினிமயமாயும், உமாதேவியும் பரமசிவமும் ஒருருவமாகியுஞ் சகல சீவாத்மாக்களுக்கெல்லா அன்னையும் பிதாவும் நாமேயென்று தரிசனங்கொடுத்தருளிப் பூமணம்நிறைந்த திருக்கொடிமாடச் செங்குன்றூரி லெழுந்தருளி நின்றவனது சீர்பாதங்களை வணங்குவாம்.—எ-று. (க)

## அர்த்தசிவாம்பிகை.

சீர்பெற்றசெழுஞ்சடையுந் திருக்குழலுஞ்செயனுதலுஞ் சிவந்தநோக்குங்
கூர்பெற்றகயல்விழியுங் குழைப்பணியுங் குழைத்தோடுங் குமுதவாயுந்
தார்பெற்றகதைக்கரமுஞ் சரிக்கரமுந்தடவுரமுந் தனப்பொன்மார்பு
மேர்பெற்றவதட்டுகிலு மிகற்பதமுஞ்சிலம்படியு மிதயஞ்சேர்ப்பாம்.

(இ-ள்.) அழகுதங்கிய குளிர்ந்த சடையும் அழகிய கொண்டையும், ஒழுக்குத் தங்கிய சிவந்த நெற்றிக்கண்ணும், கூர்மையையுடைய மீன்போன்ற விழியும், நாக குண்டலச்செவியு மிரத்தினத்தோடணிந்த செவியும், ஆம்பற் பூப்போன்றவாயும், ஒழுக்கமாகிய தண்டாயுதம் பற்றிய கையும், வளையலணிந்த திருக்கரமும், விசால முள்ள மார்பும், பொன்மணியாரம்பூண்ட முலைமார்பும், சவுந்தரியமான புலியாடை யுடுத்திய இடையுஞ்சவுந்தரியமான பூந்துகிலணிந்த இடையும், வீரக்கழல் பொருந் திய திருவடியுஞ் சிலம்பணிந்த சிற்றடியுமாய் விளங்கிய அர்த்தசிவாம்பிகை மூர்த் தத்தை மனக்கருத்தில் தியானஞ் செய்வாம்—எ-று. (௨)

## செங்கோட்டையர்.

### வேறு.

சீர்வயங்கிய தீர்த்தத்தில் முத்தநிறைந்தலம்புபமிசை
கார்வயங்கிய வழிபொனமுனிவர்தங் கண்ணிணைகளிகூரச்
சீர்வயங்கிய திருவருள்மணந்தரத் தேனொருபாகராகப்
பார்வயங்கிநின் றதவுசெங்கோடர்தம் பதமலர்தினம்போற்றி.

(இ-ள்.) தேவதீர்த்தத்தில் முத்துமணிநிறைந் தழகுதங்கிய பொற்றாமரைப் பொருட்டின்மேலே மேகங்கள் காலிறங்கிப் பெய்வதுபோல இருடிகள் கண்களி ரண்டுங் கண்டு காட்சியடையக் கிருபையாகிய வாசனையை தரும்பொருட்டாகத் தேன்மொழியென்னு முமையொருபாகமாகப் பூமியின்கண் பிரகாசித்து இஷ்டகா மியம் பொழிந்தருளி நின்றகோலத்துடனே யழகிய செங்கோட்டில் வீற்றிரு நின்ற செங்கோட்டீசருடைய பாதகமலங்களை யெக்காலுந் துதிசெய்வாம். (௩)

## நாகீசர், குன்றீசர், குமரீசர், முருகீசர், பாண்டீசர்.

போற்றிபோற்றிநா கீசரன்றிருப்பதம் போற்றிபுங்கவர்க்கெல்லா
மேற்றமாயகுன் றீசரனிணையடி யிருபொழுதினும்போற்றி
தோற்றமாகிய சுரர்குமரீசர்தாட் டுணைமலர்முருகீச
ராற்றலம்புயம்போற்றிபாண்டீசர்பொன் னடியிணைதொழுவோமால்.

(இ-ள்.) நாகீசரர் திருவடிகளைத் தோத்திரஞ்செய்து, தேவர்களுக்கெல் லாமேலாகிய குன்றீசரர் யிணையடியை யத்திசந்தியும் போற்றிசெய்து, அவ னேதோன்றிய தெய்வத் தன்மையையுடைய குமரீசரர் திருவடித் தாமரைக ளையும் வணங்கி, முருகீசரர் சரணாவிந்தங்களைத்தொழுது, பாண்டீசரு டைய அழகிய இருபாதங்களைத் தோத்திரஞ் செய்வாம்—எ-று. (௪)

## கைலாயபதி.

கயிலையங்கிரி மீதுளோனகன்னனைக் கண்ணொனுதலாளுறிப்
புயலிருங்கிரி தென்கயிலாயமர்ப் புருஷகொங்கினர்வாழக்
[illegible]லிருஞ்சாரத் தருமுகனமர்ந்தசெங் கோட்டினிலடிவாரத்
[illegible]லிருந்தருளெழிற்கயிலாயர்பொன் னிணையடிக்கடியேமால்.

(இ-ள்.) கயிலாசத்தி லெழுந்தருளிய கடவுள், திண்ணப்பனுகிய வேடனைத் தனது கண்ணப்பனென்ற சொல்லும் பொருட்டு, மேகங்கள் தவழாநின்ற திருக் காளத்திமலையி லெழுந்தருளியவர், கொங்குதேசத்தார் வாழும்படிக்குத் தட்சண கயிலாயமாகிய நாகிரியி லெழுந்தருளி கூர்மையாகிய வேலாயுதம் தரித்த ஆறு முகக்கடவுளெழுந்தருளிய செங்கோட்டு மலைச்சாரலி லியல்போடு எழுந்தருளித் திருவப செய்யும் கைலாசபதியினது அழகிய இரண்டு சீர்பாதங்களுக்கு அடிமை செய்யு மடியார்களுக்கு மடியேன்—எ-று. (௫)

## பரிமளவல்லியம்மன்.

சங்கிருந்தசெங் கரத்தனும்பிரமனுந் தனித்தனிதொழுந்தனைக்
கொங்கிருந்தவ ரிருந்தவர்குழாமவர்க் கொடுத்தருள்வரத்தாயா
ரெங்கிருந்துமோர் கணத்துனத்தெண்ணுவார்க் கினிதருள்கயிலாயர்
பங்கிருந்தருள் பரிமளவல்லியார் பங்கயப்பதம்போற்றி.

(இ-ள்.) சங்கத்தையேந்திய கையையுடைய திருமாலும், பிரமனும், அந்தந் யுகந்தோறுந் தனித்தனி பூசிக்க யும், ஆதிசேஷனும் கிரேதாயுக முதலாகிய நான்கு யுகந்தோறுந் தனித்தனி பூசிக்க தபோதனர் குந் திருவடிகளையுடையவரும் கொங்குமண்டலத்தில் பக்தஜனங்களுந் தபோதன ருங் கூட்டமாக வந்துபணிய, வேண்டியவரங்களைக் கொடுத்தருளுந் தாயும் மற்றெங்கிருந்தபோதிலுமனதில்நினைத்தவர்களுக்குஇஷ்டகாமியார்த்தமோட்சங் களைக் கொடுத்தருளிய கைலாயபதியுமான பரமன் இடப்பாகத்தி லெழுந்தருளிய பரிமளவல்லி யம்மனது மலர்போன்ற பாதங்களை வணங்குவோம்- எ-று. (௬)

## தக்ஷிணாமூர்த்தி.

ஆலமாநிழற் கீழிருந்தருள்களை யருள்செயுந்திருவாயு
மாலமாநிழற் கண்டமுந்தென்முகத் தழகுமோர்குறும்பூத
மாலமாநிழற் றிடமிதிபதமுமா லத்தமுமதஞேர்கை
யாலமாநிழ் லிதுவெனுஞானமுத் திரையுமுற்றகஞ்சேர்ப்பாம்.

(இ-ள்.) பெருமையுங் குளிர்ச்சியுமுடைய கல்லாலவிருட்சத்தின்கீழ் எழுந்த ருளி, ஜனகாதி முனிவர்களுக்குபரிய மெய்ஞ்ஞானப்பொருளை யுபதேசிக்குந்திரு வாயும் விடம்பொருந்திய சாயலையுடையகண்டமுந் தெற்கு முகமாகியவழகு முயல கனைஅறமிதித்த பாதமுஞ் சதர்ப்பமமும் மதனில் ஓர்கையினால் பெரியமோட்சவீடு இதுவென்றறிவித்த ஞானமுத்திரையுமாகத் தோன்றிய தட்சிணாமூர்த்தியை யுள்ளத்தில் தியானஞ் செய்வோம்—எ-று. (௭)

## ஆதிகேசவர்.

சங்குசக்கரஞ் சரோருகமிரண்டினிற்றரித்தொருபெருங்கார்வந்
தங்குமித்தென் றும்பருமிப்பரு மனைவருமமைந்தேற்றப்
[illegible]பத்திரு வரம்பெறவரம்பெறப் பணித்தவர்பணித்தாங்குஞ்
[illegible]னத்தினரி கருங்கண்ணத்தினர்படச்செயர்த்தவரொமைக்காப்பார்.

(இ-ள்.) சங்குசக்கரமும் இரண்டு கரகமலங்களில் தரித்துக்கொண்டிருப்பதாற் பெரிய கார்மேகமானது முளைத்தெழுந்ததென்று தேவர்களும் முனிவர்களும்மனிதர்களும் மற்றயாவரும் மகிழ்ந்து வணங்க லட்சுமிகடாட்சமும் பலமும் நினைத்தவரமும் பெறும்படி யருளியவரும் நாகசயனத்தில் யோகநித்திரை செய்யுஞ்செந்தாமரைக்கண்ணையுடையவருங் கட்டமாகிய அசுரர்களனைவரையும்வேரறக்களைந்தவருமாகிய ஆதிகேசவமூர்த்தி யென்னை இரக்ஷிப்பார்—எ-று. (அ)

## திருமகள்.

நானிலத்தவர் நமதியரெனச்சில நன்புரிபவர்க்கெல்லாம்
மாநிலத்தவழ் மாநிதிமலைவளம் வழங்குபொன்மலர்க்கோதை
தேனலர்த்துள வணிந்தவர் திருவுரந் திளைத்திடுதனப்பாவை
வேனிலப்புத வேந்தைவேதனைப்பெறு மென்கொடியடிசேர்ப்பாம்.

(இ-ள்.) நான்கு நிலத்திலுள்ள வடியார்கள் நமதாரென் றன்பு செய்வார்க் கெல்லாம் நிலவளம் மலைவளம் முதலாகிய பாக்கியங்களெல்லாங் கொடுத்தருளும் பொற்றாமரை மகளும் தேன் சுமக்கின்ற துளபமாலையணிந்த ஆதிகேசவப் பெருமான் திருமார்பில் தோய்ந்திடுந் தனபாரங்களுடையவளும் மன்மதனையும் பிரமதேவனையும் பிள்ளையாகப் பெற்றவளும் மெல்லிய கொடிபோன்ற விடையழகுடையவளுமாகிய லட்சுமியினுடைய பாதங்களை சிரசில் வைத்துக்கொள்வேன்—எ-று. (௯)

## பிரமதேவன்.

பாணியைப்புவியைக் கனலைப்பவனத்தை விண்டனையாக்கி
வாணியைத்திரு நாவில்வைத்துலகெலா மறைப்பொருள்விரித்தோதி
வேணியர்த்தநா ரீசனையுளக்கம லத்தினில் விளக்கக்கண்
டேணியைத்திடு மிறைபவன்மறையவ னிணைபடிமலர்போற்றி.

(இ-ள்.) அப்புவை பிருதுவை தேயுவை வாயுவை ஆகாசத்தைச்சிருஷ்டித்து சரஸ்வதியை திருநாவில்வைத்து உலகங்களெல்லாம் வேதப்பொருளை விரித்துரைத்து அழகிய சடையையுடைய அர்த்தநாரீசுவரனை மனத்தாமரையில் விளக்கக் கண்டு மானதபூசை செய்கின்றவனும் சகலலோகங்களையும் பெற்ற இறைவனும் வேதாவுமாகிற பிரமதேவனுடைய இரண்டு பாதகமலங்களையும்வணங்கிப்போற்றி செய்வாம்—எ-று. (௰)

## கலைமகள்.

வாணிவாணியென் னிடமெனப்புகன்றவர் மதுரன்னவிகூறக்
காணிகாணியென் றலைதுக்கருடரூர் கமலவெண்மலரன்னம்
பாணிபாணியிற் கொண்டதற்பணைமறப் பாரகற் குயிர்வேத
நாணிநாணினர் மூதையென் றுரைத்திட நல்குவாள்பதம்போற்றி.

(இ-ள்.) சரஸ்வதிதேவி நீ யென்னுவிற் பிரியாமல் வாசஞ்செய்யவேண்டுமென்று பூசித்துத் தோத்திரஞ்செய்தவர்கள், மதுரமாகிய நல்ல கவிகளைப் பாடும்படிக்கு கிருபைசெய்து அவர்களுடைய மனமே காணியாக இருக்க வெள்ளைத்தாமரைப் பொகுட்டில் வசிக்கின்ற வன்னம்போலும் நடையுடையவளும், கைகளில்சந்தரை



யன்னி வேதமந்திரங்களை லக்ஷியஞ்செய்கின்ற வேதியர்க்குயிர்போன்ற மறைப்பொருளாயிருக்கின்றவளும் பவுத்தருடைய ஊமைப்பெண்ணைப் பேசும்படி கடாட்சஞ்செய்த வாணிதேவி பாதங்களைத்தொழுது தோத்திரஞ்செய்வோம்—எ-று.

## அழகுநாச்சியம்மன்.

கொம்மைவெம்முலைக் களிற்றொடுங்குழைகவர் கூர்விழியாளெனுஞ்
செம்மைபெற்றபொற் கலையொடுந்திருநுதற் றிருவருண்முகமான
விம்மிதங்கொளும் புலிபொடுஞ்சிங்கமேல் விளங்குமின்செங்கோட்டில்
அம்மனம்மைநம் மழகிநாயகி படியடிக்கடிபோற்றி.

(இ-ள்.) இளமைத்தன்மையான வெவ்விய முலைகளாகிய யானைகளோடுங் காதுகளிற் குழைகளோடும் பொருகின்ற பெரியதும் நீண்ட கூரிய கண்களென்கின்ற மான்களுஞ் சிவந்தகலைகளையோடும் அழகிய நெற்றியையுடைய முகமாகிய வற்புதமான சந்திரனோடுஞ் சிங்கத்தின்மேல் பவனிவருகின்றவளும் மின்னற்கொடிபோலும் இடையையுடையவளும் திருச்செங்கோட்டில் எழுந்தருளி யாவர்க்குந் தாயுமாகிய அழகநாச்சியம்மன் பாதங்களை அடிக்கடி வணங்கி வாழ்த்துவாம்—எ-று. (௧௧)

## திருவட்டப்பிள்ளையார்.

புரந்தரன்கண முனிவர்கந்தருவர்புத் தேளிர்பூதமொக்க
லிரந்தரந்தரத் தருவினைபகன்றிட நினைத்தனநிலையாக
தரந்தரந்தர மாகவந்தடிதொழத் தருந்திருச்செங்கோட்டில்
வரந்தருந்திரு வட்டவைங்கரக்கரி யாமுகன்பதம்போற்றி.

(இ-ள்.) தேவேந்திரன் இருடிகள் கந்தருவர் தேவர் பூலோகத்து மனிதரும் யாவரும் சராசரமுந் தங்கள் வினைகளெல்லாந் தீர்ந்து காமியார்த்தங்கள் கைகூடிவரத்தக்கதாக முறைமுறையாக வந்து வணங்கித் தோத்திரஞ் செய்யத் தகமையுடைய திருச்செங்கோட் டடிவாரத்திலிருந்து யாவருக்குங் கேட்டவரத்தைக் கொடுக்குந் திருவட்டப்பிள்ளையாரென்னு மைந்துகையையுடைய யானைமுகத்து விநாயக மூர்த்தி பாதங்களை வணங்குவோம்—எ-று. (௧௨)

## குமாரசுவாமி.

சரவணத்துற்பவித்தருள் தனப்பருகிச்சங்கரன்சங் கரிகைபோந்து, சிரவணத்துநான்முகனை விரற்புடைத்துப் பாற்குபதே சங்கள்செப்பி, கரவணத்துவேற்றிரித்துக் கண்டகரைப்பொருதமையோர் கலக்கமாற்றி, புரவணத்திக்கிரண்டிணைபுணர்ந்துபணிப் பொருப்பினின்றோர் பொற்றாள்போற்றி.

(இ-ள்.) சரவணப்பொய்கையில் அவதரித்துக் கார்த்திகைப்பெண்கள் முலையமுதுண்டுவளர்ந்து வெகுளைமை கைவசஞ் சேர்ந்து சதுர்முகப்பிரமாவை குட்டிச்சிறை [illegible] வெனுக்குபதேசஞ்செய்து கையில் பராசக்தி வேலையெடுத்து சூரர்களைக் [illegible] வென்று தேவர்கள் துன்பத்தை நீக்கி தேவலோகத்திலெழுந்தருளி இந்திரன் மகள் தெய்வயானையை மணஞ்செய்து நாககிரியில் வந்து வசிக்கின்ற குமாரசுவாமியாருடைய இணையடிகளை வணங்குவாம்—எ-று. (௧௩)

இதுவுமது.

தாருகன்றனைத் துணித்துமாவினையெலாந் தவிர்த்துவெஞ்சூர்மாவின்
வேருதுமபடி வேனிறுத்திப்புனை மென்கடம்புடையாரம்
பேருகந்தவர் பெருங்கணியெனக்குறப் பெண்புனந்தனில்நின்றோர்
காருகந்தசெங் கோட்டுருங்கொடி முடிக்கந்தர்பொற்கழல்போற்றி.

(இ-ள்.) தாருகாசுரனைச் சங்கரித்துத் தேவர்கள் மனைவியாதி தவிர்த்து வெவ்விய சூரபத்மாவாகிய மாமரத்தின் வேரறும்படி வேல்விட்டுப்பிளந்து மிருதுவாகிய கடப்பமாலையை யணிந்து கடம்பனெனப் பெயர்பெற்றவனும், தினைபுனத்திற் பெரிய வேங்கைமரமாய் வள்ளிநாயகியை மணஞ்செய்யும்பொருட்டு நின்றவனும் மேகமொய்த்த திருச்செங்கோட்டிலழகிய சிகரத்திலெழுந்தருளியகந்தசுவாமியினுடைய அழகியபாதங்களை வணங்குவாம்—எ-று. (௧௫)

வீரபத்திரர்.

பாரபத்திரன் டெனும்புயபகலனைப் பரிந்தமுன்னவனுமேனன்
ஆரபத்திரன் றிருக்கரத்தெடுத்தெதி ரடர்ந்தவரமர்சாய்த்துக்
கோரபத்திரத் தக்கனை முடிமகக் கொழுங்கனலிடைவீழ்த்தும்
வீரபத்திரன் றிருவடிமருவடி யியன்மலர்முடிசேர்ப்பாம்.

(இ-ள்.) பாரிய பன்னிரண்டு புயங்களையுடைய கடவுளுக்கு முன்னவனுமிருந்து கூரிய கடகாயுதத்தைத்திருக்கைபிலெடுத்து தக்கனுடைய யாகத்திற்சென்று எதிர்த்தபேர்களையெல்லாங் கண்டித்து அவன் தலையை அறுத்து வேள்விக்குண்டத்து நெருப்பிலிட்டு வெற்றியையுடைய வீரபத்திர சுவாமியினது திருவடிகளை வணங்கும் அடியார்களுடைய பாதமலர்களை யெனது முடியில் வைத்து வணங்குவாம்—எ-று. (௧௬)

நந்திதேவர்.

ஒருவனுமிய பான்றனது ருவுட னுயர்ந்தருமையுங்காத்து
விரவுமும்மலம் நான்மறைக்கலைகளும் விளக்குமைம்புலன் சிலம்
பாவுமாறெனுஞ் சமையமேழுலகினும் பரந்திடப்பவத்தெட்டா
மருவுசீர்நவ மானசம்பத்துடை நந்திதாள்மலர்போற்றி.

(இ-ள்.) ஒன்றாகிய சிவனுடைய ரூபத்துடனே ஒங்கியிசபாயிரண்டும் விளங்க ரக்ஷணைசெய்து மூன்றுமலம் நான்கு வேதம் மற்றைக்கலைகளையும் விளக்குத்துவைத்து ஐம்புலனை அடக்கித் தவஞ்செய்து அறுசமயத்துக்கும் ஏழுலகத்துக்கும் பொதுவாயிருந்து பிறப்புக்கெட்டாத சிறப்புப்பொருந்திய நவமாகிய சம்பத்தையுடைய நந்திகேசுரர் பாதமலரைப் போற்றிசெய்வாம்—எ-று. (௧௭)

சண்டியடிகள்-கங்கை-அஷ்டதிக்குப் பாலகர்-ருத்திர
கணங்கள்-இருடிகணங்கள்-அஷ்டவசுக்கள்
சப்தமாதர்கள்.

கட்டுசெஞ்சடைக் கண்ணுதற்பதம்பெறக் கடிந்ததந்தையின்பாதம்
வெட்டுசண்டர்சங் கரார்பரசிவன் கேவணியின்றெளிகர்தோர்



அட்டதிக்கினருருத் திரகணத்துளோ ரட்டசித்தினரட்ட
யிட்டமாதிசை வசுக்களேழ்சத்தியீங் கிவரிணையடிபோற்றி.

(இ-ள்.) சிவந்தசடையைச் சுற்றிக்கட்டிய நெற்றிக்கண்ணையுடைய சிவனது பெறும்படிக்குப் பூசைசெய்ய, அந்தப்பூசைக்கு விக்கினஞ்செய்த தகப்பனது பாதத்தை வெட்டின சண்டேசுரர்; சிவனது சடாமகுடத்திலே பிரகாசிக்கின்ற கங்காதேவியையும்; அஷ்டதிக்குப்பாலகர், உருத்திரகணாதிகள், அஷ்டமாசித்திகளையுடைய இருடிகணங்கள், அஷ்டவசுக்கள், சப்தமாதர்கள் இவர்களது துணையான பாதங்களைப் போற்றிசெய்வாம்—எ-று. (௧௮)

சம்பந்தர்.

காழியிற்றிருக் கவுணியன்கன்றெனக் கண்ணுதலுடன்றேவி
வாழியென்றுதன் றிருமுலைப்பால்தர மறைமொழித்தமிழோதிச்
சூழிவெங்கய மெனவெழுந்தாலயத் தோத்திரமதப்பெய்து
பாழிவெஞ்சமண் டவிர்த்தோருக்குசம் பந்தர்பொற்பதம்போற்றி.

(இ-ள்.) சீகாழியில் கவுணியர்கோத்திரத்தில் யானைக்கன்றுபோற் றோன்றி நெற்றிக்கண்ணையுடைய பரமேசுவரனும் பார்வதிதேவியு மாசீர்வதித்து, உமாதேவி திருமுலைப்பால்கொடுக்க வுண்டு, தமிழ்வேதங்களை வோதிய மும்மதம் பொழிந்து பலம்பொருந்திய யானையைப்போலுஞ் சிவாலயத்தோறுந் தேவாரமாகிய மதம்பொழிந்து வெவ்விய சமணரைக்கழுவிலேற்றிச் சைவசமயத்தைப் பரிபாலனஞ்செய்த திருஞானசம்பந்தசுவாமிகளது உபயபாதங்களைப் போற்றிசெய்வாம்—எ-று. (௧௯)

திருநாவுக்கரசு.

சுந்தரமூர்த்தி.

காலனுக்கடுவிட மெனவுதி நாவியிற்கனிந்தோதிப்
பாலனைத்தருங் கனவொருகாலினைக் காவினிற்படைத்தானும்
வேலையிற்புகு கற்றுறிகற்றுணை வின்மிசைப்புன்பேறைக்
தோலமுற்றுரை யுரவனுந்தமியனுக் குறுதுணையெனலமைால்.

(இ-ள்.) சமணர்கள்பிடித்துக் கல்லுணிவேகட்டி சமுத்திரத்தில் தள்ளிவிட, கற்றவறிவினாலே சிவனுடைய திருநாமமாகிய பஞ்சாக்ஷரத்தைச் சபஞ்செய்து அந்தக்கல்லுதுணே தெப்பமாக மிதந்துவந்து கரைசேர்ந்து சிவஸ்தலங்களைத் தெரிசித்துத் தேவாரங்களைப் பாடியருளிய திருநாவுக்கரசுசுவாமிகள் எனக் குற்றதுணையாகியிருப்போர். எமனுக்குக் கொடியவிடம்போலுந் தோன்றியுந் திரு அவனுசிவி முதலைவிழுங்கிய பிள்ளையைத் தேவாரங்களை யருளிச்செய்து முன்றவருக்கு வழைப்பித்தசுந்தரமூர்த்திசுவாமிகளதுஉபயபாதங்களைப்போற்றிசெய்வோம். (௨௦)

மாணிக்கவாசகர்.

மூகைமுதரை மொழிபவும்பவுத்தரை முனைபவுமற்றீர்த்த
[illegible]குபாடிதென் றறியவும் பாவையைக்கோவையைப்பரன்தீட்ட
[illegible]கையின்புற வுரைப்பதற்கில்லையு ளுயர்ந்தபொற்சபைமீதே
யேகின்றிது பொருளெனவிளம்பவு மினியவரெமைக்காப்பார்.

(இ-ள்.) ஊமைப்பெண்ணை முதிர்ந்த வார்த்தை பேசவும் பவுத்தரைச்செயித்து சைவசமயத்திலே சேர்த்தருளி திருவாசகத்தையுந் திருச்சிற்றம்பலக்கோவையாரையுஞ் சிவன்கைபாலே எழுதப்பாடியருளிய அன்புடையவர் சிதம்பரத்திலே கனகமயமாகிய சிற்சபையிலே செய்த திருவாதவூராகிய மாணிக்கவாசக சுவாமிகள் எம்மை பாதுகாத்து ரட்சிப்பார்—எ-று. (உக)

## அறுபத்துமூவர்.

ஆறுபத்தொரு மூவரென் றரனடி யடைந்தவ ரடையாரை
வேறுபட்டிட மறனிபவர் கனிபவர் வினையெலாந் தொலைத்தாள்வோர்
கூறுசேர்சதுர் வேதியரருச்சகர் குரவரைந்தெழுத்தோதி
வீறுபெற்றருள் மடாதிபர்சைவர்மா விரதியர்பதம்போற்றி.

(இ-ள்.) சைவசமயாச்சாரிகளாகிய அறுபத்துமூவரென்று சிவன் பாதத்தை அடைந்தவர்கள், அப்படி அடையாதவர்களை வேறுபட்டு கோபஞ்செய்பவர் சிவனுக்கு அன்புடையவர்கள் வினையெல்லாந்தொலைத்து அடிமைகொள்பவர் சொல்லப்பட்ட மறைமொழியாகிய சதுர்வேத பாராயணஞ் செய்கின்ற பெரியோர்கள் சிவனை அர்ச்சிக்கின்ற குருமார்கள் பஞ்சாட்சரத்தை விடாமல் தியானஞ்செய்கின்ற மடாதிபர்கள் சைவநெறியையுடையவர்கள் பெருமைபொருந்திய தவத்தையுடையவர்கள் இவர்களது பாதங்களைப் போற்றிசெய்வோம்—எ-று. (உஉ)

## பணிமலைக்காவலர்.

மணிதரும்பொறி வாளரவணிந்தவர் மங்கைபங்குடையார்பொற்
கணிதருந்திரு வடிவினாலயங் கடிவதுகருத்தாகத்
திணிதரும்வடி வருந்துலைக்கரைப்படச் செயிர்த்தவர் செங்கோட்டி
லணிதருந்திருப் பணிமலைகாவல ரடியர்காவலராவார்.

(இ-ள்.) சிரோரத்தின ஜீவரத்தினப் படப்புள்ளியுங்காந்தியுமுடைய சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்தவரு முமையொருபாகமாகியும் பிரகாசம்பொருந்திய திருமேனியையுடையவராகிய அர்த்தநாரீசுவரர் எழுந்தருளியிருக்கின்ற திரு ஆலயத்தை மாறுபாடு செய்யும்படிக்குக் கருதி அணிந்துவரப்பட்ட அதுக்களை பொருதிச் செயித்து, திருச்செங்கோட்டு மலையடிவாரத்தில் வசிக்கின்றவருமாகிய வழகுபொருந்திய கிரிக்குக் காவலாயிருக்கின்ற மலைகாவலர் அடியவருக்குங் காவலாயிருப்பர்.

## ஆக்கியோன்பெயர்.

உலவுபோதகாயன சூத்திரமுடையவ னியற்காசித்
தலபுராணிகன் சங்கரநாரணன் றருகவிமேகங்
குலவுகாசிப கோத்திரந்தனிவருங் குருபதமுடிக்கோமா
னிலவுகார்கவி ராஜபண்டிதன்றமிழ் நெறிமுறையுரைசெய்தான்.

(இ-ள்.) ஞானபோதம் பிரகாசிக்கின்ற போதாயனசூத்திரமுடையவர், காசிப கோத்திரத்தில் வான்முறையாய் அவதரித்தவர், காசிஸ்தலபுராணம் பாடியருளிய சங்கரநாரணவையர் குமாரனாகிய கவிதமழை பொழிகின்ற மேகத்தை யொத்த



குருபாதத்தைத் தனது சிரசில் முடியாகத் தரித்திருக்கின்ற கவிராஜ பண்டிதர் திருச்செங்கோட்டுத் தலபுராணத்தைத் தமிழினாற் பாடியருளினார்.—எ-று. (உச)

## அவையடக்கம்.

பஞ்சகாவியம் பஞ்சலக்கணமிதிப் பனுவலின்றொகையாவும்
விஞ்சுநாற்கவி நாற்பெரும்புலமைசேர் வியன்வடகலைதொன்னூல்
செஞ்சொனீணிலைத் துளகலைத்திறமையோர் தேசிகர்செழுநூலோர்
அஞ்சலஞ்சலென் றெமக்கருள்புரிகுவோ ரவரவர்தினம்வாழ்க.

(இ-ள்.) பஞ்சகாவிய முதலாயுள்ள விலக்கிய விலக்கண நூல்களிற் சிறந்த தெள்ளியர்களாய் விளங்கிய ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்கிற நான்கு கவியும் நான்குவகைப் புலமையுமுடையவராகிய புராணகாவியப் பிரபந்தங்களைப் பாடியருளிய முத்தமிழ்க்கவிராசரும், மேன்மையான கிரந்தம் தமிழ் முதலாகிய பலபாஷைகளுந் தெரிந்தவருமாகிய திவ்விய ஆகமங்கள்கற்ற குருக்கள் முதலாகிய ஆசாரியரும், யோகீசுரர் முதலானவரும் அடியேனுக்கு அபயஸ்தங்கொடுத்தருளிச்செய்கின்ற அனைவோரும் நீடூழிவாழ்க.—எ-று. (உரு)

## உரை ஆசிரியர் விளக்கம்.

ஏர்விளம்பிவருடபதிற் சிரவணத்திங்களிற் பதினொன் கினியதேதி
சீர்விளம்பி மதிக்கிழமை யமரபக்கம் பதின்மூன்றுந் திதிநாட்பூசம்
தேர்விளங்கு திருவீதி நாககிரி மான்மியத்தைத் தெளிந்துதேர்ந்து
சூர்விளங்குபுலனமைசிற் றம்பலவனுரையெழுதத் தொடங்கினனே.

பாயிர முற்றிற்று.

உ

ஸ்ரீ கணபதி துணை.

# திருச்செங்கோட்டுப் புராண மூலமும்-உரையும்.

---:o:---

## பருவதகாண்டம்.

## நாககிரிச் சருக்கம்.

### காப்பு.

மறைக்கோட்டஞ்சிறந்தவனை மிகுனைமிசாரணிய வனத்திற்சூதர், நறைக்
கோட்டந்தருஞ்சடில முனிவருக்குநன்றனயா னவிலக்காப்பார், பிறைக்
கோட்டு வெண்கோட்டுச்செங்கோட்டுத்திருவட்டப் பிள்ளையாரென்,கிறைக்
ளேட்டம் விடவெனது மனக்கோட்டமகலவரு ணிறையயாதோ.

(இ-ள்) வேத கோஷ்டங்களாற் சிறந்த பெருமையை யுடைய னைமிசார
ணியமென்னும் வனத்திற்குச் சூதமுனிவரெழுந்தருளி,யங்குவசிக்கின்ற பரிமளம்
வீசுகின்ற சடாமகுடத்தை யுடைய முனிவர்களுக்குத் திருச்செங்கோட்டுத் தல
மகிமையைச் சொல்லியருளினர். அப்படிச்சொன்ன ஸ்ரீஸ்தலவாக்கியத்தைத் தமி
ழினற் பாடுவதற்கு பிறைக்கோடுபோலும் வெள்ளைக்கொம்பை யுடைய திருவட்
டப்பிள்ளையார் எனதுமனவிருளகற்றி யநுக்கிரகஞ்செய்து காப்பார்.—எ-று (க)

விரதமெலாந்திரண்டனைய திருமேனிச் சதுர்வேத வியாசர்கூறுஞ்
சாதமொழிந்திடுபதினெண் புராணமதிற் காந்தசமுத் திரத்தைச்சார்ந்து
பாவமுத மெனுநாக கிரிப்புராணந்தனைப்பார் பரவுசூதர்
வாமுனிவர் கேட்ப வுரைத் தனரவற்றின் வரவுசில வகுத்துச் சொல்வாம்.

(இ-ள்) தவமெலாந்திரண் டோர்வடிவா யவதரித்த திருமேனியை யுடைய
வேதவியாசர் அருளியபதினெண்புராணங்களிற் காந்தப் புராணமென்னுங் கடற்க
ரையைச்சார்ந்து பரமமோட்சத்துக்கேதுவாகிய நாககிரிஸ்தலபுராணத்தை உலகத்
தார் துதிக்கும்படியாய் சூதமகாமுனிவர்சொல்லிய சரித்திரத்தை யான் தமிழினற்
சொல்லத்தொடங்கினேன்.—எ-று. (உ)

வேறு.

[illegible]பதகாண்டங்காந்த காண்டமண்டர் படிதீர்த்த காண்டமெனப்
பகருமூன்றன், மருக்கொள்வரைநாககிரி வரவுவந்தி மகவுசீர்ப்போடுமைத
வாவ் அரன்வாமத்திற், பொருந்துமர்த்தபாகமருச் சனைவேற்கந்தர் பூமணி

யாமளைசேடன் புனிதபூசை, விருப்புபதி னெண்புராண மிவைபீராறும் வெற்பினது காண்டமதில் விளங்குந்தானே.

(இ-ள்) பருவதகாண்டம், காந்தகாண்டம், தீர்த்தகாண்டமென் றிவ்வாறு மூன்று காண்டமாக, வகுத்துச்சொன்னதில் முதல் பருவதகாண்டத்தில் திருநாககிரிமான்மியச்சருக்கம், கிரிவரலாற்றுச்சருக்கம், வந்தியாபாடாணச்சருக்கம், உமைதவச்சருக்கம், அர்த்தபாகச்சருக்கம், அருச்சனைச்சருக்கம், கந்தர்பூசைச்சருக்கம், விஷ்ணுபூசைச்சருக்கம், பிரமன்பூசைச்சருக்கம், துர்க்கைபூசைச்சருக்கம், ஆதிசேடன்பூசைச்சருக்கம், பதினெண்புராணச்சருக்கம் இவைபன்னிரண்டும் பருவதகாண்டத்தில்வரும்.—எ-று. ([illegible])

தாருகன்சண்முகன்றோற்றஞ் சண்முகர்செய்வினை தாருகன்போர்வீழ்கல், சூரபத்மன்வதைமுருகர் சிவார்ச்சனை சொற்குமரன் மணத் துளவோன் செய்கை, நாரிகுறவள்ளியினுற் பவமன்னங்கை நயந்ததிருமன்றலொடு நவிலுமிச்சீர், காணிகச்சருக்கமெனு மிவையீரைந்துங் காந்தமெனுங் காண்டமதிற் காணலாமால்.

(இ-ள்) தாருகன்செயற்கைச்சருக்கம், சண்முகருற்பத்திச்சருக்கம், சண்முகர் திருவிளையாடற்சருக்கம், தாருகன்வதைச்சருக்கம், சூரபத்மன்வதைச்சருக்கம், முருகர்சிவார்ச்சனைச்சருக்கம், குமரதேவன்றிருமணச்சருக்கம், கிருஷ்ணச்சருக்கம், வள்ளிநாயகியாருற்பத்திச் சருக்கம். வள்ளியம்மன் றிருமணச்சருக்கம் இவை பத்துச்சருக்கமுங் காந்தகாண்டத்தில் வரும்.—எ-று. ([illegible])

வேறு

துன்னுகணபதிதீர்க்க மரிதீர்த்த மயன்றீர்த்தந் துர்க்கை தீர்த்தம்
பன்னகத்தின் றீர்த்தகமுயர் சிவதீர்த்தங்குமரர்க்கன பாவநாசம்
மன்னுதன்மதீர்த்த மிந்தரதீர்த்தம்வைரவத் தீர்த்தம் வாணதீர்த்தம்
தன்மதேனுவின் றீர்த்தம் பாற்றீர்த்தம் சண்முகவன் றீர்த்தமற்றும்.

(இ-ள்) கணபதிதீர்த்தச் சருக்கம், விஷ்ணுதீர்த்தச் சருக்கம், பிரமதீர்த்தச் சருக்கம், துர்க்கைதீர்த்தச் சருக்கம், நாகதீர்த்தச் சருக்கம், சிவதீர்த்தச் சருக்கம், குமாரதீர்த்தச் சருக்கம் பாவநாச தீர்த்தச் சருக்கம், தன்மதீர்த்தச் சருக்கம், இந்திரதீர்த்தச் சருக்கம், வைரவதீர்த்தச் சருக்கம், வாணதீர்த்தச் சருக்கம், காமதேனுதீர்த்தச் சருக்கம், பாற்றீர்த்தச் சருக்கம், சண்முகதீர்த்தச் சருக்கம் பின்னையும்.—எ-று. ([illegible])

தீர்த்தமனைத்தினுமதிக பலனுதவவருஞ்சருவ தீர்த்தத்தோடுந்
தீர்த்தநிலைசிங்கவன்மன் வேட்டைபாவன்புலிபுருவஞ் சேர்ந்தசாபம்
தீர்த்தவையுற்சவமாண்பர் பாண்டுசர் பணிமலைக்காவலர்செறேட்ட
தீர்த்தமிவை காண்டத்துச் சருக்கமிருபான்மூன்றுஞ் செப்புமாறே.

(இ-ள்) தீர்த்தங்களுக்கெல்லாம் அதிக பலனைத் தரும்படியாகிய சர்வதீர்த்தச் சருக்கம், தீர்த்தநிலைச் சருக்கம், சிங்கவன்மன் வனவேட்டைச் சருக்கம், சிங்கவன்மன் சாபவிமோசனச் சருக்கம், திருவிழாச் சருக்கம், பாண்டுசர் சருக்கம், பணிமலைக்காவலர் சருக்கம், பாண்டவச் சருக்கம், இவை இருபத்துமூன்று சருக்கமும் தீர்த்தகாண்டத்தில் விளங்கும்.—எ-று. ([illegible])



அந்தவனத்திடையனந்த முனிவரவரிடப்படித்தாரவர்பாற்கற்றார்
விந்தையரிவ்வளவையென நினைப்பவரி தொருகணத்து வியந்துகூடி
முந்துபுராணத்துடனு கமமுறைநூற்சாத்திரங்கண் மொழிந்துபெம்மான்
கந்தமலர்ப்பதம்பரவி காலைகழித்தவரவருட் சனியுங்காலை.

(இ-ள்) அழகிய நைமிசாரணிய வனத்திற்கணக்கில்லாத முனிவர்களுமவர்களிடத்தில் கற்றவர்களுங் கற்றவரிடத்தில் கற்றவர்களிவ்வளவு அவ்வளவென்று எண்ணி நினைப்பதற்கு அரிதாயிருக்கும், அவர்களனைவரு மொருங்கிஷத்திலே பெருக்கமாகச்சேர்ந்து வேதாகமபுராணசாஸ்திரங்களைப் பாராயணஞ்செய்து சிவபூசைமுடித்துப்பொழுதுபோக்கிக்கொண்டு ஆனந்தமாயிருக்கின்றவேளையில்.—எ-று.

புரிந்தசடைமுடியுநிலா விரிந்ததிரிபுண்டரமும் புனைந்தநீறுந்
தெரிந்தணிந்த வக்கவடந் திரளுமரைவற்கலையுந் திரிதண்டேந்தி
வரிந்தகமண்டலமுமெந்த மண்டலமுந்தொழுஞ்சரண மலருங்கண்டு
பரிந்தகளிமுறுமலும்பர் பரவவருஞ் சூதமுனிவன் படர்ந்தானன்றே.

(இ-ள்) கற்றையாகிய சடாமகுடமும் பிரகாசம் பொருந்திய திரிபுண்டரநீற்றொளியும், இலக்கணமறிந்தணிந்தவுருத்திராக்ஷமாலையும் இடையிற் கட்டியமரவுரியும் தண்டுகமண்டலங்களுந் தாங்கினவராய், சகலலோகங்களுந் துதிக்கின்ற பாத கமலங்களுந் துலங்கும்படியாய் முகமலர்ச்சியுடனே சூதமகாமுனிவர் எழுந்தருளினார்.—எ-று.

வருவனகண்மடருந்தவர்தம் வதனமுழுமதிக்கலையின் வகையானல்கிக்
குருவணக்கங்கவர்க்குத வருகாவதிருவசை குறித்தகாலை
திருவனத்துவியாசமுனி தெய்வபுராணந்தெரிந்து தெரிவித்தீர்பின்
பரமனுக்காதாரமுத்திபதந்தீர்த்தப்பலன்றருதல் பகர்மினென்றார்.

(இ-ள்) இந்தப்பிரகாரம் சூதமகாமுனிவர் வருகிறதைக்கண்ட நைமிசாரணியரிஷிகள் எதிர்கொண்டு சென்று குரு உபசாரங்களைச்செய்து வணங்கி, முகங்கள் முழுமதிபோல் விளங்க, சந்தோஷவெள்ளம் பெருக, உபசாரத்துடனே வரவழைத்துக்கொண்டு திவ்ய ஆசனத்திலிருந்தருளச்செய்து, சுவாமி வியாசகீதையென்னுந் திவ்யபுராண சரித்திரத்தை எங்களுக்குத் தெரியப்பட விளக்கினீர்; நல்லபதவியைக் கொடுப்பதாயுமுள்ள ஓர் தெய்வீகசரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள்.

ஆங்கவர்கேட் பவுமுளங்கொண் டவனிதனிலேகாந்த மானதொன்றுண்
டோங்கியமூ வுலகினுக்கு முபகார முறும்பொருட்கோருதவியாகும்
பாங்கினதுநாகபருப் பதமஃதோங் காரத்தின் படிவமாகுந்
தீங்ககற்றுந்தருமதலங் களிலனந்தகோடிபலன் றிகழாநிற்கும்.

(இ-ள்) அந்த முனிவர்கள் அப்படிக் கேட்டவுடனே மனது சந்தோஷித்துச் சொல்லுகின்றார். "ஓ! நைமிசாரண்ய ரிஷிகளே, இந்தப் பூலோகத்திலே ஏகாந்த" மென்ன ஒக்கிய பெரும்பொருளாகியும், மூவுலகுக்கும் உபகார கர்த்தவ்யமாகியும், ஓங்காரத்தின் சொரூப லட்சணமுள்ளதாயு மோங்கிவளர்ந்த நாகப்பருப்பதம் என்ற ஓர் பருவதம் இருக்கின்றது. அதன்வரலாற்றைக் கேட்டோர்களுக்கெல்

லாந் தீங்காகிய பொல்லாங்கை விலக்கிவிடும், அல்லாமலும் அனந்தங்கோடி திவ்ய ஸ்தலங்களினும் அதிக பலனைத்தரும்படியாய் விளங்கியிருக்கும்.—எ-று. [௰]

தயங்குகங்கையமுனைகோ தாவிரிநர்ம தைவாணி தகுநர்சிந்து, பயங்கெழு
காவிரிமுதற்பற் றீர்த்தமுளுமதிகபலன் பயக்குங் கண்டாற்செயங்கொளண்
டர்பதங்கொடுக்குந் தீண்டிலயன் பதந்தருமுட் கொண்டான் மாயன், இயங்
குபதங் கருமூழ்கி லுருத்திரன்றன் பதந்தருமத் தென்றுந்தானே.

(இ-ள்) பிரகாசமுள்ள கங்கை, யமுனை, கோதாவிரி, நருமதை, சரஸ்வதி, சிந்து, காவிரிமுதலான தீர்த்தங்களினும் அதிகபலனைக்கொடுக்கும் புண்ணிய தீர்த்தங்களாகும், அதைக்கண்டவர்களுக்கு தேவ பதவியைத்தரும், அதைக் கையாற் றீண்டினவர்களுக்கு பிரமபதவியைத்தரும், உட்கொண்டவர்களுக்கு விஷ்ணு பதவியைத்தரும் அதில் மூழ்கினவர்களுக்கு சிவ பதவியுங் கொடுக்கும்.—எ-று. (கக)

அன்னபணி மலையையகந் தனினினைந்த சேனுடை யவர்கட்கெல்லா
மூன்னுதிருத்தருமடைந்தார்க் குறும்பிறவித் துயரொழிக்கு முத்திசேர்க்கும்
பின்னுநவகண்டதலத் தெங்கிருந்துநினைந்திடினும் பிறப்புநீங்கும்
மன்னியவத்தலத்திருந்த மாதவர்தம் மிகுதியையாம் வழங்கவற்றோ.

(இ-ள்) அந்த நாககிரியை மனதில் நினைத்தவர்களுக்கெல்லாம் எண்ணியகருமங்கள் கைகூடும், அங்ஙனமவர் தடைந்தவர்க்குண்டாகிய பிறவித்துன்பத்தை நிவாரணஞ்செய்து முக்தியைக் கொடுக்கும், மற்றும் நவகண்டபூமியிலெங்கிருந்து நினைத்து வணங்கினாலு மவர்களுக்குப் பிறப்பில்லை, அந்தத்தலத்தில் வாசம் பண்ணப்பட்ட மகா தபோதனர்களுக்கு வருகிறபலனிவ்வளவென்றளவிட்டுச்சொல்லக் கூடுமோ.—எ-று. (கஉ)

கயிலைமலை வேண்டுமென்றால் நாககிரி யைச்சிறிது கருத்துட்கொள்வோர்
நியதியிலோர் தரிசனையி னிலையுணர்வார் நீர்குடைந்து நிலையுட்கொண்டே
இயலரவ மலைப்பரனைக் கண்டிறைஞ்சி யிருமரபு மிரண்டுகோடி
நயமுதவுதலைமுறையாய் நாககிரிச் சம்புவின்றா ளிணைஞ்சேர்வார்.

(இ-ள்) கயிலாசகிரியைக் காணவேண்டுமென்பவர்கள் நாககிரியைமனதுட்கொண்டு தியானஞ்செய்து கயிலாசகிரியைக் காண்பார்கள். அந்தத் தீர்த்தங்களைக் கண்டாலும்பேரின்பநிலையை யுணர்வார்கள். அந்தத்தீர்த்தத்தில் உள்ளன்புகொண்டுமூழ்கினவர்களும் அழகிய பணிமலையைக்கண் டிறைஞ்சினவர்களுமாகிய இருமரபுளோருமிரண்டுகோடி தலைமுறையாய் நாககிரீசர் நளின பாதக்காட்சி யென்னும் பதவியிற் சேர்வார்கள்.—எ-று. (கங)

வேறு

ஆங்கவர் பெற்றபேற்றை யளவுற வுரைக்கிற் சேடன்
றாங்கிய மண்ணும் விண்ணிற் றாரகைக் கணங்கள்யாவும்
பாங்குடனெண்ணினுமெண்ணப் படாத்தொகையள வேயன்றோ
பூங்கொடிபடர்ந்தநாகப் பொருப்புள புதுமையம்மா.

(இ-ள்) அப்படிப்பட்ட நாகமலையைத் தரிசிக்கப் பெற்றவர்கள் பெற்ற பேற்றை நான் அளவிட்டுக் கூறவேணுமின் ஆதிசேடனால் தாங்கப்பட்ட பூமியி



லுள்ள மணல்களை யெண்ணினாலும், ஆகாயத்திலுள்ள தாரகணங்களை யெண்ணினாலும் அளவுபடாத மகத்துவத்தையுடையது, நல்ல பூங்கொடிகள்படர்ந்த அழகிய நாககிரியின் மகத்துவம்.—எ-று. (கச)

நாகமா மலையென்றோர்கா லுவந்து ளுரைத்த பேர்க்கும்
நாகமாமலைக்கே யேக நற்றட மென்றோர்க்கும்
யோகமா தீர்த்தமுப்பான் மூன்றுகோ டியினுமூழ்கி
யாகமுந் தவமுமேலா மாதவர்பலனும் நேராம்.

(இ-ள்) நாகாசலமென் றொருதரம் நாவினாற் சொன்னபேர்களும், நாகமலைக்குப்போக வழி காட்டிய பேர்களும், முப்பத்துமூன்றுகோடி தீர்த்தத்திலு மூழ்கினவர்களுடைய பலனும் யாகஞ் செய்தவர்களுடைய பலனும், அநேக நாளரிய தவஞ் செய்தவர்களுடைய பலனும் பெறுவார்கள்—எ-று. (கரு)

மனைவியர் மைந்தருற்றோர் மரபுளோ ருடன்வந்தேத்திற்
றனதிரு பாலுமேழு கோடிதன் றலைமையீசன்
புனைபதத் தடைவாதேவர் புரந்தர னயன்மாலந்த
மனனுறக் கருணைகூர்ந்து வரம்பல பெறுவர் மன்னோ.

(இ-ள்) மனைவியர், புத்திரர், சுற்றத்தார், மரபுளோர்களுடனே வந்து கிரியைத் தரிசனஞ்செய்தால் தங்க ளிருமரபிலேழுகோடி தலைமுறையிற் செய்த பாவங்கள் நீங்கி முதன்மையான யீசனது பாதாரவிந்தங்களை யடைவர், தேவேந்திரன் முதலாகிய தேவர்களும் அரிபிரமரும் தங்கள் தங்கள் மனதிலெண்ணிய வரங்களைப் பெற்றதுபோல சகல வரங்களையும் பெறுவார்கள்.—எ-று. (கசு)

அம்மைபா கனைவேற் சேயை யைங்கரத் தவனைநாகச்
செம்மலை யதனைத்தெய்வ தீர்த்தத்தை யன்பால்யாரு
மிம்மையி னினைக்கின்றோரை யியம்பினார் தம்மைகண்ணுற்
செம்மையாய்த் தரிசித்தோரைத் திருக்கயி லாயஞ்சேர்க்கும்.

(இ-ள்) உமையவள் பாகனையும், வேலாயுதக்கடவுளையும், விநாயகமூர்த்தியையும், நாகமலையையும், பிரமாவையும், தேவதீர்த்தத்தையும், யாதாமொருவர் பத்தியுடனே இப்பிறப்பில் நினைத்தவர்களையும், தோத்திரஞ் செய்தவர்களையும் நியமப்படி தெரிசித்தவர்களையுந் திருக்கயிலாயபதவியிற் சேர்க்கும்.—எ-று. (கஎ)

அனந்தமாதானஞ்செய்து மகல்வதற்கரியபாவங்
கனந்தருநாகவெற்பிற் கண்டுயிலொழிந்தால்நீங்கும்
நினைந்தவைகனவு காண்பார் நிதிப்பொருட்டுறங்காரேனும்
புனைந்தபாதகங்கண்மாற்றிப் புண்ணியக்கயிலைசேர்வார்.

(இ-ள்) அளவில்லாத சோடசதானஞ் செய்துந் தீருதற்கரிதாகிய கொடிய பாவங்கள் பெருமைதங்கிய நாககிரியில் தூங்காமலிருந்தாலுஞ், சொற்பன நினைவாயிருந்தாலும் பொருளின் மூலியமாகிலும் நித்திரைசெய்யாதிருந்தாலு மவர்களைப்பற்றிய பாவங்கள்யாவுந் தீர்ந்து கயிலாயபதவியிற் சேர்வார்கள்.-எ-று. (கஅ)

பணிமலையதனிற்சென்று பரமனற்சுனையின்மூழ்கி
யணிகொடற்பணங்கள்செய்தாங் கந்தணர்க்கருந்தலீய்ந்து

மணிவடக்கனத்திபாக பணுள்ளைக்தொழுதார்க்கெல்லா
மிணைமாபிலக்கம்வர்க்க மெம்பிரான்பதத்திற்சேர்வார்.

(இ-ள்) திரு. நாககிரியில்வந்து அழகிய சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து முறைமையாகச் சபசந்திபாஞ்தனந் தற்பணஞ்செய்து பிராமணபோசனஞ்செய்வித்து, இரத்தினாபரணமணிந்த தனபாரங்களுடைய உமையொருபாகராகிய அர்த்தநாரீசுவரரைத் தரிசித்து வணங்கினவர்களுடைய இரண்டுமாயிலும்லட்சந்தலைமுறையிற்செய்த பாவங்கள் நீங்கி யெமது பரமசிவத்தின் றிருவடியடைவர்கள்.-எ-று

பஞ்சபாதகத்தரேனும் பணிமலைகண்டாற்பாவ
மெஞ்சிப்பினுருத்திரன்ற னிலங்குபொற் பதத்திற்சேர்வார்
விஞ்சியகிரிகள்சுற்றும் விளங்கும்யோசனைகண்மூன்றிற்
கஞ்சமாகயாபிரயாகைகாசியிற்பலனூறுண்டாம்.

(இள்.) மகாபாதகங்களைச் செய்தவர்களாலும் திருநாககிரியைத் தரிசனஞ்செய்வார்களாகி லவை விமோசனமாகிப்பின்பு உருத்திரபதத்திற் சேர்வார்கள். பின்னையுங் கிரிகள் சுற்றிலும் விளங்கிய மூன்றுயோசனை அளவில் கமலநிறைந்த கயா. பிரயாகை. காசி, இவைகளில் வாசஞ்செய்கின்ற பலன்களில் நூறுபங்கு பலனைக்கொடுக்கும்.—எ-று. (௨௰)

காலையிலெழுந்துநாக கிரியினைக்காண்கமுத்தி
சாலவுமீண்டுமீண்டு தாய்வயிற்றுறுதல்வேண்டார்
கோலமார்வரையிற்றோனுஞ் சூழரங்களுங் கொடியுமற்றும்
ஞாலமேற்சிற்சொரூபம் நல்குமவ்வெற்பின்சீரால்.

(இ-ள்) உதயத்திலெழுந்திருந்து திருநாககிரியைத் தரிசித்தவர்கள் பின்னையும் பின்னையும் அன்னைமார்கர்ப்பத்திற் சனித்துப் பிறக்கமாட்டார்கள், உடனே மோட்சஞ் சேர்வார்கள். அழகியகிரியில் உண்டாகிய மரங்கள், கொடிகள், புற்பூண்டுகள் மற்றும் ஜந்துக்களெல்லாம் பூமியினிடத்துநாககிரி யின்மகிமையினால் திவ்யசொரூபங்களாகி மோட்சத்தையடையும்.—எ-று. (௨௧)

தேவர்கந்தருவவேந்தர் சித்தர்வித்தியாதர்போக
காவலர்முனிவரந்தக் கணபணமலையிற்சன்ம
மாவனதருகவென்றே யருந்தவங்காலைமாலை
மேவிருபொழுதுஞ்செய்து வேண்டுவர்சிவனைநாளும்.

(இ-ள்.) தேவர்கள், கந்தருவ வேந்தர், சித்தர், வித்தியாதரர், போகபூமியர், முனீசுவரர்களனைவரு மழகிய படத்தையுடைய நாககிரியில் யாதானுமொரு சென்மமாகப் பிறந்து வசிக்க வரங்கொடுக்கவேண்டுமென் றுபயகாலங்களினு மரிய தவங்கள்செய்து கர்த்தாவைப் பிரார்த்திக்கின்றார்கள் நாளையும்.—எ-று. (௨௨)

அத்தலத்திருப்போர்யாரு மறிவொடுஞானத்தோடும்
பத்தியினோடும்யார்க்கும் பரிவொடுங்குணத்தினோடும்
பத்திமுத்தியராய்மாக்கள் பறவைகள் மிருகமாதி
சுத்தஞானங்கள்பெற்றுச் சுவர்க்கமுஞ் சேருமன்றே.



(இ-ள்) அந்தத்தலத்தில் வசிப்பவர்கள் சிவயோக வறிவுடனேயும் ஞானத்துடனேயும் பத்தி சிரத்தையுடனேயும் யாவருக்கு மன்புடனேயும் சத்துவகுணத்துடனேயும் புத்தியுத்தமராக விருப்பார்கள், மிருகங்கள், பட்சிகள், கிருமிகள்முதலான சிவசந்துக்களுக்கும் பரிசுத்த ஞானம்பிரவேசித்து முடிவில் சுவர்க்கபதத்திற் சேரும்.—எ—று. (௨௩)

குரோசமைந் தளவைநாகக் குவடுநாற்றிசையுமாங்கண்
கிரோபணிமுத்தாறேழுந் திகழ்வது கிழக்கின்பாலே
வரோதயத்திருக்காவேரி மாநதிதென்பால்மேற்பாற்
சரோருக வாணிகூட லுத்தரஞ் சங்கமேரு.

(இ-ள்) திருநாககிரி நாலுதிசையும் பஞ்சக்குரோசத் தலமாம், அதன் எல்லை கிழக்கே மணிமுத்தாநதி, தெற்கும் மேற்குந் திருக்காவேரி, மேற்கே பவானிகூடல், வடக்கே சங்ககிரி.—எ-று (௨௪)

உலகமூன்றினுக்குண் மிக்கோருரைப்பதிப் பெருமையந்தத்
தலமிசை யுள்ளசந்துச் சங்கமா முத்திசேர்க்கும்
பலர்பணிவரையிற்காற்று படிற்பதி னாயிரங்கோக்
கொலைமதுபானஞ்செய்த கொடும்பவம் நடுங்கியோடும்.

(இ-ள்) திரிபுவனங்களிலு முள்ள பெரியோர்கள் துதித்துக் கொண்டாடுவது அந்த நாகமலைப்பெருமையையே, அந்தத் தலத்திலுண்டாகிய சீவசெந்துக்களனைத்தும் முடிவில் பிரமசைதன்னிய மோட்சமடையும், நாககிரியிலுண்டாகிய காற்று யாவர்மேற் பரிசிக்கினும் பதினாயிரம் பசுக்களைக்கொன்ற பாவமு மதுக்களைக்குடித்த கொடிய பாவமும் நடுங்கி யகலும்.எ—று. (௨௫)

மங்கைமோர் பாகன்வெற்பில் மயிர்வினை செய்வித்தோர்க்கு
மங்குருதோட மீரைந் தாயிர மகலுமங்கண்
றங்கியபூக்களாதி தவமொன்று பத்தாமென்றே
பங்கய னுரைத்தவேதம் பண்புறப் பகருமன்றே.

(இ-ள்) அர்த்தநாரீசுரரமர்ந்த திருநாககிரியில் உரோமச்சிரை நீக்கினவர்கள் பதினாயிரங் குருஹத்தி தோஷங்கள் தீரும், அங்ஙனமமர்ந்து வசிக்கின்றகிருமியாதியாகிய சீவன்களினுடைய தவங்க ளொன்றுபத்தாய் விர்த்திக்குமென்று பிரமதேவன் வாக்கியமான சுருதிகள் வசனிக்கின்றது.—எ-று. (௨௬)

பார்மனு நீதிதன்னிற் பகரிதி காசமென்னும்
பூரண நூல்களுக்கப் பொருப்பினுக் கிணையிலென்றே
நீரணிமங்கைபாக னீர்மையைப் பிரமன்மாயோன்
வாரணி வள்ளிகாந்தன் வகுத்துரை புரிதன்மேயார்.

(இ-ள்) மனுநீதி சாஸ்திரங்களில், இதிகாசங்களில், புராணநூல்களில், நாககிரித் தலத்திற்கு நிகரில்லையென்றதனால், நிராமயமாகிய உமையவள பாகன் பெருமையைப் பிரமன், விஷ்ணு, வள்ளிநேசனிவர்கள் சொல்லுதற்கு அருமையாகும்.—எ-று. (௨௭)

ஆங்கபால் நாகவெற்பி லர்த்தநா ரீசன்வண்மை
மோகமா னிடரால் நம்பரன் முனிவரான் மொழியவற்றோ

போகிடாப்பாவபேதம் புகலுது மவற்றைச்சூழை
மாகனகாவிற்பூளை வகைச்செய் லுரைக்கலுற்றும்.

(இ-ள்) ஆகலினால் நாககிரியில் அர்த்தநாரீசுரன் பெருமையைக்காமவிகார மிகுந்த மனிதர்களாலும், நம்மைப்போன்ற முனிவர்களாலுஞ் சொல்லக்கூடுமோ கூடாதே. தீராத பாவங்களெல்லாஞ் சூறைக்காற்றிலே பூளைப்பூ வெப்படிப் போகுமோ அப்படித்தீருஞ் செய்கையும் இனிச்சொல்லுகிறோம்.—எ-று. (௨௮)

பிரமகத் திக்கொப்பான பாவங்கள் பேசக்கேண்மோ
பரவுதம் மொழுக்கம்நீத்தார் பண்புமீ சனைவழுத்தார்
அரகரா வகுநிக்கியா னகந்தையா யதிசர்பார்ப்பார்
தரமறியாதுநிந்தை சாற்றிய மாற்றம்யாவும்:

(இ-ள்) பிரமஹத்திக்குச் சமானமான பாவங்களைச் சொல்லக்கேளுங்கள். முனிவர்களே, தங்கள் தங்கள் குலாச்சாரவொழுக்கம் தவிர்த்து நடக்கின்ற குணமுஞ் சிவனைத்தொழுது தோத்திரங்கள் செய்யாமலும் அதிதிகளுக்கு யாதாயினுங் கொடாமலும் எதிசுவரர் பிராமணர்கள் தராதரந் தெரியாமலுந் தூஷணஞ்சொன்ன வார்த்தைகளெல்லாம்.—எ-று. (௨௯)

அதிகபோசன முங்கூலிக் கருமறை யோதிவைத்தல்
பதிபொருள் கவர்ந்த தீதும் பணிகுரு நிந்தையாவும்
வதிகொளா வினைநீர்மாந்தன் மழுத்தலு மறையோர் தானம்
விதிகொள்போ சனங்கண்மாற்றல் பிரமகத் திக்கொப்பாமால்.

(இ-ள்) மிதந்தபுசிப்பும், வேதமுதலாகிய கல்விகள் கூலிவாங்கிக்கொண்டு படிதேசிகன் நிந்தனை செய்கிறதும், பசுக்களைச் சலம்பருகவொட்டாமல் விலககிறதும் இவையெல்லாம் பிரமஹத்திக்குச் சமானமாகும்.—எ-று. (௩௰)

அன்னபாதகங்களெல்லா மணிபணி மலையைக்காணில்
பின்னெடுவடவைமுன்னற் பேதுறு பஞ்சு போலாம்
கன்னிபோர் பாகனன்பாற் கருமயம் பொன்னானாற்போல்
உன்னதம் பெறுவர் திவ்ய வுருத்திரன் பதவிசார்வார்.

(இ-ள்) அப்படிக்கொத்த பிரமஹத்தி தோஷங்களெல்லாம் அழகிய நாககிரியைக் கண்டவுடன் கடையுக முடிவில் தகிக்கப்பட்ட வடவாக்கினிக்கெதிரே குவிதலான பஞ்சுகள்போலும் அர்த்தநாரீசுரருளினாலே கறுத்த இரும்பானது பசும் பொன்னான விதிசயம்போலும் அவர்களுருத்திரபதத்தை யடைவார்கள்.—எ-று. (௩௧)

இருமரபெய்தி யோம மியற்றிடாதவனுங்கூட்ட
குரிபதன் றென்னெவ்வும் முண்டவே தியனுங் கள்ளு
ணரிவையைத் தழுவினானு மழிந்தவர்தன னிற்றுய்த்த
வருமெனறி யிலானுஞ்சூத்ர ரன்னமே பருகுவானும்.



(இ-ள்) இரண்டு வம்மிசத்தாருக்குஞ் சுவர்க்கமுண்டாகும்படி யோமாகுதி செய்விக்காதவனுஞ், சோரதசபையிற் சேர்ந்து, புசித்த பிராமணனுங், கள்ளருந் தும் பெண்களை மருவினவனும், அழிந்த பிராமணன் வீட்டில் அன்னமுண்ட மௌடிகனுஞ், சூத்திரர்கள்வீட்டில் போசனம்பண்ணுகின்றவனும்—எ-று. (௩௨)

இவரிவர் மதுபானஞ்கொண் டிழிந்தவரானையா ரந்தக்
கவருறுபாவம் யாவுங் கன்னிபோர் பாகனான
சிவகிரிச் சிறிதேகாண்கத் தீயுறுமரக்குப் போன்றத்
தவகாரி னாயந்தன்னைச் சார்ந்துசா யுச்சியஞ் சேர்வார்.

மற்றிவர்களெல்லாங் கட்குடிக்கிற நீசர்களுக்குச் சமானமானபாவி

(இ-ள்) மற்றிவர்களெல்லாம் உமையொருபாகன் எழுந்தரு கள், இவர்களைப்பிடித்த பழைய வினைகளெல்லாம் உமையொருபாகன் எழுந்தரு ளிய சிவமலையைச் சிறிது கண்டால் அக்கினியிலிட்ட அரக்குப்போலும் அவர்கள் பாவங்கள் விமோசனமாகி கயிலாய பதவியிற் சேர்வார்கள்.—எ-று. (௩௩)

தீங்கரு மாபாவத்தி னிலைமையர்கண் மூடரந்த
மாங்கரு நிரைபந்தன்னி லனுதுறும் புழுக்கண்மூளை
போங்கிய வுதிரமுண்ணு புழுசல மலாதிதன்னை
யாங்கவர் மீள்வர்தீது மகலுமம் மலையைக்கண்டால்.

(இ-ள்) தீராத மகாபாதகங்களுடைய மூடர் வர்த்தமானங்கள் எமலோகத் தில் நாகவேதனை பார்க்கக்கூடாத அரிய கிருமிகள் மூளைகள் நிறைந்த விரத்தங்கள் இவைமுதலாகிய சலமலாதி நாகங்களில்அழுந்தி வேதனைப்படுகிறபேர்களுடைய பாவங்களுந் தீரும் திரு நாககிரியைத் தரிசித்தால்.—எ-று. (௩௪)

பாவஞ்செய் தாரை வேலாற் பதைத்திடக் குத்துமாறுந்
தாவியவுதிரங்கூடங் தனில்விழத் தள்ளுமாறு
மேவன லுரலிலிட்டு மிடித்துதி ரத்தங்கொள்கென்
றேவுற வடிக்குமாறு முயர்புழு வூட்டுமாறும்

(இ-ள்) அப்படி மகா பாதகஞ் செய்தவர்களை கூரிய வேல்களால் பதைக் கக் குத்துகிறதும், ஓயாமல் இரத்தக்கிணற்றிற் றள்ளுகிறதும், அக்கினி உரலி லேற்றி இடித்து இரத்தங்குடிக்கும்படி ஓயாமலடிக்கிறதும், மிகுந்த புழுக்களை யூட்டுகிறது மின்னுஞ் சொல்லுகிறோம்.—எ-று. (௩௫)

நாய்த்தசை யருந்துமாறும் நடுங்கனற் பொருந்து மாறுங்
காய்ப்புறு மணலைக்கொட்டுங் கதனமுங்கனல்கூ றெண்ணெய்
வாய்ப்புக வூற்றுமாறும் வைத்தகற் காணத்திட்டு
தேய்ப்புற வாட்டுமாறுந் திரிகையிற் றிரிக்குமாறும்,

(இ-ள்) செத்தநாய் மாமிசத்தைத் தின்னச் செய்கிறதும், நடுநடுங்க நெருப் பிற்றள்ளுகிறதும், காய்ந்தமணலை மேலே கொட்டுகிறதும், எண்ணெயைக் காச் சிக் குடிக்கப்புகட்டுகிறதும், வயிரக்கற் செக்கிலேயிட்டு தேங்காய ஆட்டுகின் றதும், திரிகையிலிட்டு அரைக்கின்றதும்.- எ-று. (௩௬)

அங்கமீ திருப்வாளா லறுப்பதும் வாளரல் வெட்டும்
பங்குமுஞ் சூலங்கொண்டு பதைததிடக் குத்துமாறும்
வெங்கய முன்னற்போடு விளைபமுப் பன்னகங்க
ளெங்குமேற் கடிக்துமாற் பெரிபுகை குடிக்குமாறும்.

(இ-ள்) உடம்பைக்சொண்டறுப்பதுவும், வாளாயுதங்களால் வெட்டிப் பங்கப்படுத்துகிறதும், சூலங்களைக்கொண்டு குத்துகிறதும், வெவ்விய யானையின் காலில் போடுகிறதும், பாம்புகளைவிட்டுக் கடிப்பிக்கிறதும், அக்கினிப்புகையை விழுங்கும்படிச் செய்கிறதும்.—எ-று. (௩௭)

நலத்தவா ரத்திற்சார நகையம்பெய் திழுக்குந் தீங்கு
மூவர்த்துடற் றசையைத் துண்டித் தருகன லுய்த்துந் தீங்குஞ்
சிவத்துரு வுடலைக்கட்டி, தீப்பாது மிஷிங்கயீசங்
கவைத்தன விரும்பின்கட்டி கட்டிவிட் டழுத்துமாறும்,

(இ-ள்) பாவிகளுடம்பி லொன்பது துவாரங்களிலும் நசியங்களைவிட்டுக் கீழே யிழுக்கிற தீமையும், சதைகளைத் துண்டு துண்டாய்நறுக்கி யிடுக்கிப்பிடித்து எரிகிற நெருப்பிற் காய்ச்சுகின்ற கொடுமையும், குண்டுமிண்டாய் கட்டி உடம்பு சிவப்பாகத் தீயிற்றீய்க்கிற உபத்திரவமும், பிசங்களிற் காய்ந்த இரும்புக்கட்டியைக்கட்டி தொங்கவிட்டு அழுத்துகின்றது முதலான வனேக தெண்டனைகள் உண்டு.—எ-று. (௩௮)

இப்படி யனேகம்பின்னு மிருவகைப் பாவத்தார்க்கு
மெய்ப்படி நரகவாதை செல்லியல் பாகம் நீங்கா
வப்பணிச்ச டையாண்சேயோ டமர்ந்துறை நாகவெற்பைப்
பைப்படி தனிற்கண்டாலப் பாதகம்பறந்துபோமால்.

(இ-ள்) இந்தப்பிரகாரம் அளவில்லாதவேதனைகள் இரண்டு பங்கிலுமிருதியாகும், நரகவேதனைப்படுகிற பாவிகளெல்லாஞ் சக்கையைத் தரித்த அர்த்தநாரீசுரரும், குமாரசுவாமியும், பிரியாமல் எழுந்தருளிய கிரியைக்கண்டால் மேற்சொன்ன பாவங்கள்போம்.—எ-று. (௩௯)

யாகமூற் றுளுந்தாஞ்செய்யு மியாகமீண்டு டையூறுற்றால்
நாகபொற் கிரியைக்காண நல்குமப் பலன்பொன்னுட்டி,
லேகியிந் திரன் போகத்தை யெய்துவர் இன்பார்பொன்மின்
பாகதா னங்களீயும் பலனுமவ் வரையிலுண்டாம்.

(இ-ள்) சொல்லப்பட்ட யாகங்களிலிஷ்டமானதை நினைத்துச் செய்கிற யாகங்களில், இங்ஙன மத்தியில் இடையூறுவந்தால் கலக்கமின்றியிக் கிரியைக்கண்டு தெரிசித்தாலந்த யாகப்பலனைப் பெறுவர்கள்; தெய்வலோகத்திற் சென்று இந்திரபோகத்தை யனுபவிப்பார்கள், இன்னிய பூமிதானம், சொர்ணதானம், கன்னிகாதானம், அன்னதானங் கொடுக்கின்ற பலன்களுமந்தக் கிரிதரிசனத்தி லுண்டாம்.—எ-று. (௪௰)

திங்களார் காரஞ்சாந்தி ரசயணம் பண்ணுர்நண்ணி
லங்கதின் பலன்களீயு மவர்க்குயர் பதமுண்டாகின்
றங்குமா சயங்களோமந் தன்மயா கங்கள் செய்வான்
பங்குறச் செய்விப்பானப் பலன்கிரிபிகட்டிநல்கும்,



(இ-ள்) சோமவாரதினத்தில் நிச்சலமானவிரதம் சாந்திராயணவிரதஞ் செய்யாதவர்கள், நாககிரியைச்சென்று தரிசித்தால் அந்த விரதபலன்களைக் கொடுக்கும், அவர்களுக்குத்தக்க பதங்களுண்டாகும், யாவராயினும் ஓமம், தர்மம், யாகங்கள் செய்வாராயினுஞ் செய்விப்பாராயினும் அவர்களுக்கு அந்த யாக பலன்களுக்கிரண்டுபங்கு அதிகமாகத்தரும்.—எ-று. (௪௧)

யாதொரு பொருளுமெண்ணு திறைஞ்சுவார்க் கினிய முத்தி
மாதொரு பாகனீங்கா மகிழ்வுடன் வழங்குங்கண்டார்க்
கோதுமூற் றருமமெல்லா மொன்றொரு கோடியாகும்
வாதமர்க் கெழுவர்காணில் வரும்பகை யகன்றுவாழ்வார்

(இ-ள்.) யாதொரு பொருளையுங்குறியாமல் நாககிரியைத் தரிசித்துத்தொழுகின்றவர்களுக்குப் பேரின்ப மோட்சமுடனே வுமையொருபாகம் பிரியாத சிவனது கிரியினிடத்தில் தானேயுண்டாகும் கண்டவர்களுக்கெல்லா மேற்கூறிய தருமங்களெல்லா மொன்று கோடிபுண்ணியங்களாக விர்த்திக்கும், வாதுசெய்து அமர்புரிகின்றவர் அந்தமலையைக்கண்டு வணங்கினார்களாகிற் பகைவெற்றியுள்ளவராய் வாழ்வார்கள்.—எ-று. (௪௨)

தவம்பணி விரதபேனைச் சாத்திர மனந்தவேதந்
நவங்கொள்பா பந்திரார்த்தம் நல்கிப்பலனு மற்றைச்
சிவன்புணர் நாகவெற்புத் தெரிசனையுடன் முத்தேசத்
துவந்துறை புகுங்கடம்பி லாற்றலைவுத்துவபார்கோ

விரதங்களனுஷ்
(இ-ள்.) தவங்கள் செய்வதிலும், திருப்பணிசெய்வதிலும், அளவில்லாத வேதாகமங்
டிப்பதிலும், சாத்திரபுராண பாராயணஞ் செய்வதிலும், அலைகள்
கள் கற்பதிலும், பழமையாகிய மந்திர தந்திர கர்மங்கள் செய்வதிலும் கடவுளெழுந்தரு
கொடுக்கப்பட்ட பலன்களைப்பார்க்கிலும் அதிக பலன்களாகும், திரிலோகங்களி லின்பமாக வமர்ந்திருக்
ளிய திருநாககிரி தரிசனமானவுடனே;
கும் பதங்களில் நினைத்த பலனைக்கொடுக்கும்.—எ-று.

வேதியர் கண்டநான்கு வேதஞ் சாத்திரங்களாறு
மோதியங் குணர்ந்துபின்ன ருயர்பிர மத்திற்சேர்வார்
பூதல வரசரேற்பார் புரந்துபோர் புரிந்துவென்றி
நாதராய்ச் சுவர்க்கஞ் செல்வார் நாகபொற்கிரியிற்றோற்றம்.

(இ-ள்.) பிராமணர்கள் கண்டுவணங்கினால் நாலுவேதமும் ஆறுசாஸ்திரமுங் கற்றுணர்ந்த வறிவினராய் வாழ்ந்து முடிவிலுசிதமான பிரமபதத்தைச் சேர்வார்கள். பூமண்டலத்தரசர்கள் கண்டுவணங்கினால் திக்குவிசயஞ்செய்து வெற்றியுடையவர்களாகி அந்தியத்திற் சுவர்க்கபதந்திற்சென்று வாழ்வார்கள். திருநாககிரியின்பெருமையாம்.—எ-று. (௪௩)

வணிகர்கண் டிறைஞ்சிற் பொன்னால் வடாதிபனெனலாய்ச் சொர்க்க
மீனவநுதின்னமாந்தர் மலர்விழிக்கண்டுபோற்றின்
வணிதருசெல்வத்தோற்ற மனைவளம் டலைம்பெற்றுப்
பணிமலை யெமக்குநல்கும் பன்னெனச் சுவர்க்கஞ்சேர்வார்.

(இ-ள்.) வைசியர்கள் கண்டுவணங்கினுல் சொர்ன்னங்களால் குபேரனென்னத்தக்கதாய் வாழ்ந்து சுவர்க்கபதஞ் சேர்வார்கள். அது நிச்சயம், சூத்திரர்கள் கண்குளிரக்கண்டு வணங்கித் துதிசெய்வார்களாகில் நவரத்தின நிழல்சாயச் செல்வம் பெருகி மனை வளங்கள் பலவும்படைத்து வாழ்ந்து. தேகாந்தியத்தில் திருநாககிரி எங்களுக்குச்செய்த வுபகாரமிதுவென்று சுவர்க்கபதஞ்சேர்வார்கள்.—எ-று

விதவையர் போற்றிலந்த விதவைதன் பிறப்புநீங்கி
யுதவுநற் கொழுநனோடு மொழிவிலா திளங்கிவாழ்வார்
விதவெழிற் கன்னிகாண விருப்புநற் காந்தன்சேர்ந்து
மதனடி பரவவாழ்ந்து வான்கயிலாயம்வாழ்வார்.

(இ-ள்.) பின்னையு மந்த நாககிரியை அமங்கலிகள் கண்டு வணங்கிப்போவார்களாகில் அந்த தேகம்போய் மறுசென்னத்தில் மணந்துகொண்ட பத்தாவுடனே கூடிவாழ்ந்த அழகிய பதத்தைச்சேர்வார்கள். கன்னிப்பெண்கள் கண்டுவணங்கினுல் மனதுக்கிஷ்டமான புருஷனுடன் வாழ்க்கைப்பட்டு, மன்மதனேவல் செய்யப்பிரியாமல் உசிதமான கயிலாயத்தில் சுகமாக வாழ்வார்கள்.—எ-று. (௨௪)

வறியவர் சிறிதேநோக்கி வணங்கிலவ் வடபாற்சென்று
செறிதன விபக்கர் வேந்தின் சித்திர விமானங்கொள்வா
ருறுவய தனந்தம்வேண்டி னுறுவரன் பிலாதுகாண்பா
ரறிவினிற் கண்டார்பேறும் றவிருமை யினும் வாழ்வார்.

(இ-ள்.) தரித்திரவான்களானவர்கள் பணிமலையைச் சற்றேகண்டு வணங்கினார்களாகில், வடதிசை யளகாபுரியிற்சென்று மிகுந்தனத்தையுடைய குபேரனது புட்பக விமானத்தையுங் கைக்கொண்டு வாழ்வார்கள். அன்பிலாதவர்கள் அதிக வயதுவேண்டினும் பெறுவார்கள். ஞானத்துடன் கண்டவர்கள் இகபரமிரண்டினும் சுகமுற்று வாழ்வார்கள்.—எ-று. (௨௫)

முருகனுமங்கைபாக முதல்வனு மூனைத்தவெற்பை
யருகுறக் கண்டோர்பாவ மகனுமாறிதற்சொப்பெண்ணி
லிரவிமுன் னிமங்களென்ன மிழிகலைத் தவென்ன
வுரியுரிப் புயங்கமாயு மொழிவிலாப் பாவநீங்கும்.

(இ-ள்.) கந்தசாமியும் பாமசிவனு மூனைத்தெழுந்தருளிய சிவகிரியைச்சமீபத்திற்கண்டு தரிசித்து வணங்ினபேர்களுடைய பாவங்கள் நீருதல் எப்படியென்றால், சூரியன் முன்னேயிருந்த பனி நீங்குவதுபோலவும் ஒவ்வொரு கலையாய்த் தேய்கின்றசந்திரனைப்போலவுந் மேற்சட்டை உரிக்கின்ற பாம்புபோலவும் தீராத பாவங்களெல்லாந் தீரும்.—எ-று (௨௬)

காண்டகு தருமங்கூறிற் கனகடன் மணிகள்போன்று
மீண்டிலும் பிறையைப் போன்று மெழுபுனற்கங்கைபோன்றும்
வேண்டருங் கயிலைவெற்பில் விளைந்த செந்தேனை நேர்ந்தும்
பூண்டான் பர்க்மான்சேப் பொருந்த வெற்புதவு சிலம்.

(இ-ள்) உமையொருபாகனும் முருகவேளும் பிரியாமல் அமர்ந்திரு
அரவகிரி தரிசனத்தின் மகிமையைக்காணத்தக்க பக்தர்கள்செய்கின்ற



ம் ஒன்று நூறாய் விர்த்தியாகும், அதற்கிணை யாதெனில்ஓசையையுடைய சமுத்திரத்தில் மணிகளைப்போலவும், நாளுநாளும், ஒவ்வொருகலையாய் வளருகின்ற மூன்றும் பிறையைப்போலவும், செழுமையையுடைய கங்காநதி ஜலத்தைப்போலவும் வேண்டிய வரங்களைத்தரப்பட்ட கயிலைமலையின் விளைகின்ற தேனைப்போலவும் வளர்ச்சியுண்டாய் மென்மேலும் விர்த்திக்கும்.—எ-று. (௨௭)

தேனுவுந் தருவுஞ்சிந்தா மணியுமச் செங்கோட்டீசன்
றுனுகந் திடத்தி லெல்லாந் தருநமக் கெனவாங்கெய்தி
மானிலத் திபாவரேனு மாமைதானியஞ் சொர்ணம்
போனகமளித்தார்நாலா யிரமுறை பேரின்பஞ் சேர்வார்.

(இ-ள்.) அந்தத் திருச்செங்கோட்டுமலையில் சுவாமி எழுந்தருளியிருக்கின்ற மையால் நம்மைப்போலொத்த முனிவர்களுக்கு வேண்டிய இஷ்டகாமியார்த்தங்களைக்கொடுக்கவேண்டுமென்கிறகருணையினுல் காமதேனு, கற்பகவிருட்சம், சிந்தாமணி, முதலாகியதும் அங்ஙனம் வந்துசேர்ந்து உதவிசெய்யும், இந்தப் பூமியில் யாவராயினு மங்ஙனஞ்சென்றவர்களுக்குச் சொர்ணம் தானியம் வஸ்திரம் போனகவர்க்கங்கள் முதலாகியதும் கொடுத்தபேர்களுடைய வமிசத்தில் நாலாயிரந்தலைமுறை சுவர்க்கபதவி அடைவார்கள்.—எ-று. (௨௮)

கோதையிற் றனதுகோதை கூடவில் விருந்தோம்பஞ்செய்
மூதவர் தனக்குத்தானம் வழங்கிலா யிரம்பத்தசுவ
மாதியமேதையாக மருளிய பலன்களாகு
மோதுமிக்க வினைக்காண்பா ருறுந்துலாபுருடதானம்.

(இ-ள்.) யாதாமொருவர் கோதைமலையில் தனதுமனைவியுடனேகூட மனையிலிருந்து தொடங்கியஓமங்கள்செய்கின்ற மகாதபோதனர்களுக்குத்தானஞ்செய்தால் பதினாயிர மசுவமேத யாகபலனும் இன்னுமனந்த பலன்களுண்டாகும், அவைகளைக்காண்பவர்கள் துலாபுருடதானஞ் செய்தபலன்களுடனே பெறுவார்களென்று வேதங்கள் சொல்லும்—எ-று. (௨௯)

வையவெவ் வண்ணத்தேனும் வியன்பணி மலையைப்போற்றி
லாயிரம் பிரமஹத்தி யகன்றிடுங் கயிலைவாழ்வார்
மேயமெய்த் தியானந்தான மியாகமா தவஞ்செய்தார்க்கு
மாயநாலு கத்துஞ்சொர்க்க மாயவ்தருளுங்கண்டாய்.

(இ-ள்.) எவ்விதமாகிலும் அந்தகிரியை யாவர்கண்டுவணங்கித் துதிசெய்தார்களாயினும் ஆயிரம் பிரமஹத்தி தோஷங்களும் நிவர்த்தியாகி அந்தியத்தில் கயிலைமலையைச்சேர்ந்து வாழ்வார்கள். அவரவர்களுக்கிசைந்தபடி தியானம் தானங்கள், யாகங்கள், அரியதவங்கள் செய்தவர்களுக்கு நான்குயுகத்திலுஞ் சுவர்க்கலோகபோகமுண்டாகும், இவையாவும் கிரிதரிசனத்தின் மகிமையாம்.—எ-று. (௩௰)

கேட்டோர் படிப்பவர் படித்தோர்க்கின்பந்
பணிமலைச் சருக்கங்கேட்டோர் படிப்பவர் படித்தோர்க்கின்பந்
தணிவறச் செய்வோர்மங்கை தனதொருபாகம்நீங்கா
மணிமுடிச் சடையான்வேற்சேய் வரப்பல படைத்து வாழ்ந்து
இனிதருள் கயிலைவாழ்வார் சிறப்புளார் பிறப்பிலாதார்

(இ-ள்.) இந்தத் திருநாககிரிச்சருக்கத்தைக்கேட்பவர்களும், படிப்பவர்களும் படித்தவர்களுக்குச் சந்தோஷங்குறைவில்லாமற் செய்தவர்களும், உமையொரு பாகம் பிரியாத இரத்தினமயமான சடாமகுடத்தையுடைய அர்த்தநாரீசுவரர், குமாரசுவாமி கிருபையினாலே சகல வரப்பிரசாதமும்பெற்று வாழ்ந்து ஏகாந்தியத்தில் திவ்விய கயிலையங்கிரியைச்சேர்ந்து சிறப்புடையவராவார், பிறப்பில்லாதவர்களுமாவார்கள்.—எ-று. (ருஅ)

நாககிரிச்சருக்க முற்றிற்று.

பாயிரம் காப்பு உட்பட திருவிருத்தம் அ௯.

## கிரிவரலாற்றுச் சருக்கம்.

—:0:—

[illegible]கவரை நானிலந்தனில்வந்த படி சூத நயமுனிவ பகருகெனவே, மாதவர
முனிவர் வினவுதலுமவர் மகிழவரை வரவுசில புகல்வனெனவே, சோகன
கமாவடிவி யாதமுனி யைத்தொழுது கொய்பிடல்கொண்டுகழையும், போ
கமலர்கனிவி னருள் சிவபருப்பதம் போற்றி யருளேற்று மொழிவார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரந் திருநாககிரிமான்மியத்தைச் சொல்லக்கேட்டு ஆனந்தப்பரவசத்தையடைந்து அதிசயப்பட்டோம் சூதமுனிவரே, அந்தத்திருநாககிரி வந்தவரலாற்றையுங் கேட்கவேணுமென்று மிகவும் ஆவலாயிருக்கின்றது, தேவரீர்திருவுளம் பற்றியருளவேண்டுமென்று வணங்கினவுடனே அப்படியே சொல்லுகிறோமென்று வேதவியாசருடைய மிருதுவாகிய பாதாரவிந்தங்களைத் தொழுது துதித்துச் சிவனிடப்பாகத்தில் கற்பகக் கொம்பு தழைத்துப் போகமாகிய புட்பங்களைக் கனிவுடனே தருவதாய் விளங்கிய திருநாககிரியைப் போற்றிசெய்து அன்புகூர்ந்து கிரியின் வரலாறு சொல்லத் தொடங்கினார் சூதமுனிவர் எ-று. (க)

தேவரொருதேராக வேதன் விடுபாகனுஞ் சிலைமேருவாக புனைநாண்
கோவரவமாக வம்பரியாகவடுகூர் கொடுங்கனலி யாகவேருந்
தூவன்மாருதம் வேகமாகமுப்புரமணற் சுடவெய்பபின்னர்பணிமன்
பாவலுவிராசனொடு பொருதினர்கள்தமதுவலி பாருமென மேருவிடையே

(இ-ள்.) தேவர்களெல்லா மிரதமாகவும், பிரமன் சாரதியாகவும், மேருவில்லாகவும், வாசுகி நாணாகவும், விஷ்ணுவே அம்பாகவும், அக்கினிதேவன் அம்புமுனையாகவும், வாயுவே விசையாகவும் திரிபுரம் அக்கினிப் பிரவேசமாகச் சிவன் செய்து எரித்தபின்பு நாகராஜன் வாதராஜனுடனே எமது பலத்தைப்பாருமென்று மேருவினிடத்தில் போர்செய்யத் தொடங்கினார்கள்—எ-று. (உ)

சேடனும்வாதரா யனுமிகல் புரிந்தமர் செயிர்த்தனை மயிர்ப்பதாக
வாடின்றுயிரம் பணமேரு முடியாயிரங்கணி னடுக்கை மூட
நீடின்றலைபலைப வண்டாண்டங்குலைய நிலைமலைகள் இடிகிடெனவே
வாடமின்றுர கைக்குலமுதிர விலபதிர மாருதவிராஜன்மலைய



(இ-ள்.) நாகராஜனும் வாதராஜனு மனக்குரோதங்களுடனேயுத்தஞ்செய்து வெற்றிதோல்வி தெரிவதாக, நாகனுயிரம்படமு மேருசிகர மாயிரமுடிக்கையுஞ் சிக்கெனப்பற்றி மூடிக்கொள்ள, நெடிதாக நின்று வாயுவு மோதியடிக்கும்போது, அண்டபகிரண்டங்களெல்லாம் அடுக்குகள்குலையமலைகளும் நிலைபெயர்ந்து இடிகிடென்றதிர வெளிமழுங்கி நட்சத்திரங்களுதிர பூமியதிர சண்டமாருதமாக மோதியடித்தான் வாதராஜன்.எ-று. (ங)

முனிவருந்தேவர்களு முனிவாதராசன் மூடிக்குப்புசெருக்கில்வெருவி
யுனிவருந்தாமலர வாசியையிரந்தனு முளங்களைரந்தாவமேருப்
பணிவருங்கொடுமுடி யொராயிரத்தொருமுடி படப்பொருபிலத்துள்வாங்க
த், துனிவருமருத்தாசன்னைப்பறிக்கத் தொடர்ந்தொடிப்பறந்தெதன்பால்

(இ-ள்.) இப்படி வாதராஜன் மூடிக்கியடித்த விசைகளில் சகிக்காமல் முனிவர்களுந் தேவர்களு மிகவும்பயந்து யோசனைசெய்து சகலசன வுபத்திரவங்கள் தீர நாகராஜனைப்பார்த்து முகமன்கூறி இரந்துசொன்ன, அவருள்ளமிரங்கி மேருசிகரமாயிரத்தில் ஒருகொடுமுடிபிடித்த படத்தை யென்னத்தனை நெகிழ்த்திவிட விசையி னசை விசையாலடிக்கின்ற வாதராஜனந்தச் சிகரத்தைப் பெயர்த்திட விசையினாலே மேருசிகரமொன்று தெற்குத் திசையிற் பறந்து சென்றது.—எ-று (ச)

ஆயிரம்பணவராவி னேர்பணமுமேருமுடி யோடலைத்தபலவனியும்
சேயுரம்படவந்தன் பின்பற்றிராவலந் தீவுதனில்வீழ்த்திவிடலுந்
றாயரன்றொருநாக கிரிபெனவுணர்த்தனர் சுடர் முடியின் மணியைந்துமே
யேயுறந்திகழைந்து வெம்புமீசனுமாக மேதினியின் விளங்கியுள தால்.

(இ-ள்.) நாகராஜன் ஆயிரம்படத்திலொருபடமும் மேருசிகரமொன்றோடே கூட வாய்வு பெயர்த்தெடுத்தெரிந்த விசையிற் பின்தொடர்ந்து சென்னிறம்படக் கொண்டுபோய் நாவலந்தீவில் வீழ்த்தியது, அன்றுதொடங்கி நல்லோர்களன்பு நிறைந்த திருநாககிரியென்றும் பெயராய் விளங்கியிருக்கின்றது. பிரபைபொருந்திய மேருமுடியில் ஐந்தமணி சிதறிவிழுந் தங்கங்கே நிலைமையாக ஐந்துகிரியு மைந்து சிவனுமாக விந்தமண்டலத்தில் விளங்குகின்றது.—எ-று. (ஞ)

மணியுதுஞ்சிகாமுத் தண்டமாயதுசேது பகியிலங்காபுரிமூனி
ர்ணி திருக்கோணமலை யெனவமைந்தனநாக வசலந்தமிழ்க்கொங்குநா
டினைதனிகிரிமங்கைபங் கனும்வேலனு மிருந்தால்வரமருள்வதாயப்
பண்ரிபுகமனைந்தம் பாவிய தொரந்தப் பசுபுதினுமழிவற்றதால்.

(இ-ள்) அப்படி மணிகள் சிதறித்தெறித்துவிழப்பட்ட மேருசிகரங்காற்றடித்த விசையினாலே மூன்றுதுண்டமாகித் தெற்குச்சமுத்திரத்திலே யொருதுண்டம் விழுந்து அது சேதுபதியைச்சார்ந்த இலங்கைத்துவீச்சுரம், இன்னொருதுண்டம் [illegible]கோணமலையாச்சுது, பின்னொருதுண்டம் தமிழ்விளங்கியமுக்குலத்தரசர் [illegible]முதன்மையான சோழனுக்குரிய கொங்குநாட்டில் விழுந்து திருச்செங்கோ[illegible] கிரியென்று விளங்குகின்றது. அதில் உமையொருபாகனும் வேலாயுதக்[illegible]டவுனும் அமர்ந்திருந்து அனந்த அடியார்களுக்கெல்லாம் வரங்கொடுப்பதாய் தேவர்களுக்குச்சிக்க அதோனயமாய் விளங்குகின்றது. அது உகாந்தகாலப் பிரளயத்திலுமழிவில்லாமலிருப்பது.—எ-று. (சு)

மேருமுடி தருமைந்துமணியிலொருமணிபருணை வெற்பாய்மிளிர்ந்ததஃதே
மாரனறகிரிமணிச் சிகரிபொன்மேருசிலை மலையாம்யுகங்கண்முறையே
பேரனற்கிரிசோணகிரிதேவராயன் பிறங்கலென வோங்குமலையிற்
காரணவுண்ணாமுலைக் காரணிக்கினியகண் ணுதலிவரெனப்பரவுவார்.

(இ-ள்.) மேருசிகரத்தில் தெறித்துவிழுந்த மணிகள் ஐந்துகிரிகளுமைந்துதல மும் ஆச்சுதென்று முன் சொல்லியவதனில் ஒன்று சிவப்புமணி ஈசானியத்தில் விழுந்து திருவண்ணாமலையாச்சுது, நாலுயுகத்திலுமுறையே அக்கினிமலை, மணிமலை பொன்மலை கல்மலை இப்படியாகி அருணாசலம் சோணசைலம் அக்கினிமலையென்றும் பெயராகி, அதில் அருணாசலயீசுவரரென்றும் உண்ணாமுலையம்மனென்றும் பிரசித்தியாய் எழுந்தருளியிருக்கின்றார்கள்—எ-று. (எ)

மரகதமணிச்சிதறி நவகோணமாயது வளத்தமிழ்க் கும்பனிசையால்
பரவிபசு நூட்புரு வெடுத்துமதுவபிஷேக பானத்திலர்ச்சித்ததால்
வரவுதிருவீங்கோய் மலைப்பெயர்விளங்குவது மாதுமைபணப்பரமனார்
நரர்வணங்கக்கருணை கருமிரக்கம்புரியும் நாதரெனவோதுமறையே.

(இ-ள்) ஒரு மரகதமணி கிழக்குத்திசையிலே விழுந்து ஒன்பது கோணமாக விளங்கியது, தமிழைச்செய்த அகத்தியன் வண்டுருபமெடுத்துப்புட்பங்களில் மதுவெடுத்துச் சிவனுக் கபிஷேகஞ்செய்து பூசித்தபடியினாலே திருவீங்கோய்மலையென்று பெயராய், சிவனுமுமையு மிரக்கம்புரியும் நாதரென்று மலைக்கிழத்தியம்மனென்றும் எழுந்தருளியதென்று வேதங்கள் முறையிடுகின்றது.—எ-று. (அ)

மாணிக்கமொன்றுசூரியகிரணமனையவரை வண்சிவாயப்பெயர்பெறீஇ
மாணிக்கநாதர்மணி மாணிக்ககூடர்திரு மலைபின்கொழுந்தாசிவதை
மாணிக்கமலைநாத ரந்தியொளிதாங்கினார் மத்யானச்சொக்கர்பொன்
மாணிக்கவடிவர்நாகேசர் முத்தீசர்வடி வாட்போக்கிரெனவுமே.

(இ-ள்) பின்னையுமொரு மாணிக்கமணியானது அக்கினிதிக்கில் விழுந்து சூரியப்பிரகாசம்போலு மொளிவிடப்பட்ட மலை, அது வண்மையான சிவாயமலையென்றும் பெயராய் மாணிக்கநாதர், திருமாணிக்கக்கூத்தர், திருமலைக்கொழுந்தர், சிவதையீசர், மாணிக்கமலைநாதர், அந்தியொளிதாங்கினார், மத்தியானச்சொக்கர், சொன்னமாணிக்கவடிவர், நாகீசுவரர், முத்தீசுவரர், வடிவாட்போக்கிரென்றும்.—எ-று. (கூ)

செம்பொற்றியாகர்காகங் காத்தபரமர் திருமுடிதழும்பரிடிபோற்
றம்பொற்பதத்தரா ரங்கட்டினாராரி யர்க்கருளிரத்னகிரியார்
கும்பங்கள்பொரிவாசி கொண்டவர்சுரும்பார் குழற்கினியகொழுன்ரேனர்
தம்பண்டிலுணவேட்டார் தந்தங்கடந்தவரெனத்தலந்தாள்பரவுமால்.

(இ-ள்.) சொர்னத்தியாகர் காகமணுகாமற்காத்த பரமர், திருமுடித்தழும்பர் இடிவந்துபூசிக்கும் பொற்றாமரைப்பதத்தர், ஆரங்கட்டினார், ஆரியஅரசனுக்கு கிருபைசெய்தருளிய இரத்தினகிரியார், கும்பங்கள் பொரிவாசிகொண்டவர், சுரும்பார்குழலிக் கின்பமான மணவாளர், பன்றிக்குட்டிக்கு முலையமுதங் கொடுத்தவர், வேடருக்குத் தந்தங்கள் அளித்தவர் என்றிப்படி திருப்பெயர்பெற்றவர்.—எ-று. (க0)



கொடுமுடிபெயர்ந்ததோர் மணிவச்சிரப்பேனியிற் குளிர்க்கதிர்கிரிக்குமதி
[illegible] கடலுகாகத்தியன் கையிற்றாதலக் கமரிலுட்போயஃதினில், வடி
[illegible]மங்கைமண வாள்ரென்றுலகெண்ண வன்னிநிழலீசரெனவும்,
புட்பிதனிலினியகாவேரிரின்றென்கரை பொலிந்துளதனந்தயுகமாய்.

(இ-ள்) பின்னையுமொரு வைரமணியானது மேற்குத்திசையில் விழுந்து திருப்பாண்டிக் கொடுமுடியென்றபெயராகி, தன்சிகாஞ் சந்திரோதயம்போலும் பிரபைவிளங்காநிற்கும், சமுத்திரபானஞ்செய்த குறுமுனிவன் கைக்கமண்டலசலமாகப்பூயிக்குளமர்ந்தது, அங்ஙனம் வடிவுள்ள மங்கைமணவாளரென் றுலகம்துதிசெய்துவணங்க வன்னிவனவீசர், மகுடேசுரர் என்றும் பெயராம், பொன்னியாற்றின் தென்கரையில் எழுந்தருளியிருக்கின்றார்.—எ-று. (கக)

நீலமணியொன்றுதென்மேற்றிசைதரித்தனவீலாவஃதுபொதிகையென்பர்
வாலமதிமுடியரன் றிருமணத்தேதகுநாள் மலையமாகாயம்விரவப்
பாலுலவுவடநிலம் பதாளமுறுவதன் பாரத்தைநிகரென்னவெம்
கோலமழுவாளிகுறு முனிவனையிருத்தியது குவலயத்தென்றுமுளதால்.

(இ-ள்.) இன்னமொரு நீலமணி நிருதிதிக்கினிற்போய் விழுந்து அதுபொதிகைமலையென்ற பெயர்பெற்று விளங்குகின்றது, இளம்பிறையைத்தரித்த சடையினையுடைய பரமேசுவரன் உமையைத் திருக்கலியாணஞ்செய்ய வெழுந்தருளிய காலத்தில் தேவர்கள் முனிவர்கள் மற்றுமுண்டான சமஸ்த திருக்கூட்டங்களும் வடபூமி பாதாளம் சேர்ந்த காலத்தில், பொதிகைமலைஉச்சி அண்டமுகடுசேர வடபூமி பாதாளம் புகுவதுகண்ட தன்கனத்துக்குச் சமானமென்றறிந்து வெவ்விய மழுவுடையவன் அகத்தியமுனிவனை அங்குயிருக்கும்படிஅனுப்பிவைத்தார்.—எ-று (கஉ)

நாகாசலப்பெய ரனந்தயுகமீதினும் நாகத்தர்முனிவருலகோர்
யோகாவலிற்பணிய வடமிமிதாமங்க ளுடையவதனிற் சிறிதுயான்
மாகாதலிற்புகல்வ னைமிசாரணியநிறை மாதவர்கள்கேண்மினெனவே
மோசாதரக்கிரி துணிக்கும்பரஞான முனிவசூதர்மொழிவார்.

(இ-ள்.) இப்படி ஐந்துகிரித்தலமுஞ்சிவனுமாகிய விபரஞ்சொன்னோமே அனேக யுகாயுகங்களாய் விளங்குகின்றது, மேலைவிற்க, நாககிரியென்று பெயராயனேக யுகாயுகங்களாய் விளங்குகின்றது, அநேகம் பெயர்களுண்டாச்சுது. அவைகளில் சிலது நான் தெரிந்தமட்டும் சொல்லுகிறேன். நைமிசாரணிய முனிவர்களே யென்றார். அதற்கு ஆசையாகிய ஓர் மலையை குலிசாயுதங்கொண் டறுத்தருளிய சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.—எ-று. (கங)

அர்த்தநாரிப்பரம ரசலமணிமுருகா சலங்கோதைசசலமண்சூழ்
முத்தமலைகட்கமலை யிடபமலைதுர்க்கைமலை முத்திமலைசித்தர்மலைவண்
[illegible]த்தகிரிஞானகிரி ரத்னகிரிசோணகிரி சத்தகிரிபிரமகிரிநீர்
[illegible]புருதிர்த்தகிரி தன்மகிரிகந்தகிரி ப[illegible]கிரிதனுகிரியே.

[illegible]ள்.) அர்த்தநாரீசுவராசலமென்றும், முருகாசலமென்றும், அழகிய [illegible]மலை யென்றும், மணிகுலவிய முத்துமலையென்றும், கட்கமலையென்றும்

இடபமலையென்றும், தற்சைமலை யென்றும், முத்திமலையென்றும், சித்தர்மலை யென்றும், ஒள்ளிய சுத்தகிரியென்றும், ஞானகிரியென்றும், இரத்தினகிரியென்றும், சோணகிரியென்றும், இரத்தகிரியென்றும், பிரமகிரியென்றும், தீர்த்தகிரி யென்றும், தர்மகிரியென்றும், கந்தகிரியென்றும், பதுமகிரியென்றும், தேனு கிரி யென்றும், இன்ன மனந்தம் பேர்களுண்டு —எ-று. (கஎ)

திருவேசகந்திருச் செங்கோடுசேடமலை தெய்வமலைசிவமலைவிடா
மருவேவுசஞ்சீவி மலைவாயுமலைவிண்டு மலையிருவர்கூடுமலையா
முருவேறுதாருகா சலமரவயி நபானு முறவணைந்துறுமமலைகம்
வருவேதணைப்பரவி மலையுமலைமசவுதவு வந்தமலை யந்தமலையே.

(இ-ள்.) திருவேரகமென்றும், திருச்செங்கோடு என்றும், சேடமலையென்றும், தெய்வமலையென்றும், சிவமலையென்றும், மணம் பொருந்திய சஞ்சீவிமலை யென்றும், வாய்வுமலையென்றும், விஷ்ணுமலையென்றும், இருவர் கூடுமலையென்றும் வடிவுயர்ந்த தாருகாசலம் என்றும், பாம்புகள் இரண்டுபக்கமும் மழுந்தப் பிணைந்து சேறுமலையென்றும், மேல்வரப்பட்ட பிறப்பகலப் பொருதுமலையென்றும், சந்தானந்தரும்வந்திமலையென்றும், அழகியமலையென்றும், பின்னையும்.-எ-று.

தாருமலைசூதமலை தவமலைபனந்தமலை தங்கமலையோகமலைமா
மேருமலைகயிலைமலை சிவனுடுமலைமுனிவர் விரதமலைவேதமலைபொன்
னாமலையிருடிமலை யமுதமலைசுனைமலை பினேசமலை கூலமலைதண்
கிரமலையுபயமலை யிமயமலைகங்கைமலை சங்கமலைகொங்குமலையே.

(இ-ள்.) தாருமலையென்றும், சூதமலையென்றும், தவமலையென்றும், அனந்தமலையென்றும், தங்கமலையென்றும், யோகமலையென்றும், மகா மேருமலையென்றும், கயிலைமலையென்றும், வேதமலையென்றும், சிவனுடியமலையென்றும், முனிவர் விரதமலையென்றும், பொன்னாமலையென்றும், இருடிமலையென்றும், அமுதமலையென்றும், சுனைமலையென்றும். பினேசமலையென்றும், கூலமலையென்றும், தண்ணியகிரமலையென்றும், உபயமலையென்றும் இமயமலையென்றும், கங்கைமலையென்றும், சங்கைமலையென்றும், கொங்குமலையென்றும், இன்னம்அனேகம் பெயர்களுண்டாயிருக்கும்; அவையெல்லாம், அறிந்துநம்மால்சொல்லமுடியாது-எ-று.

தேனுவரனைத்தொழுது நின்றருச்சிப்பவொரு செயல்திருவுளப்புரியென
ஞானவானவிலுர்வகை நமதைந்துநாடியாய் நமதுபொன்மலைக்குமமீதாய்
வனையெமதாகிக் கியன்றதாய்மேருவினி லினியமலையைந்துளதுநீ
மாநிலந்தனிலுய்த்து வந்தனைசெய்யெனமிகு வரங்கொடுத்தருளினனரோ.

(இ-ள்.) முற்காலத்தில் காமதேனு கயிலாயகிரிக்குச்சென்று பரமசிவனை வணங்கி உம்மைப் பூசிக்கும்படி ஒரு தெய்வத்தலந் திருவுளம்பற்றி யருளவேண்டுமென்று கேட்க, ஞானமூர்த்தியாகிய பரமசிவனார் நமது பஞ்சநாடிகளாயும், நம்முடைய மேருவுக்குச்சமானமானதாயும் நம்முடைய மனதுக்கிசைந்ததாயும் மகா மேருகிரியில் பலசிகரங்களில் மேன்மையான கொடுமுடி ஐந்துள்ளது. அவ்வைந்து முடியையும் நீ யெடுத்துக்கொண்டுபோய் தட்சணபூமியில்வைத்து [illegible] உபவாசித்துப் பூசைசெய்யென்று மிகுந்த வரங்கொடுத்தருளினார்.—எ-று. [illegible]



[illegible]தானதிப் பெருநாககிரிமுதற் பிரம்புருடநாகவரைமுன்
[illegible]மாருதவிராஜனைவந்ததில் மகாகாமதேனுமேற்கொண்
[illegible]ண்பமவுகொங்குமண்டலமீதுகாவிரியி னீசான திசையிடவே
நண்பாகவிருநாக முப்பரன்பரைபோ லயர்துடன்கூடியுள்ளதால்.

(இ-ள்.) முன்னே வாயுராஜன்எடுத்தெறியவந்துவிழுந்தகிரி ஆண்நாகக்கொடுமுடி, அதன்பேரில் பெண் நாகக்கொடுமுடி முதலாகிய வைந்துசிகரத்தையும் பரமசிவன் சொன்னவளவில், காமதேனு பெயர்த்துக்கொண்டு வந்து புகழ்பாவிய கொங்குமண்டலத்தில் காவேரியினீசானதிக்கில் வைத்தது, ஆண்நாகச்சிகரமும் பெண் நாகச்சிகரமும் சிவனும் உமையும்போலும் பிரியாமலிருக்கும்.-எ-று (கஅ)

நீலநிறநிறைதனஞ் செயகிரிப்பணிக்கிரியி னேர்க்கிழக்குறையவதனில்
மூலாதசஞ்சீவி முக்கரணிமிக்குற மூலிகைத்தெழுங்கஞ்சமலையாங்
கோலமிகுவேதகிரி யோமக்கொழுங்கனற் குவிகலெனலாம் வேதனின்
றேலமிடுவதுநாக வோங்கற்குவடமேலை யுளதேவதத்தனெனுமால்.

(இ-ள்.) தனஞ்செயநாடிச்சிகரம் நீலநிறமாய் நாககிரிக்கு நேர் கிழக்குத்திக்கில் விழுந்து விளங்கியிருக்கின்றது. அதிலே அனேகஞ்சித்த மூலிகைகளும், சஞ்சீவிகளும்மிகவுமுளைத்திருக்கின்றது. ரசகந்தகபாஷாண விளைவுகளும், முக்கரணியாகிய கஞ்சமலையென்றும் பெயர் விளங்கியிருக்கும். அதற்குக் வடமேற்கில் வீழ்ந்திருக்கின்றது. ஓமாக்கினி இன்னொருசிகரம் நாககிரிக்கு வடமேற்கில் வீழ்ந்திருக்கின்றது. அதில் பிரமன் சிவனை யுபவாசித்துப் பூசைசெய்தது. வேதவொலி விளங்குமது தேவதத்தநாடிக்கொடுமுடியாம்.—எ-று. (கக)

பொன்னிறந்தருபுட்ப கிரிகிரகந் தப்பெயர்புகலும்பொருப்புவடபால்
மன்னதன்வடபாங்கு குண்டலாகாரமாய் வண்மைதிகழ்வெண்மைநிறமாய்
இன்னிலம்புகழ்சங்க கிரியெனும்பெயரா மெழிற்கூர்மநாடியெனவும்
பன்னுமொருநாகவெற்பு நாகாசலத்தைப் பரவியுளவிரவியுளதால்.

(இ-ள்.) இன்னமொருசிகரம் புட்பகிரியென்றும் பெயராய் சொர்ணநிறமாய் நாககிரிக்கு வடக்குதிசையில் விழுந்து ஓங்கியிருக்கும்; அது கிருகர்த்தநாடிக்கொடுமுடியென்று பெயராம். இன்னமொருசிகரம் அதற்கு வடக்கே விழுந்து வெள்ளைநிறமாய்த்திகழ்ந்த லகம்புகழப்பட்ட சங்ககிரி யென்றும் பெயராய் குண்டலாகார வடிவாய் விளங்கியிருக்கின்றது. அது கூர்மநாடிக்கொடிமுடி யென்றும் பெயராய் விளங்கியிருக்கின்றது. ஆகயிப்படிச்சொல்லப்பட்ட நாலுகிரியும் திருநாககிரியைப்பரவி உள்ளனப்படும். (உ0)
ளேஒன்றுயடக்கலந்திருக்கின்றது.—எ-று.

வெங்கோடுதிகழ்பிறையும் வெண்ணிறத்தொடுபச்சை மென்கொடிவிளங்கு
பாழுஞ், சங்கோடுலாவுகுழை யுங்கனகதோடுமொரு தனமுப்படைத்தவ
[illegible]ந்தடுமாருதம்பொரபணைமுடிபெயர்ந் திட்டவை யமர்ந்தவதனும்,
[illegible]த்தகிரி சோணகிரியும்பெயர் சிறந்துள நிறைந்திங்ஙனே.

(இ-ள்.) வெள்ளிய கொம்புபோலுந் திகழ்ந்த பிறையையணிந்த பால்வண்ண ராய் மற்றொருபாகம் செவ்விய பச்சைக்கொடிபோலும் உமையவள் விளங்குதலா லுஞ் சங்கத்தோடு விராவிய குழையுங்கனகத்தாலாகக் குழையோடு மொருதனமு டைய மார்புமாய்ச் சிவனெழுந்தருளி யிருக்கின்ற தலமதனில் எக்கணு முலாவும் வாய்வு பகவான், நாகராஜன் படம்பொருந்திய கொடுமுடியைத் துண்டித்தெறிந்த படியினால்திருச்செங்கோடென்றும், அர்த்தகிரியென்றும், சோணகிரியென்றும், நாமங்களையுடையதாய்ச்சிறப்புப்பொருந்தி விளங்கியிருக்கின்றது.—எ-று. (உக)

தெற்றுமாயிர முடிச்சேடனங்கனம்வந்து சேர்தலாற் பணிவரையுமா
யுற்றசேடன்றினம் பணியுநெறிபாலங்கு துயர்சேடமலையென்பதாய்
நற்றவக்கோதைமுனி நணியவாசிரமத்தினணிமேருவணிமுடியதாய்
கொற்றமாருதமெடுத்தெறிதலாலுந்திருக்கோதைமலையென்றறைகுவார்.

(இ-ள்.) கொத்தாகிய ஆயிரமுடிச்சேடனுடைய ஓங்கம்வந்து சேர்ந்தபடியி னாலே நாககிரியென்றும், நாகராஜன்றானே தினமும் பூசித்து வணங்கினபடியினா லே சேஷகிரியென்றும், நல்ல தவத்தையுடையகோதைமுனிவர் வசிக்கின்ற ஆசி ரமத்தில் மகாமேருவிளங்கிய கொடுமுடியை வாயுவெடுத்தெறிந்து வைத்தபடியி னாலே கோதைமலையென்றும்பெயராயிருக்கின்றது.—எ-று. (உஉ)

ஆடகக்கிரிமுடி யணைந்தசிவலிங்கத்தோ டங்கதம்வந்துவிழுநாள்
மூடமறுகோதைமுனி முனிவினாற்சிலையென்று முத்தமிழகத்தியன்வா
நாடுமேமேருவின் ஞெகநாடிப்பெரிய நாகமிருபால்வழியிடை
கூடுமதுகண்டுகல் லாகெனச்சாபங் கொடுத்ததெனமறைகூறுமால்.

(இ-ள்.) சொர்ணமயமான கொடிமுடிச் சிகரத்திற்பொருந்திய சிவலிங் கத்துடனே நாகராஜன் அங்கமுஞ்சேர்ந்தமைந்தகாலத்திலே மூடமில்லாத வறிவி னையுடைய கோதைமுனிவன் கோபத்தினாலுண்டாகிய மலையென்று அகத்திய முனிவன் வாநாட்டமாயிருப்பான், மேருவினுடைய நாக நாடிப் பெரியநாக மிரு புறமும் வழியிடையிற்கூடிப்புணர்வதுகண்டு கல்மலையாகச் சபித்தானென்று சுரு திகள் சொல்லுகின்றது.—எ-று. (உ௩)

சிவனுமையுடன்பெறுந்திருமணங்காணநாஞ்செல்வழியிலிவைகாண்பதென
னவமெனமுனிந்துசாபத்தானதன்றியுமவ் வரவமலைமட்டுமகல்வான்
குவடுபெறநின்றவொருகொடுமுடியுமண்புகக்குறுமுனிகுடங்கையதனால்
நவமுறச்செய்தனன் நாகமலைமேனாட்டு நாவலந்தீவிலெனுமால்.

(இ-ள்) பரமசிவன் பார்வதியைத் திருக்கலியாணஞ் செய்யுந் திருமணக்கோ லத்தை நாம் காணவேண்டுமென்று குறுமுனிவன் வருகிறவழியில், நாகமிரண்டும் புணர்ச்சிசெய்வதுபோலும் தோன்றவிது பொல்லாதென்றுகோதைமுனி சாப த்தினாலே கல்மலையான்று தெரிந்தஅங்ஙனம்வாராமல் விலகும்போது அத்திருப் பாண்டிக்கொடுமுடி ஓங்கிநின்றது, அதைத்தமது குடங்கையால் பூமியிற் புகுத வழுத்தினர், மேனாடாகிய நாவலந்தீவில் கொங்குமண்டலத்தில் நாககிரியென்று நீடூழி அழிவில்லாமலிருக்கின்றது.—எ-று. (உ௪)

கிரிவாகாற்றுச்சருக்க முற்றிற்று.

ஆ திரு விருத்தம். ௬0௪.

# வந்தியாபாடாணச் சருக்கம்.

—:o:—

[illegible]மிதிரிவியற்பெறு முனிக்கணமோடிமையவரியக்கர்முதலோர்
அமையாவகிரியென்ன வஞ்சலியோடெஞ்சலில் வணபினுள் தொன்றுளத
ரோ, வுமையவளுமாபதியுடன்றேவர்கட்குதவுபொருகுன்றுவந்திமடவார்
தம்துவாதிதியனைய சந்ததியளிக்குமது தலைமூன்றுநிற்குமரிதாம்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் சூதமுனிவர் நாககிரிவந்ததைக் கூறுசொல்லவும், தே வர்கள் முனிவர்கள் இயக்கர் கூட்டங்கள் முதலாகிய வெல்லோரும் கிரிவாலாறு கேட்டபோதே அஞ்சலியஸ்தராய்த்தங்கள்தங்கள் குறைதீரவன்புடனேதொழுது நிற்ச, இன்னமொரு புதுமையான சிகரமிருக்கின்றது முன் மகாமேருகிரியிலே யிருந்தது. அதை சிவனும் உமையுந் தேவர்களுக்குத்தியாகமாகக்கொடுத்த சிகரம் மலடிகளுக்குப்புத்திரசந்தானமளிக்கப்பட்டது, திரிலோகத்திற்குமரிதாயிருக்கும்.

பாமுனிவர் கேண்மினது வந்தியாபாடாணம் வடமலைக்குவடு கவடு
தாமுனியுமண்டர்சுரேசர்கந் தருவர்வா சந்ததியளிப்பன்முன்னு
ளேமுறவதர்க்கருகு மோகினிகெசப்பெய ரடுத்துள மலைச்சிகரமொன்
றுமெனவெவர்க்குமானருடருபலன்சில வறிந்தனமுரைத்தருளுவாம்:

(இ-ள்.) கேளுங்கள் நைமிசாரணிய முனிவர்களே, அந்தச் சிகரத்திற்கு வந் தியாபாடாணமென்று பெயர். அது மகாமேருவிலொரு கொடுமுடிச்சிகரம், முனி வர்கள் தேவர்கள் அசுரர்கள் கந்தருவர்களிவர்களுக்கெல்லா முற்காலமாதியாய்ச் சந்ததி கொடுக்கப்பட்டது. அதற்குப் பக்கத்திலேமோகினிகெசமென்னும் பெய ரையுடைய சிகர மொன்றிருக்கின்றது, சிவன் கிருபையினால் அதனுடைய மகி மையும் பலன்களையுஞ் சிலது தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறோம்.—எ-று. (உ)

அம்மலையிலெவரேனு மணிபணியெனத்தங்க ளங்கத்துவல்சிபுனையி
லம்மலர்க்கொடிகள் மோகினிகஜக்கிரிவைரமனவுமதுபொன்னுருமா
விம்மலையிலிட்ட காமியமுதவு மூலிகையிருப்பதவர்கீழ்டுவரோ
பொம்மெனக்கிளைதயின்பழவுருவெடுக்குமப்புதுமை தனையார்புகலுவார்

(இ-ள்.) அந்த கிரியிலிருக்கப்பட்ட ஓர் கொடியைப்பிடுங்கி தேகத்தி லணி ந்துகொண்டால் நவரத்தினப் பணிகளைப்போல் பிரகாசிக்கும், மோகினி கஜக்கிரி யிலிருக்கிறவரையில் அக்கொடிகளைவாங்கிக் கீழேபோடுவாராகில் உடனே பழை யகொடிஉருவமாகும்பின்னும் இஷ்டகாமியந்தரப்பட்ட சித்தமூலிகைகள் அநே கமிருக்கும், அதனுடைய புதுமை யாவராலுஞ் சொல்லமுடியாது.—எ-று. (௩)

மோகினி கசத்தின் கிழக்குவந்தியாசிலை முளைத்தமுதம்வந்ததெனலா
யாகமபுராணங்க ளாய்பதற்கரியகு வடதனிலை யுமைப்பணிமையம்
போக்வா உமையுடன்கூடுநாளயனரன்பொன்னடி பணிந்தசிவனைத்
[illegible]முதவெனவேத மொழிகூறி யன்றுபெறு திண்சிகரமச்சிகரமே.

[illegible]-ள்.) அந்த மோகினிகெசச் சிகரத்தின் கிழக்கு வந்தியாபாடாண அமிர் [illegible]ளைத்தெழுந்து இருக்கிறதென்று ஆகமபுராணங்களாலுஞ்சொல்லுதற்கரிது அதன்பெருமையைச் சொல்லுகிறோம். இமவான் மகளாகிய பார்வதியைத்திருக்

கலியாணஞ்செய்து கூடி விளையாடுகிற காலத்தில் பிரமன் விஷ்ணு இவர்கள் சுவாமியைவணங்கி எங்களுக்கு வந்தியாபாடாண சிகரத்தைத்திடாகமாகக்கொடுக்கவேண்டுமென்று ஸ்தோத்திரஞ்செய்தார்கள், சிவன் அப்படியே கொடுக்கப் பெற்றுக்கொண்ட திண்ணிய சிகரம் அந்தச்சிகரம்.—எ-று. (ச)

அங்கயனவற்றைப்பெற்றுச் சித்ததனினருகுவந் தீசனையமைத் தோதியே
பெங்குமுளான்மையையுன் பவர்மகவுபெறுதற் கியன்றருவடைந்தநாரதன்
றங்கிசூரனுக் கோதினன்சூரனச் சோதிவம்முகவியவனு
ளிங்கிதமோடதனைக் கவர்ந்துசெங்கோட்டினி லிருத்தினனிருத்தியசூரன்.

(இ-ள்) அப்படி பெற்றுக்கொண்ட சிகரத்தை பிரமதேவன் அர்ச்சனைசெய்து அதன்பக்கத்தில் ஒரு சிவலிங்கத்தைத்தாபித்து அதற்கு வந்தீசுவரனென்று பெயர்வைத்து வேதமந்திரங்களாற் பூசித்து எங்கெங்குமிருக்கிற மலடிகள் பிள்ளை பெறுவதற்கு அருளுண்டாக்கிவைத்த சிகரம், அதை நாரதமுனி வெற்றியுடைய சூரனுக்குச் சொன்னார், அந்தச்சூரன் பரமசிவனுடைய வரம்பெற்று வருங்காலத்திலதனைப்பெயர்த்துக்கொண்டுவந்து திருச்செங்கோட்டுக்கொடுமுடியிற்பதித்து வைத்து பூசைசெய்தான்.—எ-று. (ரு)

பிரமன்மாமுதலமரர் வந்துபணிபுரியப்பெரும்பானுகோபன்முதலாந்
திரமகவனைகளைப் பெற்றவன்சென்றுகற் றேவரைச்சிறைவைத்தன்று
வாமயேந்திரபுரியின் மாளிகையினர்ச்சனை மகிழ்ந்துகேதாரமிகவு
மர்க்கரவதற்கொத்த தவனியந்தசொர்க்க மதனிலுங் காண்பதரிதால்.

(இ-ள்) பிரமா விஷ்ணு முதலாகிய தேவர்கள்வந்து பணிபவும், பானுகோபன்முதலாகிய பிள்ளைகளைப்பெற்று தேவர்களைச் சிறையிலிட்டான், வீரமயேந்திரபுரியில் சொர்ணமயமான மாளிகையிலிருந்து வந்தியாபாடாண சிகரத்தைப்பூசித்து வச்சிரதேகமும் வெற்றியும் பெற்றான், சிவசிவா அதற்குச்சமானமான சிகரங்களைப் பூமியாதன சுவர்க்கங்களிலுங் காணுதற்கரிது—எ-று. (சு)

சூரபதுமன்றுறவர் சூலதான்மறையவன் சுதரிசனமாயன்முதலாம்
பாரவானவர்சிறிய ரெனமனத்துணர்திறற் பாவசிந்தையனுமாயக்
கோரவர்க்கந்தருங் கொடுந்தொழில்புரிந்துவலி குறையாதுதிரிபுவனமுஞ்
சேரவுற்றொருநகுடை நிழற்றியதுநாகவந் திபாசிலையிலனுருமால்.

(இ-ள்.) அப்படிப்பட்ட சூரபன்மனுக்கு முனிவர்கள், உருத்திரர்கள், பிரமா விஷ்ணு இவர்களுக்கெல்லாரும் பயந்துநிற்கவும், இவர்களை அற்பமாங்களென்றுதெரிந்து கொலையாதிபாவஞ்செய்கின்ற நினைவை யுடையவனுமாய், கொடுங்கோபத்தால் கொடியதொழில்களைச் செய்தும் வலிமைகுறையாமல் சகல அண்டங்களையுங்குடையிலடக்கி யாண்டுகொண்டிருந்தான். அது வந்தியாபாடாண சிகரத்தைப்பூசித்த வரப்பிரசாத மகிமையாம்.—எ-று. (எ)

அவனுலகத்தும் பரத்தும்பகாரமா யங்கணனையர்ச்சித்ததாற்
குன்றுமவனுகி கோடனுக்கரிதாயோர் கொடியும் வாகனமுமானன்
சிவனுகரங்களிக்கு மலையில் யோகஞ்செய்க் தவந் தன்மமுயல்வோர்க்
கிவனுடைய பலனொன்றொவ்வொருகோடி கோடியினிலெய்துமலைகாகமலையே



(இ-ள்) அந்த சூரபன்மனுக்கும், இந்திரர்க்கும் பாத்திரக்கும் உபகாரமாக வந்தியாபாடாணச் சிகரத்தில் சிவலிங்கத்தை அர்ச்சித்த மகிமையினுலே தங்க கொடியும், அதனைத்தொடர்ந்து கொடியும் வாகனமுமானன், சிறக, பரமசிவனுக்குப் பிரியமாயுள்ள இம்மலையைத் தருவதாகிய ஆம்தமிரியில் தவ குநிதல்வந்து சிவயோகஞ்சபதபத்தானங்கள் இவை முயற்சியாய் செய்தவர்களுக்கு வரும்பலன்கள் சொல்லுவோமெனில் ஒவ்வொன்றுக்கு கோடிகோடி பலனுக விர்த்திக்கும்.—எ-று. (அ)

முதனுகக்காணவுற்றன வருளுமதிலைபுக முனிற்றெருழுதிறைஞ்சவருணு
முதவுகொண்முறைசெம் வந்துபூசனைசெயி துதித்தன்முனதாக்
திதகவியுற்குமர தீர்த்தமூழ்கிச்சிவ யோக முடனுண்மையாகவற்
புதல்வ வலம்வந்தும் முறை பணிந்து முத்தியமடைகுவார்.

(இ-ள்) கிரேதயுகத்தில் யாதாமொருவர் சுகிருர்தகண்டாலுஞ் சந்தான முண்டாகும், திரேதாயுகத்தில் கண்டு நமஸ்காரஞ்செய்தால் பிள்ளையுண்டாகும், துவாபரயுகத்தில் வந்து பூசித்துத் தொழுதால் இஷ்டமான புத்திரருண்டாகும், கலியுகத்தில்வந்து குமாரதீர்த்தத்தில் மூழ்கி சிவத்தியானத்துடனே உண்மையோடு வணங்கியந்திரிசைய மூன்று பிரதட்சணஞ்செய்து பாகனை ப்ரதட்சணஞ்செய்து மூன்றுநாள் அங்கு வசித்திருப்பாராகில்.—எ-று (க)

வைகியர்ச்சனைபுரியும் வாரமதுசக்கிரன் மருவுரோட்சார்த்திகையினில்
மெய்யினின்றொருமகவுபலனளிக்குஞ்செய்ச வெம்பாவமுங்கொலையுமென்-
றுய்தவசிபாதமுனி யோதினானக்சபல னுமதென்றபின்னுமொருபால்
மைதருபவங்கெட மனத்திடைநினைத்தன வரந்தருதினங்களாபகர்வாம்.

(இ-ள்.) அப்படி வாசஞ்செய்து பூசிக்குந்தினஞ் சுக்கிரவாரமும் கார்த்திகை நட்சத்திரமுங்கூடின சுபதினமுதலாம் மூன்றுநாளும் கிரிப்ரதட்சணஞ் செய்தால் அன்றுதொடங்கி புத்திரசந்தான முதலாகிய இஷ்டகாமியார்த்தங்களைக் கொடுக்கும், கோர பாவமுந்தீருமென்று பரிசுத்த தவத்தையுடைய வியாசர் எனக்குச்சொன்னார். இன்னம் அநேக பலனுண்டென்று பின்னுமொருபங்கு மருள் மயங் கொடிய பாவங்களும் விமோசனமாகும், அவர்கள் நினைத்தகாரியங்களுங்கைகூடும் அப்படிக்கு வரப்பிரசாதத்தைப்பட்ட சுபதினங்களைச்சொல்லுகிறோம்.—எ-று. (௰)

மார்கழியினிறைமதிய மூவிரண்டார்ந்தினம் வந்துசார் கேசனைநினைந்
தேர்கெழுகுமர் சுனைநீர்மூழ்கியனமதர் இல்லையெலவொருபொழுது
கொண்டுசெழுமறையவர்க் குவைவு மூன்றுநாள்
பகர்செழு முகத்தர்க்கு பாலர்க்குமர்ச்சனைசெய்வார்.

(இ-ள்.) மார்கழிமாதம் பௌர்ணமையுந் திருவாதிரையுங் கூடின சுபதினத்தில் யாதொருவர் ஈசனை நினைத்து வனப்புமிகுந்த குமாரதீர்த்தத்திலே முழுகி குமாரருக்கும் கேசருக்கும் உமைபொருந்தியமிஷ்டை முடித்துக்கொண்டு குமாரருக்குமன்கேசருக்கும் சொடச உபசாரங்களுடனே பூசித்து, அன்று பாலருக்கும் அல்லது ஒருவேளை அன்னம்புசித்து விரதமாய்

பிராமணருக்கு நெய், வெல்லம், பால் முதலாகியதுங்கொடுத்து பின்பு தான்புசிக்கவும், இப்படி மூன்றுநாளும் பூசிப்பர்.—எ-று. (௧௧)

அர்ச்சனைபுரிந்து மறையவர்தானமுற்றி மகேசுரர்க் கன்னமுதவிச்
சற்குருவுடன்குரவர் தங்களுக்குதவினதயாபலன்வழங்கியவரை
மூப்பொழுது மடிபணிந் தமலவந்தீசனை முகிழ்க்கரத்தஞ்சலிசெய்வார்க்
கிப்பரிசபலனிதுவெனச்சொலச்சேடர்க்கு மெண்ணில்காலங்தொலையுமே.

(இ-ள்.) அப்படி அர்ச்சனைசெய்து பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து அதிதிகளுக்கு அன்னதானஞ்செய்து, குருக்களுக்கும் பெரியோர்களுக்குந்தம்மாலியன்றவுதவிசெய்து, அவர்களை திரிகாலமும் வணங்கி வந்தீசரைப்பூசித்து, பிரதட்சண நமஸ்காரஞ்செய்த புண்ணியவான்களுக்கு இவ்வளவுபலனென்று ஆதிசேடன் தன்னிரண்டாயிரம் நாவினாலும் அளவிட்டுச்சொல்லத் தொடங்கினாலும் அனேககாலஞ்செல்லும்.—எ-று. (௧௨)

சண்முகர்பதந்தொழுது சரவணபவாவெனத்தனிமனத்துச்சரித்தால், லெண்முகசரோருகன் வியன்மறைப்பொருளுணர்வு மெய்க்ககமதையும்புராணத் தண்மொழிபுமொழிகொண்பதினெண்பாடையிற்கவிதைசொலமதுரவாக்கு தவுமால் இண்மருவுதாரகையிலர்ச்சித்தபேர்பெறுஞ்சீர்பெறுவர்பார்பெறுவரே.

(இ-ள்.) சண்முகருடைய பாதங்களைத்தொழுது ஓம் சரவணபவாவென்று ஏகாக்கமாகக் கருத்திலுச்சரித்த பேர்களுக்கு வேதாகம சாஸ்திர உபநிஷத்கலைக்கியானங்களைக்கொடுக்கும், பதினெண்பாஷைகளிலும்பாடப்படிக்கப்பிரசங்கிக்கத்தக்கவரப்பிரசாதந் தரப்பெறுவார்கள் அணிவுடனே தாரகப்பிரமத்தியானஞ் செய்கிறவர்கள் ஸ்ரீதேவி செல்வமும், பூதேவி செல்வமும் பெற்றுவாழ்வார்கள்.—

வேறு.

அதிஞாபன்மனை படர்ந்ததேவேந்திரர்க் கனிநகரளித்தகிலமேற்
புதுராகமலையில்வந்தீசருளின் புறப்பொருளிலொருதீர்த்தமுதவி
நதிமேவுதமதருனி நாகேசனைத்தொழுது நானிலத்தவர்பணியவே
நிதமேவுவெற்றிபெற் றனர்வேலர்கலியினுஞ் செல்வமொடுகல்விதருமே.

(இ-ள்.) மிகுந்த சவுரியவானாகிய சூரனைக்கொன்று, தேவேந்திரனுக்கு இந்திரலோகத்தை அரசாட்சிக்கொடுத்து, நாககிரியில் வந்தீசரைப் பூசித்து; அவருடைய அனுக்கிரகத்தினால் மகிழ்ச்சியாக ஒருதிவ்யதீர்த்தமுண்டாக்கிவைத்து, அதில் சடாட்சர மந்திரத்தை ஸ்தாபித்து, தமதுகருணையினாலே நாகேசுரரைத்தொழுது வணங்கி பூலோகத்தில் மனிதர்களனைவரும் வந்து தம்மைப் பூசித்து வரங்கள் பெற்றுக்கொள்ளும்படிக்கு வீற்றிருக்கின்றனர், வேலாயுதக்கடவுள் கலியுகத்திலுஞ் சகலசெல்வமுங் கொடுத்தருளுகின்றனர்.—எ-று. (௧௩)

வேறு.

மலையெங்கு மாமலையே மதுவொழுக்க மாமலையே
கலைமலர்ந்த வனமெல்லாம் கனிநந்த வனமெல்லாம்
மலர்தருமைந் தருக்கனமே யமுதருமைந் தருக்கனமே
நிலமணியின் கதிரெழுமே தொழிற்மணிக் கதிரெழுமே.



(இ-ள்.) மலையெங்கும்பார்த்தாலு மகமேருசிகரத்தைப்போற் பிரகாசிக்குந் தேன்கள் மலையருவிபோல் பெருகி அலைமொழிந்திறங்கும். அழகிய புட்பங்கள் அலர்ந்து யோசனைதூரம் வாசனை வீசும், நந்தவனங்களும் அனேகதீர்த்தங்களெல் லாந் தாமரை நெருங்கியிருக்கும். வாடாத புட்பங்கள் புட்பிக்கும். பஞ்சதருக்கள் மிகுந்திருக்கும், மனிதர்களுக்கு அமிர்தமே போசிப்பாயிருக்கும், பலவகை மணிகளுடைய நிறங்கள் சுடர்விரித்துப்பிரகாசிக்கும், கொழுமிய செங்கெற்கதிர்களுந் தழைததுப்பிரகாசிக்கும், கதிர்மணிகளும் பெருகும்.—எ-று.

சந்தனவண்டடங்காவே சந்தனவண்டடங்காவே
கந்தரமாமுழக்கெழுமே கந்தரமாமுழக்கெழுமே
சிந்துரமாமணந்தருமே சிந்துரமாமணந்தருமே
ஐந்தருவாண்மந்திரமே ஐந்தருவாண் மந்திரமே.

(இ-ள்.) அந்தமலையெல்லாஞ்சந்தனச்சோலைகளே,ஸ்திரீகளுக்குந்தூதுபோகின்ற அன்னப்பட்சிகளும் வண்டினங்களுமோயாமல் கூட்மாடிக்கொண்டிருக்கும் குகைதோறும் கொடியமிருகங்கள் கர்ச்சிக்கும், மேகம் இடிமின்னலோடே மழைக்காலிரங்கிப் பெய்யு முழக்க மிகுந்திருக்கும், யானைகள் பிடியானைகள் மனம் பொருந்தி புணர்ச்சிசெய்யும், அங்கு வசிக்கின்ற ஸ்திரீகளுடைய நெற்றியிலிட்டசிந் தூரத் திலகப்பொட்டுகள் பரிமளிக்கும், பஞ்சதருக்களினுடைய நிழல்களிலே அனேக மாடமாளிகை சேர்ந்திருக்கும் அன்பரெல்லாரு தரிதாகிய பஞ்சாட்சரங் களைச்செபிப்பார்கள்.—எ-று. (௧௪)

கண்டவருக்கருட்கதியே கண்டவருக்கருட்கதியே
புண்டரீகமானுரவே புண்டரீகமானுரவே
கொண்டலையுந்தண்டலையே கொண்டலையுந்தண்டலையே
விண்டமாநாரணனே விண்டமாநாரணனே.

(இ-ள்.) திருநாககிரியைக் கண்டவர்களுக்குச் சிவகிருபையு மோட்சமுங் கிடைக்கும், பிரத்தியட்சமாகக் காணப்பட்ட வாதித்தர்களுதித்து சுவாமிதிருமுன் சோரய்வந்து பூசிப்பார்கள், புலியும்பசுவும் முறவாய்விளையாடுந்தாமரைமகள் வாசமாயிருப்பாள். மேகமண்டலத்தை யளாவியிருக்கும் நாககிரி கொடுமுடி சிகரங்களுக்கு தென்றல்காற்று வீசுகின்ற மலர்ச்சோலைகளும் மிகுந்திருக்கும், மூங்கில் வனங்கள் நெருங்கி ஓங்கி வளர்ந்திருக்கும், தேவேந்திரனும், பிரமனும், விஷ்ணுவும், வேத மந்திரங்களோதி சுவாமியைப்பிரதட்சண நமஸ்காரஞ்செய்து வணங்கி வாழ்த்துவார்கள்.—எ-று. (௧௫)

வந்தியாபாடாணச் சருக்கம் முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம்.—௧௨௪.

# உமைதவச்சருக்கம்.

———:():———

திருமணஞ்செய்து சிவனேடம்பிகை சேயையீன்றருட்செய்தபின்
வருமணம்புவி மீதுகந்தர்விளை யாடல்செய்தபடிவருதலாற்
கருமணம்பானி மலர்நறுங்குழலி கந்தனைப்பெறுசிந்தையா
லருமணங்கமழ அறுபயங்கினை எல்தெரிந்தனராடலார்.

(இ-ள்.) கேளுங்கள் முனிவர்களே, இனி இமவான்மகளாகிய பார்வதியைப் பரமேசுரன் திருக்கலியாணஞ் செய்துக் கொண்டு கந்த சுவாமியை யீன்றருளிய பின்பு, குமாரதேவரும் நாரதமுனிவருடனே கூடிக்கொண்டு மலைகள்தோறுந் திருவிளையாடல்செய்து திருச்செங்கோட்டில்வந்து வசித்திருக்கின்ற காலத்திலே மலர் மணம்பொருந்திக்கார்மேகம்போன்ற கரிய கூந்தலையுடைய பார்வதியம்மன் புத்திரவாஞ்சையினால் மகனை நினைத்துக் கொண்டிருந்தி யென்னமுற்றாள் அது தெரிந்து பரமேசுவரன்.—எ-று. (க)

அன்னபோதினெமடந் தன்னையன்னையை யகற்றவேபல்வுமருள்புரிந்
தின்னியுன்னியே யனந்தவிலைகளு முதகினரஃதொழிவிலா
நன்னெறிச்செயல் கண்டுவள்ளிகை நாதரம்பிகைக்கன்பனார்
பின்னுமோர்விளை யாடல்மேவினர் பெரியர்கேண்மினஃதுரை செய்வாம்.

(இ-ள்.) அப்போது எமது தாயாகிய உமையவள் துயரத்தைத் தீர்க்கவேண்டியிருந்த கிருபையோடு நினைத்து நினைந்து அநேகந் திருவிளையாடலைச் செய்தார். அப்படி செய்தும் உமையவள் கவலை நீராமையைக் கண்டு அக்கினிக்கண்ணெற்றியையுடைய பரமேசுவரன் பின்னையும் ஒரு திருவிளையாடல் செய்யத் தொடங்கினார். முனிசுவரரே கேளுங்கள் சொல்லுகிறோம் என்றார் சூதமுனிவர்.

என்றுகூறியருகலர் தொழுதினி திறைஞ்சியெமக்குநீர்
நன்றுதுன்றிஅமையமாதுடன் கயிலைநாகநாதருநித்தவுஞ்
சென்றவர்க்கருளு கின்றதும்பணி செய்தபேறுதற்றீர்த்தமு
மென்றுரைத்திடுதி யென்றமாதவர்க் கினியசூதருமியம்புவார்.

(இ-ள்.) அப்படியாகச் சொன்ன முனிவரை மிகவு மன்புடனே வணங்கி யெங்களுக்கு உமையவளும் சுவாமியும் நாகமிரியில் எழுந்தருளிய வரலாறும், அத்தலத்தில் சுவாமியைப் பூசித்த பேர்களும் அவர்கள் பெற்றவரப்பிரசாதங்களும் தெய்வ தீர்த்தங்களினுடைய மகிமையுஞ் சொல்லி யருள வேண்டுமென்று முனிவர்கள் கேட்க சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.—எ-று. (உ)

வெள்ளியங்கிரி மீதொருவி ளைமத்திமுத்த வனந்திலே
யுள்ளடைக்கருமுல்லைமாவி னுடன்புணர்ந்து விடாதம்பார்
தெள்ளியாற்பராவென்றான்பல செப்பனையிடம்பினால்
வள்ளலிணையமலைடந்தைத்தகை மலர்விடந்கண்மறைத்தனள்.

(இ-ள்.) அந்த வெள்ளியங்கிரியின்மீது கற்பகத்தரு முதலாகிய சோலைகள் நெருங்கிச்சகல புஷ்பங்களுடனே சிறந்திருக்கின்ற ஒரு உத்தியான வனத்திலே பரமசிவனும் பார்வதியும் விநோதமாக பிரவேசித்து அந்த வனத்திலுள்ள



காட்சிகளைக்கண்டு களிகூர்ந்து உலாவி வருகிறபோது ஒரு முல்லைக்கொடியானது மாதவிமரத்தைச்சுற்றிக்கொண்டு பிரியாமல் தோன்றுகிறதை உமையவளே காண்பாயாகவென்று சுவாமி பிரியமாகச்சொல்ல, அம்மனுக்கு வெட்கமுண்டாகி சுவாமி திருநேத்திரங்களைத்தன்கையாகிய தாமரைமலரினால் மறைத்தருளினாள்.—எ-று. (ச)

அந்தவேலையிலந்தகார மடைந்ததண்ட மனைத்துநும்
இந்தரிவியுத்தமுமெற்றியிலங்குகண்ணுளிரச்செய்தே
யெங்குமையன்று விழித்தபின்னரிதென்னெல்காரணமீதுறு
சந்தியுந்தனியபதியாக தவம்பிழைத்தென வோதலும்.

(இ-ள்.) அப்போது அண்டங்களெல்லாம் அந்தகாரமான இருள்வந்துமூடிக்கொண்டு வெகுநாள்வெளிச்சமில்லாமலிருந்து பின்பொருநாள்உமையவள்கையை பரமசிவன் திருநேத்திரங்களுடனே யெங்கும் பிரகாசமாக வெளிச்சமாச்சுது. பரமசிவன் திருநேத்திரங்களை விழித்தருளின பின்பு இதுவென்ன காரணமென்று பெரியோர்களெல்லாருங் கூடி ஸ்ரீகயிலாயத்தில்வந்து கடவுளைக்கண்டு வணங்கி எங்களுடைய சந்தியாவந்தன மனுஷ்டானமாதி கிரியைகள் தவறி வெகுகாலம் இருள்மூடியிருந்ததால் எங்கள் விரதத்துக்குக் குற்றங்கள் நேர்ந்ததென்று முறையிட்டுச்சொன்னார்கள்.—எ-று. (ரு)

இதுதகற்றியு னேகபாவ மியானடைந்திடவிறைவனின்
கருதுமனக்கணத்துனளித்தருணன்கெனப்பறைநவிறது
மிகுதுநிர்ப்பிர வாளமெல்லிதழ் மேவுபூவை சேதாரநின்
றகுதுகிர்ப்பினஅதவுகாரியி லுற்றுநற்றவமுற்றபின்

(இ-ள்.) அப்போது உமையவள்கண்டு பயத்துடனே கடவுளைவணங்கி இனி யான்பிரியாமல் சேர்ந்திருக்கும்படியும்மூடையஇடப்பாகத்தில் பித்தக்குற்றத்தைத்தீர்த்தருளி யும்முடைய இடப்பாகத்தில் தொழுது பேட்டுக்கொண்டிருக்கத்தக்கதாக கருணை செய்து ரட்சிக்கவேண்டுமென்று தொழுது கேட்டாள். அப்படியே கொள்ள பவளம்போன்ற அதரத்தையுடையபாகாளியே கேட்பாயாக. அப்படியே நீ புறப்பட்டுக்கேதாரத்தில் சேர்ந்து பூசைபுரிந்து, அங்கிருந்து புறப்பட்டு திவ்ய சலம் பிரவாகிக்கின்ற காசிஸ்தலத்தில் சேர்ந்து பூசித்துந் தவஞ்செய்தபின் பென்று பின்னையுஞ் சொல்லுகின்றார்.—எ-று. (சு)

கச்சிகாசிகிர்த்ததொன்றது காரணம்பலகாணுமால்
மெச்சுகம்பையுமாவுமுண்டதன் மிக்கநம்பலனளவுறு
தச்சுதன்றெழுதலமடைந்துநின் வரிப்பிபார்தவமெய்திறல்
மெச்சியாபவன்வருதுமிங்ஙன் விளைத்திடுங்குறைவிலகுமால்,

(இ-ள்.) மகத்துவம் பொருந்தி விளங்குகின்ற காஞ்சீபுரமென்றொரு ஸ்தலமுண்டு அங்ஙனம் கம்பையாறும், மாவிருட்சமுமுண்டு; அந்த காஞ்சிஸ்தலத்தில் நீபோய்ச்சேர்ந்து அரியதவஞ்செய்தால் நாம் அவ்விடம்வந்து உனக்குக்காட்சிகொடுத்து நீ நினைத்தபடிக்கு இடது பாகமும் அனுக்கிரகஞ்செய்கிறோமென்று மகிழ்வாகப் பத்தியருளினார் பரமசிவன்.—எ-று. (எ)

எனவுரைத்தபினாதனடிக்கள மணமலர்க்குழ லம்மைதன்
மனதுறத்தொழுதடித்துணைமலர்களுச்சுதன் முலகுளோன்.

முனைவர்வித்தியரமரருத்தபர்முனிவர்சத்திகள் முதலுளோர்
தனது பிறகொளவவனியிற் புகழ் தழுவுகச்சியின்மருவினுள்.

(இ-ள்) இப்படியாகச் சுவாமிசொல்லியபின்பு அன்னம்போல நடையும்கார் மேகம் போன்ற பரிமளக்கூந்தலுமுடைய பார்வதியம்மன், சுவாமியை பிரதட்சண நமஸ்காரஞ்செய்து வணங்கித்துதித்து விடைபெற்றுக்கொண்டு அரிபிரமன் முதலாயுள்ள வித்தியாதரர்கள், தேவர்கள், முனிவர்கள், அனேகசத்திகள் முதலான சகல சனங்களுந் தனது பின்னே தொடர்ந்துவரக்கயிலையில் நின்றும் புறப்பட்டு இமய கேதாரத்தில் வந்து சிவனைப்பூசித்து, அங்கிருந்து புறப்பட்டு காசியில்வந்து விசுவநாதரைப்பூசித்து, அங்கிருந்து புறப்பட்டு உலகம் புகழாநின்ற காஞ்சிபுரத்தில்வந்து சேர்ந்தாள்.—எ-று. (அ)

வந்துகம்பை யெனும்பொருந்திய வண்பெருங்கரைதங்கிமின்
முந்துமிங்கிவளைந்தருந்தவ மூன்பினுங்கனமுந்தலுங்
கந்தர்வந்துமை யென்னைதீ கருதும்பலன்கனிகின்றதென்
றந்தவந்தரியம்புகின்றன ரன்புடன்புரிகென்றபின்

(இ-ள்) உமையவள் அனந்த சத்திகளுடனேகாஞ்சிபுரத்தில்கம்பையாற்றில் வந்திறங்கி நல்லமுகூர்த்தங்கொண்டுபஞ்சாக்கினிவளர்த்து அதின்மத்தியில்நின்று அரியதவஞ்செய்யத்தொடங்கினள். அப்போதுகந்தசுவாமிவந்து வாராய்தாயே எந்தையாகிய பரமசிவன் நீ கருதிக்கேட்ட வரங்கொடுப்பதற்கு பிரியங்கொண்டிருக்கிறாரென்று தேவகணங்கள் முறைமுறையாகவந்து செல்லுகிறார்கள். நீபத்திசிரத்தையுடனே தவத்தைவிடாமல் செய்வாயாகவென்றதின் பின்பு.—எ-று

மாயனாரவண்மேயினார்வரு மாயனேடுரைக்கூறுவாள்
மேயதோர்தவநீருமீசனுப் வேறெனாதுளம்விறவே
சேயகாலமினையனுளள சிலமெயினனுதியா
ரசயபேதமதாயினரும் காரபோதெனவோதுவார்.

(இ-ள்) அம்மன் அப்படி அரியதவஞ்செய்கிறபோது அங்கே விஷ்ணுமூர்த்திவந்தார். வந்தவிஷ்ணுவுக்கு உபசரித்து சிலவசனஞ்சொல்லுகிறாள். நான் சிவனுடைய அர்த்தபாகத்திற் சேர்ந்து பிரியாமலிருக்கவேண்டுமென்று நெடுங்காலமாய்த்தவஞ்செய்துகொண்டிருக்கிறேன். சுவாமிக்கு இன்னந்தயவு வரவில்லை இனி நடக்கவேண்டியவைகளுக்கு மேற்பருவஞ் சொல்லுமென்று உமையவள் கேட்க மகாவிஷ்ணு சொல்லத்தொடங்கினார்.—எ-று. (ம)

வைத்தபத்தி வசிட்டன்மூற்பகர் வித்தகத்துளசித்தாம்
மெய்த்தபத்தரியற்றுகற்சிவ பத்திமெய்த்தவ மிக்கதாம்
உத்தமத்தவமுத்தமச்சப முத்தமத்தின் புகழ்ச்சியும்
நித்தநித்தமிகத்தொழிற்பெறின் நித்தர்பக்க முமக்கதாம்.

(இ-ள்.) வாராயம்மா,பார்வதி,எந்தத்தவத்திலும்சிவபூசைசெய்கிறதவமே மேலானதவமாம் நினைத்தகாரியங்கைகூடுமாகையினாலேயமது பக்தர்களாகிய வசிட்டர் முதலாகிய முனிவர்கள் உண்மையாகச் செய்வார்கள். அந்தத் தவத்தி



னெல்லா மேலானதவம் சிவனைப் பூசைசெய்கிறது. அதுவே உத்தமமான தவம் இது நிச்சயம், பக்தியுடனே நீயும் சிவனைப் பூசித்தாயாகில் செய்தகுற்றம் நீங்கிச் சிவனுடைய இடப்பாகமும் கிடைக்குமென்று சொன்னார் விஷ்ணு.—எ-று. (கக)

பாரிலச்சுதனுரைத்தது பாகமூற்றுள் தென்றபோ
தோருரைப்பகர்கின்ற விப்படி யோமலர்ச்சனையினகணீர்
தாரகப்பிரமந்தனைத் தவறுதவற்றொடு மெம்பிரா
னாருட்சிவமந்திரத்தையே நாளுமோக்கவிளம்புவாய்.

(இ-ள்.) அங்ஙனம் விஷ்ணுசொல்லுவது காரியமேயென்று நினைத்து மகாதேவி மகிழ்ச்சியடையப் பின்னும் விஷ்ணுவானவர்ஒரு உண்மைசொல்லுகிறோம் இந்தப்படி ஓமஞ்செய்து சிவார்ச்சனை செய்யுமிடத்தில் தாரக பிரம்மத்தை வழுவாமல் அதனுடனே சிவப்பிரியாய்ப் பூரணாந்த சூட்சுமபஞ்சாட்சரமந்திரத் தை அனவரதகாலமுந் தியானஞ்செய்து பூசிப்பாரென்று பின்னையுஞ் சொல்வார் விஷ்ணு —எ-று. (கஉ)

இந்தமந்திரமெந்தைமந்திர மின்பமந்திர மன்பினால்
வந்தமந்திரமெந்தைபங்கு வழங்குமென்றெழுகமலபதி
ருந்திபின்புனலுஞ்செங்கழுநீரின் கொழுந்தொடையுங்கைமே
லுந்துமென்மலரின்சிவநதனை யுண்டெனக்கிருபைகொண்டுமான்.

(இ-ள்.) இந்தமந்திரம் எம்முடையகர்த்தாவாகிய பரமேசுவரனுடைய மந்திரம். சிவனுக்குப்பிரியான மந்திரம். சிவகிருபையினால் வந்தமந்திரம். இதுசுவாமி இடப்பாகங் கொடுக்குமென்று திடசித்தமாயெண்ணிச் சிவபூசைக்கு ஆரம்பிக்கும் போது செழுமையாகிய கம்பையாற்றுச் சலமும், வெண்மையான மாமரத்தின் கொழுங்கொத்துகளும் உன்னைஸ்தங்களினால் தீண்டிமெல்லிய மணலைத்திரட்டி சிவலிங்கமாகச்செய்து சிவனையாவாகித்து சிவாகமப்பிரகாரம் பூசைசெய்து அன்புடனே அர்ச்சனைசெய்வாயென்று சொன்னார் மகாவிஷ்ணு—எ-று. (கங)

அர்ச்சனைத்தொழில்முற்றிநற்செப முற்றி மெய்த்தவமுற்றபேர்
இற்புனற்பிரளயத்தையத்திசையெட்டுமுட்டவெழுப்பினர்
கற்புரப்பொடியிட்டவட்ட கனத்தனத்தையழுத்தியா
வற்றடக்கரபொற்றுடிக்குறி லைத்துரத் தொடணைத்துளாள்.

(இ-ள்.) அப்படிவிஷ்ணு சொல்லியபிரகாரமே சிவனையாவாகித்துப் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்து முடித்து சிவயோக நியானத்திலிருந்தாள். அப்போது உமையவள் மனோபக்தியைச் சோதிக்கவேண்டிப் பரமசிவன் அந்தக் கம்பையாற்றிற் பெருவெள்ளமாகச் சலம் வரும்படிக்கு கட்டளையிட்டார் அதுகண்டு உமையவள் தனதுதனபாரங்கள் சிவலிங்கத்தின் திருமேனியிலழுந்த அழுத்தி ஆசையுடனே கைவளையலழுந்திய குறியுண்டாகும்படி கைகளால் சிவலிங்கத்தைத் தழுவிக்கட்டி அணைத்துக்கொண்டாள்.—எ-று. (கச)

ஆதிபீடமதானதேவியை யாறுபாசமபாதியை
நாதநீதவிநோதவாணியை நாகரீகசுபாஷியை
வேதவாகமபூரணிமேவிய வீரமோதவ நாரியை
மாதயாவுடனேதழீஇ வரமேதுசேவெனவோதினர்.

(இ-ள்.) அப்படி ஒருமனதாய்ச் சிவலிங்கத்தை விடாமல் உமையவள் அணைத்துக்கொண்டவுடனே சிவனுக்குக் கருணையுண்டாகித் தமக்கு ஆதிபீடமான தேவியை, ஆறுசமயங்களுக்கு முதல்வியாயிருக்கின்ற நாததேவப் பிரியசுசனியானவளை வைராக்கியமாகத் தவஞ்செய்த இமய பர்வத புத்ரியாகிய பார்வதாதேவியம்மையை, பரமசிவன் தழுவி உனக்கென்ன வரம் வேண்டுமோ, அதைக்கேளென்று சொன்னார்—எ-று. (௧௪)

கண்டுகண் டிருகண் களிப்பொடு கருணையின் பிரணவத்திலைப்
புண்டரீகபதத்தஞானியர் போதமாதவர் திரிபுரம்
கொண்டபுன்னகை யாளனாளொடும் சூலமுங் கொடுங்கழுமேல்
மண்டுபாச மெடுத்தவா திரை வாரியாலமுண் டார்த்தனாய்.

(இ-ள்.) அப்படி காட்சிகொடுத்தருளிய சுவாமியை கிருபாநிதியாகி உமையவள் தனது கண்கள் களிகூரக்கண்டு சிவநாம தோத்திரஞ் சொல்லத் தொடங்கினாள். பிரணவாகார பீடத்தில் வசிக்கின்ற சாரூம்பியத்தை யுடையவனே, ஞானிகளுக்குப் போதமாகிய வறிவுருவானவனே, மாதவத்தையுடைய திரிபுராதிகளைப் புன்னகைப்பினாலெரித்த மகாதேவனே, கையில் வாளும் கேடகமுஞ் சூலமும் பாசமுந் தரித்தருளிய சதுர்ப்புயங்களை யுடையவனே, கடலினின்றெழுந்த ஆலகால விஷத்தை அமுதாக உண்டவனே, தேவர்களைக்காத்த பரமேசுவனே, யென்று தோத்திரஞ் செய்தாள் உமையவள்,—எ-று. (௧௫)

தேவர்சூழ்மகதேவமுக்கண் திகழ்நாயக கண்டபே
ராவலிற்பணியவரவர்க்கினிய தாணுருபமிகுனவிற்
காவலத்தசடாதரா வுலகுக்கருதாநித்திய பவமிலா
யாவருக்குமுயிராகிலுக்குயோரிறைவகற்சிவசாந்தனே.

(இ-ள்.) தேவர் சூழ்ந்து துதிசெய்கின்ற மகாதேவனே, காளகண்ட திரிநேத்திரதாரியாய் விளங்கிய லோகநாயகனே, அன்புடைய பக்த சனங்களில் அவரவர்க்கிஷ்டமான வரங்களுங் காட்சியுங் கொடுக்கின்ற கருணாநிதியே, பினாகத்தைப் பிடித்த கையினையுடையவனே, சிவந்தசடையினையுடையவனே, நித்தியமான பரப்பிரமவஸ்துவே, பிறப்பிறப்பில்லாத நித்தியனே, எவ்வுயிர்க்கும் எப்பொருட்கும் இறையவனாயிருக்கின்ற சிவனே சாந்தகுணத்தையுடையவனே, என்று பின்னுஞ் சொல்வாள்.—எ-று. (௧௬)

உந்திவேணிப வொப்பிலாதவ வுலகிலுக்கிருதச்சிதா
னந்தவந்ததுராந்தராதத ஆக்கமற்றமெய்ஞ்ஞானவா
னந்தசெந்தி சொரூபநித்திய பரமபூரணசோமநேர
சந்தவாகிய புனிதனுக்குமோர் சாதனமினிப்பாடலாய்.

(இ-ள்.) கதிருடைய சடையையுடையவனே, தனக்கு ஒப்புவமையில்லாதவனே உலகத்துக்கு பரமசித்தானந்தப்பொருளே அழிவில்லாத [illegible] நித்தியமானவனே, வழுத்துக்கொண்டிருக்கிறவனே ஞானநிறைவானவனே அக்கினியாயெழுந்தருளிய சோதிசொரூபனே, அக்கினியில்லாத ஆத்மபூரணபரம்பிரம்மமே, அந்தமில்லாததையுடைய சர்வபூதாத்மனே என [illegible]



யானவனே அளவில்லாத சோதி சொரூபமெடுத்து விளையாடப்பட்ட, சிவனே என்று துதிசெய்தாள் உமையவள்.—எ-று. (௧௭)

தேவதேவ தேவேசமுப்புர தகனதேவர்கள் செல்வவென்
னாவலானின தகநினைத்துன தருளினிற்றவ மெய்திநின்
றேவராவுன தைந்தெழுத்தினை யுரைகொண்ணாற்றுதென் றட்டுரைத்
தேவலாகி யிப்பவேதவ மென்னையாண்டருள் செய்தனை.

(இ-ள்.) தேவாதிதேவனே, அரிபிரம்மாதிதேவர்களுக்கும் அதிதமானவனே திரிபுரதகனனே, தேவர்பாக்கியமான பொருளே, என்று என்னுடைய ஆசையினாலே எம்பெருமானிஷ்டங்கைகூட வேண்டுமென்று உம்முடைய கிருபையினாலே தவஞ்செய்து ஓயாமல் உம்முடைய சூட்சுமபஞ்சாட்சரத்தை நாற்றெட்டு செபஞ்செய்து பூசித்து அர்ச்சனைசெய்யவே அடியாள் தவநிலைமுன்பாகவந்து காட்சிகொடுத்தருளினீரென்று சொல்லிப் பின்னைபுந்துதிசெய்கின்றாள்.—எ-று. (௧௮)

வேறு.

பரமகல்யாணபோற்றி பணப்பணிப் பணியாய்போற்றி
யரவணுந்தாலமான வகளங்கபோற்றிதேவர்
புரவுலகனைத்து மேவும் புராதனபோற்றிபொற்றுப்
புமயொடிப்புனிதபோற்றி பூதநாயகனேபோற்றி.

(இ-ள்.) பிரமசைதன்னிய சவுந்தரியனே போற்றி, நாகாபரணனே போற்றி சிவசிவாபோற்றி, நிஷ்களானந்தமயமே போற்றி, அண்டசராசரங்களெல்லாநிறைந்த புராதனப்பொருளே போற்றி, இடபக்கொடியைப்படைத்த புனிதனே போற்றி சர்வ பூதாத்தும நாயகனே போற்றி.—எ-று. (௧௯)

சுத்தனேபோற்றியிறில் சோதியேபோற்றியார்க்குங்
கர்த்தனேபோற்றிதென்கீழ் கடவுளேனத்திரனேபோற்றி
யுத்தமனேற்றபோற்றி யுருத்திரசம்புபோற்றி
வித்தகஞானபோற்றி விதரணவிமலபோற்றி.

(இ-ள்.) பரிசுத்தனே போற்றி, அந்தமில்லாத சோதியே போற்றி, யாவர்க்குங் கர்த்தாவாகிய சிவனே போற்றி, அக்கினிநேத்திரனே போற்றி, உத்தமமான ஞானவித்தகனே போற்றி, ருத்திர சம்புவே போற்றி, ஞானவித்தவெண்ணீறணிந்த மேனியனே போற்றி, விதரண விவேகமுள்ள விமலனே போற்றிபோற்றி -எ-று. (௨௦)

[illegible]மறைதற்கெட்டா வேதியபோற்றியின்று
[illegible]னக்குமெல்லாம் நாயகபோற்றிஞான
போதமாய்நின்ற புலமையேபோற்றியெந்தன்
பாதகம்தீர்ப்பாய்போற்றி பசுபதிபோற்றிபோற்றி.

(இ-ள்.) வேதங்களாலறியப்படாத வேதியனே போற்றி, வித்தாரங்களுக்கு [illegible] நாயகனே போற்றி, ஞானபோதமாய் நின்ற அறிவுக்கறிவே போற்றி, என்று துதிசெய்தவர்களுடைய பந்தபாசங்களை அறுப்பவனே போற்றி ஆத்துமாக்களாகிய பசுக்களுக்கெல்லாம் பதியானவனே போற்றிபோற்றி.—எ-று.

எனத்தவம்புரிந்துபோற்று மிமாசலமடந்தைமுன்னர்
வனத்தாமழுவுமானும் வரதமுமபயக்கையுங்
கனத்துடன்றேன்றிக்கேட்பக் கனிந்துநின்பாகநீங்கா
துனைத்தினந்தழுவும்பாங்கெற் குதவெனச்சோதிகூறும்.

(இ-ள்.) இப்படி தோத்திரங்கள்செய்து அரியதவம்புரிந்து போற்றிசெய்த பார்வதாதேவிக்கு முன்பாக அழகியமான் மழுதரித்த அபயஸ்தங்களுடனே பெருமைபெறத்தோன்றி நின்று காட்சிகொடுத்து உனக்குவேண்டியவரமென்னவென்று சுவாமிகேட்க, அம்மன் சுவாமி உம்முடைய இடப்பாகம்பொருந்தி பிரியாமல் தழுவியிருக்கும்படி வரங்கொடுத்தருளவேண்டுமென்று சொல்ல சுவாமி சொல்லுகிறார். (உக)

அனலெனுங்கிரியாய்ப்பின்ன ரணிமணியசலந்தானாய்
கனகநல்வரையாய்க்கலியின் கல்லதாயுகங்களான்கும்
வனமுறைபிறழாதிற்கும் வரையிற்கௌதமனாசிரமம்
தனதிடத்திருமினென்னச் சங்கரனுரைத்துப்பின்னும்.

(இ-ள்.) வாராயுமையே, முன்னே அக்கினிமலையாய்ப்பின்பு இரத்தினமலையாய் அப்புறம் சொர்ணமலையாய் இப்போது கல்லுமலையாய் நாலுயுகங்களிலும் வர்ணபேத முறைமைவழுவாமல் உயர்ந்துநிற்கின்ற திருவண்ணாமலையிடத்திற் கௌதமன் என்னைத் தன்னுள்ளத்தில்வைத்து தவஞ்செய்யுஞ்சாரலாகிய ஆசிரமத்திலே நீபோய் சேரவேண்டுமென்று சொல்லிப்பின்னுஞ்சொல்வார்சுவாமி.-எ-று.

திருவருணையில்நீபோதி சிறந்தகௌதமன்றன்வாக்கால்
மருவருணையினுன்செய்த மான்மியமுழுதுங்கேட்டுப்
பெரிதுநம்வடிவதாய பெருங்கிரிவலமாய் வந்து
விரவுகார்த்திகையிற்றிங்கள் விபன்றவம்புரிதிபின்னே.

(இ-ள்) திருவண்ணாமலைச்சாரலில் நீபோய்ச்சேர்ந்து சிறப்பையுடைய கௌதமன் வாக்காலே அந்தத்தலத்தில் நாம் செய்த காரண மான்மியமெல்லாங்கேட்டு மிகவும்நம்முடைய வடிவமாயிருக்கின்ற திருவருணைக்கிரியைச்சுற்றிப்பிரதட்சணம் வந்து கார்த்திகை நட்சத்திரம் விசேடமாய்ப்பொருந்திய கார்த்திகைமாதம் முழுதுந்தவஞ்செய்வாய் பெண்ணேயென்று பின்னையுஞ்சொல்லுகிறார் சுவாமி.-எ-று.

காஞ்சிபிற்றவத்தாலின்றெங் கண்புதைகுறைகடீர்ந்தாய்
தோஞ்சிறிதிலாதவண்ணந் தொலைத்தகாங் கருணையெய்தி
தேர்ந்திறந்தலநிதனில்வந் திகழ்வனச்செருவின்வைகி
வாழ்ந்தபொர்விரதமப்பால் வந்தானன்றருவன்பாகம்.

(இ-ள்.) இந்தக் காஞ்சிபுரத்திற்கம்பையாற்றங்கரையிற் செய்ததவத்தினாலே எம்முடைய திருக்கண்களைப் புதைத்தபாவம் உனக்கு விமோசனமாச்சுது, இனி திருவருணாசலத்திலே உமையே நீபோய்ச்சேர்ந்து தேன்கமழாநின்ற வில்வவனச்சாரலில்தங்கி வாசஞ்செய்து கௌதமன் சொன்னபிரகாரம் விரதங்கள்தோற்று தவஞ்செய்வாயானால் அவ்விடம்வந்து காட்சிகொடுத்து நம்முடைய வாமபாகங் கொடுக்கிறோம்.—எ-று. (உ…)



என்றினிதுரைப்பநீங்கா திருநிழற்காஞ்சியாங்க
ணின்றனகண்டுகாஞ்சி நகரெனநிலைப்போக்கி
வன்றிடுகம்பைபாங்கர் மாநிழல்வைகிப்பூசித்
தன்றுளசிவலிங்கம்மே காம்பரமானதம்மா.

(இ-ள்.) என்றிப்படி பரமேசுவரன் சொல்லி விடைகொடுத்தருள, உமையவள் மகிழ்ச்சியோங்கி யெப்போதும் விலகாமற் கவிந்த நிழலையுடைய காஞ்சிமாம் அங்ஙனம் நின்றதைக்கண்டு அந்தத்தலத்துக்கு காஞ்சிபுரமென்னும் பெயர்விளங்க நிலையான பெயரிட்டமைத்துக்கம்பையாற்றங்கரையில் மாமரத்தினிழலில் வைத்துப்பூசித்த சிவலிங்கத்தை ஏகாம்பரேசுவரனென்று பெயர்வழங்குகின்றது.—எ-று.

அம்மையுமாதிபீட மமைத்தறுசமயத்தாரு
மிம்மையினடாத்தவன்றே யாவர்க்கும்பொதுவாய்நின்று
செம்மைகொள்சத்தியென்பாள் சித்தியிற்சேர்வதாகிப்
பொம்மெனத்திருமால் சேர்பும் புண்ணியங்கோடிசெய்து.

(இ-ள்.) பார்வதியம்மன் ஒரு காமகோடி பீடமுண்டாக்கிவைத்து சட்சமயத்தாரு மிகப்பிரசாதம் பெறப் பரிபாலனஞ் செய்து நடத்திவரத்தக்கதாக யாவருக்கும் பொதுவாய் நிலைக்கச்செய்து அழகியபராசக்தி வீட்டின்பம் பெறுவதாகச்செய்து விஷ்ணுசேர்வைத்தலமுஞ் செய்து முப்பத்திரண்டறமும் வளர்த்து அளவில்லாத சிவபுண்ணியங்களுஞ் செய்தமைத்தாள் உமையவள்.—எ-று. (உஅ)

அன்றானருளிச்செய்த தணங்குளத்தடைந்தமேலோர்
தூன்றிடவருணைவெற்பிற் றேன்றினடோன்றலோடுங்
கன்றியவினைகடீர்க்குங் கௌதமனிருக்கைசெல்ல
ஒன்றினுக்கொன்றுகோடி யுயர்சிறப்பெய்திற்றுமால்.

(இ-ள்.) அதன்பின்பு பரமேசுவரன் அருளிச்செய்த பிரகாரம் பெரியோர்கள் நிறைந்து வசிக்கப்பட்ட திருவருணாசலத்தைச் சேர்ந்தாள் உமையவள், அப்போது தீராதவினைகளைத் தீர்க்கப்பட்ட கௌதமனாசிரமவனமெல்லாம் ஒன்றுக்கொன்று கோடிபங்கு அதிகமாகச் சிறந்து வளம்பொருந்திச்செழித்தது.—எ-று.

வேறு.

ஈங்கிதென்கொல்லோவென்றன் றிதயங்கள்களிப்பநோக்கி
யோங்குகௌதமனுங்கெய்தா வுமையையவந்திப்பவீசன்
பாங்குநான்பெறவீயென்று பகருமோர்விரதமென்னத்
தாங்கருந்தவனுரைத்தே தாரமாம்விரதஞ்சொன்னான்.

(இ-ள்.) அப்படிவளமுண்டாய்ச் செழித்ததுகண்டு இதுவென்ன அதிசயமென்று மனங்களிகூறப் பார்க்கின்றபோது, உம்மன் அங்கெழுந்தருளினளென்று தெரிந்து வந்து அம்மனை கௌதமரெதிர்கொண்டு உபசரித்தபோது அம்மன் வாராய்கௌதம முனிவனே, பரமேசுவருடைய இடப்பாகம் யான் பெறும்படி …ான்று சொல்லென்று கேட்க தவசிரேஷ்டராகிய கௌதமர் கேதாரவிர…துச் சொன்னார். (ங…)

…ால்லியவிரதமுற்றிச் சோணையங்கிரியைச்சுற்றி
நல்லருட்டவங்கூர்ந்தம்மை நயந்தகார்த்திகையினந்தம்

புல்லுரிமருங்காங்கன் புகுந்தனர் புகுந்தவேலை
யல்லியங்குழலைநோக்கி யருட்பெறவுரைப்பதானார்.

(இ-ள்.) கௌதமராலே சொல்லப்பட்ட கேதாரவிரதத்தை அனுஷ்டித்து முடித்து அருணகிரியைப் பிரதட்சணஞ்செய்து அன்புடனே அரியதவஞ் செய்திரபோது, சிரேஷ்டமான கார்த்திகைமாதக் கடைசியில் புலிபுரிதரித்த விடையையுடைய பரமேசுவரன் அங்ஙனம் எழுந்தருளிவந்து மலைமகளாகிய மணமலர் சூடிய கூந்தலையுடைய பார்வதியம்மனைப்பார்த்துத் திருவாய் மலர்ந்து சொல்லுவார்.

இவணுனக்கு சமதுபாக மீய்ந்தனமேகாந்தமான
தவமிகுநாகவெற்போர் தலத்திடையுளதாங்கெய்தி
யவணமெய்த்தகளூர்சேயும் பரிந்தவணுறைந்த தென்மே
னவகிலைவரையின்பாங்காய் நாகவெற்படைதியென்றார்.

(இ-ள்.) வராயுமையே, இந்த அருணகிரி ஸ்தலத்திலே உனக்கு நம்முடைய இடப்பாகம் தரும்படி வரங்கொடுத்தோம். ஆனால் ஏகாந்த தலம் ஒன்று இருக்கின்றது. அது இந்தஅருணாசலத்துக்கு தென்மேற்கில் கொங்குமண்டலத்திலே திருநாககிரியென்று பெயருண்டாயது. அம்மலையில் தகரவாகனனுகிய நமது குமாரன் சுப்பிரமணிய மூர்த்தி அங்கு சதாகாலமும் வசித்திருக்கின்றார். நீயும்இங்கிருக்கின்ற நிலவரை வழியாகப்போய் அந்த நாககிரியைச் சேர்வாயென்று விடை தந்து பின்னையுஞ் சொல்வார் சுவாமி.—எ-று. (௩௨)

நாகவெற்படைந்துதீர்த்தம் நண்புடன்மூழ்கியங்க
ணேகையிற்றேவதீர்த்த மொன்றுளததன்மேற்பொன்னின்
பாகனுகஞ்சமீது வைகினுஞ்சேயின்பாங்கர்
றோகைநீதவங்கள் செய்யிற் றோன்றுதுமதனுமென்றார்.

(இ-ள்.) உமையே நீ அந்த நாககிரித் தலத்தில் சென்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி அன்புடனே அங்ஙன மனோரம்மியமான தேவதீர்த்தமொன் றிருக்கின்றது. அதிலுற்பவித்த பெருமையையுடைய பொற்றாமரைப் பொருட்டின் மீதிருந்த நமதுகுமாரன் பக்கமாகப்பெண்ணே நீதவஞ்செய்வாயானால் அங்கே நாம்வந்து கிருபைசெய்கிறோம் என்று சொன்னார் மகாதேவர்.—எ-று. (௩௩)

என்றரன்பகரவண்ணான் இயலறம்வளர்க்குங்கன்னி
நன்றெனமுனிவர்சூழ நயந்துதென்மேற்பான்மூலை
சென்றிசைநோக்கிநாகர் திகழ்நிலவரையின்பாங்கர்
மன்றலினுவந்துமெல்ல வாளராமலையில்வந்தாள்.

(இ-ள்.) என்றிப்படி பரமசிவன் திருவுளம்பற்ற முப்பத்திரண்டறங்களை வளர்த்த பார்வதாதேவியம்மன் நல்லதென்று முனிவர்கள் சூழ ஆசையுடனே தென்மேற்குத்திசையை நோக்கி அந்தநாகமலை பார்க்கத்திலிருக்கின்ற நிலவரை வழியாகப் புறப்பட்டு மங்களகரமான மகிழ்ச்சியுடனே மெல்ல மெல்ல பிரகாசமான நாககிரியில் வந்து சேர்ந்தாள்.—எ-று. (௩௪)

வந்தகன்றுகந்தசேயா மைந்தனை நினைந்தகாலை
யைந்துகைச்சகழுமொற்றை யணிமணிமருப்புப்போந்



தொந்தியும்பருத்ததாளுஞ் சுடர்விடுஞ்சிறுத்தநோக்கும்
அந்தரப்புயலின்றாரைக் கடமுமுன்னினாங்கவந்தார்.

(இ-ள்.) அப்படிச்சேர்ந்த உமையவள் முதற்பிள்ளையாகிய விநாயகரை நினைத்தவுடனே ஐந்து கைத்தலங்களும் பழகிய ஒற்றைக்கொம்பும் பெருத்த தொந்தியும் பணைத்த கால்களுஞ் சிவந்து பிரகாசிக்கின்ற சிறியகண்களும் மேகசலம் பெய்வது போலும் வழிந்தொழுகிய மதத்தாரையும் விளங்க வந்தார் ஆனைமுகத்து விநாயக மூர்த்தி.—எ-று. (௩௫)

வருகணபதியைநோக்கி மைந்தயான் தீர்த்தமாடற்
கரியாற்றீர்த்தம்பூமி யந்தரசுவர்க்கத்துண்டாம்
பெரியவையாவுமிங்கட் பொருப்பணிமலையிலெய்தக்
கருணையினழைக்கவேண்டுங் கணபதிகுகவென்றாள்.

(இ-ள்.) அப்படி வந்துவணங்கிய கணபதியைப்பார்த்து உமையானவள் நான் தீர்த்தமாடுவதற்கு அரிதான தீர்த்தங்கள் பூமியந்தர சுவர்க்கங்களிலுண்டாகிய புண்ணிய தீர்த்தங்களனைத்தையு மிந்தநாககிரியிலே அன்புடனே வரவழைக்கவேண்டும் பிள்ளாய் சீக்கிரத்திலே யென்றாள் உமையவள். (௩௬)

என்றனளுடனீள்கையா லேனைய தீர்த்தம்வாங்கி
மூன்றிகழமுதக்கங்கை முதலியவனந்ததீர்த்தம்
தென்றிசைக்கயிலையான தெய்வநாகப்பொன்வெற்பி
லொன்றவேவடபாங்கெல்லா முதித்திட விதித்தார்மூத்தார்.

(இ-ள்.) உமையவளிப்படிச்சொன்னவளவில் விநாயகமூர்த்தி நெடிய துதிக்கையினாலே திரிலோகங்களிலுண்டாகியஅமிர்தகங்கைமுதலான தீர்த்தங்களனைத்தையுந்தட்சண கயிலையாகிய திவ்விய நாககிரியின் வடப்புறத்து மலையெங்கும் தீர்த்தமயமாகத் தோன்றிப் பிரகாசிக்கச் செய்தார் விநாயகமூர்த்தி.—எ-று. (௩௭)

என்னையீன்றினியகொங்கை யன்னைமுதலியகந்தநேய
மன்னுமுன்தீர்த்தமீபாலு முதித்தனவடபால்வெற்பில்
நின்னடிபணிந்தாலந்த தீர்ப்படிவைப்போன்றென்
றன்னதியாடல்வேண்டு மம்மவென்றடியில் வீழ்ந்தார்.

(இ-ள்.) என்னைப்பெற்றபிராட்டியே முலைப்பாலமுதமீய்ந்து வளர்த்தவளே நீ நினைக்குமுன்னே சகல தீர்த்தங்களும் வடபுறத்து மலையெல்லாம் பிரவேசித்து விளங்குகின்றது. உன்னுடைய பாதங்கள் தீர்த்தங்களில் படியாவிடின் தீர்த்தங்களினுடைய பாகங்களெல்லாம் நீரும். நீ சென்று அந்தத் தீர்த்தங்களில் மூழ்க வேண்டும் அம்மா வென்று உமையவள் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தார் விநாயகமூர்த்தி.—எ-று. (௩௮)

ஐங்கரன்றன்னையாக வணைத்தருள்புரிந்துவாழ்த்திக்
கங்கையுண்முதலாந்தெய்வக் கணபதிதீர்த்தமாடி
மங்கலமகிழ்ந்துயாவு மறைமுறைமுடித்தவேதத்
திறைவனைக்கூற வெய்தினள் மலையினுச்சி.

(இ-ள்.) இப்படி வணங்கிய ஐந்து கரங்களையுடைய விநாயக மூர்த்தியை இருகைகளினாலுமணைத்து செயதுவாழ்த்தி கங்கைமுதலிய தன்மையான கணபதி

தீர்த்தத்தில் மூழ்கி ஆசாரமாக நித்திய கன்மாதிகள் யாவுஞ்சுருதி முறையாகச் செய்து முடித்து பிரமதேவனாசீர்வாதஞ் சொல்ல உச்சிமலையில் வந்துசேர்ந்தாள் உமையவள். (௩௯)

நாகமாமலையினுச்சி நண்ணிய குகனைக்கண்டு
மாகருணையாற்கட்டி வனமுலையமுதமூட்டி
யாகமானந்தக்கண்ணீராற்கழீஇக்கருத்தினேசித்
தேகமாமிறைவர்ச்சேர விருந்தவமுயலலுற்றாள்.

(இ-ள்.) அப்படி நாகமலையுச்சியில் வந்து சேர்ந்த உமையவள் அங்கு வசிக்கின்ற குமாரரைக் கண்டுமிகுந்த கருணையாகக் கட்டியணைத்து அழகியமுலையமுதமூட்டி தேகமுழுதும் பிரம்மானந்தக்கண்ணீரால் அபிஷேகமாட்டிமிகுந்த அன்புடனே வாழ்த்தி சிவனுடைய அர்த்தபாகம் பெறவேண்டி தேவதீர்த்தத்திற்கமலகேசரத்தில் அரிய தவஞ்செய்ய நின்றாள் உமையவள்.—எ-று. (௪௰)

உமைதவச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம்.—௧௬௧.

# அர்த்தபாகச் சருக்கம்.

கயிலையினின்றுகேதாரத்தினிற்கலந்துதேவ
ரியன்மயிற்றிருவினோடு மெண்ணிலாச்சத்திசூழ
வயனிறைகாஞ்சியண்ணாமலையினில் வைகிநாகப்
புயலுறவழ்பொருப்பினின்ற பொன்னிருசரணம்போற்றி.

(இ-ள்.) கைலாசகிரியினின்ற இமயகேதாரத்திற்சேர்ந்து முனிவர்சூழமயில்போலுஞ்சாயலையுடைய லட்சுமிதேவி முதலாகிய அனேகஞ் சத்திகள் சூழ்ந்து சேவித்துவர, வயல்வளப்பத்தையுடைய காஞ்சிபுரத்திலுந் திருவண்ணாமலையிடத்திலும் வந்து வசித்துத் தவஞ்செய்து மேகமொய்த்தவழகிய நாககிரியுச்சியிற்றேவதீர்த்தத்தின் பொற்றாமரைப் பூம்பொகுட்டில்நின்று மகாதவஞ்செய்கின்ற பார்வதிதேவி இரண்டு சீர்பாதங்களை நமஸ்கரிப்போம்.—எ-று. (௧)

வேறு.

நாகமாமலைநண்ணியதீர்த்தமே, லானதென்னபின்னர்விரித்தோதுவே
மேகமாயதுமைபிறைஞ்சலு, மோகையிற்பணிந்தாருமுன்னோதுவாம்

(இ-ள்.) இப்படிச்சொன்ன சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்களைப்பார்த்துச்சொல்லுகிறார் முனிவர்களே கேண்மின்கள். அந்த நாககிரித்தலத்தின் தீர்த்தமகிமையெல்லாம் பின்னாலே விளக்கவிரித்துச்சொல்லுகிறோம். இப்போது அங்ஙனம் உமையவள் தவஞ்செய்து சிவனிடப்பாகம் பெற்றதையும் மகிழ்ச்சியுடனேவந்து பூசித்தவர்களுடைய வரலாற்றையுஞ்சொல்லத்தொடங்கினோம்.-எ-று.

மாமேவுழுந்துவயங்கியகீட்டிசை, மேவுநன்குமரீசரன்மேற்புறம்
தேவதீர்த்தச் செழுந்தடமீதுபொற், பூவினற்கமலப்பொகுட்டேறினாள்.



(இ-ள்.) நாககிரியுச்சியி லோங்கிவளர்ந்த மாமரத்தின் கிழக்கு, குமரீசருக்கு [illegible] இதன் மத்தியில் தேவதீர்த்தத்தில் வளமையுடைய பொற்றாமரைப் பொ [illegible] பேரி லேறிநின்று தவஞ்செய்யத்தொடங்கினாளுமையவள் —எ-று. (௩)

அன்னபோதரியாரணனெம்முமை, பென்னமுன்னின்றிணையடிபேத்தினார்
முன்னனற்கனலிற்றவமுற்றினாள், பின்னதிக்குட்பெருந்தவம்பேணினாள்.

(இ-ள்) அக்காலத்தில் அரிபிரமர்களிருவரும் அம்மன் முன்பாக வந்துதோத்திரஞ் செய்த முன் அக்கினிமலையிடத்து நின்று அரியதவஞ் செய்தாள், இப்போது தேவதீர்த்தத்தில் நின்று பெரியதவஞ் செய்கின்றாள்—எ-று. (௪)

பலைமடந்தைதவருந்துந்தவத்தொழிற், கலைமடந்தைசிறப்புறையோடுநல்
லலைமடந்தையடக்கியசென்னியா, னிலமடந்தைவரநினைவுற்றனன்.

(இ-ள்.) இமவான்மகளாகிய பார்வதியம்மன் வருந்திசெய்யுந்தவமுயற்சி யறிந்து சரஸ்வதியைப்போல வெண்மைநிறமுள்ள மூன்றாம்பிறையையும் கங்கையையுந்தரித்த சிரசையுடைய பரமசிவனிந்தப் பூலோகத்திலேவருவதற்கு நினைவு செய்தார்.—எ-று. (௫)

உற்றுநன்றெம்முமைதவமுற்றிய, பெற்றியென்றருபெட்பினிலெய்தினார்
வெற்றிவேழமுகத்தனைவேலனை, நற்றிநண்ணிமுன்னங்கையைநண்ணினார்.

(இ-ள்.) இப்படிஉமாதேவி அரியதவஞ்செய்கின்றபோது பரமசிவம் அந்தத்தவத்துக்கு மெச்சினவராய் ஆசையோடு திருநாககிரியில் வந்தெழுந்தருளி வெற்றியுடைய ஆனைமுகத்து விநாயகனையும், வேலாயுதக்கடவுளையு முன்பு கண்டு பிரியங்கூர்ந்து உமையவளையும் வந்து கண்டருளினார் பரமேசுவரன்.—எ-று. (௬)

நன்றுநன்றுநயந்தனமுன்றவ, மன்றுகச்சியிலங்கியுணிற்றனை
யின்றுநாகமலைமுடிநீரிடை, நின்றுநின்றுநெடுந்தவமெய்தினை.

(இ-ள்.) வாராயுமையே நீ செய்யும் அரியதவத்தைக்கு நாம்மிகவுமெச்சினோம் முன் காஞ்சிபுரத்திலும் திருவருணையிலும் தவமியற்றினையிப்போது நாககிரி யுச்சியில் நீரில் நின்று நெடுங்காலமாய்த் தவஞ்செய்கிறாய் என்று பின்னுஞ்சொல்லுவார்.—எ-று. (௭)

உன்கருத்துளுவக்கதுதவுவோம், மின்கருத்துறவேண்டுதியென்றபி
னன்கருத்துளநாதனைக்கைகளால், மன்கருத்துள்வணங்கித்தழுவினாள்.

(இ-ள்) வாராய் பார்வதியே, உன்மனதில் அபேட்சித்த வரத்தைத்தருகிறோம். நீ கேட்பாயென்று சுவாமி சொன்னவுடனே. அம்மன் அழகியகருத்தைத் திருத்தமாகச் சுவாமியைத்தனது கைகளால் தழுவி இருதயத்துள்ளே வணங்கித் துதிக்கச்சொல்கிறாள்.—எ-று. (௮)

[illegible]ட்டவிளையின்பயன்கிளைந், தூறுபட்டனந்தக்கறுப்பினால்
[illegible]டகலாவகைநின்றெந், கூறுபட்டணையும்வரங்கேட்டனள்.

(இ-ள்.) சுவாமீ தேரீர்வேறே அடியாள்வேறே அப்படி யிருந்தபடியினாலே வினைப்பயனுண்டாய்த் தங்களுடைய வேள்வியில் அவனிந்தித்த வசத்தினாலே

யிகனைஞ் சிரமப்பட்டேனினி யப்படிவாராமல் நாமிருவருங்கூடிப் பிரிவில்லாம லிருக்கும்படியாகத் தேவரீருடைய அர்த்தபாகம் அநுக்கிரகஞ்செய்தருளவேண்டு மென்று சொல்லி மின்னுஞ் சொல்லுவாள் —எ-று. (௯)

உன்னுடம்புடனொன்றுவதன்றியா - நின்னைப்போர்கணநீங்கப்படாதெனக்
கன்னலின்மொழிக்காரணியாரணி, மன்னருந்தவமங்கைவிளம்பினள்.

(இ-ள்.) சுவாமீ உம்முடைய தேகத்துடனே கூடிக்கலந்திருப்பதே யல்லாமல் தேவரீரை ஒரு நொடிப்பொழுதாகிலும் இனிப்பிரிந்திருக்கக்கூடாதென்று கன்னற்கட்டிபோலும் வசனத்தையுடையகாரணம்பிகை வேதாம்பாளானவள் இனிப் பதற்கு மரிதாகிய பர்வதராஜதேவி சொல்லிப்பின்னையு மொருதவஞ் செய்தாள். (௰)

எங்கைநாதனியப்பிபயின்னளால், மூர்த்தநாம்புனர்சோமமதென்கொலென்
றங்கமங்கைநினைவிற்பயந்தருட், சிங்கதயோனந்தந்துதிசெய்யுமால்

(இ-ள்.) நம்முடைய சுவாமியாகிய பரமேசுவரன் கிருபைசெய்து சொன்னதின்படியல்லாமல் [illegible] நாமாக்கலந்துக்கொள்ளுகிறது சரியல்லவென்று நினைத்து உமையவள் பய[illegible] பயபக்தியுடனே அளவில்லாத தோத்திரஞ் செய்யத்தொடங்கினள்.—எ-று. (௧௧)

சங்கராமகாதேவசதா[illegible] திங்கள்வேணியதேவதேவாதிபா
செங்கண்மூன்றுளசிவமூர்த்தியே, புங்கவாசம்பூரணத்திரசேபோற்றியே.

(இ-ள்) சிவசங்கரா, மகாதேவ சதாசிவப்பிரமமே, சந்திரசடாதரா, தேவாதி தேவர்கட்கெல்லா முதன்மையானவனே, சிவந்த திரிநேத்திரங்களையுடைய சிவனே, மகேஸ்வரனே, யாவருக்கும்மேலானபுங்கவனே, எனது அன்புக்கு இரங்கி வந்த திருமூர்த்தியே போற்றிபோற்றி —எ-று. (௧௨)

சூலபாணியதால்விடைவாகன, காலகாலனைக்காமனைக்காய்ந்தவா
யாலகாலமமுதெனக்கொண்டவா, நீலகண்டநிராமயபோற்றியே.

(இ-ள்.) சூலாயுத அஸ்தனே, ஆகிகாலத்தொடங்கி ரிஷபவாகனரூடனே, இயமனுக்கியமனானவனே, மன்மதனையெரித்தவனே, ஆலகாலவிஷத்தை யமுதாகவுண்டவனே, வேதவேதாந்தப்பொருளே, நீலகண்டனே, நிராமயசொரூபனே போற்றி போற்றி.—எ-று. (௧௩)

ஈசவெம்பழிவேர்ந்தியசெங்கைய, பாசபாசமகற்றியவைம்முக
விசவேணிவிமலவெண்ணீற்றின, தேசரூபநிரந்தரபோற்றியே.

(இ-ள்.) எமது கர்த்தனே, வெவ்விய மழுவேந்திய செங்காத்தனே, ஆசாபாசங்களைத் தவிர்த்தருளிய ஐந்துமுகத்தையுடையனே, திக்கெல்லாம் பரந்து விசப்பட்ட சடாதரனே, விமலனே, திருவெண்ணீறு பூத்த திருமேனியனே, அன்பருக்கேற்ற திருவுருவமைந்து நிறைந்திருப்பவனே போற்றி போற்றி.—எ-று.

அச்சுதற்குமயனுக்குநாயக, முச்சுடர்க்கண்ணுமுவாமுதனின
மிக்கைசோர்தலிப்பிரசபாலனே, நச்சரவணிநாயகபோற்றியே.

(இ-ள்.) விஷ்ணுவுக்கும் பிரமாவுக்கு முதன்மையா யிருப்பவனே, சோம சூரியாக்கினியென்னுஞ் சூன்று கண்களை யுடையவனே, கெடாத மூதக்கனுரிய



[illegible]னே, பிரமகபாலத்தில் பலியேற்பவனே, விஷம்பொருந்திய கொடிய நாக பரணம்பூண்ட சர்வலோக நாயகனே போற்றிபோற்றி.—எ-று. (௧௫)

பாண்டரங்கபதபங்கயத்தின, வாண்டவாவணுவுக்கணுவானவா
நீண்டவண்டநிலையினுகனிற், றாண்டுவீரசுகோதயபோற்றியே.

(இ-ள்.) பாண்டரங்கனே, நிர்த்தனஞ் செய்யப்பட்ட பாதாம் புயத்தனே, அன்பர்களை யாளடிமைகொண்டு ஆண்டவனே, அணுவுக்கோரணுவானவனே, நெடிய அண்டபுவனங்க ளெல்லாம் நிறைந்து நின்றவனே, பினாக வில்லினைத்து அரியை அம்பாகத் தொடுத்தெய்யும் வீராதிவீரனே, வெற்றிமாலையணிந்த அழகிய புயத்தனே, போற்றிபோற்றி.—எ-று.

ஐந்துபூதமொன்றானவபோற்றியே, யைந்துதேவருமானவபோற்றியே
சிந்துகொன்றைத்திடபுயபோற்றியென், சிந்தைபுக்குச்சிவசிவபோற்றியே.

(இ-ள்) பஞ்சபூதங்களு மொன்றாய்க் கலந்திருப்பவனே போற்றி, பஞ்சகர்த்தாக்களுமானவனே போற்றி, தேனொழுகுகின்ற கொன்றைமாலையைத் தரித்த புயனே போற்றி, என்னுள்ளத்திற் புகுந்தருளிய சிவசிவா சுந்தரனே திரிபுராந்தகனே போற்றி, என்று தோத்திரஞ்செய்து வணங்கினள் உமையவள்.—எ-று.

போற்றி போற்றியென்று தோத்திரஞ்செய்து வணங்கினள் உமையவள்.

எனவணங்கியிமாசலக்கன்னிகை, தனதுபத்திதலத்திற்றுதித்தபின்
கனிகமேருவளைத்தகைக்காரணர், மனமகிழ்ந்துதம்வாமம்வழங்கினார்.

(இ-ள்) என்றிப்படி நமஸ்கரித்துத் துதிசெய்த மலைகளாகிய மகாதேவியார் மனோபக்தியுடனே தவஞ்செய்து வணங்கின பார்வதியம்மன் தன்னுடைய பரமசிவன், திருவுடனே பொன்மலையை வில்லாகவளைத்த காரணகர்த்தாவான அகமகிழ்ச்சியுடனே உமையவளுக்குத் தம்முடைய இடப்பாகங் கொடுத்தருளினார்.

தேவர்வாழ்த்தினர் தேசஞ்செழித்தன, மூவரேத்தினர் மோனிகள் போற்றினர்
யாவருக்குநல்லின்பமுற்றன, பாகப்பாகப்பரமன்பரிப்படவே.

(இ-ள்) பரமசிவன் பரமேசுவரிக்கு அர்த்தபாகம் கொடுத்தருளின போது தேவர்களெல்லோரும் வாழ்த்தினார்கள், தேசங்களெல்லாம் செழிப்படைந்தன, மூவர்களும் முனிவர்களுந் துதித்தனர், யாவருக்குமின்ப மிகுந்தன—எ-று. (௧௬)

நாகமாமலையுங்கொங்குநாடுமே, யேகமாமலையே [illegible]
போகபூமியும்பொன்னுலகம்வர, தாகமோகத்துடனே தவிக்குமால்.

(இ—ள்) அப்போது அர்த்தநாரியும்: வளப்பம்பொருந்தியகொங்குநாடுமுழுதும் பொன்மலையும் பொன்னுலகமானதென்று போகபூமிகளும் பொன்னுலகமும் பொறாமையுடனே தயங்கும். கமுழுது மங்கனம் வருகிறதற்கு மிகுந்த தாகமோக அபேட்சையுடனே தயங்கும்.

தேவதீர்த்தந்திசழ்முனிதீர்த்தமென், றேவலாவிருநாமங்களெய்தின
[illegible]ரப்புனல்மீதுமையாமணர், காவலாகக்கனிந்துறைகின்றனர்.

[illegible]இ-ள்) தேவதீர்த்தமென்றும் முனிதீர்த்தமென்றும் சுவாமியாலிடப்பட்ட [illegible]டுபெயராய் விளங்கிற்று, மிகுமையிருந்த நாகேரி தீர்த்தத்தின்மீது உமை

யொருபகரான அர்த்தநாரீசுவரர் அடியார்களைக்காக்கும்பொருட்டு மனமகிழ்ச்சியுடனே அந்தத்திருநாகமலையில் எழுந்தருளியிருக்கின்றார்—எ-று. (௨௧)

தேவதீர்த்தச்சிவன் றிருமேனியின், பாவனைப்படிக்குச்சிலசொல்லுவாம்
கோவளர்த்த வெண்பானிறக்கோலமாய் நாவலீரர்த்தநாரியராயினர்.

(இ-ள்) அப்படி அந்த தேவதீர்த்தத்தின்மேல் எழுந்தருளிநின்ற சிவனது திருமேனி யழகியபாவனை சிறிது தெரிந்தமட்டுஞ் சொல்லுகின்றோம். எப்படியெனில் பசுவின் பாலைப்போல் வெண்மைநிறம்பொருந்தி யொருபாதி சிவனும் ஒருபாதி அம்மனுமாக யெழுந்தருளி யிருக்கின்றார். கலைவல்லவரான முனிவர்களே.

அய்ய னின்ற வருளின்வடிவுநன், மெய்யுமைங்கர னும்பன்னிரண்டுகைச்
செய்யவேளும்விச்சித்திர மெய்திவர், தையமின்றிபருகுறைந்தாரரோ.

(இ-ள்) பரமேசுவரனும் பார்வதாதேவியுங்கூடி அர்த்தநாரீசுவர மூர்த்தமாக எழுந்தருளிநின்ற திருவடிவைக்கண்டு பரிசுத்தமாகிய வைந்துகரப் பிள்ளையாரும் பன்னிரண்டு கைகளையுடைய செவ்வேளும், அந்த அதிசயத்தைப்பார்த்துப் புகழ்ந்து சுவாமிபக்கத்திலேதானே கொலுவாய் வீற்றிருந்தார்கள்.—எ-று.

வேறு.

பணிமலையிலெழுந்தருளிப் பரைக்கொருபாகங்கொடுத்தபரிசின்றோற்றம்
வணிமணித்தண்டிச்சியின் மூன்றங்குலிவைவளைத்தமைந்த வனப்புக்கொப்
மணிவரைமாதிமையிடக்குழைத்தணைத்துமகரகுழைவலத்தோளத[பாம்
தணிவிலொளிதயங்கியதண் டரளமணித்தோடிருபால் வாகிற்றன்றே.

(இ-ள்) பரமேசுவரன் திருநாககிரியிலெழுந்தருளி உமையவளுக்கு அர்த்தபாகங்கொடுத்து நின்றகொலம் எப்படியெனில், அழகுபொருந்திய தண்டாயுதத்தினுனி மூன்று விரலால் வளைத்துப் பிடித்திருக்குங் காட்சியைப்போலே அமர்ந்து ஒரு திவ்ய அத்தத்திலேபொருந்த வழகியபார்வதியைத் தமதிடப்பாகத்திற் சேர்த்தணைத்து மகரகுண்டலம் வலதுதோளிடத்திலசையவும், அழகிய பூரணப்பிரகாச மிருந்திலங்கிய குளிர்ந்த முத்துமணிநிறைந்த சுவர்ணத்தோடு இடதுதோளிடத்திற் பிரகாசஞ்செய்யவும்.—எ-று. (௨௪)

வேறு.

ஒருபகற்பொழுதுகஞ்ச முற்பலமலர்ந்ததென்ன
விருவிழிபொன்றோடொன் றுற்றின்பநோக்களிதுகாட்ட
திருவரைக்குனிப்புக்காட்டத் திருமுகநாடிநோக்கில்
வருகதிர்ச்சிவப்புபச்சை வண்ணமென் றிரண்டுந்தோன்றும்.

(இ-ள்) ஒரு பகற்காலத்தில் தாமரையும் நீலோற்பலமும் புட்பித்ததுபோல இரண்டுகண்களும் ஒன்றுக்கொன்று உற்றுநோக்கிய இனிய பார்வையும், பொன்மலை வில்லைப்போல வளைந்திருக்கின்ற இரண்டு புருவங்களும், திருமுக மண்டலம் ஒருபாதி பவளநிறமும், ஒருபாதி பச்சைநிறமுமாக சுடர்விரித்துப் பிரகாசிக்கும்.—எ-று.

இடத்திருக்கவானும்வெண்பட் டேரசவுடையுமற்றைத்
தடத்திருகசேந்திரனை தானவனுரியும்நாகப்



படத்தெழில்வலையம்பூண்ட பாணியும்பணிசனின்ற
சுடர்த்திருமணியுஞ்சூழ்ந்த சூடகக்கரமுந்தோன்ற.

(இ-ள்) இடப்பக்கத்தில் அழகிய துடையில் வெள்ளைப்பட்டாடைக் கோசிகவுடையு மற்றை வலப்பாகத்துத் துடையில் அசுரகஜேந்திரன் தோலுடையும் படம்விரித் தழகிய நாககேயூரந்தரித்த கையும், நாகமணி மாலைசெறிந்த சூடகக் கையுந் தோற்றஞ்செய்க.—எ-று. (௨௬)

குங்குமங்கனகத்தூரி கர்ப்புரங்குழைத்தசாந்தந்
தங்கியபொட்டுமுண்ணீர் தயங்கிமையெழுதுங்கண்ணுஞ்
செங்கனல்பூசிசாத்தித் திருநுதற்பொடிபினைங்க
வங்கியல்விழிபுரிய யழகுறவலங்குலோங்க.

(இ-ள்.) குங்குமங் களபகஸ்தூரி சர்ப்பூர மிவைகலந்த குளிர்ந்த சந்தனத்திலகப்பொட்டும், பொருந்திய நிழலாடுகின்ற மையெழுதிய கண்ணும், சிவந்த நெருப்பில்விளைந்த வெண்மையாகிய விபூதி நெற்றியிற்பிரகாசிக்க சிவந்தகன்ற கண்ணும் பாகத்தாழ்வடமுஞ் சுடர்விரித்துவிளங்க.—எ-று. (௨௭)

பகைமதன்றன்னைக்காய்ந்த பாதிநெற்றியுற்றக்கண்ணுந்
தொகவிதனுடனொன்றாகித் தொல்லுயிர்க்கருள்கூர்நோக்கு
மிகபரமோகதாக விரிம்பைதீர்த்தருளோர்பாங்கு
மகவரனளிக்குங்காலை மண்ணுயிர்க்கருளோர்பாலும்

(இ-ள்.) பகைசெய்த மன்மதனையெரித்த நெற்றிக்கண்ணிலொருபாதி அக்கினிக்கண்ணும், அதனுடனே ஒன்றாய்க்கலந்து சர்வஆத்துமாக்களுக்குங் கருணைகூர்ந்து இரட்சிக்கின்ற பாதிநெற்றியிற் குளிர்ந்தபார்வையும், இகபரங்களினுடைய மோகதாக சோகங்களைத் தீர்த்தருளிய தொருபாகமுஞ் சகல ஆத்துமாக்களுக்கும் புத்திரசந்தானங்கொடுக்கும்போது சகலபிராணிகளுக்கு மருள்செய்யும் ஒருபாகமும்.

பொன்மதுமத்தம்பூப்போற் பொலிதிருச்செவியோர்பாங்குந்
தென்மலர்நெய்தற்பூவிற் றிகழ்திருச்செவியோர்பாலும்
கன்மலையுததியாலங் கவர்ந்தவெண்களபோர்பாலும்
நன்மணந்தருகத்தூரி நறுந்திருக்களபோர்பாலும்

(இ-ள்.) பொன்னூமத்தம் பூப்போலேபொருந்திய திருக்காதொருபுறமுந், தேன்றுளிக்கும் நெய்தற்பூப்போற்பொருந்தி யநச்செவியொருபுறமு, மந்திரகிரியால் சடலைக்கடையும்போதெழுந்த விஷம்பொருந்திய சிறப்புற்ற கழுத்தொருபாதியும், பரிமளிக்கின்ற கஸ்தூரியணிந்த மிருதுவான கழுத்தொருபாதியும்.

கோலமைபெழுதாநோக்கங் கொண்டவக்கண்ணோர்பாலும்
காலஞ்சனந்தீட்டிக் கவின்கொள்மைக்கண்ணோர்பாலும்
சிலதுப்புருவுநார தருமிசைச்செவியோர்பாங்கு
மேலுறவணிகூறும் வியன்கதைக்காதோர்பாங்கும்.

(இ-ள்.) அழகிய மையெழுதாப் பார்வையுற்ற கண்ணொருபாகமுங் கரிவதாய வஞ்சனந்தீட்டி யழகுதருங் கண்ணொருபாகமுந் தவமுடைய தும்புரு

நாரதருடைய கீதவிசையைக் கேட்குஞ் செவியொருபாகமு மேன்மையாக சால்வதிபாடும் உசிதவலங்கார கவிகள் விளங்கும் காதொருபாகமும்.—எ-று.

முப்புரிநூல்விபூதி மொய்த்தமார்பிடமோர்பாங்கும்
செப்பெனக்களபகத்தூ ரியிற்செறிதனமோர்பாங்கும்
அப்பணிபனந்தகேயூ ரந்திகழ்புயமோர்பாங்கும்
பொற்பணிபச்சைமேவியின் பொலிதிருத்தோளோர்பாங்கும்.

(இ-ள்.) முப்பரிநூலாடிய பூணநூலும், விபூதி தூளிதமும் அழகிய மார்பிடமொருபக்கமுஞ், சொர்ணச்சிமிழ்போன்ற களபகஸ்தூரி பரிமளாதி திமிர்ந்து நெருங்கிய தனபார மொருபக்கமும் அழகிய, பொற்பணிபோலும் நாககேயூரந் திகழ்ந்த புயமொருபாங்கும், பச்சை மூங்கிற்போன்ற சொர்ணாபரணங்கள் பொருந்திய திருத்தோ ளொருபாங்கும்.—எ-று. (௬௧)

மாசுடன்மழுவேவோர்பாங்கும் பாசாங்குசமேமோர்பாங்கு
நாகபந்தனமோர்பாங்கு மாலிலைவயிறோர்பாங்குந்
தரைமுதலுலகுக்கெல்லாந் தந்தையாங்குறியோர்பாங்கு
மூரணறவண்டம்யாவு முறைமுறைபெறுமோர்பாங்கும்.

(இ-ள்.) மான்மழுவேந்திய தொருபாகமும், பாசாங்குச மேந்திய தொருபாகமும், நாகபந்தனமொருபாகமும், ஆலிலைபோன்ற திருவயி றொருபாகமும், மண்முதலாகியவுலகங்களுக்கெல்லாந் தகப்பனாகுங் குறியொருபாகமும், தவறுமலண்டபுவனங்களை யெல்லாம் வரிசையாகப் பெற்றுக்கொண்டிருக்குங் குறியொருபாங்காகவும்.—எ-று. (௬௨)

காலனையுதைத்தநாகக் கனைகழற்பதமோர்பாங்குங்
கோலநூபுரத்தின்காந்தி குலவுபொன்னடியோர்பாங்கு
மேலவர்முனிவர்போற்ற விளங்கியொன்றாகிமுன்னீர்
ஞாலமீடேறநின்றார் காகபாபலையினாதர்.

(இ-ள்.) இயமனையுதைத்த நாகவீர வெண்டையமணிந்த திருப்பாத மொருபாகமும், அழகியசிலம்பின் பிரபைவிளக்கிய திருப்பாத மொருபாகமும், தேவர்கள் முனிவர்கள் போற்ற விளங்கிச் சிவனும் உமையும் இப்படி ஒரு திருமேனியாகிக் கடல்சூழ்ந்த பூலோகங்களெல்லாம் ஈடேறும்படியாக எழுந்தருளிநின்றார் நாககிரியில் அர்த்தநாரிசுவரராய்.—எ-று. (௬௩)

மேற்றிசைமுகமதாக வேலவன்கீழ்பால்நோக்கப்
போற்றினர்மறுமையிம்மை புகலிடமாகிவாழ்க
வேற்றலூர்கோதையென்று மோகமென்றும்பேராந்
தேற்றுசெங்கோட்டினின்ற சிவனெழிற்புகலற்பாற்றே.

(இ-ள்.) அர்த்தநாரீஸ்வரர் மேற்குமுகமாக நோக்கியிருக்க, வேலாயுதக்கடவுள் கிழக்குமுகமாக நோக்கியிருக்கக் கண்டு வணங்கித்துதித்தவர்கள் இம்மை மறுமை இரண்டிலும் புகலிடமாகி வாழும்படியாக கிரியைச்சூழ்ந்தவூர் கோதையூரென்றுந் திருமோகமென்றும் பெயராய் வழங்கியிருக்குந், திருச்செங்கோட்டி லெழுந்தருளிய சிவனழகைப் புகலுவதற்கு அருமையாம்.—எ-று. (௬௪)



அன்றுதொட்டெந்தையாருக் கர்த்தநாரீசரென்று
சென்றிறைஞ்சபனுமாலுந் திகழ்திருநாமஞ்சாற்றி
முன்றிகழ்முனிவர்தேவர் முருகர்நந்திகேச
ரென்றிவர்முதலோர்பூசித் தெண்ணியபதம்பெற்றுய்ந்தார்.

(இ-ள்.) அன்றுதொடங்கி எந்தையாகிய சிவபெருமானுக்கு பிரமாவும் விஷ்ணுவும் அர்த்தநாரீசுவரரென்று திருநாமஞ்சூட்டிப்பூசித்தார்கள் பின்பு முனிவர்கள் தேவர்கள் முருகர் நந்திகேசுரர்க ளிவர்கள்முதலாய் அநேகம் பெயர்கள் பூசித்து வேண்டிய வரங்களைப்பெற்றுச் சுகமாய் வாழ்ந்தார்கள்.—எ-று. (௬௫)

இத்திருத்தியானஞ்செய்த விறைவனைச்செழுத்துமோதி
சத்திமந்திரத்தையுன்னுந் தருமசிந்தையரைத்தேவர்க்
குத்தமர்த்தவராக வுனைப்பதேயன்றிமற்றோர்
புத்தியில்நரராவெண்ணிற் புரைநரகிடையில்வீழ்வார்

(இ-ள்.) இந்தப்பிரகாரஞ் சிவரூப தியானஞ்செய்து சிவனுடைய பஞ்சாட்சரங்களை யுச்சரித்து, சத்திமந்திரத்தையும் நினைத்துச்சபஞ்செய்யும் புண்ணியசிந்தையுடைய பெரியோர்களை தேவர்களுக்கு மேலான தேவர்களென்று நினையாமல் ஈனபுத்தியினால் மனிதர்களாக நினைப்பார்களாகில் ரௌரவாதிநரகத்தை யடைவார்கள்.

இப்படியரனைப்போற்று மிவரைமுன்கண்டார்பாவ
மெப்படிக்கொடியதேனு மெரியிடும்பஞ்சுபோலா
மெய்ப்புறுபலன்களியாவும் விளைவுறுமென்றுசூதர்
செப்பினருண்மையுண்மை சிவன்றிருவாணையென்றார்.

(இ-ள்.) இந்தப்படி அர்த்தநாரீஸ்வரரைத் தரிசனஞ் செய்புமவர்களைப் பிரத்தியட்சமாகக் கண்டவர்களுடைய பாவங்கள் எப்படிப்பட்ட கொடியதாகிலும் அக்கினியிலிட்ட பஞ்சுபோலே எரிந்துபோகும், மெய்யாகிய பலன்களெல்லாம் விர்த்திக்கும், இது நிச்சயம் நிச்சயஞ் சிவனாணை சத்தியானை என்றுசொன்னார் சூதமுனிவர்.—எ-று. (௬௭)

இந்தமெய்த்தியானநூலை யினிதுகற்றவர் கற்றோதுஞ்
சிந்தையாய்ச்செப்பக்கேட்போர் செப்பினர்க்கருளுஞ்செல்வர்
சுந்தரமுறையைவைத்துத் தொடையணிந்திடுவோர்க்கெல்லா
மந்தமில்பாவந்தீரு மகத்திதூற்றனவுஞ்சேரும்.

(இ-ள்.) இப்படி உண்மையான சருக்கத்திருமுறையை அன்புடனே கற்றவர்களுங் கற்று ஓதுகின்ற மனதையுடையவர்களுஞ் சொல்லக் கேட்பவர்களுஞ் சொன்னவர்களுக்கு எதாகிலுந்தருகின்றபாக்கியவான்களுஞ்சிறப்புப்பொருந்திய இத்திருமுறையை வைத்துப் புட்பமாலைசாத்தி அர்ச்சித்தபேர்களும் இவர்களுக்கெல்லா மிறுதியில்லாத பாவங்களுந்தீரும் மனத்திலெண்ணிய காரியமுங் கைகூடும், இது சத்தியமென்றார் சூதமுனிவர்.—எ-று. (௬௮)

அர்த்தபாகச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம்.—௬௮.

# அருச்சனைச் சருக்கம்.

—— : ) : ——

பருப்பதத்திருநிலைமையும் பருப்பதத்திலெழுந்தருளிய பாசபாணி
திருப்பதத்தாற் சிலம்புறப்புல்கொள் மயிலுமொருமை முறைத்திறங்களுமீது
திருப்பதத்துறைதிருதர் கூறுதற் கிறுமார்க்கண்டேயர் சரணந் தொழுது நான்
மருப்பதத்துறை மொழியின் வணங்கினரு பாமுனிவர் வழங்கலைச் செய்கிறேம்.

(இ-ள்.) திருப்பருப்பதநிலைமையையும், திருப்பருப்பதத்தி லெழுந்தருளிய பாசபாணியாகிய பரமசிவன் அழகிய பாதத்திற் சிலம்பு சப்திக்கப்பட்ட தெய்வ மயிலாகிய பார்வதியம்மையுடன் கலந்து அமர்ந்தருளிச் சிறந்திருக்கின்ற முறைமையையும், இடைசொல்லாது சத்துருஷார்த்தமாய் நெறிமுறைமை நவரும வெழுந்தருளிய சூதமுனிவரே உம்மாலே தெரிந்துணர்ந்தோம், இனி அர்ச்சனை செய்யும் வழிபாடும், தொன்மையாகிய வேதமந்திர வாக்கியங்களால் வந்தனை செய்து பூசித்தவர்களையும், நாங்களறியத்தக்கதாக சொல்லியருள வேண்டுமென்றார்கள் முனிவர்கள்.—எ-று. (க)

என்றெடுத்துரைத்திடும் படிமையிருநகரத்தேகத்தியினி பகூறி
நின்றுசவுனகர் முதலோர் நின்மலரர்ச்சனைவிதியை நெடிதுகேட்பத்
தன்றுணையாகிய வேதவியாசர்பதந்தியானித்துக் கருபச்செங்கோட்
டொன்றுமுமையாகரையர்ச் சனைபுரிபு முறைமை சில வுரைப்பார் சூதர்.

(இ-ள்) அப்படி சிவார்ச்சனை முறைமையைச் சொல்லு மென்று சூதமுனிவருடைய இரண்டுபாதங்களையும் நமஸ்கரித்து அஞ்சலி யஸ்தர்களாய்த் தோத்திரஞ்செய்து நின்று, சவுனகர்முதலான சகலமுனிவர்களும் வெகு ஆசையுடனே கேட்கத் தனதுளத்திற் கொருதுணையான வேதவியாசர் பாதங்களைத் தியானித்துப் புண்ணியஸ்தலமான திருச்செங்கோட்டில் வசிக்கும் ஸ்ரீ அர்த்தநாரீசுவரை அருச்சனைசெய்யும் விதிமுறையைச் சிலது தெரிந்தமட்டுஞ் சொல்கிறேன் கேளுங்களென்று சொல்லலுற்றார் சூதமுனிவர்.—எ-று. (உ)

கன்னுறங்கும்பின்னருஷற் காலத்திற்கண்ணுதலைக் கருத்துட்கொண்டு
புண்ணியசிந்தையினெழுந்து கும்பித்துக் காலசலைதனிற் புரிவடநோக்கி
யன்னுநகர்தனில் நிருதி மூலைபடச்சென்றாங்கே தரைப்பதேனும்
வின்னுறப்போய் நிலத்திரணமீதுமலசலங்கழித்து விடுமப்போதில்.

(இ-ள்.) இராக்காலம் நித்திரைசெய்தபின்பு விடியற்காலத்தில் சிவனை மனத்திற்கொண்டு பிராணவாயுவைக் கும்பித்துத் தருமசிந்தையுடனே எழுந்திருந்து மேலசலையின்றி வடிக்கு பிரிவு பார்த்து தான்வசிக்கும் வீட்டுக்கு நிருதிதிக்கில் ஐம்பதடிதூரஞ்சென்று நிலத்தில் திரணத்தில் சலமலங்கழித்துவிடுமப்போதில்.

வலச்செவிமுன்னூற்றித்துக் கும்பித்தால்மனத்துறுகுற் சிதங்கண்மாற்றி
மலர்க்கபகற்பொழுதில்வட பாங்கிரவிதென்பாங்கு வதனமாகத்
தலத்தெழுங்காலிடக்கரத்திற் றனதிலிங்கம்பரிசிக்க மறைந்தானங்கள்
நிலத்துபர்ச்சித்தடநதியாலயஞ்சிலைதண்ணிழல்வீதி நீக்கலாகா.

(இ-ள்.) வலது காதின்மேரிலே பூணூலையெடுத்து வைத்துக் கொண்டுகிர் பூமியில் விடுகவும், அப்படி மலங்கழிக்குமிடங்களாவது உயர்ந்தநிலம், தடம் நதி,



ஆலயம், கல், குளிர்ந்தநிழல், வீதி, இவ்விடங்களில் நீக்கலாகாது, மனதில் கர்மியத்தைவிட்டுப் பகற்காலத்தில் வடக்குநோக்கி இராக்காலத்தில் தெற்கு நோக்கியிருந்து கும்பித்து மலவிசர்க்கஞ் செய்து பின்பு எழும்போதில் தனது இடதுகையினாலிலிங்கம் பரிசிப்பாயாக.—எ-று. (ச)

நன்குறிருத்திகை யெடுக்க நதியின்மிருத்திகை யெடுக்கோர்கடத்துட்டோர்
த்தந், தன்கரத்திற்கொணர்ந்துசவுசாசமனத்தொழிற் புரிடபானல் கடமிலா
தான், பொற்புனற்கோர்முழுகநிருத்தகல் விதியையை புரைசெதத்தி விட்கத்
தோர்காற், பின்பதினைக்கரநகெழுகாற்பரிதுபுனலாற் பனிசப்பிரந்தபின்னர்

(இ-ள்.) நதிமிருத்திகையெடுக்காமல் பூமியிற்றீழாக நல்ல மிருத்திகையெடுத்து ஒருசெம்பில் சலங் கையில்கொண்டுவந்து சவுசாசமனத்தொழில் முடிப்பாருக. கடமில்லாதவன் சலத்துக் கொருமுழுத்தக் கப்பாலிருந்து சவுசாசமனஞ் செய்வது விதிமுறைமை, மிருத்திகையள்ளியிட்டுக் குதத்திலஞ்சுதரம் லிங்கத்தில் ஒருதரம் பின்பு இரண்டு கைகால்களில் எழுதரம், இப்படி பரிசித்து மிகவுஞ்சலம் விட்டலம்பி நல்லபுனிதமானபின்.—எ-று. (ரு)

பொற்புறுமந்திரபுவனை மந்திரத்திற்புகன்றுமுக்காற் புதுக்கியிரண்
டொற்புனல்வாய்க்கவர்ந்துமிழ்ந்து நவைபகல்சுத்தாசமனமியற்றியின்னர்
பற்கிளிகொம்பமுதமாமுன்பரப்பன்னிருவிரலிற் பகர்ந்தநீளத்
தொருசிறியவிரலளவு தூலமதன்றோஇரியா தொடித்துவாங்கி.

(இ-ள்.) அழகிய மகாமந்திரம் புவனைமந்திரத்திற் செபித்துச்சரித்து மூன்று தரஞ்சொல்லி, சுத்தித்தசலத்தை யள்ளி வாயில்விட்டுப் பதினாறுதரங்கொப்பளித் துமிழ்ந்து லேசாமிசமுஞ் சர்மிசமுமில்லாமல் சுத்தாசமனஞ்செய்து, பின்பு பல் விளக்குஞ்செம்பு பால்மரம் முள்ளுமரம் இவையிரண்டி லொன்றில் பன்னிரண்டு விரல் நீளஞ் சிறுவிரல் பருமனாக வதனிற் றேலுரியாமல் முறித்துக்கொண்டு.

வடமுகந்தலைகவிழ்ந்து பவனமுடன் சலத்துமிழா வகைகீட்டிக்கின்
படவுறுசுத்தாசமனம் பண்ணிநன்னீர்முழுகவலக் கால்முன் வைகி
யடையுமதிமண்டலத்தி னமுதமருகந்துசமுத் திரையின்வாங்கி
தடநதியிலமைத்துநவநதிதீர்த்தமாகித்துத் தடத்துமூழ்கி.

(இ-ள்.) வடக்குமுகமாய் தலைகவிழ்ந்தபடி பேசாமல் சலத்திலுமிழாமல் வாய்கொப்பளித்துச் சுத்தாசமனஞ் தந்தசுத்திசெய்து கிழக்குமுகமாக நின்று அடைவு செய்து உத்தமமானநீரில் முழுக வலதுகால் முன்னாகச் சென்றுநின்று அடைவுடனே சந்திரமண்டலத்திலிருக்கிற அமுதத்தை அங்குசமுத்திரையினால் வாங்கிப் பெரியநதி சலத்திலமைத்து நவதீர்த்தங்களை யந்தசலத்தி லாவாகித்து நதியில் மூழ்கினபின்.—எ-று. (எ)

மறைமொழியிற்பதினெருமந்திரங்தீர்த்தப்பலதெளித்து வணங்கைக்கொ
ண்டு, முறைமுறைதக்கவத்திரைய முற்றியபின்கரைக்கண்ணுற்று தத்தாற்
சுத்தித், தறையமைத்துவெண்டுகின்மேற் றரித்துப்பீதசக்குறவர் சமை
யுட்கொண்டு, பிறப்பில்பிரணவப்பிராணு யாமமுற்றிப்பிராணவத்தைப்
பொய்கத்தேற்றி.

(இ-ள்.) வேதவாத்தியத்தினாற் பதினொருமந்திரத்தால் தீர்த்தம் பலகால் புரோட்சித்துச் சலங்கைக்கொண்டு வரிசைவரிசையாயடிக்கடி தௌத்தியஞ் செய்து முடித்தபின்பு, சலக்கரையிடத்தில் சுத்தமானபூமியமைத்து வெள்ளை மடியுடுத்திக் கொண்டு உபதேசஞ்செய்த ஆசாரியரை உள்ளத்திற்கொண்டு மேவலுடாத பிரணவமந்திரத்தால் பிராணாயாமஞ்செய்து முடித்துப் பிரணவாட்சாத்தைத்தாலதேகத்திலேற்றியபின்.—எ-று. (அ)

தெய்வமிறுவாகவிருடின்முதலதாகநிலை தெரிந்துகூறி
யிவ்வகைவைதிகசந் தியானஞ்சைவாகமசந் தியானங்கூடிக்
கைவரவெண்ணீறமைத்து வலக்கரத்தாலிடக்கரமேற் கவித்துமார்பின்
மெய்பாவுநிறுத்தி நிவிர்த்தி முதற்கலைபுரைத்து விமலமாக்கி.

(இ-ள்.) இருடிமுதல் தெய்வமீறுதியாக நிலைதெரிந்துச்சரித்து இந்தப்பிரகாரம் மாறாமல் வைதிகசந்தியானமுஞ் சைவாகமசந்தியானமு மொக்கமுடிப்ப உள்ளங்கையில் வலதுகையினாற் றிருவெண்ணீறெடுத் தமைத்து வலதுகையா லிடதுகைமேற் கவித்துமூடி மார்பளவில்நிறுத்த நிவிர்த்தி கலைமுதலான கலைகளை யுச்சரித்துப் பரிசுத்தஞ்செய்தபின்—எ-று. (க)

ஐந்துபிரமஞ்சடங்க மைந்தொன்றுவிபூதியினி லாக்கியார்க்க
முந்தியகாலாக்கினியு ருத்திரமூர்த்தந்தனை யுளத்திலேறுத்தி
யெந்தைபிரணவமெழுதி யிருவர்தமைமந்திரத்தி லிலிகித்திட்டு
முந்துசிரமுதலீசானதிபன்னோர்மந்திரத்தால் முறையின்வேய்ந்து.

(இ-ள்.) பஞ்சபிரம்ம மந்திரஞ் சடங்கமந்திர மிவைகளை விபூதியிற் பொருந்தவமைத்து வளர்ச்சிமுந்திய காலாக்கினி ருத்திர மூர்த்தத்தை யுள்ளத்திற் பாரித்து நமதடிகள் பிரணவம் விபூதியிலெழுதி சிவன் சத்தி இவர்களுடைய மந்திரமும் பீஜாட்சரங்களுமெழுதி முன்னே சிரசுமுதலாக ஈசானமாதிய பதினொரு மந்திரங்களாலே வரிசையாய் விபூதிதரித்துக்கொண்டு பின்—எ-று (க௰)

வேய்ந்தவிபூதிச்சேடஞ் சென்னியினு மேனியினும் விளங்கநீவிக்
கூர்ந்தபுனலங்கையுறக் குலவியமுத்தத்துவத்தாற் சொன்மேடோங்காரம்
வாய்ந்தமறையாலுமங்கை பங்கர்திருமந்திரத்தி னாலுமாசஞ்
சேர்ந்துபின்னந்தரியாகஞ் செய்துபின்தன்னான்மார்த்த சிவனைப்போற்றி.

(இ-ள்.) அப்படித்தரித்துக்கொண்ட விபூதிமிச்சத்தை சிரசிலுமுடம்பிலும் பிரகாசிக்கப்பூசிக்கொண்டு, உள்ளங்கையிற் சலத்தையள்ளி தத்துவத்திரையத்தா லுட்கொண்டு ஓங்கார மந்திரத்தினாலும் உமையொருபாகர் மந்திரத்தினாலும் னீயாசங்கள் செய்து, பின்பு அந்தரியாகஞ் செய்து, அதின்பிறகு தன்னுடைய ஆத்மார்த்தமான சிவலிங்கத்தைப் பூசித்து போற்றி செய்தபின்—எ-று (கக)

குருவினிருபதங்குறித்துக் கோயில்வலம்புகுந்திரவி குலவுப்பூசை
மருவிவிநாயகன்றன்னை வணங்கியுறைவாணியின் மலர்த்தாளேத்தித்
திருவிரவுமுமைபாகர் சிவாலயத்து நடுவனசத் திருவைப்பூசித்
தாவியதென்வாயறனி னுயர்கவினந்தீசர்பத முகந்துபோற்றி.



(இ-ள்.) குருவினுடைய பாதங்களைத் தியானஞ்செய்து, திருக்கோயிலைப் பிரதட்சண நமஸ்காரஞ்செய்து, உட்புகுந்து முந்தி சூரியபூஜைசெய்து, பிறகு விநாயகனைப்பூசித்து, சரஸ்வதி இரண்டு பாதமலர்களைப் பூசித்துத் துதித்து, அழகிய உமையொருபாகர் சிவாலயம் நடுவிலிருக்கின்ற கமலலட்சுமியைப் பூசித் துத்திரமாக தெற்குவாசலி லுசிதமுடைய நந்திகேசுவரர பாதங்களைப் பூசித்துப் போற்றிசெய்தபின்.—எ-று.

கங்கைபைக்காளியையிடப்பாற் கைதொழுதுவலம்யமுனை யசியையேத்தி
யங்கணிருதியிலைனு மைங்கரனும் வாயுவிலு மீசானத்துஞ்
சங்கநிதிபதுமநிதிக் கிழக்கினுமக்கினிதிசையிற் சண்டரோடுந்
துங்கபிரசண்டரவ ரவரைமலரருச்சனையின் முறையிலாற்போற்றி.

(இ-ள்.) இடதுபக்கத்திற் கங்கையுங் காளியையுங்கண்டு நமஸ்கரித்து, வலதுபக்கத்தில் யமுனையையும் அசிதையையுங்கண்டு நமஸ்கரித்து, அங்ஙனம் நிருதிதிக்கிலாலும் விநாயகனும், வாயுதிக்கிலும் ஈசானியதிக்கிலுஞ் சங்கநிதி பதுமநிதி கிழக்குத்திசையிலு மக்கினிதிக்கில் சண்டேசுரருடனே யுயர்ந்த பிரசண்டர் அவரவர்களை அர்ச்சனை முறைமை முயற்சியாற் பூசித்துப் போற்றிசெய்தபின்.—

நகதாந்தச்சத்திருடு நிலைநிறுத்தியனந்தனாசந் திசையிலீசன்
ஆதாரகமடர்ஞான மம்வைராக்கியங்காணி அடியையேத்தி
பீதாகப்பலனதிசை சத்தகுருணணாங்கிபி சானங்கிழ்பாற்
போடாரவெண்கயல தளமெட்டிற்சத்திதனைப் புரிவித்தேத்தி.

(இ-ள்.) ஆதாரசத்தி நடுதளத்திருக்க மற்ற நான்குதளத்தில் அனந்தனும், நான்குதிக்கில் ஈசானந் தருமம் ஞானம் வைராக்கியம் ஆகிய விந்தத்தாங்களை வணங்கிப் போற்றிசெய்து, மேலாக வாய்வுதிக்கில் சத்குருவை வணங்கி, ஈசானத்திலும் கிழக்கிலும் அலர்ந்த வெள்ளைக்கமலத்தி லெட்டுத்தளத்திலும் அஷ்ட சத்திகளைக்கண்டு வணங்கித் துதித்தபின்—எ-று. (கச)

நவசத்திதனிலனந்த சத்திபரமப்பொருட்டில் நயந்துபோற்றி
சிவனையப்பொற்பீடு கையிற்றிருமுகமைந்துந்திசையிற் றிகழ்ந்துதோன்றத்
தவமுறவுண்ணினைந்தாவா கனம்பண்ணிச் சோடசத்தா லாவல்கூர்ந்து
புவனகயிலாசமெனும் நாககிரிச்சம்புவின்றாள் போற்றுஞ்செய்தும்.

(இ-ள்.) நவசத்திகளில் முதன்மையான அனந்தசத்தியைக் கமலகேசரத்தில் கண்டு அன்பாகப் போற்றிசெய்து, பரமசிவனை அழகிய சுவர்ணபீடத்தில் ஐந்துதிருமுகமு மைந்துதிசையில் விளங்கித்தோன்ற பத்தியுடன் றனது உள்ளத்தில் நினைத்து ஆவாகனஞ் செய்து, சோடசமந்திர வுபசாரந்தாலே பூசித்து ஆசைமிகுந்து பூலோக கயிலாசமென்கிற திருநாககிரியி லெழுந்தருளிநின்ற பரமசிவன் பாதங்களைப் பூசித்தர்ச்சித்துப் போற்றிசெய்வதென்று முறையினுஞ் சுருதிகள்.—எ-று. (கரு)

துவவநிலையருச்சித்த பின்னாரிரண்டாட்வேதச் சுருதிதன்னால்
நவாதாரச்சிருருத்திர மருச்சித்தன்பாற்பாத் தியங்கனல்கித்
தவாவபிடேகங்கள்நறை சந்தனங்கர்ப்பூரமிவைத் தயங்கப்பூரித்
திவாதுதிருவுடைசாத்தி மலர்கள்புனைந்தினிமனைவே தனங்களேற்றி.

(இ-ள்.) நவரத்தினங்களை அர்ச்சனைசெய்து, இரண்டாம் மேதகருதிவாக்கியத்தில் நவாதாரச்சிரக உருத்திராக்கங்களாலே அன்பாக அர்ச்சனைசெய்து, பாத்தியங் கொடுத்து, குறைவில்லாத அபிஷேகஞ்செய்து திருவுடைசாத்திப் பரிமள சந்தனமிருகமத கர்ப்பூரங்களால் சுவாமிதிருமேனி குளிரச்சாத்தித் திருவாபரணங்கள் தரித்து, மணமிகுந்த பல்புட்ப மலர்மாலைகள்சாத்தி அலங்கரித்து நிவேதனங்கள் செய்தபின்.

(௧௮)

அர்க்கியம்பொற்றிருக்கரத்தி லளித்தமுகத் திருவாய்க்காசமனமீந்து
பொற்கமலத்தாளிணையிற் பாத்தியங்கொடுத்துத்தூபமிடைப் புரிவித்தீசன்
நற்கருணைபெறச்சிறிது செபமுடித்துமிகவாசநறுங்கர்ப்பூரந்
தற்பரற்குத்தாம்பூலஞ் சமைத்தானத்தனைனி தயங்கச்சாத்தி

(இ-ள்.) சுவாமி திருக்கைகளில் அர்க்கியங் கொடுத்து, சிவ அமுதத் திருவாய்க்கு ஆசமனங்கொடுத்து, சுவாமி அழகிய பாதங்களில் அர்க்கியபாத்தியங் கொடுத்துத் தூபமிடையிடையே யுதவிச் சிவனருட்பெறும்படிக்குச் சிறிதுசெபஞ்செய்து முடித்து, மிகுந்தமணத்தையுடைய கர்ப்பூரமுந் தாம்பூலமுஞ் சமர்ப்பித்து, நவரத்தின பொன்னுபரணங்களைப் பிரகாசிக்கச் சாத்தியபின்பு.—எ-று.

தூபதீபங்களிடை யிடையுதவிவில்வமலர்த் தரைப்பூங்கஞ்ச
மராபரிமளஞ் சிறந்த சண்பகஞ்செங்கழுநீர் வெண்மந்தஞ்சாத்தீங்
கோபதிப்பாடலைப்பொற் குலவலரிபட்டப்புட்பங் குளிரச்சாத்தி
ஞாபகத்துமந்திரபுட் பாஞ்சலிநன் னீர்ச்சரணநளினத்தேத்தி.

(இ-ள்.) சுவாமிக்குத் தூபதீபங்களிடையிடையே கொடுத்து, வில்வபத்திரம் வெண்ணெருக்கம்பூ தாமரைப்புட்பம் பரிமளம்வீசும் சண்பகப்பூ செங்கழுநீர் புட்பம் மந்தாரைபுட்பம் சிவப்புநிறப் பாதிரிபுட்பம் பொன்னலரி புட்பம் ஆக அவ்வட புஷ்பங்களுஞ் சுவாமி திருமேனி குளிர்ச்சியாகும்படிச்சாத்தி, நினைவுடனே மந்திரபுட்பாஞ்சலிசெய்து சிவனதிருபாதங்களில் துதித்து நமஸ்கரித்து.—எ-று.

புனராசமனமுதலாய்ப் புரிந்துசெபமுடித்துத்தோத் திரத்தாற்போற்றி
நினைவாசகநீ ராஞ்சனஞ்சத்திரஞ்சவரி திருக்கண்ணாடி
தனதாவிக்கனகமணித் தாலவட்டந்தயங்குசதுர் வேதங்கீத
மினமானகின்னரியினிசைப்பனுவ னிறைமுழவி னினிதுபோற்றி.

(இ-ள்.) பின்னும் புனராசமனமுதலாய்ச் செய்யத்தக்க உபசாரமெல்லாஞ் செய்து செபம் நிறைவேற்றி, சிவனுமங்களைத் துதிசெய்து, நினைவாயுத்தியசங்கீத்தனை நீராஞ்சனங் கொடைகவரிதிருக்கண்ணாடி ஆலவட்டமிவைகளை யுபசரித்து, நான்குவேதகீதங்களோசைமிகுந்தான தெங்கணு திருப்பாடலிசை முழங்க சகல மேளவாத்தியங்களுமுழங்க இவையாவும் அணியணியாய் நடத்திப் போற்றி செய்தபின்.—எ-று.

(௧௯)

இன்னபடிபதினறுப சாரத்தானிறைஞ்சியபின் லயாங்கக்கூட
மன்னியபோ காங்கமிவை யுளமகிழ்ந்தியுவணந்நிமங்கை பங்கர்போற்றி



யன்னிலையர்ச்சனைபுரித லறிமெனவேதாட்பகரு பரனைப்பூசித்
துன்னுமறையவர்மறைபு முயர்ந்துபணிவிடையவரு முறைப்பக்கேண்மோ

(இ-ள்.) இந்தப்பிரகாரம் பதினறு உபசாரங்களாலும் உபசரித்துப் பூசித்து நமஸ்கரித்தபின்பு லயாங்கமுடனே போகாங்க மிவைகளை மனக்கருத்தில் எண்ணிப் பிரதட்சணஞ்செய்து வணங்கி அர்த்தநாரீஸ்வரனைப் போற்றிசெய்து அர்ச்சனைசெய்வது அறிவென்று வேதங்கள்சொல்லு மிம்முறைதவறாமல் சுவாமியைப் பூசித்துசிவத்தியானஞ்செபம் வேதியர் முறைமையுமிகுந்த பணிவிடைசெய்பவர்கள் முறைமையுஞ் சொல்லுகிறோம் கேளுங்கள்—எ-று. (௨௰)

அன்றுமறையவன் முருகர் காரணங்களுரைத்திடென வறைபுங்காலை
யின்றுபிரணவப்பொரு ளியற்றியம்புகிலென் றுரைப்பவதற் கியம்பானுகி
அன்றுவரியபரன்பாத மலர்த்தொழுதுமறையறிய வரந்தாவென்று
நின்றுதொழ நெடுங்காலை நிமலர்மலை யன்றனக்கு நிகழ்த்துவாரால்

(இ-ள்.) அந்நாளில் பிரமதேவனைக் கந்தசுவாமிக்கு வேதங்கள் சொல்லி வையுமென்று சிவன் சொல்லும்போது இங்ஙனம் பிரணவத்திற்குப் பொருள் எனக்குச் சொல்லென்று ஆறுமுகவன் கேட்க, அதற்குப் பொருள் சொல்லத் தெரியாதவனாகி துன்பமுற்றுப் பரமேசுவரன் பாதமலர்களைத்தொழுது வேதப்பொருளறிய வரம் புரியுமென்று தொழ, நீண்ட கயிலயங்கிரி நிமலனான பரமேஸ்வரன் மலரவனை பிரமதேவனுக்குச் சொல்லலுற்றார்—எ-று. (௨௧)

தெமதுசிவாலயங்களெங்கு மெனங்களுளதங்கனங்கு மெனைக்கண்டேற்றிக்
குமரனுடனுறைந்து குளிர்மப மடந்தையுடன் கூடிநீங்கா
திமையகிரிக்கயிலைமக பேருமற்றுமெழிற்சயிலத் தினியதான
அமரர்சிறைமீட்டவையா மருவுதிருச்செங்கோட்டி லணைதியென்றார்

(இ-ள்.) ஓய் பிரமதேவனே, தட்சணதேசத்தில் நம்முடைய சிவாலயங்களெங்கெங்கிருக்கின்றதோ அங்கங்கே நீ போய் நம்மைக்கண்டு வணங்கிப்பின்பு குமாரனும் நாமும்பிரியாமலிருக்கின்ற குளிர்ச்சியையுடைய இமவான்மகளாகிய பார்வதியுடனே கூடி அர்த்தநாரீசுவரமூர்த்தியாய்என்றும்நீங்காததலமாய் இமயகிரிகயிலைமகமேருகிரி முதலாகிய பர்வதங்களுக்கெல்லா மேன்மையுள்ளதாயுந் தேவர்கள் சிறைமீட்ட செவ்வேளும் நாமும் வசித்திருக்கின்ற திருச்செங்கோட்டில் வந்து சேர்வாய் பிரம்மாவே என்றுசொல்லி பின்னுஞ் சொல்வார்—எ-று. (௨௨)

அணைந்துதைமுப்பொழுதுமருச் சனைபுரிந்தெம் முடனிருவராகப்போற்றி
யிணைந்தசிவதலத்தொன் றமிணையில்லைப் பிரமமென்று மியம்பேரெய்திக்
கணைந்திகழுமென் றுபல கோடிமகாபிரபமெனக் கனிந்துவாழ்த்தி
மணந்தகலாதுனதுளமு நமதுள்முமொன்றாக மருவுவோமால்.

(இ-ள்.) அப்படி வந்துசேர்ந்து நம்மை திருசந்திகாலமும் நம்முடனிருவராக அர்ச்சனைசெய்து வணங்குவீராக, இணைபிரியாத சிவத்தலசரொன்றும் இணையில்லாத சிவப்பிரமமென்றும் இயற்பெயருமக்குண்டாய் பிரபுர்கூட்டங்களாகப் பிரபலித்து ஒன்றுஅனேகங்கோடி மகாபிரமமென வீர்த்திக்கு மனங்கனிந்தவனை

ங்கினுல் பிரமதேவனே நீயும் நானும் சம்பந்தமாகப் பிரியாம லுன்மனது மென்
மனதும் ஒன்றுபடக் கலந்திருப்போமென்று அருளிச்செய்தார்.—எ-று. (உ௪)

அந்தணிக் குசக்கிரியி லறுமுகனுக் குபதேச மனைத்தும்போதித்
தியந்தபர ஞானமுனக் குப்பசர்வமெனும்வரத்தா லுலகத்துய்ந்தோ
ரெந்தைசிவன் வடிவாகி யீசனருள்புரியாகி யீசற்காகி
மந்திரமாங்கவரல்லால் மத்தனருச்சனைக்குரிய மறையோரின்றால்.

(இ-ள்.) அந்த இரத்தினமயமான குசாகிரியிலே ஆறுமுகவருக் குபதேச
ஞ் செய்துபிரபலித்த பரமஞானம், ஒப் பிரமாவே உனக்கும் போதிக்கிறோமெ
ன்று வரப்பிரசாதமனுக்கிரகஞ்செய்து விடைகொடுத்தார், அப்படியே பிரமாவும்
வணங்கி ஞானபோதம் பெற்று வாழ்ந்தார். ஆகையினாலே சிவார்ச்சனைக்குரிய
வர்கள் எமது சிவரூபமாகி ஈசர் திருநேத்திரங்களாகி ஈசுவரனுக்குயிராகிய மந்தி
ரமு மங்ஙன மவர்களேயல்லாமல் சிவார்ச்சனைக் குரித்தாகிய பிராமணரில்லை.—எ-று

செங்கோட்டீசனருட் சிவாலயத்தினியலிசைநா டகங்களாதி
தங்கோட்டமுறுந்தொழில்செய்பவரவர்தந்தகைமையினைச் சாற்றுங்காலை
பங்கோட்டுத்தாருவனத் தானுருவைக்கண்டாசை சொல்வார்மின்னார்
வெங்கோட்டமனவிரக மெலிவுகன் றுச்சுகந்தழைந்து விளங்கினரால்

(இ-ள்.) திருச்செங்கோட்டில் சுவாமியினுடைய ஆலயத்தி லன்புடனே இ
யலிசைநாடகங்கள் முதலான பணிவிடை புரிபவர்கள் தகுதியைச் சொல்லுமளவி
ல் நீண்டுப் பிணைத்த மரங்கள் நெருங்கிய தாருகாவனத்திற் சிவன் பிச்சாடனஞ்
செய்தபோது சிவனைக்கண் டாசைமோகங்கண்ட ரிஷிபத்தினிகள் கொடுமான
மனவிரகவிடாயலங்கிச் சுகத்தையடைந்து பிரபலித்தார்கள்,—எ-று. (உ௫)

அன்னமலர்க்கோதையர்வந் தவதரித்தபடியால்வெ வசலஞ்சூழ்ந்த
நன்னகர்த்துக்கோதையென நவின்றனராங்கவர்நடனம் பாடல்கீதம்
பின்னுமரன்பணிவிடைக்கு முரியசிவபூசையினும் பெரியராவ
ரின்னிலையங்கவர்நிலைமை யீசர்திருமேனிவடி வின்னுங்கேளீர்.

(இ-ள்.) அந்தப்பூங்கோதை யங்ஙனம்வந்து பிரவேசித்தபடியினாலே அரவ
கிரியைச்சூழ்ந்த அழகிய நகருக்குக் கோதைநகரென்று பெயரிட்டழைத்தார்கள்.
அங்கே நடனநாடகம் பாடல்சங்கீத வீணைகானங்கள் முதலான உபசாரங்க ளியற்
றிப்பின்னையுஞ் சிவனது பணிவிடைகளுக்கெல்லா முரியவராவார்கள், அவர்களுள்
பின்னைகள் சிவபூசை முயற்சியிலும் பெரியவர்களாவார்கள். இவ்வாறங்ஙன மவர்
கள் நிலைமை, இனிச்சிவன் திருமேனிவடிவின் ரூபத்தியானங்களை இன்
னமுங்கேளுங்கள்.—எ-று. (உ௬)

முனிவரரேமெய்ஞ்ஞான முத்திரையுஞ்சபவடமு மிடப்பால் நெய்தற்
பனிமலரும்பரையையணைத் திடுகபாலப்பாணியுங்கார்ச் சிவப்புமாகத்
தினமுநுசாத்விககுணமுஞ் செம்மைவெண்மைநாசதசற் குணமும்ரூப
மீனிதிருக்காத்தமைந்த வசமுமுள்ளத்துறைய வணங்குவார்க்கே.



(இ-ள்.) முனிவர்களே, சுவாமியினுடைய வலதுகை ஞானமுத்திரையுஞ்
சபமாலையும் இடதுபுறத்தில் நெய்தற்புட்பமும், உமையை அணைத்திருக்குங் கம
லக்கையுங் கறுப்புஞ் சிவப்புமாக நித்தியமான சாத்வீக குணமுஞ் சிவப்பும் வெள்
ளையுமாக உன்னியவர்களுளத்தாலுறைவதாக வணங்குபவர்க்கெல்லாம்.எ-று (உ௭)

திண்களிறும்பாய்மாவுஞ் சிவிகையுமின்னமைவமுதலாஞ் சீருப்பேறுந்
தண்டரிவிலருள்புரியுஞ் சாமளக்கார்ச்சிவப்பப வாதமாக
வண்புனைத்தவர்க்கினிய வரமுதவுபாகரூணை வசியம்வேண்டித்
தண்பிறைமாமுடியுங்கம னியக்காந்தியுங்கருணை தழைத்தநோக்கும்.

(இ-ள்) உயர்ந்த யானைகளுங் கனவேகக் குதிரைகளுஞ்சிவிகைகளு மிவை
முதலாகிய நல்ல பாக்கியங்களும் பேரும் பிரைக்கியாதியுந் தன்னிட பரிவினாலே
பாலிக்கும் சாமளவர்ண்ணங் கறுப்பு சிவப்புநிறமும் அபயவரதமாக, வள்ளிய
புவனத்தவர்களுக்கு இஷ்டமான வரமுதவும் ஆகருஷணம் வசியம் வேண்டில்
குளிர்ந்த பிறைமருவிய முடியு மழகிய சுவர்ண்ணக்காந்தியுங் கருணைநிறைந்த பார்
வையும்.—எ-று. (உ௮)

வரதமபயம்பாச மலர்க்கரத்தங்குசமாக வணங்கலாகு
முரவியவுச்சாடனத்துக் குதவுசுவேதங்கினிநெய் தற்பூஞானத்
திரமுறுமுத்திரைகரத்திற் செபவடமாய்நினைத்துத்தரித்தல்வேண்டும்,மரு
வளருங்கூந்தலுமெண் டோட்கணைவில்காலங்தோல் வைவாள்கொள்வர்

(இ-ள்) வரதம் அபயம் பாசம் அங்குசம் பொருந்திய அஸ்தங்களுமாகத்
தியானித்து வணங்கவேண்டும், உறுதியாகிய வுச்சாடனத்தொழிலுக்கு வெள்ளை
நிறமான திருமேனியும் கிளியும் நெய்தற்பூவும் பிடித்தவராக ஞானமுத்திரையுஞ்
செபமாலையுந்தரித்த அஸ்தங்களுமாகத் தியானித்து அருச்சனை செயயவேண்டும்,
பகைவர்புறஞ் சாய்ந்துபோவதற்குக் கூந்தலும் எட்டுப்புயங்களும் அம்பு வில் கபா
லங்கேடகங் கூரிய வாள்பிடித்த அஸ்தங்களுமாக ரூபத்தியானஞ்செய்து வணங்கி
அர்ச்சனைசெய்வாராக, மற்றுமிப்படி ரூபத்தியானஞ் செய்தவர்களுக்கு நினைத்த
காரியம் கைகூடும்.—எ-று. (உ௯)

முன்னுரைத்தமறையவரி லாகமசாத்திரமுதலா முன்னூல்யாவுந்
தன்னறிவினுணர்ந்துபர சற்குருவினுபதேசந் தனைப்பெற்றோர்ந்தே
புன்னுமலமூன்றகற்றி யுயர்பரஞானத்துணர்ந்த வுரவராகி
மன்னியபாமந்திரத்து மறைமொழியாலர்ச்சிக்க வருதல்நீதி

(இ-ள்.) முன்னேசொன்ன சிவவேதியரில் ஆகமசாஸ்திர முதலான புராண
நூல்களெல்லாந் தன்னறிவினாலே கற்றுணர்ந்து சற்குருவினுடைய உபதேசம்
பெற்று மிகுந்த பூசுவான்களாகி நினைப்பினாலே மும்மலமகற்றினவராய் உயர்ந்த
பரமஞான உணர்ச்சியையுடைய பெரியோராகி சிவாகமமந்திர சுருதிவாக்கியத்தா
ல் சுவாமியைப் பூசித்தருச்சிக்கவருவது நீதிமுறைமை—எ-று (௩௰)

அருச்சனைவிதிச் சருக்க முற்றிற்று,

திருவிருத்தம்—உ௯.

# கந்தர் பூஜைச் சருக்கம்.

—————:o:—————

கணபதிநிபாசம்பண்ணிக் கணபதிதியானஞ்செய்து
பணபதிவபின்பொற்றிருந்தி படிக்குறும் பருத்தாள்ஞானக்
குணபதிமைந்துபாணி குளிர்பிறையனைய வோர்கோட்
டிணைமுறச்செவி நாலங்கத் திறைவனை வணங்கிப்பின்னர்

(இ-ள்.) கணபதி நியாசஞ்செய்து, கணபதி தியானஞ்செய்து, படங்களையுடைய நாகபந்தனம்பொருந்திய தொந்திவயிறும் பருமித்துப் பணைத்துக்குறுகிய கால்களும், ஞானந்த குணங்களுமமைந்த திருக்கரங்களும், குளிர்ந்த பிறைபோன்ற ஒற்றைக்கொம்பும், இரண்டு முறம்போன்றசெவிகளும், நாலங்கங்கூடிய ஒரு திருமேனியும், நான்றவாயும் யானைமுகமுமுடைய விநாயகமூர்த்தியை வணங்கி வாழ்த்தியபின்—எ-று. (க)

வாகுருந்சரணம்போற்றி மலையமாமுனிவன்றனை
நாமுயமிருடியாகத் திருட்டுநற்சந்தவாக
வுரனுறமுருகன்றன்னை யுற்றதே வதையாய்க்கொண்டு
யிரவிறீங்காரபீச மிருமூன்றுபீசமேத்தி

(இ-ள்) குருசுவாமிகள் இரண்டு பாதங்களைப் போற்றிசெய்து பொதிகைமலை அகத்தியமுனிவன்றனை நாமாகிய விருடியாக, திருட்டுப் சந்தசாக அறிவு மிகுதியினாலே குமாரசுவாமியை இஷ்டதெய்வமாக நினைத்து, சூரியபீஜாக்ஷரம் றீங்கார பீஜாக்ஷரம் சடாக்ஷரபீஜாக்ஷரம் இவைகளையுச்சரித்துக்கொண்டு—எ-று.

சகலபாக்கியங்களீதல் தருவினியோகமாக
நகைமுகமலரோராறும் நளினபொற் கரமீராறு
மகிழ்வுறுதெய்வசேனை வள்ளியிர் பாங்குஞ்சத்தி
மிதுபடைவிளங்குகின்ற விளக்கமு முளத்திற்காண்ட.

(இ-ள்) எல்லாச் செல்வங்களும் விநியோகமாகத் தரும் ஒளிபொருந்திய சண்முகங்களுங் கமலம்போலப் பிரகாசிக்கின்ற பன்னிரண்டு கரங்களுஞ் சந்தோஷமிருந்த தெய்வயானை வள்ளியம்மை இவர்களுபய பாரிசங்களிற் பொலிய வெற்றியையுடைய சத்திவேல் பிரகாசிக்கின்ற வலங்காரந்தன்கருத்திற்றோற்றமாக.—எ-று. (ங)

கந்தரமெழுத்தோடாவா கனமாசமனம்பாத்திய
மந்தவர்க்கியந்தியான மாசனமபிடேகந்தூ
சுந்துபவீதங்கந்த முறுமலரட்டபுட்பம்
நந்தலிற்றூபதீப நபர்துநைவேத்யநல்கி,

(இ-ள்.) கந்தசுவாமி சடாக்ஷரமந்திரத்துடனே ஆவாகனம் ஆசமனம் பாத்தியம், அர்க்கியம் தியானஞ்செய்து ஆசனங் கற்பித்து அபிடேகஞ்செய்து



திருவாடைசாத்தி, உபவீதந்தரித்துப் பரிமளசுகந்த புட்பமாலைகள், அஷ்டபுட்பங்கள் ஆபரணங்கள்சாத்தி யலங்கரித்துக் குறைவில்லாத தூபதீபங்களுடனே அன்னபானாதிகளுடன் நிவேத்தியஞ்செய்து—எ-று. (ச)

பூரதாம்பூலமேத்திப் புனராசமனங்கள் செய்தே
யாரதோத்திரநிருத்த நிராஞ்சனஞ் சமரஞ்சத்திரம்
சிருறுவிசனநதாளமிருதங்க வாத்தியத்தின் டோற்றி
யேருறுதியானமுன்னுமிடையினும் பின்னுஞ்செய்வான்

(இ-ள்) கர்ப்பூர தாம்பூலம் சமர்ப்பித்து, புனராசமனமுதலானவை யாவுஞ் செய்து, பூரணதோத்திரம் நிர்த்தனம் நிராஞ்சனம் கவரி கொடை விசிறி ஆலவட்டம் இவைகளா லுபசரித்து, தாள மிருதங்க முதலான சகலவாத்திய முழக்கத்துடனே யர்ச்சித்துப்போற்றிசெய்து, தியான முன்னுமிடையிலும் பின்னுஞ் செய்து நமஸ்கரித்தபின்—எ-று. (ரு)

ஆடகமணியாற்செய்பொன் னலங்கலா லலங்கல்சூழ்ந்த
கோடசம்புரிவிற்கோட்டுக் கொழுங்கதிர்ப்பிடர் மீக்கொண்டு
சேடகபாரிசாதச் செழுமலர்ப் பூச்செண்டேந்தி
நீடகமேருசுற்றி நெறிவிளையாட்டோர் பாங்கால்.

(இ-ள்) ஒளிவீசாநின்ற சொர்ன்ன விரத்தினாபரணங்களா லலங்கரித்த செம்கொம்புசேர்ந்த முஷ்டிகளாலும் பாய்ந்து போர்செய்யுஞ் செருக்கையுடைய சேவலின் மீதேறி செழுமையையுடைய தேவலோகத்துப் பாரிசாத பூச்செண்டு கையிலேந்தி மகாமேருவை வலமாகச்சுற்றி விளையாடுஞ் சுவாமியை யிப்படி ஒருமனதாக தியானஞ்செய்வார்கள்—எ-று. (சு)

வலக்கரஞ்செபத்திலக்க வடமிடக்கரத்தில்ஞான
இலக்கமோடமைத்தபோத்த கம்பெறநினைப்பாரெல்லாஞ்
சொலத்தகுகல்விஞானச் சுருதியின்கருத்தும்போத
நிலத்துறப்பெறுவர்வாணி நீங்குறாதோங்குமாலோ.

(இ-ள்.) சுவாமி வலதுகையில் செபஞ்செய்கின்ற ருத்திராட்சமாலையுமிடது கையில் சிவஞானபோத நிறைந்தமைந்த புத்தகமும் பற்றினவராக நினைத்துத் தியானஞ் செய்கின்றவர்களுக்கெல்லாந் தகுதியான கல்வியும் ஞானமுஞ் சுருதி போதங்களு மவரவர் கருதிய இஷ்டகாமியார்த்தங்களு மிந்த பூமியில் பெற்று வாழ்வார்கள். சரஸ்வதியும் அவர்களிடத்தில் பிரியாமல் வசத்திருப்பாள்.—எ-று.

அறுமுனிமடவார்கொங்கை யமுதறுமுகத்துமுண்டு
செறிமலர்க்காருகிழற் சிறுவிரற் பிடித்துலாவி
யுறுமவர்மருங்கிலேறி யுடர் விளையாட்டுற்றோர்க்குப்
பெறுமறுவிலாதபாலர் பெறுகுறப்பேறுவர் மண்மேல்.

(இ-ள்.) ஆறுமுனிவர்கள் பத்தினிமார்களாகிய கார்த்திகைப் பெண்களுடைய முலைப்பால் அமுதங்கள் ஆறுமுகத்திலும் நிறைய உண்டு நெருக்கமாகிய பூமணக்குஞ்சோலைகளிலே யவர்கள் சிறு விரற்பற்றி உலாவி அவர்களிடுப்பின்மேல்

மிகுந்த விளையாடல் செய்கின்ற குமாரதேவரை மனதிற் பாவனைசெய்து தியானித்தவர்கள் குற்றமில்லாத புத்திரர்களைப்பெற்று வாழ்வார்கள் இந்தமண்டலத்தில்.—எ-று. (அ)

பன்னிருகரத்தும்வீரப் படைத்தொழில் பயின்றவென்றிப்
பன்னிருமார்புந்தூய பரசுராமனுமோர் பாங்காய்
முன்னியவீரவாகு முதலவொன் பதின்மர்சூழத்
துன்னியமுகன்பாற்கற்குந் தோற்றமு மேற்றச்சீரும்.

(இ-ள்.) குமாரசுவாமி பன்னிரண்டு கைகளிலும் வெற்றியையுடைய ஆயுதங்கள் பயின்ற விசயமான பன்னிரண்டுபயங்களுந்துலங்க, பரசுராமனுமொரு பக்கத்தில் மருவிவிளங்க, முதன்மைபெறியவீரவாகு முதலான பரமேசுரிடத்தில் கல்வியனைத்துங் கற்பவரான தோற்றமும் மேற்றமுமாகிய சீருஞ் சிறப்புமுடையவராகவும்.—எ-று. (கூ)

இராசதகுணமுமாக்கட் கிகபரமருள்கூர்பாங்கும்
வராதிகவாலபானு வயங்கியதிறமும் வாமக்
கரகமண்டலமுமற்றைக் கரத்துயர் தண்டுமாசப்
பரவியவேர்க்குப்போதம் படைத்தசீர் தவம்பாலிக்கும்

(இ-ள்.) இராசதகுணமு மனிசர்களுக்கெல்லா மிகபரசாதகங்கள் உண்டாகும்படிக்குக் கருணைகூர்ந்து இரட்சிக்கும் பான்மையும், வாமகுதியுமுடைய வாலசூரியனைப்போல ஒளிதங்கிய திருமேனியும் இடதுகையில் கமண்டலமும் வலதுகையிற் றண்டாயுதமும் பிடித்திருக்கின்ற குமாரதேவனை மனதிற் பாவனைசெய்து தியானித்த கணங்களவர்களுக்கு மெய்ஞ்ஞானபோதமும் அரியதவப் பலனுஞ் செல்வமும்பெற்று வாழ்வார்கள்.—எ-று (கo)

நிறைசாற்காலத்திந்து நிகர்த்தமாமுகங்களாறும்
மறைமுறைமலர்ந்தவாயும் வயங்குகுண்டலமுங்காதுங்
குறைவிலின்றுரைப்போற்றிக் குவித்தபொற்கரமீராறும்
செறிவுறமனத்துள்வைப்பார் சிந்தையில்நினைத்தல்சேர்வார்.

(இ-ள்.) சாற்காலத்துப் முழுச் சந்திரனைப்போலு மழகுபொருந்திய ஆறுமுகங்களும் வழுவாமல் வேதங்களோதியலர்ந்த திருவாய்களும் பிரபைவிரிக்கின்ற குண்டலங்களணிந்த திருச்செவிகளுந் தாழ்வில்லாமல் குமாரசுவாமி தன்னைப் பெற்ற சிவனையுமுமையையுந் தெரிசித்துப்போற்றி நமஸ்கரித்துயர் பன்னிரண்டு கைகளுமுடையவராக மனதில் பாவனைசெய்து தியானிப்பவர்கள் இருதயத்தில் நினைத்த காரியங்கள் கைகூடி உலகத்தில் வாழ்வார்கள்.—எ-று. (கக)

பாசமேயபயம்வில்லும் பரிசைவேற்படையில்வாளும்
மாசறத்திகழ்வாமக்கை வரதமங்குசம்வலக்கை
பூசலம்பிகல்வாள்போர்வேல் புரந்தான் புகல்விசேரும்
தேசசிந்தூரந்தமே நித்தியதியானஞ்செய்வார்.

(இ-ள்.) பாசம் அபயம் வில் பரிசை சக்கரம் வெற்றிவேல் இவ்வாயுதங்களாறும் வலது கைகளிற்பிடித்தவராகவும், வரதம் அங்குசம் உலக்கை அம்பு வாள்



வேல் இவ்வாயுதங்களாறும் இடது கைகளிற் பிடித்தவராகவும், பக்கத்தில் தெய்வயானையம்மன் அருகிலிருந்து பிரகாசிக்கவும், சிந்தூரத்தில் கமழுங் கர்ப்பக மலர் மாலையணிந்த வடிவுடையவராய் நித்தியமாய் மனதில் பாவனைசெய்து தியானிப்பார்கள்.—எ-று. (கஉ)

குக்குடத்துவசவாமங் கோலவேலொருபொற்செங்கை
மிக்குறவதனமேகம் வெட்சியந் தொடைச்சார்வாகு
பொக்கவேபுரிமுன்னூலு முரம்பெறமுடிகாந்திச்
செக்கரின்பொலியத்தோகை சிறுபுறத்திருத்தல்கண்டார்

(இ-ள்.) குமாரக்கடவுள் இடதுகையிற் கோழிக்கொடியும் வலதுகையில் வெற்றிவேலும் பிடித்தவராய், மேன்மையான ஒரு திருமுகமும் வெட்சிமாலைப் புயமும் முன்னூல் மார்புஞ் செவ்வானம் போலுங் கிரீடகாந்தி பிரகாசிக்க, மயில் முதுகிலிருப்பவராய் மனதில் பாவனைசெய்து தியானிப்பவர்கள் இஷ்டமான சகல பாக்கியமும் பெற்றுவாழ்வார்கள்.—எ-று. (கங)

இன்னனத்தியானமீசர்க் கிறைவிக்குமுருகர்க்குமேதென்
துன்னியவகையாற்கிஞ்சித் துரைத்தனம் பெருமைதன்னை
அன்னவாகனனுமாலு மருந்தவர்யாருமாய்ந்து
பன்னுதற்கரிதாகப் பருப்பதமகிமையம்பா.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் ரூபத்தியானஞ் சிவனுக்கு முமைக்குங் குகனுக்கும் இவ்வகையென்று சிறிது தெரிந்தமட்டுஞ் சொன்னேம், பெருமை சொல்லுவதற்கும் அருமையாயிருக்கும் திருநாககிரிஸ்தலத்தின் மகிமை பிரமாவும் விஷ்ணுவும் அரிய தவமுனிவர் யாவருமெய்த்துச் சொலமிடத்தில்.—எ-று. (கச)

ஆன்றமகமதனில்வந்த வாகமபுராணந்தன்னி
லிரணியசெங்கோட்டார்நாகேசுரர்புராணந்தன்னைப்
பரபுராணத்துக்கொப்பாய்ப் பகருதல்நினைத்தல்யாவ
ரிருவருங்குகனோடோங்கி யெழுபலையதற்கொப்புண்டோ.

(இ-ள்.) சிவன் திருமுகங்களி லுதித்து விளங்கிய திவ்யாகம புராணங்களிற் சொர்ணமயமான திருச்செங்கோட்டி லமர்ந்தருளிய நாகேசுரர் புராணத்தை வேறொரு தலப்புராணத்திற்கு ஒப்பாகச் சொன்னாலும் நினைத்தாலும் பாவஞ் சம்பவிக்கும், சுவாமி அம்மனிருவருங் குமாரருடனே ஓங்கி எழுந்தருளியமர்ந்திருக்கின்ற விந்தத்தலத்துக் கொப்புண்டோ வில்லை.—எ-று. (கரு)

அரனகத்தியர்க்குக்கூற வறுமுகனுமைசுமங்கை
திரமுறக்கேள்விகூர்ந்து சேயுநந்தீசற்கோதி
வருபுராணத்தைவேத வியாசர்பால்வணங்கிக்கேட்டே
சுருதிமாமுனிவர்க்கோதத் தொன்மறைமொழியிற்கொண்டார்.

(இ-ள்.) பரமேசுவரன் அகத்தியனுக்குச்சொல்ல, ஆறுமுகக்கடவுள் உமையவளிடத்தில் கேள்வியுற்று, நந்தீசுரருக்குச் சொல்லி விளங்கிய புராணத்தை

வேதவியாசரிடத்தில் இருந்தவன்புடனே வணங்கிக்கேள்வியுற்ற சூதமுனிவர் வைதிகர்களாகிய சவுனகாதி முனிவர்களுக்குச், சொல்ல, பழமுறை வாக்கியமாகக் கேட்டுக் கொண்டார்கள்.—எ-று. (கசு)

நாகமாமலையிலீசன் நாரியோர்பங்கன்வேலன்
ஏகமாயுதித்துநீங்கா தென்னருந்தீர்த்தநல்கிப்
போகமாமுத்தியாவும் புரத்தளாவிகத்துப்பின்னு
மேகமாமலைக்குமின்று விசேஷசத்தியங்களென்றார்.

(இ-ள்.) அந்த திருநாககிரியில் நாகேசுரராகிய அர்த்தநாரீசுரர், வேலாயுதக் கடவுள் விளங்கிப் பிரியாமல் வசித்து, அளவில்லாத தீர்த்தங்களு முண்டாக்கிச் சகல போகங்களு முத்திமோட்சங்களு மனைவருக்குங்கொடுத்து இரட்சிக்குங் கிருபையினாலே திரிலோகங்களுக்கும் மகாமேருகிரிக்கும் இந்த மகிமை யில்லை, அது உண்மைவசனமென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (கஎ)

இம்மலைபின்னதீர்த்த மிக்கொடியிந்தத்தாரு
விம்பித்தபுள் முத்தேவர் விபன்மொழிதனைநல்கு
மம்மலையானைப்பாங்கி லன்னையைமுருகைப்போற்றிச்
செம்மலைப்புராணங்கேட்போர் சீரினுக்களவுமுண்டோ.

(இ-ள்) இந்தமலை, இந்தத்தீர்த்தம், இந்தக்கொடிகள், இந்தவிருட்சங்கள் அற்புத புட்பங்கள், மூன்றுதேவர்கள், மேன்மையான தொழிலைக்கொடுக்கும் அந்தமலையில் சிவனை, சிவனிடப்பாகத்திலிருக்கும் தேவியை, முருகனை நமஸ்கரித்து அழகிய தலப்புராணத்தைக் கேட்பவர்களுடைய பெருமைக்கு அளவில்லை.—எ-று. (கஅ)

அருச்சனைதியானம்ஞான மருட்சபமலைமீதொன்றில்
கருத்துறுமவர்கட்கெல்லாங் கண்ணுதலருளும்பேறும்
திருத்துமுருகுமரன்வாழ்வுந் திரிபுரையருளுஞ்சீரு
நிருத்தனும்பதமும்பெற்று நிலத்தினில்வாழ்வரன்றே

(இ-ள்.) அருச்சனைகள், தியானங்கள், ஞானபோத நிஷ்டைகள், சபங்கள், இவையெல்லாம் அந்தமலையின்மீது செய்யுங் கருத்தையுடையவர்களுக்கெல்லாம் பரமேசுவரனுடைய திருவருளும் பேறுங் குமாரருடைய வாழ்வும், திரிபுரசுந்தரியினுடைய கருணையும், லட்சுமிகரமுஞ் சிவனுடைய நான்குபதங்களும் பெற்றுவாழ்வார்கள்.—எ-று. (ககூ)

கந்தர்பூசைச்சருக்க முற்றிற்று.
ஆ திருவிருத்தம்—உசஅ.

# விஷ்ணுபூசைச்சருக்கம்.

ஆதிரேதியுகத்தினி லண்டர்கோன், மாதவத்தவ வானவர்சூழ்தரத்
தாதலர்ப்பொழிற் றருநிழற்கீழுரி, யாதனத்தி லிருந்தொன் றறைகுவான்.

(இ-ள்.) முதலாவது நீதியையுடைய திரேதாயுகத்தில் தேவர்கள் முனிவர்களனைவருஞ்சூழ்ந்து சேவிக்கத் தாதுமிகுந்தலர்ந்த கற்பகச்சோலையின்நிழலினிடத்திற் சிங்காதனத்திற் கொலுவாகவிருந்து தேவேந்திரனானவன் யோசித்து ஒரு வார்த்தை சொல்லுகிறான்.—எ-று. (க)

மூவரிற்பொறை யாவர்மொழிகவென், றுவலிற்றுரு வாசகரைச்சொல
மேவியங்கவர் மீதினில்யாமெனப், போய்விளங்குவ மென்றவர்போயினர்.

(இ-ள்.) திரிமூர்த்திகளில் பெருமையுள்ள மூர்த்தி யார் சொல்லுமென்று துருவாசரைக் கேட்க, அவர்மேலுலகங்களிற்போய்ப்பெருமையுடையவரின்னதென்றறிந்து வந்துசொல்லுகிறேனென்று மேலேபோனார் துருவாசர்-எ-று.(உ)

எய்திவேத னியற்கையறிந்தரன், செய்கிறக்க செயற்கையுணர்ந்தபின்
மைதரும்புய மாயவன்சேர்வுபுக், குய்துவார வுரவரைக்கிட்டினார்,

(இ-ள்.) பிரமலோகத்திற்சென்று நான்முகனைக்கண்டு பெருமையில்லாத இயல்பையறிந்து, சிவலோகத்திற்சென்று பரமசிவனைக்கண்டு பெருமையில்லாத செய்கையைத்தெரிந்து, பின்புநீலமேனியையுடைய விஷ்ணுலோகத்திற் புகுந்து அங்ஙனம் வாயிற்காவலான துவாரபாலகரை யணுகினார் துருவாசர்—எ-று (ங)

கிட்டுகாலைத் துவாரக்கிரிப்புயக், கட்டடங்கம லற்கனற்காவலர் [னார்.
விட்டுநின்றனர் விண்டுவின்சொல்லுறார். கட்டமாமுனிமாலுழித்தோன்றி

(இ-ள்.) அக்காலத்தில் மலைபோற் புயங்களுந்தாமரைக் கண்களையுமுடைய விஷ்ணுவினுடைய துவாரபாலகர்கள் சுவாமி உத்தரவில்லாமல் முனியை விட்டுவிட்டார்கள், துஷ்டனாகிய துருவாசமுனி விஷ்ணுவிடத்தில் வந்து சேர்ந்தான்.

தோன்றுகாலச்சுதன்பைந்திருவுடன், யான்றவின்பமயக்கிலறிந்திலன், ஆன்றவாறவருந்தவர்கண்டபின், ஊன்றுதாள்கொடுதைத்துவெகுண்டனன்.

(இ-ள்.) வந்த துருவாசரை விஷ்ணுவும் அழகிய லட்சுமி தேவியுடன் மருவியவின்ப மயக்கத்தினாலே அறிந்தவரல்லர், அதுகண்டு அரிய தவமகிமையுடைய துருவாசன் கால்கொண்டு விஷ்ணுவை யுதைத்துக் கோபித்தான்.—எ-று.(ச)

...ர்துருவாசகன்றன்னையே, ஏறியாலென் னகலங்கடிவமென்
...ரத மெடுத்துப்பிடித்தடி, சீறிநொந்தனை யென்றுரை செப்பினான்.

(இ-ள்.) அப்படிச் சீறிச்சினந்து உதைத்த துருவாசரைப்பார்த்து விஷ்ணுமூர்த்தி பொறுத்துக்கொண்டு, முனியீசுவரரே என்னுடைய மார்புகடினமாயிருக்கும் உம்முடையபாதம் நோகுமேயென்று துருவாசன் பாதத்தை யேந்திப் பிடித்

தத் தேவரீர்கோபித்தீர் அடியேன் பயப்பட்டேனென்று குளிர்ந்த வார்த்தைகளை
ச் சொன்னார்.—எ-று. (௬)

மாயனிப்பொறை வாய்மையுணர்ந்தபின், சேயசிந்தைகளித்தருள்செய்தயன்
மேயபூசைவிடச்சிவன்மிச்சல்சி, ரேயெவர்க்கும்வெறுப்பென்றியம்பினன்.

(இ-ள்.) அப்படிப் பொறுமையுடனே விஷ்ணுவானவர் பிரியவசனஞ்சொன்
னபின்பு, சினந்தீர்ந்து சிந்தைகுளிர்ந்து கிருபைசெய்து பிரம்மாவுக்குப் பூசையில்
லாமற் போகவும், சிவனிருமாலிய மாவருக்கும் வெறுப்பென்று சபித்துவிட்
டான் தூருவாசன்.—எ-று. (எ)

ஆயகோப விரதன்சொலம்மொழி, யேயமாயனிறைஞ்சிவிடுத்தபின்
றாயவாயிற்றுவாரத்திருவர்சேர், வாயில்விட்டதென்வம்பினெனச்சொன்னார்.

(இ-ள்.) அந்தக் கோபமுனிவர் சொன்ன தன்மைவசனத்தினாலே மனங்கு
ளிர்ந்த விஷ்ணு, முனியைவணங்கி அனுப்பியபின்பு, அழகியவாசற்காவலான ரிரு
வரையுமழைத்து நீங்களந்தத் தூருவாசமுனியைத் தடுக்காமற் கோயில் வாசலி
லுள்ளே விட்டுவிட்டீர்களே அதுவென்னவென பகருவீரவென்று சொன்னார்.

இன்றுநீர்பதாமலியற்றியவன்றொழிற் கொருசாபம்வழங்குதும்
நின்றபடாரிவின்சத நீள்பவந்துன்றிதன்றி முச்சென்மந்துன்னுர்களா?

(இ-ள்.) இப்போது நீங்களிருவரு மெனக்குஅபசாரஞ்செய்த கொடியசெய்
கைக் கொருசாபங் கொடுக்கிறோம், யாதெனில் நமக்குப் பரிவுடையவர்களாய்
நூறுசென்மம் பிறந்து வருவீர்களாக, அல்லது மூன்று சென்மம் எனக்குப் பகை
ஞராய் பிறந்திறந்து வருகிறீர்களா. இவ்விரண்டி லொன்று சொல்லுவீரென்று
சொன்னார் விஷ்ணு.—எ-று. (௯)

ஆகவென்றிதில் யாதுவிருப்பத்தி, லேகுவென்ன விகலின்முச்சென்மம்யாம்
நாகநாக சயனநின்கைப்படைப், பாகிநாலுன் பதத்துளமென்றனர்.

(இ-ள்.) ஆகையாலிந்த இரண்டுவகை சாபத்திலே எதுவிருப்பமாகச் சொல்
லுகிறீர்கள் சொல்லுமென்று விஷ்ணுவினவ, சுவாமீநாங்கள் மூன்றுசன்மமெடு
த்து நாகசயன மூர்த்தியாகிய உமக்குப் பகைவராய்ப் போர்செய்து தேவரீர் கை
யாயுத மெங்களைக் கொல்ல எப்போதும்போலே சுவாமி பாதத்திற் சேர்வோ
மென்று சொன்னார்கள் துவாரபாலகர்.—எ-று. (௧௦)

என்றுமுற்பிறப்பின்முன்னிரணிய, னன்றிவென்றியிரணியவக்கனுய், மென்
றவத்திற்பிறந்துபின்னோர்தமைக், கன்றவெவ்வரங்கைக்கொண்டிருந்தனர்.

(இ-ள்.) அப்படிசொன்ன துவாரபாலகர் மனோபீஷ்டப்படி விஷ்ணு சபித்
தார், அவர்களு மந்தச்சாப மேற்றுக்கொண்டு மூன்று பிறப்பில் முதற்பிறப்பு
வெற்றியையுடைய இரணியன், இரணியாட்சனுகப் பிறந்து வளர்ந்து தவஞ்
செய்து பகவான்றரும் வரம்பெற்றுத் தேவர்களை இமெக்கண்செய்து சகல உலகங்
களையும் ஆண்டுகொண்டிருந்தார்கள்.—எ-று. (௧௧)



[illegible]செய்த விறிறல்தவத்தினு, லரணில்மூவுல குக்கெய்வமாயினு
னிரணியநம ஹாவென்றியம்பியே, காணவேதமுங் கைதொழவாண்டனன்.

(இ-ள்.) இரணியாசுரன் செய்த தவமகிமையினாலே காவலாகத் திரிலோக
கத்துக்கு மூர்த்திகரமாகத் தெய்வமானான், இரணியநம வென்று சருவத்திரா
ஞஞ்சொல்ல ஆகமவேதங்களும் வேதநுங் கைதொழுது வணங்கத்தன்னுடைய
ஆணையாக்கினை செலுத்தி அண்டபுவனங்களை யாண்டுகொண்டிருந்தான.—எ-று.

அந்தவேலை யருந்தவர் வானவர், நொந்துசிந்தை நுடங்கியரியிடத்
தெந்தை கேள்வனிரணியன் வாழ்வற, வுந்துபெங்கட்குணகருள் வேண்டுமால்.

(இ-ள்.) அந்தக்காலத்தில் இரணியாசுரன் செய்கிற ஆக்கினைக் கொடுமை
க்குப்பயந்து அரிய தவமுடைய முனிவர்களுந் தேவர்களு மிகவு மனது நொந்து
சிந்தாகுலத்துடனே ஆதி விஷ்ணுவினிடத்திற்சென்று சுவாமீ கேளும். எங்களை
நெருக்கஞ் செய்கிற இரணியாசுரன் வாழும் வாழ்வுஞ் சிதையச் சங்கரித்து
எங்களுக்குச் சுகமுண்டாகும்படிக்குத் தேவரீர் கிருபைசெய்து இரட்சியுமென்று (௧௨)
முறையிட்டார்கள்.—எ-று.

எனவியம்ப விரணியன்மைந்தனு, மினியசொற்பிரக லாதனையேயினு
னனகனுப்பிறந் தைந்துவயதினி, லுன்றில்வாலய னுதலொடுங்கினன்.

(இ-ள்.) என்றிப்படி முறையிட்ட தேவர்களுக்கு விடைகொடுத்து இரணி
யன் மைந்தனாகப் பிரகலாதனைப் பிறக்கும்படியாகச் செய்தார். அவனும் மன்மத
னைப்போல சவுந்தரியமுடையவனாய்ப் பிறந்துவளர்ந்துவந்தான். ஐந்துவயதிலே (௧௪)
உசதவுறினாலே வாசிக்கத்தொடங்கினான்.—எ-று.

குரவனந்தக் குமாரனைமுன்னிறீஇ யிரணியநம ஹாவென்கவென்றபின்
காணபாலன்றன் காதிற்கரம்பெற, விரணியநம ஹாவென்பதேதென்றான்.

(இ-ள்.) அப்போது உபாத்தியாயர் அந்தப் பிரகலாதனை முன்னாக நிறுத்தி
இரணியநமவென்று சொல்லப்பாவென்று சொல்ல, அதுகேட்டு பிரகலாதன்
இரண்டு கைகளாலுங் காதுகளை மூடிக்கொண்டு சுவாமீ நீரிப்படி சொல்லப்ப (௧௫)
டாத இந்தச்சொல்லை சொன்னதேதென்று கேட்டான்.—எ-று.

பின்னர்யாதெனப் பேதைக்குரவனு, மன்னபால னுரைப்பதருளினுற்
கன்னலுங்கனித்தேனுபமுதமு, முன்னவாய்ச்செவிமொய்ந்தெனச்சொல்
லுவார்.

(இ-ள்.) அப்படிச் சொன்ன பிள்ளையைப் பார்த்து உபாத்தியாயர் பின்னெ
ன்ன சொல்லுகிறதென்று கேட்க, பிரகலாதன் அன்பினாலே கற்கண்டுங் கனிக
ளுந் தேனு மமுதமுங்கலந்து உண்பவர்க் கெப்படி ருசிக்குமோ அப்படிச்செவிக
ளுக்கு இனிமையாகும்படி அரிகர மந்திரத்தைச் சொல்லுற்றார்.—எ-று. (௧௬)

வேறு.

[illegible]யநம வென்பதல்லாதஃது நவிலத்தகாதவிதுமேற்
காரரதிநரகமுங் காகப்பதாகையின் கண்ணுங்கொடுக்குமரியின்

போதுமக்கறை பிறக்கினி நனையும்வாழ்வு பெருதுமச்சு தனயுகரும்
கோயிதினைத்தன நினைத்தனநிலைக்கும்வா ளிலையுந்தருங்குரவனே

(இ-ள்.) ஓம் நமோநாராயணாயவென்று சொல்லுகிறவென்றுசெல்லவேயக்காமல் நீர்சொல்
லத்தகாத வார்த்தையைச் சொன்னால் ஈவரவாதிரக பேதமையும், மூதேவி பத
வியு ; கொடுக்குமாகையால் அந்தச்சொல்லை மறந்துவிடும், அரிநாமமந்திரமாகிய
அஷ்டாக்ஷரம் இதனை எவர்சொல்லினும் இம்மை மறுமைக்கும் வாழ்வைத் தருவ
தன்றியும் விஷ்ணுபதமுங் கொடுக்கும், நன்மையாக நினைத்த காரியமெல்லாங்
கைகூடவரும், சேர்க்க புவனபோகமும் கிடைக்கும் குருவே என்றுசொன்னார்
பிரகலாதன்.—எ-று. (கஎ)

எனப்பிரகலாதனுரை யெய்தியபினக்குருவி னிதையக்கலங்கியதனால்,
மனத்துயர் விளைந்தெனயு மூளையுமிப்பொழுதே வதைப்பனிது கேட்பின்
மகலாப், நினைத்தெனதுசொற்படி நிகழ்த்தெனப்பலவாய நிலையினுஞ்சொ
ல்லதில்கானான், கனத்தவரமந்திரங் கைவிடுவதின்றெனக் கனகன்முன்
னைனனரே.

(இ-ள்.) என் றிப்படியாகப் பிரகலாதன் சொல்லக்கேட்ட உபாத்தியாயர்
மனதுகலங்கி வரும் பிள்ளாய் நீ இப்போது சொன்ன வசனத்தை உன் பிதா
வான இரணியன் கேட்டால் அந்தக்ஷணமே என்னையும் உன்னையுங் கொன்றுவிடு
வான், ஆகலாலெனச்சொல்லை மறக்காமல் நினைவுடனே யான் சொன்னபடிக்
கேட்சொன்னது பலவிதங்களாகச் சொல்லியுங் கேளாமல் ஸ்ரீ அரிநாமமந்திர
த்தை மறவாமற் சொல்லுதல்கண்டு குருவானவர் பிரகலாதனை அழைத்துக்
கொண்டு இரணியாசூரனிடம் போனார்.—எ-று. (கஅ)

அவ்விரணியன்செல்வனுங்கருத்துட்கொள்ளானப்பாலகன்றந்தையை
யில்லவகையுன்னிலையுனக் கெய்துவன் னிலையென்னில் யான்சொனும் படி
மொழிகிலென், மொழிவிலாதுசொல்லேவதவுரை பெனவுரைத்தருளினு னு
னர்வற்றமுரணிரணியன், மெய்ம்மை வெகுண்டனன் றெள்ளமுதினைக்க
விழ்த் தாலநுகர் பிலமெனவே.

(இ-ள்.) அந்த உபாத்தியாயர் இரணியாசூரனைக் கண்டு உன் பிள்ளை நான்
சொன்னபடி சொல்லாமல் வேறென்றுசொல்லுகிறான் அது நீ அறிவாயென்ன,
இரணியன் பிள்ளையை மடியில் வைத்துக்கொண்டு உபாத்தியாயர் சொன்னபடி
சொல்வாய்குழந்தாயென்று பிரியமாகச்சொல்ல பிரகலாதன் தந்தையைப்பார்த்து
இவ்வகை உறுதியில்லை உனக்கு வந்ததென்ன யான் சொல்லுவதைக்கேளென்று
உண்மையான வேதங்களிற்சொல்லுகிற ஸ்ரீ அரிநாம மந்திரமாகிய அஷ்டாக்ஷரம்
இதுவென்று தெரியப்படச் சொன்னான். அதுகேட்ட அறிவில்லாத இரணியன்
உடனே அமுர்தத்தைக் கவிழ்த்து விஷத்தைக்கொள்ளுவதுபோல அதிக்கோபங்
கொண்டான்.—எ-று. (கக)

பாலனிவனமதுவென் காலனெனவுற்றுப் பகைத்தொழி றுடங்கியெனின்
பாலகிலமெழுவெரித் தாழ்த்தினன்கரிமுன் படுத்தினன்காளகூடக்



[illegible]பணவரவு கடியக்கமந்தனன் கடலுழைவிடுத்தடுசினன்
காலவெறிகட்கத்தின் மெய்கண்டதுண்டங்கள் காண்பமென வீசினனரோ.

(இ-ள்.) இந்தப்பிள்ளை எனக்குக்கூற்றுவனென்று குறித்து இவனை யெவ்வி
தத்திலுங் கொல்லுகிறதே நல்லதென்று பகைத்தொழி லாரம்பித்து அக்கினி
சொலிக்கமூட்டி யதனில் போடுவித்தான், ஆனைக்காலிலிட்டு மிதிப்பித்தான்,
காலகோடிவிஷங்களைக் கக்காநின்ற கொடியபாம்புகளை விட்டுக் கடிப்பித்தான்,
கல்தூணுடனே கட்டி சமுத்திரத்திற் போடுவித்தான், இதற்கெல்லாம் பிரகலா
தன் சாகாததைக்கண்டு மிகுந்த சினத்துடனே இவனைக் கண்டதுண்டப்பட
வெட்டுவேனென்று தன் கையிலிருந்த வாளாயுதத்தினால் வீசினான்.-எ-று (உய)

இவ்வகைபடுந்தொழிலி யாவுமவன்மீதினி லூறுதவனிருவகையினால்
மெவ்வலியிவற்குளதுமெய்ம்மையென்றவனுடன் வினவுதலெடுத்திரணியன்.
மெய்வுலகமிவ்வுலகு மெனதரசியற்றிறமுன் னூரணன்பாலனெனவே
கவ்வையறவுரைமினவ னெங்குளன்பிரகலாத கள்வகட்டுரைமினென்னு

(இ-ள்.) இப்படி பிரகலாதனைக் கொல்லத்தக்க முயற்சியெல்லாஞ்செய்தும்
அவன் சாகாதபடியினாலும், இவனுக்கித்தனை வலிமையும் பலனும் சார்புமிருக்கி
றது உண்மையென்று அவனை வினவும்படி யெதிரிட்டு இரணியன் இந்தலோக
மெல்லாமென்னுடைய அரசாட்சி யாக்கினையி லடங்கியிருக்க, இருமை செய்வா
னெவன், உன்னுடைய சுவாமியானவன் எவன், அவன் எங்கேயிருக்கிறான்,
யென்று கேட்க உன்னுடைய சுவாமியானவன்எவன், பிரகலாதனென்னுங் கள்வனே
அவனை எனக்கு சபடமில்லாமல் காண்பிப்பாய் பிரகலாதனென்னுங் கள்வனே (உக)
யென்றான் இரணியன்.—எ-று

ஐம்புலனுமைம்பெரும் பூதமும்மைஞ்ஞூறுடைஞ்ஞாயுபணவரவினு
மும்பருலகுஞ்சிறுவுளவுடமிடத்தினு முலகங்கள்பலவைப்பினு
மிம்பருஞ்சுருபவரு பத்தினுங்கரிமுதலெறும்பினுமிவ்விடமீதினு [ளுப்
மெய்ப்புனிதனுற்றுறைவனெங்குமவனேதெய்வ மெனவறிகொடுந்தொழிலி
யுடையவனே என்றுசொல்லிப்பின்னையுஞ் சொல்லுவான்.

(இ-ள்.) என் றிப்படி இரணியன்வினவ, பிரகலாதன் என்னவிலிருக்குமவன்
ஐம்புலாதிகளிலும் பஞ்சபூதங்களிலும் ஆயிரம் பணமுடிச் சேஷசயனத்திலு மே
லுலகத்திலுஞ் சராசரங்களனைத்திலும் வைப்பாகிய பலவுலகங்களிலுஞ் சொரூப
ங்களிலும் அருபங்களிலும் யானைமுதலெறும் பீறாகிய சகல ஜீவாத்துமாக்களி
லும் இவ்விடத்தின் மேலும் என்னுடைய கர்த்தாவான ஸ்ரீமத் நாராயணமூர்த்தி
யிருப்பான், அவன் தெய்வமென் றறிவாயாக கொடிய குணத்தின் தொழிலை
யுடையவனே என்றுசொல்லிப்பின்னையுஞ் சொல்லுவான்.—எ-று (உஉ)

சிவனுஞ்சிவனல்லாதவெப்பொருளிலுஞ் சேர்வனென்னாரணன்
காகவுயிரணிய னெனச்சொலுங்காலையிற கனகாத்தினத்தூணிலும்
[illegible]வருகினுந்தவ னிருப்பனெனவேதி நடுநடுங்கக்கையறைந்
[illegible]வுரைப்பவதி லண்டாண்டத்திருளி னொருசிங்காதமுளதால்.

([illegible].) பல உயிர்களிலும் உயிரில்லாத பொருள்களிலுந் தூணிலுந் துரும்பி
லு மெங்கும் நிறைந்திருப்பான் என் சுவாமி நாராயணன் இரணிய சூரனே

யறிந்துக் கொள்ளென்று சொன்னான், அப்போது இந்தத் தூணிலுமிருப்பானோ உன் கர்த்தாவென்ன, அப்படி யதிலுமிருப்பானென்று சொல்ல, அப்போது ஓங்காரஞ்செய் துறுக்கி யண்டபுவனங்கள் நடுநடுங்க அந்த சொர்ன்னமணித் தூணை இரணியன கையினாலே ஓங்கிக்குத்தி யறைந்து இகழ்ச்சியான சில வசனங்களைச் சொன்னான், சொன்னவுடனே அந்தத் தூணிலிருந்து உகாந்தகாலத் திடிமுழக்கம்போலும முழங்கி ஒரு சிங்கநாதம் உண்டாச்சுது.—எ-று. (உ௩)

அங்கவனையெனு துடன் போர்விளையெனப்பகரு மளவிலப்பிரகலாத
னங்குலைநாராய ணாயநமவருகென மலவிலங்கிலாண்டமுழுதுந்
தூங்கமிகநிமிர்வுறத் தோள்களொருநாலுந் தொடர்ந்துகாற்றிக்குநிறையச்
செங்கமலவிணையடிகள் சேடன்பணாமுடிச் சிகரநெரிநெறனவுலவா.

(இ-ள்.) அப்படி முழங்கின சிங்கநாத ஓசையைக்கண்டு இரணியசூரன் தூணைவிட்டு வெளியேவாடா என்றுடனே யுத்தம் பண்ணடா வென்று சொன்னான். அப்போது பிரகலாதன் சுவாமீ லட்சுமிமணாளா ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே நமஹா வெளியே வரவேண்டுமென்று ஸ்தவத்திரஞ்செய்ய, அந்தத் தூணைப்பிளந்துக் கொண்டு வெளிப்பட்டு நரசிங்காவதாரமாக அகிலாண்ட மெல்லாந் தமது கிரீடந்தோய்ந்து நிமிர்ந்துவர எட்டுத்திக்கும் நான்கு புயங்களும் நெருங்கி நிறைய, இரண்டு சிங்கபாத கமலங்களும் பூமியிடம் போராமல் மிதித்துவர, ஆதிசேடன் பணமகுடங்கள் நெரிந்து தலைசாய்ந்து நெளிக்கவும்வந்தார்.—எ-று. (உ௪)

முடிகளண்டவைப்பினுக் கப்புறத்தப்புறத் தப்புறமுமுடி வரிதென
வடிகொண்டவெண்பல் லினுக்கொருபல்லாயிரம் யோசனைகளாகவுலகம்
வெடிகொண்டதிர்ந்தென வன்னகிர்விதிர்ப்பன விசாலவிழிவடவானலப்
படிகொண்டுநின்றனசுழலப்பாரநரசிங்க படிவம்பிறந்துளதரோ.

(இ-ள்.) அப்படிவந்த நரசிங்கமூர்த்தியினது முடிகள் அண்டங்களுக் கப்புறத்தும் ஊடுருகவும்: கூரியசிங்கப்பல்லுக ளொன்றுக்கொன்று பல்லாயிரம் யோசனை விஸ்தாரமாக கை கொட்டிடவும், உலகமெல்லாம் இடியிடித்ததிர்ந்ததுபோலும், அவர்வருகிற அதிர்ச்சியினாலே கிடுகிடென்று அதிர்ந்து சிலையோடவும் நகங்கள் விதிர்விதிர்த்திட விலாசமான வட்டக்கண்கள் வடவாக்கினிபோலெரிந்து பொறிபறக்க. அண்டங்கள் சுழலப்பெரிய நரசிங்கமூர்த்தி தோன்றிக்கைகொட்டி ஆர்ப்பரித்து நின்றார்.—எ-று. (உ௫)

பிறந்தவுடனப் பிரகலாதன்மறைவுற்றனன் பெரிதுநரசிங்கமெதிர்போய்
மறந்தருமனத்திரணி யன்கனவினைத்தொழில் மலைந்தனனிவ்விருவருமலைந்
திறந்திடநகத்தினு லிரணியன்கனவயி றிடந்துருநிதிகணுகர்தலா
னிறைந்துநரசிங்கவெறிநெடிதுநாராணவுலகில் நிகழ்வித்துநின்றபொழுதே.

(இ-ள்.) இப்படி வெளியே புறப்பட்டவுடனே பிரகலாதன் மறைந்துநின்றான் பெரிய நரசிங்கமூர்த்தி வஞ்சமனத்தனான இரணியாசூரனுடனே எதிர்த்து யுத்தம்பண்ணி அவன் சவுரியபெருமை வலுமையெல்லா மடக்கி அவனைக் கொல்லவேணுமென்று நரசிங்கத்தினுடைய நகங்களினாலே இரணியன் வயிற்றைப்



கிழித்துக் குடல்களை மாலையிட்டு இரத்தங்களைப் பானம்பண்ணினார். அதிலொரு வெறியுண்டாகி மிகவும் பித்தனாக ஆடிச்சுழன்று அண்டமதிரக் குதித்து நிற்கின்ற காலத்தில்.—எ-று. (உ௬)

பித்தனொருசரபப் பெரும்புள்ளின்வடிவினாற் பெரியநரசிங்கமதனைக்
கொத்தியண்டத்திற் கொணர்ந்திட்டபின்னறிவு கொண்டுவிண்டபாதமெ
ரித்தகைவிட்டபினனு மிரணியாக்கன்புவி யெடுத்தகிலபாதாளவாய் (ன்
வைத்தபடியாலவனை மடியவமர்செய்யவிரு வர்கள்பிரமஹத்திதொடலால்

(இ-ள்.) அப்படி நரசிங்கம் பித்தவெறியா லாடித்திரிய, பிரம மெஞ்ஞானமூர்த்தி சரபப்பட்சியாகிவந்து நரசிங்கத்தைக் கொத்தி அண்டசடாகத்துக்குக் கொண்டுபோய் குலுக்கிவிட இரத்தங்களெல்லாங் கக்கினபின்பு அறிவுவந்து அபராதஞ் செய்தேனென்று சிவனைவணங்கி விடைகொண்டு தம்முடைய லோகத்துக்குப் போய்ச்சேர்ந்தார். பின்பு இரணியாட்சதன புவியைப்பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய் பாதாளத்திலே வைத்தான். அதையறிந்து விஷ்ணுவராக அவதாரமாய்ப் பூமியையிடந்து பாதாளம்புகுந்து இரணியாட்சதனை யடர்ந்து கொன்று புவியை முன்போல நிலைக்கச்செய்தார், அந்தபிரமஹத்தி விஷ்ணுவைத்தொடர்ந்து பற்றிக்கொண்டபடியினால்.—எ-று. (உ௭)

வேறு.

மதுகயிடவரெனு மகிழ்பெறவிருவர் வனசெவியிடைமாசா
லதிகமெய்வலியுங்கனவுருவொரவிபுமவரவ நடனுர்கதுப்
புதிதொருமாசின் புக்கவரதமுற போகனுசிறிதுமிலா
ருதநியினடுவணிவமனவனைநின்ற ணுறமலைகுவரால்.

(இ-ள்.) பின்பு மதுகயிடவரென்னும் இரண்டுபேர் மகாவிஷ்ணுவினுடைய காதுக் குறும்பையினாலே பிறந்து வளர்ந்து அதிக புஜபலபராக்கிரம சாலிகளாக இடிபோற் சத்தமிட்டு அட்டகாசஞ் செய்து ஒருவரோ டொருவர் ஆர்ப்பரித்துப் போர்தொடுத்து நின்று செவிமாசிற் றோன்றினவராதலால் மவுடீகத் தன்மையால் கடல்நடுவிலே சயனித்திருக்கின்ற விஷ்ணுவை இவனார் இங்கிருக்கிறவனென்று தங்கள் தங்கள் மார்பினாலே நெருங்கிப் போர்செய்தார்கள்.—எ-று.

ஆழியினெடுமது கயிடவர்பூச லனந்தயுகங்கால
மூழியினிகல்செய் தொருவர்க்கொருவ ரிளைத்திலரிருநிருதர்
பாழியில்வலியின் பச்சைப்படிமப் பண்ணவனைப்பார்த்து
வாழியுன்வலிமை மகிழ்ந்தனன்யாது வரம்வேண்டுவதென்றார்.

(இ-ள்.) கடல்நடுவிலே சக்கராயுதனுடனே மதுகயிடவ ரிருவரும் அனேக காலம் போர்செய்து ஒருவருக்கொருவ ரிளையாமல் இரண்டுசூரருந் தாழ்வில்லாத வலிநிலைமையிற் கார்மேகவண்ணனாகிய விஷ்ணுவைப்பார்த்து நீ வெகுசமர்த்தன் உன்சவுரியத்தை மெச்சி மகிழ்ந்தோம் உனக்கென்னவரம் வேண்டுங்கேள் தருகிறோமென்று சொன்னார்கள்.—எ-று. (உ௮)

எமதுகாச்சக்கரம் விட்டா னிறவரமருள்கெனவே
கமலனுதித்தரு ளுந்திக்கதுமது கயிடவருள்கின்றார்

தமதுகரச்சக் கரம்விட்டவர்தந் தலைகளறுப்பவன்றோர்
வெகுதகமேதை நிலத்திலிசெய்திட மேதினியெனவுளதால்.

(இ-ள்.) இப்படிச்சொன்ன மதுகைடவரைப் பார்த்து விஷ்ணுவானவர் கைச்சக்கரத்தால் உங்கள்தலை யறுபட்டு இறக்கும்படிக்கு வரங்கொடுக்க வேண்டுமென்றுகேட்க, கமலனுதித்த பதுமநாபனுக்கு மதுகைடவரிருவரும் அப்படியே வரங்கொடுத்தார்கள். உடனே விஷ்ணு தன்கைச்சக்கராயுதத்தை விட்டுத் தலைகளை யறுத்துவிட்டு அவர்களுடம்பின் தோலையுரித்து இரத்தமேதைகளுடனே நிலத்தின்மேல் விரித்து அமைத்தபடியினாலே பூமிக்கு மேதினியென்று பெயர் விளங்குகின்றது.—எ-று. (௧௰)

மாயன்றனதிடை வருமகவாகிய மதுகைடவர்படலா
லேயுப்பழியந் தகவுமிப்புற விரணியனைப்பொருத
காயந்துண்டித் திடுபழிபகலுங் காரணமாகவும்வந்
தேயும்பணிமலை நாகேசுரனை யிறைஞ்சு தமெனவந்தான்.

(இ-ள்.) விஷ்ணுவானவர் தன்னிடத்தில் வந்த மதுகைடவரைக்கொன்ற பழிதீரவும், வலிமைபொருந்திய இரணியாட்சதனைக்கொன்ற பிரமஹத்தி தீரும்படியாகவுந் திருநாககிரி நாகேசுரனைப் பூசித் தர்ச்சிக்கவேண்டிவந்தார் விஷ்ணு.

வந்துவணங்கிப் பணிமலைமீதொரு மரகதவடிவான
வெந்தையையேருக் கொடுமுடிமீதி லெழுந்தகொழுந்தைநறுஞ்
சந்தனபரிமள கஸ்தூரியிலபி டேகந்தனியாட்டி
வந்தனைசெய்தொரு வாவியுமேற்பால் வரவருளுற்றனனால்.

(இ-ள்.) விஷ்ணுதேவர் திருநாககிரிமே லெழுந்தருளிய மரகத வெந்தையையும் மேருசிகரத்தில் வீற்றிருக்கின்ற கற்பகக் கொழுந்தையும், சந்தனபரிமள கஸ்தூரி இவிர்ந்த களபங்களால் அபிஷேகமுதலிய அலங்கிர்த உபசாரங்களுஞ் செய்து பூசித்துத் தன்பெயரால் ஒரு தீர்த்தமு மேற்குப்பக்கத்தி லுண்டாக்கியருள்பெற்றார்.—எ-று. (௧௨)

அங்கதுவிண்டுவின் தீர்த்தமெனப்பெயராயினவத்தீர்த்தந்
தங்கியபலனத் தீர்த்தமகாண்டந் தன்னிலுரைப்பமரிக்
கிங்கிதமுறவின் நாகமலைப்பர னென்றும்பிரியாதே
தங்கினனாதி கேசவனெனவந் தவனிருதித்திசையே.

(இ-ள்.) அந்த தீர்த்தம் அன்றுமுதல் விஷ்ணுதீர்த்தமென்று பெயராய் விளங்குகின்றது. அந்தத் தீர்த்தத்தின் மகிமைப்பலன்களை மேலே தீர்த்தகாண்டத்தில் சொல்லுகின்றது. விஷ்ணுவுக்கு பிரமஹத்தி தோஷமுந்தீர்ந்து சுகம்பெறச்செய்த நாகேஸ்வரனை விட்டுப்பிரியாமல் அந்த ஸ்தலத்துக்கு நிருதித்திசையில் ஆதிகேசவரென்னும் பெயராய் வசிக்கின்றார். விஷ்ணு.—எ-று. (௧௩)

விஷ்ணுபூசைச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம்.—௨௮௧.

# பிரமன் பூசைச் சருக்கம்.

விண்டுவின் பூசைநாக வெற்பினிலியற்றிவெள்ளைத்
துண்டவெண் பிறையுலாவு சுடர்முடிச் சடிலச்சோதி
வண்டிசை மலர்ப்பூங்கோதை வாமனைப்போற்றுபின்னுட்
புண்டரீகத்தன்பூசைப் புகலுவன் றவத்தர்கேண்மோ.

(இ-ள்) திரேதாயுகத்திலே திருநாககிரியீஸ்வரனை விஷ்ணு பூசித்தபின்பு, துண்டமான வெள்ளிய இளம்பிறைதவிழ்ந்து பிரகாசிக்கின்ற சடாமகுடங்களையுடைய சோதியை, வண்டுகளிசைபாடி மொய்க்கு மலர்மாலைசூடிய கூந்தலையுடைய உமையொருபாகரைத் திரேதாயுகத்தில் பிரம்மதேவன் வந்து பூசித்த முறைமையைச் சொல்லுகிறேன் தவமிகுதியுடைய முனிவர்களே கேண்மின்களென்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (௧)

முதலுக மகன்றபிற்றை முராரியு மயனுந்தம்முட்
சிதைவிலா லெதுளிதோன்றிச் செருத்தொழிற் குருத்தகாலை
யதனைவிலக்கமண்ட வண்டரண் டத்துமப்பாற்
கதிரொளி யனலத்தூணங் கணடிருகருமுட்கொண்டார்.

(இ-ள்) முதல்யுகம் போனபின்பு இரண்டாம்யுகத்தில் அரிபிரம ரிருவரும் நான்பெரியவன் நான்பெரியவனென்று ஒருவருக்கொருவர் பகைத்து அதிகோபங்கொண்டு அனேககாலமாக யுத்தஞ்செய்தார்கள். அப்போது அவர்கள் பகையைத் தீர்க்கும்பொருட்டு அவ்விருவருக்குமத்தியில் சிவபெருமான் அகிலஅண்டபிரம்மாண்டங்களெல்லாம் ஊடுருவும்படி பிரகாசம் பொருந்திய ஒரு அக்கினித்தூணாகவந்து நின்றதுகண்டு இருவருமவரவருள்ளத்தில்மலைத்துத்திகைத்து நின்றார்கள்.—எ-று. (௨)

ஈதடி முடியைத்தேடி யின்னதென்றறிந்தோர்மேலோர்
போதுவ மெனவேதங்கள் புன்மதி நினைவின்கூறி
மாதவன் ஏனமாகி மலரடி தேடிச்சென்றான்
வேதனே திமமாயண்ட விரிவெலாம் பறந்தான்மன்னோ.

(இ-ள்) அப்போது பிரம்மாவும் விஷ்ணுவும் போர்த்தொழிலைவிட்டுத்தங்கள் புன்மதி நினைவினாலே இந்த அக்கினித்தூணினது அடியு முடியுங் கண்டவர்களே பெரியவர்களென்று நிச்சயித்துக்கொண்டு, விஷ்ணு வராகவுருவமாகி மலரடியைக்காணுவேனென்று பாதாளமார்க்கமாகத் தேடிப்போனார். பிரம்மதேவன் அன்னப்பட்சி யுருவமாகி முடியைக் காணுவேனென்று ஆகாசவழியே பறந்து தேடிப்போனார்.—எ-று. (௩)

அனந்தற் பங்கள்மாய னடிமலர் சிறிதுங்காணுன்
கனந்தரு புடவிகேண்டு ழிவது மயர்கூர்ந்தான்

வனந்தர கமலத்தோனும் வானுழை யனேகங்காலந்
தினந்தினந் தேடநின்றான் செயலிதற் கொன்றுங்காணான்.

(இ-ள்) அளவில்லாத கற்பகாலம் வராகரூபமான விஷ்ணுவானவர் பூமியைக் கீண்டிக்கொண்டுபோய்த் தேடியும் அனற்றூணினடியைச் சிறிதேனுங் காணமற் றிகைத்து நின்றார். அன்னப்பட்சியான பிரம்மதேவன் அனேககாலம் அண்டங்களெல்லாம்பறந்து மேலேபோய் அக்கினித்தூணினது முடியைக்காணமல் தேடித் திகைத்திளைத்துச் சொல்லுதற்கொரு செயலுமில்லாமல் கவலையுற்றான்.—எ-று.

அவ்விடைவிடைப்பின்பாக னவிர்சடை மகுடமீதாஞ்
செவ்விடை படற்றண்கைதை சேணவால் காண்பவேத
னெவ்விடை நின்றுநீயீண் டெய்துவ தியம்புகென்னத்
தெவ்விடக் களத்தான்சென்னிச் சூட்டினிற் கழித்ததென்றே.

(இ-ள்) இப்படிப் பிரம்மதேவன் கவலையுற்று நிற்கும்போது, சிவனுடைய சடாமகுடத்திலிருந்து கீழேஇறங்கிவருகிற அழகிய மடலையுடைய தாழம்பூவைக் கண்டு நீயெங்கிருந் தெவ்விடஞ் செல்லுகிறாயென்றுகேட்க, விஷமுண்ட கண்டனான பரமேசுவரன் சடைமுடியிலிருந்து கழித்துவிட்டபடியினா லங்கிருந்து வருகிறேனென்று சொல்லியது.—எ-று. (௫)

கேதகை யோதக்கேட்ட கிளர்சிறை யனத்தோனிந்தப்
போதினில் மாயன்றன்னைப் புகுந்துநாம் வெல்வோமென்றே
யீதென வறியேனெந்தை யெழில்முடி யெனக்கோர்நண்பு
சூதினி யுரைப்பவேண்டுந் துணைப்பெருங் கைதாவென்றான்.

(இ-ள்) அப்படி தாழமடற்பூ சொன்னதைக்கேட்டு அன்னவடிவான பிரம்மதேவன் யோசனைசெய்து இப்போதிதனைக்கொண்டு சென்று விஷ்ணுவை நாம் வெல்லுவோமென் றெண்ணி ஓ கேதகைப்பூவே, சிவனுடைய முடியை யணுவளவுங்காணேன் நீயெனக்கொரு சகாயமாகவந்து பொய்சாட்சி சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்—எ-று. (௬)

என்றபோ தவன்றன்கூட வெழுந்துசெம் மடற்பூங்கைதை
மன்றலந் துளபன்காண மகத்துற காலைபோதுங்
கொன்றையஞ் சடிலங்கண்டேன் கோதியகே தகையிதென்பால்
வென்றியி தவன்றன்சென்னி வேணியி லிருந்ததென்றான்.

(இ-ள்) கேதகைப்பூவும் அதற்குச்சம்மதித்துப் பிரம்மதேவனுடனே புறப்பட்டுக்கீழேயிறங்கிவந்து அடியைக்காணமல் மயங்கிநிற்கின்ற விஷ்ணுதேவரைக்கண்டு நான் சிவனுடைய கொன்றைமாலைசூடிய வழகிய சடைமுடியைக்கண்டேன், சிவன் சடையிற்றரித்திருந்து கழித்துவிட்ட கேதகைப்பூவிதோ பாருமிதுவேசாட்சி, நீ தோல்வியடைந்தாய் நான் வெற்றியடைந்தேனென்று பொய்சொன்னான் பிரம்மதேவன்—எ-று. (௭)

கரியிது கரியோய்வெங்கைக் களிற்றினை யுரித்தார் சென்னி
விரிசடை முடியைக்கண்டேன் விண்டுநீ காணாய்கொல்லோ



இருதிருக் கபலபாதம் யானணுவேனுங் காணேன்
தெரிவரு கமலத்தோபென் செப்பவதே னுண்மையென்றான்.

(இ-ள்) வாரீர் விஷ்ணுவே, இந்தவோலைப்பூ சாட்சியாக வெவ்விய துதிக்கையுடைய யானையை யுரித்தப்போர்த்த சிவனுடைய விரிந்த சடைமுடியை நான் கண்டேன், நீர் சுவாமி அடியைக்காணீரோவென்று சொன்னான். அதற்கு விஷ்ணு சொல்லுகிறார் வாரீர் பிரம்மாவே, சிவனுடைய இரண்டுசீர்பாதகமலங்களை நானணுவளவுங் காணேனினியென்னசெய்வேனுள்ளபடியென்றான் விஷ்ணு.

அயன்புக றீபொய்யு மரிபுகல் வாய்மைமெய்யும்
புயங்கபூ டணதாருள்ளப் புந்தியி லுணர்ந்துதோன்றி
நயந்துமா யனைவேதாவை நடுங்கவோர் சிரத்தைபற்றி
வயங்கெழு மாயன்கோவில் வாழ்வுல கனைத்தமைத்தா,

(இ-ள்) இப்படிப் பிரம்மதேவன் சொல்லிய பொய்யும், விஷ்ணுமூர்த்தி சொன்ன மெய்யுமிவ்விரண்டையும் நாகாபரணனான பரமேசுவரர் தமது திருவுள்ளத்திலுணர்ந்து அவர்களுக்கெதிர்வந்து நின்று நீ இந்தப்பொய் சொல்லலாமாவென்ற பிரம்மதேவன் சிரசுகளிலொரு சிரசைக்கிள்ளியெறிந்தார். விஷ்ணுவைப்பார்த்து பிரியவசனங்கூறி விஷ்ணுஸ்தலம் உலகமெங்கும் விளங்கித்துதிக்கும்படி அருள்செய்தார் சிவன்.—எ-று. (௯)

பிரமனுக் குலகமெங்கும் பெருகுமா லயங்கள்மாற்றிப்
பரமனன்றனையக்சன்ற பான்மையாலவற்றைத்தீர்ப்ப
வருணையிற் பூசைகூர்ந்து மனங்கமா கலந்தர்ச்சித்துங்
கெருமமற் றவிரானகச் சிலம்பினைத் தேடிச்சென்றான்.

(இ-ள்) அந்தப்பிரம்மதேவனுக்கு உலகங்களிலெங்கும் கோவில் பூசையில்லாமல் தவிர்த்தும், சிவன்றனைக் கோபித்தகன்றபடியினாலே அக்குற்றந் தீரும்பொருட்டுத் திருவண்ணமலையைந்து அருணசலீசுவரரைப் பூசித்து, அனந்தசிவஸ்தலங்களில் சிவனையர்ச்சித்து மக்குற்றங்கள் தீராதபடியினாலே திருநாகிரிஸ்தலத்தைத் தேடிப்போனான்.—எ-று. (௧௰)

திருக்கயி லாயமென்னுந் தென்றிசைச் செங்கோட்டெய்தி
நெருக்கயி லாயபொற்கண் ணேரிழை பங்காபோற்றி
யிருக்கயி லாயன்றீர்த்தத் தீசனீசானந் தன்னிற்
றருக்கையி லாயபிரம்ம தண்டனோர் தீர்த்தங்கண்டான்.

(இ-ள்) தென்றிசையிலிருக்கும் கயிலாயமென்னுந் திருச்செங்கோட்டிற் சென்று குழையை நெருக்குகின்ற வேல்போன்ற அழகியகண்களையுடைய உமையொருபாகரை முப்பொழுதும் ஆகமப்படியே பூசைசெய்து வணங்கித்துதித்து அங்ஙனம் வசித்திருக்கும்போது விஷ்ணுதீர்த்தத்திற்கு மீசானியபக்கத்திலொரு தீர்த்தத்தைக்கண்டதில் வேதமந்திரங்களை யாவாகித்துத்தன் பெயரால் பிரமதீர்த்தமென்று விளங்கச்செய்தான்—எ-று. (௧௧)

கண்டதண் டீர்த்த மூழ்கிக் கமலமீ தமலதேவன்
கொண்டலி னிமிர்பூங் கோதை குலவொரு பாகனுக
விண்டுவின் முனேக பச்சை விமலனை நாளும் போற்றி
பண்டிய நவைகளுர்ந்த தறிந்தன சிறிது சொல்வோம்.

(இ-ள்.) அந்தப் பிரமதீர்த்தத்தில் நாளுக்குநாள் பிரமதேவன் மூழ்கி புனிதனாக கார்மேகம்போன்று வண்டுகள் மொய்க்கின்ற புஷ்பமாலைசூடி யழகிய கூந்தலையுடைய உமையொருபாகம் பிரியாத அர்த்தநாரீசரனே நாகக்கிரியில் வசித்திருந்த பச்சைநிறத் திருமேனியையுடைய வழகிய விமலனை நாள்தோறும் பூசித்து தன்னைப்பற்றிய சர்வபாவ குற்றங்கள் தீர்ந்ததை அவையறிந்தமட்டுஞ் சொல்லுகிறோமென்று சொன்னர் சூதமுனிவர்.—எ-று. (கஉ)

வரதிலோர்த் தனைமேன் மோக மனத்திரு ளானைத்துநீங்கி
பாதல மனைத்துமாகப் படைத்தன வஃதுமன்றே
சிரதலத் தறுமுகேசன் செயிர்த்தவை தங்கணீங்கி
புரதல நாகவெற்பிற் புகுந்துமெய்ப் போதம்பெற்றான்.

(இ-ள்.) முற்காலத்தில் அந்த திலோர்த்தமையைக்கண்டு மோகங் கொண்ட அஞ்ஞான மனவிருள்நீங்கி உலகங்களனைத்தையுஞ் சிஷ்டித்தான் அதுவல்லாமல் ஆறுமுகப்பெருமான் குட்டிச்சிறையிலிட்ட மனக்கிலேசமுந் தீர்ந்து சகல ஸ்தலமும் புகழப்பட்ட திருநாககிரியில் வந்து மெஞ்ஞானபோதமும் பெற்றுக் கொண்டான்.—எ-று. (கங)

முன்னறு முகனுர்கேட்ப மொழிந்தறி யாதபோத
மன்னெடு நாகவெற்ப னருச்சனை யதனுற்பெறுரன்
பன்னிய நவைகள்யாவு மாற்றின னுமையோர்பாகன்
பின்னுெருநக் காலும்நீங்காப் பெருந்தவம் புரியலுற்றான்.

(இ-ள்.) முன்னொருநாளிலே ஆறுமுகப்பெருமான் வேத முதற் பொருள் கேட்க அது சொல்லத் தெரியாமல் மயங்கினபொருட்டே தமு மஹாநாககிரியீசுவரனை யர்ச்சனைசெய்த முயற்சியாற்பெற்றான், தன்னைப்பற்றிய சகலபாவகர்மமெல்லாந் தீர்ந்துநிஷ்களங்க சுத்தவுத்திராகக் கிருபைகூர்ந்து இரட்சித்தார் அர்த்தநாரீசுவரசுவாமி, அவரைச்சேவித்துக்கொண்டு பிரியாம லிருக்கவெண்ணிப் பெருமையான தவஞ்செய்யலுற்றான் பிரமதேவன்.—எ-று. (கச)

பிரமகற் பங்களந்தம் பிறந்தபே ரூழிகாலம்
அரனுறச் செங்கோட்டென்று மழிவறு முறையுளீதென்
றுரிமையி னகவான்றேவ ருபர்முனி வரர்நால்வேதர்
பரையொரு பாகன்பாதம் பணித்தொழில் பயிற்றிநின்றான்.

(இ-ள்.) பிரமகற்பாந்திரங்கள் பிறந்து நிரைந்துவந்த மாகாபேரூழிக்காலத்திலும் சிவன் பிரியாமலிருக்கின்ற திருச்செங்கோட்டிலென்றைக்கும் அழிவில்லாமலிருப்பதை தங்களறிவினுலறிந்து தேவர், முனிவர், நான்மறைவேதியர் கைக்கு மாகவிருக்கிருரெனறறிந்து பிரமதேவனுமையொருபாகன் பாதங்களிற் பணிந்து பூசித்துக்கொண்டிருந்தான்.—எ-று. (கரு)



ஆதிகே சவனுர்பெற்ற வைபனென் றறிந்துவேத
நீதியின் குழாங்களானுர் நிறைந்தன வெனவுட்கொண்டு
மாதொரு பங்கன்கந்தன் மாமுகன் மகிழ்ந்துதெய்வச்
சீதமென் றீர்த்தங்கண்ட செங்குவ டென்றுநீங்கான்.

(இ-ள்.) தன்னைப்பெற்ற ஆதிகேசவ மூர்த்தியையும் வேதநெறியையுடைய முனிவர் கூட்டத்தையும் அர்த்தநாரீசுவரனையுங் கந்தசுவாமியையும் ஆனைமுகத்தையுடைய விநாயக மூர்த்தியையுங் குளிர்ந்த மேன்மையுடைய வேததீர்த்தங்களையுங் கண்டு மகா சிவஸ்தல மிதுவென்று மனமகிழ்ச்சியுடனே திருச்செங்கோட்டில் நீங்காமல் வசித்திருந்தான் பிரம்மதேவன்.—எ-று. (கசு)

புண்டரீகப் பொன்னுந்தி பொன்றிய நாளுஞ்செய்ய
வண்டாண் டங்களெல்லா மடங்குமிவ் வரைமீதென்றுப்
விண்மேமு வுலகிற்செல்ல வெற்பினிற் பிலத்துவார
முண்டென வுணர்ந்துபாய்ந்தா லுயிர்தரு மருந்துண்டென்றும்.

(இ-ள்.) அழகியபத்மநாபனாகிய விஷ்ணு கர்ப்பாந்த முடிவிலுஞ் சிவன் கிருபையாலுண்டான அண்டாண்ட பகிரண்டங்களெல்லா மடங்கு மிந்தக்கிரியில் கிரி லோகங்களுக்குஞ் சென்று மீள இம்மலையிற் பிலத்துவாரமுண்டென்றும் இறந்தாலும் பிராணனைத்தருகிற மருந்துண்டென்றுந் தெரிந்து பின்னையுமினைத்துச் சொல்லுவான் பிரம்மதேவன்.—எ-று. (கஎ)

வெள்ளியங் கிரியிலுள்ள வியப்பினு மிகுந்தமற்ற
வுள்ளன வனந்தமிந்த வுரகசெங் கோட்டிலென்றுந்
தெள்ளிய தீர்த்தந்தானுந் தெய்வமா பனையிமூன்றும்
புள்ளணி கடுக்கைவேய்ந்தோன் புணர்ந்திவ ணிருந்தானென்றும்

(இ-ள்.) ஸ்ரீகயிலாசகிரியி லுண்டான மகிமையைப் பார்க்கிலும் அனந்த கோடி மகிமை மலிந்த திருநாககிரியிலுண்டென்று தெள்ளுமையான தீர்த்த மகத்துவமும் ஸ்தலமகத்துவமும் மூர்த்தி மகத்துவமும் இம்மூன்று மகத்துவங்களுந் தேன் கமழுகின்ற கொன்றைமாலைசூடிய பரமேசுவரன் உண்டாக்கிவைத்தது தாமும் அர்த்தநாரீசுவரராக இங்ஙனமெழுந்தருளி யிருக்கின்றாரென்று தெரிந்துணர்ந்தான் பிரம்மதேவன்.—எ-று. (கஅ)

தனக்குறு வரங்களெல்லாந் தவத்தினிற் றந்ததென்று
மனத்துறு வனசநீங்கா தமர்ந்ததென் றுணர்ந்துந்தன்பொற்
கனத்துறு பிரமலோகங் கைவிட்டுந் தம்பெம்மான்
றினத்துறு செங்கோடெங்கள் திசைமுகன் றினமுநீங்கான்.

(இ-ள்.) தனக்குண்டாகிய வரங்களெல்லாம் தவமுயற்சியிற் கொடுத்ததென்றுந் தன்னுடைய மனத்தாமரையிற் பிரியாமலிருக்கின்றார் சிவனென்றுணர்ந்தும் தனது பொன்மயமான பெருமையையுடைய பிரம்மலோகத்தைக் கைவிட்டாலும் நம்முடைய கர்த்தா நித்தியரா யமர்ந்திருக்கின்ற திருச்செங்கோட்டுத் தலத்தை ஒரு பொழுதும் விட்டுப்பிரியாமலிருக்கின்றார் சதுர்முகப்பிரமன்—எ-று

அயன்றருந் தெய்வதீர்த்தந்தீர்த்த காண்டத்தீர்த்தம்
பயன்பெற வுரைப்பாம்வேதன் பணியிணையுகத்தின் போற்றி
நயன்றரப் புகன்றபாக்கர் நயந்துறச்செவியுட்கொண்டார்
முயன்றமா தவமுஞ்சீரு முத்தியுஞ் சேர்வரென்றார்

(இ-ள்.) பிரம்மதேவனருளிய தெய்வதீர்த்தத்தின் பலனை மேலே தீர்த்தகாண்டத்தில் தெரியப்படச் சொல்லுகிறோம். கிரேதாயுகத்தில் பிரம்மன்பூசித்த திருப்பாடச்சருக்கத்தை யன்புடனே செவிகுளிரக்கேட்டவர்கள் தவங்கள் நிறைவேறி முடிவில் முத்தியும் சேர்வார்கள்—எ-று. (உ௰)

மாமறை யவர்கொல் வேந்தர் வணிகர்பின் னவர்யாரேனுந்
தேமலர்க் கரங்கள் கூப்பிச் செகதல டதனைச்சூழ்ந்து
பூமகி தலத்திற்போற்றிப் புண்டரீ கத்தான்பூசை
தாமுற வுரைத்தாற்சூழ்ற தலைவிதி யழிப்பன்வேதன்.

(இ-ள்.) மேன்மையாகிய மறையவர்கள், அரசர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், இவர்கள் யாவரானாலுந் தங்கள்தங்கள் கைகளைக்கூப்பி நமஸ்கரித்துத் திருநாகிரியைச் சுற்றித்துதித்துப் பிரமன்பூசைச் சருக்கத்தைப்பாராயணஞ் செய்தவர்களுக்கெல்லாம் மேலெழுதிய விதியை அழித்திடுவான் பிரமதேவன்—எ-று.

முதலுக மாயோன்பூசை முயன்றதுங் கிரேதந்தன்னிற்
புதுமல ருந்திவந்த புங்கவன் பூசையாவும்
விதமுறக் கற்றோர்கேட்க விரும்பினர் விளைந்துகேட்போர்க்
கதிபலன் பெறுவரீண்டிக் கமலையோ ரிரண்டுஞ்சேரும்.

(இ-ள்.) கிரேதாயுகத்தில் விஷ்ணுபூசைச் சருக்கத்தையுங் கிரேதாயுகத்தில் பிரமன் பூசைச் சருக்கத்தையும் கற்றவர்களும் கேட்கவிருப்பமுற்றவர்களும் அன்புடனே கேட்டபேர்களும் அவரவரிஷ்டப்படிக்குப் பலபல கதிகளும் பெறுவார்கள் இலட்சுமி கடாக்ஷமுஞ் சரஸ்வதிவிசாலமும் பெற்றுவாழ்வார்கள்.-எ-று. (உஉ)

பிரமபூசனையைப்போற்றிற் பிராமண பூசைக்கொப்பா
யுரைதரும் வேதன்பூசை யோதிலவ் வுயர்வுதானு
மாறுர செங்கோட்டெய்தி யாரவர் புராணங்கூறிற்
பரகதி வருமாறெம்மாற் பகர்வரி தென்றார்சூதர்.

(இ-ள்.) பிரமன் பூசித்ததைப் புகழ்ந்து போற்றிசெய்தவர்களுக்கு பிராமண பூசைபலனுண்டாகுஞ் சொல்லுதற்கரிய பிரமன் பூசைப்பாடல்களைப் படித்தாலு மந்தப்பலனுண்டாகும், ஆஹாரசத்தஞ்செய்து யாதாமொருவர் திருச்செங்கோட்டுத்தலத்தில் வந்துசேர்ந்து சுவாமியைச்சேவித்துத் தலவாசஞ் செய்தவர்களுக்கு வரும்பலன்களை இவ்வளவென்று நம்மாலே சொல்லமுடியாதென்று சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளினர்.—எ-று. (உ௩)

பிரமன் பூசைச்சருக்க முற்றிற்று.

ஆக திரு விருத்தம்—௩௰௪.

# துற்கைபூசைச்சருக்கம்.

தவாமறைப்பிரமன்பணிவெற்பினிற் றங்கியேகமந் தநடங்கண்டபின்
சிவாதரம்பெறு மர்ச்சனையின்படி செப்பினேமெண் டிருப்புயச்சேயிழை
தவானுடைத்தகணசெம்பட்டினன் கன்னியுங்னியகாரியகலுவான் [வாம்
துவாபரத்தினிற் சோதியைப்போற்றிய துற்கைபூசனை சொல்லத்தொடங்கு

(இ-ள்.) நிறைந்த வேதங்களை யோதுகின்ற பிரம்மதேவன் திருநாகவிரியில் வந்து ஒரு தீர்த்தமுண்டுசெய்து சிவனைப் பூசித்த முறைமையைச் சொன்னோம், இனி எட்டிப்புயத்தவளாய் சொன்ன நிறம்பொருந்திய சிவந்த பட்டுடை யுடுத்த இடையை யுடையவளாய் நினைத்தவரங்களைத் தருகின்றவளா யென்றைக்கு மழிவில்லாத துற்காதேவி துவாபரயுகத்தி லுமையொருபாகரைப் பூசித்த முறைமையைச் சொல்லுகிறோங் கேளுங்கள் முனிவர்களே என்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (க)

போர்படைத்து வருமகிடாசுரன் பூசன்மாற்றிப் புகுந்தருணசலத்,
தேர்படைத்த கடாமகுடத்தலை யீர்வதைத்தபி னீர்வடிவாட்கழீஇச், சூர்
படைத்த சுனைக்கரை வைகலாற் சோணைவெற்பிற் சுனைக்கரைத்துற்கை
யென், றோர்படைத்திறற் பேர்படைத்தாளவ ளுள்ளிருந்த சிவலிங்கமொன்
றரோ.

(இ-ள்.) முன்னொருநாள் போராடத்தொடங்கிவந்த மகிடாசுரனைச் சங்கரித்துத் திருவண்ணாமலையி லெழுந்தருளி அழகிய மகிட னொருமைக்கடாத்தலையில் நிர்த்தனஞ்செய்த துற்காதேவி கையிலிருந்த உரியவாளைக்கழுவி சூர்வீரத்தை யுடையவளாய். அங்கொரு சுனைக்கரையிலிருந்து தவஞ்செய்து வசித்திருந்தபடியினால் திருவருணைச் சுனைக்கரைத் துற்கையென்று வெற்றிபொருந்திய ஒருபெயரைப்பெற்றாள், சங்கரித்த மகிடாசுர னுடற்குள்ளிருந்தது ஒருசிவலிங்கம்.-எ-று.

அந்தலிங்க மருந்தவன்றன்னைமுன் னூர்தலாலவ னர்ச்சித்ததாடலே
யுந்துதானவன் கண்டத்துனிற்றலை யோங்குழுச லுடற்றித் தடிந்தநாள்
சிந்தைகைவினும் வாளினும்பற்றி விடாதுபோர்மகி டாசுரன்சாயையும்
வந்துபற்றி மகிஷகலைக்கண்டனை மயேசனைக்குளம் மத்தனைவைத்தனள்.

(இ-ள்.) அந்த சிவலிங்கமானது ஒரு முனீசுவரன் பூசைபண்ணினது, மகிடாசுரன்வந்து அந்தமுனிவனை விழுங்கினு னன்றுதொட்டு மயிடன் கண்டத்துள் இருந்தது, அந்தலிங்கமேபோது மயிடன் றலையைவெட்டி மிதித்து துற்கையம்மன் வாளிலும் வாளிலும் பற்றிவிடாமல் மகிடாசுரன் சாயையும் வந்துபின் தொடர்ந்து போர்செய்வதற்கண்டு அந்தலிங்கத்தை அண்ணாமலைச் சுனையினிடத்திலேவைத்தாள் துற்கையம்மன்.—எ-று. (௩)

வைத்துநித்த மருணைப்பிரான்கழல் வாழ்த்தியேத்தி வணங்கினடாருகை
[illegible] னருணையீச னருள்புரிநேரினல்

முக்திமேவிய தில்லையினிற்சிவ லிங்கநாதனை முன்வைத்திறைஞ்சியே
சித்திதந்தரு ளிவ்வசுரன்செயல் தீர்த்தல்வேண்டு மெனத்துதிசெப்பினுள்.

(இ-ள்.) அப்படியந்த லிங்கத்தைச் சனையில்வைத்து நித்தியம் அருணசலீசுவரன் பாதத்தைப்பூசித்துத் தவஞ்செய்திருந்தாள் துற்காதேவி, அங்ஙனம் மகிடாசுரன் பிரமஹத்தி போகாததனுல் அருணசலீசுவா னருளினுலே காணமுத்தி தருவதாகிய தில்லைத்தலத்தில் வந்து அந்தச் சிவலிங்கமூர்த்தியை முன்வைத்துப் பூசித்து வணங்கினுள், சுவாமி யெனக்குச்சித்தியாக இந்தமகிடாசூரன் பிரமஹத்தி தீர்த்தருளவேண்டுமென்று மிகவுந்தோத்திரஞ் செய்து நமஸ்கரித்தாள்-எ-று (ச)

தில்லைநாயக மூவர்களுபக தெய்வநாயக தெய்வச்சிற்பர
வல்லன் யானொரு நாடகநின்னுடன் வாதுசெய்தவென் மாசுமகற்றவு
மல்லல் வெவ்வினையாற்றவு நீயெனக்கருளுமென் றுவண்டுற்கையறைந்தபின்
குல்லைமார்பன் பதஞ்சலியஞ்சலிகொண்ட பொன்னம்பலத்தினர் கூறுவார்

(இ-ள்) சுவாமீ தில்லைச்சிதம்பரயீசரரே, திரிமூர்த்திகளுக்கு மேலான தெய்வநாயகரே, திவ்விய சிதம்பர நடராசரே, அன்றொருநாள் நான் வெகுவல்லவென்று காளியாகிவந்து எதிர்த்து உம்முடன் வாதுபேசி நிர்த்தனஞ் செய்த குற்றத்தை, பின்னும் நான் செய்த வினைகளெல்லாந் தீர்த்து தேவரீர் கிருபைசெய்தருள வேண்டுமென்று துற்கை சொல்ல, குல்லைமார்பன் பதஞ்சலி யஞ்சலிசெய்து வணங்கா நின்ற கனகசபாபதிமூர்த்தி சொல்லுகிருர்—எ-று (ரு)

யாழ்மமலை மீதிற்பிராட்டியு மினிதுறைந்தக லாவெழிலாயினம்
பூமலர்த்தடஞ் சோலையுங்கங்கையும் பொய்கையெங்குப் பொலிவிற் சிறந்தன
சேமநாக மலைபெனும்பேரின செய்யகோட்டின் சிரோகத்தின்புறக்
காமரங்கம லத்தனுமாயனுங் காதலுற்றன கந்தர்விடாதன.

(இ-ள்) வாராய் துற்கையே, அழகிய புட்பக வனங்களுங் கற்பகச்சோலைகளுங்கங்கை முதலான சகல தீர்த்தங்களும் நிறைந்திருக்கின்ற சொர்னமயமான திருநாகதிரியென்னும் ஒரு மலை இருக்கின்றது, அம்மலைச் சிகரத்தில் நாமும் பார்வதாதேவியும் ஏகசரீரமாகி அர்த்தநாரீசுவர முகூர்த்தமாக எழுந்தருளியிருக்கின்றோம், அழகிய பிரமனும், விஷ்ணுவும் ஆசையுற்று, கந்தசுவாமியும் பிரியாமலிருக்கின்றமகாஸ்தலமென்று சொல்லிப்பின்னையுஞ்சொல்லுவார்சுவாமி எ-று (சு)

மாயன் வெவ்வினை பங்கயன்வெவ்வினை மாற்றியாற்ற லளித்தனதென்கயிலாயமாயின மேருவின்பொன்முடி யாயகம்பிகைக் கத்தணியுள்ளன
சேயதேவர் முனிவார்சூழ்திருச் செங்கனக்கிரி யொன்றுளதங்ஙனம் [ளுர்
போயிறைஞ்சுதி நின்னவையாவையும்போதும்போதம் பிறக்குமென்றோதி

(இ-ள்.) வாராய் துர்க்கையே, பின்னையுமந்த நாகசிரித்தலத்தில் எனைப் பூசித்த விஷ்ணு பிரம்மா யிவ்விருவருடைய வினைகளெல்லாந் தீர்ந்து மகாவலிமை பெற்றார்கள். தெட்சணகயிலாசம், அதுமகாமேருபோற்சிகரம், அது நமதுலிங்கந் தழகுபெற்று யிருக்கின்றது, தேவர்கள் முனிவர்களனைவரும்சூழ்ந்து சேவிக்குந் திருச்செங்கோடென்றொருஸ்தல மேற்குதிசையில் சிறந்திருக்கின்றது,



அந்தத்தலத்தில் சென்று சேர்ந்து நம்மைப்பூசித்தா லுன்னைப்பற்றிய பிரமஹத்தி முதலான பாவ கர்மங்களெல்லாந் தீரும், அங்ஙனம்போவாயென்று விடைகொடுத்தருளினுர்—எ-று. (எ),

நம்பராடக மன்றுட்சிதம்பர நாதரோதவன் ஞெசயிலமே
தம்பராயசெங் கோட்டினிற்சார்ந்தபின் சமரவேல்மகி டாசுரன்சாபம்போ
உம்பர்போற்றவுமாபதியைத்தொழு துவகையாற்புகுந்தாள்கலையூர்தியாள்
யம்புளித்தலைத் தன்னவன்றூனுமவ் வசலசேனையினுல் முத்தியாயினுன்.

(இ-ள்.) கனகசபை நடராசரான சிதம்பரேசுரர் விடைகொடுத்தருள துற்காதேவி அங்கிருந்து புறப்பட்டு நாகதிரியை நோக்கித்தேவர்கள் போற்றச்சிவனைப் பூசைசெய்தபிறகுச்சீக்கிரமாய்வந்து சேர்ந்தாள் பின்பு கிரிதரிசன மகிமையினுலே வெற்றிவேலையுடைய மகிடாசூரன் சாபமும் விமோசனமாய் திருநாககிரி தரிசனத்தினுலேமுத்திபெற்றுன்—எ-று. (அ)

அம்மைகாளி யழகின்றலைவியென் றுங்கடைந்தா னர்ச்சனைசெய்துதன்
விம்மிதத்தோர்வியன்சுனைத்தீர்த் தமும்வெற்பிலாக்கியமென்சுனைமூழ்கியச்
செம்மலர்த்தடஞ்சோலைப்பணிமலைச் சேவைசெய்தெழுகன்னியர்சூழ்தரத்
தம்மனத்திற்றுயரொழித்தவ்வரைச்சாரல்வைகியச்சப்புவைப்போற்றினுள்

(இ-ள்.) அம்மையென்றுங் காளியென்று மழகிய நாயகியென்றும் பெயர்கள் பெற்றுத்திருநாககிரியில் வந்துசேர்ந்து சிவனைப்பூசித்து வணங்கினபின்பு, மேன்மையுடைய தன்பெயரா லொரு தீர்த்தமுண்டாக்கி அந்தத்தீர்த்தத்தில் தினந்தினமூழ்கி நேமத்துடனே அழகியபுட்பவனஞ்சூழ்ந்த இந்த நாககிரியைப் பிரதட்சணஞ் செய்து நமஸ்கரித்துப் போற்றிசெய்து சத்தகன்னியர்கள் சூழ்ந்துவர தன்னுடைய மனத்துயரமெல்லா மொழித்துப் புனிதியாக வம்மலைச்சாரலி லமர்ந்து அர்த்தநாரீசுவரரைப் போற்றிசெய்திருக்கிருள் துற்கையம்மன்—எ-று. (கூ)

துற்கைதீர்த்தமெ னும்புனல்வண்மை பலையுத்தாகையிலோதுவந்துற்கை
யின்பூசனை, சொற்கனிந்து சுராதியர்மோனியர் தூயபாத நினைந்துசெவ்
வேளடி, யற்பகற்றொழு தம்மைப்பாகளனை யர்ச்சனைத்தொழில் முற்றினர்
தம்பல, னெற்கும்வேத வியாசருக்கும்பகர்ந் தின்னதென்னப் படாதென்
றியம்பினுர்.

(இ-ள்.) அந்த துர்க்கைதீர்த்தத்தின் மகிமைப்பலன்களை மேலே தீர்த்த காண்டத்தில் சொல்லுகிரோம், துற்கை பூசித்த முறைமையைப் புகழ்ந்து சனிவுடனே தேவர்கள் முனிவர்கள் திவ்வியபாதங்களை நினைத்துக் குமாரர்பாதங்களையு மிராப்பக லிருபொழுதுந்தொழுது. அர்த்தநாரீசுரரை அருச்சித்தவர்கள் பெறும் பலனை என்னுலும் வேதவியாசராலு மின்னபடியென்று சொல்லக்கூடாதென்று சொன்னுர் சூதமுனிவர்—எ-று. (கய)

வளியூர்தி யரவாபரணிமா தமலைசூலிமயரும்பட்டுடையினுள்
...ளிப் படையினளொண்புயக் கன்னியர்கைக் காலதராடவி

தாளினேய முறப்பணிந்தங்கவ டருசனைப்புனல் சார்ந்தவணுமமென்
ஞெருமோதித் தவாபரவர்ச்சனை நண்புகூர்ந்தவர் நற்கதிசேர்வரால்.

(இ-ள்.) ஆளிவாகனி, அரவபூஷணி, நிர்மலி, அமலி, திரிசூலி, செம்பட்டுடைபான், காளி, பேய்ப்படையுடையவள், எட்டுப்புயங்களையுடைய கன்னிகை அகங்கையிற் கபாலந்தரித்த ஆடல்விநோதி, துர்க்காதேவி பாதங்களை யன்புடனே தொழுது துதித்து, துர்க்கைதீர்த்தத்தில் மூழ்கித் துர்க்கை பெயர்களை யென்னும் வழுத்தித் தவாடாயுதத்தில் துர்க்கைபூசனை முறையை அன்புடனே புகழ்ந்த புண்ணியவான்கள் சிவகதிசேர்வார்கள்.—எ-று. (௧௧)

துர்க்கைபூசைச்சருக்க முற்றிற்று.

ஆ திரு விருத்தம்—௩௧௫.

---

# ஆதிசேடன்பூசைச் சருக்கம்.

———:():———

மூவர்பூசைபு மூவுகத்தடைவினில் மொழிகுற்றே
மாவராவிறுக் கரசனுஞ் சேடனல்லறத்தாற்
கோவளித்தருள் கோதைசெங்கோட்டினிற் கோமூன்றான்
பாவலர்ப்புகழ் பங்கயபதத்தொழில் பகர்கின்றேம்.

(இ-ள்.) மூன்றுயுகத்திலும் மூன்றுபேர்பூசித்த முறைமையைச் சொன்னோமே, இனிகலியுகத்தாதியில் நாகராஜனை ஆதிசேடன் நல்லவரங்களைக்குறித்து சுவர்க்கபதவியைத்தருகின்ற கோதைநகரிலிருக்கும் திருச்செங்கோட்டில் திரிநேத்திரதாரியாகிய பரமசிவனது பங்கயபாதங்களைப் பூசித்த முறையைச் சொல்லுகின்றேங்கேளுங்கள் முனிவர்களேயென்று சொல்லுவார்சூத முனிவர்.—

திரிபுரங்களைச் செயித்தவந்நாளினிற் புயபலசேடன்
பரிபுரந்தரு பதத்திசைபர்மங்களைப் பணிந்தேத்திக்
கரிபுரம்பட வுரித்தகங்காளனிக் கயிலாயக்
கிரிபுரங்களி லெய்துமோவெனக்கிது கிளர்த்தென்றான்.

(இ-ள்.) பரமேசுவரன் திரிபுரதகனம் பண்ணின நாளிலே புயபலமுடைய சேடன் சிலம்பணிந்த பாதங்களையுடைய பார்வதிசமேதரான பரமசிவனை வணங்கித்துதித்து, யானையை யுரித்துப்போர்த்த சுந்தரமூர்த்தியே இந்தக் கயிலாசப்பதியைப்போலும் பூமண்டலத்தில் மகாமகிமையுடைய சிவஸ்தலமுண்டோ எனக்குத் தெரியப்படச் சொல்லவேண்டுமென்று கேட்டான் நாகராஜன்.—எ-று. (௨)

என்றபோதினி லீசனங்கியப்புவ திமையோருந்
துன்றுமாலயன் முதலியவனைவருந் தொல்லோரு
மொன்றுபோலநின் றுதவுதென்பூமியி லுயர்மேற்பால்
மன்றலந்திரு வதுவைகண்டஞ்சலி வகைசெய்தார்.



(இ-ள்.) இப்படி நாகராஜன்கேட்டபோது பரமேசுவரன் சொல்லுவாராய் நாகராஜனை தெட்சணபூமியில் தேவர்கள், முனிவர்கள், பிரமன், விஷ்ணு, தேவேந்திரன் முதலான மேலோர்களனைவரும் ஒன்றுபடக்கூடி திருநாககிரியில் உமையும் நாமும் ஏகரூபமாய்நின்ற திருமணக்கோலமான அர்த்தநாரீசுவர முகூர்த்தத்தைச் சண்குளிரக்கண்டு தெரிசித்து அஞ்சலியஸ்தராய்ப் பிரியாமல் வசித்திருக்கின்றாரென்று பின்னையுஞ் சொல்லுவார்.—எ-று. (௩)

அந்தமாகிரி மேருவின்முடியம போந்திங்கு
வந்தநாளினி லஃதுநின்வடிவினில் வளர்ந்தோங்கும்
பந்தபாதகம் பறித்திடுமுமைதவம் பலிப்பாகு
மிந்தமாபல கயிலையினுமெமக் கினிதாமால்.

(இ-ள்.) அந்தத்திருநாககிரி மகாமேருகிரியின் கொடுமுடி யதனைப்பெயர்த்து வாய்வு கொண்டுவந்து தென்பூமியில் வைத்தது, அன்றுமுதலுன்வடிவாகவே வளர்ந்தோங்கி விளங்கியிருக்கின்றது பந்தமாகியபாவம் யாவையும் நிவர்த்திசெய்யுமுமையவள் தவம்பலிதமான மலையது, கயிலாசகிரியைப்பார்க்கிலும் நமக்கு மிகவும் பிரியமான தலம் அதுவென்று பின்னையுஞ் சொல்லுவார்.—எ-று. (௪)

மாலுமவ்விடை வணங்கியுமொடுபணி வரைமீது
சாலநின்றன னஃதுவைகுந்தமு மெனலாமால்
கோலநான்முகன் றொழுதகோகனகபாஞ் செங்கோடு
சூலியொற்றியத் தொல்புரங்காவலின் சுகமுற்றான்.

(இ-ள்.) அந்த திருநாககிரிதலத்தில் முன்பு விஷ்ணுவந்து நம்மைப்பூசித்து வணங்கி நம்மைவிட்டுப் பிரியாமலிருக்கின்றார், அதனாலே அதனைவைகுந்தமென்னலாகும்; அழகிய சதுர்முகப்பிரம்மாவந்து பூசித்து வணங்கி நம்முடனே கூடவிருக்கின்றார், அதனாலது கோகனகபாத மென்னலாகும்; துர்க்கைவந்து பூசித்து வணங்கி யிங்ஙனம்பிரியாமல் அந்தத்தலத்திற்குக்காவலாக சுகமுற்றிருக்கின்றாளென்று சொன்னார் பரமேசான்.—எ-று. (௫)

என்னவைம்முக னிரண்டைஞ்ஞூறுமுக னினிதேத்தி
என்னையிங்கிவ ணெய்தியவென் னுடற்கிடமாக
வென்னையுங்களை யிருணிலத்தனைவரும் தொழுங்கோல
மென்னவுன்னடி கண்டுபோதமுற வேண்டுறுனால்.

(இ-ள்.) ஐந்துமுகச்சிவன் சொல்லக்கேட்டு ஆயிரமுகச்சேடன் அன்புடனே வணங்கித்துதித்து சொல்லுகிறான், சுவாமீ அடியேனை இங்ஙனம் இப்போது தொடர்ந்தெழுகின்ற பிரமகட்டிற்கு விசாதமாக விருட்சட்டம்போல்வந்து உடலிற்கு தோஷமெல்லாம் அந்தத்தலத்தில் உமது பாதங்களைப்பூசித்தவுடனே நிவாரணமாகும்படி கிருபைசெய்யவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டானாதிசேடன்.—எ-று. (௬)

இப்படித்தொழு திறைஞ்சியசேட னுக்கிறையோனு
மப்படிச்செய்து மாடவரையுமல் வரைதானு
மொப்பிலாமஃ தன்னலியால்வலி யுணர்மால்
லைப்பட்டுடனிச் சேடபோய்ப்பணியெனப் பணிகூர்ந்தான்.

(இ-ள்.) இந்தப்பிரகாரந் தொழுது வணங்கி வேண்டிக்கொண்ட ஆதிசேடனுக்குப் பரமேசுவரன் வரராய் நாகராஜனே, அப்படியே யுனக்கு அனுக்கிரகஞ் செய்கிறோம், பொன்மலைச்சிகரமான திருச்செங்கோடு உன் வடிவாக வலிமையினாலே விளங்கியிருக்கின்றது, ஆசையாலப்போதே நீயந்த ஸ்தலத்திற்குப்போய்ச்சேர்ந்து நம்மை யங்ஙனங்கண்டு பணிந்து அர்ச்சித்துப்பூசைசெய்யென்றுவிடை கொடுத்தருளினர், அப்படியே ஆதிசேடனும் புறப்பட்டுவந்தான்.—எ-று. (எ)

வந்துதன்னடி வானசெங்கோட்டினை வலஞ்செய்து
முந்துகந்தர் முன்னோரையன்னவரையும் முறையேத்தி
எந்தைநீயெனக் கீசனீ தந்தைதா யெனப்போற்றிப்
பந்தமற்றனன் பரமனைப்பரவிப்பர்ச் சனைசெய்வான்:

(இ-ள்.) அப்படி நாகராஜன் வந்து தன்வடிவான திருச்செங்கோட்டு நாககிரியை வலம்வந்து முந்திய கந்தசுவாமி முதலாகிய தேவர்களை முறையாகக் கண்டு வணங்கி என்னுடைய எந்தையும்நீ, ஈசனும்நீ, தகப்பனும்நீ, தாயும்நீ, சகலமும் நீயேயென்று சிவனைத்தோத்திரஞ்செய்து தன்னைப்பற்றிய பாவ கன்மங்களெல்லாந்தொலைந்து புனிதனானான், நித்தமும் சர்வ உபசாரங்களுடனே பூசித்தர்ச்சனை செய்யாநின்றான் ஆதிசேடன்.—எ-று. (அ)

நாகமாமலை நாகமாமலையென நாகபூஷணன்காண்க
நாகமாமணி யான்விளக்கேற்றியன் னகாத்தினமுதேத்தி
யோகபோதமு ஞானபோதமுமுற வுமாபதிபதம்போற்றி
நாகநாடன்மந் தாரபுட்பாஞ்சலி நளினபொற்பாதஞ்சேர்த்தான்.

(இ-ள்.) நாகாசலம் நாகாசலமென்று ஓயாமல் தியானஞ்செய்து நாகாபரணரான உமையொருபாகர் காணும்படி நாகமாணிக்கங்களால் விளக்கேற்றிவைத்து நாகலோகத்தில் விளங்கிய அமுதத்தை நிவேதியஞ்செய்து, யோகபோதமும் ஞானபோதமும் பொருந்தும்படி அர்த்தநாரீசுவரர் பாதங்களை நமஸ்கரித்துத் துதித்து நாகலோகராஜன்மந்தார புஷ்பாஞ்சலியைச்சுவாமிபாதங்களில் சேர்த்துப் போற்றிசெய்தான்.—எ-று. (கூ)

தேவதேவனின் றிருமணங்கண்டனன் றிருவடிதொழுதேனின்
றுவலின் கட லாழ்ந்தனனினியுன தாடல்காண்பனவேண்டுங்
காவியந்தடங் கண்ணிபங்காளவோர் கருணையினல்கென்று
ஓவிலங்க ராஜனின்றுரைசெயவுமாபதியுரைகூறும்.

(இ-ள்.) தேவதேவனே உன்னுடைய திருமணக்கோலந் தழுவகண்டு தெரிசித்தேன், தேவரீருடைய பாதங்களில் நமஸ்கரித்தேன், உன் ஆசைக்கடலில் மூழ்கினேனது யென்னவென்றால் இனியும்முடைய திருத்தாண்டவ நடனங்காணவேண்டும், நீலோற்பலம்போன்ற பெரிய கண்களையுடையவுமையொருபாகரே கருணைசெய்யவேண்டுமென்று நாகராஜன் கேட்டுக்கொள்ள சுவாமிசொல்லுவார்.

உலகெலாம்புகழ் விளங்கிய்த்தலத்தினி னார்த்ததாண்டவங்காட்டி
யிலகுதில்லையிற் கனகமாசபையினி லியலாப்புலிகாணக்



குலவுநாண்டவங் கொள்வமப்போதுநீ குறுகிநடங்கண்டிங்
கலகினிலபெயர்க் கிரியிலெக்காலமு மருச்சனைபுரிவாயால்.

(இ-ள்.) உலகமெல்லாம் புகழும்படியாக விளங்கு மிந்தத்தலத்தி லுனக்கு ஆர்த்த தாண்டவங்காட்டித் தில்லையிற் பிரகாசிக்கின்ற கனகசபையிற் பதஞ்சலி வியாக்கிரமபாதர் காணும்படிக்கு நடனஞ்செய்கிறோம், அப்போதந்தேநீயும்வந்து நம்முடைய திருநடனக்காட்சிகண்டு சேவித்துப்பின்பு அளவில்லாத மகிமையையுடைய உன்பெயராய் விளங்குமிந்தத்திருநாககிரியில்வந்து எந்தக்காலமும் நம்மைப் பூசித்திருப்பாயாகவென்று திருவுளம் பற்றியருளினார் சுவாமி.—எ-று. (கக)

ஏனைப்பரிந்தரு ளர்த்தநாரீசனை யேத்தியச்சேடேசன்
கனச்சிதம்பர நாயகன்றாண்டவங் கண்டன கனுமாங்
கிளைப்பினால்வரம் பெற்றரிபயனென நீள்வலியுடைத்தாகித்
தினப்பலன்றரு நாகவெற்பெய்தியச் சிவன்பதந்தெரிசித்தான்.

(இ-ள்.) என்றிப்படி கிருபைசெய்தருளிய அர்த்தநாரீசுவரரை வணங்கித் துதித்து விடைகொண்டு நாகராஜன் சென்று தில்லையில்மகாகனகசபையிற் சிதம்பரேசுவரர் நடிக்கின்ற திருத்தாண்டவக் காட்சியுங்கண்டு சேவித்து மனகின்படி க்கு நல்லவரங்களும் பெற்று, பிரமா விஷ்ணுவைப் போலே அதிக வலுமையையுடைத்தாகி நித்தியபலன் றரப்பட்ட திருநாககிரியில் வந்துசேர்ந்து சிவன் பாதங்களைத் தெரிசித் தர்ச்சித்து நின்றான் நாகராசன்.—எ-று. (கஉ)

மேருவைச்சுமந் தலகிலாவலியு மேதகவுளகலையாவுங்
காரணப்பரம் பொருளறுநிலைமையுங் கன்னிபங்கனிற்பெற்றான்
சூருசர்ப்பகை தடிந்தவேற்சண்முகன் றாமரைப்பதப்போற்றிச்
சீருகத்தநா லாமுகந்தோர்சுனை தீர்த்தமதனிலுய்த்தான்.

(இ-ள்.) மாகமேருகிரியைச் சுமந்து இளைப்பில்லாம லிருக்கும்படி யளவில்லாத புஜபலபாக்கிரமமு மேன்மையுடைய சகல கலைக்கியானமுங் காரணர்த்தமான பரப்பிரமப்பொருளை யறியும் நிலைமையு மிவையெல்லாம் அர்த்தநாரீசுவர சுவாமீ அநுக்கிரகத்தினால் பெற்றான், பகைசெய்த தாருகாசுரனைச் செயித்த வேலாயுத பாணியான சண்முகப்பெருமான் பாதார விந்தங்களையும் பணிந்து போற்றிச் சிறப்புடைய காலவநாகலியுகத்தில் தன்பெயராலொரு தீர்த்தச்சுனையுமமைத்து வைத்தான் நாகராஜன.—எ-று. (கந)

தனதுபேர்பெறு நாகதீர்த்தந்தனிற் றண்புனலின்மூழ்கி
மனதுகூர்தருபரம ஞானந்திகழ் வாய்பலதிறம்பாதாற்
தனதுணர்ப்பசுங் கொன்றையன்பதத்தினைக் கண்டுவல்வினைமாற்றி
ன்வுபெற்றொரு சேடதீர்த்தப்பெயர் நிறுவினன்பணிவேந்தன்.

இ-ள்.) தன் பெயரால் விளங்கிய குளிர்ந்த நாகதீர்த்தத்தில் நித்தியம் ஸ்நானஞ்செய்து மனக்களிகூரப் பரமஞான சிந்தையுடனே சகலவரங்களும் பெற்று மிகுந்த பரிமளத்தையுடைய புஷ்பங்கள் செறிந்த கொன்றைமாலையைச் சூடிய சிவன் பாதத்தைக்கண்டு பூசித்தர்ச்சனை செய்து வலியவினைகளெல்லாம் விமோச

ணமாகிச் சற்குண நினைவுண்டாகிச் சேஷ தீர்த்தமென்றும் பெயர்விளங்க நிலை செய்து வைத்தான் நாகராஜன்.—எ-று. (கசு)

அன்னமாமலை நாகமாமலையெனு மதன்கண்வழியாகப்
பன்னகப்பதி தினந்தினந் தில்லையிற் பரனைடர்ச்சனை கூர்ந்து
பின்னு நாகமாமலைப் பனிருக்கும்பனை பெட பிஞட்டுப் பெறப்போற்றித்
தன்னலங்கூறு தீர்த்தவண்கரையினிற் றவம்புரிந்திருந்தானால்.

(இ-ள்.) அந்தத்திருநாககிரிக்குச் சேஷகிரியென்றும் பெயராகி விளங்க அதன் பிலத்துவாரத்தின் வழியாகப் புறப்பட்டுத் தினந்தினந் தில்லையுட் சென்று சிவன் திருநடனக் காட்சியுங்கண்டு அர்ச்சித்துக் களிகூர்ந்து, பின்னையுமிந்த நாககிரி ஸ்தலத்துக் கேவந்து சிவசம்புவை அன்புடனேகண்டு தியானஞ்செய்து வணங்கிப் போற்றிசெய்து தன்பெயரால்விளங்கிய நாகதீர்த்தக் கரைக்கரையிற் றவஞ்செய் திருக்கின்றான் நாகராஜன்.—எ-று. (கஎ)

ஆதிசேடன் பூசைச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூகூ.

# பதினெண்புராணச் சருக்கம்.

எந்தைவியா தன்சொல்பதி னெட்டுவகைப் புராணத்தில்
அந்தமிலை மத்தியிலை யாதியிலை யதுவாக
முந்துமலை செங்கோட்டு முதுமலைநம் பவமனையக்
கந்தபுரா ணத்துரைக்குங் காதையிது வெனமொழிவார்.

(இ-ள்.) என்குருசுவாமியான வேதவியாசர் சொன்ன பதினெண்வகைப் புராணத்திலும் அந்தம் மத்தி ஆதியுமாகவின்றி முந்திய மலைத்தலமான மகா திருச்செங்கோடு நமது பாவங்களெல்லாம் விமோசனஞ் செய்யுமென்று கந்தபுராணத்திற் சொல்லுங்கதை இதுவென்று சொல்லுகிறோமென்றார் சூதமுனிவர்—எ-று.

மந்திரமே வேதாந்தத்தை மறையவரை முனிகுருவைத்
தந்தைதனையன் னையைப்பெரியோர் தமைமறந்து மதியாது
நிந்தையுரைப் பவர்கருப்பசேரிழையை வதைப்பவரே
வந்துகுரு மனைநீண்டு முயர்பெரும்பா தகர்யாவும்.

(இ-ள்.) மகாமந்திரங்களை வேதாந்தங்களை, வேதியர்களை, முனிவர்களைக் குருக்கண்மார்களைத் தாய்தந்தையரையும், பெரியோர்களையுந் தூஷணைமலனிந்தனைசெய்பவரும் கெர்ப்பஸ்திரீகளைக் கொல்லுநரும், குருபத்தினிகளைப் புணரப் பதுமிப்பேர்ப்பட்ட மகாபாதகர்கள் மன்னுமின்னுஞ்சொல்லுவார் சூதமுனிவர்.

வயங்குதிருச் செங்கோட்டு மலைமுடியின் மீதேறி
வியங்கினர் தரிசிப்பர் ரவிமுன்னர்ப் பனிபோன்றும்
புயங்கமுமரி போன்றும் புயற்கெதிர்பூ வினைப்போன்றுந்
தயங்கெரிப்பஞ் செனவுமிருந் தவிரென்னுந் தவஞ்சேர்க்கும்.



(இ-ள்) விளங்கிய திருச்செங்கோட்டு மலையுச்சியில் வந்து சேர்ந்து வாசஞ்செய்து தெரிசிப்பார்களானால் சூரியனுக்கு முன் பனி நீங்குவதுபோலும், பாம்பினுடம்பிற் சட்டையுரிவதுபோலும், பெருமழையில் பூளைப் பூக்கள் சிதறுவதுபோலும், சுடர்விட்டெரிகிற அக்கினியில்விட்டபஞ்சுபோலும், முன் சொன்ன பாதகங்களெல்லாந் தீரும், வழுவில்லாத நல்ல தபோமகிமைப்பலனு முண்டாக்கும் இது சத்தியமென்றார் சூதமுனிவர்.—எ-று. (ங)

அரியபிர மாண்டபுரா ணத்தினிலத் திரியுரைத்தல்
தருபலனீ தெனமொழிவன் றுபதரை யறையவரைப்
பெரிதுவதை புரிந்தானும் பிசிதமது நுகர்ந்தானுந்
திருவுறுதே வாபரணத் திருட்டுமருட் டுளத்தானும்.

(இ-ள்.) அரிதாகிய பிரமாண்ட புராணத்தில் அத்திரிமுனி வாக்கியப்படி வரும்பலன்களிவை யிவை என்று சொல்லுகிறோம். மகாதபோதனர்களைப் பிராமணர்களை மிகவும் கொலைசெய்தவனும், பலமாமிசங்கள் தின்றவனும், அழகிய சிவஸ்தலங்களில் புகுந்து சுவாமி திருவாபரணங்களை திருடிக்கொண்டு திரிகிற மயக்கமுடைய நெஞ்சக் கள்வனுமென்று பின்னையுஞ்சொல்லுவார் சூதமுனிவர்.

கொண்டவிர தங்கடிந்து குருவினுரை யொழிந்தானுந்
தெண்டிரைசூழ் நாகமலைச் செங்கோட்டைத் தெரிசித்தா
லுண்டெனச்சொற் பாவமெல்லா முமாபதிகட் கனற்பட்ட
வண்டர்கண்மெய் யெனவழியு மருட்பால் வறமோங்கும்.

(இ-ள்.) தொடங்கின விரதங்களை மத்தியிலேவிட்டவனும்,குருவாக்கியத்தைக் கடந்தவனுங் கடல்சூழ்ந்த உலகத்தில் விளங்கிய திருச்செங்கோட்டு நாகமலையைச் சேவைசெய்தவுடனே அப்படிக்கொத்த பாவங்களெல்லா முமாபதியாகிய பரமசிவன் நெற்றிக்கண் ணெருப்புப்பட்ட பகைவர் தேகமழிவதுபோலே அழிந்துபோகும், அவனது கிருபையைப்போலே தர்மம் மென்மேலும் விர்த்திக்குமென்றார் சூதமுனிவர்.—எ-று. (ரு)

பொருவிலரி புராணத்திற் புகல்வரீ தெனப்புகல்வா
மிரவிமதி யிணையாவ மிடர்ப்படுத்தி யெழுங்காலை
முரணறுபா யவன்றீர்த்த முதற்பலதண் முறையாடி
யிரவலர்தா னம்புரிவார்க் கெழுபிறப்பின் றுயர்போமால்.

(இ-ள்.) நிகரில்லாத விஷ்ணுபுராணத்திற் சொல்லுவதிவை என்றரிதர்கச் சொல்லுகிறோஞ் சூரியனை சந்திரனைக் கிரகணந் தீண்டிய வேளையில் மாறுபாடில்லாத விஷ்ணு தீர்த்தமுதலாய்ப் பல தீர்த்தங்களிலு முறையாக மூழ்கி அவரவர்க்கியன்றபடி மந்திரத் தானதருமஞ் செய்தபேர்களுக்கு எழுபிறப்பினுந் துயரங்கள் தீர்ந்துபோமென்று சொல்லிப்பின்னையுஞ் சொல்லுகிறார் சூதமுனிவர்.எ-று (சு)

எழுசனனத் துன்பால மெழுந்தோடும் படியரியின்
கெழுதிகிரிப் படையினொடி கெதிர்ந்தபகை யழிந்தனபோல்
வழுவுறுநற் பலனன்றத் தமாயனுட னெனவருரும்
பழுதிலவென் றனர்முனிவர் பகர்ந்தனர்மா யவன்வாய்மை.

(இ-ள்.) ஏழுசன்மத்தி லுண்டாகிய பாவங்களெல்லாம் நிவாரணமாகும் அது எப்படியெனில், விஷ்ணுவின் கைச்சக்கரத்திற்குமுன்னே நின்றெதிர்த்த பகைவர் அழிந்துபோவதுபோலும் போகு மழிவில்லாமற்செய்த நன்மையுடைய தருமதான பலன்களெல்லாம் விஷ்ணு சரீரம்போலே வளர்ந்து விர்த்திக்கும் பழுதில்லை மகாவிஷ்ணு வாக்கியப்படி யிது நிச்சயமென்றார் சூதமுனிவர்.-எ-று.

உயர்கூர்ம புராணத்தி னுரைத்தனவி தெனவுரைப்பாம்
புயனீடுஞ் செங்கோட்டிற் பூவையொரு புறத்தனையுங்
கயனீடு விழிக்குறமான் காந்தனையு முன்னவனும்
வியனீடைக் கரத்தனையுந் நந்தியையும் வியந்தேத்தி.

(இ-ள்.) உசிதமான கூர்மபுராணத்திற் சொன்ன முறைமை யிதுவென்று சொல்லுகிறோம். மேகமொய்த்த திருச்செங்கோட்டில் உமையொரு பாகனையும், மீன்போன்ற அழகிய கண்களையுடைய வள்ளியம்மன் காந்தனை குமாரதேவரையும், முன்னவனை யானைமுகத்து விநாயகமூர்த்தியையும், நந்தீசுரனையும் வணங்கி வாழ்த்திப் பின்னையுஞ் சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (அ)

அந்தணர்மா கேசுரர்த மகங்குளிர வருள்செய்தா
ரிந்திரனு மிமையவரு மினிதேத்த விருந்தபின்னர்
முந்தியபா தகவினையின் முரணகன்று பரன்பதத்தி
லந்தமுறப் புகுவரென வருமிருடி யறைந்தனனால்.

(இ-ள்.) பிராமணர்கள் மகேசுரர்கள் மனங்குளிர்ந்து சந்தோஷிக்கும்படி பரிவுடனே தானதர்மஞ் செய்தபேர்கள், முன்செய்த கர்மம் வினையாறபாடெல்லாந் தீர்ந்து சொர்க்கலோகத்திற்சென்று இந்திராதிதேவர்கள் வணங்கி வாழ்த்த வாசஞ்செய்திருந்து பின்பு பரமசிவன் பாதத்தி லழகுபெறச் சேர்ந்தார்களென்று அரியவிருடி சொன்னதென்றும் சூதமுனிவர் சொன்னார்.—எ-று. (கூ)

வராகபுரா ணத்துரைக்கும் வாக்கியமென வுளநயப்பத்
தராதலத்தில் விளப்புவன்பொய்த் தவறுதரும் பாதகத்துட்
பராவினர்பா தகத்தாரும் பகருமறம் புரியாரும்
பிராமணர்மா கேசுரர்தம் பெருமையறாப் பேதகத்தார்.

(இ-ள்) வராகபுராணத்திற் சொல்லியிருக்கும் வாக்கிய மிதுவென்று சொல்லுகிறோம், பொய்யாய குற்றமிருந்த பாதகரெல்லா முபகாரம் பரிந்துசெய்தவர்கள் நல்ல மகேசுரர் பெருமை தெரியாத பேதகத்தார்களென்று பின்னையுஞ் சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (கO)

தருமநெறி சிறிதறியாத் தன்மையினர் வன்மையிலா
ரிரவமார் செங்கோட்டிற் பொருங்கோட்டின் நிறைந்துநின்று
தெரிசனையிற் றியானிப்பத் தீருந் பவம்போமென்
றரிதின்மறை யுரைப்பதென வருனுமவர் கருதுணர்த்தார்.

(இ-ள்.) தருமநெறிமுறைமை யிவையென்று சற்றேனுந் தெரியாத மூடர்கள் மகாதுஷ்டர்கள் தேவர்கள் நிறைந்தழகிய சொர்க்கமுடைய திருச்செங்கோட்டில்வந்து சஞ்சரித்துநின்று சேவைசெய்து தியானஞ்செய்தால் தீர்த்தபாவம் தீருமென்று அரிதாகிய வேதங்கள் சொல்லுமென்று மகனுமவர்க்குச் சொன்னாரென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (கக)



பார்ப்புரா ணத்தியம்பும் படிவுலகிற் பகருவன்சீர்
கூர்ப்பவரு பிரமவத்தி குருநிந்தை பரநிந்தை
யார்ப்பவுட்பா தகம்பண்ணு மவனனந்தம் பவந்தீர்ந்து
சீர்ப்பரவு செங்கோடன் றெரிசனையின் பலன்பெறுவார்.

(இ-ள்.) பாரப்ப புராணத்திற் சொல்லும்படி யுலகிற் சொல்லுகிறோம் கொடிய கொலைசெய்த பிரமஹத்தி குருநிந்தனை பரநிந்தனை உட்பாதகஞ் செய்தவர்களும் பின்னையு மனவற்ற பாதகஞ்செய்தவர்களும் அழகியதிருச்செங்கோட்டீசுவரன் தரிசனையினாலே பாவவிமோசனமாகி நல்ல பலன்களைப் பெறுவார்களென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (கஉ)

அப்பலனம் பிகைபாகனடி தொழுது மைங்கரத்தாற்
பொற்பதமேத் தியுங்குகனைப் போற்றியுமம் மலைதீர்த்த
மெய்ப்புகமூழ் கியுமேகும் வெம்பவம்வே ணியன்பதத்தி
லொப்புறவா மெனவுரைத்தா னுபசின விருடியென்பான்.

(இ-ள்.) அந்தப் பலன்களெல்லா மர்த்தநாரீசுவரன் பாதம்பணிந்து, விநாயகமூர்த்தி பாதந்தொழுது, குமாரதேவரை வணங்கிவாழ்த்தி, நாகிரியில் விளங்கிய தீர்த்தங்களில் புகுந்து மெய்குளிர மூழ்கினால் நிவாரணமாகும், சடைமுடியையுடைய பரமேசுவரன் பாதத்திலே சேர்ந்து மோட்சத்தையடைவார்களென்று சொன்னார் சினவிருடியென்று சொல்லிப்பின்னையுஞ் சொல்லுவார் சூதமுனிவர்.

பாரதத்திற் பகர்ந்தபடி பகருவன்பார் வதிபாகஞ்
சேருதற்குச் சகதலத்திற் றிருமணங்காட் டுதற்குமகா
மேருமுடி யினைப்பவன வேந்தனையே விப்பிரிப்பித்
தேருறுசெங் கோடெனவே யிகத்தில்நிறுத் தினனென்றார்.

(இ-ள்) பாரதபுராணத்திற் சொன்னபடி சொல்லுகிறோம், பார்வதியை யிடப்பாகத்திற் சேர்த்துக்கொள்வதற்காகவும், இந்தமண்டலத்தில் திருமணக்கோலக் காட்சியாவருக்குங் காட்டுவதற்காகவும். மகாமேருவில் நாகக்கொடுமுடியை வாய்வு ராஜனைவிட்டுப் பிரிப்பித்து இந்தக்கொங்குமண்டலத்தில் அழகிய திருச்செங்கோடெனவே விளங்க நிலையாக நிறுத்திவைத்ததென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (கச)

என்றுபரா னுமைக்குரைத்த தெனநாவ லிருந்தீவிற்
றென்றிசைக்கொங் குயர்பதியோ கத்திருந்தி
வன்றிறன்மா தவர்காண்ப மாதுமைபாகம்பொருந்திக்
குன்றுரிய குகனுடன்றான் கூடியதென் றனர்சூதர்

(இ-ள்.) என்றிப்படி பரமேசுவரர் உமையவளுக்குச் சொன்னதாக விந்தப் பெரிய நாவலந்தீவில் தென்றிசைக்கொங்குமண்டலத்தி லுசிதமான திருவேரகத்தில் யோகத்திருந்து மனவலிமையுடைய தபோதனர்கள் காணும்படிக்கு உமையை யிடப்பாகஞ்சேர்த்து அர்த்தநாரீசுவரராக வெழுந்தருளிநின்று குமாருடனே பிரியாமலிருக்கிறாரென்று சொன்னார்சூதமுனிவர்.—எ-று. (கரு)

[illegible] புராணத்திற் கருதியுரைத் தனவுரைப்பாம்
[illegible] பிரமன்பான் புராணமிது முரைத்ததெனும்

பேருறுமர் கமரீஇப் பெருங்கோட்டுத் தருநிறைந்த
போர்குருசெங் கோட்டுரிய புராணபலன் பெரிதென்றூர.

(இ-ள்.) காருடமகா புராணத்திற் சொன்னபடி சொல்லுகிறோம், விலாசமான பூமண்டலத்தில் விளங்கியிருக்கிற பதினெண் புராணத்திலும் விதவிதமாகச் சொல்லி யிருக்கிறதென்றும், பேர்பெற்ற ஆகமத்தில் வழுவாமற்றேவர்கள் போற்றிசெய்யா நின்ற பெரிய கொழுங்கொம்புகள் செறிந்தழகிய கற்பகத்தருக்கள் நிறைந்த முரணற்ற திருச்செங்கோட்டுத் தலத்திற்கு உரித்தாகிய புராணபலன் பெரிதென்று சொல்லியிருக்கிறதென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று.

இப்பெரிய புராணத்தை யாவருரைத் திடக்கேட்டோர்க்
கொப்பிடுதென் னுலாபுரிய வுமாபதியு மரிதென்று
ரப்பரிசு மப்பலனு மப்பயனு மென்னனையார்
செப்பலுறு தெனவிசைத்தான் றென்றிசையிற் றருமனென்பான்.

(இ-ள்.) அந்தத் திருச்செங்கோட்டுத் தலபுராணத்தை யாவரொருவர் சொல்லக் கேட்டபேர்களுக்கு ஒப்புவமை யின்னதென்று சொல்லுதற்கு உமையொருபாகருக்கு மரிதென்றார், அப்படியாகிய பரிசம் உண்டாகிய பயனும் வர்த்திக்கும் பலனு மென்போலொத்தவர் சொல்லப்படாதென்று சொன்னான் றென்றிசைக் கதிபனான எமதர்ம ராஜனென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (கஎ)

மார்க்கண்ட புராணத்தில் வழங்குவன வழங்குவன்பா
னோற்கண்டு பாதகங்க ளொருதலத்திற் செய்ததெல்லா
வாற்குமந்த தேவதலத் தகலுமந்தத் தலப்பாவம்
பேற்குவன செங்கோட்டுப் பிறங்கலரன் றிருவடியால்.

(இ-ள்.) மார்க்கண்ட புராணத்திற் சொன்னபடி சொல்லுகிறோ மிந்தப்பூலோகத்தாருக்கு உண்டாகியபாதகங்களு மற்றொருத் தலத்தில் செய்ததெல்லாமகிமை நிறைந்த தெய்வத் தலங்களிலே நீருமந்தத் தலத்திலுடைய பாவங்களைத்தீர்ப்பது திருச்செங்கோட்டுமலையில் எழுந்தருளிய அர்த்தநாரீசுவரன் திருவடித்தாமரைகள்.

சிவந்தபணி மலைதீர்த்தத் திவலைகள் வருகாற்று
நவம்பெறுமா னிடரிடத்தில் நண்ணியவரவர்செய்த
பவம்பயின்ற பாதகங்களைப் பரமபதஞ் சேர்க்குமென
விவன்பிறனுடுஞ் சங்கரித் திருடியினி னியம்பினரால்.

(இ-ள்.) திருச்செங்கோடாகிய நாககிரியிலிருக்கின்ற தீர்த்தங்களில் ஒரு திவலையாவது தெறித்தாலுங் கிரியினுடைய காற்றாவது மானிடர்கள் மேரில் அணுவத்தனை பரிசித்தாலு மவரவர்கள் மனோவாக்குக் காயங்களாற் செய்த பாதகங்களெல்லாந் தீர்ந்துபோகும். அங்கியத்தில் அவர்களைப்பரமபதத்திற் சேர்க்குமென்று மனேகபக்தியுடனே நிச்சயமாக சங்கரித்த முனிவர் இனிதாகச் சொன்னரென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (கக)

பதினெண்புராணச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—ந௨க.

பருவதகாண்ட முற்றிற்று.

உ

அர்த்தநாரீஸ்வரர் துணை.

# திருச்செங்கோட்டுப்

## புராணம் மூலமும்-உரையும்.

:SSS:

## காந்த காண்டம்.

### தாருகன்செயற்கைச் சருக்கம்.

எந்தைபங்கிம யாசலத்திரு வெய்திநின்றது மர்ச்சனை
சிந்தையொன்றவு நாகவெற்பர் தியானமுஞ்சில செப்பினீர்
கந்தர்வந்தது மந்தவெற்பிடை கண்டதுங்கள வுணர்பே
ருந்தவென்றது மையசூதர்நீ ரோதுமென்றபி வுரைசெய்வார்.

(இ-ள்.) திருநாககிரியில் அரியதவஞ்செய்த உமையவர்களுக்குப் பரமேசுவரன் அர்த்தபாகங்கொடுத்து அர்த்தநாரீசுவர மூர்த்தமாகவெழுந்தருளி யாவர்க்குங் காட்சிகொடுத்து நின்ற முறைமையையுஞ் சுவாமியை அர்ச்சனைசெய்யுமுறைமையையும் ரூபத்தியானங்களும் நாலுயுகமுமுறையேவந்து விஷ்ணுமுதலாகியபேர் பூசித்துப்பேறுபெற்ற முறைமையையுஞ் சொன்னீரே, பின்புகந்தசுவாமிவந்த வரலாறும் அந்தக்கிரிச்சாரலிலே வந்தெதிர்த்த யுத்தஞ்செய்த தாருகாசுரனை வதைத்ததும் வழுவாமல் எங்களுக்கு இனிச்சொல்லவேண்டுஞ் சுவாமி சூதமுனிவரேயென்று வணங்கி நைமிசாரணியவாசிகளான சவுனகாதிமுனிவர்கள்கேட்க, அப்படியே சொல்லுகிறோங் கேண்மின்களென்று சொல்லத்தொடங்கினார் சூதமுனிவர்.—எ-று. (க)

காசிபன்புணர் காமமங்கையர் காதலின்புறு மிருவரா
மாசிலத்திதியதிதியென்பவரவர்தனிற் றிதியாயபெண்
ணீசிவெட்படை யசுராரய கோதைக்கணம் பல தோன்றவே
நேசமுற்றவ ளுதவினுள நின்றுதாருக னொருவனால்.

(இ-ள்) காசிபரிஷி பத்தினிமார்களில் அதிதியென்றுந் திதியென்றுமிரண்டு பெண்களில் திதியென்பவள் அனந்தங்கோடி படைக்கூட்டங்களாகிய அசுரர்களையைப்பெற்றாள், அந்த அசுரர்களில் அதிக வலிமையுடைய தாருகாசுரனென்றொருசூரனிருந்தான், அவன் செய்கையைச் சொல்லுகிறோமென்று சொல்லுவார் சூதமுனிவர்.—எ-று. (௨)

அதிதிபெற்றருண் மைந்தர்சுற்றுண வமரரைத்தளியடாவோர்
மதியெடுத்தொருதலமியற்றிட நிலமளித்திட மலர்வரும்
விதியையுற்றுயர் கயிலையிற்புற மிகுபணற்றிர ணடுவுநின்
றுதநிலவற்றிட வுவவெழுப்பின துகைத்துதித்திட வசுரனே.

(இ-ள்) அதிதிபெண்பகள் பெற்ற புத்திரராகிய அசுரர், மிகுந்த சற்குண முடைய தேவர்களை நெருக்கஞ்செய்து வெற்றிகொண்டு உலகங்களை யாளவேணு மென்று நினைத்துப் பிரமதேவனைக் குறித்து, அரிய தவஞ்செய்வதாகக் கயிலாச கிரிச்சாரலிலே பஞ்சாக்கினிமத்தியில்நின்று ஆகுதிகளைச்செய்து கடல்களுஞ்சுவ றும்படி யாக அக்கினிச்சுவாலைகளை யெழுப்பியாரும் அதிசயிக்கும்படியாக அரிய தவஞ்செய்தான் தாருகாசுரன்.—எ-று. (க)

தீயினின்ற வர்களைக் கண்டிறல் சிலரென்றிட நீரினில்
ஏயநின்றவர் தம்முனுந்தலை யென்னவுங்கனல் வானிடை
போயிருந்தன சேயவனறவ போதகந்தலை கீழ்பட
வாய்வயங்கியி னீரினின்றன னுவகொண்டொரு தாருகன்.

(இ-ள்) தீயிலேநின்று இன்னிய தவஞ்செய்வோர்களனேகம்பேர்களிலும், நீரில் தவஞ்செய்வோர்களனேகம்பேர்களிலு மிந்தத்தாருகாசுரன்செய்யுங் கொடி யதவத்திற்கு நிகர்சொல்லப்படாதென்று யாவரும் பயப்பட பஞ்சாக்கினி மத்தி யிலே வெகுகாலமேல்நின்று அக்கினிச்சுவாலைகள் ஆகாசத்தை யளாவும்படிக்குத் தலைகீழுங் கால்மேலுமாகநின்று யாவராலுஞ் செய்யப்படாத அரியதவத்தை மிகு ந்த ஆசையினாலே செய்தான் யானைமுகத்தையுடைய தாருகாசுரன்.—எ-று. (உ)

வேறு.

மகவானறிந்துதவ வசுதாருகன்பெரிது மதிகூர்கொடுந்தவசு புரிதலா
லிகவானகர்தனது குடைவாயடங்குமென வெணிநின்றனனி தழியமே
லகவாசகம்பகரு மடமாதர்சென்றுதவ தொழில்மாறநின்றுபல சரதமாய்
நகைமோகனங்கள்செயு மெனவேகரந்தவிட னிபாதர்வந்துபல புரிகுவார்

(இ-ள்.) அப்படி தாருகாசுரனானவன் கொடியதவஞ்செய்கின்றதை தேவே ந்திரன்கண்டு இனி நம்முடைய உலகங்களையெல்லா மிவனொருவனுடைக்குள்ளே அடக்கியாளும்படி அகோரமான தவஞ்செய்கின்றான், அவன்தவத்தை யழிக்கவே ணுமென்றெண்ணி இனிமேலும் மொழிகளையுடைய அழகிய தெய்வரம்பாஸ்திரீ களையழைத்து நீங்கள்போய் தாருகன்செய்யுந் தவத்தைப் பலவித சரசங்களினாலு மோகன மாய்கைகளினாலும் மயக்கி வாருங்களென்று அனுப்ப, அந்தத் தெய்வப் பெண்களனேகம்பேர்வந்து அநேகவிநோதங்களைச் செய்யத்தொடங்கினார்கள்.

வேறு.

கலைநெகிழ்ப்பவர் கலைபுனைப்பவர் கலையுடுப்பவர் சிலர்சிலர்
முலைதிறப்பவர் முலையசைப்பவர் முலைமறைப்பவர் சிலர்சிலர்
தலைகலைப்பவர் தலைவகிர்ப்பவர் தலைமுடிப்பவர் சிலர்சிலர்
சிலர்நகைப்பவர் சிலர்நடிப்பவர் சிலரிசைத்தொழில் புரிவரே.

(இ-ள்.) உடுத்திய துயில்களை நெகிழ்ப்பார்கள் சிலபெண்கள், அவைபோரத் தைக்குலைத்தவிழ்த்து உடுப்பார்கள் சிலபெண்கள், முலைகள்தெரிய உத்தரியங் களைத்திறப்பார்கள் சிலபெண்கள், முலைகள்குலுங்க நடப்பார்கள் சிலபெண்கள் முலைகளைக்காட்டி மறைப்பார்கள் சிலபெண்கள்; தலைமயிர்களைக் கலைப்பார்கள் சிலபெண்கள், கூந்தலைச் சீவுவார்கள் சிலபெண்கள், மயிர்களை முடிப்பார்கள் சில பெண்கள், மிகவும் சிரித்து நகைத்துக் கொஞ்சிவிளையாடி சங்கீதங்களைப்பாடி நடனாட்டியங்களைச் செய்வார்கள் சிலபெண்கள்.—எ-று. (ங)



அளவில்குங்கும மிர்கமதங்களோர் டணிவர் கொங்கையிற் சிலர்சிலர்
களவுகொண்டிடு விழிமதன்கலை கருதுகின்றவர் சிலர்சிலர்
புளகிதம்பெறு புழுகுசந்தனம் புரிவரங்கவர் சிலர்சிலர்
அளவிலிங்கித சயனவின்பமோ டமளிகொண்டவர் சிலர்சிலர்.

(இ-ள்.) கணக்கில்லாத களபகுங்கும கஸ்தூரி சவ்வாதுகளைப் பனிநீராலே குழைத்து முலை மார்புகளிலெழுதி அப்புவார்கள் சிலபெண்கள், கண்களாலே மொட்டிவிழித்து மதனாகமங்களைப்படித்துப் பிரசங்கம் செய்வார்கள் சிலபெண் கள், மயிர்க்கூச்செறியும்படிக்குப் பல கதம்பங்கூடிய சந்தனக்குழம்புகளை வாரி யிறைப்பார்கள் சிலபெண்கள், மிகவுஞ்சுகமுண்டாகும்படி பஞ்சசயனமெத்தைகளிலே படுப்பார்கள் சிலபெண்கள்.—எ-று. (எ)

வேறு.

தவத்தொழி லதனலென்ன சற்பல னெங்கள்மோக
வலத்தையை நீக்கிச்சேர்த லருந்தவ மென்றுகூறி
யுவர்த்தன லிடைநின்றங்க முருகினீ ரதற்கேயெங்கள்
சிவத்திடு மதரபானஞ் செய்துமெய்த் தாகந்தீர்வீர்.

(இ-ள்.) அந்தத் தெய்வரம்பைப் பெண்கள் பலபலவிதமாக மாயமோகன சரசசல்லாபங்களைச்செய்து வாரீர் அரியதவஞ்செய்கின்ற அசுரேந்திரனே இந்த தவத்தினாலே உமக்குச் சுகமாகிய பலன்களொன்றுமில்லை, அதைவிடுத்து எங்களு டைய மோகந்திரும்படி சேர்வதே நல்ல தவமென்றும், பஞ்சாக்கினி மத்தியிலே நின்று தேகமெல்லா முருகினீராதலால் எங்களுடைய சிவந்த அதரபானங்கள் செய்து உம்முடைய தாகவிடாய தீர்த்துக்கொள்ளுமென்று பின்னையுஞ்சொல் வார்கள்.எ-று.

அனல்விட லிங்ஙன்வந்தா லகிலுடன் களபச்சாந்தை
தனமிசை திமிரியப்பமைத் தழுவியே தாகந்தீர்ப்போ
மினமுறுந் தவத்தினின்ற விளைப்புமின் னுமக்குப்போக்கு
மனமுறு மெங்களபோக மயலும்போம் வருகவென்றார்

(இ-ள்.) வாரீர் அசுரேந்திரனே, நீர் தவத்தைவிட்டிக்கணம் வந்தால் பரிமள சந்தனக்குழம்புகள் அகிலின்குழம்புகள் எங்கள் ஸ்தனங்களிலே பூசிக்கொண்டு உம்மைக் கட்டித்தழுவி யணைந்தத் தேகவெப்ப தாகத்தையுந்தீர்ப்போம், தனுற் றங்களினைப்புந்தீரும், எங்கள் மனதிலுண்டாகிய மயலுந்தீரும் வாருமையா வென்று சொன்னார்கள் தெய்வரம்பையர்கள்.—எ-று. (கூ)

என்றவை யனந்தபேத வின்பமெய்ச் சரதங்காட்ட
நின்றவன் மனமாலுற்ற நயந்த லுயர்வாயின்றான்
இன்றெமக் கிதுவொன்றும் பயனில மென்பாட்டென்றே
சென்றனர் மனையோவுந் தெய்வரம் பையர்களெல்லாம்.

(இ-ள்.) அநேகவித சரசவிநோதங்களைச்செய்தார்கள், அவையொன்றுந் தெரியாதவனும் பிடித்தவிரதம் விடாமல் மனதை உறுதிகொண்டு தவஞ்செய்து கொண்டிருந்தான் தாருகாசுரன், அதைக்கண்டு இவனாலே நமக்கொருபலனுமில்லை யென்று தெரிந்துகொண்டு தேவலோகத்துக்குப்போனார்கள் தேவேந்திரனைப் பிழைத்த தெய்வரம்பாஸ்திரிகள்—எ-று. (௰)

இந்திர னதனைக்கேட்டங் கிருந்தவா னவரை நோக்கி
வந்தன ரரம்பைமாதர் மாதவமழிக்கா திங்கென்
சந்தனத் தருமந்தாரந் தருநிழ லரசுபீடம்
அந்தவல் லசுரன்கைக்கு ளானதென் றறைந்துநைந்தான்.

(இ-ள்.) சென்ற தெய்வப்பெண்கள் இந்திரனைக்கண்டு நடந்த வரலாற்றைச் சொன்னார்கள் அதைக்கேட்டு இந்திரனானவன் அங்கிருந்த தேவர்களைப்பார்த்து ஓகோ தேவர்களே அந்தத் தாருகாசூரன் செய்யுந் தவங் கலையும்படி நாமனுப்பினவைத்த அரம்பாஸ்திரீகள் அவன் தவமழிக்கமாட்டாமல் வந்துவிட்டார்கள், இனி யித்தப் பஞ்சகற்பகத்தருவி னிழலிலே அழிவில்லாமலிருக்கின்ற சிங்காசன பீடம் அந்த அசுரன்கைக்குள்ளே அகப்பட்டுப்போகுமென்று சொல்லி மிகவும் மனது நொந்து எண்ணியெண்ணி விசாரப்பட்டானிந்திரன்.—எ-று.

தாருகன் றவத்தாற்றேவ சதுர்முகன் பிரமலோகஞ்
சேரகன் றிடுமென்று சிந்தையுள் வெருவிமுந்நீர்ப்
பாருள முனிவர்தேவர் பயந்தாற் பரிந்துநோக்கிப்
பேருள தவத்தின்கோரப் பிறழ்வுகண் டடைந்தான்மன்னோ.

(இ-ள்.) ஒருமனதாகத் தாருகாசூரன் செய்கிற தவத்தினாலே சதுர்முகப்பிரமதேவன் தன்னுடைய பிரமலோகம் அழிந்துபோகுமென்று மிகவும் மனதில் பயமுண்டாகிக் கடல்சூழ்ந்தபூமியில் முனிவர்கள் மயங்குவதுகண்டு அன்புடனே மனதிரங்கிப் பார்த்து அசுரன் தவத்தின் பெருமையைக்கண்டு மெச்சிக்கொண்டு தவப்பூமியில் வந்தான் பிரமதேவன்.—எ-று.

என்றுநின் றனைகரை நற்றவ மென்னுமிந்த
வன்றிறற் றவங்கள்செய்தல் மனத்தி லுனினைத்தன்மேயார்
இன்றுனக் கென்கொல்வேண்டு மெவ்வர மெனினுங்கேட்டி
வென்றகை யசுரர்வேந்த தாருக வென்றான்வேதன்

(இ-ள்.) வெகுநேத்தி வெகுநேத்தி நீயிப்படி யகோரமான தவம் நெடுங்காலமாய்ச் செய்கிறாய் நல்ல தவத்தையுடையவர்களும் இப்படி யரியதவஞ் செய்யமாட்டார்கள் ஆகையினாலே உனக்குவேண்டிய வரம் வேணுமோ அந்தவரங்களெல்லாங் கேட்டுக்கொள் அசுரேந்திரனே யென்று சொன்னார் பிரமதேவன்.—எ-று.

நான்மறை யுரைக்கும்பத்ம நான்முகத் தழகும்வெள்ளைத்
தேன்மொழி யிருக்குநாவுந் திகழ்புரி முந்நூன்மார்பும்
வான்முத லுலகமூன்றும் வகுத்தருள் மகிழ்வின்சீரு
மேன்முறை முனிவர்போற்று மேதக வடிவுங்கண்டான்.

(இ-ள்) நாலுவேதங்களு மோதப்பட்ட சதுர்முகத்தழகும் இனிய சொற்களையுடையவெண்மை நிறம்பொருந்திய சரஸ்வதி யமர்ந்திருக்கின்ற நாவுந்திகழ்ந் விளங்கிய முந்நூன் மார்புந் திரிலோகங்களையும் சிருஷ்டிக்கப்பட்ட பெருமையையும் சிறப்பும் வெண்மையுடைய முனிவர்கள் [illegible] அழகிய வடிவுங்கண்டான்.—எ-று. (கச)



கண்டதா ருகன்கொண்டாடிக் கனிந்திரு பாதம்போற்றிப்
புண்டரீ கத்துவந்த போதனே வேதரூபி
யண்டாண்டங்களெல்லா மாக்கிய வையாவெய்ய
தண்டமா காத்தவேத சயசய போற்றியென்றான்.

(இ-ள்.) பிரமதேவனைக்கண்ட தாருகாசூரன் மகிழ்ச்சியுடையவனாகி மிகவுமன்புடனே இரண்டு பாதங்களிலும் நமஸ்கரித்து தாமரைப்பூவி லுதித்தெழுந்தருளிய வேதனே, வேதரூபனே, அண்டபகிரண்டங்க ளெல்லாம் படைத்த வையனே, தண்டாயுதம் பிடித்தகையனே, பிரமதேவனே, சயசய போற்றி போற்றி யென்று வணங்கினான்.—எ-று. (கரு)

சிறிதுமைக் கருத்துள்வைத்த செகத்தவர் நினைத்தவெல்லா
முறைமுறை யுதவுந்தெய்வ மூர்த்தியே யெமதுவாழ்வே
குறைவறக் கருணைபூத்த கோகன கப்பூங்கண்ண
மறைமொழிப் பொருளேயண்ட வைப்புறு மனத்தபோற்றி.

(இ-ள்.) சிறிதுநேர மும்மை மனதில் நினைத்த உலகத்தார்களுக்கு இஷ்டகாமியமெல்லா முறை முறையே கொடுக்கப்பட்ட தெய்வமூர்த்தமே, என்னுடைய பாக்கியமே, குறைவில்லாத கிருபாநோக்கமுடைய கமலக்கண்ணனே, சதுர்வேத பாக்கியப்பொருளே, அண்டமைப்புக ளடங்கியிருக்கும் மானசத்தையுடையவனே போற்றி போற்றி யென்றான் தாருகாசூரன்.—எ-று. (கசு)

போற்றிசெய் யடியேற்கெய்த புகல்வரங் கேண்மோவென்று
மாற்றல்கூர் வலியுந்துஞ்சா வாக்கமு முனிவர்வானோர்
கூற்றனை முதலாந்தேவர் குலப்புடை யனைத்துமென்மே
லேற்றசெங் கழுநீர்மாலை யெனவரந் தருகவென்றான்.

(இ-ள்.) போற்றிபோற்றியென்று வணக்கஞ்செய்யும் அடியேனுக்கு வேண்டிய வரங்களைச் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறான், எனக்குமகா சவுரிய பஜபலபராக்கிரம நிலைமையுஞ் சாகாததேகமுந் தேவர்கள் முனிவர்கள் எமன் வருணன் வாய்வு முதலான தேவாஸ்திரங்களெல்லாம் என்மேலே விட்டாலுமது செங்கழுநீர் மாலையாய் விழத்தக்க வரங்கொடுமையா வென்றான் தாருகாசூரன்.—எ-று. (கஎ)

நீரினால் நெருப்பால்வான நிலைமையால் நிலத்தாற்காற்றால்
சோர்விலா மகவான்றன்னால் சூரியர் மதியென்றேனும்
போரினால் முடியாவண்ணம் பெருவரந் தருகபின்னுன்
காரியத் தொழிலுக்கேகிக் காக்குதி கமலமேலாய்.

(இ-ள்.) நீரினாலும், நெருப்பினாலும், ஆகாசத்தினாலும், நிலத்தினாலும், காற்றினாலுஞ் சோர்வில்லாத தேவேந்திரனாலுஞ் சூரியன் சந்திரன் என்றுசொல்லப்பட்ட பேர்களினாலுஞ் சாகாதவண்ணம் மகாவரம் எனக்குக் கொடுத்தருளிப் பின்பு உன்னுடைய காரியங்களைப்போய்ச் செய்வீராக பிரமதேவனே என்றான் தாருகாசூரன்.—எ-று. (கஅ)

எனவிரு பதத்தில் வீழ்ந்தங் கிறைஞ்சிய நிருதர்வேந்தை
மனமுற மகிழ்ந்தேயந்த வரமெலாம் பெறுதியுன்பாற்

தினகரன் சேனையோடுஞ் சீரொடு மளித்தோமென்றே
கனகப்பொன் னிறத்துவேதன் கமலபா புரத்திற்சென்றான்.

(இ-ள்.) என்றிப்படி கேட்டு இரண்டு பாதங்களிலும் நமஸ்கரித்து வணங்கிய அசுரேந்திரனே, நீ மனமகிழ்ச்சியுடனே கேட்ட வரங்களெல்லாம் பெற்றுக்கொள்வாய், சூரிய கிரணம்போலே அழிவில்லாத சேனைகளோடுஞ் சகல பாக்கியத்துடனே பொருந்தி வாழத்தக்கதாகச் சகல வரங்களுங் கொடுத்தோமென்று சொல்லிப்பொன்னிறமேனியனான பிரமதேவன் பதுமபுரத்திலெழுந்தருளினன்.

அருந்தவம் புரிந்துபார வயன்வரம் பெற்றுமுற்றுந்
தருந்தறு கண்மைவண்மை தாருகன் சூரர்சேனைப்
பெருங்கட லுப்பண்தேவர் பிதிர்ப்பிதிர்த் துளங்கேளங்கக்
கருங்கடா சலம்போற்சூரன் கண்டகர் நகரிற்சேர்ந்தான்.

(இ-ள்.) அரியதவஞ்செய்து பிரமதேவனால் மகா வரங்களைப்பெற்று முழுதும் பராக்கிரமத்தை யுடையவனாய், அசுரசேனாசமுத்திரத்தின் மத்தியிலே பிரவேசித்து தேவர்களெல்லாம் மனநடுங்கி யேங்கவும், கரிய நிறத்தையுடைய மதயானையைப்போலுந் தனக்குச் சொந்தமான அசுரேந்திரபுரத்திற் போய்ச்சேர்ந்தான் தாருகாசூரன்.—எ-று. (உ௰)

வேறு.

தாருகனங் கினிதிருந்து தமனியவண் டப்புரக்கு
நேருகத்து பழியாத நெடுமகவான் நிலைபெயர்த்துச்
சீருகந்த வரம்பையர்தன் திருமனையிற் சேவிப்ப
போருகந்தவிந்திரனும் புறங்கடையிற் காத்துநிற்ப.

(இ-ள்.) இப்படித் தாருகாசூரனானவன் வீரமகேந்திராபுரியி லிருந்து அரசாட்சிசெய்து வருங்காலத்தில், தெய்வலோகத்தி லுண்டான இந்திரனாசாட்சி நிலைபெயரவும், அழகுபொருந்திய தெய்வரம்பையர்கள் தன்னுடைய அரண்மனையில் வந்து பணிவிடை செய்யவும், போர்செய்து தோல்வியடைந்த தேவேந்திரனும் தனது அரண்மனை வாயிலிலே காவலாக நிற்கவுந் தன்னுடைய ஆக்கினைச் சக்கரத்தினலே சகலரையு மடக்கியாண்டான் தாருகாசூரன்.—எ-று. (உக)

நான்மருப்பு மும்மதமு நான்றவிரு செவியொருகை
வான்மருப்பி னடலயிரா வதமுமனை யிடம்வயங்க
தேன்மருப்பெய் மந்தாரைச் செழுஞ்சோலை தனதுமனைக்
கான்மருக்கொண் டெழுஞ்செழுஞ்சிங் காரமலர்க் காவாக,

(இ-ள்.) நான்குகொம்பு மும்மதங்களுந் தொங்கியவாயும் முறம்போன்ற விரண்டுசெவிகளு மொருதுதிக்கையும் வெண்மை நிறமுடைய அழகிய அயிராவதமென்கிற தேவேந்திரனுடைய வெள்ளையானை தன்னரண்மனை வாயலிலே முழக்கஞ்செய்ய, பரிமளங்களையுடைய தேனிறைந்த மந்தாரை முதலாகிய கற்பகச்சோலைகளெல்லாந் தென்றற்காற்றால் வாசனை வீசும்படி புட்பித்து செழுமையையுடைய சிங்காரத்தோப்பாக விளக்கச்செய்து உலகாண்டிருந்தான் தாருகாசூரன்.

பாதாள சேடன்முடிப் பணாமணிதன் றிருமனையின்
மீதான மணிமாட மியன்சுடிகை மணியாக



மாதான சங்கநிதி பத்துமநிதி மனைவாயில்
தாதாவென் றிரப்பவர்க்குத் தருமெவையும் பேராக.

(இ-ள்.) பாதாளலோகத்தி லிருக்கின்ற ஆதிசேடனுடைய பணாமுடி மாணிக்கங்கள் தன்னுடைய மாடமாளிகைமுகட்டிலிருந்து பிரகாசிக்க, மகாதானத்துக்கேதுவாகிய சங்கநிதி பத்துமநிதி இவ்விரண்டு நிதிகளுந் தன்னரண்மனை வாயிலில்வந்து தியாகியென்றிரப்பவர்களுக்கு இல்லையென்னாமல் கொடைகொடுத்து விளங்கி யெங்கும் பிரக்கியாதி யுண்டாக வாழ்ந்திருந்தான் தாருகாசூரன்-எ-று.

வானதியம் புயமனைத்து மனைவாயின் மலராகத்
தானவர்வா னவரையுறத் தளைந்துதளைந் தேவல்கொள்ள
மோனதமா முனிவர்வந்து முறைமுறையா சிகள்கூறப்
போனகமார் முதலாகப் புத்தேளிர் கொணர்ந்தூட்ட.

(இ-ள்.) தேவகங்காநதியில் விளங்கிய தாமரைகளெல்லாந் தன்னரண்மனை வாயிலில் தடாகத்திற்புட்பிக்கவுஞ்சூராதிசூரர்களை யெல்லாம்விலங்கிட்டுத்தனக்கு ஏவல்செய்யவும், மவுனிகளான முனியீசுவரர்கள் முறைமுறையாகவந்து ஆசீர்வதிக்கவும். தேவாமிர்தத்தைப் புசிப்பாக தேவர்கள் கொண்டுவந்து ஊட்டுதல் செய்யவும் வாழ்ந்துக்கொண்டிருந்தான் தாருகாசூரன்.—எ-று. (உச)

சந்திரனைத் தன்சமுகத்தமனியமண்டபநிறுத்தி
அந்தநிலக் கண்ணாடி யாகவொளி ராதவனுஞ்
சிந்துகதிர்ப் பாவகனுஞ் செறிதீப வொளிகாட்டச்
சந்ததமு மகமேரு சார்ந்திடும்பொன் னணையாக

(இ-ள்.) பூரணச்சந்திரனானவன் தன்னுடைய சொர்ணமயமான சபாமண்டபத்தில் நிறுத்திய நிலைக்கண்ணாடியாக, [illegible] அக்கினிதேவனும் நெருங்கிய தீபங்களாகப் பிரகாசிக்க சதாகாலமு மகாமேருகிரியானது தான் சாய்ந்துகொண்டிருக்குஞ் சொர்ன மெத்தைத் திண்டுகளாக விருக்க வாழ்ந்திருந்தான் தாருகாசூரன்.—எ-று. (உரு)

மாருதப்வந் தாலவட்டம் வளைவீச வருணன்மணஞ்
சீரியபன் னீர்சிந்துந் திவலையிற்சிற் சிலதுளிப்பப்
பாரியவுச்சைசுவரமாம் பரியுமவன் பாலகரு
மேருறுவ மாதலிவந் திலகுசிறு தேர்விடுப்ப

(இ-ள்.) வாயுராஜன் வந்து ஆலவட்டங்கள்வீச, வருணன் வந்து மணம்பொருந்திய பன்னீரைவீசி சிறு துளிகளாகத் தெளிக்க, உசிதமான உச்சைசுவரமென்னுந் தெய்வலோகத்துக் குதிரைகளைப்பிடித்து தன்மக்கள் ஏறிநடத்தி வீதிவட்டஞ் செய்ய, மாதலிவந்து தன்பிள்ளைகளுக்குச் சிறுதேர் கடாவி நடத்தவிப்படி யாண்டு வாழ்ந்திருந்தான் தாருகாசூரன்.—எ-று. (உசா)

இவையிவைதா ருகனியற்று மிறையாட்சி யறையாட்சி
தவநிலைவா னவர்முனிவர் தவறுபடத் தாருகனுற்
பவநிலையிற் பயந்துமகப் பண்ணவரும் விண்ணவருஞ்
சுகநிலைசற் றிலராகிச் சுருதியயன் பதமடைந்தார்.

(இ-ள்) இந்தப்பிரகாரந் தாருகாசுரனைவன் செய்யுங் கொடுங்கோல்ஆக்கினைக்குப்பயந்து தேவர்கள்முனிவர்கள் தவநிலைகளெல்லாங் குலைந்துபோகவும், யாகாதிகிர்த்தியங்களுஞ் செய்யாமல் சற்றுஞ் சுகமில்லாதவர்களாய் கூட்டமாகக் கூடிக்கொண்டு வேதப்பிரம்மாவி னிடத்தில்வந்து சேர்ந்தார்கள்.—எ-று. (௨௭)

வேறு.

அடைந்தனானவர் தானவர்திபதி யமர்செய்தாருகனேவற்
கிடங்கொடுக்கிய யின்முகப்பனித்தடத் தெழுந்தவம்புயம்போல
உடைந்ததன்மையுந் திருமாலுள்ளமு முறுபழிமொழித்தீஞ்சொற்
குடைந்த வுள்ளமு மன்னமுங்கஞ்சமுங் கொண்டவன்சிறிதோர்ந்தான்.

(இ-ள்.) அப்படிவந்து சேர்ந்த தேவர்கள் முனிவர்கள் அசுரேந்திரனை தாருகாசுரனுக்கினைக்குள் சிக்கி ஏவல்செய்து சஞ்சலப்பட்டு மனதுநொந்து மிகுந்த பனிப்பட்ட தாமரைபோல் வாடியமுகங்களையுஞ்சிந்தாகுலமாய் ஏசப்பட்ட சுடு சொல்லுகளா லுடைந்த கருத்தையும் அன்னவாகனமுங் கமலாசனத்தையுமுடைய பிரமதேவன் சிறிது தெரிந்துணர்ந்தான்.—எ-று. (௨௮)

என்னையென்னைநும் நெஞ்சகத்தெண்ணிய வெண்ணமென்றயனோத
முன்னைநீரொரு தாருகன்றனக்கெமை முனைவரங்கொடுத்தீரால்
உன்னுமீருமதுரைமறைநெறியினை முமக்குநண்பினைமல்லேம்
பின்னரென்னுமையெமதரம்பையரவன் பிறங்கடைச்சிறைபுக்கார்.

(இ-ள்.) பிரமதேவன் தேவர்களைப்பார்த்து உங்கள் மனதில் என்னசங்கதி மெண்ணி வந்தீர்களென்று கேட்க, நீர் முன்னே ஒரு சூரனுக்கு எங்களை நெருக்கஞ் செய்யும்படி யிருந்த வரங்கொடுத்தீர், எங்களை நினையாமல் மறந்துவிட்டீர் உம்முடைய வாக்கியத்தின்படி வேதநெறி முறைமையை யுடையவர்கள் நாங்கள், உனக்கன்பில்லாதவர்களானோம், அதுவல்லாமல் எங்கள் ரம்பாஸ்திரீகளெல்லா மந்த சூரன்வாசலிற்சிறையிற் சிக்கியிருக்கிறார்களென்றுஞ் சொன்னார்கள்தேவர்கள்

ஓரணுப்பொழு தும்பர்களுலகினி லுறைகுதற்கரிதையா
சீரினும்முழை யிருப்பவெங்கட்கெலாஞ் சிறிதமுதருள்கிற்பீர்
தாருகன்செயு மானபங்கத்தினாற் சாவுறாவினிதெங்க
ளூருநும்பரமுலகுநும்பரமெம துயிருநும்பரங்காப்பாம்.

(இ-ள்.) ஒருகணப்பொழுதாகிலுந்தெய்வலோகத்தில் வசிக்கின்றது அரிதாயிருக்கின்றதையா, இனியும்மிடத்திலேதானே யிருக்கிறோம் எங்களுக்குக்கொஞ்சம் அமிர்தபோசனங் கொடுப்பீராக, அந்தவசுரன் செய்கிற மானபங்கத்தினாலே சாகிறதே நன்மையாயிருக்கின்றது, எங்களுலகமும், எங்கள் வாழ்வும், நாங்களும் உம்முடைய அடைக்கலமென்று சொன்னார்கள் தேவர்கள்,—எ-று. (௩௰)

என்றிரந்திமை யவருமாமுனிவரு மிந்திரன்முதலோருஞ்
சென்றடைக்கல மெனவுரைசெயவயன் செப்புதற்னைச்சூதர்
தன்றுணைக்கிளை யயனற்சவுனக தாபதரிவைகேட்ப
வன்றுரைத்தன ரறுமுகருரைத்ததென் றவற்றையானறைகிற்பாம்,



(இ-ள்.) இப்படி தேவர்களும் முனிவர்களுந் தேவேந்திரன் முதலானவர்களும்போய் அடைக்கலமென்று சொன்னபோது, பிரமதேவன் அவர்களுக்கு அபயமளித்த ... சொன்னதைத் தனக்கு சினேகமான சவுனகாதி முனிவர்கள் கேட்க, முற்காலத்திலே சண்முகமூர்த்தி சொன்னார் அதையெல்லாம் விளங்கச் சொல்லுகிறேனென்று சூதமுனிவர் சொல்லுகிறார்.—எ-று. (௩௧)

தாருகன் செயற்கைச்சருக்க முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் ௩௮.

Q23:38.211576
N32
120797

## சண்முகருற்பத்திச் சருக்கம்.

முனிவரெம்மவர் நும்மவர் முதலியோர் முப...
நனிகொள் மெய்த்தவத் தாருகம்முலகெலா நடுக்க...
னினையலெப்பகை யறிந்தவனெண்ணிய வியந்துபின்னி...
தனியுணர்ந்தனந் தாருகனிறந்துறுந் தானமுங்களுக்காமால்.

(இ-ள்) இப்படி அடைக்கலமென்று சொன்ன தேவர்களைப்பார்த்து பிரமதேவன் சொல்லுகிறான், கேளுங்கள் தேவர்களே முனிவர்களே எம்முடைய பரிசனங்கள் உங்களினத்தார்களிவர்கள் முதலாகிய பேர்களெல்லாஞ் செய்யுந்தவத்தைப்பார்க்கிலு மேலான அரியதவஞ்செய்த மகிமையினாலே தாருகாசூரன் நம்முடையஉலகங்களெல்லாம் நடுங்கத்தக்கதாக தீயவினைத்தொழில்செய்கிறான், இப்படித் தேவர்களைப் பகைத்துக்கொண்ட வலிய தாருகாசூரன் இன்னஞ் சில நாளில் இறந்துபோய் உங்களுடைய தேவதானம் உங்களுக்கு நிலையாகுமது நான் தெரிந்துகொண்டேனென்று சொன்னார்.—எ-று. (௧)

என்னவன்னவா க்னவுரைத்தருளிய வினிதுரையிமையோர்தங்
கன்னமீதினு மமுதமுண்பவரெனக் களித்தனன்குளித்தாற்போல்
நன்னலத்தகங் குளிர்ந்தனர் தழைத்தனர் நயந்தனர் பயந்தீர்ந்தார்
பொன்னயன்றனைப்புகழ்ந்தனர் மகிழ்ந்தனர்புலப்படப்புகல்கென்றார்.

(இ-ள்) என்றிப்படி பிரமதேவன் சொன்ன நயவார்த்தைகளைக் கேட்டுத் தேவர்களெல்லாந் தங்கள்காதுகளில் தேவாமிர்தம் உண்டவர்போலுங் களிகூர்ந்து அமிர்தத்தில் மூழ்கி எழுந்தவர்களைப்போலு மிகவும் நன்மையாக மனது குளிர்ந்தார்கள். செழிப்புடனே பயந்தீர்ந்தார்கள், ஆசையுடனே நான்முகனைப் புகழ்ந்து மகிழ்ச்சியுடையவர்களாய் சுவாமியும்முடைய மனதில் தெரிந்துணர்ந்தவாலாற்றை யெங்களுக்குத் தெரியும்படியாக வெளிப்படச் சொல்லி யருளவேணுமென்று கேட்டார்கள் தேவர்கள்.—எ-று. (௨)

அஞ்சலஞ்சலிங் கவர்களையழிப்பதற் கறுமுகச்செவ்வேளை
செஞ்சிலம்படி யுமையவளுடனரன் சேர்ந்தருளுவதாக
விஞ்சைவுண்டவ்வுணர்ந்தனம்யாமவன் வினைகடிவதற்சேலா
தஞ்சுரும்பதமுறைகுவீரென்றய னோதவங்கவைகேட்பார்

(இ-ள்) தேவர்களே நீங்கள் அஞ்சவேண்டாம் அந்தச் சூரனைக் கொ[illegible]தற்கு ஆறுமுகக் குமாரரைத் தருவதாக அழகியசிலம்பணிந்த பாதங்களை[illegible] பார்வதி தேவியுடன் பரமசிவன் கூடி முயங்குவதற்கு ஒரு உபாயமுண்டு அ[illegible] நமக்குத் தெரியும், நாம் அந்தச்சூரனைக் கொல்வதற்குக் கூடாது, நீங்கள் பிழைக்கும் பொருட்டாக யத்தனஞ்செய்கிறோம் நீங்களுடைய ஸ்தானங்களிலே வசிப்பீர்களென்று பிரமதேவன்சொல்ல அதைப்படியென்று கேட்டார்கள் தேவர்கள்.

அந்தவாறெமக் கருளுதியெனவிமை யோரடிதொழுவயன்கூறுங்
கொந்தலாவிய கொன்றையஞ்சடிலனக் கொடியதக்கனைக்காய்ந்த
தந்தையென்றுள தவறுதீர்த்திடவனற் றழற்றடத்திடைமூழ்கி
வந்துவந்திம வானிடைப்பிறந்தனள் மலைமகளெனநின்றாள்.

(இ-ள்.) அந்தவாறவற்றை எங்களுக்கு அருள்செய்ய வேணுமென்று தேவர்கள் வணங்கிக் கேட்க பிரமதேவன் சொல்லுகிறார், கொன்றைமாலைசூடிய சடையையுடைய பரமேசுவரன் தக்கனை வதைசெய்தபின்பு தக்கன் மகளென்கிற குற்றந்தீரும்படியாக அக்கினித்தடாகத்திலே மூழ்கி இமவானிடத்தில் வந்து பிறந்து வளர்ந்து மலையரசன் மகளென்று பெயர்கொண்டு இருக்கிறாளுமையவள்.—எ-று.

மதியிளங்கதிர் புனைந்தவன்றானுமவ் வரையிலேகாந்தப்
பதிபெறும்படி யோகசாதனந்தினம் பயின்றனன்பசுங்காவில்
தினந்தொறுஞ்சிவன் றிருவடிதொழுதிடுஞ் சிலம்பின்மங்கையுமேவும்
முதுகரும்பிறை பாலவர்கூடவோர் முயற்சிசெய்குவிரென்றான்.

(இ-ள்.) மூன்றாம்பிறையைத்தரித்த சடையையுடைய பரமேசுவரன் கயிலாசத்தின் தென்பாரிசத்திலே ஏகாந்தமாக யோகசாதனை தினந்தினஞ் செய்யாநின்றார், குளிர்ந்த புட்பவனத்திலே சதாகாலமுஞ் சிவன் திருவடிகளைப் பூசிக்கும் மலைமகளான பார்வதிதேவியும் வாராநின்றாள். அந்தப் பார்வதிதேவியைப் பரமேசுவரன் திருக்கலியாணஞ்செய்து கூடிமுயங்கும்படி மன்மதனைக்கொண்டு ஒரு முயற்சிஉபாயம் நீங்கள் செய்வீராகவென்று சொன்னார்பிரமதேவன்.—எ-று.

ஓதிவாகனனேறியதுவலையுற் றுபயதாண்மலர்போற்றிக்
கோதின்மன்மதன் றனையுடனழைத்துநுங் கொற்றமுற்றுதியென்று
காதல்கண்டிரதிக்கிறைபடியனுக் கருள்பணிசுரர்வேத
னேதெனப்பகர்ந்தன னெமைத்தேவரை யினியவாழ்வுறக்காப்பாய்.

(இ-ள்) அன்னவாகனமுடைய பிரமதேவன் சொல்லக்கேட்டு மிகவுஞ் சந்தோஷமாகி அவருடைய பாதங்களைப் போற்றிசெய்து, அழகிய மன்மதனையழைத்து உங்களுடைய காரியங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று சொல்லக்கேட்டு ரதிநாயகன் இந்திரனை வணங்கி அடியேனுக்கு என்ன யேவலிடுகிறீர் அதைச்சொல்ல வேண்டுமென்று கேட்க, எம்மையுந் தேவர்களையும் இன்பமான வாழ்வைப் பொருந்தும்படி காப்பாயென்று பின்னுஞ்சொல்லுவான்.

அண்டமும்புவி யுஞ்சராசரங்களு மருந்தவப்பெரியோரும்
விண்டலத்திலிந் திராணியுமரம்பையர் மெல்லியலவரோரு



[illegible]ண்டெனப்படைத் தருள்வதன்றையனன் றேபரமேமைக்காப்ப
[illegible]ண்டுபெற்றருள் வியன்மணியேபரன் மீயுநீசெலவேண்டும்.

(இ-ள்.) அண்டபுவனங்களுந் தேவர்களைவர்களு மரிய தவமுடைய முனிவர்களுந் தேவலோகத்தி லிந்திராணியும் அரம்பை முதலான தெய்வப்பெண்களனைவரும் பிறந்து வளர்ந்து வாழும்படி சிருஷ்டித்தருள்வது உன் தமையனான பிரமதேவனல்லவோ, நீ எங்களை யிரட்சிப்பது உன்பாரம் மகாவிஷ்ணு பெற்றருளிய புத்திரனே, எங்கள் கண்மணியே, நீ இப்போது பரமசிவன் யோகங்குலையப் பாணப்பிரயோகஞ் செய்யவேண்டுமென்று சொன்னார் இந்திரன்.—எ-று. (எ)

எனப்புகழ்ந்திரந் திமையவர்புரந்தர னிருந்தவரிதுகேட்பத்
தினைக்கணத்தரன் செய்தவங்குலைத்தொரு [illegible]ருகுவன்சாண்டி
மனத்திடைத்துயர் விடுகவென்றலர்க்கணை மணிக்கரும்பவில்கோலிப்
புனற்கபற்றிகாடி யிரதியும்வசந்தனும் பொலன்மணி முடிவேய்ந்தான்.

(இ-ள்) என்றிப்படி இந்திரனுந் தேவர்களும் முனிவர்களு மன்மதனைப் புகழ்ந்து கேட்டுக்கொள்ள, மன்மதனுஞ்சம்மதித்து ஒருதினைப்பொழுதில் சிவன் செய்யுந்தவத்தைக் கொலைத்துச் சிவனுமையைக்கூடி ஒருபிள்ளை உண்டாகும்படி செய்கிறேன் என் சமர்த்தைப் பாருங்களென்று திடஞ்சொல்லி இனியுங்கள் மனத்துயரங்களை விட்டுவிடுங்களென் றுறுதிசொல்லி, புட்பபாணங்களுங் கருப்பு வில்லுங் கையிலெடுத்து மச்சக்கொடிபிடித்துப் போர்க்கோலமாக இரதிதேவியும் வசந்தனு மலங்கரித்துக்கொண்டு இரத்தினமயமான கிரீடந்தரித்தான் மன்மதன்.

கன்னகுண்டலந் திருத்திபொற்றோளணி கதிர்மணிப்புயத்தேற்றி
யன்னவாகன னச்சுதன்றருமணி யாரமார்பிடைபூண்டு
பொன்னணித்துகில் புனைந்துகேதகையிடை பூட்டிவிற்றேனிகாட்டி
முன்னடத்தின னிரதமுஞ்சேனையு முழுமதிக்குடையோங்க.

(இ-ள்.) இரண்டுகாதுகளிலும் இரத்தினகுண்டலந் தரித்து, இரத்தினவாகுவலையங்களணைத்த புயங்களிற்பூட்டி, பிரம்மாவும்விஷ்ணுவுங்கொடுத்த இரத்தினாரங்களை மார்பிற்பூண்டு, சொர்ணமயமான பூந்துகிலுடுத்து, இடையிற் கச்சைகட்டி, தாழைமடற்பூவை யுடைவாளாக இடையிலேதரித்துக் கருப்புவில்லை வளைத்து குணத்தொனி செய்து, கிளிக்குதிரைகள் பூண்ட தென்றற்றேர்மேலேறி, பெண்சேனைகளை முன்னே நடத்தித் தனதுரதத்தையும் பின்னே நடத்தினான் சந்திரவட்டக்குடை நிழற்ற மகரகேதனனாகிய மன்மதன்.—எ-று. (கூ)

காளகண்டமே காளகண்டனைமனங் காமர்செய்விடுதூதா
நீளகண்டமை போலகானனியெலா நிறையிசைகளிகூற
ஆளகண்டனை யைம்முகத்திறைவனை யாறுசூழ்சடையானை
வேளகண்டனென் றிடவொருபாங்குபோய் வியன்கணைக்கிடம்பார்த்தான்

(இ-ள்.) காளகண்டமாகிய குயில்கள் காளகண்டனான சிவன் மனத்திற் காமச்சின்னமுண்டாக விருதுசின்னமூதிகாக் கரியமைபோலும் காளைக மொய்[illegible]ண்டினங்களெல்லாம் நிறைந்து இசைபாடிவர, அகண்ட பரிபூரண மூர்த்தி[illegible] ஐம்முகக்கடவுளாகிய கங்கைச் சடையையுடைய சிவனை மோகனஞ்செய்

யும்படி சிவயோகதலத்தில் ஒருபக்கம் போய்ச்சேர்ந்து பாணப்பிரயோகம்பண்ண இலக்குப் பார்த்தான் மன்மதன்.—எ-று. (௰)

ஆபகாலையி லசலமாதம் பிகை யழகுபொற் குடம்போலுஞ்
சேயகொங்கையுஞ் செய்யபொற்பட்டினுத்தரிகமுந் திருத்தோட்டின்
வேயகண்மணி நீலமுஞ்செம்மணி விளக்குமொளிகூரத்
தூயபற்றா ளத்தொகைநிலவெழத் துடியிடைத்துகிலார்ப்ப.

(இ-ள்.) அக்காலத்தில் மலைமகளான அம்பிகாதேவி அமிர்தபூரண கலசம் போலு மழகிய ஸ்தனபாரங்களுஞ் சிவந்த பொற்பட்டையும் ரமணியமாகத் தரித்த உத்தரீயமும், அழகிய கவசகுண்டலமணிந்த வள்ளைக்கொடிபோன்ற காதுகளும், நீலோற்பலம்போன்ற வடிய கண்களும் திவ்விய ரத்தினாபரணங்களும் பிரகாசிக்கவும், ...யாளிகைகள் முத்துக் கோர்வை போலும் ஒளிசெய்யவும், துடிபோன்ற இடையிற்றரித்த மணிமேகலைகளாரவாரஞ்செய்யவும்.—எ-று. (௧௧)

பங்கயக்கரப்பதுமமாமணிவளைப் பைங்கொடியொளிவீற
வெங்கனங்குழல் வண்டிசைசிலம்பிசை வேள்வருகெனக்கூறத்
தங்கரத்தினைப் பொன்னலங்கலினலந் தண்டலையிருள்வாட்ட
எங்குலத்தெய்வ மேனியின்சோதிநம் மிருட்படலந்தனைவீட்ட.

(இ-ள்.) செந்தாமரை புஷ்பம்போன்ற கைகளிற் பதுமராகமணிவைத்திழைத்த தொடிவளைகள் ஒளிவீச நெடியகூந்தல் மொய்த்த வண்டினத் திசைகளும் பாதச்சிலம் பொலிகளும் மன்மதனை வாவென்றழைப்பது போலுஞ் சத்திக்க, பொன்மணி யோலைகளின் சுடர்கள் அந்த புட்பகவனத்து விருள்களை நீக்க எங்கள் குலதெய்வமான உமையவள் திருமேனிப்பிரகாசம் நம்முடைய மனத்திருட்படலங்களை யகற்றப் பின்னையும்.—எ-று. (௧௨)

மதியுமெல்லையு மொருபொழுதெழுந்தென மணிபணிக்கதிரோங்கத்
துதிகொள்வாணியுஞ் சுந்தரத்திருவுநற் றுணைத்திருக்கரந்தாங்க
விதியுமாலுமிந் திரனுமம்பகையிருள் விடிந்ததெனறளியோங்கப்
பதிதாருகன் புயவலித்திருவெலாம் பதைபதைத்துளமேங்க.

(இ-ள்.) சந்திரனுஞ் சூரியனு மொருபொழுதிலே யுதித்தெழுந்தாற்போலே ரத்தினாபரணத்தின் பிரகாசங்கள் உலகமெல்லாம் நிறைந்து விளங்க ஸ்தோத்திரஞ் செய்து சாஸ்வதியும் அழகிய லட்சுமியும் உமையவள் திருக்கைகளைத் தங்கள் கைகளால் தாங்கிவரப் பிரமாவும் விஷ்ணுவும் இந்திரனும் தேவர்களும் முனிவர்களும் நமது பகையிருள் விடிந்ததென்று சந்தோஷிக்க கொடுந்தொழிற்செய்கின்ற தாருகாசூரன் புயபலங்களும் அவனதுசகல செல்வமும் பதைபதைந்து மனதுகலங்கப் பின்னையும்.—எ-று. (௧௩)

சயிலமங்கைவாட்மை நச்சமுகிழூற்றற்றமைத் தமையேச
வயில்விழித்தெய்வ மங்கையர்கவரிபாலகடற்றிரைபெனவீச
வியனெடும்புவி மடந்தைபார்கரங்களால் மென்மலர்ப்பதம்பூச
நயமகப்புரந் தரன்முதலனைவரை நகெடுங்கிடக்கூச.

(இ-ள்.) மலைமகளான உமாதேவி யழகைப்பார்த்து மலையமகளிசெல்லார் தங்கள் தங்களுக்குள்ளே வியக்கொள்ள, வேல்போலுங் கண்களையுடைய தெய்வ



பெண்கள் சமுத்திரத்தலைகள்போலுங் கவரிவீச, யோக்கியமான பூமிதேவி அம்மன்பாதங்கள்நோகாமல் மிருதுவாகத்தன் கைகளாற் றாங்கிப் பிடித்துக் கொண்டுவர இந்திரன் முதலானபேர்கள் வினைகளெல்லாம் ஒடுங்கிக் கூச்சப் பட்டபின்னையும்—எ-று, (௧௪)

செஞ்சிலம்பலம் பியமலரொடுங்கொடி செயகாந்தளிரேனும்
கஞ்சமென்கிளிக் காத்தொடும்புயலொடுங் கயலொடுங்கமுகோடும்
வஞ்சியங்கொடி பொன்றுபொற்பணியொடு மருமலர்க்கணைவில்
விஞ்சைவந்தெனப் பஞ்சவக்திரனெதிர் விளங்குபார்வதிவந்தாள்.

(இ-ள்,) அழகியசிலம்புகள் ஒலிக்கப்பட்ட பாதமலர்களுடனேயுஞ்சொர்ண வளைகளையணிந்த கைகளான காந்தட்புஷ்பங்களுடனேயு மரகதக்கிளியேந்தின கமலம்போன்ற கைகளுடனேயுங் கூந்தலாகிய கரியமேகத்துடனேயுங்கண்களாகிய மீன்களுடனேயுங்கழுத்தாகியகமுகுடனேயும் இடையாகியவஞ்சிக்கொடியுடனேயும் விளங்கச் சர்வாபரணவலங்காரத்துடனேயும் திவ்விய சொர்ணமயமானபூங்காவில் அதிசயம்போலு மைந்துமுகங்களையுடைய அழகிய பரமேசுவர னெதிரில் ஒருவிஞ்சைவந்ததுபோலும் வந்தாள் அழகியபார்வதியம்மன்.—எ-று. (௧௫)

வந்துவந்தனை மலரடிக்கியற்றுவாள் மலர்க்கரத்தானீர்கொண்
டெந்தையைத்தொழ வெடுத்தபுட்பாஞ்சலி யிடையொருசரபாண
முந்துமுண்டகமுண்டெனவெய்கனன் முழுமதிக்குடைக்கீழான்
அந்தவிற்கணைச் சற்பனைத்தொழிலினு ளாதுமைமுகம்பார்த்தான்.

(இ-ள்.) இப்படிபார்வதியம்மன் வந்து சிவன்பாதத்தில் வந்தனையுடனேபாத பூசை செய்வதற்குத் தன்மலர்க்கைகளால் நீர்கொண்டு சிவனுடையபாதமலர்களில் அபிஷேகஞ்செய்து புட்பாஞ்சலியிடுகிறதறவாயில், ஒருதொடையாகக்கோத்த தாமரைப் பூங்கணையையெய்தான், பூரணசந்திர வட்டக்குடைகிழாகீழ் நின்ற மன்மதனானவன் அப்போதுமறைந்தெய்த்தக்கமபாணப்பரிசத்தினாலே ஆதிசிவனுமையவள் முகத்தைப்பார்த்தார்.—எ-று, (௧௬)

பார்வைகண்டபின் பார்வதியிறைமனப் பாங்கறிந்துளநாணப்
போர்வயக்குமில் சியோகமேன் பிழைபடும் பிறங்குவேள்செயலாமென்
றோர்விளங்கய நுதல்விழிதிறந்தவ னெரிந்திடக்கனன்றூதி
தார்வயந்தமப் பன்னகசாலையைத் தணந்தனன்பரமேசன்.

(இ-ள்,) சுவாமி பார்த்த பார்வையின் குறியைக்கண்டு பார்வதிதேவி சிவனுடைய மனபாகமறிந்து உள்ளத்தில் நாணமுண்டாகியொதுங்கினள். அப்போது ஒருநிலையையானமனதுடனேகாம் செய்த இந்தச்சிவயோகந்தடைபடக்காரியமென்னவென்று தன் ஞானதிருஷ்டியாற்பார்த்து இதுமன்மதன் செய்தசர்ப்பனையென்று தெரிந்து அழகிய நெற்றிக்கண்ணைத்திறந்து காமனையெரித்துப்புட்பசரங்களாற் செய்தபன்னசாலையை விட்டேகினர் பரமேசுவரர் உமையவளுடனெங்கும்படியாய்—எ-று (௧௭)

வேறு.

...ங்கதிர்ச்சுடர்த்துவள விற்பண வருந்தி
...வருசடிலப்புயவ் விறுப்பிகைகத்தா

ளோங்கியதவத்தொழி லாகந்தகனைவேந்தி
னீங்கரிதெனத்தவ மியற்றியிடை நின்றாள்.

(இ-ள்.) அப்போது பரமேசுவரன் கைலாயத்திற்கெழுந்தருளினபின்பு மிகவும் வருத்தப்பட்டு சிவன் தோள் சேரவேணுமென்று விருப்பத்துடனே உயர்ந்த தவத்தொழிற் செய்ய நினைத்த பஞ்சாக்கினிமத்தியிலே செய்தற்கரிய தவஞ்செயா நின்றாள்பார்வதியம்மன்.—எ-று. (கஅ)

நின்றபதமீதொர்பத நேருறமடித்தாள்
மென்றுடையடித்தலம் விரித்தரைபிடித்தா
ளொன்றுபெருவிரலழனி னூசிபின்மிதித்தாள்
குன்றிரவிநேர்விழி திறந்தருள்விதித்தாள்

(இ-ள்.) ஒருபாதத்தினாலே நின்று, நின்ற பாதத்தின்மேலொரு பாதத்தை மடித்து அடித்துடைத்தலத்திற் சேர்த்திருக்கி ஒருகையி லிடையைப் பிடித்து நின்றாற்பெருவிரல் அக்கினிக்குண்டமத்தியில் ஊசிமுனையிலூன்றி ஆதித்தனுக்கு நேராகக் கண்பார்வைகளைச் செலுத்தி பத்தியினால் காரணபஞ்சாட்சரத்தைத் தியானஞ்செய்து ஒருமனதாக விப்படி அரியதவஞ் செய்யாநின்றாள் பார்வதியம்மன்.—எ-று. (க௯)

வாமகரம் வாமபுரம் வாமமுறநீடச்
சேமகரவங்குலி சிரத்தமுறுதளிப்ப
காமனையெரித்த கடவுட்பதநினைந்தே
ஓமுதலெழுத்தையு மொரைந்தையுமுரைத்தாள்.

(இ-ள்.) இடதுபுறத்திலே இடக்கையழகுபெற நீட்டிவலதுகை யங்குலிகள் சிரசின்மேலே முதனிதமாக காமனைத் தகனஞ்செய்த சிவன்பாதத்தை நினைந்து பிரணவமுதலாய மூலபஞ்சாட்சர மந்திரத்தையு மிடைவிடாமல் சபத்தியானஞ் செய்துதவஞ்செய்யாநின்றாள் பார்வதியம்மன்.—எ-று. (உ௦)

சத்தரிஷிமங்கையர் தனித்தனிவணங்கச்
சித்தசனணங்கிரதி சென்றுபணிசெய்ய
மெய்த்திருவும்வாணியும் வியந்தினவுகூற
உத்தமதவத்தொழி லியற்றுசெயுநாளில்.

(இ-ள்.) சத்தரிஷிகளுடைய பத்தினிகள்வந்து தனித்தனியே வணங்கித் துதிக்க, மன்மதன் தேவி வந்து பணிவிடைசெய்ய, லட்சுமியும் சரஸ்வதியும்வந்து மனத்தில் சந்தோஷித்து தவத்தொழிலுக்கேற்ற உபாயங்கள் சொல்ல பார்வதியம்மன் உத்தமமான அரியதவஞ் செய்தாளப்போது.—எ-று. (உக)

ஐம்முகன்பலைத்திரு வருந்தவ முணர்ந்து
தம்மறைவொழிப்பிரம சாரியெனமெய்தி
விம்மிதவத்தலம் விளங்கியெதிர்நின்று
நம்முயர்வளஞ்சிறிது கேளெனநவிற்றும்

(இ-ள்.) ஐம்முகனான பரமசிவன் பார்வதிசெய்யுந் திருமுயற்சியை உணர்ந்து ஒரு பிரமசாரிப் பிராமணனைப்போல வுமையவள் தவஞ்செய்கிற தவப் பூமியில் வந்து அம்மனுக் கெதிரே விளங்கிநின்று நம்முடையசம்பிரதாயம் சிறிதுசொல்



இரேங் கேளும்பெண்ணே பார்வதியென்று விநோதமாகச்சில வசனங்களைச் (உஉ)
சொல்லுகிறார்.—எ-று.

என்பரவுபூளைவெள் ளெருக்குடலம்வேய்ந்து
அன்புறுகபாலபலி தாழ்ந்த வொருபித்தன்
வஞ்சுடலையம்பல வனத்திடைவசிப்போன்
பின்படர்வகாளியடு பேயினொடுகளி.

(இ-ள்.) எலும்புகள், பாம்புகள், பூளைப்பூ, வெள்ளெருக்கம்பூ இவையெல்லாந் தரித்துக்கொண்டு, விகாரமான கபாலத்தையேந்தி பிட்சைவாங்கியுண்கிற பித்தனானவன், வண்மையையுடைய சுடலையிலும் அம்பலத்திலும் தில்லைவனத்திலும் ஆடிக்கொண்டு திரிகிறவன், பூதப்பிரேதம் பிசாசு காளி டாகினிகளுமாகிய கணங்களுடனே கூடித்திரியப்பட்டவன் அந்தச்சிவனென்று சொல்லிப்பின்னை (உ௩)
யுஞ்சொல்லுவார்.—எ-று.

உடுப்பதரையிற்புலி யுரிகதுகில்காத்தே
யெடுப்பதுநகைப்பதும் விழிப்பதுமெழிற்றீ
நடக்கரிபதட்டன துடற்கிடைதரிப்போ
னடித்துவெறிமிற்றிரிவ னக்கனவமிக்கோன்.

(இ-ள்.) அந்தச்சிவனானவன் இடையிலுடுத்துவது புலித்தோலுடை, கையிலேந்தி யிருப்பதுவுஞ் சிரிப்பதுவும் விழிப்பதுவும் அழகிய நெருப்பாகவிருக்கும், விசாலமாகிய யானையையுரித்து அதன்றோலைப் போர்வையாகத் தரித்துக்கொண்டவன், தொந்தோந்தொந்தோமென்று ஆடிக்கொண்டு வாய்ச்சிமீறிப்பிதற்றித்திரிகிறவன, நிராதாரனென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுவார்.—எ-று. (உ௪)

நஞ்சுணவுவிஞ்சைமுனி நங்கையர்மாநண்டே
வஞ்சவொருவஞ்சகினை யன்பொடுபுரிந்தோன்
கொஞ்சுமகவின்றசை யரிந்துணவுகொண்டோன்
புஞ்சவெருதின்மிசைபுறம்பிவர்புறப்பன்.

(இ-ள்.) ஆலாகலவிஷத்தையுண்டு கண்டங்கறுத்தவன், விஞ்சையையுடைய தாருகாவனத்து முனிவர்கள் பத்தினிகளை மயக்கிப் பதிவிரதாபங்கஞ்செய்தவன், கொஞ்சிவிளையாடும் பிள்ளையை அறுத்துக்கறியாக்கச்சமைத்துண்டவன், புல்லிய வெருதின் முதுகின்மேலேறி நடத்தித் திரியப்பட்டவன் வஞ்சகத்தொழில் செய்தவன், உலகந்தார்கைக்கத் தனியேதிரியுஞ் சிவனவனென்று பின்னையுஞ்சொல்லு (உ௫)
வார்.—எ-று.

என்றவனடைந்தயறை யோன்பலவியப்பி
யின்றவனைமங்கையிவை யின்றதிழிபன்றோ
நன்றெனையணைந்திடுவ தன்றவமுநன்றே
குன்றரிவைகேட்டனவை கொன்றெனமுனிந்தாள்.

(இ-ள்.) என்றிப்படி பிரமசாரிவடிவான சிவன் இழிவான பலவார்த்தைகள் சொல்லி ஓ மலையரசன் மகளே, நீயிப்படிப் பித்துப்பிதற்றித் திரிகிற சிவனையோ சேரநினைந்து தவஞ்செய்கிறாய், இதுஇழிவான காரியமல்லவோ ஆகையால் காருண்யமேற்றவன் நீயெனக்கேற்பவள் என்னைச்சேருவதே நன்மையான காரியம், நீசெய்யுந்தவமுஞ் சரியேயென்றிப்படிச்சொல்லவும் அவனைக்கொல்லு (உ௬)
வதுபோலுங் கோபித்தாள் பார்வதி.—எ-று.

முனிந்தநெறியுந்தலை முதிர்ந்ததுமுணர்ந்தே
தனிந்துமுடியுந்துடி தயங்குகரமுந்தார்
வனைந்தவுரமுந்தமை மலர்ந்தவிழியுஞ்சீ
ரணைந்தமுறநந்தவ மணங்கிடெதிர்நின்றார்.

(இ-ள்.) உமையவள் கோபித்தகுறியுந் தலைமுயற்சிநெறியுந் தெரிந்துணர்ந்து சந்தோஷமாகி மூன்றாம்பிறைசூடிய சடையும் அடியயங்கிய கைகளும் பூமாலையணிந்த மார்பும் இருபைநிறைந்த கண்களு மின்னுமநேகவிதமான வடிவுடனே தற்சொரூபமாகத் தவஞ்செய்கிற மலைமகள் கண்ணுக்கெதிரே தான்றிக் காட்சி கொடுத்து நின்றார் பரமசிவன்.—எ-று.

(௨௭)

இமயகிரிமங்கைசிவ னென்றறிவுணர்ந்தே
கம்பமலர்சிந்திவிரு கழலிணைபணிந்தா
ளுமையினதுசிந்தைதவ முதலினைமணந்தே
யெமதுகயிலைப்புகுவ மென்றுரைபுரிந்தார்.

(இ-ள்.) அப்போது இமவான்மகளாகிய பார்வதியம்மன் நமது பிராணநாயகரான ஆதிசிவன் வந்துதோன்றினாரென்று தமரைப்பூமுதலான புட்பங்கள்தூவி சுவாமிபாதங்களை வணங்கித் துதிசெய்தாள், அதுகண்டு சொல்லுகிறார் வாராயுமையே உன்னுடையமனோபீஷ்டமான வரங்களையெல்லாங் கொடுத்தோம், இனி நம்முடைய கயிலாசகிரிக்குப் போய்ச் சேருவோம் வாரும் பெண்ணேயென்று சொன்னார் பரமசிவன்.—எ-று.

(௨௮)

ஆயவுரை கூறவுமை யான்பகர்வதென்னதோர்
தாயுரியமேனைபெறு தந்தைமலைவேந்தன்
மாயனயன்மாமகளி ரோர்பணிமதிப்ப
நேயமுடனேவதுனை நேருவதுநெறியால்.

(இ-ள்.) அப்படிப் பரமன் சொல்லக்கேட்ட வுமையவள் சொல்லுகிறாள், எனக்குத்தாயானவள்மேனை, தகப்பனானவன் மலையரசன், அவர்களுக்குப்பின்னோ முறைமையான விஷ்ணுமுதலானவர்கள், இன்னும் அவர்களினத்துப்பெண்கள் அநேகம்பெயர் இவர்களெல்லாஞ் சம்மதியாக அன்புடனே திருக்கலியாணஞ்செய்து கொடுக்க நாமும்மைச்சேர்வது நீதிமுறைமையாகுமென்று சொன்னாள் பரமேசுவரி—எ-று.

(௨௯)

எனப்பரையுரைத்திட மனத்தியல்பெடுத்தே
வனச்சுரமுனிக்கண மறைத்தனமழைத்தார்
கனத்துவடதிக்குள்வீழ தெக்கணமுயர்ந்து
வனப்புறநிறுத்திட வகத்தியனைவைத்தார்.

(இ-ள்.) என்றிப்படி உமையவள் சொல்லப் பரமசிவன் நீசொல்வது சரிதானென்று மகிழ்ந்து தேவர்களையும், முனிவர்களையும், பிராமணர்களையும் மற்றுஞ் சருவத்திரேர்களையும் வரும்படி நினைத்தார் அப்போது அனைவரும் அங்கேவந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய கனம் பொறுக்காமல் வடதிசைகீழ் தாழ்ந்து சரிபட தெற்குத்திசையுயர்ந்தோங்க அதுகண்டுபூமியைச்சமனாக்கி நிறுத்தவேண்டி யகத்தியனைப் பொதிய மலையிலே யிருக்கும்படிச் செய்தார் பரமேசுவரன்.—எ-று.



குலவமரர்குலமுதல நலமொடுபடர்ந்தே
மலையரையன்மருகனென மணமுகவிநின்றார்
பலபுடவைபரிமித வமுதகிரிதவளக்க
னில்துபவப்பொன்மலைக ளனைநனிசொரிந்தார்.

(இ-ள்.) கூட்டங்கூட்டமாக வந்த சகல சனங்களுஞ் சூழ்ந்து சேவித்துவரக் கயிலையினின்று புறப்பட்டு இமவானிடத்தில் போய்ச் சேர்ந்து மலையரசன் மருமகனாக மணக்கோலத்துடனே எழுந்தருளி நின்றார் பரமசிவன், அப்போதங்கே சகல பதார்த்தங்களு மலைகள்போலே குவித்து அபரிமிதமான அமுதங்களுந் திருத்துளபாயசங்களும் பலபல பொன்மலைகள்போலே குவித்துவைத்தார்கள் மலைப் பரிசனங்கள்.—எ-று.

(௩௦)

வேறு.

அங்கேசிவன்போ யடைந்தாரிதன்பா
லெங்கேபரன்கூட வந்தாரெனுங்கா
லங்கோதுகுண்டோதரன்போயிருந்தே
யுங்கோதனஞ்சோர வுண்டேதவிர்ந்தான்.

(இ-ள்.) அங்கே பரமேசுவரன் மணக்கோலமாக வெழுந்தருளிவந்ததுகண்டு இமவான் இந்தப்பதார்த்தங்களையெல்லா முண்பதற்குச் சிவன் கூடவந்த சனங்களெங்கேயென்று விசாரிக்குமிடத்தில், அங்கனஞ் சிவனுத்தாரப்படிக்குக் குண்டோதரனொருவனும்போயுட்கார்ந்து அன்னமுதலான பட்சணபலகாரங்கள் முதலான சகலபதார்த்தங்களையும் வாரியுண்டு பசியடங்காமல்சோர்ந்துநின்றான்.—எ-று.

தக்கன்முகனுற்றது கட்டெனமதிக்கா
யக்கணமலைக்காசன் மெய்க்கவசிலித்தா
லொக்கவுமைவும் மையை யொக்கவாதுக்கே
மிக்கமணமுற்றனர் விருப்பினெனவுற்றார்.

(இ-ள்.) முன்னே தக்கனானவன்செய்த தமக்கன்மை கெடுமதி நிமித்திய மாசப் பிரந்துவளர்ந்து தவஞ்செய்யக் கட்டளையிட்டார் சிவனென்று மலையாசனுக்குச் சம்மதியாகும்படி சத்தவிருடிகள்சொல்லி யறிவித்தார்கள் அதுகேட்ட இமவான் சந்தோஷமாகி அனைவருங் காணத்தக்கதாகப் பார்வதியைப் பரமசிவனுக்குத் திருக்கலியாணஞ் செய்துமுடித்தார்கள். அப்போது உமாசமேதரா கைலாசகிரியில் எழுந்தருளி அனைவருக்கும் மணக்கோலக்காட்சி கொடுத்து வந்துசேர்ந்து விருப்பமாக வுமையுடன் கூடியிருந்தார் பரமேசுவரன்—எ-று. (௩௧)

இவரிருவரும்புணர மினிமையதுணர்ந்தே
தவமுனிவரிந்திரபதி தமரர்முன்போ
யெவரொருவரும்பணிய வினையொருவதன்றோ
வவர்நிலையிற்றபச மனைமுனை யென்றார்.

(இ-ள்.) அப்படிச்சிவனுமுமையும் பிரியாம லின்பமுற்றிருப்பதைக் கண்டு [illegible]முனிவர்கள் இந்திரன் மற்றுஞ்சமஸ்தமானபேர்களு மோரிடத்திற்கூடி [illegible] செய்து அக்கினிதேவனையழைத்து எப்பேர்ப்பட்டவர்களும் வந்துஉன் [illegible]பாதங்களைத் தொழுவார்களல்லவோ எல்லாரிலும் நீ மகாபெரியவன்

உனக்கொருவர் சமானமில்லையென்று மிகவும் பிரியவசனஞ்சொல்லி நீபோய்ச் சிவனைக்கண்டு எங்கள் துயரங்களைச்சொல்லுவென்று சொன்னார்கள் தேவர்கள்.

ஆயமரருக்கருள் புரிந்தருள்கவென்றே
மாரனைவிடுத்தன மரித்ததையறிந்தாய்
நேரவன்விடுத்தகணை நிலைபுதவமோகஞ்
சேரமகிழ்வுற்றுமை திருத்தனமணந்தார்.

(இ-ள்.) முன்னமே தேவர்களெல்லாம் பிழைக்கும்படி ஒருதவிசெய்யென்று மன்மதனையனுப்பினோம், அவனெரிந்திறந்துபோனதும் நீயறிந்திருப்பாய், அவனெய்த மலர்க்கணையினாலே சிவயோகங்குலைந்து மோகன மாய்கையுண்டாகிக் கனிப்படனே மலைமகளைத் திருக்கலியாணஞ் செய்துகொண்டு சேர்ந்திருக்கின்றார் பரமேசுவரனென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறார்—எ-று. (௧௬)

இந்தவிடமெந்தவிட மெப்பதிதழைக்க
வந்தவிடமெம்மவர் வருந்தமிதுகூறி
மைந்துறவெமக்குநனி நேர் மைந்தனருள்கென்றே
சிந்தையிலனற்கிறைவ சென்றுரைமியென்றார்.

(இ-ள்.) இந்தலோகமுமெந்தலோகமுமெங்கள் தேவலோகமுஞ் செழிக்கும்படி நீ மனதுவைத்து எங்கள் வருத்தங்களைத்தும் சிவபெருமானுக்குச் சொல்லிச்சுவாமி எங்களுக்கு உம்முடைய குமாரராக வலிமையுடைத்தாய் ஒருபிள்ளையுதிக்கும்படி கிருபைசெய்ய வேணுமென்று சிந்தையகன்ற அக்கினிதேவனே நீர்போய்ச் சொல்லுஞ் சொல்லுமென்று பின்னையுஞ் சொல்லுகிறார்கள்.

ஆதிநடனப்புரி யரன்றுமரன்விழியும்
நாதரதிருமேனியு நகைத்ததிருநகையு
மோதிவிரதத்தினு மிருப்பதுநீயன்றோ
வோதமரர்வலிதினுமிக் குன்வலிமை வலிதே.

(இ-ள்.) வாராய் அக்கினிதேவனே, ஆதிசிவன் நிர்த்தனஞ்செய்கின்ற சிற்சபையிலு மவருடைய நேத்திரங்களிலுந் திருமேனியிலுஞ் சிரித்தசிரிப்பிலும் அவர்கையிலும் பிரியமாயிருக்கின்றவர் நீர், தேவர்கள் வலிமையைப்பார்க்கிலும் உன்னுடைய வலிமை மகாவல்லமையென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறார்கள் தேவர்கள்.—எ-று. (௧௭)

உன்னைபடைப்படுவ தொருபொழுதுமின்று
னின்னைபலதிமையவரி னேர்ப்படுவரிலையால்
பின்னொருவரெமது துறை பிறிதறியவலரோ
வென்னவனலுக்கிறைவ னிறைவனெதிர்சென்றான்.

(இ-ள்.) ஓ யக்கினிதேவனே, நீ சிவனிடத்திற்குப் போனாலு முன்னைக் கொல்லுவதொருக்காலமுமில்லை, எங்கள் குறையை நீ யறிவாயல்லாமல் மற்றொருவர்களறிவார்களோ வென்றிப்படித் தோத்திரஞ்செய்து பிரியவசனஞ்சொல்லி யனுப்பினார்கள், அப்படியே அக்கினிதேவனுஞ் சம்மதித்துப் போகிறேனென்று சொல்லிப் புறப்பட்டு சிவனெதிரே போனார்—எ-று. (௧௮)



சென்றனன் வணங்கினன் மகிழ்ந்திருவர்செந்தா
ளன்றமரர்வெப்பகை படக்கருணையின்பா
லென்றனையியங்கடவு ளின்பு விளம்ப
வென்றிகொளவென்றசிவன் விந்துதவிசெய்தான்.

(இ-ள்.) அந்தப்பிரகாரம்போய்ச் சிவனையும் உமையையுங்கண்டு சிவந்த சீர்ப்பாதங்களில் நமஸ்கரித்து ஸ்வாமி தேவர்களைப் பகைசெய்து செருக்குஞ்செய்கிற தாருகாசுரன் முதலான அசுரர்களைச் சங்கரிக்கும்படி கிருபைசெய்யவேணு மென்று அக்கினிதேவன் சொன்னபோது வெற்றிகொள்ளுங்கொன்று சிவன் விந்துகொடுத்தார்.—எ-று. (௧௯)

அக்கினிகரத்தினி லளித்திடுபரத்தின்
சுக்கிலமெடுத்தகல துற்பமெனப்போய்
நக்கர்சடையிற்புன னதிச்சரவணத்தி
லக்கணமவிடுத்தன னதன்பிறகுரைப்பாம்.

(இ-ள்.) அக்கினிதேவன் கையிற்கொடுத்த பரமசிவனுடையவிந்துவைத்தாங்குதற்குப் பலன்போதாமல் வருத்தமாகச் சுமந்தெடுத்துக்கொண்டுபோய் சிவனுடைய சடையில் வசித்திருக்கும் கங்காநதி சரவணப்பொய்கையிலந்தச்சணமே வைத்தான் அதன்பிறகு நடந்த செய்தியைச் சொல்லுகிறோம் முனிவர்களே கேளுங்களென்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (௨௰)

வேறு.

சரவணத்தீர்த்தத் தனந்தரைப்பொழிலுற்றநீள்
திரவணக்கனமுனிவ ரகரப்பலபல சிறந்ததால்
பரவணச்சுகிலங் கைபுகும்பாங்கினிற் பாவக
னுரவணக்கன்மிய வுறமுனிவர்பாதனை யுகந்தனன்.

(இ-ள்.) அந்த சரவணப்பொய்கைக் கரையில் அனந்தமரங்கள் நெருங்கிய சோலையில் திரளாக நெடியதாய் ஸ்திரமுடைய தவப்பெருமை மிகுந்த முனிவர்கள் வாசஞ்செய்கிற அக்கிராரங்கள் அனேக சிறப்பாயிருக்கின்றது, அங்ஙனம் சிவன் விந்துவை கைக்கொண்டு வந்தபடியினாலே அதிக மோகமுண்டாய் முனிவர்கள் பத்தினிமார்களைப் புணரும்படி நினைந்து ஆசைகொண்டான் அக்கினிதேவன்.—எ-று. (௨௧)

உகந்தகனலிக்கரசி யுயர்மனைவி யெனுமச்சுவாக வறிந்
தகந்தனில்விருப்புமுனி வரர்பன்னியி லொருவருருவமாயினு
மிகந்தநிலையின்கொழுந னெண்ணினுமனிதபரிசுரிப்பவே
சுகந்தருசுவாகாவல ரெனும்படிமனத்திடர் தொலைந்தனன்.

(இ-ள்.) ஆசைகொண்ட அக்கினிதேவன் நினைவுகண்டு அவன்தேவி சுவாகாவென்பவள் யோசனைசெய்து என் பர்த்தாவானவன் துர்த்தநினைவினாலே முனிவர்கள் பெண்களைப்புணரும்படியாக விச்சித்தான், அது தெரிந்தால் அந்தமுனிவர்கள் யவர்தம் வாராமல் உபாயஞ்செய்து அவள் [redacted]ன் சபிப்பார்கள், அப்படி அந்த முனிவர்கள் பத்தினிகளைப்போல் உருவ [redacted] நான் தீர்ப்பேனென்று அந்தப்பெண்களென்றே அக்கினிக் [redacted]ப் புணர்ந்து ஆசையைத் தீர்த்தாள் சோலிக்கள் வாராமல் தப்பித்துக்கொண்டான் அக்கூடி மயங்கி ஆசையுந்தீர்ந்து அக்கினிதேவன்.—எ-று. (௨௨)

வேறு.

அம்முனிவரெழுவரிலொ ரறுமுனிவர்மங்கையர்க ளாமொழிற்
செம்மைகொளருந்ததி யொழிக்கவினைற்கிழுனி சேர்ந்தபின்
விம்மிதந்தருவிரக வெந்துயரொழுக்கினை சுவாகாவினை
யெம்மிடரகற்றினை வசிட்டனிடுசாபமு மகற்றினையெனா.

(இ-ள்) அந்த சப்தரிஷிகள் பத்தினிமார்களில் அருந்ததி தவிரமற்ற ஆறு முனிவர்கள் பத்தினிகளைப்போலே வடிவெடுத்து சுவாகாதேவியானவள் அந்தப் பெண்களைப்போலப் புணர்ச்சிசெய்து விரகநோயைத் தீர்த்தாள், அவைதெரிந்து தன் பத்தினியைப்பார்த்து நீ நல்ல உபாயமெடுத்தென்னைச் சேர்ந்தாய், எனக்கு வருகிற இடரையுந் தீர்த்தாய், வசிஷ்டர் சபிக்காதபடியாகத் தப்பித்துப்பிழைத் தேன் பெண்ணே என்றான் அக்கினிதேவன்.—எ-று. (௬௩)

எனவனற்கிறைவன் சுவாகொடுந்தனாட னிருப்பவே
வினையறவிரத்தியக லாதுளமுவைத்திது நிகழ்ந்தபின்
கனமுறைத்தாபகர் கனற்கவர்த்திடுமறு மின்னாரையு
மனமுறவிகற்றினர்பி னவர்சரவணக்கரையில் வைகினார்.

(இ-ள்.) என்றிப்படி அக்கினிதேவன் தன்பத்தினி சுவாகாதேவியைப் பிரியாமலிருக்கும்படி நல்ல நினைவுடனே கூடிக்கலந்துப்பிரியாதிருந்தான், பின்பு பெருமையையுடைய தவமுனிவர்கள் அக்கினிதேவன் யாசித்தபெண்க ளிவர்க ளென்று தெரிந்து அந்த ஆறு பெண்களையும் மனவிரோதமாக நீக்கிவிட்டார்கள், அந்தப்பெண்களாறுபேருஞ் சரவணதீர்த்தக்கரையில் வந்து வசித்திருந்தார்கள்.

அருள்வடிவர்காசிபரோ டத்திரியர்பாரத்து வாசர்சீர்
விரவதவிச்சுவா மித்திரர்மெய்ஞ்ஞான கௌதமருடன்
பரவுசமதக்கினி யிவர்க்குரியபாவையர்க ளவ்வாறு
வருமவர்மனத்துய ராம்படிக்கத்திரை மனத்துன்னினர்.

(இ-ள்) அன்புடைய பத்தர்க்கள் யாரென்றால், காசிபன், அத்திரியன், பாரத் துவாசன், சிறப்புடைய விசுவாமித்திரன், மெய்ஞ்ஞானியான கௌதமன், ஜமதக் கினி, இந்தஆறுபேர்களுடைய பத்தினிமார்கள் மனச்சஞ்சலந்தீரும்படியாகப் பர மசிவனை வணங்கும்படி மனதல் நினைத்தார்கள்.—எ-று, (௬௪)

சண்முகருற்பத்திச் சருக்கமுற்றிற்று.
ஆ திருவிருத்தம் ௬௪.

# சண்முகர் செயற்கைச் சருக்கம்.

அவ்வாறுமுனிவர்மங் கையர்துயமையவர்த்த வயர்வினை
லொவ்வாவிடாய்ப்பட்ட தொழிவுறுமுனைத்தீர்த்த முன்னியே
யிவ்வாறலம்வந் தெதிர்ப்பொய்கையின் தீர்த்த மாடினர்
கைவாரிசச்சர வணத்தமையுமதலையைக் கண்டனர்.



(இ-ள்) அவ்வாறு முனிவர்கள் தங்கள் பத்தினிகளைத் தள்ளிவிட்டபடியால் அளவில்லாத துயரமுண்டாகி மனக்கிலேசம் நீங்கும்படி தீர்த்தயாத்திரை செய்ய நினைத்து சகல தீர்த்தங்களிலும்போய் ஸ்நானஞ்செய்து தாமரைமலர் நெருங்கிய இந்த சரவணப்பொய்கையில் ஸ்நானஞ்செய்யும்போது அதிலமர்ந்த அழகிய ஆறு முகக் குழந்தையைக் கண்டார்கள்.—எ-று. (௧)

கண்டறுவருங்கொண்ட துயரறக்கருணையி னெடுத்துவந்
தண்டருமெனத்தங்க ளுபயமுலையமுதங்க ளூட்டவே
பண்டர்தொழுசேயங்க னறுவர்முலையாறுமுகத் துண்டபின்
றண்டரளவங்கையிற் சண்முகத்தோருட றங்கினனரோ.

(இ-ள்.) அப்படி சரவணத் துதயமாகிய குழந்தையைக்கண்டவுடனே தங்கள் துயரந் தீர்ந்து இரக்கத்துடனே எடுத்தணைத்து உண்ணப்பாவென்று தங்களு டைய உபயமுலை யமுதூட்டினார்கள். அப்போது தேவர்கள் வணங்கப்பட்ட சேயாகிய கந்தசுவாமி அங்ஙனே ஆறுபெண்களின் முலையமுதங்கள் ஆறுமுகத்தி லுமுண்டு குளிர்ந்த முத்துமணிகள்போலும் அவரவர்கள் கையில் ஆறுமுகமு மொருதேகமுமாகப் பிரகாசித்து விளங்கினார்.—எ-று. (௨)

ஆறுமுனிமங்கையர்த மங்கண் முலைதனைநுகர்ந் தவருடன்
மேறிநிறைசரவணஞ் செறிதருவனத்திடைசிறந்தனர்
நீறுபுனைதிருமேனி நிமலனுமப்பாலுமையு நினைந்துவந்
தீறிலெழின்முருகனை யெடுத்தணைத்தனர்க ளிருவர்களுமே.

(இ-ள்.) அந்த ஆறுமுனிவர்கள் பத்தினிகளுடைய முலையமுதருந்தி அவர் களுடனே பிரியாமல் வளர்ந்து விளையாடி தெளிந்த நீர் நிறைந்த சரவணப் பொய்கைக் கரையில் மரங்கள் நெருங்கிய சோலைநடுவிலே சிறந்து விளங்கினார் பொய்கைக் கரையில் குமாரதேவர், அப்போது நீறுபுனைந்த திருமேனியையுடைய நிமலனான பரமசிவ னும் உமையவளும் பிள்ளையை நினைத்துவந்து அளவில்லாத சுந்தரமுடைய முருக வேளை எடுத்தணைத்து உச்சியை மோந்து முத்தமிட்டாள்.—எ-று. (௩)

யாதெனச்சிவனையுமை யினிதுவினவியகாலை பிள்ளைசேய்
காதலின்முன் னுதவு நங்கந்தனுமக வெனக்கழறினன்
றீதகலவுபதஞ் சேர்த்தியவர்கார்த்திகை யெனப்பெய
ரோதிமுருகர்கார்த்தி கேயனென்றேதின னுமாபதியுமே.

(இ-ள்.) உமாதேவியானவள் சுவாமியைப்பார்த்து இக்குழந்தை யாதென்று வினவ, வாராயுமையே இந்தப்பிள்ளை ஆசையினாலே முன்னே நாம் அருளியகந்த னென்னும் புத்திரனென்று திருவுளம்பற்றி யருளினார். சண்முகருக்கு முலைய முதமூட்டி வளர்த்த ஆறுபெண்களையுங் குற்றமறும்படி நட்சத்திர பதத்திற் சேர்ந்தருளினார். கந்தனைக் கார்த்திகேயனென்றும், முருகனென்றும் பெயரிட் டழைத்தார் உமாபதியான சிவமூர்த்தி.—எ-று. (௪)

கண்ணுதற்குமரனைக் கைக்கொண்டுகன்னியர்க ளோராறுவருக்
கெண்ணிவ்வாறுதவியினி தருள்புரியும்வேளைதனி லிரதியா

னண்ணருங்கொழுனனடி யட்கருள்கியென் றுதொழ வானுமுன்
கண்ணினுருவாகமற் றவர்கடக்கருவெனக் கருதினன்.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய பரமேசுவரன் குமாரனைக் கைக்கொண்டு கயிலையைச் சேர்ந்தார். அந்த கார்த்திகைப்பெண்க ளாறுபேருக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்தருளினர். அந்தவேளையில் இரதிதேவிவந்து வணங்கிசுவாமி என்பத்தாவை எழுப்பித் தந்தருளுமென்று மிகவும் வேண்டிக்கொள்ள, சுவாமியும் வாராய் இரதிதேவியே யுனக்கு மன்மதனை யெழுப்பிக் கொடுத்தருளினேனும், உன்கண்ணுக்கு மாத்திரம் உருவாகவிளங்கியிருக்கவும், மற்றவர்களுக்கெல்லாம் அரூபமாகஇருக்கவும் திருவுளம்பற்றி யருளினேனென்றார் பரமசிவன்.—எ-று. (௫)

கங்கையில்வளர்ந்தபடி காங்கயனென்றோங்கினன் கண்ணுதற்
செங்கையினுமங்கையுமை பங்கினும்வளர்ந்தனன் செய்யவேள்
பைங்கமலனீபடிப் பிடுத்திடுதியெனமுருகன் பரவுரை
தங்குபிரணவப்பயன் சாற்றுதியெனப்பிர மனைச்சொனான்.

(இ-ள்.) கங்கைநதியிலேவந்து தங்கியவதனால் காங்கேயனென்றுஞ் சரவணப்பொய்கையில் வந்துதித்ததனால் சரவணபவனென்றும் பெயராய்விளங்கிப் பரமேசுவரனுடைய அழகிய கைகளிலும் உமையவள் பக்கத்திலும் பயின்றுவளர்ந்து வந்தார் செவ்வேளாகிய கந்தசுவாமி, அப்போதுசுவாமி பிரமாவையழைத்து நீரிந்தப் பிள்ளைக்கு வேதமுதலாகிய வித்தைகளெல்லாம் விளங்கப் படிப்பித்துவிடுமென்று சொன்னவுடனே சிவனுத்தரவுப்படிக்கு வித்தியாரம்பஞ் செய்யத்தொடங்கினபோது குமாரசுவாமியானவர் ஓ பிரம்மாவே நீர் முந்திச்சொன்ன பிரணவத்திற்கு அர்த்தஞ் சொல்லுமென்று கேட்டார்.—எ-று. (௬)

யானஃதறிந்திலனெனப்பிரமனைத்தலையிலெற்றினன்
ஞானபிரமன்பரமன் முன்னேனகியச்செய னவின்றனன்
வானவர்தழைக்கவரு மைந்தனையழைத்தது வழங்குதியென
நானுமதுதேசிக னெனக்கொளுமினவினுவ னெனச்சொனான்.

(இ-ள்.) அந்தப் பிரணவத்திற்குப் பொருள் எனக்குத் தெரியாதென்று சொன்ன பிரமதேவன் தலையிற்குட்டினார், அந்தச்சேதியை பரமசிவன் முன்னே போய்ப் பிரமதேவன் சொல்லத் தேவர்களை இரட்சிக்கவந்த பிள்ளையையழைத்து அந்தப் பிரணவப்பொருளை எனக்குச் சொல்லென்று சுவாமிகேட்க, நானும்முடைய குருவாக நீர்கேளுஞ் சொல்லுகிறேனென்று சொன்னார் கந்தசுவாமி-எ-று.

ஆதியப்படி யேவியந்தறுமுகன்சிட னாகினவர்க்
கோதியபரம்பொரு ளுணர்ந்தசற்குருவென வுணர்த்தினன்
மீதிலிக்கயிலையிற் சிலைபராசரமனொடு சிவனிடத்
தோதிமற்றிருவருங் கற்றுவிற்றொழிலின் மிகையேத்தினர்.

(இ-ள்.) ஆதிசிவனானவர் அப்படியே கேட்கிறோமென்று சண்முகருக்குச் சீஷனாகி நிற்கக் கந்தசுவாமியும் அந்தப் பிரணவ ரகசியத்தைக் குருமுகூர்த்தமாகியுரைத்தருளினர், பின்பு குறைவில்லாத கயிலாயகிரியில் பரசுராமனுடனே கூடி



விளையாடி யிருவருஞ் சிவனிடத்திலே சகலவித்தைகளு மோதியுணர்ந்து தநுர்வேதங்களுங்கற்று வில்வித்தையிலே ஒருவர்க்கொருவர் சமமாக வெற்றியுடையவர்களாய் விளங்கினார்கள்.—எ-று. (௮)

இருவருங்கற்றொருவ ருக்கொருவரிகலியிம் மண்டலமிசை
மருவியக்கிரவுஞ்ச வரைபிளந்தவர்பெரிய ரென்றபின்
றொருகணையினாலது பிளக்கவினையுதவிமுரு குலகெலா
மருளுதவியருவரை களவனவன் சென்றுவிளையாடினன்.

(இ-ள்.) பரசுராமனுங் கந்தசுவாமியும் வில்வித்தைகற்று ஒருவர்க்கொருவர் சரிசமர்த்தராய் பிரதிக்கினைசொல்லி இந்த மண்டலத்தில் புகழ்பெற்ற கிரவுஞ்சகிரியைப் பிளந்தவர்கள் பெரியவரென்று நிச்சயித்து ஒரு கணையினாலே கிரவுஞ்சகிரி பிளக்கும்படி யெய்து உலகமெல்லாந் தழைக்க அருள்செய்து அரியமலைகளெல்லாஞ் சஞ்சரித்து விளையாடினார்—எ-று. (௯)

கச்சிதில்லைகாளத்தி வடவனங்கடகயக் காவுடன்
மைச்செறிகழுக்குன்று திருவருணையலைதீர்த்த மலைபுகுந்
திச்சையிலடைந்தகல மிதினியதெதுவெனப் பினுமேருவான்
கொச்சைமயில் பாகர்தின் கொச்சைவருபாகநட் கொண்டனர்

(இ-ள்.) காஞ்சிபுரம், சிதம்பரம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருவானைக்கா, மேகமொய்த்த திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, தீர்த்தமலை இந்தத்தலங்களெல்லாஞ் சஞ்சரித்து விளையாடினோமே இதனினின்பமான தலங்களெதுவோவென்று நாடித்தேடிச் செல்லாநின்றார் பச்சைமயில் வீரனை கொச்சைக் குறவள்ளி நாயகிபங்கன்.—எ-று. (௧௦)

கோலமிகுநாகசெங் கோட்டிலொருமரகதக் கொழுந்தெனும்
ஞாலரவிகோடியொளி தருசிவலிங்கங்கண்டு நண்ணினர்
பாலனறுமுகவன் பணிந்திடவரப்பல புரிந்தனன்
சீலமிகுகுமரேச ரெனவுமொருநாமஞ் சிறந்ததால்.

(இ-ள்.) அழகுமிகுந்த திருநாககிரிச் செங்கோட்டில் வந்துசேர்ந்து அங்ஙனம் ஒரு மரகதக் கொழுந்துபோலும் கோடிசூரியப்பிரகாசமான சிவலிங்கத்தைச் சண்முகக் குமாரர்கண்டு அந்த சிவலிங்கத்தைப் பூசித்துப் பணியும்போது சுவாமி திருவுளமகிழ்ந்து வேண்டிய வரங்களைக்கொடுத்து குமாரர் பூசித்தபடியால் வளங்கிரதமான குமரேசரென்றொரு திருப்பெயர்பெற்று விளங்கினார்.-எ-று. (௧௧)

கயிலையினில்மேருவினி லிமயத்திலிதுகளின் பெற்றதென்
றயில்முருகர்நாகவரை யெழிலறிந்ததரமிருந்தனன்
புயல்பரவுபுவனகிரி யதனில்விளையாடிநாம் புகலிடஞ்
செயலுறும்பரனையர்ச் சித்தமைவமெனயுறுதி செய்தனன்

(இ-ள்.) கயிலாயகிரியிலும், மேருகிரியிலும், இமயகிரியிலும், மற்றுமுள்ள தலங்களிலுமிந்த நாககிரி மிகவும் அழகுடைத்தானதென்று தெரிந்து வேலாயுதக்கடவுளானவர் இந்தத் தலத்தினுடைய ரமணீயமும் மகிமையும்பார்த்து மேகமுலாவிய புவனகிரித் தலங்களெல்லாஞ் சஞ்சரித்து விளையாடினோம் நமக்குப்

புகலிடமாகிய தலமிதுவேயென்று சகல செயலுமுடைய சிவனைப் பூசித்தார்ச் சித்துமமர்ந்து வசிப்போமென்று நெஞ்சில் உறுதிசெய்தார் குமாரசுவாமி—எ-று.

காமிவணிருந்திடினம் மன்னையுந்தந்தையும் நண்ணுமென்
றேமுறுகருத்துட் டுணிந்துமுருகன் பூசை யெய்தியே
வாமவரனுரைநாக மலைபிறும்பலமலைக ளதனிலுஞ்
கோமளமெய்நாரத னுடன்கூடி வைகினன் குமரவேள்

(இ-ள்.) நாமிந்தத் தலத்திலே வாசஞ்செய்திருந்தால் நமது தாயுந் தகப்பனு மிங்கேவந்து சேர்வார்களென்று முருகர் தமது கருத்துட்கொண்டு பூசித்தமர்ந்து சந்தோஷமாக அழகிய நாகேசுவரர் எழுந்தருளியிருக்கின்ற நாகமலையிலும் பல பலமலைகளிலுஞ் சஞ்சரித்து தாலும்வெளுத்த திருமேனியுடைய நாரதமுனிவரும் சினேகிதமாகக்கூடி யந்தத்தலத்திலே வந்து வாசஞ்செய்திருந்த குமாரசுவாமி—எ-று. (கங)

திருத்தணிபரங்குன்று திரிசிராப்பள்ளிமதுராபுரி
மருத்தணிவிளாத்திருச் செந்தில்வடவேங்கட மகாமலை
கருத்தியல்விராலியோன் பழனிமுருகன்பூண்டி. கூடிவரப்
பொருத்துபுள்ளூர் தோணிபுரமயிலைகயிலைபாப் புக்கனர்

(இ-ள்) திருத்தணிகை, திருப்பரங்குன்றம், திரிசிரபுரம், மதுரை, மணம்நிறைந்த உத்தியான வனஞ்சூழ்ந்த திருச்செந்தூர், வடமலையாகிய திருவேங்கடாசலம் கருத்துக்கிசைந்த விராலிமலை, குளிர்ந்த தடாகஞ்சூழ்ந்த பழனிமலை, திருமுருகன் பூண்டி, மகிமைமிகுந்த புள்ளிருக்கும்வேளூர், சீர்காழி, திருமயிலாப்பூர் இவை முதலாகிய புண்ணிய ஸ்தலங்களெல்லாஞ் சென்று சஞ்சரித்து விளையாடி அங்கங்கே சிவார்ச்சனைசெய்து, பின்பு தட்சணகயிலையான திருநாககிரித் தலத்தில் வந்து வாசஞ்செய்து சிவனைப்பூசைசெய்துகொண்டிருந்தார் முருகர்.—எ-று. (கச)

சூலங்கொள்சூரனைத் தண்டிப்பதின்பொருட் டாழிசூழ்
ஞாலம்பிறங்குமீழத்திடை நயந்தார்வியந்தவோர்
காலந்திருக்கதிர் காமப்பதியுளார் கதிபெறுகவே
வேலன்புகுந்துமெய் யாகவின்றளவிலும் விளையாடுபால்.

(இ-ள்.) சூலாயுதங் கைக்கொண்ட சூரனைச் சங்கரிக்கும்பொருட்டாக உலகத்திற் பெயர் விளங்கிய கடல்சூழ்ந்த ஈழமண்டலத்தின் மத்தியில் அழகுபெற இருக்கும் கதிர்காமத்தலத்தில் ஒரு காலத்திலே அந்தத்தலத்தாரெல்லாம் நற்கதி பெற்று வாழும்படியாக அங்ஙனம் அன்றுமுதல் இன்றளவும் விளையாடிக்கொண்டிருக்கிறார் வேலாயுதக்கடவுள்.—எ-று. (கரு)

அப்பதிகள்சிலகாலை யருவரைகள்சிலகாலை யறுமுகர்
மெய்ப்புலவிளையாடி மீளநாககிரியின் மேவுவா
ரிப்படியிருந்துமிம யாசலங்கயிலாய மிமயர்களு
டொப்பறுங்கனகவ்வரை யோரெட்டுவரையினு முலாவுவார்.

(இ-ள்.) அப்படி புனிதமான தலங்களிலே சிலகாலம், அரிதாகிய மலைத்தலங்களிலே சிலகாலம் சென்று சஞ்சரித்து விளையாடிக்கொண்டிருந்து பின்பு



நாககிரித் தலத்தில் வந்துசேர்ந்து வசித்திருந்து இமயகிரி, கயிலாயகிரி, இமய நாடு, ஒப்பில்லாத சொர்ணசைலம். அஷ்டகுல பருவதங்களிலுஞ்சென்று சஞ்சரித்துவிளையாடி உலாவிவருவார் ஆறுமுகக்குமரர்.—எ-று (கசு)

விண்டுபதம்வேதனக ரிந்துமண்டலம்பானு மண்டல
மண்டாண்டங்களவி மண்டலமோரைவரிட மரவிட
மெண்மசைகள்வருணனக ரைம்பூதமினிதாகினை வாருளங்
கொண்டகருணைபின்மருவி யகலாதுறைந்தருள்வர் குமரரே.

(இ-ள்) விஷ்ணுலோகம், பிரமலோகம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், அண்டாண்ட புவனாண்டங்கள், அக்கினிபுரம், பஞ்சபூதத்தலங்கள், நாகலோகம், எட்டுதிசைக்குள்வருணனகர். பஞ்சவர் நகரங்கள். அன்புடனே நினைத்தவர்களிருதயங்கள் மற்றுமெங்கெங்கும் கிருபைகூர்ந் துலாவி தானுவே பிரியாமலிருந்து வாசஞ்செய்தருளினார் குமாரசுவாமி.—எ-று (கஎ)

அவ்விடத்தவ்வவர்களங்கங்கிருப்பதெனவருள் விளைந்
திவ்வுலகுமெவ்வுலகு மெவரிடமுமெய்ப்பொருளுமிவரென
நவ்விமயிலாடுமேக வாணைபொடுவள்ளியொடு நலமுறுஞ்
செவ்விபுருகோர்கயிலை செங்கோடிரண்டிற் சிறந்தகால்.

(இ-ள். அந்தத் தலங்களிலேயிருக்கின்ற அவரவர்களுக்கெல்லாம் அங்கங்கே முருகரிருப்பதுபோலக் கிருபையாகத் திருவிளையாடல் விநோதவிநோதமாகச் செய்து இந்தலோகமுமெந்தலோகமும் யாவரிடங்களிலுமெய்ப் பொருள்களிலு மவராகவேதோன்றி மான்போன்ற கண்களும் மயில்போலுஞ் சாயலுமுடைய தெய்வயானை வள்ளியம்மனுடன் நன்மைபொருந்திய கயிலாசகிரி திருச்செங்கோடு இவ்விரண்டு தலங்களிலுஞ் சிறப்பாக உகந்திருந்தார் அழகியமுருகர்—எ-று (கஅ)

சூரனைவதைத்தவோர் துண்டமயிலெனபற் றொருதுண்டஞ்சேவலெனவாரிசூழ்செந்தூரில் வந்துமலைபற்றிப் பரங்குன்றமர்ந்தழகர்தம்
சோர்செறிதண்டலை சுவாமிமலைமேனாடு மேவுட்பொருப்பினிடைவந் [நாள்.
தேருலாவுபழனியிலிசைந்துதந்தையினோடு மினிதுறைந்தெய்து மொரு

(இ-ள்.) வேலாயுதத்தைவிட்டு சூரனுடலை இரண்டுதுண்டாய்ப் பிளந்தவுடனே ஒருதுண்டம்மயில்வாகனமாகவும், மற்றொருதுண்டஞ் சேவற்கொடியாகவும் செய்தமைத்துக்கொண்டு வெற்றியுடனே கடல்சூழ்ந்த திருச்செந்தூரிலிருந்த எமகூட பருவதங் கடந்து திருப்பரங்குன்றத்தில் வந்தமர்ந்திருந்து மதுப்பொழிந்த தண்டலைசூழ்ந்த அழகர் சோலைமலையிலும், சுவாமிமலையிலும் வாசஞ்செய்து, மேனாட்டில் அழகுபெறவிக்கும் ஏரககிரிச்சாரலில் வசித்திருந்து, அழகிய பழனி மலையிலெழுந்தருளியிருந்து தந்தையாகிய கைலாசபதியைக்கண்டு வணங்கி வசித்திருந்தார் முருகர் சிலகாலமப்போதொருநாட்பொழுதிலே—எ-று. (ககூ)

அவ்வரையிடத்திலைந் தருவைநிகர்தருவனத் தருமாங்கனிக்கொடமல,னிவ்வுலகைமுந்தி வலம் வந்தவர்க்கிக்கனியை யுதவுதுமெனப்பாலராங், கைவதனருக்குமருகர்க்குமைம் முகவன்கனிந்துரைபுரிந்தபொழுதே, யிவ்வுலகையொருநொடியில் வலம்வருதுமென முருக னெண்ணியேயெழுந் தருளினர்

(இ-ள்.) அந்தப்பழனிமலைத் தலத்தில் பஞ்சதாருவைப்போலுஞ் செழிப்புடைய ஒரு சோலைநடுவில் உசிதமான மாமரத்திலிருந் துதிர்ந்த ஓர் கனியைச் சிவன் கைக்கொண்டு யானைமுகன் ஆறுமுகனென்னு மிரண்டு பிள்ளைகளையழைத்து ஒரு நொடிப்பொழுதலிந்த உலகத்தை பிரதட்சணமாகச் சுற்றிவந்தவனுக்கு இந்தக்கனியைத் தருவோமென்று சுவாமிசொன்னபோது அரைக்ஷணத்திலிந்த உலகத்தை வலமாகச் சுற்றிவருவேனென்று எண்ணிக் கிருபையுடனே யெழுந்தருளினார் குமாரதேவர்.—எ-று. (௨௰)

மயில்வாகனத்தேறி நெடியகடலுலகெலாம் வலம்வரு முன்மாமுகவனார்
வெயிலாருங்கொற்றிவிழி யம்மைவலம்வந்து வேண்டவினை யுற்பெய்திறை
யயில்வாகனக்கருள் பழமெனப்புனை யப்பழனியெனவிமனை
ரியல்வாய்மையிற்பகருகின்றது முதற்பழனியெனவமெய்தியுளதால்.

(இ-ள்.) முருகர் அதிசீக்கிரமாக மயில்முதுகிலேறி உலகத்தையெல்லாம் அரைநொடிக்குள் வலமாகச் சுற்றிவக்கார் குமாரப்படி வலம்வருகிறதற்கு முன் னமே யானைமுகப்பிள்ளையார் சுடர் விரிகின்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை வலமாகச் சுற்றிவந்து விருப்பமாக கனிகேட்கக் கொடுத்தருளினார். அப்போது இளைய பிள்ளையாரும் வந்துசேர்ந்து சுவாமியைப்பார்த்து அடியேனுக்கு பழங்கொடுமையாவென்று கேட்க சுவாமி சொல்லுகிறார் வாரும்பிள்ளாய் குமாரனே அந்தப்பழம் பழனியென்று சிவன் சொல்லியருளினார். அன்று முதற் கொண்டு அந்தத்தலத்துக்குப் பழனியென்று பெயராய் விளங்குகின்றது.—எ-று.

அப்பழனிமலையினின் றணிமயிலின்மீதேறி யகிலத்திரங்கிவரலா
லிப்புவியிலதுமயி லிறக்கமென் றினிதுரை பெடுத்ததம்மேற்றிசையினின்
றொப்பருஞ்சேயெழுந் தருளிபுலவர்பரவ வுதையகுமார திக்குமாரச்
செப்பரியபுகுத்துடன் சைசத்திதேறுமெழுது இலையுருவினின்றனரரோ.

(இ-ள்.) அந்தப் பழனிமலையி லிருக்கிழுமிய மயில்வாகனமேறிப் பூமியிலிறங்கி வந்தபடியினாலே யிந்த மண்டலத்திலது மயிலிறக்கமென்று உலகமெல்லாம் பெயராய் விளங்கி யிருக்கின்றது மேற்குத்திசையினின்று தனக்கொப்புவமையில்லாத சேயாகிய சுப்பிரமணியசுவாமி யெழுந்தருளி யுலகமெல்லாம் கைதொழுதேத்தச் சூரியவுதயமாகும் கிழக்குத்திசை முகமாய் சொல்லுதற்கரிய கோழிக் கொடியுடனே யமுதகிலை யருவமாக நின்றார்குமாரசுவாமி.—எ-று. (௨௧)

வெள்ளிபங்கிரி முதற் கைகாசமுங்காசி விபனகாமுங்கச்சியுந்
தெள்ளுநீதனருவிப ஞசைவமுமேயுந் திருக்கவத்தேன்மொழிவா
வள்ளளினைவரைவழியில் வந்தெனதேற்கொங்கு மண்டலத்தரவமலையிற்
பிள்ளையுடனர்த்தநாரீசரென வேண்டுமன் மொரகவர் நின்றனிலையே.

(இ-ள்) கைலாசகிரி முதலாக இமயமெனதாசம் உசிதமான காசி ஸ்தலம் காஞ்சிபுரந் தெளிந்த தேனருவியாயுந் திருவருணைசம் இந்தத் தலங்களெல்லாம் வாசஞ்செய்து அரியதவஞ்செய்பத்தேன்மொழியாகியபார்வதியம்மன் முதலிவரப் பின்பு பரமேசுவரனும் இவ்வகை வழியாகவந்து தென்மேற்குத் திக்கில் கொங்கு மண்டலத்தில் நாககிரியில் தவம்புரிந்த ஞானசம்பந்த முதலியோர்கள் கொண்டருளி அர்த்தநாரீசுர சுவாமியென்று மேற்குமுகம் நின்றார் அநுருபெற பரமேசுவரன்.—எ-று. (௨௨)



நவகண்டபூதலந் தனிலோரிடத்துமின் னலமிலையெனப்பகரவே
சிவகண்டிகைத்திரு மிடற்றார்திரிபுரையுடன் சீதான்வடகீழுறத்
தவகண்டர்சூழசலமுச்சியின் முளைத்தசண் முகவருஞ்சம்புவரனார்
பவகண்டிதம்படப் பணிமலையிருவரும் பரித்ததென்பகருவோம்.

(இ-ள்) நவகண்டபூமிகளிலு மற்றுமோரிடத்திலாகிலும் அந்தத்தலம்போல் பெருமையுடைய தலமில்லையென்று உலகமெல்லாம் புகழச் சிவகண்டிகை யணிந்தழகிய மிடற்றையுடையவர் திரிபுரையாகிய உமையுடனேயும் சேசவன் வடகிழக்குத்திக்கிலிருக்கவுந் தவமுனிவர்கள் சூழ்ந்து துதிசெய்ய மலையுச்சியின் முளைத்தெழுந்தருளினார். அங்ஙனம் சண்முகக் கடவுளும் சயம்புவாகிய பரமேசுவரனையும் வந்து தரிசித்தவர்களுடைய பாவங்களெல்லாந் தீர்வதாக பணிமலையில் இவ்விருவரும் எழுந்தருளி யமர்ந்திருந்த மகிமையை எங்ஙனென்று சொல்லுவோம் என்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (௨௩)

சண்முகர் செயற்கைச் சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௪.

## தாருகன்வதைச் சருக்கம்.

சூதமாமுனிவ கந்தன் ஜெற்றங்க ளனைத்துங்கேட்டுன்
பாதபத் மங்களாலே பழவினை யாவுந்தீர்ந்தோம்
வாதிக லசுரர்வேந்தை வதைத்ததும் புயக்கிரிற்பிற்
போதலுந் தெய்வசேனை புணர்ந்ததும் புகல்கவென்றார்.

(இ-ள்.) வாரீர் சூதமுனிவரே கந்தசுவாமி பிறந்துவளர்ந்ததுவு மவர் திருவிளையாடல் மகிமையெல்லாங்கேட்டு உம்முடைய பாதாரவிந்த சேவையினாலே பூர்வ கர்மங்களெல்லாந் தீர்ந்து புனிதரானோம் இனி வாதுசெய்து பகைத்தொழின் மேற்கொண்ட அசுரேந்திரனை தாருகாசுரனைச் சங்கரித்ததுவும் திருநாககிரியிலெழுந்தருளினதுந் தெய்வயானையை மணம்புணர்ந்ததுவுஞ் சொல்லுமையா வென்று கேட்டார்கள் முனிவர்கள்.—எ-று. (௧)

என்றலும் வியாசர்பாற்கலை யாவையு முணர்ந்தசூதர்
நன்றெனக் குருவின்பாத நயந்துதா ருகனைவேலாற்
கொன்றதுஞ் சூரன்மாயக் கோலவேல் விடுத்தவாறு
மன்றலுஞ் சிவனைப்போற்றும் வண்மையும் புகலுகின்றார்.

(இ-ள்.) என்றிப்படி முனிவர்கள் கேட்கவும் வேதவியாசரிடத்தில் சகல கல்வியுங் கற்றுணர்ந்தறிந்த வறிவினாலே அப்படியே சொல்லுகிறோமென்று குருபாதத்தைத் துதித்து தாருகாசுரனை வேலாயுதத்தினால் சங்கரித்ததுவுஞ் சூரனின்றுபோகும்படி அழகிய வேலைவிடுத்த வரலாறுங் குமாரருடைய திருக்கலியாணமுங் குமாரதேவர் சிவனை யர்ச்சனைச்செய்த வழிபாடுகளையுஞ் சொல்லுகிறேன் கேண்மின்களென்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (௨)

ஆரணிபுடனொன்றாகி யமைந்தநா கேசன்வாழுங்
காரண வெற்பிற்கந்தக் கடவுளு மயனுமாலும்
பூரண முனிவர்தங்கள் புண்ணியத்தவத்தோடங்
கேரணி பரனைப்போற்றி யிருந்தருள் பொருந்துங்காலை

(இ-ள்.) வேதவடிவாகிய அம்மைக் கிடபாகங்கொடுத்து அர்த்தநாரீசுவரராக அனைவருக்குங் காட்சிகொடுத்த அர்த்தநாரீசுவரசுவாமியார் வாழ்ந்திருக்கும் அநேக காரணமுடைய நாககிரியில் கந்தசுவாமியும், பிரமாவும், விஷ்ணுவும், பூரணமான தவமுடைய முனிவர்களுந்தங்கள் தங்கள் புண்ணியதபோபலன்களோடும் அழகிய சிவனை வணங்கி வந்தனைசெய்து அங்ஙனம் அமர்ந்திருந்த காலத்திலே.

இந்திரன் முதலாந்தேவ ரெய்தினா கேசன்றன்னைச்
சந்திர மகுடபோற்றி சதாசிவ போற்றியெங்கள்
கந்தனை யளித்தாய்போற்றி கருணைபங்கடலே போற்றி
வந்தவல் வினைகள் மாற்று மங்கையோர் பங்கபோற்றி.

(இ-ள்.) அப்போது தேவேந்திரன் முதலான தேவர்களெல்லாம் வந்து நாககிரீசுரனைத்தரிசனஞ்செய்து சந்திரமவுலியேபோற்றி போற்றி சதாசிவப்பிரமமே போற்றிபோற்றி எங்கள் கந்தசுவாமியைப் பெற்றவனே போற்றிபோற்றி கிருபாசமுத்திரமே போற்றிபோற்றி யாவருக்கும் வந்தவல்வினைகளைத் தவிர்க்கும் உமையொருபாகனே போற்றிபோற்றியென்று பின்னையுந் தோத்திரஞ்செய்கிறார்கள்.

அழிவிலா முதலே போற்றி பைந்தொழி லுடையாய்போற்றி
மொழிமறைப் பொருளே போற்றி முகுந்தனர்ச் சனையாய்போற்றி
கழிவில்மார்க் கண்டற்காகக் காலனை யுதைத்தாய்போற்றி
சுழிநதி யரவுசுற்றுஞ் சுந்தரச் சடிலபோற்றி.

(இ-ள்.) அழிவில்லாத ஆதியே போற்றி போற்றி பஞ்சகிருத்தியங்களுஞ் செய்கின்ற கர்த்தனே போற்றிபோற்றி சொல்லுதற்கரிய சதுர்வேதப்பொருளே போற்றிபோற்றி விஷ்ணு பூசித்தவனே போற்றிபோற்றி இறுதியில்லாத மார்க்கண்டனுக்காக இயமனை யுதைத்தவனே போற்றிபோற்றி சுழிந்து பெருகின்ற கங்காநதியையும் பாம்புகளையுஞ் சுற்றிக் கட்டிய அழகிய சடையையுடையவனே போற்றி போற்றி.—எ-று. (௫)

வளபுர மெரித்தாய்போற்றி கண்ணுதற் கடவுள்போற்றி
நினைவுள வடியார்க்கென்று நெடுவினை தவிர்ப்பாய்போற்றி
யெனமுறை முறைவந்தேத்தி யிறைஞ்சிய விமையோர்தம்மை
மனனுற மகிழ்ந்துவந்த தென்னென வமலன்கூற.

(இ-ள்.) பெருமையுடைய திரிபுரங்களை யெரித்தவனேபோற்றி நெற்றிக்கண்ணையுடைய சுவாமியேபோற்றி நினைக்கின்ற அடியார்களுக்கு என்றைக்கும் நெடியவினைகளை தீர்த்தருள்செய்பவனே போற்றிபோற்றியென்றிப்படி முறைமுறையாக வந்து பணிந்தேத்தித் தோத்திரஞ் செய்த தேவர்களைப் பார்த்து மனமகிழ்ச்சி[illegible]னே வாரீர்தேவர்களே நீங்களனைவரும் வந்தகாரியமென்ன சொல்லுங்களென்[illegible] கேட்டனர் அர்த்தநாரீசுவரர்.—எ-று.



ஐயநின் பாதங்கண்ட வளவிலெம் மிடர்சமர்ந்தோ
மெய்யிது சிறியோமெங்கள் மெய்க்குறை தீர்த்தல்வேண்டுந்
தையலோர் பங்கதுங்க தாருகன் வினையைமாற்றிச்
செய்யபொன் னுலகுவாழச் சேயுடன் விடுத்துக்காப்பாய்.

(இ-ள்.) சுவாமி தேவரீருடைய பாதமலர்களைக் கண்டவுடனே சகல இடுக்கங்களுந் தீர்ந்தோம் இது நிச்சயம் ஆனால் ஒரு விண்ணப்பஞ் சொல்லுகிறோம் சற்றே கிருபைசெய்து எங்கள் மனக்குறையைத்தீர்த்து ரட்சிக்கவேண்டும் உமையொருபாகரே, உயர்ந்த வலிமையையுடைய தாருகாசுரன் செய்கிற துன்பங்களை நிவாரணஞ்செய்து பொன்னுலகாகிய தேவலோகம் வாழும்படி உம்முடைய திருக்குமாரரை எங்களுடனே கூட்டியனுப்பிப் பாதுகாத்து ரட்சிக்கவேண்டுமென்று சொன்னார்கள்.—எ-று. (௭)

எனவரன் முருகன்றன்னை யினிதழைத் திறைவிறல்சேர்
கனவிறற் சத்திதன்னைக் கருணையிற் பாலணிந்தான்
புனைதிற லயிற்கையேந்திப் பொருதக ரூர்ந்துதேவர்
கனமுறு கணங்கள்சூழக் கனகபொற் கிரியிற்சென்றார்.

(இ-ள்.) தேவர்கள் சொன்னபோது நாககிரியீசுரர் குமாரக்கடவுளை அன்புடனே யழைத்து உமையவன் கொடுத்த மிகுந்த வெற்றியையுடைய சத்திவேலாயுதத்தைக் கிருபையுடனே அவர் கையிற் கொடுத்தருளினர் அப்போது கீர்த்தானவர் சுவாமி கொடுத்த வலிமையுடைய வேலாயுதத்தைக் கையிலேந்திக்கொண்டு பகைவரைச் செயிக்கப்பட்ட தகர் வாகனமேறி நடத்தி தேவர்கள்கூட்டஞ் சூழ்ந்துவர, பொன்மயமான சொர்ண சயிலத்தை நோக்கி நடந்தார் சண்முகர்—எ-று.

வேன்மணி யிசையினாலும் வீரக்கரச் சிலம்பினோசைக்
கான்மணிக் கறங்கினாலுங் கனைதூண் முழக்கினாலுங்
கோன்மணிச் சிறுநாணோசைக் குரற்றெனி யாலுந்தேவர்
மேன்மலி யிகுளியிட்டங் கிளைத்தன செவிகொண்டார்.

(இ-ள்.) அப்படிக் கந்தசுவாமி வருகிறபோது வேலிற்கட்டிய மணியோசைகளாலும் வெற்றியையுடைய கைவளையங்களிற் கட்டிய சிலம்போசையினாலுங் காலிற்கட்டிய வீரகண்டாமணியோசையினாலும் படைக்கூட்டங்களுடைய ஆரவாரவோசையினாலும், மணிகள் கட்டிய வில்லுகளை வளைத்து நாணிகள் தெறித்த குணத்தொனிசெய்கிற சத்தங்களாலு மித்தனை யோசைகளுங்கூடி கோடைகாலத்திடிமுழக்கம்போலும் செவிபெட்டார்கள் தேவர்கள்—எ-று. (௯)

அவசரர் விருதசேனை யசைவில்சித் திரங்கள்போன்று
மூவருறு முளைத்தராயு மூயரின் மிடைந்துவீழ்ந்தார்
தவருறு மனத்தன்றானுந் தாருக னவற்றுள்வேலை
கவருறும் வட்டவைபோலக் கனன்றெழுந் திருந்தான்மன்னோ.

(இ-ள்) இந்தவோசைகளைக்கேட்ட அசுரசேனைகள் அங்கங்கே சித்திரப்பதுமைகள்போலும் மனங்கலங்கி வனைமகள்போலும் பதையாமல் நெருங்கிவீழ்ந்து இறந்துபோனார்கள் அப்போது கண்டுகிசாரமுடையமனத்தனாய்சுவாலித்துக்கட

சலத்தையுறஞ்சம் வடவாக்கினிபோலுஞ் சிறிச்சினந்தெழுந்தான் தாருகாசுரன்—எ-று. (கஉ)

அவனொடுமனந்தஞ்சேனை யசுரரு மவுணவீரர்
பவமெனப் புடையின்மொய்த்தப் பதாதிகாற் றுகளாலண்டங்
குவைகொடா ரகையின்சோதிக் குலமெலா மவிணந்தோய
சிவனிணை விழிகளல்லாற் செழுங்கதி ரொன்றுங்காணார்

(இ-ள்) அப்படிக்கோபித்தெழுந்த தாருகாசுரனும் அனந்தங்கோடி சேனை அசுரர்களும் அசுரர்கள் படைத்தலைவரான போர்வீரர்களும் பாவவிருட்கூட்டம் போலுங் கூடிநெருங்கிப் புடைசூழ்ந்துவர சேனைகளுடைய காற்றூளிகளெழும்பி அண்டங்களெல்லாம் பிரவேசித்து சந்திர சூரியர் நட்சத்திரங்களின் பிரகாசமெல்லா மொளிமயங்கியிருண்மூடவும் சிவனுடைய திருநேத்திரங்களுடைய சோதிப்பிரகாசங்களல்லாமல் மற்றொருபிரகாசமுங் காணார்களவர்களும்—எ-று.

பிடையிற் பிடையீண்டப் பெற்றியினவுணர்கூட்ட
நீடுகொக் கரிப்பாலண்ட நெடுமுகடலம் வந்தேங்க
பாடல்விற்றெறிநாணோசை யமர்முழ வோசைகாளத்
தூடெழு மோசைபோல வொலியினு மொலித்தமாதோ.

(இ-ள்.) பிடையோடே பிடைசேர்ந்தாற்போலும் வலிய வசுரர்கூட்டங்களும் அட்டகாசங்கள் செய்து கொக்கரிக்குமோசை யிடியிடித்தாற்போலும் நெடிய அண்டங்களெல்லாங்கலங்க வில்லுகளை வளைத்து நாணிகள் தெறித்து செய்கிறநாதத்தொனியுஞ் சண்டைவாத்தியஞ் சதுரங்கசேனை நெருங்கிவரும் முழக்கங்களும் ஒன்றாய்க்கூடி சமுத்திரக்கோஷ்டத்திலு மதிகமாகமுழங்கின—எ-று. (கங)

சூரியன் றோற்றந்தன்னைச் சொரிபனி மறைத்தாலென்னப்
பாரிய நிருதர்கூட்டம் பருறச் சூழ்ந்தகாலை
வீரியத் தார்பதிதறி திறற்கனை விடுப்பச்செவ்வேள்
கூரிய சூலகாலக் குழாமுறிந் தடைந்தமாதோ.

(இ-ள். ஆதித்தனுடைய பிரகாசம் பொழிகின்ற பனியால் மறைந்ததுபோலும் வலிய நிருதர் சேனைகள் வந்து சூழ்ந்து வளைத்துக்கொண்டபோது வீரமுடைய தேர்வாகனத்தின்மேலேறிய கந்தசுவாமி வில்லைவளைத்து ஒரு தேவாஸ்திரத்தை விடுக்க யமபடர்கள்போலுங் கூர்மையுடைய சூலவேல் பிடித்தெதிர்த்த அசுரக்கூட்டங்களெல்லாஞ் சின்னபின்னப்பட்டு முறிந்தோடிப்போனார்கள்.

வேலினோர் புறத்திற்சூல மிவையினோர் புறத்திற்பாய்மா
மேலினோர் புறத்தின்வேழ மீதினோர் புறத்திலீண்டி
நீலக் காத்தல்சேவை யிமிடமாம் வதைப்படுமென்றே
பாலவை யெங்கள்பேரைக் கசப்புகி யனைத்துமொய்த்தார்.

(இ-ள்.) அசுர சேனைகளிலே வேல்பிடித்த வீரர்களொருபக்கம், சூலம்பிடித்த வீரர்களொருபக்கம், குதிரைமேலிருக்கிற வீரர்களொருபக்கம், யானைமேலிருக்கிற வீரர்களொருபக்கமிப்படி [illegible] சூழ்ந்துகொண்டு இந்த [illegible]



[illegible]ன்மகன் கந்தனை ஒருநொடிப்பொழுதிலே கொன்றுபோடுவோமென்று ஆலகாலவிடங்கொதித்தெழுந்ததுபோலும் ஆகாச பூமியெல்லாம் நெருங்கி மொய்த்துக்கொண்டார்கள்.—எ-று. (கச)

ஆங்கவர் தம்மைச்சோதி யயலமூன் றுடையோற்றேறவ்வாரி
தாங்கிய படைகளோடுந் தலைத்தலை மடியவாங்க
ணோங்கிய குருதிவெள்ள முறுகடற் பரப்பின்மேற்போய்
பாங்கினு மவனிமான்செம் பட்டுடுத் தனையளானாள்.

(இ-ள்.) அப்படிவந்து மொய்த்துக்கொண்ட சூரர்களையெல்லா முன்பு பரமேசுவரன் தேவர்களைக் கொல்லவந்த ஆலவிடத்தை யுண்டதுபோலக் கந்தசுவாமியானவர் தம்முடைய கைகளிலேயிருக்கிற தேவாஸ்திரங்களை விட்டு அத்தனை சூரர்களையு மொருநிமிஷத்திலே சங்கரித்துவிட்டார் அங்கே குமுளித்தெழுந்து பெருகிய ரத்தவெள்ளங்கள் எப்படியிருந்ததென்றால் பூமாதேவியானவள் சிவந்தபட்டு வஸ்திரந் தரித்துக்கொண்டது போலிருந்தது.—எ-று. (கரு)

வாளியும் வேலும்வாளும் வழிந்ததின் மிதந்ததோற்றங்
கூளிகள் விரும்பக்கூற்றங் கொடியநா நீட்டல்போலு
மாளியைக் கண்ட தும்பி யயர்ந்தபோ னிருதர்சேனை
தாளுற மடிந்ததம்மா தாருக னதனைக்கண்டான்.

(இ-ள்.) அம்புகளும், வேல்களும், வாள்களும் சிவந்த ரத்தவெள்ளத்தில் மிதக்கின்ற தோற்றமானது பேய்க்கூட்டங்கள் விரும்பும்படியாகக் கொடிய கூற்றுவன் நாக்கு நீட்டுவதுபோலுமிருந்தது. சிங்கத்தைக்கண்ட யானைகளானது மடங்கி வீழ்ந்ததைப்போல நிருதர்சேனைகளனைத்தும் பூமியிலேவிழுந்து மடிந்துபோனதைக்கண்டான் தாருகாசுரன்.—எ-று. (கசா)

கண்டதா ருகன்பல்கோடி கணமெனு நிருதர்சேனை
விண்டனர் மடங்கலேற்றின் வீரமொவ் வொருவர்க்கெல்லாங்
கொண்டடர் தகரும்போலுங் குகனும்போ லவரைக்கொன்று
மண்டுதா ருகன்முன்சென்று வருகபோர் தருகவென்றார்.

(இ-ள்.) இதைக்கண்டதாருகாசுரன் பின்னையு மனந்தகோடி யசுரர்சேனைகளையனுப்ப ஆண்சிம்மம்போலும் விக்கிரமன் கந்தசுவாமியானவர் வந்தெதிர்த்த ஒவ்வொரு நிருதர்களையு மொவ்வொரு வேலாயுதத்தா லொவ்வொரு சூரனுக்கு ஒவ்வொரு தகர்வாகனமு மொவ்வொரு கந்தனுமாகத்தோன்றி அஸ்திரப்பிரயோகங்களினாலே அத்தனை சூரர்களையுங்கொன்று போர்செய்கின்ற தாருகாசுரன் முன்னேவந்து நின்று உன் சமர்த்தைப்பார்ப்போம் நம்முடனே யுத்தம்செய்யடாவென் றதட்டிச்சொன்னார். (கஎ)

[illegible]வன் றேரினேறி மாருத வேகத்தேரேம்
[illegible]யின் வாளிமாரிப் பொழிந்தன னவற்றையெல்லா
[illegible] வடிவேலந்த ணத்தொடுத் தெதிர்த்தார்க்கண்டு
[illegible]தகம் பித்தேரர்பயஞ்செய்தன னிருதர்வேந்தன்.

(இ-ள்.) அதுகேட்ட தாருகாசுரன் ரத்தை வாயுவேகமாக நடத்திக்கொண்டு வந்தெதிர்த்துத் தன் கைவில்லைவளைத்து நாணிபூட்டி குணத்தொனிசெய்

டு அஸ்திரமாரிகளாகப் பொழிந்தான். அவற்றையெல்லாங் கந்தசுவாமியானவர் ஒவ்வொரு தேவாஸ்திரங்களாலே பொடிப்பொடியாகப் போகும்படி ஒரு நொடிப் பொழுதில் அறுத்தறுத்தெறிந்தார் அதுகண்டு பாணப்பிரயோகத்தினாலே யிவனை வெல்லக்கூடாதென்று [illegible] ஒரு வித்தையினாலே மாயாசொரூபமெடுத்தான் அசுரேந்திரன்.—எ-று. (கஎ)

தாருவாய் விலங்காய்க்கானத் தன்மையாய் வரைகளாய்மா
மேருவின் றோற்றமாய்க்கன் மழைமிகப் பொழிவனாய்நின்
றோருருக் கணையின்பின்னே யொளித்தொரு பிரமபாணம்
போருறத் தொடுத்தானக்கப் போர்வலி புகலக்கேண்மின்.

(இ-ள்) மாயாவித்தை மந்திரங்களினாலே அனந்தக்கோடி விருட்சங்களாகியும் அளவில்லாத மிருகங்களாகியும் அனேக ஆரணியங்களாகியும் கோடானகோடி மலைகளாகியும் சொரூபமெடுத்து மிதமில்லாத கன்மாரி பொழிந்துநின்று அம்புகளைத்தொடுத்து அதன் மறைவாக வொருவருக்குந் தெரியாமற் பிரமாஸ்திரத்தைச் சிந்தித்து விடுத்தான் அசுரனுடைய பிரதாபத்தைச் சொல்லுகிறோங்கேண்மின்கள் முனிவர்களே என்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (கஅ)

ஒருபுற மிடியுங்காரு மொருபுறங் கனலுங்காற்று
மொருபுறம் படையுமின்னு முறவரும் பிரமபாணம்
புரிவரும் ஞானவாளி போக்கிநீயார் பொடிபடுத்து
விரயுதா ருகன்மேற்செங்கை வேல்விட மேடமூர்ந்தார்

(இ-ள்.) ஒருபக்கமிடியு மழையும் ஒருபக்கம் நெருப்பும் காற்றும் ஒருபக்கம் படைகளு மின்னலு மின்னும் அனேக விசித்திரமான மாயாசொரூபமெடுத்து வருகிற பிரமாஸ்திரத்தை பெருமையையுடைய ஒரு ஞானாஸ்திரத்தை விடுத்து க்ஷணத்திலே பொடிப்படுத்திவிட்டு இனியந்தத் தாருகாசுரனைக் கொல்லவேணுமென்று பாசசத்தி வேலைத் தமது திருக்கரத்திற் றாங்கினவராய்த் தகர்வாகனமேறி முடுகி நடத்தினர் கந்தசுவாமி.—எ-று. (உய)

முகலெழுத் தனைத்தமேத முழுமுதற் பயனீயென்பார்
பதமுற வுரைத்திடியென்னப் பங்கயன் றன்னைக்காய்ந்த
பதலைமீ தவன்கைவாளி யருக்கமோ பனிநீர்ப்பௌவத்
ததவிய நெகிழ்போற்கண் டுடைந்தன னிருதர்வேந்தன்.

(இ-ள்.) ஆதிகாலத்திலே வேதமுதலாகிய பிரணவாக்ஷரத்துக்கு நீ பொருட்சொல்லென்று கேட்கச் சொல்லத்தெரியாமல் விழித்த பிரமதேவனை குட்டிச் சிறையிட்ட கந்தசுவாமிமேலே பிரமாஸ்திரஞ் செயிக்குமோ செயிக்காமல் சமுத்திர வெள்ளத்திற்சொருகிய அக்கினிக்கொள்ளிபோலப் போனதுகண்டு மனங்கலங்கினன் அசுரேந்திரனை தாருகாசூரன்.—எ-று. (உக)

நீரினிற் புகுவன்வான நெரியினிற் புகுவனுகை
ரூரினிற் புகுவன்திக்கோ ரெட்டினும் புகுந்துநிற்பன்
காரினிற் புகுவனந்தக் கண்டகன் போகாவண்ணந்
தாருமு கணைபாற்கட்டிச் சத்தியாற் றணித்துவீழ்த்தார்.



[illegible]-ள்.) அப்படிக்கலங்கிய தாருகாசூரன் சமுத்திரத்தின் சலத்துக்குள்ளே புகுந்[illegible] ளிவான் அதுவிட்டு பாதாளலோகத்திலே புகுந்தொளிவான் எட்டுத்திக்கிலும்போய் புகுந்தொளிந்து கார்மேகத்திற் புகுந்தொளிவானதுகண்டு சாக்கடங்கட்டி யெங்குமவன் அசையவொட்டாமல் செய்து வேலாயுதத்தைவிட்டு அவன் தேகத்தைப்பிளந்து பூமியிலே விழும்படி செய்தார்கந்தசாமி—எ-று. (உஉ)

வீழ்ந்தவன் றெனியுகாந்த வியன்றொனி போலவேங்கி
வாழ்ந்தபொன் மடந்தைமாயன் மணிப்புயந் தழுவினளசொற்
சூழ்ந்தநா வாணிவேதன் சுந்தரத் தோளிற்சாய்ந்தாள்
தாழ்ந்தகைத் தலத்தாலவாயச் சசிமக [illegible]னைச்சேர்ந்தாள்.

(இ-ள்) விழுந்த தாருகாசூரன் சத்தமானது உகாந்த [illegible]ப்பேரோசையைப்போல முழங்கினதைக்கேட்டுப் பயந்து லட்சுமிதேவி விஷ்ணுவினுடைய புயத்தைத் தழுவிக்கொண்டாள் இனியசொற்களையுடைய வாணி பிரமதேவனுடைய அழகிய புயத்தைக்கட்டிக்கொண்டாள் நெடியகைகளையுடைய இந்திராணி தேவேந்திரனுடைய புயத்தைத்தழுவிக் கொண்டாள்.—எ-று. (உங)

வேறு.

வெய்யவன் றிரு மடந்தையர்மார்பிடை விதிர்விதிர்த்திடச் சேர்ந்தார்
செய்யபாவகன் றனைச்சுவாஹாவுறச் சேர்ந்தனள் மதிதேவி
பொய்யிலெண்டிசைப் புங்கவர்மங்கையர் புணர்ந்துநண்பரைச் சேர்ந்தார்
மைதவீறு ப் பணிமலைப்புறத்தினிற் பட்டுதாருகன் வீழ்ந்தான்.

(இ-ள்.) ஆதித்தனுடைய தேவிமார்கள் அவனுடைய மார்பு புளகமாகும்படித் தழுவிச்சேர்த்துக்கொண்டார்கள் செஞ்சடாகிய அக்கினிதேவனைச் சுவாகாதேவி தழுவிச்சேர்ந்தாள் சந்திரனை அவன் தேவிமார்கள் சேர்ந்தார்கள் பொய்யில்லாத அஷ்டதிக்குப்பாலகருடைய தேவிமார்கள் அவரவர் பத்தாவை அவர் தழுவிச்சேர்ந்தார்கள் இந்தப்பிரகாரம் உலகத்தாரெல்லாம் பயந் தெளியும்படியாய்த் திருநாககிரிச்சார்பிலே பட்டுவிழுந்தான் தாருகாசூரன்.—எ-று. (உச)

தாருகன் றிருச் சண்முகன்வேலினாற் றலைமுகம் படவீழ
நேருகந்தமரரும்புரந்தரனும் பூ நிரைமழை பொழிந்திட்டார்
காருகந்தபொன் மாரியும்பெய்தனர் கண்ணனும் பிரமாவுந்
சீருகந்தயா முனிவரு முருகனைச் சென்றுதோத்திரஞ் செய்தார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் கந்தசுவாமி விட்டவேலாயுதத்தினாலே தாருகாசூரன் முகந்தரையிற் பட்டுவீழ்ந்தபோது மகாசந்தோஷத்துடனே தேவர்களுந் தேவேந்திரனும் அளவில்லாத புஷ்பமாரிபொழிந்தார்கள். கார்காலத்துப்பெருமழைபோலுஞ் சொர்ன்னமாரியும் பொழிந்தார்கள் கண்ணனாகிய விஷ்ணுவும் பிரமாவுந் தவமுடைய முனிவர்களுஞ்சேக்கிரத்திற்போய் கந்தசுவாமியைக்கண்டு தோத்திரஞ்செய்தார்கள்.—எ-று. (உரு)

[illegible] யெமக்கிறைவனீ யாவுமீசனீ பொருளீயென்
[illegible]கார் தோத்திரம்பலவுரைத் தம்மைபங்கனைப் போற்றி
[illegible]கமா மலையினுமேசனை வணங்கிவாழ்ந்தனர் யாங்கள்
[illegible]கெம திந்திரன்சிறுவியைக் கடிமணஞ் செயல்வேண்டும்.

(இ-ள்.) அப்போது கந்தசுவாமியைப்பார்த்து சுவாமி எங்களுக்குத் தாயும் நீ, தகப்பனும்நீ, எங்கள்சிவரத்துமாவும் நீ, சகோதரனும்நீ, சகலபொருளுமநீயே யென்று அளவில்லாத தோத்திரங்கள்செய்து அங்கிருந்து புறப்பட்டு நாககிரியில் வந்து நாகேசுரரையும் அர்த்தநாரீசுவரரையும் வணங்கி வாழ்த்தி சுவாமி நாங்கள் வாழும்படி உபகாரஞ்செய்த கந்தசுவாமிக்கு தேவேந்திரன் மகளான தெய்வயானையைத் திருக்கலியாணஞ்செய்யவேணுமென்று சொன்னார்கள் விஷ்ணு முதலாகிய தேவர்கள்.—எ-று. (உசு)

என்றுபோற்றின ரீசனுமினி யைவர் நீருபுயச்சேனை
வன்றுணைத்திற மைணயிலேரேடும் வானகந் தனிலேகி
நன்றமா-ணம் புரிதியென்றருளிய நன்மொழி முருகோன்கேட்
டின்றுணர்ச்சனை புரிந்துபின்னேகுவ னெனவடி பணிகின்றார்.

(இ-ள்) என்றிப்படித் தேவர்கள் போற்றி செய்து சொன்ன சந்தோஷ வார்த்தையைக்கேட்டு அர்த்தநாரீசுவரர் மிகவுங்கருணைகூர்ந்து தம்முடைய குமாரராகிய கந்தவேளையழைத்து குமாரக்கடவுளே இந்தத்தேவர்கள் கூடப்புறப்பட்டு தெய்வலோகம்போய் திருக்கலியாணஞ் செய்துக்கொண்டு வருவாயென்று கிருபைசெய்தருளிய நல்வசனத்தைக்கேட்டு கந்தர்சொல்லுகிறார் சுவாமி, இப்போது உம்மைப்பூசைசெய்து அர்ச்சித்துக்கொண்டு பிற்பாடு தெய்வலோகத்துக்குப்போவேனென்று நமஸ்காரஞ் செய்தார் கந்தேசர்.—எ-று. (உஎ)

காசிபன் பெரு மாபினிற்பெற வருகாதலன் றிகிரிபாலன்
மாசகந்திகழ் தாருகன்பட்டபின் வயமுருகரைப்பற்றித்
தேசகன்றிட வருபிரமத்தியைத் தீர்ப்பது பொருட்டாகப்
பூசகக்தொழு நாகவெற்பினிற் சிவபூசனைக்கருள் கூர்ந்தார்.

(இ-ள்.) காசிபருடைய மாயில்வந்த திரிபுத்திரனை அஞ்ஞானமனதையுடைய தாருகாசூரன் பட்டபின்பு கந்தசுவாமியினது அழகும் திறமு மழுங்கும்படி பிரமஹத்தி மாய்கைவருவதுகண்டு அதுதீரும்பொருட்டாக இந்தப்பூமண்டலமெல்லாந் தொழுதுவணங்குகின்ற திருநாககிரியிற் சிவனைப்பூசித்தர்ச்சித்தார் கந்தசுவாமி.—எ-று. (உஅ)

அன்னகாலையிற் சூர்மகன் விண்ணுறை யடைக்குர் தனைத்தேரிச்
சின்னபின்னம தாக்கினவற்றையத்தேவர்கேட்டுமை பாகன்
றன்னையாதரித்திறைஞ்சினியெவ்வகை சாற்றுதியெனச்சேயின்
வன்னவேல்வலிகண்டிரீசனிப்ப தென்வருந்தலென்றருள்செய்தான்.

(இ-ள்) அப்படிக் கந்தசுவாமி சிவனைப்பூசைசெய்துகொண்டிருக்கிறகாலத்திலே சூரபத்மனென்பவன் தன் மகன் பானுகோபனைவிட்டுத் தெய்வலோகத்தையெல்லாமழித்து சின்னபின்னப்படுத்தித் தேவர்களை இம்சைசெய்கிறதைக்கேட்டு விஷ்ணு முதலான தேவர்கள் அர்த்தநாரீசுவரரை வணங்கி இதற்கு என்னசெய்வோம் தேவரீர் கிருபைசெய்தருளவேணுமென்று கேட்க, சொல்லுகிறார் சுவாமி தேவர்களே நீங்கள் பயப்படவேண்டாம் நம்முடைய குமாரன் வைத்திருக்கும் வேலாயுதத்தினுடைய வலிமையைக்கண்டும் நீங்கள்



பயப்படவேண்டியதில்லை யென்று அபயஸ்தங்கொடுத்து அவர்கள் பயத்தைத் தீர்த்தார் பரமேசுவரர். (உகூ)

தாருகன்வதைச் சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௪எஅ.

## சூரபதுமன்வதைச் சருக்கம்.

சமரவெந் தொழிலின்மேலார் தாருகன் றனைக்கொன்ற
குமரர்மேற் கயிலையாளி குளிர்பதம் பணிந்தகாலை
யெமரிடஞ் சூரன்சேனை யிமையவ ரழித்ததென்றே
யமரர்வந்தபயமென்று ரவன்றிறஞ் சூதர்சொல்வார்.

(இ-ள்.) வெவ்வியபோர்த்தொழில் மிகுந்த தாருகாசூரனை வதைசெய்து குமாரக்கடவுள் மேன்மையாகிய கயிலாசபதியென்னும் அர்த்தநாரீசுவரருடைய குளிர்ந்த பாதாம் புயங்களைவணங்கி நமஸ்கரித்திருக்கின்றபோது, எங்கள் தெய்வலோகங்களையெல்லாஞ் சூரன்சேனைகள்வந்து அழிவுசெய்தார்களென்று சிலதேவர்கள் வந்து அபயமென்று முறையிட்டார்கள். அந்த சூரபதுமனுடைய சவுரியபராக்கிரமங்களை விளக்கச்சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (க)

காவியங்கண்ணியங்கண் கனவரை புறத்தோர் பாங்கு
மேவியங்கண்ணினின்றோர் வியன்றிருக் கவர்வதாக
வாவியங் கண்ணிசூட்டி யரனடிக் கனவினுட்பண்
மேவியங் கண்ணிலாவு தபனனோர் விழிக்கணுய்த்தான்.

(இ-ள்.) நீலப்பூப்போன்ற கண்களையுடைய உமையொருபாகமெழுந்தருளிய கயிலாசகிரிச்சாரலிலே ஒருபக்கத்தில்வந்து சேர்ந்து தெய்வலோகமுந் தேவேந்திரபோகமுந் தேவர்கள் பாக்கியமுந் தன்கைவசத்திலாகும்படியாக மனதிலே நினைத்து ஆன்மாவை அரனடிக்கு மாலையாகச்சூட்டி பஞ்சாக்கினிமத்தியிலே நின்று ஆதித்தனுக்கு நேராகக் கண்களை விழித்து அரியதவஞ்செய்யத்தொடங்கினான் சூரபன்மன்.—எ-று. (உ)

அத்தவ மனந்தகால மமைத்தனன் சூர்கோபான்
மெத்தடம் புனன்மண்டுழ்ந்த விண்டலம் விரும்பிநின்ற
சித்திக ளனேககாலஞ் சிவனிவா சூரன்செய்த
உத்தம தவத்தின்பேத மூலமிடை யென்றெணுதால்.

(இ-ள்.) அப்படி அந்தத்தவத்தை அனேககாலஞ்செய்துக்கொண்டு வந்தான் சூரன். பூமிஅந்திர சுவர்க்கமென்னு மூன்றுலோகங்களையுந்தானொருகுடைக்கீழ் ஆளும்படி சித்திக்கவேண்டுமென்று செய்த பெருமையையுடைய தவத்தின் மகிமையை சிவனேயென்னென்று சொல்லுவோம் மனதில் நினைக்கவும் அரிதாயிருக்கும். உலகத்தில் [illegible] (௩)

கயிலை விலைகளெல்லாங் கண்டகன் றவத்திலாட்டச்
செயலற வருமியெங்குஞ் செழும்புன லிசிற்பாய்ந்து

வயலெழு மருவியோடு மலைதம்வெள் ளருவிபோன்று
புபது புனலுங்காய்ந்து பொங்கின கொதித்தமாதோ.

(இ-ள்.) கயிலாசகிரிச் சார்புகளெல்லாம் அந்தச் சூரனவன் செய்கிற தபாக்கினி மிகுந்து கிரியடிவாரமெல்லாமுருகிச்செழுமையுடைய தீப்பெருக்குப் போலும் பெருகிப்பாய்ந்து பக்கங்களிலே மலையருவிபோலுமோமட மிகவுமொரு வெள்ளையருவியென்று சொல்லும்படி யிருந்தது மேகமண்டலத்தைதாவிக் காய்ந்தபடியினாலே மேகசலங்கள் உஷ்ணமிகுந்து பொங்கியெழும்பி மிகவுங்கொதித்தது.

அவணமே சலியாது மசைவிலா மனத்தனாகித்
தவனமு மிளைப்புஞ்சாரத் தன்மையன் றவத்துநின்றான்
புவனமூன் றலம்வந்தேங்கப் புரிதவ மிலக்கங்கோடி
நவதவந் தெய்வகாலம் நண்ணின வீரசூரன்.

(இ-ள்.) கயிலையங்கிரிச் சார்புகளெல்லாம் நெருப்பு மயமாகிக்காய்ந்தபோது அசையாத மனத்தனாகி சற்றுந் தாகமு மிளைப்பு மில்லாதவனுமாய் பிடித்தபிடி விடாமல் அதிக தவஞ்செய்யாநின்றான். அதனாலே மூன்றுலோகமும் பயந்து நடுங்கி லட்சங்கோடி தேவர் கற்பகால மிடைவிடாமல் சாதித்தான் வீராதி வீரனசூரன்.—எ-று. (ரு)

ஆயபோதினுஞ்செம்பாதி யாயிழை யுடையான் சிந்தை
பேய்விலவதனாற்செந்தீ யிடத்திற்றன் றலையைக்கொய்து
தூயவாகுதியும்பண்ணிச் சொரிகன லதனில்வீழ்ந்தான்
மேயதுவிமலனேகி வியந்தவண் புகுந்தான் மன்னோ.

(இ-ள்) அப்படி அகோரமான அரியதவஞ் செய்தும் உமையொருபாகரான பரமேசுவரன் திருவுளமிரங்கி வாராமையால் தான் தவஞ்செய்கிற பஞ்சாக்கினி குண்டத்தில் தன் தலையை யறுத்து பரிசுத்த ஆகுதியாகக்கொடுத்து அந்த நெருப்பிலே விழுந்து பஸ்மீகரமானான். அப்போது பரமசிவமானவர் தமதுள்ளமிரங்கி இடபவாகனரூடராய் யெழுந்தருளிவந்தார் தவபூமியிலே.—எ-று. (சு)

இறையவன் றவபூமிக்குள் ளெய்தியித் தவநன்றென்று
முறைமுறைப் புகழ்ந்தமேலோர் முயற்றவ மிதற்கொப்பன்றே
யறைகழற் சூரவாவென் றழைத்தனை நகத்துள்வேண்டும்
நிறைவரங் கேண்மினென்று நிகழ்த்தினன் கேட்பதானான்.

(இ-ள்.) இறையவனான பரமேசுவரன் தவபூமியிலெழுந்தருளி இந்தத் தவம் மேலானதவமென்று புகழ்ந்து முன்னே முறைமுறையாகச் செய்த பெரியோர்களுடைய உயர்ந்த தவங்களுமிந்தத் தவத்துக்கொப்பல்லவென்று சொல்லி மெச்சிக்கொண்டு வீரக்கழலணிந்த சூரபன்மனை வாவென்று திருவாய் மலர்ந்தருளின போது வெந்துநீறான சூரனெழுந்துவந்து சுவாமியை பிரதட்சண நமஸ்காரஞ் [illegible] நினைத்த வரங்களைக் கேட்டுக்கொள்ளென்று சொன்னார் அப்படியே கேட்கலுற்றான் சூரபன்மன்.—எ-று. (எ)



மூவராற் றேவராளின் முனிவரால் விலங்கினாற்பின்
னேவரா யினுமின்றிலத் தியல்குவா ரியங்காதுள்ளப்
பூவராப் பொருளினாலும் பொன்றிடா வகைபென்பானீ
மாவராப் பணியாய்நல்கி வரந்தருகென்றான் சூரன்.

(இ-ள்) திரிமூர்த்திகளாலு மற்றுமுள்ள தேவர்களாலுமும்முடைய முனையினாலும்மிருகங்களாலும் பின்னும் யாராயினும் உம்முடைய பத்தியிற் சேர்ந்தபேர்களாலுஞ் சேனைவீரர்களாலும் பிருதிவி முதலான பஞ்சபூதங்களினாலுந் தேவாஸ்திரங்களாலு மெய்தப்பொருள்களினாலும் நான் சாகாமலிருக்க வரங்கொடுத்தருளவேண்டும் நாகத்தை ஆபரணமாகத்தரித்த சிவமூர்த்தியேயென்று கேட்டான் சூரபன்மன்.—எ-று. (அ)

என்றவன் கேட்டதெல்லா மீந்துமூன் றுலகுநல்கி
மன்றலங் கொன்றைவேணி மறைந்தனன் மறைதலோடுஞ்
சென்றுகாசிபனையன்றதி திதியினைப் போற்றிச்சூரன்
வன்றிற லகலாத்தெய்வ மயேந்திரபுரத்துப்புக்கான்.

(இ-ள்.) என்றிப்படி யவன் கேட்டவரங்களெல்லாங் கொடுத்துத் திரிலோகத்தையும் அண்டங்களையும் அவனொருகுடைக்கீழடக்கியாளும்படியாகக் கிருபைசெய்தருளி மணமிகுந்த கொன்றைமாலைசூடிய சடையையுடைய பரமேசுவரன் மறைந்தார் அவர்மறைந்தவுடனே புறப்பட்டுப்போய் தன்னைப்பெற்ற தகப்பனை காசிபனையுந் தாயான திதியையும் வணங்கி விடைபெற்று மகா வலிமையையுஞ் சௌரியமும் பொருந்திய தெய்வீகமான மயேந்திரபுரத்தில் வந்துசேர்ந்தான்பதமாசூரன்.—எ-று. (கூ)

புக்கவனுமச்சூர பன்மனென் றான்பொற்பேற
வக்கனவிடையிற்கூறி யருளினா னஃதேபோய்த்
திக்கெலாம்விளங்கிநின்றான் சிங்கமாயிரத்தின் றிண்மை
தக்கவோர்மயிரின்பாங்கு தரித்தனன் றனக்கொப்பில்லான்.

(இ-ள்.) மயேந்திரபுரத்தில்வந்து சேர்ந்த சூரனுக்கு பரமேசுவரன் தவபூமியில்சூரபத்மாவே வாவென்றருளின ரதுவே பெயராய் திக்குவிசையஞ்செய்து உலகங்களை யாண்டுக்கொண்டு ஆயிரஞ்சிங்கத்தினுடைய பலன்களைத் தன்னுடைய தேகத்திலிருக்கும் ஒவ்வொருமயிரினிடத்திற்பெற்று அதிக சவுரியமுடையவனாய்த் தனக்கொருவர் சாமானமில்லாமலிருந்தான் சூரபத்மன்.—எ-று. (கய)

இந்திரன்வானோர் வந்தங் கிணையடி யேவல்கேட்பச்
சந்திரனிரவிமாடந் தயங்கிரண் டாடியாக
வந்தியபுவன மூன்று மொருகுடை நிழலிற்றங்கி
பந்தமாய்ச்சூரபன்மன் பண்ணவர் தம்மையாண்டான்.

(இ-ள்-) தேவேந்திரன் முதலாகிய தேவர்கள்வந்து அவனுடைய பாதப்பணிவிடையேவல் வேலைகளைச்செய்யவும் சந்திர சூரியரிருவரும் அவனரண்மனைமாளிகையில் இரண்டுகண்ணாடியாக விளங்கவும் திரிலோகமுதலாகிய அண்டங்களைத்தனதொருகுடை நிழலிலடக்கி மகாசவுரியபராக்கிரமத்துடனே சகலதேவர்களையுந் தன் சொற்படி ஆண்டுவந்தான் சூரபத்மன்.—எ-று. (கக)

காளைவேதியரைக் கொய்வைத் துறவினர் தப்பையாக
விடங்கியர் குழுவைக் கண்டு வினையமாறனைமாற்றும
பாவிய வாக்கர் பெருமை படைக்கடலையுடைய தத்த
அரவுடையானைப் பெயர்க்கினன் சூரபத்மன்

(இ-ள். தேவர்களை வேதியரைத் தவசிகளை யாகாதிக்கிருத்தியங்கள் செய்யப்பட்ட மகா விரதியர் கூட்டங்களை தானதருமஞ் செய்கின்ற பக்தர்களை [illegible] நாரகிய மனிதர்களையும் பலபல ஜீவாத்துமாக்களையும் [illegible] வலிமைமிகுந்த அரசாட்சியிலே மிகவும் [illegible] விசங்கிருந்த சூரபத்மன் —

அவனிழைக் கொடுமைக்காற்றா தருக்கவுமிமையோரெல்லாம்
புவனமிக்கிறைக்கண்டார் புரந்தரனிமையோரேதன்
றவனனைத்தாட்சேர்ந்தார் தாமரைக்கிழவனாற
பவனத்திற்றுயில்வோன்பாற்கிற் படர்ந்தனர் சவையடைந்தார்.

(இ-ள்.) சூரபன்மன் செய்கிற கொடுமைகளுக்கு ஆற்றாதவர்களாய் அருந் தவமுனிவர்களுந் தேவர்களுங் கூடி தேவேந்திரனிடத்தில் சேர்ந்தார்கள். தேவேந் திரனுந் தேவர்களுமாகப் பிரமதேவனுடைய பாதத்தில் சேர்ந்தார்கள் பிர மாவுந் இந்திரனுந் தேவர்களுமாகக்கூடி திருப்பாற்கடல் மத்தியிலனந்த சயனத்தில் யோகநித்திரை செய்கிற மகாவிஷ்ணுவினிடத்திலவர்கள் சென்று அபயமென்று முறையிட்டார்கள்.—எ-று. (கங)

அந்தகனைவென்றிட்ட விமலனிடத்திற் சென்று
வந்தனஞ்செய்து நின்றவர்க்காக
பெருந்தகல் வணங்கி நின்று விண்ணப்பஞ் செய்தார்கள்
பெருந்தகையவர்க்கு ஆண்டு அருள்கொண்டார்.

(இ-ள்.) மகா விஷ்ணுவானவர் முறையிட்டபிரமாதி தேவர்களை யழைத்து பரமசிவனிடத்தில் வந்து சுவாமி திரிபுராந்தகரே அந்தகாசுரனை வதைத்த தலைவனே யுமையும் நீர் கொடுத்த வரத்தினாலேயும் இந்தவிதமாய் செய்யுந் தேவர் களையெல்லாம் நெருக்கஞ்செய்து தானதர்மத் தலங்களை யெல்லாம் அழிவு செய் யாநின்றனன் இச்சபையிலே நடனஞ் செய்கின்ற பதாம்புயத்தை யுடையவனே யென்று சொன்னார்.—எ-று. (கச)

எனவரியயமரேரோடு மியம்பிய வுரையுட்கொண்டு
சினமுறவனைகப்பாற் செயிப்பதுக் கெல்லாந்தனக்
கனமுருபாகலையுங்கள் மருகனுங் குருகினவங்க
புனையுமுகனைக்கொண்டு போக்கப் புரிகென்றார்.

(இ-ள்.) என்றிப்படித் தேவர்களோடு வந்த விஷ்ணுவானவர் சொன்ன வச னங்களைக் கேட்டுக்குரோதமாக அந்த சூரனை செயிக்க எம்மாற்கூடாது விஷ்ணு வே உமக்கு மருமகனுகிய கணக்குக் குருவானவனுமாகிய சண்முகத்தையுடை யகந்தசுவாமியை யழைத்துக் கொண்டுபோய் நீங்களவனைக் கொண்டு அவனை யுத்தங்கள் செய்வீராகவென்று சொல்லியருளினார் பரமசிவன்.—எ-று. (கரு)



என்றுதன் சக்திகளை யிருப்படையாகக் கூட்டி
துன்றிய வைதாலத் தோகையாபாகரிந்தார்
வென்றியிற் றேவர்வாழ்த்த வேதியருஞ்சிவ
நின்றுமுகனைக்கொண்டு திமலனை வணங்கிச்சென்றான்.

(இ-ள்.) என்றிப்படி பரமேசுவரன் திருவுளம்பற்றியருளித் தம்முடைய சக் திகளை [illegible] கூட்டி [illegible] அந்தவேலாயுதத்தை கந்த சுவாமியினிடங் கொடுக்காப்போது தேவர்கள் வணங்க [illegible] பிரமதேவன் ஆரோகணஞ்செய்ய ஆறுமுகப்பெருமாள் அந்தப் பாசத்துடனே [illegible] சுவாமியை வணங்கி விடைபெற்று யுத்தசன்னத்துடனே வானவர்சூழ்ந்துவரப் புறப்பட்டார் கந்தசுவாமி.—எ-று. (கசு)

மைந்தரு நகந்தாங்கு வயந்திகழ் வீரவாகு
முந்தவெண்ணிலக்குழு முயன்றுபடைகளேந்தித்
தந்தாமி முழவையார்ப்பத் துய்யபாகவிபொற்றேரே
யிந்திரன் முதலோர்போற்ற வேறினன்பாலுகோன்.

(இ-ள்.) மகாவலிமையையுடைய வீரவாகு முதலான நவவீரர்களு மியர்ச் சியையுடைய தங்கள் தங்கள் ஆயுதங்களைக் கைக்கொண்டு புடைசூழ்ந்துவரத் துந் துமி வாத்தியமுழங்க மாதலிகொண்டுவந்த பொன்மயமான இரதத்தின்மேலே இந்திரன் முதலான தேவர்கள் சூழ்ந்து போற்றிசெய்ய வேறினார் பன்னிரண்டு புயத்தையுடைய கந்தசுவாமி.—எ-று. (கஎ)

பரிசைவாள் வேல்பொற்றண்டம் பாசமங்குசம்பொன்னேமி
விரவியகலனைச்சூலம் விறன்மழு விருகாலைத்தந்
தரவரவடயத்தோடுந் தயங்கினர் சமரமேவலோர்
வரமுருதன்யாகத்து வருந்தகர் பாங்குசேர

(இ-ள்.) பரிசை வாளாயுதம், வேலாயுதம், பாசம், அங்குசம், சக்கரம்கபனஞ் சூலம் மழுவாயுதமென்று சொல்லப்பட்ட அஷ்ட ஆயுதங்களையும் தம்முடைய அஸ்தங்களிலே பற்றிக்கொண்டு அவையாதங்களுடனே அநேக காந்திகள் விசையமுடைய தகா வீச தவமுடைய நாரதமுனிவன் செய்தயாகத்திற்பிறந்த வாகனம்பக்கமே சேர்ந்துவர.—எ-று. (கஅ)

இடபவெற்பகிரியினைக் கீலமாகிரியி னெய்திப்
புடைகொள் பஞ்சாக்கரப் பொற்பொருப்பினி லிருந்துகார்வந்
தடைதருங்கால வெற்பி லடைந்துபின் முருகவெற்பி
னிடைபடர்ந்திருவர்பாத மிறைஞ்சியாமர் மேற்சென்றார்.

(இ-ள்.) முந்தியிடபகிரியிற்சென்று அங்கிருந்து புறப்பட்டு நீலகிரியிற் சேர்ந்து அநேகமலைகள் புடைசூழ்ந்த பஞ்சாட்சரப் பருவதத்திலு மிருந்து மேக மொய்த்தவாக கிரியிலு மருவிப்பின்பு திருநாககிரியிற்சேர்ந்து சுவாமி யம்மனி ருவர் பாதங்களையும் வணங்கி விடைகொண்டு அந்த சூரபத்மன்மேரில் யுத்தஞ் செய்யப் புறப்பட்டார் கந்தசுவாமி.—எ-று. (கக)

மாதலிகடாவுந்தேர்க்கால் வருமொலி யவன் றீகன்னத்
தோகடர்சூரனுவி யுண்டிகற் கூற்றூர்த்தென்னப்
போதலிப் பொருக்கென்றந்தப் புரமயேந்திரத்தில்வீரர்
கோதையோர்பங்கன் சேய்முன் குறுகினர் போர் புனைந்தார்.

(இ-ள்.) மாதலி நடத்தப்பட்ட இரதத்தினுடைய வண்டி ஓசையானது அந்த சூரபத்மன் காதிற்றடைந்து புகுந்து அவன் சிவனை உண்ணவந்த யேமன் ஆர்ப்பரித்ததுபோலுமிருந்தது அதைக்கண்டு சூரனதுடுக்கிட்டான் அப்போதந்த மயேந்திரபுரத்திற் [illegible] கிய வீராதிவீரசூரர்கள் அநேகம்பேர் புறப்பட்டு கந்தசுவாமி [illegible] ன்னவந்து அணியணியாகப்புகுந்து யெதிர்த்து நின்றார்கள்.—எ-று. (உ௰)

அனந்தபல் கோடிகோடி யரக்கரோடசுரர்சேனை
கனந்தரு சூழச்சூரன் கனகமா மேருபோல
வனந்தரு நிலையேழ்கொண்ட மாடகூடத்திலேறிப்
புனைந்தெழு முருகன் சேனைப்பொலிவுபார்த் திணையசொல்வான்.

(இ-ள்.) அப்போது பலபலவிதமான அனந்தங்கோடி மகாகோடி ராட்சதக் கூட்டங்களும் அசுரசேனைகளுங் கனமாகச் சூழ்ந்து சேவிக்க சூரபன்மனானவன் கனகமயமான மகாமேருகிரிபோலும் பிரகாசமாகிய உயர்ந்த தனது ஏழுநிலையையுடைய மாடகூடத்தின் மீதேறி அலங்காரத்துடனே யெழுந்தருளிவந்த கந்தசுவாமியினுடைய சேனாசமுத்திரத்தின் பொலிவுகளைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறான்.—எ-று. (உக)

நான்முகனெம்பேர் கேட்கி னடுங்கிடு மசனியேற்றின்
பான்முறி நாகம்போன்று பதைபதைத்தொடுங்கு மாயோன்
கான்முளை பூளைவீயின் கடுக்குமக்காமற் காய்ந்தோன்
றான்மலைக் குகையினீங்காச் சங்கமனுகினை தும்.

(இ-ள்.) சதுர்முகப்பிரமனானவன் நம்முடையபெயர் கேட்டால் மிகவும்நடுங்கி இடியோசை கேட்ட நாகசர்ப்பம்போலும் பதைபதைத்து ஒடுங்கிக் கிடப்பான் விஷ்ணுவானவன் காற்றடிக்கிறபோது பூளைப்பூப் பறந்தோடியதுபோல் பயந்தோடிப் போவான் மன்மதனையெரித்த சிவனானவன் தன்கயிலாயகிரிக் குகையைவிட்டு பிரியாமல் ஆண்டியாகி ஒளிந்துக்கொண்டிருப்பான். (உஉ)

இந்திரன்முதலோர் பானுகோபனுக் கேவலாளாம்
வந்தடிபணிவதல்லால் மற்றுமோர் வலிகளின்று
லந்தநாள் மூவராலுமடாவருங் கொண்டோமீசன்
றந்தையோ குருவோ விங்ஙன்சமர்த் தொழிற்கெழுந்ததென்றான்.

(இ-ள்.) இந்திரன்முதலான தேவர்களெல்லாம் பானுகோபனுக் கேவலாளாய் அடிவணங்கிக் கொண்டிருக்கிறார்கள் பின்னையொரு வலிமைக்கிடமில்லை அந்நாளிலே திரிமூர்த்திகளாலுஞ் சாகாவரம் பெற்றிருக்கிறேன் இப்போது சிவனுடைய தகப்பனோ குருவோ யிங்கு யுத்தஞ்செய்ய வந்தவன்.—எ-று, (உ௩)

எனவனற்காலுங் கண்ணா னிமாசல மடந்தைபெற்ற
கனவனாக்கிழவன் றன்னைக் கதிர்முடியாறுமீரா



றனைகபோற்கமுஞ் சோதியணிமணிக் குழையும்வெட்கி
புனைமலர்த்தொடையுங் கண்டான் பூவையர் மோகம்போன்றான்.

(இ-ள்.) என்றிப்படிச் சொல்லி கண்களில் அக்கினிப் பொறிபறக்க விழித்து இமவான்மகள் பெற்ற குறிஞ்சிக்கிழவனை கந்தசுவாமியை நன்றாயுற்றுப்பார்த்து பிரபைபொருந்திய ஆறுசிரசுகளும் பன்னிரண்டு கைகளும் சோதிமணிக் குண்டலங்கள் பொருந்திய காதுகளும் வெட்சிமாலை சூடிய அழகிய மார்புங்கண்டு உடனே ஸ்ரீ சனங்கள்போலே மோகித்தான்.—எ-று. (உ௪)

இச்சிறுகுமரன் றன்னையேகிநம் வீரர்கொல்லாத்
தச்சுறப்பிடித்து வம்மினையர்த்தொழில் புரியேலென்று
சிற்சிலபகர்ந்தான் வந்தசேனை யெண்டிக்குமீண்டு
மைச்செறிமேகமேரு வளைந்தென வளைந்ததப்பா

(இ-ள்.) அப்படிமோகித்த சூரபதுமனானவன் தன்னைச் சூழ்ந்துநின்ற வீரா தி வீரர்களைப் பார்த்துச்சொல்லுகின்றான் நீங்களனைவரும்போ யந்தச்சிறுபிள்ளையான கந்தனைக் கொல்லாதபடிக்கு பிடித்துக் கொண்டு வாருங்கள் யுத்தஞ்செய்ய வேண்டாமென்று சில வார்த்தைகளைச் சொல்லி யவர்களை யேவினான். அப்போது அசுரசேனை நாலுதிக்கும் நிறைந்து சூழ்ந்து கார்மேகமானது மகமேருவைச் சுற்றி வளைந்ததுபோலும் கந்தசுவாமியை வளைத்துக்கொண்டார்கள்-எ-று.

வளைந்தசேனைகள் போர்வீரவாகுவிற் சிறுநாணொலைக்
குலைந்தழல் செவியராகியொருவர் மேலொருவர் வீழ்ந்தார்
விளைந்திடுசினத்தார் சூலம் வேல்கதை நேமிவாள்போர்
தளைந்தெதிர்ந்தடர்ந்தாரெண்ணில் தானவர் முருகர்மீதே.

(இ-ள்) அப்படிவளைந்த அசுர சேனைகளெல்லாம் சிறுநாணொலையால் யுத்தகாலத்திலே வீரவாகுதேவரின் நாணொலையால் ஒருவர்மேல் ஒருவர்விழுந்து சிலர்மடிந்து போனார்கள் சிலர் கோபத்துடனே சூலம், வேல், கதை, வீரவாள் முதலாகிய பலவாயுதங்களைவீசி நெருங்கி யடர்ந்து வந்து கந்தசுவாமியைச் சூழ்ந்துக் கொண்டார்கள்—எ-று. (உசு)

எறிந்த வாயுதங்களெல்லா மீராறுபுயத்தன் பாங்கர்
பொறிந்தெரி யெரியிற்றீய்ந்த புற்றிர ளெரிந்தகொப்ப
வுறிந்திற லொன்றுங்காணு ரோடினரோடா ரெல்லாஞ்
செறிந்தசேய் கோபத்தீயாற் சிவனெதிர னங்கன்போன்றார்

(இ-ள்.) அந்தச் சூரர்களெறிந்த வாயுதங்களெல்லாம் கந்தசுவாமி பக்கத்தில் வீழ்ந்து எரிந்து போயிற்று உலர்ந்த புல் சுமையை நெருப்பி லிட்டதுபோல் ஓடாமற் போனதுகண்டு வேறொரு செய்கையுங் காணாமலோடிப் போனார்கள். போர்செய்த சில சூரர்களெல்லாங் கந்தசுவாமி கோபாக்கினியினால் வெந்து சாம்பலாய்ப் போனார்கள். அது சிவனுடைய நெற்றிக்கண் நெருப்பில் மன்மதனெரிந்தது போலு மிருந்தது.—எ-று. (உஎ)

வேறு.

விட்டேறிய வவுணர்கெட வேலோனொடு பலவாய்
மூட்டேறிய சூலங்கன முசலங்கர வைவாள்.

இட்டோடிய சூர்கும்பர சடுசக்கர மிருகை
கொட்டேறிய படையின்பல கொண்டனர் நிருதர்.

(இ-ள்.) அப்படியெரிந்துபோன சூரர்கள்போக பின்னும் பலசூரர்கள்வந்து வளைத்தெதிர்த்து அவரவர்கள் கையிலே யெடுத்த யீட்டிகளும் மிருசங்களுங் கவண்களுங் கைவேல்களுந் தேவாஸ்திரங்களுஞ் சூலங்களும் உலக்கைகளுங் கைவாள்களுந் தண்டங்களு மழுவுகளுஞ் சக்கரங்களு மற்றுமுண்டான பலபலவாயுதங்களும் வீசியெறிந்து யுத்தஞ் செய்தார்கள் கந்தசுவாமியுடனே.—எ-று. (௨௮)

கதைதப்பண முசலத்திரள் கணையாட்டொழிகவசங்
குதைவிற்படை கொடுமுப்படை குவடோகலெறிசெறிகற்
பதிகைப்படை பாசப்படை பதினெட்டமர் படையிற்
சதிபெறுமுயர் படைகைப்படு சமருற்றனர் நிருதர்.

(இ-ள்.) தண்டாயுதங்களுங் கப்பணங்களும் உலக்கைத்திரள்களு மக்கினிக்குண்டுகளும் வில்லம்புகளும் கொடியதோமரங்களு மலைபோன்ற கவண்கல்களுங் குறிச்சிட்டிகளுங் கோடரிகளும் என்றிப்படிச் சொல்லப்பட்ட பதினெண்வகை ஆயுதங்களினாலும் தேவாஸ்திரங்களினாலும் கந்தசுவாமியை வளைத்துப் பிடிபிடியடியடியென்று அட்டகாசங்கள் செய்து அகோரமான யுத்தஞ் செய்தார்கள் சூரர்கள்.—எ-று. (௨௯)

யமனையிறு தொகாவகை பெரியுட்படு பாசந்
தமனைக ளுவக்கிற்பெறு சமரக்கடு வினையங்
கமனைதரு மாயாதிகள் களவிற்பொரு கலகம்
வியனேமியின் மலைபோல்பவர் காலாளில் விரைந்தார்.

(இ-ள்.) எமனானவனாலும் ஏபாகாதபடி யிறுக்கிக்கட்டுகின்ற யெறிபாசங்களுந் தாங்கள் அனேக விதமாகத்தவஞ்செய்துபெற்ற தேவாஸ்திரங்களும் பொருதுகின்றவினைகளும் விஞ்சைமந்திரங்களாலே யெடுக்கப்பட்ட மாயாசொரூபங்களும் விடுத்து மகா யுத்தஞ்செய்தார்கள் பூமியிற் பெரிய மலைகள்போலுங் காலாளிக் கூட்டமாகிய அசுரசேனைகள்.—எ-று. (௩௰)

ஐராவத மதன்மாமத மடவேனர்விடு கரியுஞ்
செயிர்மாமலை பலகோடிகள் திரிவார்மண ரதமும்
முயிர்மாமர ககபாய்பரி யுறமேழுடிவு ளிகளும்
வியன்மாவடு நிருதாதிபர் மிகவேலரோ டிகல்வார்.

(இ-ள்) தெய்வலோகத்து வெள்ளை யானைகளைப்போலு மும்மதங்களைப் பொழியப்பட்ட யானைத்திரள்களு மகாபருவதங்களனேகங்கோடி வுலாவித் திரிவதுபோலுயர்ந்த இரதங்களும் ஆதித்தன் தேரிற்கட்டிய பச்சைக் குதிரைகளைப் போலும் அதி வேகமாயப் பாய்ந்து வரப்பட்டகுதிரை யணித்திரள்களும் அதிவீர பராக்கிரமர்களான வீராதிவீரர்களு முறைமுறையாக அணிவகுத்துயூகத்துடனே பலமுனைகளு நின்று வேலாயுதக் கடவுளைச் சூழ்ந்து கொடிதாகிய யுத்தஞ் செய்தார்கள்.—எ-று. (௩௧)

இகல்வன்புர னுறுகண்டக ரிறுமங்கவ ருடலால்
மிகுதென்கடன் முழுதுங்குரு தியின்வெங்கடல் விரவ



வருசந்தவ சுரர்மங்கைய ரழுசெப்புன லவைவாம்
உகவெஞ்சல தியினின்மக பொருபுன்கண்ண தொடவே

(இ-ள்) இப்படி யுத்தஞ்செய்த சதுரங்கசேனைச் சூரர்களையெல்லாம் கந்தசுவாமியானவர் தமது கையில்லவைவளைத்து நாணிபூட்டி குணத்தொனி செய்து ஒரு அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்துவிடவே, அது கோடானுகோடி அஸ்திரங்களாய்ப் பெருகிப் பாய்ந்து சங்கரித்து அளவில்லாத ரத்தங்கள் பெருகிச் சமுத்திரத்திற்சென்று சென்னிறமாக்கியது எப்படியிருந்ததென்றால் செத்த சூரர்களுடைய மங்கையர்க ளழுத கண்ணீர்ப்பெருக்கம்போலுமிருந்தது.—எ-று. (௩௨)

எழுதினைக்கவன் முருகரிப்படி யிகல்வினைக்கனர் மகிழியலி
விழுகதிர்க்குக யமுமிகற்கிது விடிவெனக்கெகரிக்கிலவரு
வெழுபிணக்குரு திகள்சமுத்திர மிறையவக்கடலிடையிலே
செழுமயிற்குக ரதம்விட்டனர் திரைமரக்கல மெனவே

(இ-ள்) இப்படி எழுநாள் யுத்தகளத்திலே முருகவேள் யுத்தஞ் செய்யும்போது உதையகாலம் அஸ்தமனகாலமிவையென்று தெரியாமல் சமர்செய்தார். அசுரர் பிணங்கள் மகாபருவதங்கள் போலுங் குவிந்தது இரத்த வெள்ளங்கள் சமுத்திரம் போல இரைந்து பெருகிற்று அந்த இரத்தக்கடலிற் செழுமையுடைய மயில் வாகனைக் கடவுளாகிய கந்தசுவாமி இரதம்நடத்தினார் கடலிற்கப்பல் ஓடுவதுபோல.—எ-று (௩௩)

எட்டுநாளினில் விட்டதானவ ரெண்ணில்கோடிகள் விண்ணுறப்
பட்டுவிழ்ந்தனர் சூரபன்மனோர் பாவியேதனி நின்றுவான்
முட்டமேவினர் முண்டகன்முதல் மூவருஞ்செரு முருகரன்
றட்டதிண்சமர் கண்டுகந்தன ரமராகி தழைத்தவே

(இ-ள்.) எட்டுநாளளவிலே சூரன் முறைமுறையா யனுப்பிவைத்த சதுரங்கச் சேனைச் சூரர்களளவில்லாத கோடிபேர் இறந்துவீழ்ந்தார்கள் மகா பாவியான சூரபத்மன் ஒருவனுந்தனியே வெளிப்பட்டு நின்று அண்டகடாகமுட்டி வோடிப் புகுந்தான். பிரமா முதலாகியமூவர்களும் முருகக் கடவுள் செய்த சமர் வெற்றியைக் கண்டு சந்தோஷித்தார்கள் தேவர்களெல்லாம் நாங்கள்பிழைத்தோம் பிழைத்தோமென்று சொல்லிச்சுவாமியைக் கொண்டாடினார்கள்.—எ-று. (௩௪)

சூரனெங்குளன் வீரவாகு துரந்தெரிந்தவ னுவியின்
னேரமுண்பது நமதுவேலென நின்றுவேலவர் நிகழ்த்தியே
பூரிமானில கோடிசூரியர் போல்விளங்கின னவணிடை
கோரமாகியோர் தேரிலேறி யகோரசூரனடந்தனன்.

(இ-ள்.) அப்போது கந்தசுவாமியானவர் வீரவாகுவைப்பார்த்து அந்தசூரபத்மனானவன் யெங்கு ஒளிந்து யிருக்கிறான். அதையறிந்து அவனுடைய உயிரை வாங்கும்படி நமது வேலாயுதத்தை விடுகிறோமென்று சொல்லி அனந்தங்கோடி ஆதித்தர்போலச் சோதிப் பிரகாசமாக விளங்கினார். அந்தச்சமயத்தில் மகா கோரங்களுடனே கனகமயமான ஒருதேரிலேறி அட்டகாசஞ்செய்துக்கொண்டு யுத்தஞ்செய்யக் கந்தசுவாமியுடனே யெதிர்த்துவந்தான் சூரபத்மன்—எ-று (௩௫)

எதிரிசூரனனந்தபார விருப்புலக்கைமுசலமெடுத்
ததிரவண்டமுகடதிரவிண்டலமுமதிரமண்டலமுமதிரமீ
னுதிரவேலவனுரத்தெறிந்திடவோங்கினனயர்காதனுர்.
கதிருமோடினமதியுமோடினகனலுமோடினகனமே.

(இ-ள்) அளவில்லாத கனம்பொருந்திய வன்மையான இருப்புலக்கையை யெடுத்து, தேவர்கள் மனம் நடுங்கியதிர ஆகாசம் பூமியெல்லாமதிர சந்திர சூரியர் நட்சத்திரமெல்லாம் அதிர்ந்து உதிரும்படியாக வேலவருடைய மார்புக்கு நேராகச்சுழற்றி யோங்கியெறிந்தான். அந்தஉலக்கையானது அதிகவிசையுடனே மார்பிற்றாக்கவே அப்போது சோம சூரியாக்கினியென்னு முச்சுடர்களுமோடி ஆகாயத்தில் மறைந்தது.—எ-று. (௬௬)

பட்டதெட்டையிருப்புலக்கைபோர் பானல்மாலிகை யானகாற்
றொட்டதுந்தமெடுத்தெதிர்ந்தெதிர் சூரன்மார்பு பிளக்கவே
கிட்டசோரிக ணீலமாலவரை பெழுமணிச்சொரி யருவிபின்
முட்டவோத்தனவேரோர்த்தெரோடு முகிலெழுந்து மறைந்தனன்.

(இ-ள்.) எறிந்த இருப்புலக்கைவந்து கந்தசுவாமி மார்பில் தாக்கிச்செங்கழுநீர் மாலையாகி விழுந்தது. அதுகண்டு சீக்கிரத்திலே ஆறுமுகக்கடவுள் ஒரு குந்தத்தை யெடுத்து சூரன் மார்பு பிளக்கவிடுத்தார். அதுவந்து சூரன் மார்பில் தாக்கினவுடனே இரத்தவெள்ளப் பிரவாகமாகப் பெருகிய தோற்றமானது நீலகிரியிலிருந்து யிறங்கி வருகிற செம்மணி யருவிபோலு மிருந்தது. தேருஞ் சின்னபின்னமாக முறிந்து விழுந்தது பின்னையுமொரு தேர்மேலேறிக்கொண்டு பாய்ந்து மேகமண்டலத்திற்குள்ளே மறைந்திருந்தான் சூரபத்மன்.—எ-று. (௬௭)

மறைந்துகற்கவண் மாரிபெய்தடு வாளிமாரி வழங்கவேள்
சிறந்தவாளிக ளண்ட கோளகை நீழல்செய்து மறைந்தபின்
னறைந்தமாருத வம்புதொட்டன னஃதறப்பணியம்பினுல்
புறந்தரற்கசு ரன்றொடுத்தவைபோக வாளிகளேகவினுர்.

(இ-ள்) முகிலில் மறைந்த சூரனானவன் கவண் கல்மாரி பொழிந்து அஸ்திரங்களையு மாரியாகப் பொழிந்தான் அதையெல்லா மறுத்தெறிந்து செவ்வேளாகிய கந்தசுவாமியும் அளவில்லாத பாணப் பிரயோகஞ் செய்து அண்டகோளகை யெல்லாம் நிழலாகி மறையும்படி சரக்கூடங் கட்டினுர். அதுகண்டந்த சூரன் வாய்வாஸ்திரந் தொடுத்தெய்தான் அதை நாகாஸ்திரந்தொடுத்தெய்து அறுத்தெறிந்தார் பின்னையுஞ் சூரன் தொடுத்த பாணங்களுக்கெல்லாம் அஸ்திரப் பிரயோகஞ் செய்து அறுத்தெரிந்தார் கந்தசுவாமி.—எ-று. (௬௮)

பின்பனற்கணை பிணையல்வெட்சி பிறங்குபிள்ளை தொடுத்தபின்
வன்கனற்செய சுவாலைகண்டவன் வருணவாளி வழங்கினுன்
பன்கனத்துள மோகவாளி பசாசவாளி யியக்கரோ
முன்கதித்தமப னஸ்திரநாலுமோர் முகமுனைந்துசமர் மூட்டினுன்

(இ-ள்.) அழகிய வெட்சிமாலை சூடியமார்பினையுடைய குமாரசுவாமி யனேகமான அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்தெய்தார். அதனாலே அண்டமெல்லாம்



அக்கினிச் சுவாலையாகமுழங்கி வருந்தறைதக்கண்டு வருணாஸ்திரந்தொடுத்தெய்து அடக்கினுன். பின்பு பெருமையான மோகனாஸ்திரம், பேயாஸ்திரம், இராக்ஷசாஸ்திரம், மயனாஸ்திரம் இந்தநாலு அஸ்திரங்களுந்தொடுத்தெய்து ஒருமுகமாக முனைந்து போர் செய்தான் சூரபத்மன்.—எ-று. (௬௯)

முனைபினுலுவகைச்சரங்களை முண்டகன்கணை கொண்டறுத்
துனையபார்க்கிடைமற்புயத்தினு டற்றுகென்ன விடுத்துவான்
றனில்மறைந்தரி கேழல்வன்புலி தகர்க்கிடாகரடி கடவார் [தான்
மினைகொள்புள்ளின மெனவோர்மாய விகதத்தெதிர்ந்துபல்வினைசெய்

(இ-ள்) சூரனானவன் ஒருமுகமாகத் தொடுத்தெய்த நாலுதேவாஸ்திரங்களையும் பிர்மாஸ்திரந் தொடுத்து அவைகளை அறுத்தெரிந்தார் கந்தசுவாமியானவர். பின்னுமனேக அஸ்திரங்களினுல் அவர்புயங்களில் தாக்கும்படியாகப் பிரயோகஞ் செய்து ஆகாயத்திலே மறைந்து சிங்கம்போலும், பன்றிபோலும், வலிய புலிபோலும், தகர்க்கிடாய்ப் போலும், கரடிபோலும். பெரிய பாம்புகள் போலும் இப்படி யனேக வடிவெடுத்து வந்து வினைகளைச் செய்து பின்பொரு சக்கரவாளப்பட்சி போலும் மாயாசொரூபமெடுத் ததிர்த்துப் போர் செய்தான் சூரன்-எ-று. (௭௦)

மாய்கைவன்றொழில் வல்லசூரன்மலைந்தபூசலுலைந்திட
வீய்க்கைமேருவெனச்சிறந்தவனேமவெம்பனிநின்றுகம்
பாய்கதிர்ச்சரணம்பரன்பதமெணணிமாயைசெய் திருதர்கோன்
சாய்கையிற்பொருசத்திகொண்டுசமர்க்கெதிர்ந்தனர் சண்முகர்.

(இ-ள்.) இப்படி யனேகவித மாய்கையான வித்தைகளில் வல்லவனான சூரன்செய்கின்ற மாயாவித்தையெல்லா மடங்கும்படியாகச் சொர்ன்னமயமான சிறப்புடைய மகாமேருபோலு மசையாது விளங்கித் தனது தந்தையான பரமேசுரன் சுடர் பொருந்திய பாதங்களை இருதயத்தில் தியானஞ்செய்து சூரன் செய்த மாயாவிகார வித்தை சாலங்களெல்லா மொழியும்படி தம்முடைய கையிலே சத்திவேலாயுதத்தை யேந்திக்கொண்டு முனைந்து போர்செய்தார் ஷண்முகக் குமாரர்.—எ-று. (௭௧)

பாகமாதலியிரதமேல்வரு பாரவேலவர் வேல்தொட
நாகமும்பல நாகமுந்திசை நாகமுங்கிடுகிடென்னவே
மேகபந்திகள் குருதிவீழ்ந்தன வெள்ளிரிபின்குல மதிரவன்
மூகனக்கநடுங்கிமுச்சுடர் போயிருண்டன புவனமே

(இ-ள்.) மாதலி நடத்தப்பட்ட இரதத்தின் மீதேறிவருகிற கந்தசுவாமி சூரன் மேதிலே சத்திவேலை யெடுத்து விடுத்தாரப்போது நாகலோகங்களும், பல மலைகளும், அஷ்டகுல பருவதங்களும் அதிர்ந்து சப்திக்க மேகவரிசைகளெல்லா மிரத்த மாரிகளாகப் பொழிய நட்சத்திரக் கூட்டங்களெல்லா முதிர பூமி நடுங்க சோம சூரியாக்கினி யென்னு முச்சுடர்களும் ஒளிமழுங்கி புவனங்களெல்லா மிருள் மூடினது.—எ-று. (௭௨)

இன்னதுற்றுசூரனெஞ்சகமெய்திமெய்தெருமாறுறத்
தன்னுபுன்முகற்றுருவின்பல சொரூபமாவொரு சூதாய்
வென்னுரைப்பெருவாரிபிறபத மேலதாய்முடி கீழதாய்த்
தனின்னிக்கா வடனெழித்தொரு தாருவின்படர் தந்தனன்.

(இ-ள்.) இப்படிகந்தசுவாமி விட்டவேல்வருகிற அதிர்ச்சியைக்கண்டுபெய[illegible]ங்கி அனேக துற்குறியுண்டானதுகண்டு சூரன் மனதுகலங்கி பல்முதலாக அனேக விருட்சங்களாக மாயாசொரூபமெடுத்துப் பின்பு பெரும்பரிய மாமரவடிவெடுத்து வெண்ணுரை பொருந்திய பெரிய கடல் நடுவில் [illegible] கீழுமாகத் தன்மனக் கபடமாகக் களவுசெய்து ஒளித்துநடுங்கி துன்பத்தைக் கொடுத்தான் சூரபதுமன்.—எ-று. (௬௩)

திரிபுரந்தனை யுடன்றதாதைமுன் னெரிபரப்பிசெய்த செயலெனப்
பரிபுரந்தரு பதச்சவுந்தரி பயனுதந்தருள் சத்தியால்
விரிபுரப்பெறு மயபுரந்தனில் வீரசூரனை வெல்கவென்
றரிபுரந்தர னயனருந்தவ ராதியோடலர் வீசினார்.

(இ-ள்.) அந்த வேளையில் திரிபுரத்தை உமது தந்தையான பரமேசுரன் எரித்தது போலுஞ் சிலம்பணிந்த பாதத்தையுடைய அழகிய திரிபுர சுந்தரியான பராசத்தி கொடுத்த வெற்றி வேலாயுதத்தினாலே விசாலமாகிய மயேந்திரபுரத் திறைவனாகிய சூரனைக்கொன்றுவெற்றி பெருகவென்று கந்தசுவாமியைப்பிரமா, விஷ்ணு, தேவேந்திரன், தேவர்கள், முனிவர்கள் ஆசீர்வாதஞ்செய்து புஷ்பவருஷம் வருஷித்தார்கள்.—எ-று. (௬௪)

கூறுமாசி குறிக்குளத்தொடு கொற்றவேலவ ரொடுமைகண்
டறிவில்சூரன னாகவெற்பினி லிடைந்திடைந்து விழுந்தனன்
மாறிலவ்வரை வாதலாலொரு வன்மைசண்முகர் வேலினாற்
கூறுபட்டுவி ழுந்தனனிரு கூறுகோழியுமயிலுமாய்.

(இ-ள்.) அப்படி தேவர்கள் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களுடனேயும் வீரவாகு முதலான வீராதி வீரர்களுஞ் சூழ்ந்து போற்றிசெய்ய விளங்காநின்ற கந்தசுவாமி சூரனைக் கொன்றுவாவென் றேவிவிட்ட வெற்றி பொருந்திய வேல்வருகிற கொடுமையைக்கண்ட அறிவில்லாத சூரனவன் நங்குநங்கி நாககிரிச் சாரலின் புறத்திலே இடைந்திடைந்து விழுந்தான். மாறுபாடில்லாத கிரிச்சாரலில் வருத்தலினாலும் வலிமையுடைய சண்முகக் கடவுளுடைய வேலாயுதத்தினாலும் இரண்டு கூறுபட்டு விழுந்தான். ஒருகூறு கோழியும் மற்றொருகூறு மயிலுமாயினான் சூரபதுமன்.—எ-று. (௬௫)

தோகையாமயி லாகியரவிறை சூடிகைதன்னிரு வலதுகொண்
டேகுநாளொழு சேடனுமவர் வெந்தைகந்தர னிந்துதம்
வாகனத்திக மாகவேறி மடக்கினார் பொரியெனவுடு
பாகுகோழிகொக் கரிக்கவென்றுப் தாகைகொண்டனர் குமரரே.

(இ-ள்) அப்படி கூறுபட்டு விழுந்தசூரனவன் ஒருகூறு தோகைமயிலாகி நாகேந்திரன் முதலான அநேக நாகங்களை தன்வாயலகினாலே கொத்திக்கொத்தி யெடுத்திடுக்கஞ் செய்வதுகண்டு எம்முடைய சாமியாகிய முருகக்கடவுள், தம்முடைய வாகனமாகயேறி நடத்தி மடக்கியடக்கினார். நட்சேத்திரங்களையும் பொரிகளாகக் கோழி கொத்திக் கொரிப்பது கண்டு அதனை வெற்றிக் கொடிய[illegible] கொண்டருளினார் குமாரசுவாமி.—எ-று. ([illegible])



குமாரவீர னெதிர்ப்பொருங்கன கோரசூரனைவென்றவன்
றமரர்வன்சிறை பாவுமீண்டவ ரடிவணங்க விருந்தபின்
றமருகந்தரு தாமரைக்கர சங்கரன்றனை வெங்கரத்
தெமரவென்றிரு தாள்பிடித்தினி தின்பவன்பி னிரைஞ்சுவார்.

(இ-ள்.) வீரபராக்கிரமமுடைய குமாரக்கடவுள் தம்முடனே யெதிர்த்து வலிய போர்செய்த சூரபதுமனைக்கொன்று வெற்றி கொண்ட பின்பு தேவர்கள் சிறையினைத்தையு மீட்டு அவர்கள் அடிவணங்க விருந்தருளினார். பின்பு தமருக மேந்திய தாமரைக் கைகளையுடைய சங்கரனான பரமேஸ்வரனைத் தம்முடைய கைகளாலே அஞ்சலிசெய்து இரண்டு பாதபத்மங்களையும் பிடித்துக்கொண்டு இனிதாகிய மனோபக்தியினாலே பூசித்திருந்தார் வேலவர்.—எ-று. (௬௭)

சூரபத்மன் வதைச் சருக்க முற்றிற்று.

ஆ திரு விருத்தம்.—௫௨௫.

---

# முருகர் சிவார்ச்சனைச் சருக்கம்.

புத்தேளிர் தமைப்புரப்பப் பொருந்தாரு கனைத்தடிந்து புவனமூன்றில்
மெய்த்தேசு தரவெழுந்து விளங்கியநா கக்கிரியில் வேலர்மேவிப்
பைந்தேசு பெறவணிந்து பரனையடி வணங்கியெதிர் பகையைக்காய்ந்த
வத்தீமை யகல்வதற்கே யருபுகவர் சிவார்ச்சனையி லருள்வைத்தாரால்.

(இ-ள்.) தேவர்களை இரட்சிக்கும் பொருட்டாக தாருகாசூரனைச்சங்கரித்து திரிபுவனங்களிலும் தேககாந்தியுடனே யெழுந்தருளிவிளங்கிய நாககிரியில்வந்து சேர்ந்து பாம்புகளை யாபரணமாகத்தரித்த பரமேசுரனைக்கண்டு அவருடைய பாதகமலங்களை வணங்கி யெதிர்த்த பகைவரான சூரர்களைக்கொன்ற தீமையான பிரமகத்திதோஷம் தீரும்படிக்குச் சிவார்ச்சனைசெய்யக் கிருபைகூர்ந்து அருளினார் ஆறுமுகக்கடவுள்.—எ-று. (௧)

அகத்தியர்நா ரதர்வசிட்டர் கவுதமர்சீர் விசுவாமித் திரப்பேரோனோர்
மகத்துஜம தக்கினிப்ப ராசர்பா ரத்வாசர் மறைவியாசர் [வானோர்
சுகத்தவர்மார்க் கண்டர்கவுண் டிகர்முதலோர் தொல்முனிவர் சுரர்கோன்
மிகக்குழுமி வேதனுமே வதனக்கமல வுந்திதந்த விண்டுசூழ

(இ-ள்.) அகஸ்தியர், நாரதர், வசிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர் என்னும் பெயருடைய முனிவர்களும், சதயாகஞ்செய்கின்ற சமதக்கினி, பாராசர், பாரத்துவாசர், வேதவியாசர், சுகர், மார்க்கண்டேயர், கவுண்டிகர், முதலாகிய பூர்வார்ச்சிதமான முனிவர்களும், தேவர்களும், தேவேந்திரனும், பிரமாவும், விஷ்ணு முதலான சகலரும் சூழப்பெற்றார் குமாரக்கடவுள்.—எ-று. (௨)

தனதுதிருப் பேரதனாற் றண்குமார தீர்த்தமெனச் சயிலத்தாக்கித்
தினமுனிவர் மூழ்கவெ தீர்த்தமதிற் றாபித்துத் தினந்தான் றோய்ந்து
மனதினு கேசுவனை வந்தித்து முப்பொழுதும் மலர்த்தாள்போற்றி
யுனவாத மைந்தெழுத்தை யறுமுகத்து மாறுபதேசத்தார்பெற்றார்.

(இ-ள்.) அப்படி யனைவருஞ் சூழ்ந்துவர விருந்த குமாரக்கடவுள் அந்த நாககிரியில் தம்முடையபெயரால் குமாரதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டாக்கி தினந்தினம் முனீஸ்வரர்கள் முழுகும்படியாக அந்தத் தீர்த்தத்தில் கங்கை முதலாகிய நவதீர்த்தங்களும் ஸ்தாபித்து அதில் தாம்மூழ்கி மனவுறுதியாக நாகேசுரனை வந்தனைசெய்து திரிசந்திகாலமும் அவர் பாதாரவிந்தங்களைப் போற்றிசெய்து அனவரதகாலமும் சிந்திக்கும்படியாய்ப் பஞ்சாட்சரங்களை ஆறுமுகத்தினுஞ் செவனுபதேசிக்கப் பெற்றார்.—எ-று. (௬)

பெற்றுமைபாகனைத் தினமும் பெருமுதப்பன் னிருகரத்தாற் பிரசமென்
பூங்கற்றைத்துவை துவைசொரியக் கற்பகப்பூங் காமலையின் கண்ணதாக்கிக்
கொற்றமுற வடல்சிருதர் கொன்றபிர மஹதகியறக் கோதைபாக
னம்பவளிம வடிவையுள நளினமல ரிடையிருத்தி நைந்தார்கந்தர்.

(இ-ள். அருமையாகப் பெற்றுக்கொண்ட பஞ்சாட்சரங்களைத் தியானஞ்செய்துக்கொண்டு அர்த்தநாரீசுரரைத் தன்னுடைய பன்னிரண்டு கைகளினாலுந் தேன் பொழியப்பட்ட திவ்விய புட்பங்களைக் கற்றைக் கற்றையாய்க் குப்பல் குப்பலாக வாரிச்சொரிந்து பூசிக்கும்படியாகக் கற்பக புட்பகாவனந் திருநாககிரியினிடத்தி லுண்டாக்கி அகோரமான கோபத்திடனே அடர்ந் தெதிர்த்து யுத்தஞ்செய்து அசுரர்களைக் கொன்ற பிரமகத்தி தீரும்படியாக உமைபாகருடைய திருவடியைத்தமது மனத்தாமரைப்பூ மத்தியிலிருத்தி அன்பினாலுருகி ஆனந்தபரவசமானார் கந்தசுவாமி.—எ-று. (௯)

பின்னலைமன் னியமுடியும் விண்டொளிரம் பிறைநுதலும் பிணாவிழிக்கு
மன்னியபுன்னகைவாயும் வளைக்குழையும் மான்கன்றும் வயங்குங்கையுந்
துன்னியவம் கதப்புயமுந் தொடைகொங்கை நிறைமார்புந் தூசெம்பட்
டின், பன்னியுறு மருங்குலும் பொற் பாடகப்பா தமுநினைந்து பணிந்தார்
வேலர்.

(இ-ள்.) பின்னலையுடைய சடைமுடிக் கூந்தலும், பிரகாசிக்கின்ற பிறைபோன்ற நெற்றியும், மான்போன்ற பார்வையுடையகண்களும், நகைபொருந்திய திருவாயும், சங்கக்குழையும், மானமழுவேந்திய கையும், நாககேயூரந்தரித்த புயங்களும், சொர்ண ரத்தின மாலைகள் நிறைந்த முலைமார்பும், செம்பட்டுடுத்திய இடையும், சொர்ண பாடகமணிந்த திருப்பாதமும் இப்படி அர்த்தநாரீசுரருடைய ரூபத்தைமனதிலே நினைந்து துதிசெய்துவணங்கினார் வேலாயுதக்கடவுள் எ-று.

வேறு.

அம்மனுக்கும். சுவாமிக்கும், உபயார்த்தமாகப்பாடிய
அர்த்தனாரீசுரர் திருக்கவிதை.

மனத்தினில்தியானம் மகரவகரம் யகரநகரம் சிகரஞ்சிய
வனத்த சிகரம் யகரநகரம் மகரவகரம் வகரஞ்சிய
தினத்த மகரம் யகரநகரம் நகரபகரம் சிகரமவா
யுனத்த யகரம் நகரமகரம் சிகரவகர மோதினால்.

வேறு

இதியகு ரேசர்பிர மக்கிழற்று முடைந்தோட வெழுத்தோரைந்தும்
பேதமுற விப்படியே செபத்தொழிலிற் குமரேசர் பெரிதுகூறி



வேதநெறி தருபூசை தினம்புரிந்து விமலரிணை யடியைப்போற்றிக்
காதலுறாக் குமரேச ரெனுஞ்சிவலிங் கப்பூசை கருதுகின்றார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரமோதிய அசுரர்களுடைய பிரமகத்தி முழுதும் நிவாரணமாகியோட ஐந்தெழுத்தையும் பேதா பேதமாக மாறி மாறி தியானித்து செபஞ்செய்து மிகுந்த வன்புடனே வேதாகமப்படி பூசை நித்தியமும் புரிந்து சிவனுடைய திருவடித் தாமரையைப் போற்றிசெய்து ஆசையுடனே சிவலிங்கப் பூசைசெய்ய மனதில்கருதினார் சுப்பிரமண்ணியசுவாமி.—எ-று. (எ)

கிளர்ந்ததெய்வ தீர்த்தத்தின் கிழக்காகப் பிரமதீர்த் தத்தின்றென்கீழ்
வளர்ந்தபன்ன கத்தீர்த்தத் திறகுமேற் றிசையாக வானோர்போற்றித்
தளர்ந்தபெருந் துயரகலத் தாருகனிற் றரும்பிரம கத்திநீங்க
விளங்குதிருக் குமரேசர் சிவலிங்கமொன்று விதித்தாரன்றே

(இ-ள்.) கிளர்ச்சியை யுடைய தெய்வ தீர்த்தத்தின் கிழக்காகப் பிர்ம தீர்த்தத்தின் தென்கிழக்காக வளர்ச்சியையுடைய நாகதீர்த்தத்திற்கு மேற்குத்திசையாக தேவர்கள் போற்றிசெய்து தளர்ச்சியுடைய மிகுந்த துயரங்கள் தீரத் தாருகாசூரனைக் கொன்றதைப்பற்றி வந்த பிரமகத்தி நீங்கத்தக்கதாக திருக்குமரேசர் அற்புதமான ஒரு சிவலிங்கத்தை அங்கனே விதித்து ஸ்தாபித்தார்.—எ-று. (அ)

தாபித்த சிவலிங்கந் தனிற்கயிலை நாயகனை யாவாகித்து
நாபித்துஞ் சதுர்வேத மந்திரத்தாற் றோத்திரங்க ணவிலாநின்றார்.
தேசபித்தர்ச் சனைபுரிந்து சியன்பதஞ்சோ டசவுபசா ரத்தாற்போற்றி
கோபித்துத் தனையடர்ந்த வசுரர்பிர மத்தியறக் கோமானானை

(இ-ள்) அங்ஙனம் ஸ்தாபித்த சிவலிங்கத்தில் கைலாசநாதரை யாவாகனஞ்செய்து தெரிசித்து அர்ச்சனைபரிந்து சிவனுடைய பாதமலர்களைச் சோடசவுபசாரங்களால் பூசித்துப் போற்றிசெய்து தம்மைக் கோபித்துவந்த அசுரர்கள் பிரமகத்தி தீர திருநேத்திரனை நாவினாலே சதுர்வேத மந்திரங்களா லர்ச்சனைசெய்து வணங்கினார்.—எ-று. (௯)

சிவலிங்க மதுபடிக நிறமாகத் திருமுகமைந் துந்தோட்பத்துந்
தவசிந்தை தருந்திருக்க ணைமூன்றுந் தடங்கரத்திற் படையீரைந்துப்
நவசிந்து வாயமதி புயமுறைந்திடுசடில நயுங்கிரீடம்
பவசிந்தை யறும்பமையின் பாங்குமுநு தேசருளம் பதித்தாரன்றே.

(இ-ள்.) அந்த சிவலிங்கத்தில் படிகநிறமாக ஐந்து திருமுகமும், பத்துத்தோள்களும், தவசிந்தை கொடுக்கும் பதினைந்து திருக்கண்களும், கையிற் பற்றிய தசாயுதமும், புதுமையான கங்கையும், இளம்பிறையும், நாகமும்பிரியாமல் வசிக்கப்பட்ட சடைமுடியோங்கிய கிரீடங்களும், பவசிந்தாகுலந் தீர்க்கப்பட்ட உமையொருபாகமு மாகத் தமதுள்ளத்தில் நினைத்து ரூபத்தியானஞ் செய்தார் முருகேசர்.

அமரேச ரடிபரவ வசுரேசரிடர்தொலைய வகிலம்வாழ்கக்
குமரேசரென் றுசிவ லிங்கத்துக்கொருதிருநா மந்தான்கூறி
நமரேசரெனப்பணிய நகரேசர்நயந்ததிருச் செங்கோடாங்கண்
சமரேசனெனவெதிர்த்த தாருகனைக்கொன்றனவை தணிந்தார்வேலர்.

(இ-ள்.) அமரேசரான இந்திரரும், தேவர்களும்அடிவணங்க, அசுரேசரானசூரர் குலங்களெல்லாம் அற்றுநசித்துப்போக.அகிலாண்டங்களெல்லாம் வாழ்வுண்

டாக அப்போதந்த சிவலிங்கத்துக்குக் குமரேசரென்று ஒரு திருப்பெயரிட்டு நம்முடைய சுவாமியென்றும், நாகதிபதிகளான சகலரும் பத்தியுடனே வந்து சேவிக்கும் திருச்செங்கோட்டுத் தலத்தில் யுத்தத்திலே நாசகாலனென்று வர்லத்திற்த தாருகாசூரனைக்கொன்ற பிரமகத்திதீர்ந்து பிரகாசமாகவிளங்கினார் குமரர்.—எ-று

தாருகன்றன் பிரமகத்தி தனியகன்றுபின்னரவன் சண்முகேசர்
காரகன்று பிரியாத கனகதிருச் செங்கோட்டிற் கடிந்தசூரன்
பேரகன்றதவன் போலப் பின்பிடிய வன்மமுகற் பின்னுங்கம்பேர்ச்
சீருகந்த முருகேசரெனுஞ்சிவலிங் கப்பூசை செய்தன் மேய்ந்தார்.

(இ-ள்.) தாருகாசூரனைக் கொன்றதினால் வந்தபிரமகத்தி தம்மைவிட்டு நீங்கினபின்பு அங்ஙனம் சண்முகக்கடவுள் மேகம்பிரியாமல் மொய்த்தகனகமயமான திருச்செங்கோட்டுத் தலத்தில் தம்முடைய கைவேலால் சங்கரித்த சூரபன்மனிறந்து அவன்பேர் போயும் அவனைப்போலச் சாயாசொரூபமாகத் தொடர்ந்துவந்த பிரமகத்தி நீரும்படியாகத் தம்முடைய போரிலே அழகிய முருகேசனென்னும் ஒருசிவலிங்கத்தைப் பூசித்தர்ச்சனை செய்யத் தொடங்கினார்.—எ-று. (கஉ)

தேவருலகத்துமிகச் சிறந்தகற்பதாருவெலாந் திதியின்சூரன்
பாவமனைபிடத்துவைத்தா னவற்றையெல்லாம் பணிடலையிற் பதித்தாரந்த
காவிலொருகற்பக்கா கதித்தனவத்தருவினிழற் கண்ணதாகத்
தாவிலருள்முருகேசர் தனைத்தாபித்தற்சிக்குந் தன்மைகூர்ந்தார்.

(இ-ள்.) தேவலோகத்தில் மிகுந்த சிறப்புடைய கற்பகத்தருவை யெல்லாந் திதி புத்திரனான சூரன் தன்னுடைய பாவஞ்சூழ்ந்த மாளிகையினிடத்தில் வைத்திருந்தான் அதுகளையெல்லாங் கந்தசுவாமியானவர் கொண்டுவந்து திருநாகிரியிடத்திற் பதித்துவைத்தார் அந்தப் புட்பகாவனத்தில் சிரேஷ்டமாகயிருந்தகற்பகவிருட்சத்தின் நிழலினிடத்திற் சற்றுங்குறைவில்லாத கிருபாமூர்த்தியான முருகேசுரனைப் பூசித்தர்சிக்குந் தன்மையாக அன்புகூர்ந்தார் முருகக்கடவுள்.—எ-று. (கங)

வந்தியபாடாணபாலைப் பாண்டீசர்வளமேற்பால் வந்ததீர்த்தந்
தந்தகுமரச்சுனையிற் சண்முகர்சென்றுடிமுனி வரர்தற்சூழ
முந்துநியதிகள்முடித்து முருகேசர்தமைத்தொழுது முக்கண்ணனைச்
சந்ததமும்பவை பங்கரஞ்சதாசிவமீதென விலிங்கந் தன்னுட்கண்டார்

(இ-ள்) பாண்டீசுரசாமி யெழுந்தருளியிருக்கின்ற வந்தியபாடாண மலைக்கு மேற்புறத்தில் தம்மால் ஏற்படுத்திவைத்த திவ்யகுமார தீர்த்தத்தில் முழுகி நேமத்துடனே முனீசுரர்கள் தம்மைச் சூழ்ந்துவர முதன்மையான நித்திய கன்ம நியதிகளெல்லாமுடித்து முருகேசுரரை யாகப்பிரகாரம் பூசைசெய்து அர்ச்சித்துக் கைதொழுது சதாகாலமும் திருநேத்திரனை உமையொருபாகமாக வெழுந்தருளிய சதாசிவமிதுவென்று அந்தச்சிவலிங்கத்துள் சிவசொரூப தெரிசனங்கண்டார்

கண்டுருமேசர்தமைக் கைதொழுதபடிமுருகேசரையும்போற்றி
மண்டலஞ்சூழ்பணிடலையில் வருநாக தீர்த்தத்தின் மகிழ்விற்றோய்ந்து
விண்டலஞ்சூழிமையாவிரவரும் இய நமுனி வர்களும்விழையக்கூடிப்
புண்டரிகன் முதல்விரும்பச் சத்திரபோசனந்கொடுத்தல் புரிந்தார்கந்தர்.

(இ-ள்.) அப்படி தெரிசனங்கண்டு பக்தியுடனே முன்குமரேசரைப் பூசித்தபடியே முருகேசுரரையும் பூசித்து பூமண்டலங்களெல்லாம் வணங்காநின்ற திரு



நாகிரியிலிருக்கும் நாகதீர்த்தத்தில் மிகுந்த மகிழ்வுடனே மூழ்கி விண்ணுலகஞ் சந்தோஷத்துடனே வந்துசேர்ந்து பிரமாமுதலான பிராமணசனங்களனைவரும் விரும்பிப் புசிக்கும்படியாகச் சத்திரங்கட்டிப் போசனங் கொடுத்துப் பிரியங்கூர்ந்தார்.—எ-று. (கரு)

இப்படியிப்படி நித்தியவ யுகத்தனந்தநாள்முருகேசனையுமேத்தி
யைப்படிவநாகேசர் பாதபங்கத்தையாதரித்து மங்கைபாகன்
பைப்படியும் சடைமுடியான் பங்கயப்பாதந்தொழுது வருணவேத
மொப்பறுமந்திரமேர்த்தி யுரகவரைமீதுதவ முஞ்சவாநின்றார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் தேவயுகத்தி லளவில்லாதநாள் பூசைசெய்து வணங்கி வாழ்த்தி நாகேசர் பாதாரவிந்தங்களைப் பணிந்தேத்தி சர்ப்பாபரணங்களைத் தரித்தசடையையுடைய அர்த்தநாரீசுர சுவாமி பாதமலர்களைத் தொழுது வணங்கி வருணவேதமாகி யொப்பற்ற மந்திரங்களையுச்சரித்துக்கொண்டு நாககிரியின்மீது தவஞ்செய்கின்றார் கந்தசுவாமி.—எ-று. (கசு)

உத்தியனருளதனி லுடற்றியதாருகன்சூர னுடைசேய்மீதில்
விந்தமுறப்பற்றியவினைகள் விட்டனந்தகாந்தியுடன் விளங்காநின்றார்
திதமிகுசெங் கோட்டிலந்த நாகதீர்த் தஞ்சத்ர தீர்த்தமென்று
மிதவியநாமப்படைத்து இமையவருந்தமதுவினை யாவுந்தீர்ந்தார்.

(இ-ள்.) அப்படித் தவஞ்செய்கின்ற காலத்தில் தம்முடைய கைவேலினாலே சங்கரிக்கப்பட்ட தாருகாசூரன் உமையின் புதல்வனான முருகேசர் மேரில் வர்ண விசேஷமாகப் பற்றிப்பிடித்த பிரமகத்தி தோஷ வினைகளெல்லாந் தீர்ந்து விசேஷமாகப் பற்றிப்பிடித்த பிரமகத்தி தோஷ...

(இ-ள்.) இப்படித் தங்கள் வினைகளெல்லாந் தீர்ந்தபின்பு கற்பகச்சோலை சூழ்ந்த திருச்செங்கோட்டர்த்தநாரீசுரரைக் கண்டுவணங்கிச் சொல்லுகிறார்கள். சுவாமி எங்களுக் குயிருக்குயிராகிய முருகக்கடவுளை மெய்களுடனே அனுப்ப வேண்டுமென்று பிரமதேவனும் முனீசுரர்களும் நிறைந்ததேவர்களும் தேவேந்திரனும்வந்து தேவரீருடைய குமாரருக்குஅடியேன்களால் செய்யப்பட்ட கைம்மாறொன்றுண்டென்று அறிவிக்கின்றனர்.—எ-று. (கஅ)

தெய்வமகபதியுதவு தெய்வசேனையைமுருகர் திருக்கல்யாண
முய்வரச்செய்தமருலகத் துலாவாவீரேழுலகு மூவந்துபோற்ற
விவ்வளங்கண்டடியேங்க ளிருவிழியுங்களிகூர்தற் கேதுவாக [ரால்.
செவ்விதருள்புரிகெனச்செங் கோட்டிலரன் றிருப்பதத்தோத்திரஞ்செய்தா

(இ-ள்.) தேவேந்திரன் மகளான தெய்வசேனையை முருகக்கடவுளுக்கு [illegible]ளும்படி திருமணஞ்செய்து தெய்வலோகத்தில் உலாவி வரும்படியான

அழகைக் கண்டு சகலேலோகமும் போற்றிப்புகழ எங்கள் கண்குளிரக்கண்டு சேவித்து சந்தோஷிக்கத் தக்கதாக உமையொருபாகரை நன்மையாகக் கிருபை செய்தருளுமென்று திருச்செங்கோட்டில் சுவாமி திருப்பாதங்களைத் தெரிசித்து வணங்கிப் போற்றிசெய்தார்கள்.—எ-று. (௧௧)

அழைவாகணைபடி யபோற்றிச் சேய்க்கினியதிருமணம்யாஞ் செயதுமென்னு
மேவவணவெ வாழிதிருவுளத் தன்னைக்துமையபாக நூறுமுகத்தானறனைப்
போவதுநன் மையென வருள் புக்கேகளிநடன்போற்றிப் புயலின்வெய்யோனை
மேவிய தபோல்மயில்வா கனமேற்கொண்டேங்கள் கந்தர் விரைகின்றரால்.

(இ-ள்.) தேவர்களெல்லாம் சுவாமி பாதத்தைப் போற்றிசெய்து கந்தசுவாமிக்குத் திருக்கல்யாணஞ் செய்தேவோம் நாங்களென்று மனமகிழ்ச்சியுடனே சொன்னபிரிய வசனங்களைக்கேட்டு சுவாமிதிருவுள்ளத்தி லன்புவைத்து சுவாமி ஆறுமுகக் குமாரரைப்பார்த்து நீயிப்போது தெய்வலோகத்துக்குப் போவது நன்மையான காரியமென்று விடைகொடுத்தருள அப்படியே அவர்கள் கூட்டத்துடனே போற்றிசெய்து கார்மேகத்திற் சூரியன் சேர்ந்ததுபோல மயில்வாகனத்தின்மேலெழுந்தருளிச் சென்றார், கந்தசுவாமி.—எ-று. (௨௰)

முருகர் சிவார்ச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௫௭௫

# குமரர் திருமணச் சருக்கம்.

தோகைமாமயில் மீதுமேலவர் சுந்தரந்தர விந்திர
நாமதேவ புரத்திற்செ நலத்தையாதென நவிலுவா
மீகமேரு வெடுத்தமுபபுவ வங்களெங்குமோ கின்பமா
யாகமெய்த்துய ரற்றுவாழ்ந்தன ரண்டரண்டம் விளங்கியே.

(இ-ள்.) தோகைமயில் வாகனத்தின்மேலேறி வேலவர் அழகுபெறத்தக்கதாக இந்திரநகரத்திற்குச் செல்லாநின்ற விசேஷத்தை யென்னென்றுசொல்லுவோம்! மகாமேருவைச் சூழ்ந்த திரிபுவனங்களெங்கும் போகவின்பமாகத் தேகசவுக்கியமாகத் துயரங்களெல்லாந் தீர்ந்து வாழ்ந்தார்கள், அண்டபிரண்டங்களெல்லாம்விளங்கியிருக்கும்படியாக.—எ-று. (௧)

சண்முகனவரு போதுவானவர் தானவர்க்கிறை தாருகன்
விண்முனைந்து பிடித்தவன்சிறை மேயதெய்வவரம்பையர்
கண்முகங்கதிர் கண்டபோன்மலர் காணநண்பரோ டெதிர்கொளா
எண்முனைச்செய்தில் வாழ்வுதந்தகீ ரின்னவின்புசீ ரெய்துவீர்.

(இ-ள்.) ஆறுமுகக்கடவுள் வருகிறபோது தேவர்களை அசுரேந்திரனுன தாருகாசூரன் தேவலோகத்திற் போர்செய்துபிடித்துக்கொண்டுபோய்அவன்வைத்த சிறையில் சிக்கியிருந்த தெய்வரம்பைகள் சூரிய உதயங்கண்டலர்ந்த கமலம் போலும் முகமலர்ச்சியாய்த்தேவர்களான தங்கள் தங்கள் கணவருடனேயெதிர்கொண்டுகண்குளிரக்கண்டுசேவித்து என்னுதற்குரிய விஜயஞ்செய்தித வாழ்வுதந்தீரின்னம் அனேகவின்பங்களை அனுபவிப்பீரென்று பிரியவசனங்கள் கூறினார்கள்.—எ-று. (௨)



என்றுதேவரோ டனைமங்கைய ரிந்திராதியர் சந்திரர்
துன்றுசூரியர் வருணாமாருதர் சொன்னமன்னிய வுத்தரர்
நன்றுதாருக னுக்கிடைந்தவனூழியத்தி லழுந்தினோம்
வென்றிவேலவ வாழிவாழிநின் வேல்விளங்க விளங்கினோம்.

(ஆ-ள்.) என்றிப்படிச்சொல்லி தேவர்களுடனே மற்றுள்ள தெய்வப்பெண்களும் இந்திராதியர், சந்திரசூரியர், வருணர், வாய்வுகள் சொர்னமுடைய குபேரர்களும் வாரீர்சுவாமி, அன்றுதாருகாசூரனுக்குப் பயந்து அசுரருடைய ஊழியத்திலழுந்தினோம் வெற்றிவேலாயுதக்கடவுளே வாழி வாழி உம்முடைய (௩)
வேல்விளங்கவிப்போது நாங்களும் விளங்கினோம்.—எ-று.

எனவியம்பினர் புட்பமாரி பிறைத்திறைஞ்சினர் வானுளோர்
கனிவிளிந்திரன் வந்துநல்லரி யாதனத்திலிருத்தினன்
கனக போதடிகை புனைந்து கனிந்தரம்பையர் கானமோ
டினியநாடகமாட வேலவரின்ப முற்றுவிளங்கினர்.

(இ-ள்) என்றிப்படி பிரியவசனங்கள்கூறி புட்பமாரி பொழிந்திறைஞ்சினர்
கள். தேவலோகத்திலுள்ளவர்கள் அப்போது அழகிய தேவேந்திரன்வந்து கந்தசுவாமியை மேன்மையான வொரு ரத்தின மயமான சிங்காதனத்தி லிருத்தினர். சொர்ண புட்பங்களிட்டு பாதபூசை செய்து அலங்காரத்துடனே மனங்கனிந்து
தெய்வரம்பாஸ்திரிகள்நடனசங்கீதங்களைப்பாட யின்பமுற்று விளங்கினர்வேலவர்.

சத்தமாமுனிவரரும்விஞ்சை கொள்நந்திபுங்கசதுர் வேதனு
மைத்துனச்சதுர்முகனும் வாழியமா முகூர்த்தம் விதித்தனர்
சித்திரச்சசிவத்திரத்தொளிர் தெய்வசேனையை மெய்விளங்
குத்தமக்கதிர் வேலவற்குபர்வதுவை செய்தனனும்பர்கோன்.

(இ-ள்.) அப்போது சத்தமகாமுனிவர்களும் விஞ்ஞையுடைய நந்திகேசுரரும்
நன்மைபொருந்திய சதுர்வேதங்களுடைய மைத்துனனான சதுர்முகப்பிரமாவும் பூரணச்சந்திரன் போலும் பிரகாசிக்கின்ற முகமுடைய தெய்வ சேனையை யலங்கரித்து நல்லவேளையில் ஒளியுடைய கலியாண முகூர்த்தம் விதித்தார்கள். அழகிய (௪)
கதிர்வேலவற்கு திருமணஞ் செய்துவைத்தான் தேவேந்திரன்.—எ-று.

வதுவைசெய்தபிரா வதப்பிடர்வைத்து வச்சிரன்முதலியோர்
துதிசெயத்துந்துமி முழவெழத் தெய்வதுந்துமி முழவெழத்
திதரம்பையர் நாடகத்தொடு கின்னரர்தொனிசுருதியின் சுருதிகளொழ
துதிகொள் தந்திரர் கின்னரர்தொனிசுரு திபின் சுருதிகளொழ
வுதவுமைந்தரு நீழலிற்றெய்வ வுலகெலாம்வலம்வந்தனர்.

(இ-ள்.) அப்படித் திருக்கலியாணஞ்செய்து வெள்ளையானையின்மீதேற்றி தெய்வ
வைத்து இந்திரன் முதலான தேவர்கள் அனைவருஞ்சூழ்ந்து சேவித்துவாத் தெய்வ
ரம்பையர் நடனஞ்செய்ய துந்துமிவாத்தியங்கள் முழங்கத் துதிசெய்து தந்திரர் கந்தருவர்களும் கின்னரர்களும் செய்யும்வீணை கானமும் வேதச்சுருதிகளோசை முழங்க ஈகையையுடைய பஞ்சகற்பகச் சோலை நிழலில் தெய்வலோகமெல்லாம் வலமாக வந்தார் கந்தசுவாமி.—எ-று. (௫)

வந்திருந்தரியாசனத்தில் வயங்குமுப்பது மூன்றெனு
முந்தவானவர் நாலுபத்தொடெண்ணுபிரத்தவ விருடிகள்

சந்தகம்புடை சூழவாசிகடத்தபன்பொடு சாற்றுமா
லிந்திரன்பிரமன்குகற்கிவ ரிட்டமா முடிசூட்டினூர்.

(இ-ள்.) அப்படித்தேவ லோகநகரில்வலமாகவந்து அழகியசிங்காதனத்திலெ ழுந்தருளியிருந்து முப்பத்துமுக்கோடி தேவர்களும்நாற்பத்தெண்ணாயிரம்முனிவர் களும் புடைசூழ்ந்துசேவித்து மனமகிழ்ச்சியுடனே ஆசீர்வாதஞ்செய்துவிளங்கவிந் திரனும் பிரமதேவனும் கந்தசுவாமிக்கு இரத்தினமயமானமுடிசூட்டினூர்கள்.எ-று

என்றுமெங்கள் சேனாபதிப்பெயர்பெய்திநந் தெய்வசேனையும்
வன்றிறற்குமரேசநீருநம்வாழ்வு தந்தருள்வாழ்கென
வொன்றுபோலவெல்லோரு மோதினரும்பரிம்பரிறைஞ்சினு
ரன்றவற்கபயவர் தங்களோடருள் கொடுத்தனராறுமுகர்.

(இ-ள்.) இன்றுமுதலென்றைக்கும் எங்கள்தேவ சேனாபதி யென்னும் பேர் பெற்றுவிளங்கி நம்முடைய தெய்வசேனையையும் வலிமைத்திறமுடையகுமரேசர் நீரும் நமது வாழ்வுதந்தருளினீர். நன்றாகவாழ்க வாழ்கவென்று அனைவரும் ஒரு வர் போலெல்லாரும் ஆசீர்வதித்தார்கள். உம்பரான மேலுலகத்தவரும் இம்ப ரான பூலோகத்தாரும் வணங்கிவாழ்த்தினூர்கள். அப்போது நன்மையாகக் காட்சி கொடுத்து அபையவரங்களுடனே கிருபைசெய்தருளினூர் ஆறுமுகக்கடவுள்.

அயில்விழிக் கமலமுகமுமைக்குழ லணிமணிக்குழையமுதவாய்க்
குயின்மொழிப்பிறைநுதல் வளைக்கரகொடி யிடைக்குலமலைமுலை
மயிலியற்கழை விளைபுயத்துணைவனை மணிக்களமனநடை
செயலெழிற் பெறுதெய்வமாமயில் தெய்வசேனையோ டெய்தினூர்.

(இ-ள்.) வேல்போன்ற கண்களும், தாமரைப்பூப் போன்ற முகமும், மேகம் போன்ற கூந்தலும், அழகிய தாடங்கமணிந்த குழைகளும், அமுர்தவாயுங் குயில் போன்ற மொழியும், பிறைபோன்ற நெற்றியும், வளைக்கைகளுங் கொடிபோன்ற இடையும், மலைபோன்ற முலைகளு, மயில்போலுஞ் சாயலும், பச்சை மூங்கிற் போன்ற தோள்களும், அலங்கிருதமானதிருமங்கலியாபரண மணிந்தகழுத்தும், அன்னம்போல நடையுமாக அழகையுடைய தெய்வசேனைப் பெண்ணுடனே சேர்ந்துமகிழ்ந்தெய்தினூர் முருகவேள்.—எ-று. (௰)

தேவர்சூழவாரமலைச்சிவ தேசிகன்றிரிபுரைபுராங்
காவல்பெற்றருணகி யீசுரர்கமலபாதம்வணங்கிநின்
றேவிழிக்குயி றெய்வசேனையை யிருவர்தாளு மிறைஞ்சுவித்
தாவலி[illegible]வங்கு தந்தையை யன்னையைத்துதி பறைகுவார்.

(இ-ள்.) தேவர்கள்சூழ்ந்து சேவித்துவர ஸ்ரீ நாககிரியில் வந்தெய்தி சிவதே சிகரான திரிபுரசுந்தரி யிடப்பாகம் பொருந்திவிளங்க அழகும்பெற்றுடைய நகேசுரர் பாதகமலங்களை வணங்கிநின்று அயில்விழிக்குயில்மொழியாளாகிய தெய்வசேனை யும் சுவாமி அம்மன் இருவர்பாதங்களிலும் வணங்கி அன்புடனே பிரதட்சணம் வந்து தந்தையுந்தாயையும் வணங்கித்தோத்திரஞ் செய்கின்றூர்குமாசுவாமி-எ-று

அடியன்யானறியாது செய்பிழையை யநீபொறுத்துய்யவென்
கொடியவல்வினை மாற்றியாண்டிருகொங்கைதந்தெனை தன்னைபாற்



படியளந்தருள் படியினுலடர் பாரதாருகன் விதமெலாம்
பொடிபடுத்திய வலியெனக்கருள் புதியவேல் செய்தபுதுமையே.

(இ-ள்) அடியேன் என்னை யறியாதுசெய்த பிழைகளையெல்லாம் சுவாமிநீர் பொறுத்தருளி வாழியென்று கொடிதாகிய வல்வினைகளெல்லாம் தீர்த்தென்னை யாண்டு உபயமுலை யமுர்தந்தருளிய வென் தாயிடமாகிய படியளந்தருளியபடி யினுமேல் என்னை யடர்ந்தெதிர்த்து யுத்தஞ்செய்த வலிய தாருகாசூரன் போர்த் தொழிலெல்லாம் நிர்த்தூளியாய்ப் போகும்படி யெனக்கு வலிமையும் வெற்றியும் கொடுத்துப் புதுமையையுடைய சத்திவேல்செய்த மகிமையென்று சொல்லித் துதித்தார் கந்தசுவாமி —எ-று (கக)

எனவணங்கிய சேயையிருவரு மிருகையார வெடுத்தணைத்
துனதுகல்வியு முனதுசீருநம் முயர்வுபோலுயர்ந்தோங்கவென்
றனநடைத் தெய்வசேனையைத் தமதருகணைத்தெமதருமுகற்
கினியவின்பமுமன்பு மெய்துக வென்றுநன்பிலியம்பினூர்.

(இ-ள்.) என்றிப்படிச் சொல்லிவணங்கிய குமாசுவாமியை சாமி அம்மனிரு வருந் தங்கள் கைகளா லெடுத்தணைத்து உனதுடையகல்வியும் அழகியசிறப்பும் நம்முடைய மேன்மைபோலு யர்ந்தோங்கவென்று திருவாய் மலர்ந்தருளி, அன்ன நடையையுடையதெய்வசேனையைத்தங்கள்பக்கத்திலழைத்து நம்முடைய திருக்குமாருக் கினிதாகிய இன்பமும் அன்பும் உனக்குண்டாகவென்று அன் புடனேதிருவாய் மலர்ந்தருளினூர்—எ-று. (கஉ)

எய்துமிந்தவரங்கொடுத்தபினிந்திராதிபர் முதலுளோர்
செய்தவங்களோடரனை யர்ச்சனை செய்துபோற்றி யிருந்தனர்
மெய்தரும்பலயுக மனைத்தினும வேடபேத மெடுப்பதோர்
கொய்தழைத்தருவுண்டன்னேரமோர் கோலமாமரமானதால்.

(இ-ள்.) சாமி யம்மனிருவரு மிந்த வரங்கொடுத் தருளினபின இந்திரன் முதலானதேவர்கள் முனிவர்களனைவருஞ் சுவாமியை வணங்கிப்போய்வா எதா ஸ்தானங்களிற்சென்று செய்யுந் தவங்களுடனே சிவனையற்சித்துப் போற்றிசெய் திருந்தார்கள். நிச்சயமாக பலயுகங்களனைத்திலும் வேடபேத மெடுப்பதாய் நன் ருய்ச் செழித்துத் தழைத்து விளங்கிய தொருகற்பகத்தருவுண்டு அதுவன்னேரம் அழகுபெற வொரு மாமரம் ஆனதென்றவாறு.—எ-று. (கங)

அந்தமாமரமண்டரண்டமு கட்டினிற்றளை வானதாய்
வந்தவோது பாதலக்கமடத்தினுக்கு மோர்வலியதாய்
மூந்துகோடுதிகந்த மாயடிமுண்டகன்னடுவிண்டுமாய்
நந்திமேலது நம்பனுகநின்றதாகம நாளுமே

(இ-ள்.) அந்தம்மாமரமானது அண்டாண்ட முகடுமுட்டவளர்ந்தழைத்திருப் பதாயதன வேரானது பாதாளத்திலிருக்கிற ஆதிக்கமடத்திற்கு மொருவலி [illegible]டையதாய்தன் பணைகள் கோம்புகள் திசாந்த முட்டிநீட்டித்திருப்பதா [illegible]ம் பிரமாவாய் நடுமரம் விஷ்ணுவாய் மேல்மரம் நுனிவரைக்குஞ் சிவனுக [illegible] திருமூர்த்தி சொரூபமாக விளங்கியதென்று மென்றுநாளுஞ்சொல்லும் ஆகமங்கள்.—எ-று. (கச)

நாளு நாளுநறும் பெருங்கனி நம்பராலய மேற்புறந்
தாளில்வீழ்வ தோரந்த மென்கனி சங்கரற்கமு தளியெயோன்
றும் ணங்கெனு மன்னைபாலறு முகாளிப்பாளிப்பவே
தாளில் தியர் நீயிவற்றொரு கனியருந்தெனவருளினார்.

(இ-ள்.) தினந்தினம் நல்ல மிருதுவான பெரிய கனிகள் சுவாமிசன்னதிக்கு மேற்குப் புறத்திலிருக்கும் அந்த மரத்தடியில் கனிந்துவிழும். அப்படி விழப்பட்ட கனிகள் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் அமுதுசெய்யும்படிஆறுமுகக்கடவுள் அந்தக் கனிகளையெடுத்துசுவாமிக்கும் அம்மனுக்கும் நிவேத்தியம்செய்யாநின்றார். அதை கண்டபோது சுவாமியானவர் நீ இந்தக்கனிகளிலே ஒருகனியமுது செய்வாயென் றகிருபை கூர்ந்து சொல்லியருளினார்.—எ-று. (கரு)

அரனளித்தவருட் பெருக்கினை யாதெனச்சொலவைங்கரன்
பரிவந்தமுன் னுதவு மாங்கனிபாலர்பெற்றில ரென்றுதந்
திருமனைக்கு ளொன்றுளும் வேலவர் திருவுளத் தொடருந்தவாம்.
பிரமனித்தனரசுண்டலம்பல பிரமனாலு மதிப்புறா

(இ-ள்.) அப்படி யருளிச்செய்த பரமேசுரருடைய கிருபையை யென்ன வென்றுசொல்லப்போகிறோம். முன்ஒருநாள்வேளையில் ஐங்கரனாகிய விநாயகமூர்த்திதம்மை வலமாகவந்து மாங்கனியை வாங்கிப் புசித்தாரப்போது குமாரர் கனிபெறவில்லையென்று அது நிமித்தமாகத் தம்முடைய திருவாலயத்திற்குள் மாமரமுண்டாக்கி யதன் கனிகளை வேலவர் திருவுளப்படி யமுதுசெய்வதாய் அனுக்கிரகஞ்செய்தருளினா ரதன்பெருமையைபிரமதேவனாலும்மதிக்கக்கூடாது.

அந்தமாங்கனியறுமுகத்தாருந்து வாரிமையவர் பெறச்
சிந்துசிந்தமுதத்தகினு லவர்திருவடிக்கு முடிக்குமாம்
முந்த வெய்தபிடேக முற்றி நம்முருகாக் கனிமுக்கணு
ரெந்தைகொள் கெனவேத்தியுந்தம தென்றுமொன்று மருந்துவார்

(இ-ள்.) இப்படி வதிசயமான மாமரத்தின் கனிகளை யாறுமுகக்கடவுள் புசிக்குமவ்வாறுதேவர்கள் பெறும்படியாக தேன்பொழிந்து சிந்தப்பட்டவமுதாச முடையதாய் நல்லகனிகளைச்சுவாமிதிருவடிகளுக்கு முடிக்குங்குளிர்ச்சிபொருந்தமுந்திச் சிலகனிகளை அபிஷேகஞ் செய்து சிலகனிகளை நிவேத்தியமாகவைத்து திரிநேத்திரமுடைய தந்தையே என்கர்த்தனே அமுதுசெய்யுமென்று அன்புடனே உபசாரமாகநிவேதித் தென்றைக்கும் அருந்துவார்வெற்றியுடைய குமாரசுவாமி—எ-று. (கஎ)

அருள்புரிந்துளபடி யெவர்க்கு மவ்வறுமுகர்க்கு மளிக்குமா
றருள்புரிந்த நல்லர்ச்சனைத் தொழில்செய்து நித்தமருந்தலால்
மருளகன்றிடு மமுதவைப்பினில் வைப்பதாக வழங்குநம்
பருள்விளைந்தருளமுதமாகிரு பாற்பணைத்தெழு பாதபம்

(இ-ள்.) சிவனுடைய கிருபையினாலே அர்த்தநாரீசுரருக்கும் ஆறுமுகக்கடவுளுக்கும் நாள்தவறாமல் அமுதக்கனி கொடுத்துவரு மந்தக்கனிகளை ஞானவறிவுடனே சிவனை யர்ச்சனைசெய்து நிவேதித்து நித்தம் புசித்துவருவார். குமாரர் மருட்சியில்லாத அமுர்தவைப்பில்வைத்து விளங்குவதாகப்பரமசிவன் கருணைகடாட்சத்தினாலே அந்தவமுதமாமரம் இருபாரிசமும் பணைத்தெழுந்து ஓங்கிவளர்ந்து விளங்கியிருக்கு தென்றவாறு.—எ-று. (கஅ)



அந்தவண்கனி யானுமம்மையு மறுமுகத்தனு மன்றிவே
றெந்தவானவர் எந்தமாதவ ரேனு முனைகவிலைசந்திடார்
சிந்தையாலது தொருவர்துய்ப்பது செய்யிலங்கவர் செய்பநா
நந்தவெங்கனலைச் சொரிந்திடுநரகம்வீட்டிடு நடமனரோ.

(இ-ள்.) அப்படி வண்மையையுடைய மரத்தின் கனிகளானது சுவாமியும்அம்மனும் ஆறுமுகக்குமாரரும் அமுதுசெய்வதல்லாமல் பரரபடி எந்தத்தேவர்களாலும், எந்தமாதவர்களாலும், விரும்பிப் புசிக்க நினைத்துப் புசித்தால் அவர்களுடைய நா வெந்துபோகும்படி வெவ்விய நெருப்புகளை வாரிச்சொரிந்து நரகக்குழியில்தள்ளி உபத்திரஞ்செயவார்கள்.—எ-று. (௧௯)

சங்கவெண் குழைமங்கைபங்கர் சடாடவிப்பிறையமுதினால்
லங்கமெங்குமடித்தலத்து மிறைத்தனீரென வூறியோர்
பங்குமென்றழைபங்குபைந்துணர் பங்குபிஞ் சொருபங்கெலாந்
தங்குசெங்கனி தருமிமண்ணவர் தங்கள்கண்ணுற லரியவாம்.

(இ-ள்.) சங்கக்குழையைத் தரித்தருளிய அர்த்தநாரீசுரர் சடாமகுடத்தில் பிரகாசித்திருக்கின்ற சந்திரப்பிறை யமுர்தத்தினாலே அந்த மாமரத்தினுடைய தேகமெல்லாம் அஷ்ட தலத்திலும் நிறைந்து நிரப்பினதுபோலும் அமுர்தமூறி யொருபங்கு பசுமையுடைய பூங்கொத்துகளும், ஒருபங்கு மெல்லியதழைகளும், ஒருபங்கு பிஞ்சுகளும், ஒருபங்கு சிவந்தகனிகளாக விளங்கியிருக்கும். அப்படித் தெய்வீகமான மாமர மிந்தமண்ணுலகத்து நாமனிதர்கள் கண்களுக்குத் தெரியவாராது மகாஅருமை —எ-று. (உ௰)

பாவைபங்கனு மாவுமொன்றன பான்மையா லொருகாலமும்
பூவுடன்பிஞ்சுபொன் றிடாயுக புங்கவற்கு மோருதவியாய்
தேவர்வேதியர் முனிவர்மறையவர் திரளொருக்குற முரணற
வாவலிற்றவமரிதுபண்ணுதல் வதியினன்றன வாதமே.

(இ-ள்.) அர்த்தநாரீசுரரும் அந்த மரமும் ஒரு தன்மையைப்பெற்று எக்காலங்களிலும் புட்பங்கள், காய்கள், கனிகள், மாறுமலழிவற்றிருக்கும் யுகபேதங்களிலும் தேவர்களுக்கொரு உதவியாகும் மற்றும்தேவர்கள், வேதியர், முனிவர்கள் சித்தர்கள் முதலாகிய கூட்டங்கள் மிகுந்து ஆசையுடனே அரியதவஞ் செய்வார்கள். அதன்மகிமை யளவில்லை.—எ-று. (உக)

இவர்துவந்தின முயலநந்தின னிறையவன் பணிமலையான்
சிவதுரந்தர னருநெடுங்கடல் திரிபுரம்படமுனிபவர்
புவனைசங்கரிதிரிபுரந் தரிபுனிதை யந்தரிபுருடனார்
தவனிரும்பத முருகர்வந்தனை தனில்வணங்குவர் தினமுமே.

(இ-ள்.) இப்படி இவர்கள் எத்தேசகாலமும் தவங்களைச் செய்யாநின்றார்கள். வர்ச்சிலையுடைய விறைவன் நாசகிரியுடையவன் சிவதுரந்தரக்கன் நெடிய திருபாசமுத்திரம் திரிபுரமெரியும்படி கோபித்துவா வாலைபுவனை திரிபுரசவுந்தரி சங்கரி புனிதமான அந்தரிமணவாளனாகிய அர்த்தநாரீசுரருடை பாதயுகளங்களை ஆகமப்பிரகாரம் தினமும் பூசைசெய்தார் முருகவேள்.—எ-று. (உஉ)

கமலையாரணி பரைபராபரை கனகபூரணி காரணியா
ளமலையாகம வறிவினாரணி யமுதவாசகி யருளினாள்
விமலைகோமளை விரதியாமளை விபுதைமாதவி யிமையமா
னுமைதயாநிதி குமரியாய்பத முளம்விடார்பலை முருகரே.

(இ-ள்.) கமலைமாது, வேதாம்பிகை, சிற்பரை, பராபரி, சொர்ன்னபூரணி, லயச்செல்வி, மலவற்றவிமலை, ஆகமவறிவையுடைய நாராயணி, அமுர்த , கிருபாநிதி, நிர்மலாதேவி, கோமளவல்லி, விரதவிசேஷி, திவ்வியயாமளை

விபுகை, இமையமான், உமாதேவி, தபாபரி, கவுமாரியென்னும் பெயர்களையுடைய தமது தாயாகிய பார்வதியம்மன் பாதயுகங்களை யுள்ளத்தில் வைத்துவிடாமல் தியானஞ் செய்திருந்தார். மலைக்கதிபனை முருகர்.—எ-று. (௨௩)

குமாரர் திருமணச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩௬௦.

# கிருஷ்ணச் சருக்கம்.

தோளர்க்கிறை புதவுந்திகய்வ சேனைத்திரு மாதினைச்
சேவிறபிடர் வருவோர்கரு செவ்வேலர் மணந்தந்
காவற்றிற வல்லிகின் றபினை முதச்சொலி யிதழுன்
கோவைக்கனி வள்ளிக்கொடி கூடுந்திற நவில்வாம்.

(இ-ள்.) தேவேந்திரன் பெற்றவழகிய மயில்போலுஞ்சாயலையுடைய தெய்வசேனையை மடப்பக்ஷத்துடனானபரமேசுரன் புத்திரனாகிய வேலவர், திருமணஞ் செய்திருந்தார். பின்பு அமிர்தம்போலுஞ் சொல்லையுடைய கொவ்வைக்கனியையொத்த அதரமும் கொடிபோன்ற இடையையுடைய வள்ளியம்மன் மருவுஞ் செயலை விளங்கச் சொல்லுகிறோம். சௌநகர் முனிவர்களேயென்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (௧)

ஏகாதசிவிரதந்தனி வினிதாந்தவ நிபுணன்
மாகாவலர் வணங்குஞ்செய ருக்மாங்கதன் வாமன்
யோகாதிபர்க்கருள் கூ ருக்குமணியாகிய வொருபெண்
ணாகார்கரக் கரிபோனை நயந்தாதர மானாள்

(இ-ள்) முன் ஏகாதசி விரதத்திற்சிறந்த அன்புடைய தவநிபுணனானவன் மகா ராஜர்கள் வணங்கும் வெற்றியையுடைய ருக்குமாங்கத ராஜன் தவப்புத்திரியான மான்போலும் பார்வையுடையவளாய் யோகீசுரர்களுக்கு அன்புடையவளாகிய ருக்குமணி யென்னும் பெயரையுடைய பெண்ணானவள் சங்கமேந்திய அஸ்தத்தையுடையகரியோனாகிய கிருஷ்ணசுவாமியைமருவும்படி இச்சையுடனே ஆசைகொண்டாள்.

மறையோனுடனெனையின்று மணத்தற்குவாரனேல்
முறையோதிய பிறருக்கெமர் மொழியாமணமருள்வார்
குறையோதினை செறிபேழுதி கோலத்திருமாலின்
றிறையாவெனை யணையாவிடி லிறுவேனென வுரைத்தாள்.

(இ-ள்) ஒரு பிராமணனையழைத்து சொல்லுகிறாள். இன்றையதினத்தில் வந்து என்னை திருமணஞ் செய்துக்கொள்ளா விடில் எனது தாய் தந்தைகள் முறைமையாக வரசர்களை யழைத்துப்பொருத்தமுடைய வானுக்கென்னைத் திருமணஞ்செய்வார்கள். ஆகையால் நீர் துவாரகாபுரிக்குப்போ யெனது மனக்குறையைச் சொல்லி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை வந்துஎன்னைத் திருக்கலியாணஞ் செய்துக்கொண்டுபோகும்படி சேவித்துச் சொன்னாளென்று சொல்லவும். அப்படி அவர் வாராமற்போனால் இறந்துவிடுவேனென்று சொல்லவும்.—எ-று.

மறையோனங்க மயில்வாய்மொழி வசுதேவன்மகற்கே
பெறவோதினர்வ னேதவொடுபெருமாநகர் வந்தார்
திறமார்கவுரியை யேத்திபநோத்தினி விடைபோ
குறுதேர்மிசை வைத்தேகின ருற்றார்பிறகுற்றார்.



(இ-ள்) பிராமணனானவன் துவாரகாபுரியைச்சேர்ந்து வசுதேவன் மகனை ... கண்டு வணங்கி ருக்குமணிதேவி சொல் மொழியெல்லாம் வெளியப் படச்சொன்னான். அது கேட்டவுடனே தேரிலேறி அந்த ராஜன் நகரத்திற்கு அப்போது அழகிய கௌரியைத் தொழுது வணங்கி விரதஞ்செய்பவளான மத்தியிர்சென்று ருக்குமணிதேவியை தேரின்மேலேற்றிக்கொண்டு சுற்றத்தார் பின்றொடரச் சென்றார்.

முட்டாடல்விளைத்தார்கச ரதபாவின் மூனைந்தார்
கட்டாண்மையில் வந்தானவர் கண்ணாகிய தமையன்
பட்டாளிடவென்றேரத பங்காலினி லீனைக்கா
வெட்டாது மரித்தேகெபொரு வொட்டார் பிறகிட்டார்

(இ-ள்) அப்படிப் பின்றொடர்ந்து வந்து வளைத்துக்கொண்டு ரதகஜதுரக பதாதிகளுடனே முனைந்து போர்செய்தார்கள். அப்போது அட்டகாசஞ்செய்து, ஆண்மையுடனே வந்தெதிர்த்தான். ருக்குமணி கண்ணுக்குச் சமானமான தமயனை படியினால் அவனைக்கொன்றால் இடருண்டாமென்று தேர்க்காலில் கட்டி வைத்து ரதத்தைவிட்டுச்செலுத்துகிறபோது மறுத்தவரசர்களெல்லாம் பின்னிடும்படி போர்செய்தார். (௫)

அக்காலைபி லரசன்றனோடரு நாரதமுனிவன்
மெய்க்காதலி னுரைகூறு நல்விரதக்கி னுன்மகடான்
பொற்காரிகையெமையுமபல புவனங்களுமுனீன்று
ளிக்காரண முணராதென் கொலெம்மானொ டெதிர்த்தாய்.

(இ-ள்.) அவ்வேளையில் அந்த அரசனுடனே அரியதவமுடைய நாரதமுனிவன் மனதாசையுடனே சிலவார்த்தைகள் சொல்லுகிறான். ஓய் ராஜனே விரதசீலியாகியவுன்மகன் ருக்மணியென்பவள் லட்சுமிதேவியென்றுஞ்சொல்லப்படும். எம்மவர்களையும் புவனங்களையும் முன்னாளிலே பெற்றருளினவளாம். இதுகாரணம் அறியாதுயெம்முடைய ஸ்ரீகிருஷ்ணதேவருடனே ஏன்எதிர்த்தாய்-எ-று.

இம்மாதுலகத்தாயிவள் கரியோன்மணமின்றி
யம்மானிடர்க் கொண்டாலஃதந்தோபிழையலவோ
மைம்மால்வரைப் புயத்தாய் ருக்குமணியை மன்னவமாற்
கெம்பாதரவா லீவதுவைகள் செய்தருளென்றான்

(இ-ள்.) இந்த ருக்மணியென்னும் பெண்ணானவள் உலகமாதாவென்று சொல்லப்படும் இவளை கிருஷ்ணதேவர் திருமணஞ்செய்வதேயன்றி இந்தமானிடசென்மங்கள் மணஞ்செய்யக் கூடுமோ. அப்படிச்செய்வது மகாகுற்றமல்லவோ? சைலகிரி போலும் புயத்தையுடைய ருக்குமாங்கதராசனே யுன்மகளை மாலாகிய மாதவனுக்கு திருக்கலியாணஞ் செய்தருளுமென்றார்.—எ-ற. (௭)

என்றிபனுட னாதனியம்புங் கனிமொழிகேட்
டன்றுழியனுக்கன் னவரணிமன்றலமைத்தார்
மின்றுவிய துவாரபதி மேவிக்கரியோனும்
நன்றுயருக்குமணியைப்புணர் நன்னாளினிலொருநாள்.

(இ-ள்.) என்றிப்படி வாசனுடனே நாரத முனிவன் சொல்லக்கேட்டு மண...யாக அன்றையதினத்தில் நல்லமுகூர்த்தத்தில்கிருஷ்ணமூர்த்திக்குருக்கு...ஐ அழகுபெறத் திருக்கலியாணஞ் செய்தருளினார். ...ப்பேது துவாரகா...போய்ச்சேர்ந்து இருக்கும் நாளில் ஒருநாள்.—எ-று. (௮)

...கரியோன் மடங்கற்றிங்களினு லாய்பிறைகண்டே
தெரிபோர்பதி வும்பாதியர் செம்மற்குள சோனு

தரிசேபனவனி நந்தானது தடையிற் சிலசொல்வா
முரிபோய்ச்சவுனகரே யெனவுபர் சூதருரைப்பார்,

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணசாமியானவர் ஆவணிமாசத்தில் சுக்கிலபட்சத்துச் சதுர்த்தியில் நாலாம்பிறையைக்கண்டார். கண்டதினாலே இவருண்மைதெரியாமல் வம்பாகபழிவசனங்களைச் சொன்னார்கள். அதற்கு மனஞ்சகியாமல் இதற்கு என்ன செய்து தவிர்ப்போமென்று விசாரமுற்றிருந்தார். அதில்நடந்த விபரங்களை சில தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறோம். கேண்மின்கள் தவமுரித்தாகிய சவுனகாதி முனிவர்களே யென்று சொல்லுகிறார் மேன்மையுடைய சூதமுனிவர்.—எ-று.

வேறு.

கத்திராகடியவை நளத்திரா விடியவித்தல மூடிருட்
கொத்திராவகலவைய் குமுகப்குவிந்து கோகனகமலர்
உய்த்திராறுகவைந் தெழுசூரி யன்றன்னையுள முன்னியே
சத்திராசித்தெனு பொருமன்னவன் பெருந்தவமுன்னினான்.

(இ-ள்.) அவமிருத்தியில்லாத அடியவர்களுள்ளத் திருள்விடியவு மித்தத்தலமாகிய பூமியை மூடிக்கொண்டிருந்த இருள்நீங்கவும் வெவ்விய அல்லிப்பூக்கள்குவியவுந் தாமரைப்புஷ்பங்கள் மலரவும் சுடர்க்கிரணங்களை உய்த்துப் பன்னிரண்டு பெயராக வுதித்தெழுந்தருளி நிதம் வருகின்ற சூரியபகவானையுள்ளத்திலேநினைத்து தியானமாக சத்திராசித்து வென்னும் ஒருராசன்மிகுந்த தவஞ்செய்தான்.—எ-று.

தரைமீதனந்தகாலங் கதிரை நோக்கித் தவம்பண்ணவே
வரமெமக்கு வேண்டுமென நல்கியாதித்தனொரு மணியுதவினான்
புரமேமணியது சுமந்தகப்பெயரதைப் பொன்னூரமா
புரமேவுதெய்வபூசையில்வைத் தருச்சனை யுகந்தானரோ.

(இ-ள்) பூமியிலனந்தகாலஞ் சூரியபகவானை நோக்கிச் சத்திராசித்துராசன் அரியதவஞ்செய்பக்கண்டு சந்தோஷித்து ஆதித்தபகவானொரு திவ்வியமானமணி கொடுத்தருளினார். அமராபதியிலுங் கிடையாதமணியது சுமந்தகமணியென்று பெயர் அந்தமணியை சொர்ணாத்திற் பொதிந்து பூசையில்வைத்துப் புட்பமலர்களால் அர்ச்சனை உவந்துசெய்தான்.—எ-று. (கக)

அருச்சனைசெய்நாளினிலவன்றம்பி பிரசேனனந்தமணியைத்
தரிச்சனைவருஞ்சூழ வேட்டையிற்சார்ந்தனன் சார்ந்தபொழுதே
நெரிச்சவனையோரெண்குநெஞ்சைப்பிளந்து கொன்றந்தமணியை
விரிச்சகதிரொளிதரக்கொண்டு சென்றக்காடிவீடுற்றதால்.

(இ-ள்.) அப்படி சத்திராசித்துராசன் அர்ச்சனைசெய்யாநின்ற நாளிலொருநாள் அவன்தம்பிபிரசேனனென்பவன் அந்தமணியையெடுத்துத் தரித்துக்கொண்டு அனைவருஞ்சூழ்மிருக வேட்டைக்குப்போனான். போனபொழுதில் ஒருகாடிவந்து அவன் தலையை நெரித்து நெஞ்சைப்பிளந்து கொன்று அந்தமணியைக்கைக்கொண்டுவிரிந்த கதிரொளி வீசும்படியாகச் சென்றது.—எ-று. (கஉ)

அப்பொழுதுசாம்புவனவன்வேட்டைவந்தனனவற்றையுணர்வுற்
றிப்பொழுதிதேதெனக் காடியினடிப்பின்னரேகுமளவிற்
பைப்படியினிற்பருதி போலொளிபரப்பியச் சுமந்தகமெடுத்
தொப்பவெதிரெண்கினைக்கொன்றுதன் றிருமனையி னுடனேகினான்.

(இ-ள்.) அந்தவேளையில் சாம்புவராசன் வேட்டைக்குவந்தான் அந்தமணிப்பிரகாசத்தைக்கண்டு இதேதிந்த வெளிச்சமென்று காடித்தாரையைப் பற்றிப் போகையில் பூமியிற் சூரியஉதயம்போல சுடர்விரிக்கின்ற அந்தச் சுமந்தகமணியைக் கவர்ந்தெடுத்துக்கொண்டு ஒப்பாகவெதிர்த்த காடியைச்சங்கரித்து உடனே தன்னுடைய திருமனையிற் போய்ச்சேர்ந்தான்.—எ-று. (கங)



ஆங்கதுநிகழ்ந்தவைகை சத்திராசித்துணர்ந் தறியாமலே
யீங்குமணிமாயமாய்ப் போனதென் கரியவனெடுத்தானெனா
வோங்குபழிவம்புரை விநாயகசதுர்த்தியி னாபர்கரியவன்
றாங்கியதுமாற்றிவெயி றருமணியெடுப்பச் சமைந்தானரோ.

(இ-ள்.) அங்ஙனம்நடந்த விருத்தாந்தத்தை அறியாமல் சத்திராசித்துராசன் இங்கேயிருந்த மணிமாயமாய்ப் போனதென்ன? கிருஷ்ணனே யெடுத்துக்கொண்டானென்று பழிபாதகஞ்சொன்னான். அப்படிச்சொன்ன வம்புவார்த்தை விநாயகசதுர்த்தியில் நாலாம்பிறைகண்டதற்கிதுவே யேதுவாமென்று மனதிலே யோசித்துப் பெருமையுடனே இனியிவன் மனசம்சயமும் பழி வார்த்தையும் தீர்க்கத்தக்கதாக மணியைத்தேடிக் கண்டெடுத்துக்கொண்டு வரமனந்துணிந்தார் கிருஷ்ணமூர்த்தி.—எ-று. (கச)

பிரசேனனன்றுவனை வேட்டையிற் சென்றவழி பிறழாமலே
வரைசேர்வனத்திடை நடந்தவன் வதைபட்டவாறுமொழியத்
தரைமேல் மடிந்ததுஞ் சாம்புவன் கொன்றதும் தாமோதரன்
றிரமயுணர்ந்துசாம் புவனைச்சுமந்தகஞ் சென்றெடுத்தான்.

(இ-ள்) பிரசேனன் வேட்டைக்குப்போன வழிதப்பாமல் மலைகள்நெருங்கிச் சூழ்ந்தவனங்களிலே நடந்துபோய் அவன் வதைபட்டுக் கிடக்கின்றமுறைமையும், காடியானது தரைமேல் மடிந்துகிடந்ததும் சாம்புவன் வேட்டைக்குவந்ததும், காடியைக்கொன்றதும், தாமோதரனறிந்து, உணர்ந்து, சாம்புவனிடத்தில் போய் அந்தச் சுமந்தகமணியைக் கண்டெடுத்தான்.—எ-று. (கரு)

தாமோதரன்சென்றெடுத்தபோ தொருதாதி சாம்புவனுட
னாமோனைக்கின் குமாரன்றொட்டிலிற் கட்டுநன் மணியினை
மாமேகமென்னவொரு கரியவன் வந்தெடுப்ப வாங்கினனெனை
வாமோவெனச்சாம்பு வனுமாயனுடன் கட்டி யமர்செய்தனர்.

(இ-ள்) அப்படி கிருஷ்ணமூர்த்தி மணியைக்கண்டெடுத்தபோது அது கண்டொரு தாதியானவள் சாம்புவராஜனுடனே நாம் சந்தோஷமாகக் குமாரன் தொட்டிலில் கட்டிவைத்திருந்த அழகியமணியைக் கார்மேகம்போலும் ஒருகரியவன் வந்தெடுத்துக்கொண்டானென்று சொன்னவுடனே சாம்புவராசன் மாயவனைத்தடுத்து யுத்தஞ்செய்தான்.—எ-று. (கசு)

வேறு.

தட்டுவார்பாத மெடுப்பர்குதிப்பர் தடந்தோள் மிசைமிசைகை
கொட்டுவர் சுற்றுவர் பற்றுவரெற்றுவர் குத்துவர் தத்துவர்கம்
முட்டுவர் கட்டுவர் வீசுவர் போடுவர் மூசுவர் தாவொடுதா
வோட்டுவர் சாய்வருயர்த்துவர் பாய்வர் பின்றேடுவர் மீளுவரே.

(இ-ள்) கிருஷ்ணதேவரும் சாம்புவனும் மல்யுத்தஞ்செய்த முறைமையெப்படியென்றால் அஷ்டகாசங்கள்செய்தவ ரவர்கள் கைகளால் துடைகளைத்தட்டுவார்கள், கால்களை யெடுப்பார்கள், குதிப்பார்கள், ஒருவரடிப்பதை யொருத்தர் தட்டுவார்கள், கைகளால்தோள்களுக்குட்டுவார்கள், வலமிடமாகச்சுற்றுவார்கள், ஒருவரையொருவர் தாவிக்கட்டி பிடிப்பார்கள், அடிப்பார்கள், குத்துவார்கள், தத்தித்தத்தியேறுவார்கள், தலையுந்தலையுமாக முட்டுவார்கள், இறுக்கிக்கட்டுவார்கள், வீசுவார்கள், தூக்கிப்போடுவார்கள், நெருக்குவார்கள், காலோடுகாலொட்டுவார்கள், சாய்வார்கள், நிமிர்வார்கள், தொடர்ந்தோடிப்பாய்வார்கள். பின்னிட்டோடுவார்கள், பின்னையுமோடிவந்து யுத்தஞ்செய்வார்கள்.—எ-று. (கஎ)

உறுக்குவர்கால்கொடுதைப்பர் மிதிப்ப ருடற்றுவர் வீங்குவர்கை
முறுக்குவர்சாரி நடப்பர்பிடிப்பர் முடிப்பரடிப்பர் விட

ரிறுக்குவர் கட்டி யெடுப்பரிளைப்ப ரிளைப்பொரு சற்றுமிலா
மறுக்குறநின்று மலைந்து மலைந்தனர்மலையொடு மலையெனவே

(இ-ள்) ஒருவரையொருவர் வஞ்சாஞ்செய்துஉருக்குவார்கள்கால்களாலுதைப்பார்கள் மிதிப்பார்கள் உடற்றுவார்கள் கீழேவீழ்வார்கள் கைகளை முறுக்குவார்கள் சாரிசாரியாக நடப்பார்கள் கழுத்துகளை யிறுகப்பிடிப்பார்கள் சற்றேயிளைப்பாறுவார்கள் இளைப்பாறிவந்தடிப்பார்கள்கைவிடாமல்கட்டியிறுக்குவார்கள் யிறுக்கிக்கட்டி யெடுப்பார்கள் சற்று இளைப்பில்லாமல் மல்லாடுவார்கள் மறுக்கமாக நின்று மலைவில்லாமல் மல்யுத்தஞ்செய்வார்கள் மலையுடனே மலைபொருந்தினாற்போல்-எ-று. (கஅ)

இப்படி யீரெழுநாளிற் கரியவனெதிர் சாம்புவன் மலையு
மற்பொருபூசனு ராகவ னமருமகாபாரதமு நிகர்
செப்புவதல்ல வெனும்படிநின்று செருத்தொழில் கொண்டனர் பின்
னொப்பிலர்யாதென வொருவற்கொருவ ருளத்தி லுணர்ந்தனரே.

(இ-ள்) இப்படிப் பதினாலுநாள்வரையிலும் கிருஷ்ணனும் சாம்புவனும் தோராமல் பொருதிப்போர்செய்த மல்யுத்தத்தின் பெருமையானது இராமராவணயுத்தமும் கந்தர்சூரபதுமயுத்தமும் மகாபாரதயுத்தமு மிதற்குச்சமானமென்று சொல்வதல்ல வென்னும் படியாக நின்றெதிர்த்து மகாவீரபராக்கிரமத்துடனே செய்த மல்யுத்தத்தில் ஒருவர்க்கொருவர் வெற்றிதோல்வியில்லாததாலும் ஒப்புவமை யில்லாதவர்களானதாலும் இது என்னவென்று தங்கள்தங்கள் மனதில் யோசித்தார்கள்.—எ-று. (க௯)

ஆம்புவனங்களி லாதிபனொன்று டனமரித்தனை நாளாய்த்
தேம்புவனங்களின் றலைப்புவியிற் செய்தனரிலையிப்போர்
வீம்பி வனங்களின் மேகநிறத்தினன் விண்டிவனென்றுணராச்
சாம்புவனுங்களி யொடுதொழுவானந் தாமோதரவெனவே.

(இ-ள்) அழகிய பூமண்டலத்திலே யென்னுடனே யிதுநாள்வரையில்இகலோகத்தார் பரலோகத்தார்களில் யிப்படியுத்தஞ்செய்பவரில்லை. நான் வீம்புபாராட்டியறியாமல் இந்த யுத்தஞ்செய்தேன். இந்த மேகவண்ணனான யிவன் ஆதிவிஷ்ணு வேசரியென்று நன்றாகத்தெரிந்து மனக்களிப்புடனே சுவாமிதாமோதரனை கிருஷ்ணமூர்த்தியேயென்று தொழுதுவணங்கித் தோத்திரஞ்செய்தான்.-எ-று.

மீனுருவாகி மறைப்பொருளைத்தரு வித்தகபோற்றிகடற்
பீனமலைக்கணையாகியகமடப் பெருமைய போற்றிபுவிக்
கீனமுறுகிரணிய கண்ணனை யடரேனத் தவபோற்றி
சேனைகொளிரணியனைப்போர்வரு நாசிங்கச்செயபோற்றி.

(இ-ள்) ஆதியில் மச்சரூபமாகி கடலிலொளித்த சோமுகாசூரனைக்கொன்று வேதப்பொருளைத் தந்தருளியவித்தகனே போற்றி அமுர்தங் கடைகிறபோது சாய்ந்த மந்திரகிரிக்காதாரமாக கூர்மாவதாரஞ்செய்து ரட்சித்த பெருமையையுடையவனே போற்றி புவனங்களுக்கு இறுதிவாராமல் இரணியாட்சதனைக்கொன்ற வராகமூர்த்தியேபோற்றி அளவில்லாத சேனைகளையுடைய இரணியாசூரனை பொருதிக்கொன்ற நாசிங்கமூர்த்தியே போற்றிபோற்றி.—எ-று. (உக)

வாமனமாயொரு மாவலியைச்சிறை வைத்தபொன் மால்போற்றி
கோமுடிசிரமா யிரமழுவாற்றுணி குலமுனிசெயபோற்றி



காமணிலங்கை யிராவணனைப் பொருகன ராகவபோற்றி
பூமகிழ்புத்தரின் வந்துபுரத்தைப் பொருவித்தவபோற்றி.

வைத்தருளிய
(இ-ள்) வாமனாவதாரமெடுத்து மாபலிவாணனைச் சிறையிலிட்டு லட்சுமிமணாளனேபோற்றி கார்த்தவீரியார்ச்சுனராஜன் கைகளாயிரங்களையும் மழுவினாலேயறுத்து வெற்றிகொண்ட மேற்குலமான சமதக்கினி புத்திரனான பாசுராமனேபோற்றி அதிமோகத்தையுடைய யிலங்கையில்இராவணனைப்பொருதிக்கொன்ற கனமுடைய இராகவனேபோற்றி பூலோகம் புகழத்தக்கதாக புத்தர்குருவாக வடிவெடுத்துவந்து அசாரைமயக்கி சிவனைக்கொன்று திரிபுரங்களையெரிப்பித்தவனே போற்றி போற்றி.—எ-று. (உஉ)

செருவினலத்திரம் மொருபலபத்திரர் பின்னவசெயபோற்றி
தரைவருந்திடியென வருவசுதேவன் றருமணியேபோற்றி
யருள்பதினாறயிர மிடைமடவியரணை நாயகபோற்றி
குருகுலம் வருபஞ்சவருக்குதவுங் குணநிதியேபோற்றி.

திறமையுடையவராகவந்த
(இ-ள்) மகாபாரதயுத்தத்தில் கலப்பையாயுதத் கிருஷ்ணமூர்த்தி யேபோற்றி பலராமனே போற்றி அவர்க்கிளையவனாகவந்த வாசுதேவன்பெற்ற மாணிக்கமணியேயிந்தப் பூலோகநிதிபோலும் வந்தருளிய மருவியநாயகனே போற்றி போற்றி அன்பாய் பதினாறாயிரம் கோபியர்களை குருகுலத்திலுதித்து விளங்கிய பஞ்சவர்களுக்குதவி செய்தருளிய சற்குணநிதியேபோற்றி போற்றியென்றுதோத்திரஞ்செய்தான் சாம்பவந்தன்.—எ-று. (உ௩)

இப்படிச்சாம்புவ னெண்ணியத்துதி யிந்திரைமணவாளர்க்
கொப்புரவோதி யறிந்திலனிப்பிழை யுரவபொருத்தியெனச்
செப்பினன் முலைமலை செறிநகையழகின் றிருவனசாம்பவியைக்
கைப்புகவுதவியம்மணியுமளித்துக் கண்ணனையடிதொழுதான்.

தோத்திரஞ்செய்து
(இ-ள் இந்தப்பிரகாரம் சாம்புவராசன் அளவில்லாத சுவாமி அடியேன் அறியாது இந்திரைமணவாளன் கிருஷ்ணமூர்த்தி மகிழும்படி செய்த பெரும்பிழையைப் பொருத்தருளுமென்றுசொல்லி மலைபோன்ற முலைகளும் முத்துநிரைந்தநகையும்அழகிய லட்சுமிபோலும் விளங்கிய தன்மகளாகிய சாம்பவியைக் கிருஷ்ணமூர்த்திக்கு திருமணஞ் செய்துவித்து சுமந்த சிகாமணியையுங்கொடுத்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை வணங்கினான்.எ—று. (உ௪)

தொழுவனகண்டு சுரந்தருள்வேண்டுவ சொல்லிமகிழ்ந்தாய
னெழுவனசிந்தையி லெய்தினன்மன்னன்முன் னிடுபழிமொழிதீரச்
செழுமணிகொண்டுன் பின்னவனும்பிர சேனன்வனமேகும் [பச்
பொழுதொருகாடி வதைத்ததம்மணிதன் புகலிடை வைத்ததரோ.

சனங்
(இ-ன்) அப்படித்தொழுத சாம்புவனுக்குக்கிருபைகூர்ந்தருளிப்பிரியவ களுக்குச்சொல்லி மகிழ்ச்சியுடனே கிருஷ்ணதேவன அங்கிருந்துபுறப்பட்டுவந்து சத்திராசித்துராசன் முன்னிட்டபழி வசனங்களை தீர்ப்பவனாகச் செழுமையுடையஇராசனைக்கண்டு சொல்லுகிறார். ஓய் இராசனே உன்தம்பியான பிரசேனன் இந்தமணியைத்தரித்துக்கொண்டு வனங்களில் மிருகவேட்டை செய்யப்போகும்போது ஒரு காடிவந்தவனைக் கொன்றுமணியைக் கொண்டுபோய் தானிருக்குமிடத்தில் வைத்துக்கொண்டு இருந்ததென்று சொல்லிப்பின்னையுஞ் சொல்வார்.எ-று. (உ௫)

வைத்தபின் ஞானிற் சாம்புவன் வந்தவன் வதைபட்டதுமுளியஞ்
சுத்தசுமந்தகமணிகொண்டதுமறி வுற்றுச்சுடர்மணிகொண்
டத்தையும் வென்றுதன் மகனொருதொட்டிற் கணியாகத்தூக்கி
வைத்தனன்யாமீ ரெழுதினமவனுடன் மலைவுற்றிவைகொண்டேம்.

(இ-ள்) மறுநாள் சாம்புவராசன் வனவேட்டைவந்தான் உன் தம்பி வதைபட்டதையும் காடியானது ஒளிவுடைய மணியைக்கொண்டுபோய் வைத்திருந்ததையும் அறிந்து, அந்தக்காடியைக்கொன்று மணியைக்கவர்ந்துக்கொண்டுபோய் தன் மகன் தொட்டலில் அழகாகத் தூக்கிவைத்திருந்தான். இதுவெல்லாம்நாம்தெரிந்துபோய் அந்தச் சாம்புவனுடன பதினேன்குநாள் போர்செய்து வெற்றிகொண்டிவை யெல்லாம் பெற்றுக்கொண்டு வந்தோம் பாராயென்று சொல்லுகிறார் கிருஷ்ணமூர்த்தி.—எ-று. (உசு)

என்றுரைதாமோதரர்சாம்பவதியோ டெழின்மணியுங்காட்டி
யுன்றனதுள்ளந் தெளிகெனவே சத்திராசித்துவகையினால்
சென்றனன்மணமுரசந்திசை யெட்டுஞ் சென்றன திருவுறவே
மன்றலின்னருள் சத்தியபாமையுமம் மணியையு முதவினனால்.

(இ-ள்) நடந்த வர்த்தமானமெல்லாஞ்சொல்லி கிருஷ்ணதேவர் சாம்பவதி பெண்ணையும் அழகியமணியையும்காட்டி இனிஉன் சமுசயம் தெளிவாயென்று சொன்னார். அப்போது சந்திராசித்துராசன் மகாசந்தோஷமாகி தன்மகளான சத்தியபாமையை கிருஷ்ணருக்குத் திருக்கல்யாணஞ் செய்துகொடுத்து அந்தமணியையும் கொடுத்தருளினன். அப்போது கிருஷ்ணதேவர் யெழுந்தருளிச்செல்லாநின்றார் மணமுரசவாத்தியமெட்டுத் திக்குகள் செவிடுபடத்தக்கதாக ஓசை முழங்க அழகுபெற.—எ-று. (உஎ)

பலபத்திரனுஞ் சாத்தகியுங்கோ பாலப் பெருவெள்ளம்
நலபத்திரவிழி நங்கையர்யாவரு நற்சோபனமோதக்
குலபத்திரமலர் கொண்டவர்பாதக் கோகனகம்போற்றச்
சுலபத்திரன்மென் பகைவென்று துவாரகைபிற் புக்கான்:

(இ-ள்) பலபத்திராமருஞ் சாத்தகியும் ஆயராச்சிடர்கூட்டமான பெருவெள்ளமும் அழகிய அம்புபோன்ற கண்களையுடைய ஸ்ரீ சனங்களனைவருஞ் சுபசோபனங்கள்பாட பக்தசனங்களெல்லாம் பலநிறங்களையுடைய பத்திரபுட்பங்களிட்டு அவர் பாததாமரைகளைப் போற்றிசெய்ய சொற்பத்திரணமாக சத்துருக்களைச் செயித்து வெற்றிகொண்டு துவாரகாபுரியில் புகுந்தருளினார் கிருஷ்ண தேவர்.—எ-று. (உஅ)

கொண்டலைவென்ற குழற்பிறைநுதல்விற் குனிபுருவப்பானல்
வண்டலர் விழிவள்ளைக்குழை மணிநாசிகையாம்பற்
றண்டாளப்பற் செவ்வாய்மென்சொற் றண்மதிவதனவளைக்
கண்டமலர்க்கைக் கனதனவிடை நூற் காலைப்புயன்சூழ்வார்.

(இ-ள்) கார்மேகத்தைவென்ற கூந்தலும் பிறைபோன்றநெற்றியுங் குனித்த விற்போன்ற புருவங்களும் நீலோற்பலம்போலும் வண்டுகள்போலும் ஒத்தழகிய கண்களும் வள்ளைக்கொடிபோன்ற காதும் செண்பகப்பூப்போன்ற அழகிய மூக்கும் ஆம்பற்பூப்போன்ற சிவந்தவாயகளும் குளிர்ந்த முத்துநிலைபோன்ற பல்வரிசைகளும் மிருதுவான வசனங்களுங் குளிர்ந்த பூரணச்சந்திரன் போல முகங்களும் வலம்புரிச்சங்குபோன்ற கழுத்தும் பூப்போன்ற கைகளும் கனத்த தனபாரங்களும் நூலொத்தஇடையுந் தாமரைப்பூப்போன்ற கால்களுமாக விப்படி அழகுபெற்றுடைய ஸ்ரீ சனங்கள் சூழ்ந்துவிளங்க எழுந்தருளியிருந்தார் கிருஷ்ணன்.—எ-று. (உகூ)



அவ்விடைருக்கு மணித்திருவுஞ் சத்தியபாமையு மிருபாற்
செவ்விகொளகார சலத்திருபாங்குந் திருமயிலெய்தினபோல்
மெய்விளைவுற வெய்தினர்கரியவ ரரிபாசனமேவினர்கா
னவ்விவிழிக்குற வள்ளியுதித்தருள் நன்மையினிப்புகல்வாம்.

(இ-ள்) அப்போதங்மவம் ருக்குமணிதேவியும் சத்திபாவையும் மிவ்விருவருமிரண்டுபக்கதிலுஞ் சேவவிதாகிய ஒரு நீலகிரிச்சார்பிவிரண்டுபக்கத்திலும் அழகியமயில்கள் சேர்ந்திருந்ததுபோலும் திருனமணிபுளகமுற மருவிமணங்களிப்புற சிங்காதனத்தி லெழுந்தருளியிருந்தார். பின்பு கானகத்தில் கிருஷ்ணதேவர் ஒரு சிங்காதனத்தி லெழுந்தருளியிருந்தார். பின்பு கானகத்தில் மான்போலும் கண்களையுடைய குறமாதாகிய வள்ளிநாயகி யுற்பவித்தமுறைமையைச்சொல்லுகிறோம் கேண்மின்களென்று சொல்லுகிறார் சூதமாமுனிவர்.எ-று

கிருஷ்ணச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள்-நகூரு.

# வள்ளிநாயகி உற்பத்திச் சருக்கம்.

———:o:———

இப்படிநம் வசுதேவர்க்கினிய திருக்குமாரரெனு
மைப்படியுங்கரியமலை வந்தனபோற்கரியவனார்
இப்படியிற் பொதுவியர்கள் பதினாறுயிரவருடன்
மெய்ப்படியு மனுராகவிதம்படியு மொருநாளில்

வாசுதேவருக்குப் பிரியமுடைய திருக்குமாராகிய மேகம்படியும்

(இ-ள்) வாசுதேவருக்குப் பிரியமுடைய திருக்குமாராகிய மேகம்படியும் நீலகிரிபோலும் அழகியகிருஷ்ணதேவர் துவாரகாபுரியில் பொதுவர்குலமடவார் பதினாயிரம்பெண்களுடனேலீலாவிநோதமாகமருவி அநுராகத்தொழில்நடாத்தி (க)
சுகமாகவாழுகின்றநாளில் ஒருநாள்வேளையில்—எ-று.

மருக்கிளருந் தொடையுருக்கு மாங்கதன்றன் வழிவந்த
வுருக்குமணிமயிலெனுமம் போருகப்பெண்ணொருபாங்கும்
மருப்பமுமாசிலன்சத்தி ராசித்த னருளில்வரும்
பருப்பதம்போற்றன சத்தியபாமைக் கண்ணொருபாங்கும்.

(இ-ள்) மணம்பொருந்திய புட்பமாலைசூடிய ருக்குமாங்கதராஜன் வரபுத்திரியான அழகிய ருக்குமணியம்மனென்னும் லட்சுமிதேவி யொருபக்கத்திலும் குற்றமில்லாத சத்திராசித்துராசன் வரபுத்திரியான மலைபோலு முலைகளையுடைய (உ)
சத்தியபாமையென்னுங் கண்மணியொருபக்கமும் —எ-று.

இனிதணைந்துவிளையாடு மெல்லியில்வற் கலையுடையும்
பனிமலர்மென் சடைமுடியுட் படிகநிறத்திருநீறுங்
கனியுமிசைத்திரிதண்டுகமண்டலமுங் கனிநகையும்
நனியழகு பெறத்தேவர் நகர்விட நாரதர்வந்தார்.

(இ-ள்) இப்படி யின்பமாக உபையநாச்சிமாருடனே கூடி விளையாடியிருக்கின்றவேலையில் மாவுரியுடையுங் குளிர்ந்த புட்பஞ்சூடியமெல்லிய சடைமுடியும் படிகநிறமான திருவெண்ணீறுதரித்த திருமேனியும் யிசைபாடி யேந்தியவீணை

யுந்திரிதண்டமுங் கமண்டலமுங் கனிந்தநகையுமாக மிகவும் அழகுபெறும்படி தவ வடிவுடனே தெய்வலோகத்திலிருந்தும் புறப்பட்டுவந்தார் நாரதமுனிவர்.—எ-று.

வந்தவர்சந் தனக்கதம்ப மணிப்புயக்கண்ணன் கரத்திற்
றந்தனரிந் திரன்பாரி சாதநறுந் துணர்ப்போது
இந்தமலர்யா தெனநம் மிறைவனுடனிமையமயில்
கொந்தவிழுஞ் சடைமுடிக்குங் குழற்குமுடிப்பனவென்றார்.

(இ-ள்) வந்த நாரதமுனிவன் சந்தனகதம்பந்தரித்தருளிய புயங்களையுடைய ஸ்ரீ கிருஷ்ணதேவரைக்கண்டு அவர்கையில் இந்திரலோகத்து பாரிசாதபுஷ்பக் கொத்தொன்று கொடுத்தார். அதைவாங்கி யேதிந்தப்புதுமையான புஷ்பமென்றுகேட்க இதுபரமேசுவரனும் பார்வதாதேவியும் அலர்ந்த பூமணம்பொருந்திய சுவாமி சடைமுடிக்கும் அம்மன்கூந்தலுக்கு முடித்துக்கொள்ளும் மகிமையையுடைய பாரிசாதபுட்பமிதுவென்று சொன்னார்.—எ-று. (ச)

கிளியமுத மொழித்தெய்வ கீதவத்திற்கிளர்குமர
அளிவிரவா மணமகலா தலர்புலராத் தழகொழியாத்
துளிதருசெந் தேனொழுகும் துணர்ப்பாரிசாதமலர்
தெளிகருணைக்கரியவனின் றிருவுளத்திற் கினிதென்றார்.

(இ-ள்) கிளிபோலும் அமுர்தமொழியுடைத்தாய்த் தெய்வகானகீதம்பாடி கிளர்ச்சியுடனே யிளமையுடைய தேன்வண்டுகள் மூசாததாய் மணங்குறையாததாய் மலர்கள் வாடாததாய அழகுபோகாததாய் துளிக்கப்பட்ட செந்தேனொழுக்கமாகிய ஒளிபொருந்திய இந்தப்பாரிசாத புட்பக்கொத்துத் தெளிவானகிருபையுடைய கிருஷ்ணமூர்த்தியே உம்முடைய திருவுளத்துக்குமிகவுமின்பமான திவ்வியபுட்பமிதுவென்று சொன்னார் நாரதமுனிவன்.—எ-று. (ரு)

நாரதராற் பெற்றமலர் களிமயி லுருக்குமணிக்
காரருளாலரியளிப்பவது சத்தியபாமையறிந்
தேருளத்திற் புலவியினூற் றூடுதல்பெற றனளதனாற்
காரணபகரியவனுற் கனிந்தொர்மொழி பகருகின்றார்.

(இ-ள்) நாரதமுனிவராற்பெற்ற மலர்ச்சியுடைய பாரிசாதபுட்பத்தைத் தாமரைமகளான மயில்போலுஞ் சாயலையுடைய ருக்குமணிதேவிக்கு மிகுந்தகிருபையுடனே கொடுத்தார். அதுவறிந்து சத்தியபாமை தனதுள்ளத்திற்சகியாமல் மனம்புலர்ந்து ஊடிக்கொண்டாள். அதுகண்டு கார்மேகம்மொய்த்த கிருஷ்ணதேவர் பிரியமாக ஒரு வசனஞ்சொல்லுகிறார்.—எ-று. (சு)

பூவென்றே யுருக்குமணிப் பூவைபெற்றா ளுனக்கந்த
காவொன்றி லொருபாரிசாதமலர்க் கற்பகத்தின்
மாவொன்று நின்மனைவாய் வைப்பனென வுரைத்துமறைக்
கோவொன்று புரத்தெழுந்தான் கோகனகத் திருமாயன்.

(இ-ள்) வாராய் சத்தியபாமையே நாரதர்கொடுத்த புட்பக்கொத்தொன்றே யொன்று ருக்குமணிக்குக்கொடுத்தோம். அவளதை வாங்கிக்கொண்டாள். உனக்கு அந்தக் கற்பகப்பூங்காவில் பாரிசாதப்புட்பம் புட்பிக்கின்ற கற்பக மரத்தைக்கொண்டுவந்து உன் வீட்டுவாசலில் வைக்கிறேன் பெண்ணே யென்று சொல்லி அவளூடலைத்தீர்த்து வேதப்பிரமா விருந்தருளிய பிரமபுரத்தில் எழுந்தருளினர் கமலமகள் புணர்ந்தமார்பனான கிருஷ்ணதேவர்.—எ-று. (எ)



பிரமபுரத்தெய்திமுகிற் பெருமுழக்கின் வளைமுழக்கித்
தருகநறுமலர்ப்பாரி சாதமென வுரைப்பவயன்
அரமகளிர் விளையாடு மாயிரங்கண்ணனமர் புரக்கும்
புரமிசை யுண்டெனவுரைப்பப்போந்தனனப் புரத்தாயன்.

(இ-ள்) பிரமபுரத்தில்வந்து மேககெர்ச்சிதம்போலும் பெருமுழக்கமான சங்கத்தொனிமுழக்கி நறியபுட்பங்களையுடைய பாரிசாதந்தருவாயென்றுசொல்ல, அதுகேட்டபிரமதேவன் ரம்பாஸ்திரீகளவிளையாடி வாழ்கின்ற இந்திரனுளப்பட்ட இந்திர புரத்திலுண்டென்றுசொல்ல அப்படியோவென்று அமராபதிக்குளெழுந்தருளினர் கிஷ்ணதேவர்.—எ-று. (அ)

போநதுவலம் புரிமுழக்கிப் பொற்றருவைக்கொணர்காலை
யாய்ந்தவரமகளிரவந்தாய னழகியனைப்பார்த்தார்
வேய்ந்தவவரிடையொருத்தி விபுதையெனும் வியன்மடந்தை
வாய்ந்தகரியவன் றனக்குமனமுருகி மயலானாள்.

(இ-ள்.) அப்படி சங்கத்தொனிமுழங்கிப் பாரிசாதத் தருவைக்கொண்டுவரும் போது அங்ஙனம் விளையாடிக்கொண்டிருந்த தெய்வப்பெண்கள்வந்துகிருஷ்ண தேவருடைய அழகைப்பார்த்தார்கள். அவர்களுக்குள்ளே ஒருதெய்வப்பெண் அதிரூபசவுந்தரியமான விபுதையென்பவள் வாய்ப்பாக மாயவன்பேரில்மோகித்து மனங்கரைந்துருகி விரகமானாள்.—எ-று. (கூ)

விபுதைமடமயி லதிக விரகமுளந்தாவனசக்
கைபுனைமடலெழுதிவருங்காமறிந்தே முழுசீர்மெய்
விபுதைநலங் களிகூர விண்டலக்கற்பகக்காவில்
மபுதைவிழி வனிதையுடன் மருவிமணந்தனன்மாயன்.

(இ-ள்.) மடமையுடைய மயில்போலுஞ் சாயலையுடைய விபுதையென்பவள் மனதில் அதிகமோகம் பிரவேசிக்கத்தனது தாமரைக்கைகளால் மடலெழுதி மிகுந்தஆசையுடனே தொடர்ந்துவருவதைக்கண்டு மோகமாக நல்லவின்பமுண்டாய்க் களிகூற அந்தப்பொன்னுலகத்துக் கற்பகப்பூஞ்சோலையிலோரிடத்தில் மதர்த்த விழிகளையுடையவளுடனே மருவிமணம்புணர்ந்தார் கிருஷ்ணதேவர்—எ-று (க0)

அவர்புணர்ந்தபொழுதிலெழு தரியமட வணங்குதித்துத்
துவர்புணர்ந்த கனிவாயுஞ் சுகப்புணர்ந்த பனிமொழியுந்
தவர்புணர்ந்த நுதலுமலர்ச் சண்பகநாசியுங் காமுங்
கவர்புணர்ந்த கயல்விழியுங் கவின்பெறக் கன்னிகையுதித்தாள்.

(இ-ள்.) அங்ஙனம் விபுதையுடனே கிருஷ்ணதேவர்கூடி மருவிப்புணர்ந்த போது பவளம்போன்ற கனிவாயுங் கிளிபோன்ற குளிர்ந்தவசனமும் இளம்பிறை போன்றநெற்றியுஞ் சண்பகப்பூப்போன்றநாசியுங்காந்தள்புட்பம்போன்றகைகளுங் காமுகருயிர் கவரும்படி மீன்போன்றழகிய கண்களும் இப்படியழகுடனே யொரு தெய்வகன்னிகைபிறந்தாள்.—எ-று. (கக)

அங்கதுகண் டுகந்துவிபு தையையகன்றங் கடைந்தனன்மா
லோங்கியநன் மடமயிலை யுயர்விபுதை குலத்தரியோர்.

பாங்குறவங் கவர்வளர்த்தார் பன்னிருநல் வயதின்மலர்ப்
பூங்கமிழ்கற்பகக்காவிற் பொன்னூச லேற்றினரால்.

(இ-ள்.) அங்ஙனம் அதுகண்டு இருவருந் தேவர் மகிழ்ச்சியுடனே விபுதையை விட்டுப்பிரிந்து தம்முடைய அமராவதிபுரி போய்ச்சேர்ந்தார். இப்படி யழகுடனே பிறந்த பெண்மயிலை யந்த விபுதை தலத்திலுள்ளவர்கள் நல்லபடிக்கு செய்து அங்கே வளர்த்தார்கள். பன்னிரண்டு பிராயத்தளவில் வாசனையுடைய அந்தக்கற்பகப்பூங்காவில் அந்தப்பெண்ணை சொர்ணமயமான ஊஞ்சலிலே ஏற்றிவைத்தார்.—எ-று.

ஏற்றிவல்லி மணியூச லினிதாட்ட லெழிற்குகனைப்
போற்றிமயில்வாகனமும் புண்டரிகத்துணைத்தாளு
மேற்றதிரு வுடையழகு மெழில்மார்பு மீராறுதோ
ளாற்றலுறமணிக்கரமு மறுமுகமுந் தியானித்தார்.

(இ-ள்.) இரத்தினமயமான ஊஞ்சலிலே யந்தப்பெண்ணை யேற்றிவைத்து ஆட்டும்படியாகக் கந்தசுவாமியைநினைத்துப் போற்றிசெய்து மயில்வாகனமுந் கமலமலர்போன்ற திருபாதங்களும் உசிதமான திருவுடையழகும் எழிலுடைய மார்பும் பன்னிரண்டுதோளும் வலிமையுடைய ரத்தினமணி வளைகளணிந்தகைகளும் ஆறுமுகமாகத் தியானஞ்செய்தார்கள்.—எ-று. (கங)

ஆறெழுத்தின் பெயர்பாடி யாறுதிருமுடிபாடி
வீறியபன்னிருகாதின் விளங்குமணிக் குழைபாடி
கூறியபன் னிருநயனக் கோலங்கள் பலபாடி
யீறில்கனிவாய்மலரி னெழில்பாடி யிசைபாடி.

(இ-ள்.) குமாருடைய திருநாமங்களெல்லாம்பாடிச் சடாக்ஷரப் பெருமைபாடி ஆறுதிருமுடிகளும்பாடிக் கதிர்விளங்கிப் பிரபைவிரிக்கின்ற பன்னிரு காதில் இரத்தினமணிக்குண்டலங்கள்பாடி பன்னிரண்டு கண்களினுடைய அழகுகள் பலவும்பாடிக் குமுதபுட்பம்போலுங் கனிவாய் அழகுபாடி யிசைகளும்பாடி யூஞ்சலாட்டினார்கள்.—எ-று. (கச)

பன்னிரண்டு புயம்பாடிப் பரிணமித்தெழுகந் தரம்பாடி
மின்னுருண்ட தனையகுழை விளங்கிய குண்டலம்பாடித்
தொன்னிரண்டு வாகைநறுந் தொடையுரமும் புயம்பாடிப்
பன்னிரண்டு கரத்துணையிற் படைபாடிக் குடைபாடி.

(இ-ள்.) பன்னிரண்டுபுயங்கள்பாடிக் கதிர்த்தெழுந்த திருக்கழுத்தழகும்பாடி மின்னலுருட்சியான துபோலுங் குழைகள்விளங்கியகுண்டலங்கள்பாடி யிருபாலு மணிந்த நறியவெட்சிமாலை புனைந்தழகியமார்பி னெழில்பாடி பன்னிரண்டுகைகளில் தரித்திருக்கின்ற பலவாயுதங்கள்பாடி குடைபாடி ஊஞ்சல் நாட்டினார்கள்.—எ-று. (கடு)

சித்திரப்பெண்ணுடைபாடித் திருவுதரக்கவின்பாடிச்
சுக்கமலர்ப பதம்பாடித் துணையடிப்பொற் கழல்பாடி
மெய்த்தமரர் சிறைமீட்ட விறல்பாடி வேல்பாடிக்
கொத்துகின்ற திறற்சேவற் கொடிபாடி யாட்டினரால்.

(இ-ள்.) அழகிய மணிப்பட்டுடைபாடித் திருவயற்றின் அழகுபாடி செந்தாமரைக் கந்தமான வனசபுட்பம்போலும் பாதங்கள்பாடி இரண்டுபாதங்களில் தரித்



சொர்ன வீரக்கழல்பாடிமிகுதியானதேவர்கள் சிறைமீட்டருளிய வீரவலுமைபாடி வேலாயுதம்பாடி கொத்தப்பட்டஅழகினையுடைய திறம்பொருந்திய சேவலங்கொடிபாடி ஊஞ்சலாட்டினார்கள்.எ—று. (கசு)

அவ்வேலை மைவேலை யணிவேலை நிகர்விழிமான்
வைவேலர் திருவழகால் மையல்வேலை யணங்கொண்டா
ளிவ்வேலை விபுதைபெற்ற யேந்திழைகைக் கொண்டதற்பின்
செவ்வேலைத் தரித்தபிரான் சேர்வர் தவஞ்செய்கென்றார்.

(இ-ள்.) மேகமொய்த்த கடல்போலுமழகிய வேலைப்போலு மதற்கண்களை யுடைய அந்தப்பெண்ணானவளுக் குரித்தாகிய வேலாயுதக்கடவுளினுடைய திருவழகுகளை காதுகளிரக்கேட்டு மனதிலேகுறித்து ஆசைக்கடலி லேமூழ்கினாள் அதுகண்டவ்வேளை விபுதைபெற்ற கன்னிப்பெண்ணானவள் கொண்ட ஆசைமிகுதியைக்கண்டு பின்பு அழகியவேலைத்தரித்த குமாரக்கடவுளுன்னை வந்துசேர்வார் தவஞ்செய் பெண்ணேயென்று சொன்னார்கள்.—எ.று (கஎ)

என்றுசரவணக்கரையி லெழின்மடவார் பலகோடி
நின்றுமுருகனைப்பணிந்து தவகலையி னிறுத்தினரா
லன்றுகருங் குழல்விபுதை யளித்தமயி லாண்டீரா
றென்றுமுணராள்குகனை யுளத்திருத்தித் தவஞ்செய்தாள்

(இ-ள்.) என்றிப்படிச்சொல்லி சரவணப்பொய்கைக் கரையருகில் அழகிய பெண்கள் அனந்தங்கூடிநின்று கந்தசுவாமியை ப்பணிந்து தவநிலையில்நிறுத்தினைத்தார்கள். அன்றமுதற்கரிய கூந்தலையுடைய விபுதைபெற்ற மயில்போலுமழகிய கன்னிப்பெண் பன்னிரண்டுவருடம் வேறொன்றுநினையாமல் குமாரரை உள்ளக் கமலத்தில்நிறுத்தி அரியதவஞ்செய்தாள்.—எ-று. (கஅ)

சரவணப்பொன்மடுக் கரையிற்றவப்புரிந்து தனித்தெழிற்பஞ்
சரவணத்துக்கிளியனையா டவம்புரியு நிலையுணர்ந்து
சரவணத்துவிழித்தெய்வ சேனைநண்பர் சண்முகமுஞ்
சரவணத்துக்குழையர் மைந்தர் தமதுருநீத்தவணடைந்தார்.

(இ-ள்.) சரவணப்பொய்கைக் கரையருகில்நின்றரிய தவஞ்செய்து தனிமையான அழகியபஞ்சவர்ணக் கிளிபோன்ற கன்னிப்பெண்செய்யுந் தவநிலைமையை யறிந்துணர்ந்து அம்புபோன்ற கண்களையுடைய தெய்வசேனை மணவாளராகிய சண்முகக்கடவுள் ஐந்துதலைகளை யுடையநாககுண்டலங்கள் தரித்தசெவிகளையுடைய பரமசிவனுடைய திருக்குமாரர் தம்முடையவடிவைமறைத்தங்கனம்வந்தார்,எ-று

தவமயிலின்றவங் குலைப்படச்சரச விதம்பலகூறி
நவவுருவி னல்லழகு நாயகனைப்புகழ்ந்தார்
சிவசிவவச்சிறியா ளச்செயலறியான் சரவணத்துற்
பவனையுள நினைப்பதல்லாற் பகர்வனவொன்றுங்கருதாள்.

(இ-ள்.) அரியதவஞ்செய்யாநின்ற கன்னிப்பெண் செய்யுந்தவங்களையு மப்படியாக அனேகசரச சல்லாபவினோதவார்த்தைகள்பேசி புதுமையானவடிவுடையவொரு புருடநாயகமாகப் புகழ்ந்தார். அப்போது சிவசிவா அந்தச்சிறியம்மாளான கன்னிப்பெண் அந்தச்செயலொன்று மறியாதவளாய்ச் சரவணோற்பவனைத் தனதுள்ளத்தில்நினைத்து தியானிப்பதல்லாமல் அவர்பேசிய வினோதவசனமொன்றுங் காணுதவளாய் ஒருமனநிலையாய்த் தவஞ்செய்தாள்.—எ-று. (உ0)

அறுமுகமுங் கடம்பமலரணிபுயமும் பன்னிருகை
யறுபடையும் பன்னிருகுண்டலக் கதிர்வந்துருள் மார்புஞ்
செறுமயிலின் வேலு மயிலின் திருமயிலு மிருமையிலும்
வறுமையிலென் றுதவடியும் வயங்கமயிலெதிர் நின்றார்.

(இ-ள்.) ஆறுமுகமுங் கடம்பமலர்மாலைதரித்த புயங்களும்பன்னிரண்டுகுண்டலங்களின் பிரபையுலவும் திருமார்பும், அசுரரைக்கொன்ற கூர்மையுடையவெற்றி வேலும், அழகியமயில்வாகனமுமாக இம்மைமறுமைஇரண்டுக்கும் வறுமையில்லையென் றரட்சிக்கும்பாதங்களுமாக விளங்கிப்பிரகாசிக்க மயில்போலுந்தவஞ்செய்துநின்ற கன்னிப்பெண்ணுக்கெதிரே காட்சிகொடுத் தெழுந்தருளிநின்றார் குமாரசுவாமி,—எ-று. (உக)

கந்தர்தவப்பூமியினிற் காட்சிகொடுத்தன மயில்கண்
டுய்ந்தனனென் றுளமகிழ்வுற் றுலர்ந்தகொடி மழைமுகிழ்பெற்றங்
கந்தமுறத் தழைத்தெழுந்தம்பொற்றருவின் படர்வனபோற்
றந்தமுல்லைபுரைமயில் தந்தகுயிலெழுந்துளதால்.

(இ-ள்) கந்தசுவாமி தலபூமியிலே வந்தெய்தி திருக்காட்சிகொடுத்தருளினதை அந்த மயில்போன்ற கன்னிகையானவள்கண்டு உய்ந்தே னென்று உள்ளங்களிப்பாகேறுக்கி உலர்ந்தகொடியானது மழைபெய்யப்பெற்று அழகுபெறத் தழைத்தெழுந்தங்கே ஒரு சொர்ணத்தருவின்மேலே படர்வதுபோலு மொழியையுடைய அழகிய கன்னிப்பெண் தவத்தைவிட்டெழுந்துவந்து குமாரசுவாமியைத் தோத்திரஞ்செய்கின்றாள்.—எ-று. (உஉ)

ஆறாறுபுயபோற்றி அறுமுகபங்கயபோற்றி
சீறுற்றேறுகைமயிற் சேவகபுங்கவபோற்றி
கூறுகத்தாருகனைச் சூரனைக் கொன்றவபோற்றி
பேறுகவெனையாண்ட பெருங்கருணைக்கடல் போற்றி.

(இ-ள்) பன்னிரண்டு புயக்கடவுளேபோற்றி ஆறுமுக பங்கயபோற்றி நடனஞ்செய்கின்ற தோகைமயில்வாகனு சேவகனே தேவர்தேவனேபோற்றி அடியாள் பேறுபெறத் தக்கதாக காட்சிகொடுத்து வரந்தந்தெனையாள வந்தகிருபைக்கடலே போற்றிபோற்றி.—எ-று. (உங)

உமையவள் பெற்றவபோற்றி யுமாபதிதந்தவபோற்றி
சிமையமலையகலாத திருவிளையாட்டினபோற்றி
யமையனையபுயத்தெய்வ சேனையணைபவபோற்றி
யிமையவர்கள் சிறைமீட்ட வெனதுயிர் நாயகபோற்றி.

(இ-ள்) உமாபதி பெற்றவனேபோற்றி உமாதேவி தந்தவனேபோற்றி சிங்காரங்களையுடைய மலைகளெல்லா மூலாவிப்பிரியாமல் திருவிளையாடல்செய்தவனேபோற்றி பசு மூங்கிற்போலும் புயங்களையுடைய தேய்வசேனையம்மன் மருவும் மணவாளனேபோற்றி தேவர்கள் சிறைமீட்டருளி ரட்சணைசெய்த வெம்பிரானே நாயக போற்றிபோற்றி.—எ-று. (உச)

போற்றியினியெனதுருபம் பொருந்தவருள் பொருந்துகவென்
றேற்றதுதி பலபகர்ந்த வேந்திழைசொற்குளமகிழ்ந்து



கூற்றுதைத்த பானுதவுங் குமரர் மறையவல்சிரத்தி
லூற்றமுறவிரற்புடைத்த வொருமுருகருரை பகர்வார்.

(இ-ள்.) இப்படித்துதிசெய்த தேவரீரென்னுடைய தனபாரங்கள்பொருந்த மருவியணையும்படி மணஞ்செய்யக்கிருபை செய்தருளுமென்று அன்பாகதோத்திரங்கள் பலவிதமாகச் சொல்லித் துதிக்க அவள்சொன்ன பிரியவசனங்களைக் கேட்டு மனமகிழ்ச்சியாகி எமனையுதைத்த பரமேசுரன் பெற்றருளிய குமாரரானவர் பிரமதேவனைச்சிரசிலே இரத்தமூரி வரும்படியாக தமதுகைவிரல்களாலே குட்டிய ஒப்பற்ற முருகக்கடவுளிவைசொல்லுகிறார் —எ-று. (உரு)

தேவாதிபதியுதவுஞ் சேனைக்கொரு வப்பினில்யா
மூவுலகின்மடந்தையரை முயங்கிலமென் றுரைபகர்ந்தோ
மாவலிஞ்சிங்குனை நா மணைகிலமான் வயிற்றுதித்துப்
பூவுலகமலையிடத்தில் பொருந்துகென வரங்கொடுத்தார்.

(இ-ள்.) வாராய்பெண்ணே முன்னமே தேவேந்திரன் பெற்ற புத்திரியான தெய்வசேனைப்பெண்ணுக்கு ஒருநாள் மருவியணைந்த சந்தோஷத்தில் ஒருவரங் கொடுத்தருளினேம் உன்னையல்லாமல் திரிலோகத்திலுமுண்டாகிய பெண்களைச் சேர்வதில்லையென்று சொன்னேம். ஆகையா லிப்போதிங்கே உன்னைமணஞ் செய்துசேர்வதில்லை. இப்பிறப்பையொழிந்து பூமண்டலத்திலே திவ்வியரூபமான ஒருமான் வயற்றிலே வந்துபிறந்து மலையிடத்திற் சேர்ந்துவளர்ந்த பருவமான தருணத்தில் நாமிங்கேவந்து உன்னைமணஞ்செய்து பிரியாமற்சேருகிறோமென்றி (உசு)
ந்த வரங்கொடுத் தெழுந்தருளினார் கந்தசுவாமி —எ-று.

அந்தவரம்பெற்றபின்ன ரகிலமிசையணிமட மான்
வந்ததுகண் டுகந்துகலைக் கோட்டுமகாமுனியணைந்தான்
சந்தனப்பொற்கொடிபோலத் தையலைமையவிழ்பிணையா
னந்தவள்ளி நறுங்கந்த மகழ்குழியிற் பெற்றதுவாம்.

(இ-ள்.) வரம்பெற்றபின்பு அந்தக்கன்னிகை தன் செனனத்தையொழித்து நின்றகாலத்தில் இந்தப் பூமியின்பேரில் அழகிய பிணைமான் வந்ததுகண்டு கலைக் கோட்டு மகாமுனிவன் புணர்ந்தான். புணர்ந்தவுடனே, சாந்தமென்று சொல்லப் பட்ட காமவல்லிக்கொடிபோலுமழகிய ஒருபெண்ணை ஆசையுடனே அந்தப்பிணைமான் விழுமிய வள்ளிக்கிழங்கு கெல்லினகுழியில் பெற்றருளினதென்றவாறு.

பெற்றமான்பிணைபார்த்துப் பேதலித்துமயங்கிவள்ளி
நற்றழகுமதிமுகமு நாகமணி யொளிநிறமு
முற்றெமது மரபலவென் றோடினதேடியநாளே
யற்றைவனக் குறவர்கள் குழந்தையைக்கண் டருகணைந்தார்.

(இ-ள்.) அந்தப்பிணைமானானது அழகிய பெண்ணைப்பெற்று உற்றுநோக்கிப் பார்த்து பேதமையாக மயங்கிப் பூரணச்சந்திரன்போல முகமும், நாகமாணிக்கம் போல தேககாந்தியும் அழகுங்கண்டு தெரிந்து இது நம்முடையமான் சாதியல்ல வென்று தான் பெற்றகுழந்தையை யங்கே போட்டுவிட்டுப்போனது அன்றைய தினம் அங்ஙனம் வனக்குறவர்கள் அந்தக்குழந்தையைக்கண்டு அதன்பக்கத்தில் (உஅ)
வந்தார்கள்.—எ-று.

தாய்தினரித்திருவணங்கை யீன்றவர்யா ரெனவடிபார்த்
துய்தலமானிடமடிக ளொன்றுமிலாதறிந்தெடுத்தார்

பொய்தருசிற் றிடைமயிலைப் போற்றிவளர்த் தற்கொருபேர்
மெய்தருநம் வள்ளியென விளைத்தபடி விளம்புகின்றார்.

(இ-ள்.) வந்த குறவர்கள் அந்தப் பெண்குழந்தையைப் பார்த்து இந்தத் தெய்வ ரூபமான பெண்குழந்தையைப் பெற்றவர்கள் யாரென்று சுற்றிலுந் தாமரைபார்த்தார்கள் எங்கும் மானடித்தாரையே யொழிய வேறு மனிதர் தாரையில்லாததால் அந்தப்பெண்ணை யெடுத்துக்கொண்டுவந்து வளர்த்துப் பெண்ணுக்கொரு பேரிடும்படி காரணார்த்தமாக வள்ளிக்கிழங்கு கெல்லிய குழியிலிட்டபடியினாலே வள்ளியம்மன் என்றும் திருப்பேரிட்டு யாவரும் வாழ்த்தியழைத்தார்கள்.—எ-று. (௫௰)

அப்பெயரிட்ட முதமொழிக் குமுதமலர்க்கனியணிவாய்ச்
செப்புமுலைத் திங்களுதற் செங்கைமலர்ச் சங்கமடற்
றப்புவிழிப் பொன்கமலத் தலர்வதன நிலவிதழ்பெற்
றிப்படியிற் றிருவெனப்பன் னிருவயதாற் றிலகுகின்றாள்.

(இ-ள்.) அப்படிப்பெயரிட்டு அமுர்தம்போன்ற மொழியும், குமுதப்பூவனைய கனிவாயும், சொர்ன்ன சிமிழன்ன முலைகளும், பிறையொத்த நெற்றியு காந்தள்மலரிசைந்த சிவந்த கைகளும், வலபுரிச்சங்கை நிகர்த்த கழுத்தும், அஸ்திரமனைய கண்களும், கமலமலர் நேர்முகமுச் சுருக்கம்பூவொத்த பதருமும், அழகுபெற இந்தப்பிரகாரம் அதிரூப சவுந்தரியமாக பூலோகலட்சுமியென்றும் யாரும் புகழ்ந்து சொல்ல வளர்ந்து பன்னிரண்டுவயதாகி யொளிபொருந்தி விளங்காநின்றாள் வள்ளியம்மன்.

அவ்வயதிற் பெண்ணரசை யணிப்பவள மலையொருபால்
மைவதியும் வச்சிரமலை மாணிக்கமலையிருகாற்
பௌவமரகதமலையோர் பாங்குநடுக் கற்பகக்காச்
செவ்விமலைய தனுப்பண் செழுங்கனகப் பரண்மேசர்த்தார்.

(இ-ள்.) பன்னிரண்டுவயதான பெண்ணரசியான வள்ளியம்மனை அந்தமலைக் குறவர்கள் பவளமலையொருபுறம் மேகமொய்த்த வச்சிரமலையும், மாணிக்கமலையும் இரண்டுபக்கமும் பொருந்தாநிற்க அழகிய மரகதமலைச்சாரலி லொருபுறத்தில் விளங்காநின்ற ஒப்பிய பூங்காவனத்தில் செவ்வியமலை பூமிநடுவில் செழுமையுடைய சொர்ன்னமயமான தொருபரண்போட்டு வைத்தார்கள்.—எ-று. (௫௧)

இதன்மீது சந்தனக்கா லிடைநிறுத்திப்பொற் சுவரிட்
டதன்மீதுகொண்டவர் பாய்கருணைநிதியெனச்சொரிந்து
மதமேவுகரிக்கோட்டின் மணியழுத்துக்கொடுங்கைவைத்து
விதமேவு நவமணியால் வேய்ந்துமலர் விதானித்தார்.

(இ-ள்.) அப்படி யழகுபெறப்போட்ட பரணின்மீது சந்தனக்கால் நடுவிருத்திபொன் சுவரமைத்து அதன்மேற்கொண்டு சிவனது தோழரருளிய நிதிப்போலப் பொழிந்து மதம்பொருந்திய யானைக்கொம்புகளால் மணியழுத்திய கொடுங்கைவைத்து விதவிதமான நவரத்தினங்களால்மேய்ந்து பலபுஷ்பங்களா லலங்கரித்தார்கள்.—எ-று. (௫௨)

அவ்விதனிற் கொவ்வையிதழ் மவ்வனகையமுதசுவைச்
செவ்விதனித் திடுகிளவித் திருந்திழையைக் கொணர்ந்திருத்தி
கவ்விதனித் திடுநயன நங்கையரைப் பாங்குவைத்து
யிவ்விதனின் தொடுமணிக்க லேமகவண் கரங்கொடுத்தார்.

(இ-ள்) அப்படி அலங்கிர்தஞ் செய்தழகிய பரணிமேலே கோவைக்கனி போலதரமும், முல்லையரும்புகள்போற் பல்வரிசையும், அமிர்தரசத்தைப் பழித்த



மிருதுவான வசனமுடைய திருந்திழைபாகிய வள்ளியம்மையை அழைத்துக் கொண்டுவந்தயிருத்தி மான்பார்வையைப்பழிக்கும் கண்களையுடைய சிலபெண்களை அவளுக்குத் துணைப் பாங்கிமாராகவைத்து அந்தப்பரணின் மேல்நின்று மோட்டுவதாக வன்பமுடனே பலமாணிக்கக்கல்லுகளும் பொன்னாற்செய்த கவணும் கைக்கொடுத்தார்கள் குறவர்கள்.—எ-று. (௫௩)

வேறு.

புனமென்கிளிகா ளாலோலம் பூவைத்தொகைக ளாலோலங்
கனமின் பிணைகாளாலோலம் கானக்குயில்காளாலோலம்
வனமென் மயில்களாலோலம் வரையின் பிடிகாளாலோலம்
தினைதின் கரிகாளாலோலஞ் செறியுங்கலைகாளாலோலம்.

(இ-ள்.) அந்தப்பரண்மீது வள்ளியம்மனின்று கவண்கல்வீசி லோலஞ் செய்வதெப்படியென்றால், இந்தப்புனத்தில் மெல்லிய கிளிக்கூட்டங்களா லோலமாலோலம், நாகணவாய்ப்புள்ளி மான்களாலோலமாலோலம், திரட்சியுடைய மெல்லிய பிணைமான்களாலோலம், கானக்கருங்குயில் தோகைகளாலோலம், வனத்தில் மெல்லியமயில் பேடைகளாலோலம், இந்தமலையில் திரிகின்ற பிடியானைத் திரள்களாலோலம், இப்புனத்தில், தினைகள் தின்கின்ற யானைகளாலோலம், நெருக்கமாகவருகின்ற கலைமான் கூட்டங்களாலோலமாலோலம் என்றாள்.-எ-று.

மரையிற்கிளைகா ளாலோலம் மாடப்புறாவீ ராலோலம்
குருவித்திரள்காளாலோலங் கோலத்தோகைகாளாலோலஞ்
திரிபுட்கணங்காளாலோலஞ் சேவற்பெடைகாளாலோலம்
அருவிக்கிரிமீ திவ்வகையின் றாயோவென்னுங் குரலெழுமால்.

(இ-ள்.) மான்மறைக்கூட்டங்களா லோலமாலோலம், மாடப்புறாவினங்களாலோலம், குருவிக்கூட்டங்களா லோலம், காட்டுப்பன்றி தோகைகளாலோலம், மென்றிப்படி யங்கன மறிவியிரகுகாளுங்கோழி சேவற்பெடைகளா லோலம், மென்றிப்படி சொர்ன்னக்கவணில்மாணிக்கக் கல்வைத்து மலைச்சாரலிலிட்ட பரணின்மேல்நின்று சொர்ன்னக்கவணில்மாணிக்கக் கல்வைத்துச் சுழற்றி எறிந்து குயில்போன்ற குரலோசையால் ஆலாலோமென்று தொனிகளெழுப்பினாள் வள்ளியம்மன்.—எ-று. (௫௪)

எழுந்தவொலிகேட் டுலர்ந்தமரம் யாவுந்தழைத்துத் தழைந்துமலர்க்
கொழுந்திணைநறந்து தேனொழுகக் குன்றங்கனிந்து குழைந்துருக
வழுந்துங்கிளியுங் குயிலினமு மடுங்கற்படினும் பறவாமல்
விழுந்துமெழுந்துங் குறமடவார் வேந்தின்பணையைய கலாதால்.

(இ-ள்.) இப்படி வள்ளியம்மன் ஆயலோட்டும் குரலோசையைக் கேட்டு வலர்ந்த மரங்களெல்லாம் பசுமையுண்டாய் நன்றாய்த் தழைத்து மிருதுவான கொத்து கொழுந்துகளாக வோங்கியெழுந்து புஷ்பித்துத் தேனொழுகச்செய்ய பலமலைகளெல்லாம் கனிந்து மெழுகுபோலுருகிக் கதிர்களில் மொய்த்தெழுந்து கிளிகளும் குயிலினங்களும் அவளெறிந்த கவண்கல்விசையாகவந்து மேலேபட்ட போது மெழுந்து பாவாமல் விழுந்தெழுந்து அங்ஙனம் குறமகளிற் காசியாகிய வள்ளியம்மன் குரலோசையைக் கேட்டதிசயப்பட்டு அந்தப்புனத்தை விட்டுப் பிரியாமல் வசிக்கும்.—எ-று. (௫௫)

...க்குரலினிசைவழியே யபராபதிநின் றருந்தவத்தோர்
...ந்தத்தலகன்னிடையினி லிரவுந்தவகாரதமுனிவன்

வந்தப்புனத்துவள்ளியெனு மடவார்க்கரசை மழைதிரண்ட
கந்தக்குழலை மொழிக்கரும்பைக் கண்டான்பவங்கள் காணுதான்.

(இ-ள்.) அந்தவள்ளியம்மன் குரலோசை வழியாக இந்திரபுரியினின்றும் புறப்பட்டு எங்கெங்குஞ் சஞ்சரித்து அரியதவமுனிவர் செய்யும் தவமகிமைகளைக் கண்டவர்களுடனே வினவிக்குலாவிவருகின்ற தவமுடைய நாரதமுனிவன்வந்து அந்தத் தினைப்புனத்தில் வள்ளியம்மாள் என்னும்பெண்ணை பெண்கள் சிரோமணியை மேகம்போலும் திரட்சியுடைய மணமகலாத கூந்தலையுடைய கரும்பு போலும் மிருதுவானவசனமுடைய அதிரூப சவுந்தரியத்தை கண்குளிரக்கண்டான் ஒருகாலமும் பவங்கள் காணுத்தவமுனிவன்.—எ-று. (௬௭)

கண்டான்மனமுங் கண்ணுமிகக்கனிந்தான் கனிந்தேயாமெனவுட்
கொண்டான் குமரர்தமக்காய குலப்பூங்கொடியென் றுளத்துற்றான்
றண்டாமரையாள் மருகனிடஞ் சார்ந்தான்கண்ட தன்மையெலாம்
விண்டான்விளம்ப முருகருளம் விரகானலத்தால் வெதும்பினரால்.

(இ-ள்.) வள்ளியம்மனைக் கண்ட நாரதமுனிவன் மனமுங்கண்களு மிகவுங் கனியாகக் குளிர்ந்து பக்தியுடனே இவள்நமக்கெல்லாந் தாயாகுமென்று மனதுட்கொண்டு குமாரகடவுளுக்கிசைந்த தேவியிவளென்று நினைத்து குளிர்ந்த தாமரைகளான லட்சுமிதேவி மருமகனான குமாரக்கடவுளிடத்தில்வந்து தான் கண்ட புதுமையெல்லாம் விளங்கச்சொன்னார். அப்படிச்சொன்னவுடன் முருகர் அதிமோகமாகி விரகங்கொண்டு வுள்ளம்வெதும்பினர்.—எ-று. (௬௮)

கயிலைமலையும் பணிவரையுங் கண்ணும்வரையென் றுண்ணடி
வியல்கொண்மலையிற் றினந்தினம்போய் விளையாடிய காலையில்வேலர்
புயலைப்பனைய குழலிருவிற் புருவக்கணைப்போல் விழிக்கனக
மயிலைநினைந்து வழிதேடி மயங்கிநடந்தார் மயில்பாகர்.

(இ-ள்.) கைலாசகிரியும், திருநாககிரியும், இவ்விரண்டும் தமது கண்களுக்குச் சமானமானமலையென்று தமதுள்ளத்தில்நினைத்து அன்றுயர்ந்தமலைகளில் தினந்தினம்போய் விளையாடல்செய் திருந்தகாலத்தில் வேலவர் மேகத்தைப் போன்ற நெடிய கூந்தலும், வில்லைப்போன்ற புருவங்களும், போர்செய்யும் புட்பபாணங்கள்போல கண்களும், அழகிய சொர்னக்கொடிபோன்ற சாயலையுடைய வள்ளியம்மனைநினைத்து அவளிருக்குமிடந் தேடிநடந்தார் மயில்வாகனக்கடவுள்.

வள்ளியம்மன் உற்பவச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬௮.

# வள்ளிநாயகி திருமணச் சருக்கம்.

குத்துங்கரியின் மருப்புகுத்து குழுமுங்காளக் குவையுநிலா
நித்தம்பதியுங் கழைமணியும் நெருங்கிநெருங்கி நிறைந்துசெழு
முத்தஞ்சொரிந்து மணிசொரிந்து முராலும்பசுந்தே னருவிவிழுஞ்
சத்தம்பொழியுமழைமுகிலைத் தாக்குஞ்சயிலம்பலதேடி

(இ-ள்) ஆனைகளானது கொம்புகளாற் பாய்ந்துகுத்தி உதிர்ந்தமணிமுத்துக்கள் திரட்சியாகக்குவித்து நிலாப்பிரபைசெய்ய அங்ஙனம்விளையப்பட்டமூங்கில்முத்



களும் நெருங்கிச்சொரிந்து நிறைந்து செழுமையுடைய பருமணிகளும் பொலிவுடையதாய்க்குவிந்து முரலப்பட்ட செவ்வியபசுந்தேன் ஒழுக்குமுடையதாய் அருவி யிறங்கு சத்திக்கின்றமழை மேகமண்டலத்தை யளாவிநிற்கு பலமலைகளைத் தேடி.

எட்டுப்புயத்தேழ் சத்தியர்க்கு மினிதாயா று சமையவர்க்கு
மட்டுறழைப்பா தகமகற்றும் வளர்நான்மறையாள் மூவிழியாள்
நட்டத்திருக்கா லொருத்திவன நடந்தார்கடந்தார் கடந்தாள்வேவன்
முட்டைத்துருவுங் குடைவேலின் மூனைச்சூருதிர முடைவேலர்.

(இ-ள்.) எட்டுபுயத்தையுடையவளாய்ச் சத்தமாதாவாகிய சத்திகூட்டங்களில் மேன்மையான இனியசத்தியாய் அறுசமையத்தாருக்கும் அங்கங்கே அவரவற்கு இஷ்டதெய்வமாகவிளங்கி பஞ்சபாதகங்களை தீர்க்கின்றவளாய் வளமையான சதுர் வேதப்பொருளாய்த் திருநேத்திரமுடையவளாய்த்திருநடனஞ்செய்யப்பட்டபாதங்களையுடைய அழகியதுர்க்காதேவி வசித்தாகியபாலைநிலமானசுரத்தைச் சார்ந்த விடமெங்குந்தேடிப் பெரியதாள்களில் முட்டுதை வேல்முனைமுள்ளுகள் தைத்துருவிசூரருதிரந்தோய்ந்த அயில்வேலர்கடந்துநின்றார்.—எ-று. (௨)

மாமற்கினிதாம்வனம்புகுந்து மறிமான்றனைக்கண்டு யிர்மானின்
காமர்த்துணைக்கன் றனைநினைவார் கனிவார்நஞ்சேவலைமறந்தோம்
போமிக்கணத்திலெனப்புகல்வார் பூங்கொன்றையைக்கண்டணங்கினி
தேமுற்றிடுவா ரதனிடைச்சா தாரிக்கிடைவார் நடவாராய் [றத்

(இ-ள்.) தம்முடையமாமனான விஷ்ணுவுக்கு சொந்தமான முல்லைவனத்தில் புகுந்து அங்கே குதிக்கப்பட்ட மான் பிணைகளைக்கண்டு தம்முபர்போலும்எழிலுடைய வள்ளிப்பெண்ணைநினைத்து வன்மையாவெண்ணி கனிவுநிறைந்து. நம்முடைய சேவலைமறந்து வந்தோமிங்ஙனம் மொருகணப்பொழுதிற் போகவேண்டுமென்று நினைப்பார். பூத்த பேற் கொன்றையைக்கண்டு இந்தநிறமாக அழகிய பெண்ணுடைய மேனியிருக்குமென்று முல்லைநிலத்தார் வேய்ங்குழலோசையைக் கேட்டு மெல்லமெல்ல நடந்துசென்றார் குமாரவேள்.—எ-று (௩)

மருதப்பழனம் புகப்பயந்த வகைபொற்பதங்க டடுமாறிக்
கருதிப்புணர்ந்த மடந்தைதந்தை கண்டாற்றவறென் றுளமயிர்த்த
பொருசற்குணம்போ லுறநடந்தா ருயர்நீர்க்கமல முதுழுமலர்
வருவிற்றடங்கண் வளமுலையும் வதனத்தழகு மெனமகிழ்வார்.

(இ-ள்) மருதநிலத்திற்புகுந்து பயந்தவர்போல் கால்கள்தடுமாற கருதிச்சேர்ந்த தெய்வசேனைப்பெண் தகப்பனான இந்திரன்கண்டால் மோசமென்று உள்ளத்திலயர்ப்புடைய ஒரு தத்துவகுணம்போலும் வியந்துநடந்தார். அங்ஙனம்நிறைந்த நீர்க்கயங்களில் தாமரைப்பூ முகிழுமுற்றிய முகிழ்மலர்ச்சியுங்கண்டு செவ்வரி பொருந்திய கருந்தடங்கண்ணினையுடைய வள்ளிப்பெண்முலைகளும் முகமும் வப்படியிருக்குமென்று உவமித்து மகிழ்வாய் நடந்தார் குமாரவேள்.—எ-று. (௪)

செந்திற் றுறைவர்பணியசலச் செவ்வேள்முருகர் கைவேலர்
அந்தத்துறையோ வலவோவென் றுழிக்கழிசூழ்பதியேறி
வந்தத்தனை போகனமுந்நீர்ச் சுழியுமறலு மகரமுங்கண்
டுந்திச்சுழியுங்குழலுநில வுதிக்குங்குழையு மெனவியப்பார்.

நெய்தநிலத்துக்குவந்து கடற்கரையிலிருக்கும் திருச்செந்தூரிலும் திரு லும் வசிக்கின்றவர் அழகிய செவ்வேள் முருகர் வேலாயுதக்கையர் அங்

தச்சமுத்தொக்கரைத் தரையோயல்லவோவென் றய்யமுற்ற சூழ்ந்த கடற் கரைப் பட்டினங்களெல்லாம் முலாவியோடமேறிக்கடந்து போம்பொழுது தாம் மிகுந்த சோர்வுமாக அர்ச்சுனை கருமணவொழுக்கமும் மகாமுங்கண்டு அந்த வள்ளிப்பெண்ணினுந்திச்சுழியும் நெடியகூந்தலும் பிரபைசெய்யுங் குழைகளும் இவ்வாறிருக்குமென்று வியந்தார் முருகர்.—எ-று. (௫)

வனத்திற்குறவரிடந்தேடி வழங்கூர்வள்ளி மலைதேடி
மனத்திற்குறப்பெண் வடிவிருத்தி மலர்க்கணிடத்தவ்வாறுய்ப்
புனத்தட்டநம்வழிதேடி போவார்வருவார் தனைத்தேடி
தனப்பொற்கொடியின் குரல்தேடித் தடந்தாள்வருந்தி நடந்தாரால்.

(இ-ள்) குறவர்களிருக்கும் வனங்களைத்தேடி வளமைகூர்ந்த வள்ளிமலையே தென்று தமது மனதில்வள்ளிப்பெண் வடிவழகையிருத்தி மலர்போன்றகண்களிடத்திலுமவளிருமைப்படி அவ்வனங்களில்வருவார் போவார்களையும்விசாரித்துத்தேடி தனபாரம்பொருந்திய பொற்கொடியின் இனியதால்ஓசையைநாடித் தேடி பெரியபாதங்கள் வருத்தமுறநடந்துசென்றார் வேலவர்.—எ-று. (௬)

வேறு

வன்னக்குமரன் றிணைமைப வழைகயின்வழிதேடி
யன்னப்பெடையைக் குறமின்னைக் காணுதேவிலைக்
கன்னத்தமுதங்கருகிப் பருகுங்களிதேனைப்பப்
பொன்னற்கவணின்றொனியுங் குரலும்புகவாழ்ந்தார்.

(இ-ள்) இவ்வண்ணமான குமரக்கடவுள் ஐந்துநிலங்களையாவையுந்தேடி அன்னப்பேடை குறவள்ளிப் பெண்ணைக் காணாது முழுதுந்தேடிப் போகும்போது காதுகளில்திவ்வியாமுர்தம் பருகுவதுபோலும் அழகுபெற அங்ஙனம் அவள் வீசியெறிந்த சொர்னக்கவண் கல்லோசையும் ஆலோலமென்னுங் குரலோசையும் செவிகளிற்கேட்டு மிகுந்த மனமகிழ்ச்சியாக வாழ்ந்தேன் வாழ்ந்தேனென்று சொல்லி நடந்தார்.—எ-று. (௭)

கானக்கரிகாள் பிடிகாள்பிணைகாள் கலைமான்காள்
மானத்கலைவி யிருக்கும்வரையின் வழிகாட்டு
மேனக்கிளிகாள் பெடைகாள் நீரேயினிகாளீர்
யாளிப்படியெப் பொழுதேபெறுவே னிசையீரே.

(இ-ள்) கானகத்தில் திரியாநின்ற யானைக்கூட்டங்காள் பிடியினங்காள் பிணைமான் றொகுதிகாள் மலைமான்காள் நீங்களிந்தமானீன்ற கலைவியாகிய வள்ளிப் பெண்ணிருக்கும் மலைக்குவழியைக் காட்டுவீர் தினைக்கதிரைக்கொய்யுங்கிளிகாள் கிளிப்பேடைகாள் குருவிக்கூட்டங்காள் நீங்களினிதாக வாழ்வீர்கள் மானிப் படித்தேடித்திரிகிறேன் எப்போதவளைக்காணப்பெறுவேன் சொல்லுமின்களென் றுநடந்தார் முருகவேள்.—எ-று. (௮)

என்றக்குரலின்வழிசென் றெயினர்க்குயிர்போலும்
குன்றத்தமுதைக் கொடியைப்பிடியைக் குலமாதைத்
தென்றற்குயிலைச் சயிலத்திருவைச் செழுமானின்
கன்றைக்கனியைக் கனிசொற்கிளியைக் கண்டாரால்.

(இ-ள்) என்றிப்படி யவள்குரலோசை வழியேசென்றுசேர்ந்து குறவர்களுக் குயிர்போலு மலைப்பெண்ணமுர்தக் காமவல்லிக் கொடிபோன்றழகிய பிடியானை



போல் இடையையுடையவளை உசிதமான குலமடந்தையைத் தென்றல் வீசும் போது கூவுகின்ற குயில்போலும் மலைத்திருமகளைச் செழுமையான மானீன்ற [illegible] பெண்கனியைக்கனிந்த சொற்பேசும் பெண்கிளியை அழகிய வள்ளிப் [illegible]த் தமது கண்குளிரக்கண்டார் முருகேசன.—எ-று. (௯)

[illegible]ணுகியபன் னிருதேவருமக் கவின்மாதின்
மண்ணுவழகா ரமுதம்பருகி வளங்கூர்ந்தார்
பண்ணுர்மொழியின் மருவுந்தமநோய் பாழாக
உண்ணுடினர்விண் ணுடருவப்பார் சிலசொல்வார்.

(இ-ள்) கண்களாகிய பன்னிரண்டு தேவரும் அந்த அழகிய வள்ளிப்பெண் ணுடைய அதிரூப சவுந்தரியமான நிறைந்த அழகமுர்தம்பருகி வளமைகூர்ந் தார்கள். பண்ணிசைபோலு மிருதுவான மொழியையுடையவளை மருவும்படித் தமது விரகநோய் தீரும்படி உள்ளத்திலெண்ணி விண்ணுலகத்தார் வணங்கும் குமரீசர் சொல்லத்தொடங்கினார்.—எ-று. (௰)

இந்தப்புன மீதுதனந்தனி யிப்படிவைகில்
நந்திக்குரலால் மொழியால்விழியால் நடைதன்னால்
முந்தப்புள்ளால் மாவாலைநாள் முழுதும்போ
யந்தத்துறவ ரருந்தவமுற்று மழியாதோ.

(இ-ள்) வாராய்பெண்ணே நீயிந்தப் புனக்காட்டில் அழகிய பரணின்பேரில் இப்படிக்கிருந்தாலும்முடைய குரலோசையால் நீர் பேசு மிருதுவசனங்களால் கண்களினுடைய பார்வையால் நடையால் முந்துபட்சிகளால் மிருகங்கள்யாவும் போய்த் துறவாகிய முனிவர்கள்செய்யும் அரியதவமுழுதும் அழியாதோ.—எ-று

பொன்னங்கிளியைப் பொருளல்லனவிப் புனமீதே
தன்னந்தனிவைத் தந்தோகுறவர் சதித்தாரோ
அன்னம்படரும் பிரமன்மதியு மதுவானு
லென்னிங்கறிவற் றிடும்வேடுவரோ ரிசைப்போமால்.

(இ-ள்) சொர்னக்கிளிபோலும் அழகிய பெண்ணே பொருளல்லாத இந்தப் புனத்தில் பாணின்மீதில் தனியாக இருக்கவைத்து அந்த மலைக்குறவர்கள் சதி மோசஞ்செய்தார்களோ அன்னவாகனனான பிரமதேவன் விதியானமதியும் அது வேயானால் இங்கே யறிவில்லாத வேடுவர்களை என்னென்று சொல்வோம். எ-று

பொன்மேலாய்மணி யெல்லாங்கீழாய்ப் பொற்காந்தி
மின்மேலாயொரு மேகங்கண்டது மெய்யன்றோ
தென்மேலாமரவிந் தத்துள்ளே செங்காவி
நன்மேதகைதர வாம்பல்மலர்ந்தது நவமாயால்.

(இ-ள்) சொர்னமெல்லாம் மேலாகவும் இரத்தினமணியெல்லாங் கீழாக வும் பொன்னொளிக்காந்தியையுடைத்தாய் மின்னலுக்கு மேலாக ஒரு கார்மேகங் கண்டதுமெய்யாமல்லவோ அழகுநிறைந்துவார்ந்தஒருதாமரைப் பூவினுள்ளேசெ ங்காவிய நீலோற்பல புட்பங்களும் நலமாகப்பொருந்தி விருப்பமுற்றுமொரு செங் [illegible]பம் அலர்ந்திருப்ப திதுவொரு நல்லபுதுமையாம்.—எ-று. (௧௨)

[illegible]மல்வல்லிய தல்லால்மெல்வல் லியன்மீதே
[illegible]மியபொன் மலைகளிரண்டிது கண்டோமால்

சிலைமேற்பிறையும் பிறைமேலிடுசிந் தூரவாய்ப்பும்
நலமேதகையிவை நாகதலத்துங் காணேமால்.

(இ-ள்) மலைமேலே கொடியிருக்குமல்லாமல் மெல்லிய கொடியின்மேலே கலைபொருந்திய இரண்டுபொன்மலையிருப்பது இதுவுமொரு அதிசயங்கண்டோம். வில்லின்மேலே பிறையும் பிறைமேலிட்ட சிந்தூரத்தி லதவாய்ப்பும் நலமாகப் பொருந்திய அழகானவிவை தெய்வலோகத்திலும் நான்காணேன்.—எ-று. (கச)

தேவர்ப்பதிபோ செம்பொற்கிரியோ தேவேந்தின்
பூவைக்கிடமோ புணரித்தலமோ புனமோவென்
னுவற்கிதுவென் றறிதற்கரிதா யமுதூறுங்
கோவைக்கனிகண் டழுக்கழகாங் கொடியென்றார்.

(இ-ள்.) தேவநகரமோ செம்பொன் மேருவோ தெய்வீகமான இந்திரையாகிய லட்சுமிக்கிடமான தாமரைப்பூவோ கடலில் மொய்த்த புனந்தானோ இவற்குரித்தான தலம். என்னுடைய ஆவலாசை மிகுதியினு லிதுவென்றறிந்து சொல்லுவதற்கரிதாகிய அமுர்தமூறும், கோவைக்கனிபோலும், அதரமழகு பெற்றிருப்பதுகண்டு அழகுக்கெல்லாம் மேலான கட்டழகாகிய காமவல்லிக் கொடிபோன்றவளென்று சொன்னார் குமாரசுவாமி.—எ-று. (கரு)

சங்கத்தொனியே குயிலைத்தருமோ மாவன்றோ
லிங்கிப்படியா னெங்குங்காணே னியனல்லோ
கங்குற்பொழுதோர் பகலிற்பெறுமோ கண்டாலுந்
திங்கப்பிறையு மதியும்வருமோ சொலுமென்றார்.

(இ-ள்.) சங்குத் துவாரமானது குயிலோசையைத்தருமோ மாவான் திருவல்லலோ எங்கே இந்தப்பிரகாரம் நானெங்குங்காணேன். நிகழ்வையுடைய மடநல்லீர் இராப்பொழுதான தொருபகலில் வருமோ அப்படிவரக்கண்டாலும் உசிதமான பிறையும் பூரணச்சந்திரனும் வருமோ தெரிந்துசொல்லுமென்றார் குமாரர்.

தினையேயமணியுந் தின்றுதென்றப் புனமீதே
யெனையோலமிடச் சொல்வீரவற் கெளியேன்யான்
வினையோடுலவுங் களிறுங்கலையு மெனப்புள்ளும்
நினையாதிவிடத் தணுகாதிங்ஙன னிற்கின்றேன்.

(இ-ள்.) இந்தப்புனத்தில் ஒருமணியுங் குருவிகள் தின்னுதபடிக்கு என்னை இதன்மேலே ஒலமிடச்சொல்வீராக. உமதேவலுக்கு எளியவன்யான் வினையோடும் வந்துலாவும் யானைகளுங் கலைமான்களும், மெல்லிய குருவித்திரள்களும், நினையாமல் இவ்விடத்திலே அணுகிவாராமல் காவலாய்நிற்கிறேன். பெண்ணே என்றுசொன்னார்.—எ-று, (கஎ)

எறியுங்கவணுக் கடுமுத்தங்க ளெடுக்கோகைச்
செறியும்பந்து களங்காடற்குத் தெரிகோதென்
வெறிநன்மலரா மென்பூங்காவில் விளையாட
நறுமென்சிற்றி லிழைக்கோசொல்லீர் நல்லீரே.

(இ-ள்.) நீ எறியுங் கவணுக்கேற்ற பெரியமுத்துக்களாக எடுத்துக்கொடுக்கவோ உமது கையிற்செறிந்த பந்துகள் கழங்குகளாடுவதற்கு இசைவு தெரிந்து செய்கவோ. மணமுந்தேனும் பொருந்திய நல்ல நல்ல புஷ்பங்களால் மெல்லிய



பூஞ்சோலையில் விளையாடத்தக்கதாக நறியமணலிற்சிற்றிலிழைக்கவோ இவைகளில் இன்னது செய்யென்று ஏவல்செய்வீராக.—எ-று. (கஅ)

பிடிபோல்வருகற் றிடை நோகாது பிடிக்கோமென்
கொடிபோலிடையின் கோசிகமணிகோ கற்பூரப்
பொடிபோதலரின் பொதுளிப்புனைகோ குழன்மீதே
வெடிபோதிடுகோ வினைகூர்விழியீர் மொழியீரே.

(இ-ள்.) பிடியானையைப்போல் மெல்லநடந்து வருகிறபோது உமது சிற்றிடை நோகாமற் பிடிக்கவோ மெல்லிய கொடிபோலு மருங்குறப்பட்டாடை கொசிகம் வைத்துடுத்தவோ கற்பூரப்பொடியும், மலர்த்தாதுகளும் கலந்து மார்பிலப்பவோ கூந்தல்மீதில் அலர்ந்த புஷ்பங்களைச்சூடி அலங்கரிக்கவோ காமனைய் செயுங் கூரிய கண்களையுடையீர் சொல்லியருளுவீர்.—எ-று. (ககூ)

மயினீயன்றோ வென்புயமலைமேல் மருவாதென்
பயில்காமரினென் றுயர்கண்டொன்றும் பகரீரால்
வெயில்வாயமுதக் குமுதமலர்ந்தால் வினையன்றோ
குயில்வாசகமுங் கிளியுங்குன்றுங் குறிகொண்டோ.

(இ-ள்) நீ ரழகிய பெண்மயிலல்லவோ என்னுடைய புயமலைமேல் வந்து மருவாததென்ன? இங்ஙனம் பயின்றுலாவும், காமனையிற்படுமென் துயர்கண்டு ஒரு வார்த்தை சொல்லாமலிருக்கின்றீரே வெய்யலெரிக்கும்பொழுதில் அமுதச்செவ்வாயாகிய குமுதபட்பம மலர்ந்ததில் வினையன்றோ குயிலோசை யமுதவாசகமுடைய கிளிமொழிகளும் குன்றிப்போமென்று சொன்னார்.—எ-று. (உ0)

பொன்னுகியநீர் புனமென்றினையைக் காக்கின்று
லன்னே பொன்னைக் காத்தற்கருளா ரடல்வேடர்
பன்னாளினும்யான் காத்தற்குரியான் பரிவாலே
பின்னாரமுதே யினியான்போதல் விதியன்றே.

(இ-ள்.) பொனலை யொப்பாகிய நீரிந்தப்புனத்தில் மெல்லிய தினையைக் காத்திருந்தாயாகில் அன்னே பொன்னைக்காத் தருள்வதற்குச் சற்றுமிரக்கமில்லாதவர்கள் குரோதமுடைய வேடர்கள் பலநாளும் நான் காத்தருள்வதற்கு உரியவன் பெண்ணாரமுதேயினியாமும்மைவிட்டுப்போகுதல்விதிமுறைமையல்லவே.-எ-று.

நாமின்றிருவோ ரன்னந்தனியே நண்ணுங்காற்
கோமன்னிய வேடுவர்குட் பெரியோன் கொடுவேடன்
விமன்கணையா லெம்மைப் பொருதே வினையார்க்குந்
தேமெல்லிய ரெமமூர்வயினுமுஞ் செல்வோமே

(இ-ள்.) நாமின்று இருவருந் தனியே யிசைவாக நண்ணும்போது குரோதமுடைய வேடர்களுக்குள் பெரியவனானவன் மகாகொடியவேடன் வீமனைப்போ[illegible]யா லெம்மைப்பொருதி வினைசெய்வானுகையால் தேன் போலும் [illegible]டையீர் யெம்மூரிடத்திற் போவோமோ.—எ-று. (உஉ)

[illegible] வேலவர்நின் றின்ன விரந்தே யிசையாமுன்
கனமேவியகூற் றென்னவிருங் கானகவேடர்

புனமீ தொளியிங் புகுதும் படிகண் டிகல்வேல
ரினமேவிய பைங்கிளிசேர் வேங்கையொன் றினவரானார்.

(இ-ள்.) என்றிப்படி வேலவர் நின்றாரீக்கமாய்ச் சொல்லி இசையாமுன்னம் கனம்பொருந்திய இயமன் கூட்டங்கள் போலுங்கொடிய கானக்குற வேடர்கள் அந்தத் தினைப்புனத்தில் சத்தங்களுடனே புகுந்துவரக்கண்டு வெற்றிவேல் முருகர் இனம்பொருந்திய பச்சைக்கிளிகள்வந்து சேர்ந்திருக்கும் ஒருவேங்கைமரமானார்.—எ-று. (உ௫)

வந்துபுகுந்த மர்வேடுவர்கவன் டிம்மரமேதென்
றந்தவுளக்களயர்த்தடுகென்பா ரடலென்பா
ரிந்தமரம்புன வள்ளிக்கினிதா நிடுநீழற்
பந்திவிளங்கி யிருப்பதெனத்தாம் பரிவுற்றார்.

(இ-ள்.) வந்துபுகுந்த கொடியவேடர்களிந்த வேங்கைமரமேது புதிதாயிருக்கிறதென்று தங்கள் தங்கள் உள்ளத்தி லய்யமுற்றுச் சிலரிந்தமரத்தை வெட்டுமென்பார்கள் சிலர் வெட்டவேண்டாமென்பார்கள் இந்தமரம் புனத்தில் வள்ளியம்மைக் கினிதாக நிழல்செய்து நாமெல்லாம் வரிசையாகப் பந்திவிளங்கி யிருப்பதற்கும் ஆகுமென்று மனதிரங்கிப் பரிவுகூர்ந்தார்.—எ-று. (உ௬)

பரியுந் தேனுங் கனியுங் கந்தப் பயன்யாவும்
வரியுங் கோதைக் குந்தளவல்லி மலர்கைக்கீய்ந்
தரியும் வலியு மாளியுமேகும் படிபோலத்
தெரியுங் கணைவிற் குறவர் நடந்தார் சிற்றூரில்.

(இ-ள்.) பரிவாகத்தேனும் கந்தமூலபலன்கள்யாவும் புட்பம்பொருந்திய பின்னற் சடைக்கூந்தலையுடைய வள்ளியம்மன் மலர்க்கையிற்கொடுத்து சிங்கங்களும் புலிகளும் யானைகளும் போவதுபோல அம்புபூண்ட சிலைகளையுடைய குறவர்கள் போனார்கள் தங்கள்சிற்றூரில்.—எ-று. (உ௭)

கணியாய்நிற்கு மொர்காமக் கள்வன் கதிர்வேலர்
பணியாகிக்கந் தருவமணத்தின் பரிவாலே
தணியாமீரெண் வயதிற்காளை யழகாகி
மணியார் தூரியி னெழுதற் கரிதாம் வடிவானார்.

(இ-ள்.) வேங்கைமரமாகின்ற ஒரு காமக்கள்வனான கதிர்வேல்முருகர் பணிவதாகி காந்திருவமணத்தி லிச்சைப்பட்டு மணந்தணிந்து அந்தரூபத்தை மாற்றி அழகுபொருந்த மணியிழைத்த தூரிகைக்கோலினு மெழுதுவதற்கு அரிதான சவுந்திரிக சொரூபமெடுத்து நின்றார்—எ-று. (உ௮)

வேடுவரொம்மை யடாதருள் செய்தீர் மின்போல்வீர்
கூடியெமக்குயிர் தருவீர் மருவீர் குறைகேளீர்
பாடகமென்னும் பைம்பொன்னடியின் பணிகூர்ந்து
நாடுவதல்லாற் போதலுமுண்டோ நண்பாகீர்.

(இ-ள்.) ஒய் பெண்ணே வந்தவேடுவரென்னைக் கொல்லாதபடி [illegible] அருளினீர் மின்னற்கொடிபோலும் ஒளியையுடைய நீர் இப்போது கூடியெமக்கு உயிர் கொடுப்பீர். மணம்பொருந்தியகூந்தலையுடையீர் என்குறைகேட்டீர் உம்முடைய பாடகந்தரித்தழகிய பாதங்களிற்படிந்து நாடிச்சேர்வதல்லாமல் இனி சும்மாபோவதுண்டோ இல்லை ஆகையால் மருவும்படி யன்புசெய்வீராக.—எ-று.



இன்னம்வேடுவ ரெய்திற் றமியர்க் கிடராகு
மன்னம்போ லென்னுடனீர் வந்தாலாகாதோ
பொன்னின் மலையும் வெள்ளிக்கிரியும் பொன்மேடை
வன்னத்திரு மாளிகையுந் தருவேன் வருகென்றார்.

(இ-ள்.) இன்னமொருதரம் அந்தவேடுவர்கள் வந்தா லடியேனுக்கிடராகும் ஆதலால் இப்போது அன்னம்போல்நடந்து என்னுடனேநீர் வந்தாலாகாதோ அப்படி நீர்வந்தால் பொன்மலையும், வெள்ளிமலையும், பொன்மேடைகளும், சித்திர வன்னத் திருமாளிகைகள் மற்றுந் தருவேன். வாரீர் வாரீரென்று சொன்னார் முருகர்.—எ-று. (உ௯)

என்னவ முருகரிரந்து பரிந்தா தரவோது
மன்னறி மொழிகேட் டன்னமுரைக்கு மயன்மாற்றந்
துன்னியவேடர் நிரைத்துவரும்போர்த் தொனிகேளீ
ரென்னுரை நிமிடத் துமதுயிர் விண்ணிற் கிடுவாரால்.

(இ-ள்.) என்றிப்படி அந்தமுருகவேள் விரைந்து பரிந்து ஆதரவாகிய ஆசை வார்த்தைகள் சொல்லும் அந்தநெறிமுறைமையானவசனங்களைக்கேட்டு அன்னம் போலும் வள்ளிப்பெண் சொல்லுகிறாள். வாரீர் குமாரரே கூட்டமாகவேடர்களிரைந்து கொண்டு வருகிற இகலோசைத் தொனிகளைக்கேளீர் ஒருநிமிஷத்திலே உம்முடைய உயிரைவிண்ணிற்சேர்வதாகச்சொல்லுவார்களென்று சொல்லினள் வள்ளியம்மன்.—எ-று.

ஏகுதியாசே யெம்மையு நும்மையு மிகல்வேட
ராகுதிகொள்வா ரமருக்கிளையா ரெனும்வேலை
மாகுதை வின்னு ணெவிவா ணெவியின் மலிவாகச்
சேகுருகாலன் றிரளனவேடத் திரளீண்ட.

(இ-ள்) போவீர் பாலகுமாரரே நம்மிருவரையும் அந்தக்கொடிய பரிகளுடைய வேடர்கள் வதைசெய்வார்கள்.போருக்கிளைக்கமாட்டார்களென்றிப்படி வள்ளிப் பெண் சொன்னபோது விற்குதைகளில் நாணிகள்பூட்டிய குணத்தொனிவானி லிடிச்சத்தம்போலும் மிகுதியான குரூரத்தையுடைய எமபடர்கள் போலும் அந்த வேடர்கூட்டங்கள் அங்கணம் நண்டிவந்தார்கள்.—எ-று. (௩0)

வெண்ணரை யுடலன் மெய்கூன் வடிவன் விரதத்தின்
கண்ணுறு குழியன் கைவிழினாலன் கைக்கோல
னண்ணு முன்னூலின னக்கிழவன் குறமாதின்
மண்ணியகிழவன் வழிவிழு கிழவன் வடிவானார்.

(இ-ள்) அப்படி வருவதுகண்டு மிகவும் வெளுத்தகாமயிர் பொருந்திய முடியையுடையவனாய் கூனிவளைந்து தளர்ந்த மேனியனாகத் தவமுனிவனாக குழிக்கண்ணனாக தோளின்வழியே சரிந்த முன்னூலனாகக் கோல்பிடித்தூன்றி நடுங்கித் தத்தித்தமொழி தளர்நடையனாக ஒரு பிராமணக்கிழவன்போலுங் குறிஞ்சிக்கிழவனான முருகவேள் குறவள்ளிக்குரிய கிழவனாக அங்கே ஒரு வழியில் தவறிவிழுங்கிழவனாக வடிவாகி நின்றார் முருகக்கடவுள்.—எ-று. (௩௧)

அவ்வடிவாகிப் பௌவநிகர்ந்தெழு மடல்வேடர்
கவ்வையில் வரல் கண்டிவ் வுருவோடு கைசேர்ந்தே

மெய்விழும் நரை திரைவேடன் வேடர்க்கரசான
தெவ்வினர் முன்போ யாசிமொழிந்தார் செவ்வேலர்.

(இ-ள்) அந்த வடிவாகிக் கடல்பொங்கி யெழும்பிவந்ததுபோலும் வேடர்கள் குரூரமாக வருவதுகண்டு அங்ஙனம் தெரிய தவக்கிழவனாக அவர்கள் பக்கத்தில் போய்ச்சேர்ந்து மேனியெங்கும் நரை திரை மிகுந்து வேடர்க்கரசனான மறவர் முன் போய் ஆசீர்வாதஞ்சொன்னார் வடிவேலர்.—எ-று. (௬௨)

எப்பதி யிப்பதி யென் கொலடைந்தீர் யார்நீரென்
றொப்பது வேடர்க் கரசனியோத வுரைக்கின்றா
ரப்பவிவ் வரையிற் கன்னிகைதீர்த்த மாடற்கே
யைப்புவிநாடி யெழுந்தனமென்று பகர்ந்தாரால்.

(இ-ள்) ஆசீர்வதித்த முனிவனைப்பார்த்து நீரிருப்பதெந்தத் தலம் இங்கே யென்னசோலியாய் வந்தனுகினீர் யார் நீரென்று குற வேடுவராஜன் கேட்க ஓய் வேடுவராசனே நாமிந்தமலையில் கன்னிகா தீர்த்தமாடுவதற்கு பூமண்டலமெங்கும் சஞ்சரித்து தீர்த்தயாத்திரையாக இங்கே நாடித்தேடி எழுந்தருளிவந்தோம் என்றுசொன்னார் கிழமுனிவரான குமரதேவர்.—எ-று. (௬௩)

ஆகுக ஆகுக ஆகுக ஆகுக அறவோவென்
றோகையிலேறிய வள்ளிக்குறுகி யுறைசெய்தரார்
பாகுறு தேனுந் தினையாவுங்கைப் பயனீந்தார்
மாகருணையினாய் கைப்பெற்றா ரவ்வடிவேலர்.

(இ-ள்) அதுகேட்ட வேடுவர் அப்படியேயாகும் ஆகும் தீர்த்தமாடலாம் ஆடலாம் பெரியவரேயென்று சந்தோஷத்துடனே பிரியவசனஞ்சொல்லி அங்ஙனம் மிந்தவள்ளிப்பெண்ணுக்கு வுறுதியானவசனங்களைச்சொல்லிபாகுபோன்ற தேனுந்தினைமாவுங் கைப்பலனாக அவருக்குக்கொடுத்தார்கள் மிகுந்த தயவுடனே அவை தமது கைக்கொண்டார்.—எ-று. (௬௪)

அவரவர் சென்னபின முதக்குமுதக் கனிவாயின்
றுவர்மடவள்ளி துணைத்தாள் போற்றிச் சுனையூட்டென்
றிவளொடுரைத்தா ரின்னமுதங்கவர் பின்னேகிக்
கவருறு மனதின் கனசுனைசென்றே காண்பித்தாள்.

(இ-ள்) அந்தக்குறவர்கள் போனபின்பு அமுதரசம்பொருந்திய குமுதம்பூப் போன்ற கனிவாயழகி மடமையுடைய வள்ளிப்பெண்ணி னிரண்டு பாதங்களைப் போற்றிசெய்து ஓ! பெண்ணரசே, யெனக்குச் சுனைத்தண்ணீ ரூட்டுயென்று ஆசையுடனே சொன்னார். அதுகேட்ட பெண்ணமுர்தம் அங்ஙனம் அவர்பின்னே போய் கவர்ச்சியுடைய மனதுடனே சென்று பெரிய நீர்ச்சுனை ஒன்று அவருக்குக் காண்பித்தாள் வள்ளியம்மன்.—எ-று. (௬௫)

தேனுந் தினையுந் தின்பவர்போலச் செயல்காட்டி
மானன் முதவுஞ் சுனையுண் பவர்போல் மாயஞ்செய்
தானந்தமயத் தனுராகத் தாயிழையைப்பார்த்
தியானின் புறவுந் தணிவீ ரென்றீரடி வீழ்ந்தார்.

(இ-ள்) அங்கனம் அந்தத்தேனுந் தினைமாவுந் தின்பவர்போலும் மாயமான ஒரு செயல்காட்டி வள்ளிப்பெண்காட்டிய சுனைத்தண்ணீர் குடிப்பவர்போலே மாயஞ்செய்து ஆனந்தமயமான அனுராகத்திற்கு அங்கவளைப்பார்த்துயானின்பம்



பெருகும்படியாகவந்து புணர்ந்தனை வீரகவென்று அவளுடைய விரண்டுபாதங் களையும் வணங்கி நமஸ்கரித்தார் முருகர்.—எ-று. (௬௬)

தருமஞ் செய்தா லஃதே தவரைத் தருமோவென்
றுருமங்கல பைங்கல நிரையுடைய தனப்பூவை
தெருமந் தயர்வுற் றேகினளேகச் செவ்வேலர்
பெருமங்குல நிறகரி முகனைத்தாம் பெட்புற்றார்.

(இ-ள்.) தருமஞ்செய்தாலது மிகுந்தகுற்றத்தை விளைக்குமோவென்று உருவுடைய மங்களம் நிறைந்தழகிய மணிப்பணிபூண்ட உபையதனங்களையுடைய வள்ளிப்பெண்ணானவள் பயந்துமனமயர்ந்து விரைந்துதமக்கிசையாமல் சொல்லுவது கண்டு வடிவேலர் பெரியகருமுகில் நிறமுடைய தமது தமயனான யானைமுகத்து விநாயகமூர்த்தியைத் தியானித்தார்.—எ-று. (௬௭)

அண்டபிடிக்குங் கொண்டலெனத் தாருவைநூறித்
தெண்டிரைமுற்றுங் கையில் விலாழிச் செயலாகிப்
புண்டரீகங் கோடகனேறன் போர்வலிபொங்க
தண்டரளப்பற் றையல்முன் வந்தேதோர் தனிவேழம்.

(இ-ள்) ஆகாசத்தி லிடித்து முழங்குங்கார் மேககர்ச்சிதம்போல சப்தித்து மரங்களையெல்லாம் முறித்துத்தூளாக்கிக் கடல்நீரெல்லாந்துதிக்கையில் வீசிவிசரும் செயலையுடைத்தாய் திக்குக்கெஜமான புண்டரீகம்போலும் போர்வலிமை பொங்கும் வலிமையுடையதாய் குளிர்ந்த முத்துநிறைபோலும் பல்வரிசையுடைய வள்ளிப்பெண் முன்னே எதிர்த்து முடிகிவந்தது ஒருமதயானை.—எ-று. (௬௮)

வந்தமதாசல வரவையறிந்தொரு மலைபாது
கந்தர் புறத்திரு கனமுலை புணரக் கைசேர்ந்தா
ளந்தர மீதென் றறியார்போல வணைந்தொற்றிச்
சிந்துமதக்கரி சேணகலச்செயல் செய்கின்றார்.

(இ-ள்.) யானைவந்த வரவையறிந்து ஒருமலைமாதாகிய வள்ளிப்பெண் பயத்துடனே மீண்டுவந்து என்னைரட்சியும் நான்நீர்சொன்னபடி கேட்கிறேனென்று சொல்லி கந்தருடைய முதுகின்புறத்தில்வந்த கனதனமழுந்த தழுவிக்கட்டிக் கைசேர்ந்தாள். அங்கனம் அந்த மிதுவென்றறியார்போல் அணைத்து, காமாக்கினி தணித்து, மதம்பொழியப்பட்ட யானை நெடுந்தூரம் போகும்படியாய்ச் செய்தருளினார் அழகிய குமாவேள்.—எ-று. (௬௯)

வேறு.

ங்கலனங்களிறுதந்த கருணைபால் கடக்கக் காந்தட்
டெய்வயானையைமுன் சேர்ந்த சேவக செவ்வேற்கந்தர்
மைவனஞ் செறிந்தவள்ளி மலையினிற் செழுந்தேன்மாரி
பெய்வன மலர்ப்பூங் காவில் பிடியையும் பெட்பிற் சேர்ந்தார்.

(இ-ள்.) பின்பு துதிக்கையுடைய வழகிய யானைசெய்த கிருபையினாலே கடகஞ் செறிந்த காந்தப்பட்டம்போன்ற கைகளையுடைய தெய்வயானையை முன்னே சேர்ந்த சேவகரான அழகிய செவ்வேள் முருகர், அங்ஙனம் மரங்கள்நெருங்கியிருண்ட வனஞ்செறிந்த வள்ளிமலையிடத்தில் செவ்விய தேன்மழைபொழியாநின்றழகிய புட்பகாவனத்தில் வள்ளிப்பெண்ணென்னும் பிடியானையை மிகுந்த ஆசையுடனே சேர்ந்தார்.—எ-று. (௭௰)

அணைந்தபின் வள்ளிக்கிரா றணிப்புயத் தோன்ற லோரா
றிணங்குபொன் முகங்கள்தோன்ற வெழில்மயில் புறத்திலின்பக்
குணந்தர வதுவைக்காட்சிக் குறிபெறமறிபெற்றோங்கு
மணங்குமுன் னின்றானன்றோ ரவள்வா வுரைத்தர் செய்தார்.

(இ-ள்) அவ்வாறங்ஙனம் மருவியணைந்தபின்பு பன்னிரண்டு புயமும் பிறையையுடைய ஆறுமுகம் மயில்வாகனருடனாகத் தமது வடிவுதோன்றப் பண்புடைய மணக்காட்சிக்குறிப்புப் பெறும்படி மறிமான் பெற்றோங்கியழகிய வள்ளிப்பெண் கண்குளிரக் காணத்தக்கதாக அவள்முன்னே காட்சிகொடுத்தருளினர். அப்போது அவளுடைய ஆசைமகிழ்ச்சி யிவ்வாறென்று சொல்லக்கூடாதென்றவாறு.

வள்ளிதன் பாங்கி பாங்கு வந்தபின் வடிவேலெந்தை
யுள்ளுறு தமர்களீண்ட வுறுபுனத் திருவர் மாட்டும்
புள்ளுறு குழற்றூர் பின்னுட் புணர்ச்சியி னடைந்தாராந்த
வள்ளலு மணங்குங்கூட்டு மணத்தினை யறிந்தார்மன்றே.

(இ-ள்) உடனே வள்ளிப்பெண் தன்னுடைய பாங்கிபக்கத்தில் வந்துசேர்ந்தாள். அதன்பின்பு எம்முடைய சுவாமி வடிவேல்முருகர் உள்ளப்புணர்ச்சியீட்டமாக வற்றினங்கும் அந்தப்புனத்தில் வண்டுமொய்த்த மாலைசூழ்ந்த கூந்தலழகிய வள்ளிப்பெண்ணுடனே களவின்புணர்சியாகச்சேர்ந்தணைந்தார். வள்ளலாகியமுருகரும் அணங்காகிய வள்ளியம்பனும் கூடியணைந்த காந்திருவ மணக்குறிப்புகளை நன்றாக யறிந்துணர்ந்தாள் பாங்கி.—எ-று. (௪௨)

எம்மைநீ மறைத்தலின்ப மின்றென மணியும் பொன்னுந்
தம்மினிற் செறிந்த தேனுந் தாங்கியாங் கிழைப்பார் வேண்டு
மும்முனொ ருவரன்றோ உங்கணன் மணங்கள்யானே
செம்மையில் வளர்ப்பனென்று சேர்த்தினள் ளிகுளை யின்பம்

(இ-ள்.) எம்மையறியாமல் ஒழித்துக்கள்வாகக்கூடியிணங்கு முங்களுடைய வின்பம் நிசவின்பமன்றென்று ரத்தினமணியும், சொர்ணத்தகடும் தமக்குத்தாமே நெருங்கிச் சேர்ந்தாலும், அங்ஙனமலற்றைத் தாங்கியிழைப்பவ ரொருவர் வேண்டும். அவ்வாறிங்ஙனம் உங்களில் நாம்ஒருவரல்லவோ உங்களுடனே புணர்ச்சியை நாமே செவ்விதாக வளர்ப்பனென்று பிரியவசனஞ்சொல்லி இன்பஞ் சேர்த்தினள் பாங்கி.—எ-று. (௪௩)

ஆயகாலையிலவ்வேனல் நவிகளீந்தார்வள்ளி
போயினள் சிறுவரங்கன் புணர் முருகருஞ் சென்றுய்த்தார்
சேயகள்ளிர விலந்தச் சிற்றிடச்சிலம்பிற்றேனை
நாயககொண்டேகென்ன நல்கினள்பாங்கியம்மா.

(இ-ள்) அந்த வேளையில் குறவர்கள்வந்து புனத்தில் விளைவுமுதிர்ந்த தினைகளை அறுத்துக்குவித்தார்கள் அவர்களுடனே வள்ளிப்பெண்ணும் போயினள் சிற்றூரில் அங்ஙனம் அவளைப்புணரும் முருகருஞ்சென்று சேர்ந்தார். செறிந்த விருட்காலம் நடுச்சாமத்தில் அந்தச்சிற்றிடை யழகிய மலைக்குறமகளான தேன்மொழி வள்ளிப்பெண்ணை நாயகரே நீர் கூட்டிக்கொண்டு போவீரென்ன வவரிடத்தில் அவளைநல்கி கூட்டியனுப்பிவிட்டாள் பாங்கி.—எ-று. (௪௪)

அவடமர்பின்னர்பற்றி யமர்செயுங்காலை காலக்
கவடுறுங்கணைகள்வேலர் காவிடுமலரின் வீழும்



குவடுறுவெளிப்பனீபோய்க் கூடுகிபென்னக்கொள்ளான்
தெவடவேற் கணையிற்கந்தர் செயித்தினர் வீழக்கண்டாள்.

(இ-ள்) அப்போது அவளுடைய சமயர்களாகியகுறவர்கள் பின்றொடர்ந்துபோய் மறித்தெதிர்த்து ஆயுதங்களை யெறிந்து முருகருடனே யுத்தஞ்செய்தார்கள். அதுவேளையில் எமனைப்போலும் கொடியபாணங்கள் வந்து வேலருடைய கால்களில் தூவும் புஷ்பங்களைப்போல வீழாநின்றன; ஓய்பெண்ணே! நானிந்த மலையின்புறத்திலேயோடி யொளித்துக்கொள்ளுகிறேன்; நீபோய் உன்னினத்தார்களைச் சேர்ந்துக்கொள்ளென்று சொன்னார். அதுகேட்டு மனங்கொள்ளாதவளாய்த் தொடர்ந்து வாராநின்றாள். பகைவரைச் சங்கரிக்கப்பட்ட வேலாயுதங்களை விட்டு செயித்தார். குறவரெல்லாம் பட்டுவிழுந்தார்கள். (௪௫)

படுந்தமர் மீதுவீழ்ந்து பசுங்கொடி யகலுங்காலை
நடுங்குறு மின்னைப்பாரா நண்பரினடந்தார்வேல
னொடுங்கிய மனத்திநோடு முதிரமொன் றாசிதோடுங்
கடுந்திருக் கற்பினோங்கிக் கந்தர்பொற் கழலின்வீழ்ந்தாள்.

(இ-ள்.) பட்டிறந்து வீழ்ந்த உரிய சுற்றத்தார்கள்மேலே வீழ்ந்தழும்படியாக அழகிய கொடியிடைவள்ளிப்பெண் பிரிந்தபோது நடுக்கமுடையவளைப் பாராமல் நண்பர்போலும் நடந்தார். வேலவர் அதுகண்டு ஒடுங்கிய இரத்தந்தோய்ந்த துகிலுடனேகூடிய திருக்கற்புடையவளாகச்சென்று மணவாளருடைய பொற்கழலில் வீழ்ந்தாள்.—எ-று. (௪௬)

எமரை நீயெழுப்ப வேண்டு மென்னவன் னவரைச்செவ்வேள்
குமரி நீயெழுப்பென்றோதக் கூறினள் கூறுங்காலை
தமரவரெழுந்தார் தோகை தனில்வரு முகமுமீரா
றமர்புரிகரமுந்தோன்ற வவற்கருட் காட்சியீந்தார்

(இ-ள்.) சுவாமி யும்மா லிறந்துபட்ட என்னினத்தார்களைத் தேவரீர் எழுப்ப வேண்டுமென்று வள்ளியம்மன் சொல்ல செவ்வேள்முருகர் சொல்லுகிறார். உன்னினத்தார்களை நீயே எழுப்பென்றுசொல்ல அவர்சொ வாராய்பெண்ணே! ன்னபடியே நீங்களனைவரும் மெழுந்திருங்களென்று சொன்னள். அப்போதுடனே அவளினத்தார்களனைவரும் உயிர்பெற்றெழுந்திருந்தார்கள், அங்ஙனம் தோனே அவளினத்தார்களனைவரும் ஆறுமுகம், பன்னிரண்டு கைகளுமாகத்தமது வடிவு கைமயில் வாகனருடனாய் காட்சிகொடுத்தருளினர் கந்தசுவாமி.—எ-று. (௪௭ தோன்ற அனைவர்களுக்கும்

ஆங்கவரெமதுதெய்வ மாமென வறிந்துதட்மு
ரோங்கியமணங்கள்செய்தாங் குள்ளன வுதவிவள்ளி
பூங்கொடியுடைவேற்கந்தர் போதநா ரதருந்தாமும்
பாங்குயர்கயிலைவெற்பிற் படர்ந்தன ரமரர்போற்ற.

(இ-ள்) அதுகண்டு குறவர்கள் நம்முடைய குலதெய்வமா மென்றறிந்து அழைத்துக்கொண்டுபோய் மேன்மையான திருக்கலியாணஞ்செய்து அங்குள்ள வரிசைகளுங் கொடுத்தனுப்பினார்கள். பூங்கொடிபோலும், அழகிய வள்ளியம்மனுடன் வெற்றிவேலுடனே கந்தசுவாமி போதமுடைய நாரதமுனிவனுந் தாமுமாய் உயர்ந்த கயிலாசகிரியிற்சென்று தேவர்கள்போற்றிசெய்ய வீற்றிருந்தார்கள்

வள்ளிநாயகியார் திருமணச் சருக்கம் முற்றிற்று.

காண்டம் ௨ க்குச் சருக்கம் ௨௨ க்கு செய்யுள் ௧௮௨.

---

உ
சிவமயம்.
திருச்செங்கோட்டுப் புராண மூலமும் உரையும்
௩-வது—தீர்த்தகாண்டம்.

# கணபதி தீர்த்தச் சருக்கம்.

—(௦)—

திகழ்முப்பத்துமுக்கோடி தெய்வதீர்த்தஞ் செங்கோட்டிற்
றழுமெண்டிக்கினும்பஞ்ச குரோசத் தலத்தில் கதிகாட்டும்
பகுவெற்பினினற்பத்தெண்ணாயிரநேர்படச்சுனைதீர்த்த
மிகுதிற்சித்திக்கின்றவெண்ணாயிரமெண்டிக்கின் மிசைந்துளதால்.

(இ-ள்.) திருச்செங்கோட்டில் தகைமையுடைய எட்டுத்திக்கிலும் பஞ்சக்குரோசஸ்தலத்திலும் திகழ்ந்துவிளங்கிய தீர்த்தங்களில் யாதொருத்தர்வந்து மூழ்கினால் முப்பத்துமுக்கோடி தெய்வதீர்த்தங்களில் மூழ்கின பலனென்னும் சிவகதியாகிய மோக்ஷத்திற்கு வழிகாட்டும். கிரியின்பேரி லெட்டுத்திக்கிலும், திக்குக்கு ஆயிரஞ் சுனையாக எண்ணாயிரந் தீர்த்த மிசைந்துள்ளன. அந்தத்தீர்த்தங்களில் மூழ்கினால் நாற்பத்தெண்ணாயிரந் தீர்த்தங்களில் மூழ்கினபலன் சித்திக்கும்.-எ-று

எண்ணாயிரம்வண் சுனையினினூற்றொன் றுயினவிதிலினிதா
மூண்ணுடியசந் திரபுட்கரணியோ டொளிர்சூரியகரணி
விண்ணுமொருசுனை கைப்பனமாலும் விருத்தன்பாலனினும்
பண்ணாருப்பாவமனைத்தும் பற்றறுமொருசுனையே.

(இ-ள்.) வண்மையுடைய எண்ணாயிரஞ் சுனைதீர்த்தங்களில் நூற்றிலொன்றாய் விளங்கு, மினிதான சந்திர புட்கரணிதீர்த்தம் பிரகாசிக்கப்பட்ட சூரிய புட்கரணி தீர்த்தமொன்று, இரகசியமானகைப்புச்சலமாகிய சுனை ஒன்று, வார்த்திகர் மூழ்கினால் வாலகுமாரனாகுஞ் சுனையொன்று, பெரியோர்களறிந்து சொல்லப்பட்ட சகலபாவங்களும்பற்றறத்தீர்ந்துநன்மைதருகின்றசுனை தீர்த்தமொன்றுண்டு.

பொற்செங்கோட்டிற் புகல்சுனைமூன்றிற் புதுமையிருப்பதனைச்
சற்செம்பாக்குவ தொன்றேசெம்பைத் தகைவெள்ளியதொன்றே
பொற்செம்படிவப் புகழ்வெள்ளியைநற் பொன்னாக்குவதொன்றே
நற்செங்கனக வரைச்சுனையதனை நல்குத னவமன்றே.

(இ-ள்.) சொர்ணமயமான திருச்செங்கோட்டிற் சொல்லுதற்கரிதாய் விளங்கிய சுனைகள்மூன்றுண்டு. அவைகளில் இரும்பைக்களிம்பற்ற செம்பாக்குஞ் சுனையொன்று, செம்பைவெள்ளியாக்குஞ் சுனையொன்று, வெள்ளியைப் பொன்னாக்குஞ் சுனையொன்று, இப்படிக்காரணமகிமைச் சித்திகள் அனேகமுண்டாயிருக்கும். அதன் புதுமையை அளவிட்டுச்சொல்ல வொண்ணாது.—எ-று. (௩)

பத்திற்பத்திற் கோடொன்றாகப் பதினெண்மூர்த்தமென
முத்திக்குரியன வென்றுமொழிந்தார் முன்சவுனகர்கேட்ப
வத்திற்கணபதி தீர்த்தமுன்னோதவ மசலத்துமைமூழ்கிச்
சித்தித்தவருற் றிறைவன்பாகஞ் சேரப்பெற்றனவாம்.

(இ-ள்.) மகிமையுடைய திருநாககிரியில்உண்டாகிய தீர்த்தங்களில் நூற்றுக்கொன்றாக பதினெட்டுத்தீர்த்தம் மேன்மையாகிய முத்திமோக்ஷங் கொடுப்பதற்குரித்தாய்விளங்கிஇருப்பனவென்று சவுனகரிஷிமுதலாகியமுனிவர்கள்கேட்கச் சூதமுனிவர் சொன்னார் அந்தத்தீர்த்தங்களில் கணபதிதீர்த்தமகிமையை முன்னே சொல்லுகிறோம். அதில் மலைமகளாகிய உமையாள்மூழ்கிச் சித்தியாக அரிய தவஞ்செய்து இறைவனாகிய சிவனிடப்பாகஞ்சேர அருள்பெற்றாள்.—எ-று (௪)



கணபதிதீர்த்தமுதற் பதினெண்மூர்த்தங் கணபணிமலைமே
லெணவிந்திரன்முத லெண்மரிபற்று மெழிற்றீர்த்தமு மெட்டாம்
குணமைபங்கடலன கோமூன்றுனடி கூட்டத்தருவனவா
மணபங்கயபுன றனிலையங்கமளருள் வாவிசெயல்சொல்வாம்.

(இ-ள்.) கணபதி தீர்த்த முதலாகிய பதினெட்டுதீர்த்தங்கள் நாககிரியின் மீதில் எண்ணுதற்கரிதாகிய இந்திரன்முதல் திக்குப்பாலக ரெட்டுப்பெயராலும் எட்டுத்தீர்த்தம் விளங்கியிருக்குமகிருபைக்கடலான திரிநேத்திரமுடைய சிவன் பாதங் கொடுக்கத்தகுந்த தாய்மணம்பொருந்திய தாமரைகள் நெருங்கிய தீர்த்தங்களில் கணபதிதீர்த்த மகிமைச் செயலைச் சொல்லுகிறோம்.—எ-று (௫)

கயிலையினின் றுமை கேதாரத்திற் கருதுந்தவமுற்றிப்
பயிலுங்காசிப் பதிநதிமூழ்கிப் பரைநற்றவமெய்திச்
செயலினகச்சிக் கம்பையிலர்ச்சனை செய்தருணையினண்ணிப்
புயலினசெங்கோட் டேகிமுதற்பெறு புதல்வனுடன்புகல்வாள்.

(இ-ள்.) பார்வதிதேவி யம்மன் கயிலாசகிரியில் நின்றும் புறப்பட்டு கேதாரத்தில் சிலநாள் தவஞ்செய்து பின்பு காசித்தலத்திற் கங்காநதியில் மூழ்கி நல்ல தவஞ்செய்து பிறகு காஞ்சிபுரத்தில் கம்பாநதியில்மூழ்கி சிவார்ச்சனைசெய்து அருணகிரித்தலத்தி லரியதவஞ்செய்து அங்கிருந்து மேகமொய்த்த திருச்செங்கோட்டுத் தலத்தில்வந்து சேர்ந்து தான் முன்பெற்றருளிய புத்திரனான யானைமுகத்துப்பிள்ளையாருடனே பொருவசனஞ் சொல்லுகிறாள்.—எ-று. (௬)

அன்னதலத்தி லருந்தவமெய்தியு மன்னையநந்திலயா
லென்னதுயிர்த்தனி மகவெனுமைங்கர விப்பணியமலைகயிலைக்
குன்னதமுற்றெனப் பரன்முன்னு முரைத்தனுடனதனு
வின்னகமிக்கொரு தீர்த்தமியற்றுமெ னிறைவையிறைஞ்சுகவே.

(இ-ள்.) கேதாரமுதலாய்க்காசி கச்சியருணகிரி தலங்களிலுமெய்தி அரிய தவஞ்செய்தும் இன்னம் சுவாமிபாகஞ் சேர்ந்திலன் என்னுயிர்போலு மூத்தபிள்ளையாகிய ஐந்து கையுடைய விநாயக மூர்த்தியே இந்தத் திருநாககிரி கைலாசகிரியிலும் உசிதமான ஸ்தலமென்று பரமசிவன் முற்காலத்தில் என்னுடனே சொன்னார் ஆகையால் இந்தத்தலத்தில் தவஞ்செய்து சுவாமிபாகம் நான்சேர்வதற்கு இந்தக்கிரியின்பேரில் ஒருதீர்த்தமுண்டு செய்யும் பிள்ளாய்என்று சொல்லியருளினாள் உமையவள்.—எ-று. (௭)

எனவுமைமங்கையியம்புமினெண்ணாயிரநவதீர்த்தபலன்
கனமுறவடபாற் பாதலபூதல கண்ணாயினகரிற்
புனைவன தீர்த்தமனந்தப்புதுப் புகரானனையில் வாரித்
தனதுபெயர்ச்சுனையாக விதித்தனன் றந்திமுகத்திறையே.

(இ-ள்.) என்றிப்படி உமையவள் சொன்னவுடனே புதுமையாகிய எண்ணாயிரந் தீர்த்தங்கள் அதிகபலனுண்டாக வடபுறத்துக்கயிலையில் திரிலோகத்தில் உண்டாய் விளங்கியிருந்த அனந்ததீர்த்தங்களும் வந்துசேரும்படியாகபுகர்நிறமுடைய தமது துதிக்கையினால் வாரித்தமது பெயரால் கணபதிதீர்த்த முதலாக சகலதீர்த்தங்களுமளித்தருளினார் விநாயகமூர்த்தி—எ-று. (௮)

அக்காலையிலிமையாசலவனிதையடைந்து புகர்ப்புதல்வன்
றக்கவினவு வகைத்திறமேயொதித்தவச் சுனையின்கரையின்

மிக்காரமுதமுதிப்ப விதித்து விதித்தவைதன் பெயரா
லெக்காலமு மந்தம்பையெனப்பெய ரிட்டப்புனலோருய்வாள்

(இ-ள்.) அப்போது இமவான்மகளான உமாதேவி பார்த்துயானைமுகப்பிள்ளையாரை மகாசமர்த்துடைய பெரியவனென்று பிரியவசனஞ் சொல்லித்திண்ணிய கணபதிதீர்த்தக் கரையருகில் தன்பெயரால் விளங்கிய அமிர்தமயமான தீர்த்தமொன்றுண்டாக்கி யருளிஅதற்கு அம்பையெனனும் பெயரிட்டுயெக்காலமு மதுவே பெயராய் விளங்கும்படி கிருபைசெய்து அந்தசுனைத்தீர்த்தங்களில முழுகினாள் அம்மன் என்றவாறு.—எ-று. (கூ)

சேதாயுங்கணபதிக்குற்சுனையம் பாசுனையின்றென்னலமுற்
றேயுடபணிமலை நாகீசுரனை யிறைஞ்சித்தவநாடி
வேபுக்தொடியும் படியும்புயமின் விமலனுடன் கூடி
மாபன்பணி ப்பிரமன் பாவம் மலையினுறைந்தனளால்.

(இ-ள்.) மூழ்கின கணபதிதீர்த்தம் அம்பைச்சுனைகளின் மகிமை விசேஷங்களினாலே பணிமலைபுச்சியில்வந்து நாகீசுரனைப் பூசித்து மேலானதவஞ் செய்ய வேண்டி பசுமூங்கிற் போன்றுவளைகள் பொருந்திய அழகிய புயங்களையுடைய உமாதேவி சிவனுடன்கூடி பிரமாவிஷ்ணுவும் வந்துபணியும்படி அந்தநாககிரியில் வசித்திருந்தாள் அம்மன்.—எ-று. (ய)

அந்தீர்த்தக்கினிலங்கரனுஞ் சென்றாடித் தனதன்னை
வைத்தீபொளி மழுவவன் சரணமலர்க் காதாவுற்றுச்
சித்தீனவறி வைப்கித்தன்னைத் தெரிசித்தவர் கினைபு
மெய்த்தீவினையற கிதியம்பெற வருள்விளைவு புரந்தனனால்.

(இ-ள்.) அந்தத்தீர்த்தத்தில் கணபதியார் சென்று தீர்த்தமாடி தனதுதாயாகிய உமையவள்பாதங்களையும் கூறியதீயொளி மழுவேந்திய கைவல்லவனான பரமேசுனிரண்டு பதாரவிந்தங்களையும் பூசித்துவணங்கி சகலசித்தியும்இவைஇவை என்று அறிவுண்டாக்கித்தன்னைவந்து தெரிசித்தபேர்களுடையசேகாதி பிரபஞ்சத்தீவினைகளெல்லாம்விமோசனமாய் நினைத்தபடி சித்தியம்பெற்று வாழக்கிருபா கடாக்ஷம்செய்து இரட்சித்தருளினார் விநாயகமூர்த்தி.—எ-று. (கக)

யாதொருதொழில்புரி பவர்கலைகற்பவ ராமுதற்போற்றி
மாதருவெனவந் தவருக்க ளருள்புரி வகைபின கற்பகமென்
றோதவுரம்பெற வுலகத்தவருக் குயர்மெய்த் துணையாகி
மாதவர் முழுதும் வணங்கவிருந்தனர் யாமுகவடிவானார்.

(இ-ள்.) இயாதொரு தொழிலில் முயற்சிசெய்பவர்கள் கலக்கியானவித்தை கற்பவர்கள் முதலாகயாவரும் மகாகற்பகமே யென்றுவந்து வணங்கினவர்களுக்கு கிருபைகூர்ந்து அவர்களிஷ்டகாமியம் கொடுத்தருள்வதினால் அழகியகற்பகவிநாயகரென்றும் அவ்வாறுஞ்சொல்ல மேன்மைபெற்றுஉலகத்தவர்க்கு மெய்த்துணையாகி அரிய தவஞ்செய்யு முனீசுரர்கள் யாவரும்வணங்கி வாழ்த்தி எழுந்தருளி இருந்தார் யானைமுகத்து விநாயகமூர்த்தி—எ-று. (கஉ)

பின்னுமோர்கதையீ துரைப்பன் கணபதி பெருநதியின்பிறழ்வால்
முன்னியபரிபுட நர்வரணவர்யா முறைநாலங்கமுறத்



துன்னியதோற்றத் தோர்வடிவதனாற் றொடர்கயமுகனிருதன்
றனனிலைகுலையத ந்தமுரித்துச் சமரிற்கொன்றனனால்.

(இ-ள்.) பின்னையுமொரு கதையுள்ளது அதைச்சொல்லுகிறோம். கணபதி தீர்த்தப்பெருமையினாலே நினைத்தபடி பூதரூபம், மனிதரூபம், தேவரூபம், மிருக ரூபமென்றிப்படி நால்வகைதேகவுருவமாகத் தோன்றும்படி உருவமெடுத்து அவ் வடிவினாலே தம்முன் முனைந்து யுத்தஞ்செய்த கஜமுகாசுரனை வலிமைகெதா லைந் தழியும்படி தமதொருகொம்பை முறித்தெய்து அவனைக் கொன்றருளினார் கணபதி.—எ-று. (கங)

ஐங்கரவிறையவனுலங்கம்பெம் றடர்கயமுகனையடுஞ்
சங்கையையெய்கட் கங்கிகரூத தபோதனசாறுகெனத்
துங்கபுறச்சவுனகருக்கோதுந தொல்கதை நன்கருளின்
பங்கயனுந்தவம படியவரிதையம படியப்பகர்கின்றான்.

(இ-ள்.) ஐந்துகையையுடைய கஜமுகப் பிள்ளையார் நால்வகைத் தேகவடிவாய் முனைந்த கஜமுகாசுரனைசங்கரித்த முறைமையை எங்களுக்கு விளங்கச் சொல்லுமையாவென்று சவுனகாதி முனிவர்கள்கேட்க பூர்வகதை விருத்தாந்தத்தை மிகுந்தகிருபையினாலே பிரமதேவன் முனபுசொன்னபடியே முனிவர்கள் மனோரதமாகும்படி சொலுகிறார் சூதமுனிவர்.—எ-று. (கச)

தாருகன்வலியுஞ் சூரன்மெய்வலியுந் தாழ்வுறமேனுயரும்
பேருக முழுதும பெருமை படைத்தோன் பெரிதாமறையெல்லா
மோரொருநொடியி லுமுஞ்சியநாவா னெறுபடி யினுமடியா
தேருருபானை இறைஞ்சி வரத்தா லிடைவற பலமுற்றான்.

(இ-ள்.) தாருகாசூரன் வலிமையுஞ் சூரபதுமன் வலிமையுந் தாழ்வுபட அதிக புஜபலபராக்கிரம முடைத்தாய் பாரிய யுகங்கள்முழுதும் பெருமையடைந்தவன் மேன்மையான வேதங்களை எல்லாம் ஒவ்வொரு நொடிப்பொழுதிலே உருஞ்சிய நாவையுடையவன் யாதொரு வகையிலும் மடிவில்லாதவன் அழகிய பரமேசுரனை வணங்கி அரியதவஞ்செய்து அவர்கொடுத்த வரத்தால் சற்றும்இடையூறில்லாத பலமும் சவுரியமும் பெற்றுயர்ந்தான் கஜமுகாசூரன்—எ-று. (கரு)

பூதப்பகையால் நாரின் பகையால் பொருதெய்வப் பகையால்
வேதத்துறவிர்மிருகப்பகையால் வியாதனயன்மால்
மாதத்துவ முனிவரர் கந்தருவர் வழங்குவ ரப்படையால்
வீதற்கிடமற் றிவ்வாமுற்றான் வேழமுகத்தசுரன்.

(இ-ள்.) பூதப்பகையாலும் மனிதர் பகையாலுந் தெய்வப்பகையாலு மிருகப் பகையாலுஞ் சாகாதவன்; பிரம்மா, விஷ்ணு, தத்துவஞானிகள் சிவயோகிகள், முனிவர்கள், காந்தருவர்கள் முதலான யாவராலும் அவர்கள்பெயரால் விளங்கும் ஆயுதங்களாலுஞ் சாவில்லாதவாம் பெற்றுடையவன் அந்தகஜமுகாசூரன்—எ-று

ஆவன்படியா லைங்கரனுறு வாகியமர்க்கேகித்
தாவிகல் விளைவின் றுனைவுடொண்ணிசி சாயச்சமராடி
மாவியணியனுந தாருகனுஞ் சூரனு மட்டனுவேவரைப்
பூவிழவென்றுப் பொருகயமுகனைப் பூசல்செய்தே மாய்த்தார்.

(இ-ள்.) ஆனபடியால் ஐங்கரனான கஜமுகப்பிள்ளையார் முன்சொன்ன நால்வகை உருவமாகச் சென்று செருவில் கஜமுகாசூரனுடன் முனைந்தெதிர்த்து அகோரமான யுத்தஞ்செய்து அளவில்லாத அசுரர்கள் யாவரையுஞ் சங்கரித்து

சமர்பொருந்திய சவுந்தரியனை இரணியன் தாருகன் சூரன்மனுமந்தாதிகளிவர் களை எல்லாம் பூமியில் விழும்படி வென்று வெற்றிபடைத்த கஜமுகாசுரனை சஞ்சரிக்கும்படியாக அஸ்திரப் பிரயோகஞ்செய்து அவன்சவுரியங்களை தாழ்வுரச் செய்து மாய்த்தார்.—எ-று. (கஎ)

அச்செரு விடையவ னருவாமுடையவ னாயுதபேதமெலாம்
பொய்ச்சிகைறவெறி பாசாங்குசமொடு பொருதின னைங்கரனார்
மெய்ச்செருபடையின் வியாவிறலால் வெண்கோடொன் றிறுத்துக்
கைச்செறு படையின் கடிதுமுறித்துக் கயமுகன் மேல்விட்டார்.

(இ-ள்.) அப்படிச் சமர்செய்யும்பொழுதில் மேன்மையானவரம் பெற்றவன் மூனைந்த தேவாஸ்திரங்களை எல்லாம் சின்னபின்னமாக முறித்து நிர்த்தூ ளியாகும்படி தமது கை பாசாங்குசங்களை விடுத்து போர்செய்தார் கஜமுகப்பிள் ளையார். அப்போது மெய்பாகிய பாசாங்குசங்கள் முதலான தேவாஸ்திரங்களால் அவன் சாகாததைக்கண்டு தமதுவெள்ளிய கொம்புகளில் ஒருகொம்பை ஒடித்து அதுவே தமது கைக்கேற்ற படையாகப்பற்றி அந்தக் கஜமுகாசுரன் மேல்விடுத் தெய்தார்.—எ-று. (கஅ)

ஐங்கரன்விட்ட வடற்கோடொன்ற வரக்கனுரக்கனமே
முங்கமுறத்துளை செய்யசுரன்றுணி பட்டுத் துஞ்சியபின்
செங்கணரக்கன் ஜெபஜெய வென்றொரு செருமூடிகமாக
அங்கணருட்கணபதி சரணத்தினடைந்தார்த்தினின்றான்.

(இ-ள்.) ஐங்கரப்பிள்ளையார்விட்ட வெற்றிக்கொம்பொன்று அம்மனஞ் சென்று அவ்வசுரன் மார்பிற்றாக்கித் துளைத்து, அப்போ தந்தகஜமுகாசுரன் துணி பட்டிறந்தான். இறந்தவுடனே சிவந்தகண்களையுடைய அசுரன் சாவில்லாதவனை படியால் ஒருமூஷிகமாகி ஜெயஜெய வென்று கிருபாமூர்த்தியான கணபதியார் பாதங்களில் வந்தடைந்து அவருக்கொரு வாகனமாய் நின்றான்-எ-று (க௯)

அக்கயமுகவசுரன் பொருவினைகளாற்றித் தலமுன்று
மிக்கதொன் முனிவர் விரதமுய்த்தி விண்ணவரைக்காத்து
நக்கனைநாகமலைப் பெருமானை நயப்பொடி யிடைகோங்கா
டைக்கந்தரசிவ தருவைக்கண்டு வணங்கியோர் கற்பகமே.

(இ-ள்.) அந்தகஜமுகாசுரனைப் பொருது வெற்றிகொண்டு திரிலோகமும் புகழ்ந்து போற்றிசெய்த மேன்மையுடைய பூருவார்ச்சிமான முனிசுரர்கள் தவ ங்கள் நிறைவேறும்படி அனுக்கிரகஞ்செய்து இந்திரன் முதலான தேவர்களை இரட்சித்த நாககிரிப் பெருமானாகிய மெல்லியகொடியிடை யுமையிடப்பாகம் பிரியாதகரிய மிடறுடைய சிவகற்பகத்தைக் கண்டு தெரிசித்து வணங்கினார் அழ கிய கற்பக விநாயகர்.—எ-று. (உய)

அவ்விசைபஞ் சிவனார்ச்சனைபண்மைக் கருள்தரவுதவியதால்
தவ்வுபுனற் கணபதிதீர்த்தக் கரைதருபப்பாதீர்த்த
மிவ்விதியுடையனவெவ்வளையின் சுனைபருளும் பலனினம்மாற்
செவ்வைபினுரை செயவரிதரி தென்றனர் சென்றுடுதல் செல்வாம்.

(இ-ள்.) அவ்வாறு சிவனையும் அம்மனையும் பூசித்து அருள்பெற்றருளி[illegible] குறைவில்லாத புனலுடைய கணபதி தீர்த்தக்கரையருகில் அம்பாள் தீர்த்[illegible] இம்முறைமை புடைத்தா யிருக்கும் அந்தக்கிரியில் மிகுந்த சுனை தீர்த்தங்களாடி[illegible]



[illegible]வர்க்கருளும் பலன்களை நம்மாற் செவ்விதாகச் சொல்வதரிதரிது: அத் தீர்த்தங்களிற் சென்றாடு முறைமையைச் சொல்லுகிறோமென்று சொல்லுகிறார் சூதமுனிவர்.—எ-று. (உக)

கணபதிதீர்த்தங் கைதொழுதுன்றன் கருணையொக்குறவென்
றணைவுறு மொழியுமொம்பனை வந்தித் தாதியுமந்தமுமற்
றுணர்வுறியான்றரு முத்தமனென்றார் வேலையினைபதி
இணையிலி வாமதேவனையெண்ணி யிழிந்தாடுகபாதே.

(இ-ள்.) கணபதி தீர்த்தத்தைக் கண்களால் தெரிசித்துக் கைதொழுது உம்முடைய கிருபையெனக்கு வேண்டுமென்று அனுமதியகிய ஒற் றைக்கொம்பனை வந்தனைசெய்து ஆதியுமந்தமுமில்லாத பராபரமறிவதற்கரிய பாரமேசுரன்பெற்ற உத்தமப்பிள்ளையாரோ என்று வேலாயுதக்கடவுளையும் நினைத்து ன் மக்களாகிய உமாதேவியையும் தமக்கொப்பில்லாத வாமதேவனையும் (உஉ) தியாணஞ்செய்து சுனையிலிறங்கி தீர்த்தமாடுதல் முறைமை.—எ-று.

வல்வினை யேழ்பல மாறுந்துயர்நோய் மாறிடுமுட்கொண்டால்
தொல்வினை மாற்றுஞ் சுனைமூழ்கிற்பர சொர்க்கப் பெறலாகும்
நல்வினையாமணி மந்தரவவுடக நாடுஞ்சிவலோகத்
தெல்லையி தெல்லையி னெய்தினருக்குள தென்றனர் சூதருமே

(இ-ள்.) அந்தக்கணபதி தீர்த்தத்தை உட்கொண்டபேர்கள் எழுபிறப்பிலுஞ் செய்தவலியவினைத் துயரமுடையநோய்களெல்லாந் தீரும்பழவினையுந் தீரும்சுனை யின் மூழ்கினால் பாகதியாகிய சொர்க்கபோகம் பெறுவதாகும். நல்வினையாகிய மணிமந்திர அவிழ்தங்கள் நன்றாய்ப்பலிக்கும் அந்தியத்தில் சிவலோகத்தெல்லையி லெய்திவாழ்வார்கள் இன்னம் அளவில்லாத மகிமையுண்டென்று சொன்னார் சூத முனிவர்—எ-று. (உ௩)

தேவவயித்தியராகாசக்கமனச்சித்தர்களாரு
மூவறுமூலிகை பெறவன்னதிரில் முயன்றவரவர்மூழ்கி
மூவறுமெழிலும் மொழியாவிளமையு முறுதவமிகறியுமனத்
யோவறுமெழிலும் மொழியாவிளமையு முறுதவமிகறியுமனத்
தாவலுறத்தரு கணபதிதீர்த்தத் தருள்சொல வரிதரிதே.

(இ-ள்) தெய்வ வயித்தியர்கள் ஆகாசக்கமனம்பாய்கிற சித்தர்கள் யாவருஞ் சித்துக்கேதுவாகிய பதினெட்டு மூலிகைகளும் பெற்றுக்கொள்ளும்படியாக அந் தக்கணபதி தீர்த்தத்தில் முயற்சியாகஅவரவர் வந்துவந்து மூழ்கிக்கேடில்லாத அழ கும் மாறாத இளமையுந் தவமகிமையுமுற்று மனோபீஷ்டங்களுந் தாம்பெற்று வாழ்வார்கள். ஆகையால் அந்தக்கணபதி தீர்த்தத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுவது அரிதரிது.—எ-று. (உச)

அத்தீர்த்தப்புடையமுத சஞ்சீவியடந்தது கணபதியாற்
சித்தியும்வன்னப்பலவாருக் தேவர்தினஞ்சூழ
முத்தியுய்ப்பது வந்தனைசெய்வது முனிவர்கள்முதலோருஞ்
சத்திதெனவுந் தவமிதெனவுந் தாமொருபொழுதகலா.

(இ-ள்.) அந்தத்தீர்த்தக்கரையில் கணபதியாருடைய கிருபையினாலே அமுர் தசஞ்சீவி யடைந்துள்ளது. நினைத்த சித்தெல்லாந்தரும் பலபல வர்ன பேதங்களு [illegible]ரா தேவர் கூட்டங்கள் சூழ முனிசுரர்கள்முதலாகிய யோகீசு[illegible] [illegible]த்தியளர்த் தோமஞ்செய்வதும் வந்தனைசெய்வதும் சத்தீது அசத்தீது [illegible]ம் ஒருகாலமும்பிரிவில்லாமல் இவையாவுஞ்செய்து வசித்திருப்பார் [illegible].—எ-று. (உரு)

சச்சித்தவுருமுற்றிகாமாட்சி களிந்திறை பெறவருணு
விச்சைக்கம்பையு மம்பையுமக்கரை மெய்தியபெருன்னுளநம்
விச்சைத்தவ பும்வேதகுழா மும் விண்ணவர்வாசொலிபு
மச்சிற்பொலியுங் கணபதிதீர்த்தத் தழகினமைந்துள தால்.

(இ-ள்.) காஞ்சிபுரத்தலத்தில் சிவார்ச்சனைசெய்து காமாட்சியாகிய பரமேசுவரி அன்புடனே அந்தத்திருநாககிரியிலெய்தி சிவனிடப்பாகம் பெறும்படியாக வந்தணுளில் இனிதான கம்பைநதியும் அந்தத்தீர்த்தக்கரையருகி லெய்தியிருக்கின்றது. எந்தக்காலமும்வித்தைப்பெருமையுடைய தவமுனிவர்களும், வேதியர்கூட்டங்களுந் தேவர்கள்வருகிற ஆரதாரத்தொனிகளும், அழகாகப்பொருந்தியிருக்கும் மகிமையுள்ளது கணபதிதீர்த்தம்—.எ-று. (உ௮)

அந்தக் தெய்வப் புனலாடற்கென் றடியொரு பத்திட்டால்
முந்தச் செனமந் தனில்வரு பாதக முற்றுந் தொலைவாகும்
சந்தன் றிருவேலாகமிசை சென்றார் கண்ணுயிர நகராம்
வந்தப் புனலைக் கண்டார்க்குண்டாம் வருபலனளவிலையால்.

(இ-ள்.) அந்தத்தெய்வ தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணவேண்டுமென்று நினைத்து பத்தடிநடந்தவர்கள் முன்சென்மங்களிற்செய்த பாதகமெல்லாந் தொலைந்துபோகுங் கந்தசுவாமி எழுந்தருளிய திருவேலாகமென்னுந் திருச்செங்கோட்டு நாககிரிமீதில் யாதாமொருவர் பக்தியுடனேசென்று சேர்ந்தாலவர்களுக்கு சொர்க்கலோக பதவியுண்டா மந்தசுனைப்புனலை கண்குளிரக் கண்டபேர்களுக்குண்டாகும் வரப்பிரசாத பலன்களவில்லை.—எ-று. (உ௯)

தடமூழ்கினர் கங்கையை மூடிமூழ்குவர் தண்கறைமிசைவந்தே
இடமூழ்கியவம் பாநதியாடி யிறைஞ்சுந் தொழில் செய்தால்
நடனமேவிய நாகேசன் சரணிடை நண்ணுத றிண்ணமெனத்
தொடைமேவு புராணஞ்சொலுமென் வாசூத னுரைத்தனனால்

(இ-ள்.) அந்தக் கணபதிதீர்த்த முழுகினவர்கள் கங்காநதியில் மூழ்கினவர்களாகவும் தண்ணிய சுனைக்கரையில்வந்து சிவனிடப்பாகம்பெற்ற அம்பாநதிதீர்த்தமாடி சேமமுடித்து சிவபணிவிடைத்தொழில்கள் செய்தார்களாகில் நடேசமூர்த்தியாகிய நாகேசுரன் பாதபங்கய நிழலில்சேர்ந்து வாழ்வார்கள். இதுநிச்சயமென்று தொடர்ச்சியுடைய புராணங்கள் சொல்லுமென்று சொன்னார் சூதமுனிவர்.எ-று

கணபதி தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம், உ௩-க்கு செய்யுள். ௭௱௰.

# விஷ்ணு தீர்த்தச் சருக்கம்.

——SSS——

இப்படி யமைந்த தீர்த்த மின்னமு முறைத்தியாங்க
ளப்புனற் றீர்த்தமாடி யாம்பதம் பெறவும் வேண்டும்
செப்புதி மெனவேசூகர் திகழ்முனி வரற்பாற் கூறும்
மெய்ப்புகழ் விண்டுதீர்த்த விளைவினை விளம்பலுற்றும்.

(இ-ள்.) மகிமையுடைய தீர்த்தங்க ளுண்டாயிருந்தால் இன்னுஞ் சொல்லுவீராக. நாங்களந்தத் தீர்த்தங்களாடிசிவபதம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சவுனகாதி முனிவர்கள்கேட்க சூதமுனிவர் சொல்லத்தொடங்கிய மெய்ப்பாகிய விஷ்ணு தீர்த்தத்தின்பெருமைமுறைமையை வழுவாமற் சொல்லுவோம்.எ-று.



கயிலையும்வேதன்கண்ணுங் கனிந்துறை முனிவர்ஞானத்
தியலுறுபெரியர்நாலா யிரவர் வெண்ணீறுடக்கம்
வியலுறத் தரிப்போரைந்து வியனெழுத் துரைப்போர்சிலச்
செயலுறச் சிவனைப்பூசை செய்திடுஞ் செயற்கைமேலோர்.

(இ-ள்.) கைலை சகிரிச் சார்பிலும் வேதபிரம்மா விடத்திலும் கனிவுடனே தவஞ்செய்து வசித்திருக்கின்ற முனீசுரர்கள் ஞானத்தியல்பை யுடைத்தாகிய பெரியோர்கள் நாலாயிரம் பேர்கள் விபூதி ருத்ராட்சபூஷணமயமாய் தரித்திருப்பவர்கள் தகைமையுடைய பஞ்சாக்ஷர செபம்விடாமல் செபிப்பார்கள் சிவாசமாமுறை மை வழுவாமல் சிவனைப்பூசிக்குந் தொழிலில் மேன்மையானவர்கள் ஆவார்கள்.

ஆயவர்பிரம்மதீர்த்தத் தாடியச்சாரல்சூழ
மேயிருந்தவசுபண்ணும் வேலையின் கைபிலைப்பாங்க
ரேயகாந்தருவன்விசுவா வசுவினுக்கினியமைந்தன்
சேயதோர் ஜெயந்தனென்பான் றேவியர்சூழப்புக்கான்.

அப்படி ஒப்பில்லாத முனீசுரர்கள் பிர்ம்மதீர்த்தத்தில் தீர்த்தமாடி
(இ-ள்.) அப்படி ஒப்பில்லாத முனீசுரர்கள் சூழவிருந்து தவசுகள் செய்யாநின்ற வேளையில் அதன் சார்பில்மேவி அனைவருஞ்சூழவிருந்து தவசுகள் விசுவாவசு என்பவனுக் கினி கைலாசகிரிச் சார்பில்வசித்திருக்கின்ற காந்தருவன் தேவிமார்கள் சூழப்புகுந்தான்.—எ-று.
தாகிய புத்திரனாகிய ஜெயந்தனென்பவன்

அனந்தகாந்தருவப்பெண்களவருடன்பிரம்மதீர்த்த
வனந்தனில்நிருவாணத்தோ டாடியுண்மகிழ்வுபோதிற்
கனந்தருமுனிவரோடுங் கருணைகூர்வசிட்டரெய்த
நினைந்தவம்மடவார்துகி னெறிபடப் புனைந்துசென்றார்.

(இ-ள்.) அளவில்லாத காந்தருவப் பெண்களுடனே கூடி அந்த ஜெயந்தனென்பவன்பிரம்மதீர்த்தத்தில் நிர்வாணத்துடனேமூழ்கி உள்ளக்களிப்பாய் விளையாடும்போதில் பெருமையுடைய முனிவர்கள் கூட்டங்களுடனே கருணைகூர்ந்த வசிஷ்டமுனிவர் அங்கேவந்தார்; அவர்வந்ததுகண்டு நினைவுடனே அந்தக்காந்தருவப் பெண்களெல்லாந் துகில்களை யுடுத்திக்கொண்டு நெறிமுறைமை தவிராமலங்கனமொதுங்கிச் சென்றார்கள்.—எ-று. (௪)

ஆங்கவன்மதியான்றாசு மரைக்கொளாதுநிற்குங்
காங்கியைச்சயந்தன்றன்னைக் கண்டருந்ததியின்காந்தன்
ஓங்கியவரங்களுக வழலுறியென்றுகோபித்
தேங்குறச்சபித்தாரச்சொல் லேந்திழையாருங்கேட்டார்.

(இ-ள்.) அங்ஙனம் முனிவர் வரவுகண்டு சற்றும் மதியாதவனாய் இடையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளாதவனா யிறுமாப்பாக நிற்கின்றகாமியாகிய ஜயந்தனைக் கண்டு அருந்ததிகாந்தரான வசிஷ்டமுனிவர் மகாகோபத்துடனே ஓ ஜயந்தனே நீயொரு ராட்சதனாய் உழன்று திரியாயென்று சபித்தார் அவர்சபித்த சொல்லந் தப்பெண்களெல்லாம் கேட்டு அங்ஙனம் ஓடிவந்தார்கள்.—எ-று. (௫)

கேட்டவரடியில் வீழ்ந்தெங் கேள்வனிம்மடவார்க்கெல்லாம்
பூட்டருள்முனிவனென்னைப் புனைதுகின்மருங்குனீவீர்
[illegible]டியபடியாற்சாபச் சொற்பெறுதிருக்கீரின்றோன்
[illegible]ட்டுவன்போன்றநேகனும் வியன்றழையுடுப்பதன்றோ.

(இ-ள்.) அந்தப்பெண்களெல்லாம் ஓட்டமாகவந்து வசிஷ்டமுனிவர் பாதங்க

னில்விழுந்து வணங்கி சுவாமி எங்களுக்கெல்லாம் பத்தாவாகிய விவன் ஆனையால் தேவிமார்ப்பெண்களாகிய எங்களுக்கெல்லா மங்கிலியப்பிட்சை கொடுத்தருளு மையா முனீசுரரே என்றுசொல்ல, நீங்களனைவரும் ராமவருவதைக்கண்டு இடைக ளில் துகில்களைவுடுத்திக் கொண்டீர்கள். ஆகையால நீங்கள் சாபமெய்தப்பெரு மற் பிழைத்தீர்கள்; இவன் மமதையுடையவனாய் ஸ்திரீ தரியாமல் நிர்வாணத் துடனே நின்றானதலால் மகாராட்சதனாகவென்று சபித்தோம். இடையில் இலை தழை யுடுத்தித் திரிவதாகவென்று சொன்னார் —எ-று. (௬)

என்றலுங்கங்கிரங்கியிட்ட சாபங்களெளிதிற்போகா
தன்றிவனீரெட்டாண்டு மரக்கனாய்த் திரிதல்வேண்டும்
நின்றதற்பின்னரீச னீள்படையதனாலங்கம்
பொன்றிநுங்கொழுனனுவன் போகுதிரென்றுமீட்டார்.

(இ-ள்.) வசிஷ்டமுனிவரந்தப் பெண்களுக்காக மனதிரங்கிச்சொல்லுகிறார் நாமிட்டசாபம், எளிதிற் போகாது. இந்தஜயந்தன் பதினாறுவருஷம் ராட்சதனா கித் திரியவேண்டும். அதன்பின்பு நாககிரிஅர்த்தநாரீசுரருடைய சட்காயுதத்தினா லும் ராட்சததேக மொழிந்து பழயஜயந்தனாகி உங்களுக்குப் பிராணநாயகனாவன் நீங்களனைவரும் போவீர்களென்று விடைகொடுத்தருளினர்.—எ-று. (௭)

செயந்தனம்மடவார்காணச் சேணிமிருடலம்வீங்க
வுயர்ந்தெரிகுஞ்சி தூங்க வுறுப்பிறையிரண்டுமேங்க
நயந்தெனப்போழ்வாயோங்க நனிக்கரஞ்சூலந்தாங்கப்
பயந்தெரிவிழிசிற்செந்திப் பறந்தெழமுழங்காநின்றான்.

(இ-ள்.) ஜயந்தன் அந்தப்பெண்களெல்லாம் காணத்தக்கதாகவுயர்ந்து வுடல் பரித்து மேனோக்கியெரிகின்ற அக்கினிச் சுவாலைபோலுஞ் சிகையுண்டாகப் பேழ்வாயாகிய இரண்டு கடைவாயிலு மிரண்டு பிறைகள் போலுங் கோரப்பல்லுக ளுண்டாக மலைபோன்ற கைகளில் சூலவேல்தாங்கிவர யாவரும் பயப்படும்படி யாக வட்டக்கண்களை விழித்துப்பார்த்து அக்கினிப்பொறி சிந்தித் தீப்பறக்க செழித்து முழங்கா நின்றான் மகாராட்சத ரூபமாக.—எ-று. (௮)

அவனுருக்கண்டகாலை யணங்கனார்வாயுவேகத்
தவருறுசிந்தையார்கண் டோடினரனந்தமாக்கள்
கவனமீதிருடியென்போர் கண்டசுர்நரரையெல்லாந்
தவமுறுதடித்துறுங்கித் தாழ்வுறுப்பசிமீக்கொண்டான்.

(இ-ள்.) அவன் ரூபத்தைக்கண்டவுடனே, அந்தப்பெண்களனைவரும் பயந்து வாயுவேகமாக மனத்துயாமுடனே ஓடிப்போனார்கள்; அப்பாலந்தச் சயந்தராட் சதன் அளவில்லாத மிருகங்களையும், கவனச்சித்தர்களையும். மிருடிகளையும், முனை ந்தெதிர்த்த அசுரர்களையும், மனிதர்களையு மிவர்களை யெல்லாந் தப்பவிடாமல் அடித்துக் கொன்று வாரி வாயிலிட்டு விழுங்கி அடங்காதபசி மேற்கொண்டு திரிந்தலைந்து நின்றான்.—எ-று. (௯)

இப்படித்திரிந்துபன்னு ரூண்டினிற்செயந்தனென்பான்
மெய்ப்புறுநாகவெற்பில் விண்டுதீர்த்தத்தைநோக்கித்
தற்பரசருந்தரென்னுந் தவமுனிவனைத்தான் றுய்க்கப்
பொய்ப்பெறுஞ்சேனைபோடும் புகுந்தனன்புகுந்தகாலை.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் மலைவனங்களெல்லாஞ் சுற்றிச் சஞ்சரித்து சுழன் றலைந்து திரிந்து ஆண்டு பதினாறுஞ்சென்ற வளவில் அந்தஜயந்தராட்சதனென்ப



வன் மெய்யாகிய நாககிரியில் விஷ்ணுதீர்த்தத்தை நோக்கித் தற்பரனை குந்தச ரென்னுந் தவமுனிவனை விழுங்கத்தக்கதாகப் பொய்யாகிய ராட்சதச் சேனைக் கூட்டங்களுடனே விரைவாகவந்து புகுந்தான் அப்படிப்புகுந்த வேளையில்.-எ-று.

சிவசிவசகுந்தரோடித் திகைத்தனர்திகைத்துநாக
நவகிரியதனிற்பாக நாரிநாயகனைப்போற்றிச்
சுவருறுவினையைவெல்லக் கனிந்தொருகட்கமீந்தா
ரவரஃதவன்மேலேவ வறுத்தனவ்வரக்கன்சென்னி.

(இ-ள்.) சிவசிவ அந்தச்சகுந்தமுனிவர் ஓடித்திகைத்தார் திகைத்து நாககி ரியில் அர்த்தநாரீசுரரை வணங்கிப்போற்ற அந்தஅரக்கனை செயிக்கும்படி சுவாமி கனிவுடனே ஒருகட்காயுதங் கொடுத்தார்; அதை அவர் அவன்மேலேயேவி அந்த ஜயந்தராட்சதன் தலையை அறுத்தார்.—எ-று. (௧௧)

அறுத்தபின்னரக்கனுய வடலுருமாறிப்பண்டை
நிறத்துறுசயந்தனாகி நின்றுபுவிமானத்தெய்தித்
துறைப்புனற்கட்கந்தன்னைத் தோத்திரஞ்செய்துபோற்றி
மறைபகர்சகுந்தர்பாதம் வணங்கியைம்முகன்றாள்கண்டான்.

(இ-ள்.) அப்படி அறுந்தவுடனே ரூபமாறி பழயபடி யதார்த்தமான நிலைமை யுடைய காந்தருவச் செயந்தனாகி ஒளிபெறுகின்ற புட்பவிமானத்தில் விளங்கு விஷ்ணு தீர்த்தக்கரையில் அந்த கட்காயுதத்தைத் தோத்திரஞ்செய்து வேதியரா ன சகுந்தமுனிவர் பாதங்களில் வணங்கி ஐந்துமுகவனான பரமேசுரன் பாதங்க ளைக்கண்டு துதிசெய்தான்.—எ-று. (௧௨)

தனதுகாந்தருவப்பெண்க டமைத்தழீஇக்கொண்டுசென்ற
பினதரன்கொடுத்தகட்கம் பிரியாயவிண்டுதீர்த்தத்
துனதருளதனால்வந்தோர்க் குள்ளபாவங்கடீர்ந்து
நினைவுறவிருத்தியென்றே நிமலனாருளிச்செய்தார்.

(இ-ள்.) அப்போது அந்த ஜயந்தன் தன்னுடைய பத்தினிப் பெண்களாகிய காந்தருவப் பெண்களனைவரையுங்கண்டு தழுவிக்கொண்டு தன்னூரிற் சேர்ந்து வாழ்ந்திருந்தான்; அவன்போனபின்பு சுவாமிகொடுத்த கட்காயுதத்தை ஜலப்பெ ருக்கமுள்ள விஷ்ணுதீர்த்தத்திலுன் உன்னுடைய கிருபையினால் இங்கேவந்து சேர்ந்தவர்களுடைய பாவங்களெல்லாந் தீர்ந்து நன்மையருளி நல்லநினைவுடனே நீயிருப்பாயென்று நிமலனான பரமேசுரனருளிச்செய்தார்.—எ-று. (௧௩)

சிவன்றிருக்கட்கமாயான் றீர்த்தமுட்புகுந்தபின்னர்
நவநிதிக்கட்கதீர்த்த நாமமுமுடையதென்றுந்
தவம்புரிசகுந்தரங்கத் தடாகக்கீழிருப்பையொன்றுண்
டுவந்ததன்கீழ்தொல்லோபோ டுறுதவமுதவலுற்றார்.

(இ-ள்.) சிவனுடைய கட்காயுதஞ் சுவாமியனுக்கிரகப்படிக்கு விஷ்ணு தீர்த் தத்தி னுட்புகுந்து, அதன்பிறகு புகழ்மைபொருந்திய கட்கதீர்த்தமென்னும் பெய ராய் விளங்கிற்று எந்நாளும் அங்ஙனந் தவஞ்செய்யுஞ் சகுந்தமுனிவர் அந்தத்தீர்த் தத்தினருகாக கீழ்ப்புறம் இலுப்பைமர மொன்றுண்டு அதனிழலின் கீழ் பெரி [illegible]மனை மருவி அரியதவஞ் செய்திருந்தார்.—எ-று. (௧௪)

[illegible]ந்தவண்டருமூலங்க ளாரணவேதமென்றும்.
[illegible]ந்தமென்பனைகளெல்லாம் வேதசாஸ்திரங்களொன்றும்

பைந்தருவிலைகள்முற்றும் பகர்மறைபுராணமென்றும்
தந்தையினிபசூதர் சவுனகாதியர்க்குச்சொன்னார்.

(இ-ள்.) அந்தவளமையுடைய இலுப்பை மரத்தடிவேர்கள் அனைத்தும் ஆரண வேதங்களென்றும் அழகாகிய மெல்லிய பணைகளெல்லாம் வேதசாஸ்திரங்களென்றும் அதின் பசுந்தழை இலைகளெல்லாஞ் சொல்லுதற்கரிய வேதபுராணங்களென்றுந் தந்தையிலு மேலான அன்புடைய சூதமுனிவர் சவுனகாதி முனிவர்களுக்குச் சொன்னார்.—எ-று. (கரு)

அத்தருமுதலாவுள்ள அர்த்தநாரீசன்சென்னி
வைத்தனற்பிறையின்சோர்ந்து மலிதொழுகமுதந்தன்னால்
வித்திபவேருங்கோடும் வியன்றழைமலருங்காயுஞ்
சுத்தமென்கனியுமார்த்துத் துலங்குவவிலங்கல்காணாய்.

(இ-ள்.) அந்தஇலுப்பைமரம் ஆதிமுதலாகிய அர்த்தநாரீசுரன்சிரத்தில் தரித்தருளிய பிறையுலர்ந்து மலிவாக வொழுகிப்பெருகும் அமுர்தத்தினால் குளிர்ச்சியுடைத்தாய் வித்துமுதலாகிய வேர்களுங் கொம்புகளுந் தழைகளும் புட்பங்களுங் காய்களுஞ் சுத்தமான மெல்லிய கனிகளுமாக நிரம்பியார்த்து இந்மலைத்தார் காணும்படியாகப் பிரகாசித்திருக்கிறது.—எ-று. (கசு)

ஆகையால்வதிட்டாதி யடைந்தருந்தவங்கள்செய்ய
மாகருணையினுலென்றும் வருவரப்பிலத்தினூடென்
றோகையில்வியாசமோத வுணர்ந்தனைப்பின்னுமந்த
நாகமேற்றருவின்வண்மை நாஞ்சில்சொல்வமன்றே.

(இ-ள்) வசிஷ்டர் முதலான முனிவர்கள் யாவரும் அங்ஙனம் அரியதவங்கள் செய்வதற்கு மிகுந்த அன்படனே என்றென்றும் பிலத்துவாரவழியாக வருவார்களென்றும் மகிழ்ச்சியாக வேதவியாஸர் சொல்ல நாமறிந்துணர்ந்தோம் பின்னையுமந்த நாககிரியின் மேலிருக்கின்ற இலுப்பைமரத்தின் மகிமைப்பெருமையுந்தெரிந்தமட்டுஞ் சில சொல்லுவோமென்று சொல்லுகிறார் சூதமுனிவர்—எ-று. (கஎ)

முதலுகத்தகிலிரண்டா முகத்தினில்முழுப்பூஞ்சந்த
முதவுகமூன்றிலச்சு வத்தநான்குகத்திலாதி
ரிதவிபமாவாய்ப்பின்ன ரிருப்பையாயிறைவன் மாயோன்
றிதமுளகற்பந்தோறுஞ் சிறந்தறந்திகழுமன்றே.

(இ-ள்) முதல்கிரேதா யுகத்தில் அகில்விருட்சம், இரண்டாவது திரேதாயுகத்தில்முழுதும் பொலிவுடைய சந்தனவிருட்சமும், மூன்றாவது துவாபரயுகத்தில் அரசமரமும், நான்காவது கலியுகத்தில் சிவனுக்கிஷ்டமாகிய மாமரமாய்ப் பின்பு இலுப்பைமரமாகிப் பிரம்மகற்பம் விஷ்ணு கற்பமற்றும் மிதமாகியகற்பகாலங்கடோறுஞ் சிறப்புடைத்தாய் புண்ணியபலன் மிகவும்நிகழ்ந்து விளங்கியிருக்கிறது

மூலமுண்டகனாப்பண் முராரியாமுடியேவேலை
யாலமுண்டவனுமந்த வேழவிடைசூசீர்கூழ்
சீலமுண்டவற்குநல்கிற் சிவசிவகோடிபார்ப்பார்க்
கோலமுண்டமுதல்கு மூழ்பயனுதவுமாலோ.

(இ-ள்) அந்தஇலுப்பை மாத்தின் மூலவேர்கள் பிரம்மசொரூபம் நடுமையாயதும் விஷ்ணுசொரூபம் மேல்மாமெல்லாஞ் சிவசொரூபமாக இப்படி திரிமூர்த்தி சொரூபமாக இருக்கின்றது அந்தமாத்து நிழலில் அடகாகிய குளிர்ந்த நீர் மோர்



பானக்கம் கூழன்னங்கள் யாதாமொருவர் சிவமுண்டய பெரியோர்களுக்கு இஷ்டமாகக்கொடுத்தால் அன்னதானப் பலனகளிலுமதிகபலனாக விர்த்திக்கும்.-எ-று

அத்தருநிழற்கண்ணோர்செம் பருப்புகூல்பிடிக்குட்பட்ட
வுத்தமமனைர்பார்பார்க் குதவுநீருதந்திபோலு
மெய்த்தவவுண்டியண்ட மேருவாய்வளருமென்மேல்
சுத்தமாதவங்கள்செய்வர் சுபலநாஞ்சொல்லற்பாற்றோ.

(இ-ள்) அந்த மாத்திரிபுலினிடத்தில் உத்தமமான பிராமணர்களுக்கு நல்ல ஜலம் வைத்துக்கொள்ளுவதாக ஒரு பிடிசெம்ப தானங் கொடுத்தார்களாகில் நீர் நிறைந்த கடல்போலும் மெய்த்தவமுடைய பெரியோர்களுக்குக்கொடுத்த அன்னதானப்பலன். அண்டாண்ட மகாமேருகிர்போலும் மென்மேலும் வளரும் பரிசுத்தமான அரியமாதவங்களைச் செய்கின்ற நிஷ்டர்களுக்குப் பலிக்கின்ற சுபபலன்களை நம்மாற்சொல்லி முடியாது.—எ-று. (உ0)

அன்றியுப்பழங்காயேனு மந்தணர்க்கீந்துதீர்த்தம்
நன்றியிற்சிறிதுநல்கில் நான்முகன்பதத்தில்வைகும்
வன்றிறற்பசுவொன்றந்த மாநிழல்மறையோர்க்கீந்தா
லொன்றுமாயிரங்கோதான முதலியபலன்களுண்டாம்.

(இ-ள்) அது அல்லாமலுங் கனிகாய்கள் முதலான பதார்த்தங்கள் பிராமணருக்குக் கொடுத்து நல்ல தீர்த்தஞ் சிறிது கொடுத்தார்களானால் அவர்கள் பிரம்மபதத்தில் வைகி வாழ்வார்கள். வலியதிறமுடைய அந்த இலுப்பை மாத்துநிழலில் வேதியருக்கு ஒரு பசு தானங்கொடுத்தால் அதுவொன்றும் ஆயிரங்கோதானங் கொடுத்த பலன்களுண்டு.—எ-று. (உக)

அவ்விருப்பையின்கீழின்றே யகமறையவருக்கீந்தார்
செவ்விதின்புடவிமன்னர் செமுங்குடைக்கீழ்வைத்தாள்வர்
நவ்விகொள்கலையொன்றுய்த்தால் நடுக்குறுசுரங்கள்தீரும்
தவ்வியவெட்டானத்தாற் றலைமுறைப்பாவம்போமால

(இ-ள்.) அந்தஇலுப்பைமாத்துநிழலினின்று யாதாமொருவர் பிராமணர்களுக்குக் கிரகதானங் கொடுத்தார்களானால் இந்தப் பூமண்டலமெல்லாஞ் செழுமையுடைய ஒருகுடைக்கீழடக்கி இராஜரீகி வாழ்வார்கள். அழகிய புதுவஸ்திரமொன்று தானங்கொடுத்தால் நடுக்கமுற்ற சுரங்கள்தீரும். இயல்பாக வண்ணதானங்கொடுத்தால் தலைமுறைப் பாவங்களெல்லாந் தீர்ந்துபோம்.—எ-று. (உஉ)

பேதகமறும்பொற்றானம் பிதிர்வகைக்குண்டாமுத்தி
யோதுசங்கிரமபார்த்த னுபையவன்சுடரைத்தீண்டி
மீதமாவாசைதன்னி லினியவன்னங்களீந்தார்
பீதுளபலன்களின்ன விளைவெனவிளம்பற்பாற்றோ.

(இ-ள்.) சொர்னதானங் கொடுத்தால் பேதமற்றுப்போகும். அவர்கள்பிதிர்க்களுக்கும் முத்தியுண்டாம் சொல்லப்பட்ட மாசப்பிறப்பாகிய சங்கிரமகாலில் இருசுடராகிய சந்திர சூரியர்களை இராகு கேதுகள் தீண்டியகிரகண காலங்களிலும் அமாவாசைத் தினங்களிலு மினிதாக அன்னதானங் கொடுத்தவர்களுக்கு மேல்வரும் பலன்கள் இவ்வண்ணஞ் சொல்லும் தகுதியல்லவென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (உங)

மகரசங்கிரமந்தன்னில் மேடசங்கிரமவைப்பில்
பகர்புரட்டாசிமுப்பான் பரிந்துதம்பிதிர்க்கணோக்கித்
தகைமறையவருக்கன்ன தானஞ்செய்தவருக்குண்டா
மிகுபலனம்மாவந்த வேதனுஞ்விளம்பற்கெய்தா.

(இ-ள்.) மகரசங்கிரம தினத்திலு மேடசங்கிரம தினத்திலுஞ் சொல்லப்பட்ட புரட்டாசிமீ முப்பதுதினத்திலும் பரிவுபட்சமாக யாதாமொருவர் தங்கள் பிதிர்க்களைக்குறித்து நோக்கி தகைமையுடைய வேதியர்களுக்கு அன்னதானம் செய்தால் அவர்களுக்குண்டாய் மிகவும் வரும்பலன்களை நம்மாலும் நான்முகப்பிரமாவாலும் அளவிட்டுச் சொல்லக்கூடாது.—எ-று. (உச)

பன்னபாதபக்கீழ்நூறு பலங்குளமளித்தலன்றி
யின்னுமவில்லையுந்தான மீந்தவர்பாவம்யாவுஞ்
சின்னபின்னங்களாகித் தென்றிசைக்கடவுள்வாதை
மன்னுறகாமித்துள்ள வரம்பலநிரம்புமன்றே.

(இ-ள்.) அந்தயிலுப்பை மரத்துநிழலில் நூறுபலவெல்லம் மறையவர்களுக்கு தானங்கொடுத்தாலும் அதற்குள்ள விலைக்கிரயம் கொடுத்தாலும் அவர்களுசெய்தபாவஞ் சின்னபின்னங்களாகி எமதண்டனையு மவர்களுக்கில்லை. இஷ்டகாமியங்களான சகல வரப்பிரசாத பலன்களும் நிரம்பவுண்டாகும்.—எ-று.(உரு)

சித்திராஷ்டமியிற்பௌவத் திதியினிலறங்ளிவ்வா
றுத்தமதிவசந்தன்னி லுரைப்படிபுரிதல்வேண்டும்
நத்தினந்தீர்த்தக்கா நண்ணுசோடசதானத்தின்
முத்தியும்பலனுமேனை முனிவருமொழிந்துமுற்றா.

(இ-ள்.) சித்திரைமாதத்தின் அஷ்டமிதினத்தில் சித்திராபவுர்ணமி தினத்தில் முன்சொல்லிய தானதருமங்கள் யாதாமொருவர் செய்தார்களாகில் பிரளைபுமுத்தமமான புண்ணியதினங்களிற் சொன்னபடி தானங்கள் செய்யவேண்டும். நல்லசுபதினங்களில் விஷ்ணுதீர்த்தக்கரையிலு மிலுப்பைமரத்து நிழலில்சோடசமகா தானங்கள் செய்யுமவர்களுக் குண்டாகிய பலன்களுமுத்தி மோட்சங்களுமிவ்வளவென்று நம்மாலுமற்றுமுள்ள முனிவர்களாலுஞ் சொல்லிமுடியாது எ-று

பாதுகைவிசிறிசத்ரம் பரிந்தளித்தார்பாற்கூற்றின்
வாதையங்கில்லையோமஞ் செபஞ்சிவார்ச்சனைமாயோனைப்
போதடிபணிதல்சேவித் தவன்கொள்புண்ணியங்கள்யார்க்கு
மோதுவதரிதுபூமி யுதவில்மால்பதங்கணல்கும்.

(இ-ள்.) பாதுகை, விசிறி, குடை பரிவாகத் தானங் கொடுத்தவர்களிடத்தில் யமவாதனையில்லை, அங்ஙனம் ஓமம், தர்ப்பணம், ஜெபம், சிவார்ச்சனை அரிபூசை செய்தவர்கள் செய்வித்தவர்களுக் குண்டாகிய புண்ணியபலன்களை இவ்வளவென்று யாவராலுஞ் சொல்லுதற்கரிதாகும் பூமிதானங்கொடுத்தால் விஷ்ணுபதம் பெறுவார்கள்.—எ-று. (உஎ)

அவ்விடைபுரவிதான மளித்தவனசுவயாகஞ்
செவ்விதாயிரஞ்செய்வித்த செயற்கையின்பலன்கள்சேர்க்குங்
கௌவையிற்றனமுமேலோர் கருதுமாதனமுமீந்தாற்
பௌவநீள்படியில்யாக மாயிரம்பலித்தற்பாலாம்.



(இ-ள்.) அந்தஇலுப்பைமரத்து நிழலில் அசுவதானங் கொடுத்தவர்களுக்கு ஆயிரம் அசுவமேதயாகஞ் செய்வித்த முயற்சியின் பலன்கள்கிடைக்கும்; மாறுபாடில்லாத மனதுடனே பெரியோர்களுக்கு சொர்னமும் கன்னிகா தானமும் அன்னதானமுங் கொடுத்தார்களாகில் கடல்சூழ்ந்த பூமியில் ஆயிரம் அசுவமேதயாகஞ்செய்வித்த பலன்களுண்டாய் விர்த்தித்து வாழ்வார்கள்.—எ-று. (உஅ)

பீககுவெள்ளியீந்தார் பிதிர்க்களுக்குண்டாஞ்சொர்க்க
மாதுவரிருநாலெச்ச மடைந்தவர்பிணிபின்மேலோர்
பாதவர்வறிஞர்பாலர் பலைவயின்வசிப்போர்க்கீதல்
நீதியித்தானமொன்றும் நெறிபடக்குறிப்பிற்கூறும்.

(இ-ள். சொர்னதானம் வெள்ளிதானங்கொடுத்தால் அவர்களுடைய பிதிர்களுக்கு சொர்க்கபதமுண்டாகும், ஆதுலர்கள் எண்பெயரெச்சமாக வந்தடைந்தவர்கள் வியாதிமேலிட்டவர்கள் வறியவர்கள் பாலர்கள்மலையிடத்து வசித்திருப்பவர்கள் இவர்களுக்குமுன் சொல்லப்பட்ட தானங்கள் கொடுப்பது நீதிநெறிமுறைமையென்று குறிப்பாக வேதங்கள் சொல்லும்.—எ-று. (உகூ)

அதிற்றுலாபாரந்தூங்கு மதிபர்க்குப் பிறவிவாரா
மதித்திடு குமாருண்டாய் மாநிலமனைத்துங்காப்பார்
கதித்திடுவென்னநான்கிற் கன்னிகாதானஞ்செய்தோர்
மதுப்பகைதடிந்தார்பாத மன்னவர்சிவத்துச்சேர்வார்.

(இ-ள்.) அங்ஙனந் துலாபாரந் தூங்குதானங்கொடுத்த அரசர்களுக்கும் பிறவியில்லை நினைத்தபிரகாரம் புத்திருண்டாய் பூமண்டலமெல்லாம் ரட்சனைசெய்து ஆள்வார்கள் கதித்திருக்கின்ற நாலுவர்ணங்களில் கன்னிகாதானஞ்செய்தவர்கள் மதுகைடவரைச் சங்கரித்தவிஷ்ணு பதம்பெறுவார்கள்; பின்பு சிவகதியுஞ் சேர்வார்கள்.—எ-று. (௩௰)

விண்டுவின்றீர்த்தமேன்மை விளம்பினர்கேட்போரன்பு
கொண்டவர்படித்தோர்க்கியாதுங் கொடுப்பவராரியின்பாங்கே
யுண்டெனும்பதநான்குண்டா முறுபொருளுதவுமன்றே
தண்டகைச்சூதர்போதச வுனகாதியர்க்குச்சொன்னார்.

(இ-ள்.) விஷ்ணுதீர்த்தத்தின் பெருமையைச் சொன்னவர்கள் கேட்பவர்கள் அன்புகொண்டவர்கள் படித்தவர்களுக்கு யாதானுமொருபொருள் கொடுப்பவர்கள் இவர்களெல்லாம் விஷ்ணு சமீபம் பெறுவார்கள். அவர்களுக்குத்தக்க நாலுபதங்களுஞ் சேர்ந்து வாழ்வார்கள் உறும்பொருளாகிய வீடுஞ்சேர்வார்களென்று விற்பத்தியுடைய சூதமுனிவர் சவுனகாதி முனிவர்களுக்குச் சொன்னார். எ-று.

விஷ்ணுதீர்த்தச் சருக்கம் முற்றிற்று
ஆகச்சருக்கம்-உச-க்கு திருவிருத்தம்-எளசயக.

## பிரமதீர்த்தச் சருக்கம்.

—(※)—

மாயவன்றன் றீர்த்தவகை மாமுனிவனிற்குரைத்தேயந்தத்தீர்த்தம்
[illegible]முறவாடியபின் னெடியமாலுந்திவந்த நெறிகொள்வேத
[illegible]பசதுர்முகன்பிரம்மதீர்த்த மெனவொன்றளித்தானவற்றின்வண்மை
[illegible]யசவுனகர்முதலோர் கேளுமென்று சூதமுனிசொல்லச்சொல்வாம,

(இ-ள்.) விஷ்ணு தீர்த்தத்தின் மகிமையை மகாமுனீசுரர்களே உங்களுக்குச் சொன்னேமே அப்படியே இந்தத்தீர்த்த மாடினபின்பு மகாவிஷ்ணுவுந்திக் கமலத்தில் வந்துதித்த வேதநெறிமுறைமை தவிராத வேதாவான சதுர்முகப்பிரமதேவன் வந்து சிவனைப்பூசித் தர்ச்சிக்கும் காலத்தில் தன்பெயராலே பிரம்ம தீர்த்தமுண்டுசெய்தார் அதிலே தானம்பண்ணவேண்டும் அதினல்வளமையைமேன்மையான சவுனகர் முதலான முனிவர்களே கேண்மின்களென்று சூதமுனிவர்சொன்னார்.—எ-று (க)

பிரம்மதிருத்தீர்த்தத்தை நினைத்தோர்க் சப்பெரிதாடிப் பிறங்கினூர்க்கு
முராணுறுபாதகமகற்றி புபர்வேதனுலகத்தை யுதவும்வேதன்
பரைபொருபாகனைப்பணிந்த படியதனாற்பிரமகிரி படிபூந்தீர்த்தம்
வரமுறவனாறுகவவருபிரமதீர்த் தப்பெயரின் வழங்கிற்றுமால்.

(இ-ள்.) அந்த திருபிரம்ம தீர்த்தத்தை நினைத்தவர்களுக்கும் பக்தியுடனே ஸ்நானஞ்செய்து பெருமைபெற்றவர்களுக்கும் வலிதாகிய பாதகங்களைத் தீர்த்து மேன்மையான வேதப்பிரம்மலோகத்தைக் கொடுப்பான் பிரம்மதேவன். முற்காலத்தில் வந்து அர்த்தநாரீசுரரைப்பூசித்து வணங்கியபடியினாலே அந்தக்கிரிக்கு பிரம்மகிரியென்றும் பிரம்மதீர்த்தமென்றும் பெயராய் விளங்கிற்று.—எ-று. (உ)

வேதியருப்வானவரும் விஞ்சையருஞ் சனகர்சனற்குமாரர்யாரு
மோதுசிவபக்தாிபக்தர்துறவோர்யாரு முடன்றுசூழ
நாதர்கணபதிவயிரவன்குமரி நவதுர்க்கை தேவர்தங்கள்
மோதுபடைக்கரத்தேந்திப் பிரம்மதீர்த்தங் காப்ப முயன்றுசூழ்வார்.

(இ-ள்) வேதியர்களும் தேவர்களும் விஞ்சையர்களுஞ் சனகர்சனற்குமாரர்கள் முதலான சிவயோகிகளும் சிவபக்தர்களும் விஷ்ணுபக்தர்களும் இருடிகளும் முனிவர்களும் யாவர்களுமொருமிக்கக்கூடிச்சூழ்ந்து துதிசெய்ய கணபதியாரும் வயிரவர்களுங் காளிகளுந் துர்க்கைகளுந் தேவர்களுந் தங்கள் ஆயுதங்களைக் கைகளினாற் பிடித்துக்கொண்டு அயன் சுனையைக்காக்க முயற்சியாய்ச் சூழ்வார்கள்.

ஆங்கவரிற்றுர்க்கையரெண் மரைப்பிரமதீர்த்தத்திற்காங்கணுங்கன் [ன்
பாங்குபடவிருத்தி வயிரவியைத்தம் பாலனுழைப் பரித்தான்வெய்யோ
நீங்ககற்றுமெழுமாதர் தென்றிசைமேற்றிசைவடுகன் வடபால்வேற்கை
காங்கயற்கு முன்னுதித்த கடவுளைபணிமலையைக் காப்பவைத்தார்.

(இ-ள்.) அந்த தேவர்களில் அஷ்டதுர்க்கைகளை பிரம்ம தீர்த்தத்திற்கு அங்கங்கே காக்கும்படியாக விருத்தி காளியை குமாரர் திருமுன்னிறுவி கிழக்குத்திசை சூரியனையங்கே நிருத்தி சப்தமாதர்களை தெற்குத் திசையாக நிறுவி மேற்குத்திசை வயிரவன் காக்கவும் வடக்குத்திசை குகனுக்கு முன்னவனான யானைமுகக்கடவுளை அழகியபணிமலையைக் காக்கும்படியாகவும் வைத்தருளினார்சுவாமி.

செப்பனகிக்கிரியில்வந்த வமைதியினிலுடன்வந்த வீரன்றன்னை
யப்பனையம்மலைபடியி னணிமலையிற்காக்கவென வமைத்துவைத்தான்
றுய்யபுனற்சபமணிச் சுனையுள தங்கதின்விரும்பித் தோய்ந்தார்பாவம்
வெய்யகன்றபஞ்சினிறும் நினைத்தசெயலவற்குதவி விளங்கிற்றுமால்.

(இ-ள்.) சிவன் புணிமலைக்குவந்தபோ துடன்வந்தவீரசனையும் அய்யனையுஞ் செங்கோட்டு அடிமலை அணிமலையில் காக்கும்படி யனுக்கிரகஞ்செய்து அழைத்து வைத்தார் சுவாமி. வீரசனயலிலொரு சாபதீர்த்த மிருக்கிறது அதில்மூழ்கினவர்களுடைய பாவங்களெல்லாம் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் நிவாரணமாகும் இஷ்டகாமியார்த்தங்களுதவி விளங்கி யிருக்கின்றது.—எ-று. (ரு)



நாககிரியினிற்பிரமதீர்க்கத்திந்த நானிலத்தில்காவலஞ்சூழர்த்தமியாவு
மோகியுறைந்தவரவர் தோய்பாவமகற் றுதற்காடுமெனுமதீர்த்த [நாவின்
மோனைபெறச்சிரங்கெளித்தார்க் குதவுமயன்புரம்புகழ்ந்தார்க் குபய
பாகுபெறுகலைபசிக்குபாடினார்க்கும் பிரமபதம் பயக்குமாதோ.

(இ-ள்) அநககிரியின் பிரமதீர்த்ததிலிந்த நாவலந் தீவிலிருக்கின்ற தீர்த்தங்களெல்லாந் தம்மிடத்தில் யாரொருவர் மூழ்கினபாவங்களைத் தீர்க்கும்படி நீராடும். அத்தீர்த்தம் அன்போடு சிரத்திற்றெளித்துக்கொண்டவர்களுக்குப பிரமபதமுண்டாம் புகழ்ந்து நமஸ்கரித்தவர்களுக்கு உடையநூற் பகுதிபெற்ற கலைகளெல்லாம் பலிக்கும், நாளும் முழுகினவர்களுக்குப் பிரமபதங்கொடுக்கும்.—எ-று. (௬)

வேறு.

அயன்றடமூழ்கிலாயுட் டருமகவுடைத்தாய்ப்பின்ன
ரயனுலகிருப்ப ரந்தவரும்பதத்தவர்களிந்த
வியனகிரிமூழ்கிநாக வெற்பினைத்தொழுதுநாளும்
பயனுறதுதித்துத்தங்கள் பதத்தினிற்புகுவரொன்றும்.

(இ-ள்) பிரமதீர்த்தத்தில் யாதாமொருவர்வந்து பக்தியுடனே ஆயுள்வேண்டுமென மூழ்கினால் ஆயுள்வர்த்திக்கும். நல்ல புத்திரர்களைப்பெற்று வாழ்ந்திருந்து பின்பு பிரமலோகத்தில் வீற்றிருப்பார்கள். அரியபதத்தி லிருக்கின்றவர்களும், அந்தத் தீர்த்தத்தில் மூழ்கித் திருநாககிரியைப் பிரதக்ஷணஞ்செய்து தொழுது வணங்கி யென்நாளுமதிக நலன்களைப்பெற்றுத் துதிசெய்து தங்கள் தங்கள் பதவிகளிற் புகுந்து சேர்வார்கள்.—எ-று. (எ)

அப்புனலாடித்தேவ சர்த்தநாரீசன்பாத
மொப்புறவணங்கியந்த வுரகவெற்பி நப்பரொன்றும்
மைப்புனலாடித்தானம் பண்ணினூர்பிரமலோகந்
தப்பிடாதென்றும்பிண்ட தானமூய்த்தியாருமென்றும்.

(இ-ள்) அந்தப் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி நேமத்துடனே தேவதேவனான அர்த்தநாரீசுரருடைய ஒப்பற்ற பாதாம்புயங்களைப் பணிந்தேத்தி நாககிரியிலே வாசஞ்செய்து பிரியாமலிருப்பார்கள். மனிதர்களும் மனோபக்தியுடனே பிரமதீர்த்தமாடி ஸ்நானம்பண்ணினூர்களாகில் அவரவராலியன்ற தருமதானங்கள் செய்து பிண்டப்பிரதானங் கொடுப்பவர்களுக்கெல்லாந் தப்பாதபடி பிரமலோகபதங்கிடைக்கும்.—எ-று. (அ)

தற்பணம்பண்ணிலந்தத் தடமவன்கிளைகட்கெல்லாஞ்
சொற்கமுற்றுதவுமென்றுந் திலம்பலஞ்சுரக்குமென்றும்
கற்பசுதானமபண்ணி நான்முகனுருவங்கொண்டு
பொற்கமலத்தன்பாங்கே புரத்தினிதிருப்பரென்றும்.

(இ-ள்) பிரமதீர்த்தக்கரையிற் பிண்டப்பிரதானமிட்டுத் தர்பணம்பண்ணினால் அவர்கள் கிளைகளெல்லாஞ் சொற்கலோகமுழுதும் பெற்றுவாழ்வார்கள். திலமத்தனை பலன்கள்பலிக்கும் சுரப்பையுடைய பாற்பசுக்கள் தானஞ்செய்தபேர்கள் அந்தப் பிரமாவைப்போற் சதுர்முகமாகப் பிரமசொரூபம்பெற்றுப் பிரமபுரத்திலே பிரமதேவன் பக்கத்திலினிதாக வீற்றிருப்பார்கள்.—எ-று. (கூ)

தேவனுமாகவென்று சிந்தித்துமூழ்கிலந்த
மூவுருவளிப்பதென்று முனிவர்க்குச்சூதவேத

நாவலின்பகர்ந்தாரிதி லன்புளார்படிப்பார்கேட்பார்
நாவின்மாவாணிவாழ நற்கதியடைவிற்சேர்வார்.

(இ-ள்) ஈன் றேவனுகவேண்டுமென்று நினைத்து மூழ்கினோர்களாகில் அழிகிய மும்மூர்த்தி சொரூபங்கொடுக்குமென்று முனிவர்களுக்குச் சூதமுனிவர் அன்புடனே சொன்னார் இங்ஙனம் இதிலன்புடையவர்கள் படிப்பவர்கள் கேட்பவர்கள் நாவுகளிற் பிரியாமல் வாணிதேவி வாழ்வுற்றிருப்பள் அன்புடன் நல்லகதிகளுமடைவுடனே சேர்வார்கள்.—எ-று. (க0)

அரிவையோர் பங்கன்கோயி லருகுறவடபால்வைகும்
பிரமதீர்த்தின்மூழ்கிப் பிறங்கிருகாலேகாயத்
திரியுரைத்தொழிந்தபின்னர் சேவகன்சம்புமங்கை
பரனைவந்திப்போர்க்கெய்தும் பலனையக்குரைக்கப்போகா.

(இ-ள்) உமையொருபாக ரெழுந்தருளிநின்ற திருக்கோவிலுக்குச் சமீபமான வடவண்டையில் வைகியிருக்கும் பிரமதீர்த்தத்தை அந்திசந்தி இருபொழுதும் மூழ்கி நியதிமுடித்து காயத்திரி செபஞ்செய்து பின்பு சேவகனுனகுமாரனையுஞ் சுவாமியையும் அம்மனையுந் தரிசனைசெய்து வந்தித்த புண்ணியவான்களுக்கு உண்டாகிவரும் பலன்களை நம்மாற் சொல்லப்போகாதென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (கக)

ஆதிவர்ணத்தரல்லான் மூவருமாதியார்க்கே
யீதுசெய்தயஞர்தீர்த்தத் திப்பரிசியற்றுவித்தாற்
பூதனங்கன்னிசொன்னம் புண்ணியகோதானத்தின்
மீதுறும்பலன்கள்சேர்வார் வெந்துயரொழிந்துவாழ்வார்.

(இ-ள்.) ஆதிவருணத்தாரல்லாமல் மற்ற மூன்றுவருணத்தாரும் வந்து நாகீசாருக்கு சேடச வுபசாரமாகப் பூஜைசெய்து வணங்கிவாழ்த்தி அந்தப்பிரம்ம தீர்த்தத்தில் முன்சொன்னவண்ணந் தானதருமமுதலாகிய விதிகளைச் செய்வித்தார்களேயானாற் பூமிதானங், கன்னிகாதானஞ், சொர்னதானம், புண்ணியகோதானபலன்பளிலு மேலானபலன்களைப் பெற்றுப் பிறவித்துயர்தீர்ந்துவாழ்வார்கள்

அயனருடீர்த்தமூழ்கி யணிகவெண்டுகில்வெண்ணீ
றியலுறப்படிகங் கைக்கொண் டெண்கணன் றேவிதன்னைச்
செயலுறத்தியானித்தந்தச் செபத்துடன் றுதிப்பார்க்கெல்லாம்
புயலன்கவிதையாவும் புத்திமுத்திகடப்பாதால்.

(இ-ள்.) பிரம்மாவுண்டாக்கிய பிரமதீர்த்தத்தில் யாதாமொருவர்வந்து மூழ்கிக் குளித்து வெண்டுகிலுடுத்து வெண்ணீறுதரித்துப் படிகமாலை கைக்கொண்டு எண்கண்ணன் றேவியான சரஸ்வதியம்மனைத் தியானஞ்செய்து ஜபதவங்களுடனே துதிப்பார்க்கெல்லாம் பொழிவதுபோலுங் கவிதைகள் யாவும்பாட அருளுண்டாகும் பத்திமுத்திகளுந் தப்பாது.—எ-று. (கஉ)

பிரம தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம், உ௫-க்கு திருவிருத்தம், ௭௱௫௪.

# துர்க்கை தீர்த்தச் சருக்கம்.

சொர்க்கமீயுஞ்சுருதியின் றீர்த்தமீ, தொக்கமூழ்கியுறுபயன்பெற்றபின்,
துர்க்கைதீர்த்தந்துறைதந்துதன்றென்புல, வர்க்கதர்ப்பணம்பண்ணுதல்வன்மையால்.

(இ-ள்) சொர்க்கபதந் தரப்பட்ட சுருதி பிரமதீர்த்தத்தில் மனோகரமாகமூழ்கியுற்ற பலன் பெற்றபின்பு துர்க்கைதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தங்களுடைய தென்புல வர்க்கமான பிதுர்க்களனைவருஞ் சந்தோஷிக்கும்படியாக அதில் தர்ப்பணஞ்செய்வது நியதிமுறைமையாம்—எ-று. (க)

சூலிதீரிற் சுருதிகள்சொல்லினுஞ், சாலநெய்பொடும் பாலொடுந்தர்ப்பணங்
கோலியேபலதானங்களீயினு, மேலும்வர்க்கத்தில் யாருங்கதிக்குளார்.

(இ-ள்) திரிசூல பாணிச்சியாகிய துர்க்காதேவி தீர்த்தத்தில் மூழ்கி நியதிமுடித்து வேதச்சுருதிகளோதினாலும் மிகவும் நெய்பாலுடன் தர்ப்பணங்கள் கோலிச்செய்து பலதானங்கொடுத்தாலும் மியல்பாகிய வவர்கள் வர்க்கத்தார்களனைவருஞ் சிவகதிசேர்வார்கள்.எ-று. (உ)

கனகபூஷணத்தொடொருகன்னியை, யனகதாருகைதீர்த்தத்தளித்தவர்,
பனகவெற்பினர்பாங்கரிற்பாங்கரோன், றுனகவாதரசூதன்றெரிஞர்.

(இ-ள்) சொர்ணபாணத்துடனே யொருகன்னிகையை அழகிய துர்க்கைதீர்த்தத்திற் றானங்கொடுத்தவர்கள் நாககிரியீசுரன் பக்கத்திற் பாங்கராவார்களென்று மனோபக்தியுடனே முதற்காலத்திற் சூதமுனிவர் சொன்னார்.—எ-று

மகரவாதபன்கன்னியின்மாதமற், றிகநறைப்புண்ணிய திவசந்தனில்
நிகரிலன்னமந்நீர்க்கரைநல்கினோர், பகருகின்றனகோடிபலன்களே.

(இ-ள்) மகாசங்கிராந்திதினத்திலுங் கன்னிமாதத்தினங்களிலு மிகலோகத்தார் சொல்லப்பட்ட புண்ணிய திவசங்களிலு மொப்பில்லாத அன்னதானமநேகசுரர்களுக்கு அந்தத்துர்க்கைதீர்த்தக்கரையிற் கொடுத்தவர்கள் பெறும்பலன் கோடிபலன்களாக வர்த்திருக்குமென்று சொல்லுஞ் சுருதிகள்.—எ-று. (ச)

கிரணகாலங் கிளரச்சுனைபிலே, சரணெனச்சென்று தாழ்ந்துமூழ்குவார்
முரணுறும்பவந் தீர்ந்துநம்முக்கண, னரணலோகந் தடைவனதிண்ணமே.

(இ-ள்) கிரணபுண்ணியகாலங்களிற் கெழுமிய துர்க்கை தீர்த்தச்சுனையிலே சரணஞ்சரணமென்று படிந்துமூழ்கிக் குளித்தவர்கள் முரட்சியான பாவங்கள்தீர்ந்து திரிநேத்திரனான சிவனுடையசிவலோகத்திற் சேர்வார்கள் நிச்சயமாக.—எ-று

அகிலதீர்த்தத்திலாடும்பலனெலாம் புகலுங்காண்கினும்போற்றுங்கதியுறு
மிகலகற்றுங் குரோசமைந்திற் றுளாஞ், சகலசீவனுஞ் சங்கரனென்னுமால்.

(இ-ள்) இந்த பூமண்டலத்திலுள்ள தீர்த்தங்களியாவும் மூழ்கினபேர்களுக்குண்டான பலன்களெல்லா அந்தத்துர்க்கை தீர்த்தத்தைக் கண்குளிரக்கண்டாலும் நாவிற் றுதித்தாலும், போற்றிவணங்கினாலும், அவர்கள் முன்செய்தபாவங்கள் விமோசனமாய்ப் பாகதிசேர்வார்கள். பஞ்சக்குரோச தலத்துக்குள்ளாகிய சகல சீவனுஞ் சிவசொரூபமென்று சொல்லும் வேதாகமங்கள்.—எ-று. (ரு)

நெய்யும்பாலுந்தயிருநிறைந்தில, கையிற்றர்ப்பணங்காட்டிற்பலாபலன்
செய்யுமென்னுமளவையைச்செப்பநாம், வையகத்தி லியார்க்குமவளைகவா.

(இ-ள்) நெய்யும், பாலுந், தயிரும், என்னும் தங்கள் தங்கள் கைகளில் தர்ப்பணங்கள் செய்யுமவர்களுக்குண்டாகிவரும் பலன்களை இவ்வளவென்று அளவிட்டுச்சொல்ல நம்மாலுமிந்த வையகத்தில் யாவராலுஞ்சொல்லக்கூடாது.—எ-று.

ஏறுமாவுமெருமையுங் கன்றுமவ், வாறுதீர்த்தந் தளித்தவர்க்காமபலன்
கோறிலித்தனை பெண்மேகுமிக்கெளை, மாறிலாப்பிதுர் வாழ்வதுசொர்க்கமே.

(இ-ள்) இடபக்காளையும், பசுவுங் கன்றுகளும், எருமைகளும் தானங்கொடுத்தவர்களுக்குண்டாகும் பலன்கள் இவ்வளவென்று குறித்துச்சொல்லக்கூடாது. மாறுபாடில்லாமலவர்கள் பிதுர்க்களனைவருஞ் சொர்க்கபதத்திற் சேர்வார்கள்.

காளிவண்சுனை யாடியகாலைய, ராளிநம்பரி யாகப்பலனுடன்
கோளிகோதம தீர்த்தமுங்கங்கையும், நாளுமாடிய நனபலமுறுதுயாலே.

(இ-ள்) அழகிய காளிதீர்த்தத்திலுந் துர்க்கைதீர்த்தத்திலுந்தானம்பண்ணினகாலைப்பருவத்துப் புருஷர்கள் அனைவரும் அசுவமேதயாகஞ்செய்தபலன்களுண்டாய் மற்றும் யமுனாதீர்த்தமுங் கௌதமதீர்த்தமுங் கங்காதீர்த்தமும் நாளுநாளுமாடினவர்கள் பலன்களுமுண்டாகி சிவகதியெல்லை நாடிவாழ்வார்கள்.—எ-று. (௯)

பிண்டதானம் பிதிர்க்கிடுதானமாய்க், கொண்டுதுர்க்கைச் சுனையிற்கொடுத்தவர், அண்டர்நான்முக னச்சுதனைம்முகன், மண்டுமேலாக மகிழ்த்தனகிட்டுமால்.

(இ-ள்) அந்த துர்க்கைதீர்த்தத்தில் யாதாமொருவர்வந்து தீர்த்தமாடி சுனைக்கரையில் தங்கள் தங்கள் பிதுர்க்களைக்குறித்து பிண்டப்பிரதானமுதலாகியதானங்களுங் கொடுத்தவர்கள் தேவர்பதம், பிரமபதம், விஷ்ணுபதஞ், சிவபதமுதலாகிய தங்களில் மனோபீஷ்டமான பதங்கள் கிடைத்துவாழ்வார்கள்.—எ-று. (௧௦)

கன்னிமாரெழு பேர்கன்னிவண்சுனை, தன்னிலாடுவித் தூனுடைகான்
கொடுத், தன்னநல்கி யவரெழுசத்தியென், றின்னியற்பெறுவார்பலனெண்ணில.

(இ-ள்) அந்தத் துர்க்கைதீர்த்தத்தில் ஏழுபேர்கன்னிப்பெண்களை ஸநானஞ்செய்வித்து உசிதமான துகிலாடைகள் கொடுத்து இஷ்டமாகஅன்னம்படைத்து அவர்களை யெழுசத்திமார்களென் றெண்ணித் துதிசெய்தபேர்கள் இயல்பாகப்பெற்றுக்கொள்ளும் பலன்கள் அளவில்லை.—எ-று. (௧௧)

மாதலங்களின் மாற்றப்பட்டாதனவும், பாதகங்கள் பயிரவிதீர்த்தமுட்
காதலிற்கொண்டுகண்ணுதலைத்தொழுக், தோதவொக்கு முதயத்தமங்கலே.

(இ-ள்) மகா ஸ்தலங்களில் வாசஞ்செய்து தீராத பஞ்சமா பாதகங்கள் யாவுந் திருநாககிரி ஸ்தலத்தில் வந்து துர்க்கைதீர்த்தத்தில் அன்புடனேமூழ்கி யுட்கொண்டு சிவனுடைய பஞ்சாக்ஷரங்களை யோதச்சபிக்கில் அந்தப் பாவங்களெல்லாஞ் சூரியோதயங்கண்ட பனி நீங்குவதுபோல்நிவாரணமாகிப் புனிதராய்வாழ்வார்கள்.

நீலமேனியு நேமியுங்கட்கமுஞ், சூலமுந்தண்டமுங்காதனேதாலுஞ்செங்
கோலத்தாளங்கண் மூன்றுங்கொண்டாளையுட், சாலவச்சுனை தோயிற்சயமாம்.

(இ-ள்) நீலநிறமான திருமேனியுஞ், சங்குமுஞ், சக்கரமுங், கட்கயுதந் திரி



சூலமுந், தண்டாயுதமுங் கைகளிற் பிடித்தவளாகவும் அழகிய செம்பட்டுடையுந் திருநேத்திரமுமுடைய வாளாகவும் மனதிற்பாவித்துத் துர்க்காதேவியை ரூபத்தியானஞ்செய்து மிகுந்தவன்புடனே யந்தத் தீர்த்தமாடிய பேர்களுக்குத தொடுத்த காரியங்களெல்லாஞ் செயமாகும்.—எ-று. (௧௩)

துர்க்கைதீர்த்தந் துளையதைத்தோய்ந்தவர், பொற்கதிர்பதம் போற்றிப்
புகழ்ந்தவே. லற்குமுன்றொழு தன்னைதன்மந்திரங், கற்கவோடுங் கனவி
னைத்துன்பமே.

(இ-ள்) துர்க்கை தீர்த்தத்திலன்புடனே மூழ்கிச் சூரிய நமஸ்காரஞ் செய்து போற்றிப் புகழ்ந்து வேலவர் திருமுன் சென்று கைதொழுது வணங்கிப் பராசத்தி மந்திரங்கற்று செபித்தவர்கள் ஜன்மவினைத் துன்பங்களெல்லாம் நிவாரணமாகிப் புனிதராவார்கள்.—எ-று. (௧௪)

மயிடனைப்பொரு மாதவமூர்த்தநீர், மயிடனைப்பொரு பானன்புள்வைக்
குமம், மயிடனைப்பொரு வற்றவன்றன்னையம், மயிடனைப்பொரு வங்கம்
வழங்குமால்.

(இ-ள்) மயிடாசூரனைச் சங்கரித்த மாதாவாகிய துர்க்கை தீர்த்தத்தில் சிவத்தியானஞ்செய்து அன்புடனே மூழ்கி உமையொருபாகரைத் தரிசித்து வணங்கினவர்கள் இயமனுக் கியமனாக வலிமையுடைத்தாய் தேஜஸுடைய திவ்யதேகம் பெற்று வாழ்வார்கள்.—எ-று. (௧௫)

கண்டபோதிற் கனவினைதீருங்கைக், கொண்டபோதினிற் கொற்றவை
கொற்றமா, முண்டபோதி லுயர்கலைஞானமேற், கொண்டுமூழ்கக் கொடுப்
பன முத்தியே.

(இ-ள்) அந்தத் துர்க்கை தீர்த்தத்தைக் கண்ணாற் கண்டபோது தீராதபாவங்களுந்தீரும், தீர்த்தத்தைக் கைக்கொண்டபோது துர்க்கையினுடைய வலிமையுஞ் சவுரியமுமுண்டாகும், உட்கொண்டபோது உயர்ந்த கலைக்கியான சித்திகளெல்லாம் பலிதமாகும், சிரசின்மேல் புரோட்சித்துக்கொண்டு மூழ்கினால் முத்திமோக்ஷங்கொடுக்கும்.—எ-று. (௧௬)

முனிவர்பாக ரெழுவருமூக்கணுள், பனிகடாத்தம் படிந்தவளைப்பணிந்
துனியுறும்பிறப் போடப்பணிமலைக், கனியையென்றுங் கனிந்தடிபோற்று
வார்.

(இ-ள்) சத்தவிருடிகள் பத்தினிகளேழுபேருந் திரிலோசனையான துர்க்கையினுடைய குளிர்ந்தசுனையில் தீர்த்தமாடி அவளைப்பணிந்து போற்றிசெய்து துன்பநீங்கும்படிதாகப் பணிமலைக்கனியாகிய பரமேசுரனை நாளுநாளும் பக்தியுடனே அடிவணங்கிப் போற்றிசெய்வார்கள்.—எ-று. (௧௭)

வேறு.

அருணைவெற்பினி லடர்மயிடாசுர னடலதைத்தரு ளுர்ந்துத்
திருணகைப்பெறும் வாள்கழீஇயெம்பிரா னிவணென னினிதேகிப்
பொருணமற்புடன் பூங்கொடிபாங்கனைச் சயம்புவைப்புகழ்ந் தேத்தி
மருணவைத்துய ரறப்பணிமலையினில் விதித்தவம்மலர்த் தீர்த்தம்.

(இ-ள்) முற்காலத்தில் துர்க்காதேவியானவள் அருணகிரி தலத்தில்வந்து தன் பெயரால் விளங்கிய சிவ துர்க்கை தீர்த்தத்தில் மகிடாசூரனைச் சங்கரித்த சூரியமுனைவாள்களைக்கழுவி அருணகிரியீசுரரைத்துதித்து திருநாககிரி தலத்

தில்வந்து அர்த்தநாரீசுரரான சுயம்புமூர்த்தியைத் தரிசித்து வணங்கித்துதித்துத் தன்னைப்பற்றிய கன்மவினையாவுந் தீர்ந்து புனிதமாகிவிளங்கி அங்ஙனந் தன்பெயரால் ஒரு திவ்விய தீர்த்தம் விதித்தருளினன்.—எ-று. (௧௮)

துர்க்கைதீர்த்தமுங் கங்கையும் யமுனையுஞ் சுரந்தகாவிரிநீரு
மொக்குமென்றுமா தவர்தினந்தினம்படிந் துறுதவமொழிபாரால்
நக்கர்தந்தருற் பவித்தசெங்கோட்டிலிந் நலத்தினை யெவர்கேட்பா
ரக்கணத்திலவ் வருவினையொழிந்துபி னரன்பதம் பெறுவாரே.

(இ-ள்) அப்படிவிளங்கிய துர்க்கை தீர்த்தமுங் கங்காதீர்த்தமும் யமுனாதீர்த்தமும் பெருக்கமாகிய காவேரிநீருஞ் சரிசமானமாக வொக்குமென்று மகாதவமுனிவர்கள்வந்து நாடோறும் அந்தத்தீர்த்தத்திலமூழ்கி யங்ஙனம் வழுவாமல் அரியதவஞ்செய்யாநின்றார் பரமேசுரனுங் கந்தசுவாமியு முதித்தெழுந்தருளிய திருச்செங்கோட்டிலிந்த நலமாகிய மான்மியங்களை யாவரொருவர்கள் காதுகுளிரக் கேட்பார்களாகில் ஒரு நொடிப்பொழுதிலரிய வினைகளெல்லாந்தீர்ந்து புனிதராய் பின்பு சிவனுடைய பாதங்களிற் சேர்ந்து வாழ்வார்கள்.—எ-று. (௧௯)

துர்க்கை தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம், ௨௬-க்கு திருவிருத்தம்,எ௱எக.

---

# நாகதீர்த்தச் சருக்கம்.

நாகமாமலைநமதுகாரணத்தினு ஞனிலத்துளதென்றே
நாகநாகனுமாங்குளனுதலால்நம்மரனெனச்சேட
னேகபாமிருவரையுமாதரித்தவ ரீன்றகந்தரையேத்தி
யோகைபெற்றொரு பொய்கைதன்பெயரினு லுதவினன்பலகூற.

(இ-ள்) நாகமலையானது நமது காரணத்தினால் நாவலந்தீவி லுசிதமாகவிளங்கியிருக்குதென்று கலியுகாதியில் நாகராஜனும் அங்கனம்வந்து வசித்திருக்கிறான் ஆகையால் நமதிறைவனென்று சிவனு முமையுங் கலந்திருக்கும் ஏகருபமாகிய அர்த்தநாரீசுரரையும், அவர்பெற்றருளிய கந்தசுவாமியையும் அன்புடனே பூசித்து மகிழ்ச்சியாய்த் தன் பெயரால் விளங்க வொருதிவ்ய தீர்த்தம் விதித்தருளினன். அனேகபலன்களுமுண்டாக அன்றுமுதல் நாகதீர்த்தமென்று விளங்கிற்று-எ-று.

வரகக்கிரிநாகதீர்த்தந்தனை யிருவிழிகளிற்கண்டா
ருரியாயிரமாயிரம்பசுப்பதி னாயிரநகவேழம்
பாரிலீந்துளபலனுளவச்சுனை பயம்பரிசித்தார்க்குச்
சேரும்வானவர்சேரிடமாரிடச் சிந்தையர்களிகூர.

(இ-ள்.) திருவேரகமாகிய நாககிரி நாகதீர்த்தத்தில் யாதாமொருவர் வந்து தங்களிரண்டு கண்களிற் கண்டார்களானால் அவர்களுக்கு ஆயிரமாயிரங் கன்னிதானமும் பதினாயிரங் கோதானமும் ஆயிரங் கஜதானமும் அங்ஙனங் கொடுத்த பலன்களுண்டாகி வர்த்திக்கும். அந்தச்சுனைதீர்த்தம் பரிசித்தவர்களுக்குத் தேவலோகபோகமான சொர்க்கபதங்கிடைக்கும் இருடிகண்மனது களிகூரும்படியாக.

துர்க்கைதீர்த்தமாதாடியபின்னாச் சுடர்மணுப்படனுகப்
பொற்சுனைத்தடம் புகுவதுசெறியதிற் பூவையோர் புரத்தானை



யுற்றுமூழ்கிநற் பிண்டமிட்டொருபசு வுதவிலப் பசுவாலைப்
பற்றியங்கவன் பிதிர்நரகின்கரை யேறுவர் பதஞ்சேர்வார்.

(இ-ள்) துர்க்கைதீர்த்தத்திற் றீர்த்தமாடினபின்பு சுடர்விரிக்கின்ற மணிபொருந்திய படமழகிய நாகராசன்செய்த சொர்ணநிறமான நாகதீர்த்தத்திற் சென்றுபடிந்து அர்த்தநாரீசுரனை நினைத்துத்துதித்து ஸ்நானஞ்செய்து நியதிமுடித்து நன்மையாகப் பிண்டப்பிரதானமிட்டு அங்ஙனம் ஒருபசுதானங்கொடுத்தால் அந்தப்பசுவாலைப்பற்றி அவர்களுடைய பிதிர்க்கள் நரகின்கரையேறுபவர்கள் நல்லபதங்களிற்சேருவார்கள்.—எ-று. (௫)

அத்தடந்தனில் மூழ்கினுற்கூபமும் வாவியுமலர்க்காவுஞ்
சுத்தகாகநன்னீரு பாலயத்திருச் சுற்றுங் கோபுரம்யாவு
நித்தனாலயமுங் கண்ணனாலய நிலைகளும் புவிமீது
வைத்தபுண்ணியம் பெறுமெனச்சூதரம் மறைபவர்க்குரை செய்தார்.

(இ-ள்.) அந்த நாகதீர்த்தத்தில் இயாதாமொருவர்வந்து மூழ்கினால் தருமக்கிணறுகளும், வாவிகளும், புட்பகாவனங்களுந் தாகசாந்தமாகச் சுத்தமான தண்ணீர்ப் பந்தல்களுங் கோயில் திருமதில்களுங் கோபுரங்களனைத்துஞ் சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், நிலைக்கும்படியாக இந்தப் பூமண்டலத்திற் செய்துவைத்தவர்கள் பெறும்புண்ணியம் பெறுவார்களென்று சூதமுனிவர் மறைமுனிவர்களுக்குச் சொன்னார்.—எ-று. (௬)

நாகவண்சுனைசூழ வீந்துடன்றரு நாகுகோங்கொடுபூங்காப்
பூகமென்பனவைத்தவனுய்த்தவன் புண்ணியன்சிவலோகத்
தேகுமப்புனல்மூழ்குவான்கங்கையி தென்றுமூழ்குதல்வேண்டும்
பாகுபெற்றசொற்பாவுநன்கலைகளும் பவித்தரன்பதஞ்சேர்வார்.

(இ-ள்.) வள்ளிய நாகதீர்த்தச் சுனையைச்சூழ வீந்துமரங்களுஞ் சந்தனத்திருக்களுந் தென்னைமரங்களுங் கமுகுமரங்களும் பூங்காவனங்களும் வைத்துப் பயிர்செய்து வளர்ச்சியாகப் பரிபாலனஞ்செய்த புண்ணியவான்கள் சிவலோகபதஞ் சேர்வார்கள் அந்தத் தீர்த்தத்தில் வந்து மூழ்கும்போது இதுகங்காநதியென்று மூழ்கவேண்டும் நல்லபால்போலுஞ் சுவையுடைத்தாகிய வினிய சொற்களிற பாவினகலைகளனைத்துஞ் சித்தித்துச் சிவன்பாதஞ் சேர்வார்கள்.—எ-று.

ஆலகாலமுண்டெனவிடமருந்தினு மாடராக்கடிந்தாலுங்
கோலமுற்றெழுகுஷ்டரோகப்பல கொள்ளினுஞ்சுரபேத
மேலெழுந்துயர்வெந்துயர்படரினும் வேணிகங்கையைப்போற்றிச்
சூதபாணியைநினைத்ததிற்றோயவுந் துய்ப்பவுந்துயர்போபால்.

(இ-ள்) ஆலகாலவிஷத்துக்குச் சமானமான கொடியவிஷங்களைப் புசித்தாலுங் கடியபாம்பு கடித்தாலும் அழுகுநிலைய குஷ்டரோகங்கள் பேதாபேதமாகிய குளிர்சுரங்கள் மேலிட்டுத் துயர்கொண்டாலும், மேகரோகங்களுஞ் சிவன்சடையிலுறையுங் கங்கையை நினைத்துப் போற்றிசெய்து சூலபணியாகிய சிவனைநினைத்து அந்நாக தீர்த்தத்திற் குளித்தாலும், பருகினாலும், முன்சொல்லிய துயர் நோய்களெல்லாந் தீர்ந்துபோம்.—எ-று. (௭)

அங்கதச்சுனையாமலைவருநதி யாதிகேசவனுன
சங்குசக்கரனனந்தபொற்சயனன்பாற் சமுத்திரமெனலாகு
மிங்கதிற்பயனனந்தபல்பயன்களை யினிதருளியபாங்கரற்
கங்கையிப்புனலென்பதேயன்றியாங் கருதுவதிலைமாதோ.

(இ-ள்) அழகிய நாகதீர்த்தச்சுனை நாககிரியிலுதித்து விளங்கியது. சங்குசக்கரந்தரித்த கைகளுடைய ஆதிகேசவனென விஷ்ணுமூர்த்தி அனந்தசயனம் செய்யாநின்ற திருப்பாற்கடலென்றுஞ் சொல்லப்படும். அங்ஙனம் அதனாலாகிய அனந்தகோடி திவ்விய பலன்களை யாவருக்கு முனிமையாகக் கொடுத்தருளும் பகுதியினாலே அத்தீர்த்தத்தைத் தெய்வகங்காநதி தீர்த்த மிதுவென்று சொல்வதேயன்றி மற்றொன்றும் நாஞ்சருதிச் சொல்வதில்லையென்று சொன்னார் சூதமுனிவர்

நாகதீர்த்தமென்றொருபெயரதுவிட நாகநாதனைப்போற்றுஞ்
சேகறுக்கணபணாடவியாயிரச் சேடதீர்த்தமுமாகும்
பாகறுதவன்பலன்பலகோடியாம் பாத்திரபதிவிட்டால்
மாகதீர்த்தமச்சுனைப்புனலாடியம் மாநிலந்தனையாள்வார்.

(இ-ள்.) அப்படி மகிமையான தீர்த்தத்துக்கு நாகதீர்த்தமென்றொரு பெயர் அதுவல்லாமலும் நாகநாதனாகிய பரமேசுரனைப் பூசைசெய்து போற்றியவிடமுற்ற கணபணாடவிகளை யுடைத்தாயழகிய ஆயிரமுடிகளையுடைய ஆதிசேஷனென்னும் பெயரால் அங்ஙனம் சேஷதீர்த்தமென்று மொருபெயருண்டாகி விளங்கும் பகுதி யுடைத்தாயளவில்லாத அதன்பலன்கள ஒன்று பலகோடியாய் வர்த்திக்கும். அரசர்கள், கிராமம், பூமிகானங்களும், வேதியர்க்குக்கொடுத்து மாமாங்கதீர்த்த நிகரான அந்தச்சுனையிற் றீர்த்த மாடினார்களாகில் இந்த மாநிலமுழுதும் ஒரு குடைக்குள்ளடக்கி யாள்வார்கள்.—எ-று. (அ)

சேடதீர்த்தநீர்முதலுகத்தாடினார் தேகம்பொன்னிறமாகு
நாடிநின்றிரண்டாமுகத்தாடுவார் நடுக்குறுகிழந்திரும்
பாடல்வேண்டிமூன்றாமுகத்தாடுவார் படித்தமூகையைமாற்றும்
நீடுநாலுகத்தோர்மதியாடுவார் நிலைத்தனநிலையாக்கும்.

(இ-ள்.) அந்தச் சேடதீர்த்தத்தில் யாதாமொருவர்வந்து முதல்யுகத்தில் மூழ்கினார்களாகில் அவர்கள்தேகம் பொன்னிறமாக விளங்கும். இஷ்டமாகநாடிநின்று இரண்டாவது யுகத்தில் ஸ்நானஞ் செய்தார்களாகில் நடுக்கமுடைய வர்த்தீர்த்தீரும், இளமையுடையவர்கள் பேசும்படியாகவேண்டி மூன்றாவது யுகத்தில் குளித்தார்களாகில் வாய்பேசாத ஊமையென்பது தீர்ந்து வசனிப்பார்கள். நெடிதாகிய நாலாவதுயுகத்தில் ஒருமாதமுழுதுமுழுகினால் அவர்கள் நினைத்தகாரியம்கைகூடி வாழ்வார்கள்.—எ-று. (க)

விண்டுவின்பதம் வேணுமென்றாடிலவ் விண்டுவின்பதங்கூட்டுந்
துண்டவெண்பிறை சூடிதாள் வேண்டிலச் சோதிபொற்பதம்பூட்டு
மண்டர்நாயகன் பதம்புனலாடுங்கிலோ ரறஞ்சிறிதளித்தார்க்குக்
கொண்டல்வண்சுனைதரும்பலன் பலபலகூறுதற்கரிதாபால்.

(இ-ள்.) பின்னையுமந்தத் தீர்த்தத்தில் யாதாமொருவர்வந்து விஷ்ணுபதம் பெறவேண்டுமென்று தீர்த்தமாடினால் விஷ்ணுபதம்பெருவார்கள். துண்டமாகிய வெள்ளைப்பிறைசூடிய சடையையுடைய சிவபதம் பெறவேண்டுமென்று மூழ்கினவர்கள் சோதிப்பிரகாசமாகிய சிவபதஞ் சேர்வார்கள்; அந்தத்தீர்த்த சலத்தையுட்கொண்டு சிலதருமங்கள்கொடுத்தால் அவர்கள் தேவேந்திரபதம் பெறுவார்கள். ஆகையால் மேகமொய்த்த திருநாககிரித் தலத்தில் நாகதீர்த்தந்தரும் அனேக பலன்களை யளவிட்டுச்சொல்லுதற் கரிதென்றுசொன்னார் சூதமுனிவர்.—எ-று,

நாகதீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம்-உஎ-க்கு, திருவிருத்தம்-எரஅ௰உ.

# சிவ தீர்த்தச் சருக்கம்.

—(✻)—

ஈதுநிற்கநம்மிறைபவன்றிருப்பெய ரிடுந்திருச்சிவதீர்த்த
மோதுவன்றவத்தன்மனென் றொருமுனிக் குதவியததுகேண்மோ
பூதலந்தனிற்றீர்த்தமெல்லாமவண் புகுதவும்பெறமூழ்த்தோ
ராதிதேவர்வந்தாடவுநாடவு மமைத்தநாரியைபாகன்.

(இ-ள்.) நாகதீர்த்தத்தின் மகிமை இப்படிநிற்க நம்மிறைவனான சிவன்றிருப்பெயரிட்டு விளங்கியழகிய சிவதீர்த்த மகிமையைச் சொல்லுகிறோம் அரியதவமுடைய தவமுனிவனென்றொரு முனீசுவரனுக்கு உதவிசெய்தருளியது அதன் பெருமையைமுனிவர்களே கேண்மின்கள், இந்தப்பூமண்டலத்திலுள்ள தீர்த்தங்களெல்லாமந்தச்சிவதீர்த்தத்தில்வந்து புகுந்துமூழ்கப்பெறும் மூத்தநயனார் முதலாகியதேவர்கள்வந்து தீர்த்தமாடும்படி அமைத்துவைத்தார் அர்த்தநாரீசுரசுவாமி.

தன்மமோர்முனியாய்க்கரையிருந்துமெய்த் தவம்புரிந்தான்பூசை
நம்மகம்பலசெய்தான்வரந்தர நயந்கனைம்முகன்றாட்கீட்
பொன்மயத்துடனிருப்பதின்னமுமெனும் புராணநூலெனக்கூறச்
சொன்மறைச்சவுனகர்முதற்றுறவினர் சொற்றுகவெனக்கேட்டார்.

(இ-ள்.) தருமமேயொரு தவமுனிவனு யவதரித்துச் சிவதீர்த்தக்கரையிலிருந்து மெய்யாகிய தவசுஞ் சிவபூசையுஞ் செய்து நன்மைக்கேதுவாகிய பலவகையாகங்களுஞ்செய்தார். அங்ஙனஞ் சிவன்வரப்பிரசாதந் தரப்பெற்று மனோகரத்துடனே நயப்புற்று ஐந்துமுகமுடைய சிவனடிக்கீழ்பொன்மயத்துடனே நாளுமிருப்பரென்று புராணநூல் சொல்கிறதெனச் சூதமுனிவர்சொல்ல, சொல்லுதற்கரிய வேதியரான சவுனகாதிமுனிவர்கள் சொல்லுமையா சூதமுனிவரே யென்று கேட்கிறார்கள்.—எ-று. (உ)

சிவபுனற்றடந்தீர்த்தமீதாடிய தெய்வ தன்மிகன்சோதி
சிவபதத்துணையர்ச்சனைபண்ணியே நாளுநற்றவங்கூறப்
புவனமீதினில்யாதுவேண்டினைமுனி புகலெனநின்பாதம்
கவலையற்றியான்காண்பதேபேறெனக் கனிந்துபின்னருஞ்சொல்வான்.

(இ-ள்.) பெருமையுடைய சிவதீர்த்தத்தில் தெய்வவடிவான தன்மமுனிவன் தீர்த்தமாடி நியமத்துடனே புதுமைபொருந்திய சோதியாகிய சிவனிரண்டு பாதமலர்களைப் பூசைசெய் தர்ச்சித்து நாளுநாளும நன்மையாக நல்லதவஞ்செய்திருந்தாரப்போது சிவனெழுந்தருளி வந்து காட்சிகொடுத்து வாராய்தன்மமுனிவனே உனக்கிந்தப்புவன சக்கரத்தில் யாதுவேண்டித் தவஞ்செய்தாய் அதுசொல்வாயாயென்றுவினவ முனிவன் சொல்லுகிறான் சுவாமி மனக்கவலை யில்லாமல் நான் உம்முடைய பாதாரவிந்தத் தரிசனங் காண்பதுவே நல்ல பேறெனச்சொன்று சொல்ல மனங்கனிந்து பின்னையுஞ் சொல்லுகிறான் அந்தமுனீசுவான்.—எ-று.

விமலனின்னையேவெரிந்புறந்தாங்கவும் வெரிந்புறந்தனிற்றாங்கி
லமலவல்லிசேடேசனைப்போலவு மருள்கெனவருள்கூர்ந்தா
னமலமாற்றியவிச்சிவதீர்த்தமிவ் விசுத்திமென்பெயராகக்
கமலநாயகவுனைப்பரவினரொனைக் கைதொழுகவும்வேண்டும்.

(இ-ள்.) விமலமூர்த்தியே உம்மை என்முதுகின் புறத்திற் சுமந்திருக்கவும் அப்படியென்முதுகின் புறத்திற் றனியேசுமப்பதற்கு நிர்மலனான மகாவலுமையு

டைய ஆதிசேஷனைப்போலெனக்கு அதிகபலன் கொடுத்தருளுமென்றுவேண்ட அப்படியே கிருபைகூர்ந்தருளினார் எனது மலமகற்றிய விந்தச்சிவதீர்த்தம் இக லோகத்திலென் பெயராக விளங்கும்படி யுமையொருபாகரே கிருபைசெய்தருளும் உம்மைத் தொழுதவர்கள் என்னையுங் கைதொழுவதாகவுங் கிருபைசெய்தருள வேண்டுமென்று சொன்னான் அந்தமுனீசுவரன்.—எ-று. (ச)

என்றிரந்தவர்க்கிவ்வரங்கொடுத்தவ னென்றும்வெள்விடையாகக்
கொன்றைசூடியஃதருளினனுகையாற் குளிர்ச்சுனைசிவதீர்த்த
மன்றுதொட்டதுதன்மதீர்த்தப்பெய ராயினவதிற்றோய்ந்து
மன்றலர்த்தநாரீசனைப்பணிந்தவர் வடிவமீசனைப்போல்வார்.

(இ-ள்.) என்றிப்படி யந்தத் தன்மமுனிவனானவன் இரந்து கேட்டபடியே இவ்வரங்கள் கொடுத்து அவனென்றைக்கும் வெள்ளைவிடையாக வடிவுகொண்டு தம்மைத் தாங்குவதாகக் கொன்றைமாலைசூடிய பரமேசுரன் கிருபைசெய்தருளினார். ஆகையாற் குளிர்ச்சியுடைய சிவதீர்த்தச்சுனை யன்றுதொடங்கி தன்மதீர்த்தமென்னும் பெயருண்டாச்சுது. அதில் யாதொருவர்வந்து நன்றாய்மூழ்கி மணம் பொருந்திய அர்த்தநாரீசுரரைத் தோத்திரஞ்செய்து பணிந்தார்களாகில் அவர்கள் ஈசுரனைப்போல வடிவமெய்துவார்கள்.—எ-று. (ரு)

தன்மனுமவாவியிற்புனல்மூழ்கினார் தன்மமென்றொருகோடி
நன்மைபெற்றிடுமது வொருமலையென நவிலுவர்நனிதோய்ந்தோர்
தன்மனத்தினிற்சோரனாய்வேறொரு துணிவினிற்புகுந்தானு
மன்னுதண்சிவதீர்த்தமுன்வெளிப்படில் வைகுவன்சிவலோகம்.

(இ-ள்.) தன்மதீர்த்தமென்னும் பெயராய்விளங்கிய அந்தச்சுனைப் புனலின் மூழ்கினவர்கள்செய்த தர்மங்கள் ஒன்றொரு கோடிதர்மமாக நன்மைபெற்று விளங்கிட தொருமலையென்று சொல்லுவார்கள் மிகவுந்தோய்ந்தவர்கள் துற்புத்தியான மனத்தோடுஞ் சோரனாகி வேறொரு துணிவுகொண்டு புகுந்தாலு மன்னுதற்கரிய குளிர்ந்த சிவதீர்த்தம் அவர்கள் கண்முன் வெளிப்படக்கண்டார்களாகில் சிவசாலோகபதவியைப்பெற்றங்ஙனம் வைகிவாழ்வார்கள்.—எ-று. (சு)

இறையவன்றருமிச்சுனைக்கொருபெய ரிடபதீர்த்தமுமாகும்
மறையவன்சதுர்மறைவளர்ந்திடத்தினம் வந்துமூழ்கிடவேண்டு
முறைபயம்பொழிசுரபியொன்றக்கரை யுதவினுலொருகோடி
நிறைசெழுங்கபிலைகளாலய நிறைத்தனபலன்போலும்.

(இ-ள்.) இறையவன் றந்தருளிய அந்தச்சிவதீர்த்தச்சுனைக்குப் பின்னையுமொருபெயர் இடபதீர்த்தமென்றுஞ் சொல்லலாகும் மறையவனானபிரமதேவன் நாலுவேதமும் வர்த்திக்கும்படியாகத் தினம்வந்து அந்தச்சுனையின் மூழ்குவன் பால்மிகவும்பொழியும் பசுவொன்று அந்தச் சுனைக்கரையிற் றானங்கொடுத்தால் நிறைந்த செழுமையுடைய ஒருகோடிகபிலைப்பசுக்கள் சிவாலயங்களில் நிறைத்து வைத்த பலன்களாகவிர்த்திக்கும்.—எ-று. (எ)

அந்தவந்தவண்புனற்சுனைமூழ்கியா னாறுமைந்தபிஷேகஞ்
சந்தனங்கள்கற்புரங்களோடாமலை சம்புவாமுமைபாகத்
தெந்தையுந்திறன்முருகருமினியகே சவருமின்புறவாட்டில்
முந்தவங்கவர்பெறும்பலனுலக மூன்றினுமொழிந்தடங்காதால்.

(இ-ள்.) அழகியவர்ந்த வளமைபொருந்திய புனல்நிறைந்த தீர்த்தச்சுனையில்



யாதொருவர்வந்து மூழ்கிமனமகிழ்ச்சியாகப் பசுக்கள் கொடுக்கின்ற பால்முதல் ஐந்துவகையுஞ், சிவன்றிருமேனிகுளிர அபிஷேகஞ் செய்து கர்ப்பூரம்விரவிய திவ்விய சந்தனக்குழம்புகளால் நாகமிரிநாகீசுரருக்கும், எந்தையாகிய அர்த்தநாரீசுரருக்குந், திறலுடைய முருகருக்கும், இனிதாகிய ஆதிகேசவருக்கும் இன்பமுறும்படியாக அபிஷேகஞ் செய்தார்களாகில் முந்தியங்ஙனமவர்கள் பெறும்பலன்களை இவ்வளவென்று திரிலோகத்தார்களாலுஞ் சொல்லிமுடியாது.—எ-று. (அ)

தன்மதேவதைதவஞ்செயுஞ்சுனையருட் சங்கரன்சுனைதோய்ந்தார்
பொன்னிறந்தருஞ்சுனையதுபொற்சுனை பொற்சரோருகதீர்த்தங்
கன்மவல்வினையனைத்தையுங் கழுவினன் கதிதருங்கனதீர்த்த
நன்மையோருருவாகியதீர்த்த நன்கனவிடைச்சிவதீர்த்தம்.

(இ-ள்.) தருமதேவதை தவஞ்செய்யுஞ் சுனையாகியருள்மிகுந்த சிவதீர்த்தச்சுனைநீர் தோய்ந்தவர்கள் பொன்னிறமாவார்கள், அந்தச்சுனை பொற்றாமரைத்தீர்த்தமென்றுஞ்சொல்லப்படும். பூருவகர்மமான வினைகளனைத்துந் தீர்ந்து நல்ல சிவகதிகொடுக்கும் நன்மையாகிய தன்மமே யொருவடிவாகிய தீர்த்தம் மேன்மையாகிய வெள்ளைவிடைச் சிவதீர்த்தம் மிகவும் மகிமையாய் விளங்கிற்று.—எ-று.

பலபலன்றரப்பகர்ந்ததீர்த்தங்களைப் படித்தவர்படித்தோதும்
நலனுறக்கினங்கேட்பவர்சிவபுரி நாடுவரெனும்வேதங்
கலைதெரிந்துரைசூதரன்றோதினர் காசிகாண்டமுங்காந்த
நிலைதரித்திடுபுராணநூலோதிய நிலைமையென்றுலகத்தே.

(இ-ள்.) அநேக பலன்களைத் தருவதாகச்சொன்ன தீர்த்தமான்மியங்களைப் படித்தவர்கள் படித்ததன் பொருள்விளங்கச் சொல்லுமவர்கள் சுகமாகத்தினமுங் கேட்பவர்களனைவருஞ் சிவலோகஞ் சேர்வார்களென்று வேதாகமங்கள் சொல்லும் பின்னையுங் காசிகாண்டமும் நிலைமையுடைத்தாகிய காந்தபுராண நூல்களுமோதினபலன்கள் உலகத்தில்யாவருக்கும் நிலைமையாக உண்டாகுமென்று சகல கலையுந் தெரிந்துணர்ந்து சூதமுனிவர் சொன்னார்.—எ-று. (௧0)

சிவதீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம், உஅ-க்கு திருவிருத்தம், எாகஉ.

---

# குமார தீர்த்தச் சருக்கம்.

——ESS——

சிவதீர்த் தப்புக் காடிப்பின்குமர ரன்றீர்த்தந் தோய்ந்து
தவநீர்மையிலக் கரையாகா றிற்சடாக் கரமுந்தனியோதிப்,
பவநீடி.கல்விட மாதொருபங்கன் பஞ்சக்கரமோதிப்
புவனேசுரிமந் திரமொடுபோற்றப் புத்தியுமுத்தியுமாம்.

(இ-ள்.) சிவதீர்த்தத்திற் றீர்த்தமாடினபின்பு குமாரதீர்த்தத்தில் மூழ்கிநேம முடித்து அந்தத் தீர்த்தக்கரையிற் சடாக்ஷரத்தை உச்சரித்துப் பாவவிநாசகதாக உமையொருபாகன் பஞ்சாக்ஷரத்தையு முச்சரித்துப்புவனேசுவரி மந்திரத்தோடே செபித்துத் துதிசெய்தவர்க்குப் புத்தியுமுத்தியு முடனே சித்திக்கும்.—எ-று. (க)

குமான்றீர்த்தம் வந்தகெமக்கிது கூறுதியெனமுனிவோ
ரமருஞ்சூதருரைப்பஞ்சோணித வணிநகரத்தொருவன்
சமரந்தருவாணாசுரனென்போன் சங்கரனைப்பணிய
வெமரிப்படியர்ச சித்திலர்யாதுனை தெண்ணமெனப்புகல்வான்.

(இ-ள்.) குமாரதீர்த்தம் வந்த வரலாற்றை எங்களுக்குச்சொல்லுமய்யாவென்ற கேட்கச் சூதமுனிவர் சொல்லுகிறார், சோணிதபுரத்தில் அதிபதியாயிருக்கின்ற புஜபலபராக்கிரமத்தை யுடைய வாணாசுரனென்பவன் சிவனை யனவரதகாலமும் பூசித்துவணங்க வெம்மடியார்களி லிப்படியர்ச்சனை செய்தவர்களில்லை. ஆனதால் உன்னுடைய மனோபீஷ்டமான வரங்களென்ன வென்று சிவன்றோன்றிக்கேட்கச் சொல்லுகிறான் வாணாசுரன்.--எ-று. (௨)

கையாயிரவுர வாணன்சிவனைக் கண்டுகனிந்தேத்தி
யையாமகபதி யஷ்டவசுக்க ளயன்முதலவர்பாலின்
மெய்யாயுதமென துயிரிறவாவகை வெற்றியெனக்காகச்
செய்யாயிதுவரமடியாக்கெனவருள் சிவனப்படியீந்தான்.

(இ-ள்.) ஆயிரங்கைகளையுடைய வாணாசுரன்றோன்றிய சிவபிரானைக்கண்டு கருணையுடனே வணங்கித் தோத்திரஞ்செய்து சுவாமிஇந்திரன் அஷ்டவசுக்கள் பிரமதேவன் முதலான தேவர்கள் பூமியில் மனிதர்கள் இவர்களுடைய ஆயுதங்களாலெனக்குப் பிராணச்சேதம்வாராமல்வெற்றியுண்டாக மெய்யாகியவரங்கொடுத்தருளுமென்று சொல்லக்கிருபை கூர்ந்து அந்தவரமெல்லாங் கொடுத்தார்.-எ-று.

சோணிதநகரினி லிவ்வரமுடையான் சுராதியர்புகழத்
தானுவையிரைஞ் ஞாறுகரத்தாற் றகவர்ச்சனைசெயுநாள்
பூனுர்விசயைத் திருமாலுனொடு போர்செயுமககாலங்
கானுதியெமதறு முகனொடியாமுங் கடிதணுகுவப்வெருவேல்.

(இ-ள்.) சோணிதாபுரத்திற் சிவன்கொடுத்த வரப்பிரசாத பலத்தினாற் றேவர்கள முதலாகியஅனைவர்களும் போற்றிசெய்ய அரசாட்சிசெய்துகொண்டு சிவமூர்த்தியைத் தன்னுடைய ஆயிரங்கைகளாலு மர்ச்சனை செய்யுங்காலத்தில் ஒருநாள் சிவன்றோன்றி காட்சிகொடுத்து வாராய் வாணாசுரனே வெற்றியுடைய கிருஷ்ணமூர்த்தியானவர் உன்னுடனே எதிர்த்துயுத்தஞ்செய்வார் அப்போதுனக்குச்சகாயமாக நமது குமாரக்கடவுளோடு நாமும்விரைந்து உதவிசெய்வோம். காண்பாயாகச் சற்றும்பயப்படாதேயென்று உறுதிசொன்னார்.—எ-று. (௪)

எனவரனோதின னென்றுயர்சூத ரியம்பச்சவுனகர்கேட்
டனகன்மாதவ வானர்க்கரியுட னடுவினையென்கொலென
மனனுறவோதுவ தோதுவமத்தெய்வ வருடமோராயிரமாய்க்
கனவனுருத்தன் காரணமாயன் கண்டகரைப்பொருவான்.

(இ-ள்.) என்றிப்படி சொன்னார் சிவனென்று உயர்ந்த தவமுடைய சூதமுனிவர் சொல்லச் சவுனகாதி முனிவர்கள்கேட்டு நிர்மலனாகிய சூதமுனிவரே அந்த வாணாசுரனுக்குவிஷ்ணுவுடனே போர்செய்யவேண்டியமுறைமையென்ன அதைச் சொல்லுவீரென்று கேட்க உங்கள் மனத்துக்குத் தெரியும்படி சொல்லுகிறோம், தேவாண்டிலே ஆயிரம்வருடம் அழகிய அநுருத்திரன் [illegible] மகாவிஷ்ணுவானவர் வாணாசுரனுடனே யுத்தஞ் செய்வாரென்று [illegible] சூதமுனிவர்.—எ-று. (௫)



ரவ்வகையெனினுடற் கன்னிகைகரியவ னெழில்மகவனுருத்தன்
மைவிழிமூடுங் கனவின்மணப்பவம் மகிணற்கவன்மயலா
மிவ்வகைசித்திரரேகையறிந்து படத்தெழுதினளிவரி
லெவ்வெவனெனவனு ருத்தனையோதின ளேகியெடுத்துய்த்தாள்.

(இ-ள்) முன்னடந்தவிபரம் எப்படியெனில் வாணாசுரன் மகளாகிய உடற்கன்னிகையென்பவள் ஒருநாள் நித்திரைசெய்யும்போது கிருஷ்ணன்மகனான அநுருத்திரன் அவள் சொற்பனத்தில் வந்தவளைப் புணர்ச்சிசெய்ய வவனழகைக்கண்டு மிகவும் மோகித்து மூர்ச்சிப்பதுகண்டு அவளைப்பெற்ற தாயாகிய சித்திரரேகை யதுவறிந்து மகள் மயல்திரும்படியாக ஐம்பத்தாறு தேசத்து ராஜகுமாரர்களைப் படங்களிலெழுதி இவர்களிலுனைச் சேர்ந்தவனெவனென்று கேட்க அழகிய அநுருத்திரன் வடிவெழுதிய படத்தைக்காண்பித்தவுடனே கள்ளவண்டையிட்டு சொக்குப்பொடி தூவி மயக்கஞ்செய்து நித்திரைசெய்கின்ற அநுருத்திரனைக் கட்டிலோடெடுத்துவந்து மகளுடனே சேர்த்தினள்.—எ-று. (௬)

சித்திரரேகையெடுத்தநுருத்தன் றிகழ்பஞ்சணைமீதே
நித்திரையொடுவுடற்கன்னிகைகண்டனை நெடுநாளதிமோகம்
வைத்தபினிருவருமருவினர்பிரிவறமைந்தனும்வயறூர்ந்தான்
அத்தகைவாணனறிந்தவனொடுமிக லாடிச்சிறைபோட்டான்.

(இ-ள்) சித்திரரேகையானவள் அநுருத்தனைக்கொண்டுவந்து பஞ்சணைமெத்தையின்மேலே நித்திரையுடனே யுடற்கன்னிகையைமருவி இருக்கும்படி செய்துவைத்தாள். அவர்களிருவரும் பிரியாமல் நெடுநாளதிமோகமாகிக் கலவிசெய்திருந்தபோது அந்தப் பெண்வயிற்றிற் புத்திரனுற்பத்தியானான். அது வாணாசுரனறிந்து அநுருத்திரனோடு போர் செய்து சிறையிட்டான்.—எ-று. (௭)

இவ்வகையவரிதயத்தினிலெண்ணி யெழுந்தனனெதிர்போந்து
பௌவமிரைத்தென வாணனைமுன்னிப் பற்பலவமர்செய்தா
னவ்விடைமுருகன்கணபதியைம்முக னவருதவிபினேகத்
தெவ்விடையவரவ ருக்கொருவிபாளு செய்தனனெடுமாயன்.

(இ-ள்) இவ்வரலாறெல்லாங் கிருஷ்ணமூர்த்தி இருதயத்திற் றெரிந்துகொண்டு மகா கோபத்துடனே கடல் கொதித்தாற்போலும் அளவில்லாத சேனைகள் புறப்பட்டுச் சோணிதபுரத்தை யணுகிச்சூழ்ந்து வாணாசுரனை யெதிர்த்துப் பல விசித்திரமான யுத்தஞ்செய்தான். அதுவேளையில் வாணாசுரனுக்கு உதவியாக முருகவேள், கணபதி, பரமேசுவரன் இவர்கள் வந்து முனைந்து போர்செய்தார்கள். அப்படிப் போர் செய்யுமவருக்குத் தக்கவகை விவரஞ்செய்தமைத்தான் மாயவனான கிருஷ்ணன்.—எ-று. (௮)

செய்துசமர்க்கெதிர் வாணனையடருஞ் செங்கட்கரியோன்முன்
வெய்தும்பரசிவ னெதிரும்றமர்முனை வினையிற்சிலசெய்யக்
கைதவமுற்றொரு மாயவிதத்தாற் கண்டகன்வாணன்பா
லெய்தியவன்கர முற்றுமறுக்கு மெல்லையில்வெள்விடையோன்.

(இ-ள்) அவரவருக்குத்தக்க விவரஞ்செய்தமைத்துப்போர்முனைந்து வாணாசுரனெதிர்த்து போர்செய்யுஞ் செந்தாமரைக்கண்ணனான கிருஷ்ணனுக்கு முன் [illegible]பரமசிவன் வந்தெதிர்த்து விசித்திரவகையாகச் சிலயுத்தஞ்செய்யாநின்றார். அதுகண்டு கபடமாய் வேறொரு மாயசொரூபமாக வாணாசுரன் பக்கத்தில் வந்து அவன் கைகள்முழுதும் அறுத்தார் கிருஷ்ணன். அதுவேளையில், அங்ஙனஞ் சிவன்றோன்றினின்று சொல்லுகிறார்.—எ-று. (௯)

எம்மைப்பூசித் திடுகையிரண்டு மினிதினில்விடுகவெனுஞ்
செம்மைத்திருமொழி யாலடிகரியவர் திண்கையிரண்டுந்தார்
கொம்மைக்கரபோ ரிரண்டாலரியொடு கொடுவஞ்சமர்பின்னுந்
தம்மிற்புரியத் தடிதுமென்னளவிற் றாய்வந்தடிவீழ்ந்தாள்.

(இ-ள்.) எம்மையவன் பூசைபண்ணின கையிரண்டையும் அறுக்காமல் விட்டு விடுமென்று அன்புடனே சொன்னார். அவாது திருவார்த்தைக்கு மனதிரங்கித் திண்ணிய கைகளிரண்டும் அறுக்காமல் விட்டுவிட்டா ரப்படிவிட்ட இரண்டு கைகளாலும் கிருஷ்ணனுடனே கொடிதாகிய யுத்தம் வாணாசூரன் செய்வது கண்டு அந்த இரண்டு கைகளையும் அறுத்துவிடுவோமென்று அறுக்கவருமளவில் அவன் றாயானவள் வந்து அவன் பாதத்தில் வீழ்ந்து யுத்தத்தை விலக்கினாள்.—எ-று.

அன்னவனைக்கொல் லாதமர்வினையு மகன்றரி யனுருத்தன்
பின்னவனுதவுஞ் சிறுவிபைநன்கவி யாணம்பெரிதுற்றான்
சன்னியிடத்தனு மிருடிகள்கணமுங் கணபதிமுதலோரு
முன்னியடைந்தனர் குமரச்சுனையிலவ் வாணனுமுடன்வந்தான்.

(இ-ள்) அப்போது சிவன் முதலாகிய அனைவர்களும் யுத்தத்தை விலக்கிச் சமாதானஞ்செய்து அது முகூர்த்தத்தில் அந்த அனுருத்திரனுக்கு வாணாசூரன் மகள் உடற்கன்னியை அழகிய கல்யாணஞ் செய்வித்துக்கொடுத்து கிருஷ்ணனுடனேகூட்டி அனுப்பிவைத்தான். அங்ஙனம் பரமேசுவரனு மிருடிகள் கூட்டங்களுங் கணபதியார் முதலான தேவர்களனைவர்களுங் குறிப்புடனே வந்து நாககிரியிலுற்ற குமார தீர்த்தக்கரையிற் சேர்ந்தார்கள். அவர்களுடனே வாணாசூரனும் வந்தான்.—எ-று. (கக)

உடன்வருமிருடிக ளனைவரும்வாண னுபுத்தப்பரிசிப்பால்
தடநிறையுங்கும ரன்றீர்த்தத்திற் றரும்புனலுறமூழ்கி
யடிதொழுகிடவந் தீசுரனென்றென் றுதரமொழிகூறித்
திடனுறு குமரன் றீர்த்தக்கீழ்பாற் சிவபூஜைகள்செய்தார்.

(இ-ள்) அங்ஙனம் வந்துசேர்ந்த இருடிகளனைவரும் வாணாசூரனுயுத்த பரிசிப்பினாற் சுத்தாக நிறைந்த ஜலையுடைய குமாரதீர்த்தத்தில் மூழ்கிவந்தீசுரர் பாதாரவிந்தத்தைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து அரகரமகாதேவாவென்று தோத்திரஞ்செய்து குமாரதீர்த்தத்தின் கிழக்குப்புறத்திற் சிவனைப் பூசைசெய்தார்கள்.—எ-று. (கஉ)

எந்தையாம்வந்தீ சுரனைப்பூசித் திருடிகள்குகைதோறு
முய்ந்தனரனைவரும் வாணன் குமர னுதவுஞ்சுனைமூழ்கி
வந்துமைபங்கனை யர்ச்சனைபண்ணி வந்தீசரையேத்திச்
சிந்தைமகிழ்ந்தொரு தீர்த்தமமைத்துத் தினம்பூசனைசெய்தான்.

(இ-ள்) எந்தையாகிய வந்தீசுரனைப் பூஜனைசெய்து இருடிகள்குகைதோறும் புகுந்து சிவயோகஞ் செய்திருந்தார்கள். வாணாசூரனுங் குமாரதீர்த்தத்தில் மூழ்கி வந்தீசுரரைப் போற்றிசெய்து அர்த்தநாரீசுரரைப் பூசித்து மனமகிழ்ச்சியுடனே தன்பெயரால் அங்கொருதீர்த்தஞ் செய்தமைத்துத் தினமும் பூஜனைசெய்யாநின்றான்.—எ-று. (கங)

அய்யவவந்தீசுரர்வருகாரண மருளுகசூதவெமக்
குய்யவிளம்புதியென்னவுரைப்ப துரைப்பன்புவிவாழ்கத்
தெய்யதிருக்கயிலாயந்தனிலச் சுரர்முதலனைவோருஞ்
செய்யவருந்தவ மகவுதவெனவச் சிவனைத்தொழுபோதில்.



(இ-ள்) அந்த வந்தீசுரன் வந்த காரண மகிமையைச் சொல்லுமையாவென்று முனிவர்கள் கேட்கச் சொல்லுகிறோமென்று சொல்லுகிறார். சூதமுனிவர் இந்த லோகமெல்லாம் வாழத்தக்கதாக மேன்மையான ஸ்ரீ கைலாசததில் தேவர்கள் முதலனைவர்களும் அரியதவங்கள் செய்து நாங்களுய்யும்படியாகப் புத்திர சந்தானவரங் கொடுத்தருளுமென்று பரமேசுரனை அப்போது வணங்கித்துதித்தார்கள்.

மண்டலமிசையத் தட்சணவரையென் றொருவரைமணிவரையுண்
டண்டர்நம்முனிவரரரியாரணன்வேலனுமுக முன்னவன்வந்
தெண்டிசையுந்தொழவினிதுளதுமையவ ளொமபங்குறைவித்தின்
புண்டரிகத்திலிருப்பபவ்வந்தீ சுரனுகத்தோழுவே.

(இ-ள்) வாரீர்தேவர்களே! இந்தப் பூமண்டலத்தின்மீது தட்சண கைலாசமென்றொரு திருநாககிரியுள்ளது அங்ஙனம் முனிவர்கள் விஷ்ணு, பிரமன், வேலவர், விநாயகர் எட்டுத்திசையவர்களும் வந்து தொழும்படியாகிய ஸ்தலம். அந்த ஸ்தலத்திற் பார்வதி நம்மிடப்பாகத்திற் பிரியாமலிருக்கின்றாள் பொற்றாமரைப் பூம்பொகுட்டின்மேலெழுந்தருளி யிருக்கின்றோம் எம்மையும் வந்தீசுரரையும் பூஜனைசெய்வார்களென்று சொன்னார் பரமேசுவரன்.—எ-று (கரு)

அக்கிரிமிசையொருநாளன்னங்க ளருந்துதல்விட்டுவலம்
புக்கெமைவந்துபுகழ்ந்தவர்புத்திர மித்திரர்பொலிவரென
நக்கனுரைத்தனனவ்விரதப்படி நகம்வலமவருபவர்தாந்
தக்கநெறித்திறமுலகத்தயர்புரி தவமிகுதெனமொழிவாம்.

(இ-ள்) அந்தக்கிரியின்மீது யாதாமொருவர்வந்து உசிதமான தீர்த்தங்களில் மூழ்கி நேமத்துடனே ஒருநாள் அன்னமுதலாகிய பதார்த்தங்களுண்பதுவிட்டு உபவாசமாக நமது திருக்கோவில் வலம்வந்து நம்மைச்சோடச வுபசாரங்களாற்பூசித்துப் போற்றுவார்களாகில் அவர்கள் நினைத்தபடியே புத்திரமித்திர களத்திராதிகளுஞ் சகல பாக்கியமும் பெறுவார்களென்று சொன்னார் பரமேசுவரன். அவ்வணம் விரதப்படி கிரிவலம் வருபவர்கள் தகைமை நெறிமுறைமைத்திறமும் உலகத்தார்கள் செய்யுந்தவங்களும் இன்னபடியென்று சொல்லுகிறோம்—எ-று. (கசு)

குமரன் சுனையிற்காலையின்மூழ்கிக் குமரனைமுன்போற்றி
யமரெண் சரவணபவவென்றுறக் கரமுமக்கரையோதித்
தமருந்தந்தையுமன்னையுநீயென் றவனியெனவிரங்
கவருந்துசொடுமுத்தினமன்னங் கடிவன்றுயிலறவே.

(இ-ள்) குமாரதீர்த்தத்தி லுதயகாலத்து மூழ்கித் தீர்த்தக்கரையில் நேமமுடித்து சரவணபவ நமாவென்று சடாக்ஷரத்தை யுச்சரித்துச் செபஞ்செய்து தந்தையுந்தாயுந் தமரு மென் தவமுஞ் சகலமு நீயென்று சிந்தித் தடுத்திய ஈரச்சீலையுடனே யாதாமொருவர் மூன்றுநாளைக்கு ஆகாரம் நித்திரை யிவையிரண்டும் விட்டு உபவாசஞ் செய்வார்களாகில்.—எ-று. (கஎ)

மூத்தினமாசுயம்வலம்வந்தக்கிரி முறைமுறைவலம்வந்தே
நித்தமும்வந்தீசுரனையுளத்தி னினைந்தடிநின்றேத்தி
அத்தகைகணபதியைக்கண்டேத் துக வாதியினடினிற்றன்
சித்தமகிழ்ந்திப்படிதவமுயல்பவர் செல்வர்தமைப்பெறுவார்.

(இ-ள்) மூன்றுநாளும் விரதஞ்செய்து வந்தியா பாஷாணக்கிரியை முறை வலம்வந்து சிவாலயத்தையும் வலம்வந்து நித்தமும் வந்தீசுரரை உன்

ளத்தில் நினைந்தடிபணிந்தேத்தி அப்படியே கணபதியாரையுங் கண்டு தொழுது அர்த்தநாரீசுரரையுந் தரிசனஞ்செய்து வணங்கி மனமகிழ்ச்சியுடனே இந்தப்படி தவஞ்செய்பவர்கள் நல்ல சற்புத்திரரைப் பெற்று வாழ்வார்களென்று திருவுளம் பற்றியருளினார் பரமேசுவரன்.—எ-று. (௧அ)

எனவரன்வானவர் யாவருமேத்தி யிறைஞ்சியகாலையவர்க்
கனவரதமுநல தவமுஞ்சிந்தையி லானவுமன்னவுமெய்க்
கனவனமகவும்பெறுகுவிர்நாகக் கனகிரிகயிலையெனத்
தினமறைபகர்வதெமக்கிடமானது செல்லுமினெனவிமையோர்.

(இ-ள்) என்றிப்படி யீசுரன் சொன்னவுடனே தேவர்களனைவருங் கைதொழுது உய்ந்தோமுய்ந்தோமென்றார்கள். அப்போது சுவாமி தேவர்களே நான் சொன்னபிரகாரம் அந்தஸ்தலத்தில் அனவரத காலமும் நல்லதவம் புரிவீர்களாகில் நீங்கள் மனதில் நினைத்த காரியங்களுஞ் செய்மாகிப் பாவவிமோசனமுமாகி அவாவருக்கான புத்திரர்களையும் பெற்று வாழ்வீராக. திருநாககிரி, தெட்சண கைலாசகிரியென்று சதாகாலமும் வேதங்கள் முறையிடுகிறது எமக்கிஷ்டமாகிய ஸ்தலம் அது அங்ஙனஞ் செல்லுமின்களென்று விடை கொடுத்தருளினார் அப்படியே தேவர்களெல்லாம் உடனே யந்தஸ்தலத்துக்கு வந்தார்கள்.—எ-று. (௧௯)

வந்துநினைத்தவரந்தருகுவடும் வடிவேலனவாமும்
நந்தவனந்திகழ் சஞ்சீவியுமுள நாகக்கிரியகலா
வெந்தையெம்முருகன் சுனைதருதீர்த்த மெண்ணுபிரதீர்த்தஞ்
சந்ததமாகும் பலபலனுதவுஞ் சத்தியமென்றனரே.

(இ-ள்) தேவர்களனைவரும் வந்து இஷ்டகாமியங் கொடுக்கப்பட்ட மேரு சிகரமும் வடிவேலருடைய கிருபாகடாட்சமும் கற்பகத்தருக்கள் நிறைந்த நந்தவனமுந் திகழ்ந்து விளங்கிய சஞ்சீவிகளும் உண்டாகும் நாககிரியைப் பிரியாமல் எம்முடைய சுவாமியாகிய முருகவேள்செய்த குமாரதீர்த்தமுதலாய் எண்ணுயிர் தீர்த்தங்களுஞ் சதாகாலமும் மூழ்கித் தவஞ்செய்து வேண்டிய பலன்பெற்றார்கள் மற்றும்யாதொருத்தர் நினைத்த காரியங்களெல்லாங் கூடிவரும் இது சத்தியமென்றார் சூதமுனிவர்.—எ-று. (௨0)

குமரன்றீர்த்தத் தொருதுளியுள்ளே கொள்வாரேற்
குமரன்பெறுதற் குரியவர்நன்மைக் குலமாதர்
குமரன்கொற்றம் பெறுகுவர்கொற்றவர் குலமானுற்
குமரன்பாதங் கூடுவராறக் கரங்கூறில்.

## வேறு.

(இ-ள்) குமாரதீர்த்தத்தில் ஒரு துளிசல முட்கொள்வார்களாகில் குமாரரைப் பெறுவதற் குரியவர்கள், நல்ல பிராமணகுல சனங்களான பெண்கள் குமார சுவாமியினுடைய சவுரியமும் பெறுவார்கள், அரசர்குலமானால் சுப்பிரமண்ணியர் பாதஞ்சேர்வார்கள் சடாக்ஷர தியானஞ் செய்வார்களாகில்.—எ-று. (௨௧)

கார்த்திகைமதியிற் கந்தன்சுனையின் கண்மூழ்கி
யேத்திநம்மரனைச் சண்முகனைப்போற் றியமாந்தர்
பேர்த்தொருசென்மம் பெறிதரசாளும் பிறேடாங்கி
வாய்த்துடலிடையார் நரைதிரைமருவார் வடிவாவார்.

(இ-ள்) கார்த்திகை மாதத்திற் றிருக்கார்த்திகை தினத்தில் யாதாமொருவர்



வந்து குமாரதீர்த்தத்தில் மூழ்கிச் சண்முகக்குமாரரையும், நாகேசுரரையும்போற்றி செய்தார்களாகில் மறுபிறப்பில் மன்னவர்களாகி பூலோகக்கரமெல்லாம் அரசாட்சியாக ஆளுவார். மிகவும் பெருமையுடைத்தாய மேனியுடையார்கள் நரைதிரை பொருந்தாது நல்லவடிவாக வாழ்வார்கள்.—எ-று. (௨௨)

மாதருமகவும் வளமிகுநிதியும் வளர்சீரும்
போதருநிலையும் புல்குவா ராறப் புணர்நாளிற்
காதலின்முருகனை யம்மந்திரவுரையொடு கண்டார்க்கும்
வீதயர்நிய மளித்தார்க்கும்பழ வினைபோமால்.

(இ-ள்.) திருக்கார்த்திகை நாளில்வந்து குமாரதீர்த்தத்தில்மூழ்கி சுவாமிதரிசனஞ் செய்வார்களாகில், நல்ல ஸ்ரீ ஜனங்களும், நல்லபிள்ளைகளும், திரவியங்களும், நல்லசீரும் பேருபெற்று எக்காலமும் வாழ்வார்கள். முருகனை நினைத்த சடாக்ஷரமந்திரத்தையுச்சரித்துக்கொண்டு வேலவரைத்தரிசித்தபேர்களுக்குஞ்சுகந்த புட்பமாலைகள்சாத்தி தூபம் நிரைத்தபேர்களுக்கும் பூர்வசென்மாந்திர கருமங்களெல்லாம் நிவாரணமாகும்.—எ-று. (௨௩)

மன்னவர்மலைவுறும் வல்வினைவெல்லும் வலிவேண்டிற்
பன்னறைபுழுகொடு சந்தனகுங்கும பன்னீரால்
முன்னுரைகோரோ சனைமுருகர்க்கு முழுச்சாத்திப்
பொன்னடிபணியிற் பொருபடையோடும் புவிகூடும்.

(இ-ள்.) மறுமன்னரை வெற்றி கொள்ளும்படி வலிமைவேண்டினால் வந்து குமாரதீர்த்தத்தில் மூழ்கிப் புண்ணியதினமான திருக்கார்த்திகைநாளில் புனுகு, சவ்வாது, கோரோசனம், குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், என்றவாசனைத்திரவியமுங் கலந்த திவ்விய சந்தனங்களாற் செங்கோட்டு வேலவருக்கு முழுக்காப்புச்சாத்தி புட்பமாலையும்புனைந்து தூபதீப நைவேத்திய வுபசாரங்கள்செய்து தரிசித்து அவர் பொற்பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றி செய்தார்களாகில் மாற்றாரை வெல்லும்படியாகச் சவுரியமும், ஆயுதங்களுஞ், சேனைகளுஞ் சோப்பெற்று வெற்றி கொண்டு பூமண்டலத்தை ஒரு குடைக்கீழடக்கி ஆள்வார்கள்.—எ-று. (௨௪)

தன்மந்தருவை காசிவிசாகந் தனில்வேலோர்
நன்மங்கலசுனை மூழ்கிமகிழ்ந்தர்ச்சனைநாடித்
தென்மணபழமொடு பாயசமேற்றிச் சிறிதுண்டாற்
குன்மமுதற்றம் முதசப்பிணிபல குணமாமால்.

(இ-ள்.) புண்ணியதினமாகிய வைகாசி மதியம் விசாக நட்சத்திரத்தில் நல்ல மங்களகரமான குமாரதீர்த்தத்திலே மூழ்கி நேமத்துடனே மனோபக்தியாக சுவாமிகளுக்கு அர்ச்சனைசெய்து, தேங்காய், பழம், பாயசம் நிவேதித்து அதிற் சிறிது பிரசாதம் உண்டார்களாகில் வயிற்றில் வலிக்கப்பட்ட குன்மமுதலாகிய பிணிகள் யாவுங் குணமாகிச் சுகமாயிருப்பார்கள்.—எ-று. (௨௫)

பொற்கலை குங்கும கலைசெம்பட்டுப் புனைவார்க்குப்
பற்பலசெல்வம் பாரித்தந்தகப் பகைதீருங்
கற்புரசந்தன புனுகால்முருகன் கழல்சாத்தில்
வெப்புளமேக மெய்த்துயர்தாகங் காசம்போம்.

(இ-ள்.) நேமத்துடனே சுவாமிகளுக்குச் சொர்ணப் பட்டாடை குங்கும ... அணிந்து, துளிர்ப்பட்டுகள்சாத்தி அலங்காரஞ்செய்து உபசாரத்துடனே

வணங்கி ழொழ்த்தினர்களாகில் பலசெல்வங்களும் படைத்து வாழ்வார்கள் இயமன் பகையுந்தீரும். சர்ப்பூரம், புனுகு. விரவிய சந்தனத்தால் முருகர் திருமேனிகுளி ரச் சாத்தித் தரிசனஞ்செய்வார்களாகில் அவர்களுக்கு வெப்பு, உளைப்பு, மேகஞ் சருவாங்க விரணத்துயரம், அந்தரதாகங், காசரோகமுந் தீர்ந்துபோம்.—எ-று.

சோதிபதத்தொரு சொர்ணப்புட்பந் தொடைசாத்தில்
மாதுயரகலும் பாதகமிலர்மக வான்போல்வ
ரோதுங்குபேரன் போன்மிகுசெல்வத் துயர்வார்குங்
காதலர்கல்வி யுடன்கட்டழகின் னைசேர்வார்.

(இ-ள்.) குமார தீர்த்தத்தில் மூழ்கி நேமத்துடனே சிவதரிசனஞ்செய்து சுவாமி பாதங்களில் ஒரு சொர்ன்ன புட்பமாலை சாத்தினர்களாகில் மிகுந்த துயரந்தீரும், அவர்கள்செய்த பாதகங்களும், நிவாரணமாகும். இந்திரனைப்போல் போகபோக்கியங்க ளனுபவிப்பார்கள். குபேரனைப்போல் மிகுந்த செல்வத்தைப் படைத்து ஓங்குவார்கள். நல்ல புத்திரரும் வித்தைகளும்பெற்றுச் சுற்றத்துடனே கட்டழகாகப் பூமியில் வாழ்வார்கள்.—எ-று. (உஎ)

இத்திறமுதவுங் குமரன்றீர்த்தமெனும் பெயரோடுபினுஞ்
சித்திசொரூர்த்தமெனும் பெயருடையது தேவேந்து
மத்தருவும்வந் தமையவிளங்கிய வதன்மேல்பாற்
சத்திரத்தீர்த்தக் கீழ்பாலுளது சண்முகதீர்த்தம்.

(இ-ள்.) இத்தியாதி பலனுங் கொடுக்கப்பட்டது குமாரதீர்த்த மென்றொரு பெயர் பின்னுஞ்சித்தியாதீர்த்த மென்னுமொரு பெயருடையது. இந்திரலோகத் துக் கற்பகத்தருக்க ளனைத்தும் வந்தமர்ந்து வசித்திருக்கின்றது. அதன்மேற் பாகத்தில் சத்திரதீர்த்தத்தின் கீழ்ப்பாகத்திலுள்ளது சண்முகதீர்த்தம்-எ-று. (உஅ)

அந்நாள்வேதியன் முதலந்தணருக் கருள்சத்திரமாக
மின்னார்வேலவர் வேதவதிஷ்டன் மிகவும்பரிவுறவே
பின்னாள்வருதே னுவையணியுவிப் பெரியவருக்கீந்து
மின்னாரிடையொரு பங்கனைவந்தனை மலரடியர்ச்சித்தான்.

(இ-ள்.) அந்தக்காலத்திற் பிரமாமுதலாகிய அந்தணர்முனிவர்களுக்குச் சத் திரங்கட்டி அமிர்தபோஜனங் கொடுப்பதாக நினைத்து மின்னொளி பொருந்திய வேலாயுதக்கடவுள் வேதவதிஷ்டன் மிகவும் பரிவுகூர்ந்தருளிய காமதேனுவை யங்ஙனம் வரவழைத்து நிறுத்தி அளவில்லாத மகா சனங்களுக்கெல்லாஞ் சத்திர போஜனங் கொடுத்தருளி மின்னிடையாளாளாகிய உமை யொருபாகனை வந்தனையோ டர்ச்சனைசெய்தார்.—எ-று. (உகூ)

அன்றுமுதற்சத் திரதீர்த்தப்பெய ராங்காயினவங்க
ணின்றுயர்கற்பக ஞானப்பாதவ நிறைதிக்காயதரு
நன்றிகொள்கூல விருக்ஷமெனும்பெயர் நாலுகமும்முறையே
துன்றியிவ்வளவும் விளங்கின்குமா ரனுழிற்சுனை மேல்பாலாய்.

(இ-ள்.) அன்றுமுதற்கொண்டு சத்திரதீர்த்தமென்றம் பெயராயிற்று. அங் ஙனம்உயர்ந்துநிற்கின்றது கற்பகம், ஞானப்பாதபம் இவ்வெல்லாம் நிறைந்தருவ அழகிய கூலவிருட்சம் என்றிப்படி நாலுயுகமும் முறையே பெயர்களாய்விளங்கிச் செறிந்து இந்நாள்வரையிற் புகழ்ச்சியாயிருக்கின்றது. அழகிய குமாரதீர்த்தத் திற்கு மேற்பக்கத்தில்.—எ-று. (௩௦)



வேலவர்சுனைமூழ் கித்தருநிழல் விரதியருக்கன்னந்
தாமோடொருபிடி யுதவிலோர்கோடி சிவக்கியானியர்கொள்ளப்
பாலமுதங்கள் படைத்தபலன்கள் பலிப்பாகுமென்றே
போலமெடுத்துரை யோதினருண்மை யுண்மையெனச்சூதர்.

(இ-ள்.) குமாரதீர்த்தத்தில்மூழ்கி நேமத்துடனேவிரதமாக அந்தகூலவிருட் சத் தருநிழலில் மாவிரதியர்களுக்குச் சுத்தமாக ஒருபிடியன்னங்கொடுத்தார்க ளாகில் ஒருகோடி சிவயோகிகளுக்குப் பாலமிர்தங்கள் படைத்தபலன்கள் பலிக் காகுமென்று ஓசையுடனே இதுஉண்மையென்று சொன்னார் சூதமுனிவர்.

இருசுடரைப்பணி யிடர்செயுநாளினி லித்தீர்த்தமதாடி
யுரதருவின்கீழ்த் திலஹோமஞ்செயி லொன்றுக்காயிரவாண்
டரனசலத்தி லிருப்பர்முன்னூ லர்க்கருடானப்புரிவார்
பாகதியுப்பலனுஞ்சிவசிவவது பகரத்தொலையாதால்.

(இ-ள்) சந்திராதித்தர்கள் இராகு கேதுகள்பற்றிய கிரகணபுண்ணியகாலத் திற் குமாரதீர்த்தத்தில்மூழ்கி, அந்தகூல விருட்சத்தருநிழலின்கீழ் எள்ளினாலே ஓமஞ்செய்வார்களாகில் ஒருஎள்ளுக்கு ஓராயிரந் தெய்வவருடம் கைலாசகிரியிலி ருப்பார்கள். அங்ஙனம் பிராமண ஜனங்களுக்குத் தானங்கள் கொடுப்பார்களாகில் அவர்களுக்குண்டாகும் பாகதியும் பலனுஞ் சிவசிவா சொல்லமுடியாது.—எ-று.

அங்கவிருபர புஞ்சிவலோகத் தடைவது திண்ணமெமாரோ
ரிங்கிதகோதா னம்புரிவார்புவி யிறைவனெனப்பெறுவார்
மூழ்கியதன்கீ ழிடபம்விடுவா ரவர்முதற் பிதிர்க்களெலா
மங்கையோர்பங்கன் சிவலோகத்தினி லைகுவவாழ்குவரே.

(இ-ள்.) அப்படிச்செய்த புண்ணியபுருஷர்களுடைய இரண்டு மரபுஞ் சிவ லோகஞ் சேர்வது நிச்சயம்நிச்சயம். அந்தத்தருநிழலில் இனியகோதானஞ் செய் வார்களாகில்அவர்கள் பூலோகஅரசர்களாகி யாள்வார்கள். பின்னுங்குமாரதீர்த்தத் தில்மூழ்கி அந்தத்தரு நிழலின்கீழ் சுவாமிபேர்சொல்லி ஒரு இடபக்கன்றை விடுவார்களாகில் அவர்கள் பிதிர்க்களெல்லாம் உமையொருபாகருடைய சிவ லோகபதத்தில் வைகிவாழ்வார்களென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (௩௩)

திகழ்தைமாதத் தமவாசைமுதற் சிவராத்திரியளவாய்க்
குகனன்சுனைமூழ் குவரெனில்யாகங் குளித்தவர்பலனுறுதந்
தருமிக்காலையின் மூழ்கினர்பாவஞ் சதசென்மத்திலேயென்
றகமகிழ்வுற்றுரை யாடினர்சூத ரருட்சவுனகர்கேட்ப.

(இ-ள்.) திகழ்ந்து விளங்கிய தைமாசத் தமாவாசை முதலாய்ச்சிவராத்திரி பரியந்தம் வந்துகுமார தீர்த்தத்தில் மூழ்குவார்களாகில் யாகாங்கதீர்த்தங் குளித்த வர்கள் பெறும்பலனுறும். இப்படிக்கொத்த புண்ணியதினங்களில் மூழ்கினவர்கள் பாவங்கள் தீர்ந்துபோகும் நூறுசென்மம் புண்ணிய புருஷர்களாய் வாழ்வார்க ளென்று மனமகிழ்ச்சியாக சவுனகாதி முனிவர்கள் கேட்கச் சொன்னார்சூத முனிவர்.—எ-று. (௩௪)

தானுறுகவா டாவிடிலொருவன் றன்கைப்பொருளீந்து
தானுகபலைச் சுனைபடிவிக்கினும் வருபப்பலனென்று
தானுதக்கணமாடி னையுதப பாவங்கதிர்நீண்டி
லானுளறுமுக வன்சுனை மூழ்குவ தறிசப்பலனுமால்.

(இ-ள்.) தான்முழுகினாலுஞ் சரியே அப்படிமுழுகக் கூடாதாயின் ஒருவன் கையிற் பொருள்கொடுத்து மூழ்கச்செய்தாலும் அந்தப்பலன் அவர்களுக்குவரும் உத்திராயணந் தட்சணாயணமாகிய ஆடிச்சங்கிரமம், தைச்சங்கிரமம், கிராணபுண் ணிய காலங்களிலுங் குமாரதீர்த்தத்தில் மூழ்கினால் அதிகப்பலனுண்டாகுமென்றார்சூத முனிவர்.—எ-று. (௩௫)

கூலவிருக்கங் குலவுகிழக்கிற் குமரன் றீர்த்தமுடன்
ஞாலம்பணிமுருகன் புகழோதியன் னுக பலைபோற்றிச்
சீலமிகுங்கதை செப்பினோர்கேட்குஞ் சீலவாநட்டாரோவர்
கோலமிகுந்து நினைத்தன பெறுவார் குறைவறவாழ்வரே.

(இ-ள்.) கூலவிருட்சத்தின் கீழ்ப்பாகத்திற் குலவியகுமாரதீர்த்த மகிமையை யும் உலகம்பணியுமுருகப் புகழையுஞ் சதாகாலமுந் தோத்திரஞ் செய்து உசித மிகுந்த புராணசரித்திரஞ் சொல்லுமவர்கள் நல்லவடிவுபெற்று இஷ்டகாமியார்த் தங்கள் குறைவில்லாமற் புவியில் வாழ்வார்கள்.—எ-று. (௩௬)

குமாரதீர்த்தச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம், ௨௮-க்கு, திருவிருத்தம், ௭௱௯௨.

---

# பாவநாசதீர்த்தச் சருக்கம்.

குமார தீர்த்தத்தின் மூழ்கிக் குளிர்ப்புனற் பாவநாசத்
தமாரவாதைகளைமாற்றி யாடுக வாடுங்காலை
யெமாரிடத்தவரைப் போற்றி யியன்றன முன்வைத்தேது
பமாரவப்பரனை யேத்திப் பகர் சவபாதிசொண்டே.

(இ-ள்.) குமாரதீர்த்தத்தில் முழுகினபின்பு யாதாமொருவர் காமவிகாரமில் லாமற் குளிர்ந்தபுனலையுடைய பாவநாசத்தீர்த்தத்திற் றீர்த்தமாட வேண்டும் அப் படித்தீர்த்தமாடும்போது நமதிருவடிகளைப் போற்றிசெய்துதன்னாலியன்றதைமுன் வைத்து நிவேதித்துத் தூபதீப நைவாசத்திர உபசாரங்களுடனே நாகபூஷணனான பரமேசுரனைப் பணிந்தேத்தி நீராடுக.—எ-று. (௧)

பாபநாசத்திலாடிப் பாபநாசங்களாகக்
கோபணுணிய வாய்பங்கன் குரைகழல் கும்பிட்டோதி
தாபனுந்தெல்லைமாற்றுந் தர்ப்பணமுகளித்தானம்
பூபனுதாத்துதல்கிற் புண்ணியம் பிதார்க்கோர்கோடி

(இ-ள்.) பாவநாசமாகும்படி பாவநாசத்தில் மூழ்கி இந்திரகோபம் நாணும் படி அழகிய வதரமுடைய உமையொருபாகனது சத்திக்கப்பட்ட வீரக்கழலணி ந்த இரண்டு பாதங்களைக்கும்பிட்டுத் தோத்திரஞ்செய்து இமலோகத்தெல்லையை மாற்றவதான பிண்டப்பிரதானமுந் தர்ப்பணமுஞ் செய்து பக்தியுடனே தானங் கொடுத்தால் அவர்கள் பிதிர்க்கள் கோடிதலைமுறைக்கும் சுவர்க்கஞ்சேர்வார்கள் செய்ததரும மொன்றொருகோடியாய் விர்த்திக்கும்.—எ-று. (௨)

எனச்சவுனகற்குச்சூத னியம்புதல் கேட்டு தேர்
கனத்துறும் பாவநாச காரணம் பகர்தியென்ன



வனத்திருநாகவெற்பு மலரவன் காப்பாமாகம்
நினைத்துறுகுரோச மைந்தின் னேமியானுறைந்து நீங்கான்.

(இ-ள்.) என்றிப்படி சவுனகாதி முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்லக் கேட்டு அந்தமுனிவர் மகிழ்ச்சியுடனே பெருமைபொருந்திய வந்த பாவநாசத்தீர் த்தத்தினுடைய காரணமகத்துவங்களைச் சொல்லுமையாவென்று கேட்கச் சூத முனிவர் சொல்லுகிறார், வாரீர்முனிவர்களே அழகிய திருநாககிரியைப் பிரமதே வன் காத்தருளாநின்றார், கிரியைச்சூழ்ந்து நினைப்பதற்கரிய பஞ்சக்குரோசத் தெல்லையளவும் பிரியாதபடியாக மகாவிஷ்ணு காத்தருளாநின்றார்.—எ-று. (௩)

முண்டகன் மகவான்ஞான முதல்வனு முனிவர்யாருங்
கொண்டினி துறைவர்வெய்யோன் குளிர்மதி காந்தரீசர்
மண்டுபன்னொருவரெட்டு வசுக்களசுவினிவாரோர்க
ளுண்டெனவிருந்தார்காந்தருவர்தங்கணங்கொடுத்தார்.

(இ-ள்.) பிரமதேவன், தேவேந்திரன் தேவர்கள், முனியர்கள், யோகிகள், ஞானியர்மற்றுஞ் சந்திரசூரியர்கந்தர்பதினொருகோடி ருத்திரர்கள்அஷ்டவசுக்கள் அஸ்வினிதேவதைகள், கின்னரர், கிம்புருடர்கள், கெருடர், காந்தருவர்கள், சித் தர், வித்தியாதரர்கள் மற்றும் அனேகந்தேவர்களெல்லாந் தங்கள் தங்கள் பத்தினி களுடனே திருநாககிரியிலுறைந்து வசித்திருக்கின்றார்கள்.—எ-று. (௪)

இவரிவரர்த்தநாரீ சனைப்பணி மலையிலேத்தித்
தவநெறிபுரிந்துவாழுந் தகைமையராகச் சூழ்ந்தார்
புவனமும் விண்ணும்போற்றும் புபங்கவெற் பினிலத் தீர்த்தம்
நவமணிக் கழுநீர் நெய்தல் நனிகொள் சேதாம்பல் நீங்கா.

(இ-ள்.) இவர்கள் யாவரும் நாககிரியில் அர்த்தநாரீசுரனைப் பணிந்தேத்தி நேமத்துடனே நெறிமுறைமையாக வாழ்ந்திருக்கும்படி தகுதியர்களாகச் சூழ்ந்தி ருக்கின்றார்கள். மண்ணும்விண்ணும் புகழப்பட்ட அந்தக்கிரியிற்பாவநாசத்தீர்த்தம் நவரத்தின மணிகள் பொருந்திச் செங்கழுநீர்ச் சேதாம்பல் செந்தாமரை நீலோற் (௫)
பலங்களும் பிரியாமலிருக்கின்றது.—எ-று.

இயக்கர்தங் கன்னிமாரோ டினிதுசந்ததமு மூழ்கி
நயப்புனற் றலைமேற்கொண்டு நந்தனவனப் பூக்கொய்து
செயக்கர மழுவோன் பாதஞ் சிவசிவ வெனப்பூசித்து
முயக்கிவர் மகளிரோடு முனிவரர் தவங்க ணீங்கார்.

(இ-ள்.) இயக்கர்கள் தங்கள் பத்தினிகளுடனே இனிதாகவந்து நாககிரியிற் பாவநாசத்தீர்த்தத்தில்மூழ்கி நியதிமுடித்து அத்தீர்த்தந்தலைமேற்புரோட்சித்துக் கொண்டு நந்தவனங்களிற் புஷ்பங்களெடுத்துப் பகுதியுடனே வெற்றிமழுவேந் திய கைகளையுடைய பத்தினிமார்களுடனே அத்தீர்த்தத்திற் குளித்து நியதிமுடி த்துப் பிரியாமல் அரியதவங்கள் செய்திருக்கின்றார்கள்.—எ-று. (௬)

யாவரே யெனினுமந்த வெழில்வரை யினிநாள் மூன்றி
னுவகை வைகிப்பாவ நாசதீர்த்தத்திலாடிக்
காவலின் பரனைப்போற்றிக் கடன்பல கழித்துவெற்பில்
மேவியங்கிழிகா லென்கால் மிதித்தன பொறுத்திடுமென்ப.

(இ-ள்.) யாவராலும் அழகிய திருநாககிரியின் பேரில்வர்து அன்புடனே மூன்றுநாள் வாசஞ்செய்து பாவநாசதீர்த்தத்தின் மூழ்கிநியதிமுடித்து நித்தியகன்மக்கடன் பலவுங்கழித்து இறையவனை பரமேசுரனைப் போற்றிசெய்து வணங்கி வாழ்த்தி நாலாம்நாள்கிரியினின்றிறங்கி யடிவாரத்தில் வந்துநின்று எமதுகால்களால் மிதித்த குற்றங்களைப் பொருத்தருள வேண்டுமென்று தண்டனிட்டுத் தோத்திரஞ் செய்வார்கள்.—எ-று. (எ)

என்றனி மலையின் கீழ்வந் திறைவனைக் குருவைப் போற்றி
நின்றவந் நிலையே முக்கால் நெறியுற வலம்வந் தேத்தி
யன்றவ ணிருந்து நூற்றெட் டாமெழுத் தைந்துங் கந்தர்
நன்றியொ ளெழுத்தோ தாரூம் நனிபெறச் செபித்துச் செல்வார்.

(இ-ள்.) என்றிப்படி வணங்கினவர்கள் நாககிரியடிவாரத்தில் வந்து அங்ஙனமிறைவனைப் போற்றிக் குருவை வணங்கி நின்ற நிலையே நெறிமுறைமையாக மூன்று பிரதட்சணஞ்செய்து துதித்து அன்றங்கணமிருந்து பஞ்சாக்ஷரங்களையும். சடாக்ஷரங்களையும்,பெருமைபெற நூற்றெட்டுருச்செபஞ்செய்துமுடித்துப்பின்பு போவார்கள்.—எ-று. (அ)

பணிமலைப் பாவநாசப் பனிப்புனற் றிறமும் வந்த
வணிவகைப் படியுஞ்சொல்வாஞ் சவுனக ராதிகேண்மின்
றிணிவுள கைலைச்சார்பிற் செழுந்திருத் தீர்த்தஞ்சூழ
நணுபிரமாச்சிரம நன்குள தவத்தின் மேலோர்.

(இ-ள்.) அந்தத் திருநாககிரியிற் குளிர்ந்த புனலுடைய பாவநாசதீர்த்த மகிமையும், அதனாலாகிய காரணார்த்தங்களும் சொல்லுகிறேஞ் சவுனகாதி முனிவர்களே கேண்மின்களென்று சொல்லுகிறார் சூதமுனிவர். திண்மையுடைய கைலாசகிரிச்சார்பிற் செழுமையுடைய நாகதீர்த்தத்தில் சூழ்ந்து விளங்காநின்ற பிராமணாச்சிரமங்கள் அழகியதாகவுள்ளது அங்ஙனந் தவமகிமையுடைய பெரியோர்கள் வசித்திருக்கின்றார்கள்.—எ-று. (கூ)

செறிந்துட னிருந்தகாலை திடமதியெனும்பேராளன்
குறிந்த சூத்திரன்வந்தங்கக் குழாந்தனைப்பாதம்போற்றி
யறிந்திட வடியேனுங்க ளருந்தவத்தொழிலையெல்லாம்
பிரிந்திடா தியாகம் பண்ணும் பெற்றியெற் கருள வேண்டும்.

(இ-ள்.) அந்தஆச்சிரமங்களில் அரியதவ முனிவர்கள்நெருங்கிப் பயிலாநின்ற காலத்தில் திடமதியென்னும் பெயருடைய ஒருசூத்திர னங்ஙனம்வந்து முனிவர் கூட்டங்களைக்கண்டு தண்டனிட்டுப் போற்றிசெய்து சொல்லுகிறான். வாரீர்சுவாமிகளே! அடியேனுக்குத் தங்களுடைய நெறிமுறைமைத் தொழில்களையெல்லாம் யானறிந்துகொள்ளும்படி தெரியப்படுத்தி பிரியாமலுங்களுடனே யாகாதி கிருத்தியங்கள் செய்யும்படிக்கு அனுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறான்.—எ-று. (க0)

மாமுனிவாரேயுங்கள் மந்திரமுபதேசித்துத்
தேமலர்க்காவினும்பார் செறிந்தவாரிடத்திற்கூடிச்
சேமவைதிகபாகஞ் செய்தருச் சனைகள் செய்து
காமுறவடியன் றன்பாற் கனிந்தரு ளதவென்றேத

(இ-ள்.) மகா முனீசுரர்களே உங்களுடைய காயத்திரி மந்திரங்களை அடி



யேனுக்குபதேசஞ்செய்து தேன்பொழியும் புட்பகாவனத்திற்செறிந்த இருடிகளுடனே நானுங்கூடி ரகசியமான வைதீகயாகத்தோ டர்ச்சனைகளைச் செய்து யோக்கியனாகும்படிக்கு என்னாசை யன்புக்கிரங்கி என்னையுமொரு முனிவனென்று சொல்லும்படியாகத் தங்கள் மனங்கள் கனிந்து கிருபாகடாக்ஷஞ் செய்தருளவேண்டுமென்று சொன்னான் திடமதி.—எ-று. (கக)

சூத்திரன்றனக்கு வைதீ கத்துள வுபதேசங்கள்
சேர்ந்திட லாகாதெங்கள் சேர்வைசெப் திருத்தியமைதே
யேத்துதனுனக்கு நல்ல யாகமுந் தவமுமென்று
தீர்த்தரா ரிடத்துமேலோர் திடமதிக் குரைத்தபோதில்.

(இ-ள்.) சூத்திரனுக்குப் பிராமணர்செய்யுங் காயத்திரி மந்திரவுபதேசங்கள் செபங்கள் தவங்கள்யாவுஞ் சொல்லக்கூடாது, எங்களைத் தரிசனஞ்செய்து வணங்கியிருப்பதே யுனக்கு நல்லயாகமுந் தவமுமென்று பூசாரிகிய ஆரிடத்தின் மேலோர்களப்போது திடமதிக்குச் சொன்னார்கள்.—எ-று. (கஉ)

அதைபுளத்தடைத்துத் தூரத் தாச்சிர மத்தின் பாங்கே
மதுநிகழ் சோலைவாவி வளந்தரு பொருணீர்வைப்புப்
புதிதுறவைத்துத் தெய்வ பூஜையும் பண்ணிப்பிண்டக்
கதிபலவியற்றியாங்கன் கனிந்தவன் வைகுநாளில்.

(இ-ள்.) ஆரிடத்தார் சொன்னதை மனதிலடக்கி வைத்துக் கொண்டுபோய் தூரத்திலே ஒரு ஆச்சிரமத்தின் பக்கத்திலே தேன்வழிந்தொழுகிய பூஞ்சோலைகளும், வாவிகளும் வளம்பொருந்திய பலபொருள் விளையும் ஏரிநீர்வைப்பும் புதிதாகவுண்டுசெய்து அங்ஙனம் தெய்வ பூசைகளும் பண்ணிப் பிண்டப்பிரதானங்களுஞ் செய்து முக்திமோக்ஷத்துக் கேதுவாகிய பலவகை மார்க்கங்களுமியற்றி யங்ஙன மனமகிழ்ச்சியுடனே திடமதியென்பவன் வைகி வாழ்ந்திருக்குநாளில். எ-று.

திடமதிக்கமலன்வெற்பிற் செழுந்தவர்தெளியச்சொல்வார்
வடமொழி வேதநூல் மந்திரந்தெய்வபுராணம்யாகம்
நெடிதுசூத்திரார்செய்ய நெறியலசெய்வித்தார்க்குங்
கடிதுசெய்தார்க்கும்பாவங் கழிந்திடாதொலையாதந்தோ.

(இ-ள்.) கைலைச்சார்பில் செழுமையுடைய ஆச்சிரமத்தில் தவமுனிவர்கள் சொல்லுகிறார்கள் வாராய் திடமதியே வடமொழி வேதநூல் யாகமந்திரங்களைக் காயத்திரி செபதங்களைத் தெய்வபூசை பாராயணயாகங்கள் இவையாவு மிகவுஞ்சூத்திரர்செய்வது நெறிமுறைமையல்ல அப்படிச் செய்வித்தவர்களுக்குஞ் செய்தவர்களுக்கும் பாவங்கள் சம்பவிக்கும், அந்தப்பாவங்கள் எளிதிலே தொலையாது எ-று

கயிலையாச்சிரமந்தன்னிற் கனமறைமுனிவர்யாரு
மியல்புறக்கனிகாய்சாகை யெழிற்கிழங்கவன்பால்வேண்டிப்
பயில்வுறுங்காலைவேத பாரகன்சுமதியென்பா
னியலுறவவன் றனன்ப னுயினனிவனைப்போற்றி.

(இ-ள்.) கைலாசகிரிச் சார்பிலிருக்கின்ற ஆச்சிரமங்களில் மகிமையுடைய மறைமுனிவர்கள் யாவரும் புசிக்கும்படிக்கு இலைகாய்கனிகள் கிழங்குகள்வேண்டி அந்தத்திடமதி இடத்திற்போய்ப் பழங்கள்செய்து வாங்கிக்கொண்டு போவார்கள். அக்காலத்திலொருநாள் ஒரு வேதபாரகன் சுமதிமுனி யென்பவன் இயல்புடனே

அவனுக்கு மிகுந்த சிநேகிதனானான் அவனைப்போற்றிசெய்து திடமதிசொல்லுகி றான்.—எ-று. (கரு)

எமக்குமுதியற்கையெல்லா மியம்பினல்வியக்கஞ்செய்தே
யமைத்திடற் குபதேசத்தை யருள்கெனவுறைத்தகோடிங்
கமைத்தொழி றசுமதிகாலங் கழிந்திறந்தனந்தபாவஞ்
சுமைப்பெறுநிரயந்தோய்ந்து சொற்றிருகாபிறவிசேர்ந்தான்.

(இ-ள்.) சுமதிமுனிவரே உங்களியல்பாகிய தொழில்களை யெல்லாம் எனக் குபதேசஞ்செய்து அமைந்திருப்பதாகக் கிருபைசெய்தருளுமென்று வணங்கினான் வணங்கினதுகண்டு மனமிரங்கித் தங்களுடைய வேதாகம மந்திரகாயத்திரி செப தபங் தேவபூசை யாகாதி கிருத்தியங்கள் செய்யுந் தொழில்களை யெல்லாந் திடம திக்குத் தெரியப்பட வுபதேசஞ் செய்தருளினான். பின்பு சுமதிமுனியென்பவன் காலங்கழித்து இறந்துபோனான். அளவில்லாத பாவம் பிரவேசித்துச் சுமைதலை யாக இயமலோகத்தில் நண்ணி நரகங்களில் வீழ்ந்தழுந்தி அளவில்லாதசன்மங் களெடுத்தலைந்தார்—எ-று. (கசு)

பிறந்திறந்தனந்தசென்மம் பெருங்கடைப்பிறப்பின்பின்னர்
துறந்தசூத்திரனாய்வைசியத் தோற்றமாயரசனாகி
யறந்திகழ்மறையோனுந்தி யடைந்தனனடைந்துபெற்று
நிறைந்திடுமிருநாலாண்டி னெறியுபவீதஞ்செய்தான்.

(இ-ள்.) பிறந்திறந் தனந்தங்கோடி சென்மங்களெடுத்த பின்பு ஒருபிறப்பிற் கடையவனாகவும், பின்பு சூத்திரனாகவும், பின்பு வைசியனாகவும், பின்பு அரசனாக வும் பிறந்து பின்பு புண்ணிய தேகமான பிராமண யோனியை யடைந்து நல்லசற் புத்திரனாய்ப் பிறந்து சகலசாஸ்திரங்களுங்கற்றுத் திகழ்ந்து விளங்கி எட்டுப்பிரா யத்தளவில் எக்கியோபவீதந்தரித்தருளினார் சுமதமுனி.—எ-று. (கஎ)

செய்தபின்சுமதிதன்னைத் தின்பதுபோலநாடி
வெய்தெனப்பிரமஹத்தி விழுங்குவபோலப்பற்றிக்
கைதரித்திடாதுகொள்ளக் கனிந்தவன்றந்தைநீர்ப்பான்
பொய்தவிர்கும்பயோனி பொதியமீதடைந்துபோற்றும்.

(இ-ள்.) எக்கியோபவீதஞ்சாத்தி யருளினபின்பு சுமதிமுனிவனைத் தின் பதுபோல் நாடிவெவ்விய பிரமஹத்தி விழுங்குவதுபோற் பிடித்து உபத்திரவஞ் செய்து தரிக்கொள்ளாது மேற்கொண்டகாலை அதுகண்ட தகப்பனானவன் மிகவு மிரங்கி இவன் பிரமஹத்தி தோஷத்தைத் தீர்ப்பானென்று பொய்ப்பில்லாத தவ முடைய பொதிய மலையிற்சென்று அகஸ்திய முனிவனைக்கண்டு தரிசித்துப் போற்றிசெய்து சொல்லுகிறான்.—எ-று. (கஅ)

போற்றியென்னுயிரேயெங்கள் பொருளெனுந்தருமப்பேறே
யாற்றலம்புத்திரன்றன்னை யடைந்தனமருளவேண்டும்
பேற்றில்லன்மகனைப்பற்றிப் பிரமராக்கதன்மேற்கொண்டா
னாற்றமொன்றருள்தி தென்னூற் குரவவிப்பிரமவாழ்வே.

(இ-ள்.) போற்றி போற்றி என்னுயிர்த்துணையாய் விளங்கும்படியான தரு மப்பேறே யாற்றலுடைய வுமது பாதாரவிந்தத்தை யடைந்தேன், கிருபைசெய்த ருளவேண்டும் யான் தவஞ்செய்துபெற்ற இந்த ஒருபுத்திரனைப் பிரமராக்ஷதன் பிடித்து உபத்திரவஞ் செய்கின்றான். இது நிவிர்த்தியாக வேருண்மை



கஞ்செய்தருளும் தென்கலை நூற்செய்த குருவே விப்பிரமவாழ்வேஎன்று தோத் திரஞ்செய்தான்.—எ-று. (க௯)

தென்புவி யுயர்ந்துமேலாய்த் திகழ்வடக் கீடுபட்டு
மன்பதை புவனமேலோர் வானவர் தயங்குநாளி
லன்புடன் பொதியம்வந்த வகத்திய வவரைக்காத்த
தென்பது சிறிதெனைமைந்த னிடர்தணி பெரிதேயையா.

(இ-ள்.) முற்காலத்தில் வடபூமி தாழ்ந்து தென்பூமியுயர்ந்து மனிதர்களும் புவனமேலோர்களுந் தேவர்களுந் தத்தளிப்பாசத் தயங்குவதுகண்டு தேவரீரன்பு டனே இந்தப் பொதியமலையி லெழுந்தருளிநின்று உலகங்களைக்காத்து ரட்சித்தீர், அகத்தியமூர்த்தியே! அவர்களைக்காத்து இரட்சித்தது பாரமல்ல இப்போது என் பிள்ளையினுடைய பிரமஹத்தி இடரைத் தீர்ப்பது பெரிதாகும் சுவாமியென்று சொன்னான்.—எ-று. (உ0)

எனுமகவரசைநோக்கி யிரங்கித்தென் பொதியவாதி
தனையனைத் தருள்ஞானத்தின் சற்றெறு கடாட்சமுற்று
முனமவன் பிரமவேதி யரிற்பெரியவன் முன்னாளாம்
வனதிடமதியென்பான்பால் மறைமொழி யுபதேசித்தான்.

(இ-ள்.) என்றிப்படி அந்தப்பிராமணன் சொல்லக்கேட்டு அவனுடைய புத் திரனையைக் குறித்துப் பார்த்துத் தென்பொதிகை யதிபனான தமிழ்ஞான மூர்த்தி அகத்திய முனிவன் மனமிரங்கிச் சற்றே கிருபாகடாக்ஷம்வைத்துச் சொ ல்லுகிறார் வாராய் பிராமணனே! உன்மகனான இவன் முன்னே பிரமவேதியர்க் குள் மேன்மையானவன், முன்னொரு சூத்திரன், திடமதியென்பவனிடத்திலே வேதவாக்கியங்களை உபதேசஞ்செய்தான்.—எ-று. (உக)

தருமமன் றெனமுன்செய்த தன்மையால் பரமாய்மாவா
யிருநிலப் பிறப்பின்பேத மென்னறப் பிறந்துதுஞ்சி
யெரிநரகிடைந்து முன்னரியற்றிய தவஞ்சற்றுண்டாய்ப்
பிரமர்தன் குலத்துதித்தான் பிரமராக்கதன்றான் கொண்டான்.

(இ-ள்.) தருமநீதிவழுவாக முன்செய்த பாவதோஷத்தினாலே மரமாகி மிரு கமாகி இந்தப்பெரியபூமியில் சென்ம பேதங்களாகிய அளவில்லாத பிறப்புப் பிற ந்திறந்து பெரிய நரகத்தில் வீழ்ந்தழுந்தி முன்செய்த தவத்தின் சற்றே புண்ணிய முண்டாகிய வதனால் உன்னிடத்திலுதித்து பிராமண சென்மமாகப் பிறந்தான் பின்பு பிரமராட்சதன் பற்றிக்கொண்டான்.—எ-று. (உஉ)

கூற்றுவனேவலாலே கொண்டன னென்றுபாவ
மாற்றுவ தொன்று கேண்மோ மறைவகுண் டிகைதம்பாங்கர்
ஆற்றிய புனற்காவேரிக் குறுவடக் கிருகுரோசத்
தேற்றது நாகவெற்பென் றெழுந்தன ததனின்மீதே.

(இ-ள்.) இயமனுடைய ஏவலாலே பிரமஹத்திதொடர்ந்துபற்றினதென்று சொல்லி இந்தப் பாவந்தீரும்வகை யொன்றுண்டு அதுகேளும் பிராமணனே ஆதி யில் நம்முடைய கைக்கமண்டல சலங்கவிழ்ந்து பெருகிய காவேரி நதிக்கு வடக்கு இரண்டு குரோசத்தெல்லை யளவில் நாககிரியென்றொரு மகாஸ்தலமுண்டு அந் த்தலத்தின்மீதில்—எ-று. (உ௩)

அத்தநாரீசர்நல்கு மருளினால் வந்ததீர்த்தஞ்
சுத்தமாம் பாவநாசந் தோற்றியவுடனேயோடும்

வித்தகப்படர்தியென்ன வேதியன் மகனினோடு
முய்த்தனன் பாவநாச முாகவெற்பினிற்போய்த் தோய்ந்தான்.

(இ-ள்.) அர்த்தநாரீசுரருடைய கிருபையருளினாலே உசிதமாக உண்டாகிய தீர்த்தஞ் சுத்தமான பாவநாசதீர்த்த மென்னும் பெயரையுடையது அதனைக் கண்டமாத்திரத்திலே இவனைப்பற்றிய பிரமஹத்தி தோஷமுந் தீர்ந்து போகும் வேதவித்தகனான நீ அங்கே செல்வாயென்று அகத்தியமுனிவர் விடைகொடுத்தருளினார் அந்தப்பிராமணன் தன்மகனுடனே கூடிச்சென்று திருநாககிரியிற் பாவநாச தீர்த்தத்தில் வந்து தீர்த்தமாடினான்.—எ-று. (உச)

தோய்ந்தபின்பிரமராக்கதன் சூறையாருதமுன்பூளை
யேய்ந்தனனிருவோரும்போந் திமையவர்தமக்குநேரா
னாய்ந்திடநகரின்வாழ்ந்தா ரர்த்தநாரீசன்பாதஞ்
சேர்ந்துறவிருந்தாரந்தத் திடமதிசெயற்கைசொல்வாம்.

(இ-ள்.) அப்படித் தீர்த்தமாடினபின்பு சூறைக்காற்றில் பூளைப்பூப் போவது போலபிரமராட்சதன் விட்டோடிப்போனான். அவர்களிருவரும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டுத்தெய்வரூபமாகத்தமது நகரத்திற்சென்று சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள் அந்தியத்தில் அர்த்தநாரீசுரர் பாதஞ்சேர்ந்து வீற்றிருந்தார்கள் இனியந்தச் சூத்திரன் திடமதிசெயற்கையைச் சொல்லுகிறோமென்று சொல்லுகிறார் சூதமுனிவர்—எ-று. (உரு)

எண்ணிலிநரகத்தெய்தி யிழிந்தசெந்துக்களாய்
நண்ணியபிறப்பிலோய்ந்து நற்கதிகிடைப்பதாக
விண்ணிடைப்பருந்தாய்நாக வெற்பினிற்றிகைத்தேதி
தண்ணறும்பாவநாசத் தடங்கரைத்தருவிற்சார்ந்தான்.

(இ-ள்.) திடமதியென்பவனிறந்து அளவில்லாதகாலம்நரகத்தில்வீழ்ந்தழுந்தி இழிவான ஜெந்துக்களாய் நணுகிப்பிறந்திறந் திளைத்து முன்செய்த புண்ணியஞ் சற்றுண்டாகி நல்லகதி கிடைப்பதாக ஒரு பருந்தாய்ப்பிறந்து ஆகாசமாகப்பறந்து வந்து தாகமேலீந்தியாய்ச்ஜலம்பருகவேண்டித் திருநாககிரியில் வந்தெய்திக் குளிர்ந்த புனலுடைய பாவநாசத்தீர்த்தக் கரையருகில் நின்றதொருமரத்தில் வந்துசாய்ந்தான்,

தண்புனலாடுவோர்தஞ் சட்டகப்புனல்மேற்பட்டு
விண்படர்ப் பருந்தாய்வந்த வியனுருமாறிச்செய்த
திண்படிறுயபாவச் செயற்கையுந் தீர்ந்துதெய்வ
வண்புது வடிவம்பெற்று வானவர் மகளிர்ச்சேர்ந்தான்.

(இ-ள்.) அங்ஙனந் தீர்த்தமாடுவோர்களுடைய தேகசலந் தெறித்து இதன் மேற்பட்டு ஆகாசத்திற் பருந்தாகவந்து வருவமாறிப்போய் திண்ணியதாக முன் செய்தகொடிய பாவதோஷங்களுந் தீர்ந்து வள்ளியதெய்வரூப வடிவுபெற்று தெய்வப் பெண்களிற் சேர்ந்தான்.—எ-று. (உஎ)

வானவர்விமானத்தேறி வானநாடரசின்பாங்கி
னானகத் துரிவாச நறுமலர்த் தருக்கீழெய்திக்
கானகந்தருவகீதங் கனிந்துறக் கேட்டுமுன்னை
யானவந்தண்சீரெல்லா மருட்டிட பதியும்பெற்றான்.

(இ-ள்.) தேவர்களுடைய புட்பகவிமானத்தி லேறித் தேவராஜனான இந்திரன் அருகிற் றிவ்வியவாசனைபொருந்திய கற்பகத்தருநிழலில் வந்தெய்திக் கந்தருவர் முதலானவர்கள் வீணாகானகீதங்களும்பாடமனமகிழ்ச்சியாகக் கேட்டுக்



முன்னே அந்தப்பிராமணன் பெற்றசிறப்பெல்லாந் திடமதியென்பவன் பெற்று வாழ்ந்திருந்தான்.—எ-று. (உஅ)

சுமதிதன்பிரமலோகச் சூழலிற்புகுந்தான்பின்னை
ரெமதுமெய்ச்சிவலோகத்து மெய்தினனென்பர்முன்னோர்
விமிதமாம்பாவநாச வியன்கரைவிதிமாலீசன்
றமதிடமெனவேயென்றுந் தடம்புனற்கரைக்கணீங்கார்.

(இ-ள்.) சுமதிமுனியென்பவன் முன்போலத் தன்னுடைய பிரமாச்சிரமச் சூழலிற் புகுந்துறைந்தான் பின்புநமதுசுவாமியினுடைய சிவலோகபதவியும் பெற்றானென்று முன்னோர்கள் சொல்வார்கள். ஆகையால் அற்புதமான பாவநாச தீர்த்தக்கரையிற் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் முதலானதேவர்கள் தங்கள் தங்களிட மென்றெய்தி யந்தத் தீர்த்தக்கரையி னிடத்தைவிட்டுப் பிரியாமலிருக்கிறார்கள்.

பாவநாசத்தின் றீர்த்தம் பரிசித்தானகனகம்போற்
பாவநாசத்தின் றீங்கி லகப்படான் பலரோடொப்பான்
பாவநாசத்தினல்லாற் பதங்கள்கீழ்ப் பட்டதெய்தான்
பாவநாசத்தியாளன் பதமுடி பரிப்பன்றானே.

(இ-ள்.) பாவநாசத் தீர்த்தத்தை யாதொருவர் பரிசித்தார்களாகில் அவர்களுடையதேகம் பொன்வண்ணமாகத் தெய்வவடிவெடுத்துச் சற்றுந் தீங்கிலகப்படாமலும் பலரோடொப்பில்லாமலும் பாவவிமோசனங்களான சிவபதஞ் சேர்வார்களன்னியிலே அதின்கீழ்ப்பட்ட பாதங்களிற் சேராது உமையொருபாகருடைய பாதமலர்களைச் சிரசிற்றரித்துக் கொள்வார்கள்.—எ-று. (௩௰)

அதன்புனற் றிவலைசற்றே தெறிப்பினு மகலாப்பாவ
விதங்கள்விண் ணடுக்கும்பஞ்சின் வெவ்வழற் பொறிபட்டொப்பாம்
பதப்பணிந் திறையைப்போற்றிப் பாவநாசத்தின் பாங்கே
யிதப்பெறுந் தவதானங்கள் செய்தவரெம்பிரானார்.

(இ-ள்.) தண்ணிய அந்தப்பாவநாசத் தீர்த்தச்சலத்தினுடைய திவலை சற்றே யாதொருவர்மேலே தெறிந்தாலுந் தீராதபாவங்கள் அண்டமுட்டிய பஞ்சுமலையில் அக்கினிப்பொறி பட்டாலெப்படியோ அப்படி விமோசனமாகும். இறையவனாகிய சுவாமி பாதாரவிந்தங்களைப் போற்றிசெய்து அந்தத்தீர்த்தத்தின் பக்கத்திலே இன்பமாகிய தவதானங்கள் செய்தவர்கள் எமக்கு சுவாமியா யிருப்பாரென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (௩௧)

பாவநாசத்தையந்தப் பணிமலைச்சுயம்புநாதன்
கோவைவா யணங்கைச்செவ்வேற் குமாரனை மூத்தோன்றன்னைக்
காவலா மனங்கொண்டார்க்குங் கருதியிச் சருக்கங்கற்ற
வாவலாருளருக்கெய்து மருட்பல னனந்தங்கோடி.

(இ-ள்.) பாவநாசத்தீர்த்தத்தை நாககிரியீசுரனைக் கோவைக்கனி போன்ற அதரமழகிய உமாதேவியைச் சவுந்தரிகமான கூரியவேல்பிடித்த குமாரக்கடவுளை மூத்தநாயனாரைத் தரிசித்து பக்தியுடனே ரூபத்தியானங்கள் செய்து மனத்திலுட்கொண்ட பேர்களுக்கு நல்லகருத்துடனே பாவநாசத் தீர்த்தச் சருக்கத்தை ஆசையுடனே கற்றவர்கள் கேட்பவர்களுக்குண்டாகிய அருட்பலன்கள் அனந்தங் கோடியாகுமென்று சொன்னார் சூதமுனிவர்.—எ-று. (௩௨)

பாவநாச தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம், கய-க்கு திருவிருத்தம்-அ௱சு

# தன்மதீர்த்தச் சருக்கம்.

திரும்பலன் பாவநாசந் தன்னிடை மூழ்கிப்பின்னர்
திரும்புகயாருந்தன்ம தீர்த்தமதாடவேண்டு
வரும்பலதீர்த்தமீகாம் பாவங்கள் மாற்றித்தன்மப்
பெரும்பலனுதவிக் கீர்த்தப் பெயரது பிறங்கிற்றம்மா.

(இ-ள்.) நல்லபலன்களைத் தரப்பட்ட பாவநாச தீர்த்தத்தில் மூழ்கின பின்பு யாதொருவர் தன்மதீர்த்தத்தில் மூழ்கவேண்டும் பலதீர்த்தங்களின் மேலாகிய பாவங்களைத்தீர்த்தும் புண்ணியபலன்களை கொடுப்பதாற் றன்மதீர்த்தமென்னும் பெயராய் விளங்கிற்று.—எ-று. (க)

கங்கைநல் யமுனைகோதா விரிசிந்து காவேரி
தங்குநர் மதையினோடு சரஸ்வதி சேதுமாகத்
திங்கிதத் தெய்வதீர்த்தத் தியாவும்வந் தெமதுபாவ
நங்கென தன்மதீர்த்த நாயககற்றுகென்றே.

(இ-ள்.) கங்கை, யமுனை, கோதாவரி, சிந்து, காவேரி, நர்ம்மதை, சரஸ்வதி, சேதுதீர்த்தம், மாமாங்கதீர்த்தம், இவைமுதலாகிய இங்கிதமான தெய்வதீர்த்தங்களெல்லாம்வந்து எங்கள்பாவங்களை விமோசனஞ்செய்யுந் தருமதீர்த்த நாயகனே என்று புகழ்ந்துகொண்டன.—எ-று. (உ)

ஆடியும் புகழ்ந்துதங்க ளகத்தவ ரவர்தோய்பாவ
மோடவெய் தவவந்துய்க்கு முருத்திரர் முதலோர்தேவ
ராடலும் பாடலியாவு மருச்சனைவிதமுந் தம்பாற்
கூடுமுத்தொழிலு மென்மேற் குன்றிடா ரறிக்கொள்ளாதால்,

(இ-ள்.) தீர்த்தமாடியுந் தோத்திரஞ் செய்தும் தங்கள் மனக்கருத்துடனே மூழ்கிப் பாவங்கள் விமோசனமாகிய விதனால் அத்தீர்த்தத்திற் சங்கமாயிருக்கும் உருத்திரர்கள் முதலான தேவர்கள் ஆடல்பாடல் யாவுஞ்செய்து அருச்சனைவிதங்களுமியற்றித் தங்களிடத்திற்கூடிய முத்தொழிலு மென்மேல் கூடுதலையாகும்படி குன்றுதலில்லாமல் நெறிமுறைமையாகக் கொள்வார்கள்.—எ-று. (ங)

முன்னொருநாள் மகவான்வந்து மூழ்கவே பிரமஹத்தி
பின்னமாய்த்தெய்வசெங்கோற் பெருந்தொழில் புரிந்துவாழ்ந்தான்
என்னுமாமறைகளென்றார் சூதமாமுனியப் புகல்கின்றே
னன்னிலைச் சவுனகாதி யருந்தவ ரருளின் கேட்பார்.

(இ-ள்.) முன்னொருநாளில் அந்தத் தருமதீர்த்தத்தில் தேவேந்திரன்வந்து மூழ்கினவுடனே அவனைப்பற்றிய பிரமஹத்திதோஷம் பின்னிட்டுத்தீர்ந்து தெய்வலோகத்தரசு நடாத்தும்பெரியதொழில் முறைமையாகிச் செங்கோல்செலுத்தி வாழ்ந்திருந்தானென்று சொல்லும் மறைவேதாகமங்களென்று சொன்னார். சூதமுனிவர் அதுகேட்டந்த வரலாறு சொல்லுமையா வென்று நன்னிலையுடைய முனிவர்கள் கேட்கச்சொல்லுகிறார்.—எ-று.

அறவினர் மொழியமுற்றுங் களைறக்கேண்மி னென்றே
திறமறைச்சூதர்வாய்மை திகழ்ந்தவர் மகவான்றன்னைக்



கறையுற வெல்வமென்றே கபால ஆபரண ராட்சன்
றறுகணான் றீபன்றன்கட் சவபட்சன் றனக்குச்சொன்னார்.

(இ-ள்.) வாரீர் முனிவர்களே, நீங்கள்யாவரும் சுத்தமாகக் கேண்மின்களென்று வேதமூர்த்தியான சூதமுனிவர் மெய்ம்மையாகச் சொல்லுகிறார். அக்காலத்தில் இரத்தமொழுகத்தக்கதாகத் தேவேந்திரனைக்கொன்றுவெற்றிகொள்வோமென்று கபாலராட்சதனென்கிறவன் தறுகண்மையுடையதனது துன்மந்திரியான சவபட்சனுடனே சொன்னான்.—எ-று. (ரு)

சொற்றிடு மசுரர்வேந்தன் றுணிந்திடுங் கருத்துட்கொள்ளா
வற்றதுபாரமன்றே வயமார்கோன் றன்னைவென்று
பொற்றொடியமரர்மாதர் புணர்ச்சியும் பழகிவானோர்
கொற்றமுங்கொள்வமென்ன றுரைத்தவன் குறிகொண்டேற்றான்.

(இ-ள்.) அப்படிச்சொன்ன ராட்சதராஜன் துணிந்தமனத்துடனே குறிக்கொண்டு அது வொருபாரமல்ல, தேவேந்திரனைக் கொன்று வெற்றி கொண்டு சொர்ணவளைகளை யணிந்த கைகளையுடைய தெய்வரம்பையர்களைப் புணர்ச்சி செய்து தேவலோகமுங் கைக்கொள்வோம். நடவுமென்று சவபட்சன் சொல்ல அதுவே குறிப்பாக யுத்தத்துக்குப் புறப்பட்டான்.—எ-று. (சா)

செழுநகர்தனக்குத்தானே யின்றனைச்சேனையோடு
முழுதிவைபுரத்தியென்றே மோகமாமகனைவைத்து
வெழுந்தகாமிமையோனட்டி யிந்திரன்றனைவென்று
கொழுமலர்த்தருக்கீழ்சிங்கா தனத்திடைகொள்வமென்றான்.

(இ-ள்.) செழுமையுடைய தனது நகரத்துக்கு அரசாட்சியாகும்படி சகல சேனைகளுடனே இவைமுழுதும் அரசாட்சிசெய்திருமென்று தனக்கு மிகவும் மோகமான மகனைத் தன்மகனையும் வைத்து நாமெழுந்துபுறப்பட்டு தேவனோட்டிவெய்தி இந்திரனை வெற்றிகொண்டு குளிர்ந்த புட்பங்களையுடைய கற்பகத்தருநிழலில் சிங்காசனத்தையுங் கைக்கொண்டாள்வோமென்றவாறு.—எ-று. (எ)

திரம்பயிலமைச்சனுப திகழ்சவபட்சனோடு
பறந்தலைப்படைக்கபாலா பரணன்றேவரைப்போர்வாட்ட
மறந்திகழரக்கர்சேனை வருபதத்துகளெழும்பி
நிறைந்தனபரவைமுற்று நிலமெனப்போயிற்றம்மா.

(இ-ள்.) திறமையுடைய தன்மந்திரியான அஞ்ஞான மனத்தையுடைய சவபட்சனுடனேகூடிக் கபால ஆபரணராட்சசன் தேவர்களைப் போரில்வாட்டும்படி கூட்டத்துடனே போனார்கள். பதாதிகளாக மூர்க்கங்களுடைய ராட்சதசேனைக் கூட்டத்தின் கால்துளிகளெங்கும் எழும்பிப்பறந்து கடற்சலங்களெல்லாஞ்சுவறி நிலமாகச்செய்தது.—எ-று. (அ)

குந்தம்வாளுலக்கைவேல் கோதண்டம்பாலஞ்சூல
முந்திபொன் றடமொன்றேற்றி யுமபொறிதெறித்துச்செந்தீச்
சிந்தலுஞ்சிவந்த கருந்திச் செம்மையுஞ் செறிந்தபண்பா
லந்தமிற்கரியவெற்பி லனற்றிகழலங்கல்போலும்.

(இ-ள்.) குந்தம்கூரிய வடிவாள், உலக்கை, அயில்வேல், வில்லம்பு, பிண்டிபாலம், மூவிலைச்சூலம், முதலாகிய ஆயுதங்களை பதாதிநெருக்கங்களா லொன்றோ

டொன்று தாக்கி யக்கினிப்பொறிகள் சிந்துவதும், ராட்சதர்களுடையசிவந்த குஞ்சிகளின் சிவப்பு மொன்றாய்ச் செறிந்த நிறங்களிலே அளவுசொல்லக்கூடாத நீல பருவதங்களில் அக்கினிப்பிரவேசமாய் விழுங்குவது போன்றிருந்தது.—எ-று. (கூ)

எழுகடலுங் காயங்க னெழுந்தனசதுரச்சேனை
முழுவதுமகவானூரை முற்றுறவளைந்ததாய்யாக்
கெழுமியவோதைசூற் கிணையாவிபிரதவோசை
வழுவையின்றொதைசூழி மல்கெழுமோதைபோலாம்.

(இ-ள்) சத்த சமுத்திரங்களும், காலுசமுத்திரமாக வெழுந்துவந்ததுபோல ராட்சத சதுரங்கசேனை முழுதும்வந்து இந்திரபுரியைச்சுற்றி வளைத்துக்கொண்டது. வாய்வேகமாகக் கெழுமிய குதிரைகளின் ஓசையுஞ் சண்டைவாத்தியத் தொனிகளுந் தேர்ட்டக்கிரசத்தங்களும், யானைகளினுடைய வீறிட்டவொலிகளும் ஒன்றாகக்கூடி உகாந்தகாலத்துப் பிரளயகாலத்தெழுந்த சமுத்திரக்கோஷ்டங்கள் போலு முழங்கிற்று.—எ-று. (௰)

அண்டமுமதிரவண்டத் தடுக்கெலாமதிரவண்டர்
விண்டுளமதிரவெட்டு வெற்படியதிரச்சேடன்
மண்டலமதிரவேதன் மறைப்புரமதிரத்திண்மைக்
கொண்டவாய்ச்சிங்கநாதக் கொடுந்தொனிமுழக்கியார்த்தார்.

(இ-ள்.) அண்டங்களும், அண்டத்தடுக்குகளும், தேவர்கள் மனங்களும் அஷ்டகுல பருவதங்களினிடைய அடித்தலங்களும், ஆதிசேடன் பணமுடிகளும், மண்டலங்களும், பிரமலோகமும், வேதபுரங்களும், இவையாவுமதிர திண்ணிய ராட்சதச்சேனைகள் கொடிதாகிய சிங்கநாதத் தொனிமுழங்கி யார்ப்பரித்தார்கள்.

அத்தொனியுடன் வைவேழத் தடற்றொனிதிமிரவெட்டு
மத்தவெங்கயங்களோட வளிநிலைகிழிகணைக்குஞ்
சுத்தவானுலகைச்சுற்றிச் சூரியவரக்கன்பீதே
வித்தகமகவான்வெள்ளை வேழமீக்கொண்டுசேர்ந்தான்.

(இ-ள்.) அப்படி ராட்சதத் தொனிகளுடனே யானைக் கூட்டங்களினுடைய அடல் ஓசைகளும், எட்டுத்திக்குஞ் சிலையோடிதிமிர்ந்து கடகடாயமாகச் சத்திக்க அஷ்டகஜங்களெல்லாம் பயந்து வீறிட்டோட ராட்சதச்சேனைகளினுடைய கண்களிற் நெருப்புப் பொறிபறக்க இந்தப்பிரகாரம் வந்து அழகிய தேவலோகத்தைச் சுற்றிவளைந்து சூரைக்காற் றுழன்றடிப்பதுபோலும் அமர்முனைந்து போர்செய்வதுகண்டு ராட்சதச்சேனையின்பேரிலெதிர்த்து யுத்தஞ்செய்வதாகமகாகோபத்துடனே சவுரியவானான தேவேந்திரன் வெள்ளையானை மேற்கொண்டு சேர்ந்தடர்ந்தான்.—எ-று. (கஉ)

கனைகுரற்காரிற்றோன் றுங் கபாலவாபரணன்றன்னை
வினைமகவான்கைவில்லால் விட்டவல்லரக்கன்சூலந்
தனைவிண்கோன்றடக்கைவச்சிரத் தாற்றள்ளித்தருகணைவி
யினையனமுனைசெய்திண்ணே ரிளைப்பிலாவிளைத்தார்பூசல்.

(இ-ள்.) கார்காலத் திடிமுழக்கம் போலுங் கர்ச்சிதஞ்செய்து முனைந்து போர்செய்யும் அந்தக்கபால ஆபரணராட்சதனை இந்திரன் கைவில்லினாலே அஸ்திரப்பிரயோகஞ்செய்து சரமாரியாகப் பொழிந்த அவ்வரக்கன்விட்ட சூலத்தை மகான்கை வச்சிராயுதத்தினாலே துண்டித்துத்தள்ளித் தருகண்மையாக விருவரு



முனைசெய்து பொருதுங்கால் சற்றுந் தோர்வை யிளைப்பில்லாமல் மென்மேலும் பாணப்பிரயோகஞ்செய்து முனைந்து யுத்தஞ்செய்தார்கள்.—எ-று. (கந)

இந்திரன்முதலாந்தேவ ரிராக்கதர்சேனையாள
வந்துாத்திகலின்புக்கார் மடிந்தனவசுரன்றானை
யந்தமிற்றேரோடத்தே ரானைபோடானையாவோ
டுந்தியபரியாவோடா ளோட்டார்ந்துடன்றுகின்றார்.

(இ-ள்.) தேவேந்திரன்முதலான தேவர்கள், சேனைகள், இராட்சதச்சேனைகள் மாளும்படியாகவந்து எதிர்த்து வீரபராக்கிறமத்துடனே போர்க்களத்திற்புகுந்து, கடிதான யுத்தஞ்செய்தார்கள். அசுரராட்சதச்சேனைகள் மடிந்தது அளவில்லை அழகிய தேரோடுதேர்களும், குதிரையோடுகுதிரைகளும், யானையோடே யானைகளும், ஆளோட்டாள்களுமாக நெருங்கிப் பொருதார்கள்.—எ-று. (கச)

இகல்சவபட்சனென்பான் யமனுடனுடன்றான்சேனை
வகைக்கவுசிகன்றன்போர்மேல் வருணனேடிகலிச்சேர்ந்தான்
புகர்கருங்குபேரனோடும் பொருதனன்கபாலப்பூணு
னுகப்பொருசேனைநால்வ ருளரவரமரிற்புக்கார்

(இ-ள்.) சுத்தவீரனான சவபட்சனென்பவன் இயமனுடனே எதிர்த்துநடந்தான், சேனைவருக்கத்துடனே வந்துபுனைந்த கௌசிகன் முனையிலே வருணனுடன் பொருதினான். சொல்லுதற்கரியகுபேரனுடனே எதிர்த்துயுத்தஞ்செய்தான் கபால ஆபரணன் இன்னம்பராக்கிரம சாலிகளான படைத்தலைவர்ராட்சதர்நாலுபேரும்வந்து முனைந்து சமர்புரிந்தார்கள்.—எ-று. (கரு)

மாங்கிஸப்பரியன்மத்த மாலியென்றுரைக்கும்வீரன்
றுங்குவன் மருதாரக்கன் சமரநெட்டுரவேகி
நீங்கருமவன்னிதேவ னிருதிநல்வாயுதேவன்
ஞாங்கரீசானனின்ன நால்வரில்முனைந்துடன்றார்.

(இ-ள்.) மாங்கிஸப்பிரியன் மத்தமாலியென்னும் வீராகிவீரன் கையில் வேலெடுத்தடர்ந்துவந்த மருதராட்சதன் போருக்கிளையாத நிட்டூரவேகி இவர்கள் நாலுபேர் படைத்தலைவர்களும், அக்கினிதேவன், நிருதிராஜன், வாய்வுபகவான் ஈசானியமூர்த்தி, இவர்கள்நாலுபேருடனேகலந்துமுனைந்து சண்டைசெய்தார்கள்

பொருஞ்சவபட்சன்றன்னைப் புறங்கொடப்பொருதுநால்வர்
வரும்பெருவினையைநோக்கி வருகெனவெதிர்ந்தேயங்கன்
றிரும்பினன்வருணன்வாயு செழுங்கனலிறைவன்கூடிப்
பெரும்பகைதடிந்தபூசற் பேசுதற்கரியதம்மா.

(இ-ள்.) இப் படைத்தலைவர்களை முன்னேநடத்தி முனைந்து போர்செய்த சவபட்சனைப் புறகிட்டோடும்படியாகப் பொருது நாலுமுனைக்காரரும் முனைந்து வருகிற பாரியவினைமுகத்தைப்பார்த்து வருகவென்றெதிர்த்து அங்ஙனந்திரும்பி வந்துமுனைந்து யுத்தஞ்செய்தார்கள். வருணன், வாய்வு, அக்கினிதேவனிருதி யீசானனிவர்க ளொருமுகமாகக்கூடி. பெரிய பகையாளரான ராட்சதர்களைச் சங்கரித்த பூசலின் பெருமையைச் சொல்லுதற்கரிது.—எ-று. (கஎ)

ஒருவருக்கொருவர்தாளா ரொருவருக்கொருவர்மீளார்
இருவருக்கங்கள்முற்றும் பொருதனநால்வர்நால்வர்

முரிபடுத்தியாமன்றெண்டால் முப்பதினாயிரப்பேர்ச்
செருவரக்கரும்பட்டனச் சேனையுமுறிந்தகன்றே.

(இ-ள். ஒருவருக்கொருவர் தாளார்கள். ஒருவருக்கொருவர்மீளார்கள். சமர் விளைவைகள் முழுதும் வழுவாமற் பொருதார்கள். அரக்கர் நால்வர்களுந் தேவர் நால்வர்களும். வென்றிமிம்மடியாக இயமன், கைத்தண்டினாலே அடிபட்டு முப்பதினாயிரம்பெயர் இகலுடைய இராட்சதர்களனைவரும்பட்டு மடிந்தார்கள். மிகுந்த சேனைகளெல்லாம் முதுகிட்டு முறிந்தன.—எ-று. (௧௯)

யமன் முதனால்வ ரந்த நால்வரையமதிக்கேற்றித்
தமதநற்படைகளைத் தாங்கித் தானவர்படையைக்கொன்று
அமரர்கோன்பொருதக் குரோணி யரக்கரை யமரின்மாய்த்தான்
சமர்புரிகபாலப்பூணன் றன்வரச்சாபல் கண்டான்.

(இ-ள்.) இயமன்முதலான நாலுபேரும் அந்தராட்சதர் நாலுபேரையுங் கொன்று தென்றிசையேற்றிவைத்தார்கள். தமதாயுதங்களைத் தாங்கி அசுரராட்சதச் சேனைகளை மடித்தார்கள். தேவேந்திரன் பொருதமுனையிலே ஒரு அக்குரோணி ராட்சதர்களைச் சமர்க்களத்திற் கொன்றுமாய்த்தான். முனைந்து போர்செய்த கபால ஆபரணராட்சதன் சேனைகள் மடிந்து சாய்ந்துபோனதைக்கண்டான்.எ-று

கண்டசாவவன் வானோர்தங் கணத்தினைக்கணத்திற்காய்ந்து
வண்டார்கோன்மீதும்பாண மனந்தவான்மழையிற்பெய்தா
னண்டருமரக்கன்வின்னா ணிந்திரன் றனுக்கூரம்பாற்
றுண்டதுண்டங்களாகத் துணித்தனன் சுரர்க்குவேந்தன்.

(இ-ள். அதுகண்ட கபால ஆபரணராட்சதன் அதிவேகத்துடனேமுடுகிவந்து தேவர்சேனைக் கூட்டங்களை ஒருநிமிடத்திற் சாயும்படியாகக் காய்ந்து கனன்று இந்திரன் பேரிலேயும் அனந்தபாணங்கள் விடுத்து மழை பெய்வதுபோலச் சாமாரியாகப்பொழிந்தான் அதுகண்டு அந்த அரக்கன் கைவில்லும் நாணியும் அறும்படியாக இந்திரன் வில்வளைத்துக் கொடுங் கூரம்புதொடுத்தெய்து கண்டதுண்டங்களாக அறுத்தெறிந்தான் தேவராஜன்.—எ-று. (௨0)

எவ்வகைப்படைகளோனு மிகவுறவுடைவதான
வவ்வளித்தண்டந்தன்கை யனந்தநூறுடையதேந்தி
யெவ்வளிப்பூசைநல்கி விரமதண்டப்பேரான
தொவ்வறப்பெரியதத்தை யும்பர்கோனுரத்தில்விட்டான்.

(இ-ள்) எவ்வகைப்பட்ட தேவாஸ்திரங்களெல்லாம் விட்டு வீணாயுடைந்து போவதுகண்டு ராட்சதன் மகாவலுமையுடைய யமதண்டம்போன்ற நூறுபங்கு பலமுடைய ஒரு தண்டாயுதத்தை எடுத்து அதற்குப்பூசைபுரிந்து அந்தப்பிரமதண்டமென்னும் பெயருடைய தோப்பில்லாத ஒரு பெரிய தண்டாயுதத்தை இந்திரன் மார்பிற் படும்படியாக விட்டான்.—எ-று. (௨௧)

காற்றொருபாங்கோர்பாங்கு கனவிருளனலோர்பாங்குங்
கூற்றொருபாங்குமீச்சக் குரைகடல்குடிப்பதென்ன
மாற்றிடற்கரிதிவ்வுறு மறமறந்தமரர்கோமா
னேற்றினன்மார்பில்விண்ணோ ரேங்கினார்குவிழ்ந்தான்.

(இ-ள்) அப்படி இராட்சதன் விட்ட தண்டாயுதம் வருகிறபோது காற்றொருபுறம், நெருப்பொருபக்கம், இருட்டொருபாங்கு, இம்கூட்டங்களொரு சார்புமாகப்



பெருங்கடல்நீரை உறிஞ்சுவதாக மாற்றுதற் கரிதாகி மகாபிரசண்ட வேகமாக வந்ததுகண்டு தேவேந்திரன் மார்பிலேற்றினன், ஏற்றினவுடனே மூர்ச்சித்து வீழ்ந்தான். அதுகண்டு தேவர்கள் ஆவலங்கொட்டி அய்யாகோவென்றேங்கினார்கள்.—எ-று. (௨௨)

சுரர்பதிவீழ்ந்தபோதிற் சுரர்குருவுயிர்ப்பச்செய்து
வரகுருமந்திரங்கூற மகபதியெழுந்துவெள்ளைக்
கரிமிசையிவர்ந்துவெப்போர் கடந்துமாதலிபொற்றேர்மே
லரியெனநீக்கொண்டந்த வசுரவெங்கயமேற்சென்றான.

(இ-ள்) அப்படி மூர்ச்சித்து வீழ்ந்த இந்திரன் பக்கத்திற் குருவானவர்வந்து மந்திராபிசேகஞ் செய்தவுடனே மூர்ச்சைதெளிந்து தேவேந்திரனெழுந்து வெள்ளையானையின் மீதுவந்து வில்வளைத்துப் பாணப்பிரயோகஞ் செய்து அரக்கர் சேனையைச் சருவசங்காரம்பண்ணி மாதலிகடாவி நடத்தப்பட்ட சுவர்ண்ணமயமான தேர்மேலேறிக்கொண்டு வீரசிங்கம்போலந்த ராட்சதயானைமேற் சென்று முனைந்தான்.—எ-று. (௨௩)

வச்சிரங்கைக்கொண்டந்த வாழரக்கன் றேர்வீழ
மெச்சினகரத்தில்வீசி விண்ணவர்தம்மைத்தேய்த்து
வச்சமாமுகவானண்ட னாதியன்றனைப்போய்ப்பற்றிக்
கைச்செருவலியாற்றேய்த்துக் கனன்றனனசுரர்வேந்தன்.

(இ-ள்.) வச்சிராயுதத்தை எடுத்து அரக்கன் தேர் முறிந்து விழும்படியாக வீசினான், அதுகண்டு ராட்சதன் தேவர்களை முடுகித் தாக்கித் தேய்த்துப் பயங்காமாகத் தேவர்பெருமானைக் கிட்டிப்பற்றிப் பிடிக்கக் கைப்பெரிய வலிமையால் உரங்கொண்டார்த்து நெருப்புப்போற் சீறிச்சினந்தடர்ந்தான் இராட்சதன் .எ-று.

செயந்தனங்கவன்றன்சேனை சிலசிலவுள்ளவெல்லாம்
புயங்களினாலும்வேலின் போர்த்தொழிலாலுங்கொன்றான்
வயந்திகழ்கபாலப்பூணன் மலைந்தெதிர்செயந்தன்றன்னைப்
பயந்திடக்காத்தார்பற்றிப் பவனவேகத்திற்சென்றான்.

(இ-ள்.) இந்திர குமாரனை செயந்த னொருமுனையிலே சிலசிலவுள்ளன வற்றையெல்லாந் தன்புய வலிமையினாலும், அஸ்திரப்பிரயோகங்களினாலுங்கொன்று மடித்தான். அதுகண்டு இருமுடைய கபால ஆபரணராட்சதன் மலைந்துபொருது நின்றசெயந்த குமாரனைப் பயமுறத் தன்கையினாற் பற்றிப்பிடித் தெடுத்துக்கொண்டு வாயுவேகமாகச் சென்றான்.—எ-று. (௨௪)

பொன்னகர்க்கிறைவன்றன்சற் புதல்வனைப்பிடித்தசெங்கை
தன்னைமச்சிரவாடன்னாற் றறித்தனன்றறித்தகோடு
மன்னமைநாகம்போல்வந் தடர்ந்தனபாங்குமற்றுந்
தின்னபின்னங்கள்செய்த செயலெனவிழுந்தானன்றே.

(இ-ள்.) இந்திரலோகராஜன் றன்குமாரனைப் பிடித்தெடுத்துக் கொண்டுபோகிற அரக்கனை கைகளைத் தனதுவச்சிர வாளினாற்றறித்து வீழ்த்தான். அப்போது மைநாகபருவதம்போலும் வந்தடர்ந்து முனைந்து பொருதுநின்ற செயலைப்போல ... சின்னபின்னங்களாகி மலைவிழுந்தாபோலும் விழுந்தான் அந்தராட்சதன்

...ழ்ந்தவ ராண்டோர்செக்கு முலக்கையின் வினைவுபோலச்
...ழ்ந்தெழுந் தலங்கலுற்றான் றடையினைச் சென்னியொன்றும்

போழ்திடு கென்றுவச்சிரப் பொருபடை விடுத்தான் சென்று
வீழ்ந்தது சிரமுங்காலும் பெருங்கடல் வீழ்த்திற்றம்மா.

(இ-ள்.) அப்படிவீழ்ந்த ராட்சதன் பூமியொருசெக்கும், தானொரு உலக்கை யுமாக வெழுந்து சுழன்று சுழன்று தேவர் சேனைகளை யழிக்கலுற்றான். அது கண்டு தேவேந்திரன் அரக்கனைச் சங்கரித்துவாவென்று தன்கைவச்சிராயுதத்தை விடுத்தான். அதுசென்று அந்த அரக்கன் தலையையுங் கால்களையுங் கண்டதுண்டமாகத் துணித்துப் பெரியகடலில் விழச்செய்தது.—எ-று. (உஎ)

மாங்கிசப்பிரியன்மத்த மாலிபோர்மருதராக்க
னோங்குநிட்டூரவேகி யுயர்சவடட்சன்வீந்து
காங்கயன்பகைச்சூரன்றன் கபாலவாபரணன்பட்டு
நீங்கரும்பிரமஹத்தி நிலைத்தவம்மகவான்மீதே.

(இ-ள்.) பின்பு மாங்கிடப்பிரியன், மத்தமாலி போரில்வலிய மருதராக்கதன், உயர்ந்த நிட்டூரவேகி ஓங்கிய சவபட்சன் இவர்களெல்லா மிறந்தார்கள். முன்பு குமாரக்கடவுள் சங்கரித்த சூரனைப்போலுங் கபாலவாபரண ராட்சதனும் பட்டிறந்தான் இறந்தவுடனே நீங்குதற்கரிதான பிரமஹத்திவந்து பற்றியது தேவேந்திரன் பேரில்.—எ-று. (உஅ)

தன்மதீர்த்தச் சருக்கும் முற்றும்.
ஆகச்சருக்கம் உ௰௪-க்கு விருத்தம் அ௱அ௰அ.

---

# இந்திர தீர்த்தச் சருக்கம்.

———SSS———

இந்திரர்க்குப்பிரமஹத்தி யெய்தலாலவ் விராக்கதன்பற் றியவினையென் பிரமனன்றே, சுந்தரமெய்ச்சூதவர முனிவமெம்பாற் சொல்கவெனச்சவுன கர்முற் றுறவோர்கேட்ப, வந்தநெறிவாலாதிங் கறையக்கேண்மி னடவி விருந்தியகிழக்கி னருகேவென்றுஞ், சிந்தையறவிருந்தனனோ ரவுணனன் னோன் செப்புதிரி வக்கிரனுஞ் செழும்பேர் பெற்றான்.

(இ-ள்.) இந்திரனுக்கு பிரமஹத்தி வந்தபடியினாலே, அந்தராட்சதன் பிராமணனல்லவே, அழகியதிருமேனியுடைய சூதமுனிவரே! இதனெங்களுக்குச் சொல்லுகிறோம் கேண்மின்கள் முனிவர்களே என்று விருந்திய கானியத்தின் கிழக்குப் புறதில் சிந்தையில்லாமலிருந்தான். ஒருராட்சதன் திரிவக்கிரனென்னும் பெயரையுடையவனென்று சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறார் சூதமுனிவர்

தானவனுந்திரிவக்ரன் சாரலோடு தங்குசிசு யெனுமுனிவன் றவஞ்செய் காலை, மானமிகுதிரிவக்ரன் மனைந்தேவி மகவெமக்கு கிலதிலையென் செய்வேனென்றே யேனமனக்கவலையுட னிருக்குங்காலை யினியசுசிமுனி யிடத்திலெய்துவீரேஞ், சேனையுமானமும் பெருகும்படிக் கோர்பாலன் செனிப்பவருள்வ ரங்ஙன்சென்மினென்றான்.

(இ-ள்.) அந்தத் திரிவக்கிரனென்னும் ராட்சதனிருக்கின்ற ஆரணியத் [illegible] பிலே சுசிமுனியென்னொரு முனியீசரன் தவம் செய்திருக்த காலத்தில் [illegible]



[illegible]டைய திரிவக்கிரன் றேவியானவள் எனக்குப்புத்திரனில்லையே, இந்தவிதிக்கெ ன்னசெய்வேனென்று மிகுந்த மனக்கவலையுடனே இருந்தாள். அப்போது அவ ளைப்பார்த்து வாரும்பெண்ணே, இங்கேதவஞ்செய்கிற சுசிமுனியிடத்திலே நீ சேர்வாயாக, நமது வமிசமும், சேனையும் வளரும்படிக்கு ஒருபுத்திரன் உண்டா கும் வண்ணங் கிருபைசெய்வார். அங்ஙனஞ் சென்று சேரென்றான் அரக்கன்.

இப்படியம்முனியிருக்கு மிமையற்சாரற் கெய்தி யிளமென்கொடிமே விரு ண்டமேக, மைப்புகுதுப் பூர்ணமதி வாலச்சந்திரன் மகவான்விற்றுவகைபோ ல் முலைகள்பெற்ற, செப்பமென விழிகுலையிற் சென்றுபாயத் தெள்ளமுதந் திரண்ட வுருத்திருவைப்போல, வப்பரிவின் சுசிமுனிபாங்கடைந்து நின் ருளவனு மரக்கியைவிரும்பி யணைந்த போதில்.

(இ-ள்,) அப்படி அரக்கன் சொன்னபடி அந்தமுனீசு ரனிருக்கும் மிமைச் சாரலிற் போய்ச்சேர்ந்து மெல்லியஇளங்கொடிமே விருண்டமேகம்போலுங் கூந் தலும், பிறைபோல் நெற்றியும். பூரணச்சந்திரன்போல் முகமும், இந்திர விற் போன்ற புருவங்களும, நட்சத்திரப்பந்திபோல் பல்வரிசையும், பொன்மலைபோல் ஸ்தனபாரங்களும், ஆகரணபரியந்தம் நீண்ட மான்போன்ற பார்வையும், ரதத்தெ ள்ளிய அமிர்தத்திற்செய்த பார்வைபோல் திருவுருவெடுத்துப் பரிவுடனே சுசிமு னிபக்கத்திற் போய் நின்றாள். அவளை முனீசுரன கண்டு மோகித்து விருப்பமா (கூ)
கப் புணர்ந்தான், அந்தவேளையில்.—எ-று.

அருந்தவத்தி லந்தணனம் பீசயாகு மகிலமுமண்டமும்புரப்ப னவுன் போமின்னே, பொருந்துகபாலாபரண னெனவேவாழ்வன் போர்க் கசை யாப்புபவலியானென்றுகூறக், குருந்துநகைக்குவளைவிழிக் குமுதச்செவ் வாய்க் கோகனக மலர்வதனக் குளிர்பூங்கோதை, திருந்திழையாள் முனிய ளித்த சேயினோடுந் திரிவக்கிரன்றனையே சேர்ந்தாள் மாதோ.

(இ-ள்.) அந்தமுனீசுரன் அரக்கியைப் புணர்ந்தவுடனே ஒரு பிள்ளை பிறந் தான். அதுகண்டு சொல்லுகிறான் முனிவன், ஓய் பெண்ணே! இந்தப் பிள் ளை நம்விந்து ஆனபடியினாலே இந்த அகிலாண்டமெல்லாம் ஒருகுடைக்கீழடக்கி யாழ்வான், இவனுக்குப்பேர் கபால ஆபரணனென வாழ்வான், மற்றுமன்னியர் செய்யுஞ் சமர்க்கிளையாத புயவலிமையுடையவனென்று சொன்னார். அப்போது முல்லையரும்புபோல நகையுங், குவளைப் பூப்போன்ற கண்களும், குமுத புட்பம் போன்ற செவ்வாயும், தாமரைப் பூப்போல முகமுங், குளிர்ந்தபுட்பமாலை சூடிய கூந்தலும், அழகிய திருந்திழையான அரக்கியும், முனிவர் கிருபைசெய்த பிள்ளை யுடனே புகழ்ந்திகழ்ந்த திருவக்கிரனைச்சென்று சேர்ந்தாள்.—எ-று. (௩௰)

சேர்ந்துகபாலாபரணன் றன்னைப்பெற்ற செயற்கையாற் றந்தைமுனியாக்கி யின்று, ளாந்தகைபிலவன்பிரம ராக்கதப்பே ராகிமகவானைவிடா தடர்ந்தா னவ்விர்த், தாந்தவதனைற்பிரமாவிடத்து வெள்ளைத்தந்திமகவானேகிச் சர ணம்போற்றிப், போந்திகலிப்பிரமராக்கதன் சோரது போவதற்குப் புரிதி யெனப் புகன்றான்மன்னே.

(இ-ள்.) அரக்கி திரிவிக்ரானைச் சேர்ந்துகபால ஆபரணனென்னும் பிள்ளை யுடனே சுகமாக வாழ்ந்திருந்தாள். அந்தப்பிள்ளைக்குத் தாயானவளரக்கி, தகப் பன் முனியீசரனை படியினாலே பிரமராட்சதனாகித் தன்னைக்கொன்ற தேவேந் [illegible] பற்றிவிடாம லடர்ந்தான் அதுகண்டு இந்திரன் பிரமதேவரிடத்திற் [illegible] தம்பணிந்து தன்னை இகலிப்பற்றிய பிரமஹத்தி நீரும்படி கடாட்சஞ் (௩௧)
[illegible] று கேட்டான் இந்திரன்.—எ-று.

போற்றியவிந்திரன் றுயரம்புண்டரீகன் போவதற்குநினைந்தருளிக் கொங்குநாக, மாற்றலரையோன் றுளதவ்வரை யமர்த்த நாரீசனாருறைநாக தனின்பாங்கா, மேற்றவரை தீர்த்தங்களனந்தங்கோடி யெய்தியந்தத் தீர்த்தத்திற்றன்மதீர்த்தங், கூற்றடர்ந்த தேனுமதனின் குறையை மாற்றுங் தெளிர்வரைச்சென்றுபடிவாய் நீயேயென்றான்.

(இ-ள்) தன்னைத்துதிசெய்து சொன்ன இந்திரனுடைய பிரமஹத்தி நீரும்படிக்குப் பிரமதேவனினைத்துச் சொல்லுகிறான் கொங்கு மண்டலத்தில் திருநாககிரியென்றொரு மகாஸ்தலமுண்டு. அதிற் பரமேசுரன் அர்த்தநாரீசுர மூர்த்தமாக எழுந்தருளியிருக்கிறார். அனந்தங்கோடி புண்ணிய தீர்த்தங்கள் விளங்கா நின்றது, அத்தீர்த்தங்களில் மிகுந்த மகிமையுடையது தன்மதீர்த்தம். இயமன் றொடர்ந் தடர்ந்தாலும் அவ்வினையை மாற்றும் ஆதலால் அந்தக்கிரித்தலத்தில் நீ போய்தன்மதீர்த்தத்தில் தீர்த்தமாடினவுடனே இந்தப் பிரமஹத்திதீர்ந்துபோகும் போவாய் இந்திரனே என்றான் பிரமதேவன்.—எ-று.

அம்மொழியினைப்படியி னந்தத்தீர்த்தத் தாடினன்கொண்டாடினன் வெற்பணங்கின்பாகன், செம்மலர்ப்பொற்றாட் கமலஞ்சிரத்திற்சூடி ஜெய ஜெயவென் றிவ்வரையைத் தெரிசித்தன்றே, கவலையிலென் றுயரனைத்துங் கதிரைக்காணுஞ் சடும்பனியிற் போயதந்தத் தன்மதீர்த்தத், திவ்வினையின் மூழ்குதற்கேயிசா போற்றி யெழுந்தவைக்கு மனந்தபல னெய்திரேயால்.

(இ-ள்) பிரமதேவன் சொன்னபடியே இந்திரன் அந்தத்தலத்தில் வந்துதன்மதீர்த்தத்தில் மூழ்கி அர்த்தநாரீசுரரையுஞ் சேவித்து அவர்பாதமலர்களைச் சிரசிற்சூடிக்கொண்டு செயசெயவென்று போற்றிசெய்து இந்தக்கிரியைத் தெரிசித்த பொழுதே யென்னைப்பற்றிய வினையெல்லாஞ் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிட்டது. பத்தியுடனே தன்மதீர்த்தத்தில் மூழ்கி ஈசனைப்போற்றி வணங்கி அளவில்லாத பலனையும் பெற்றேனென்று கொண்டாடினான் தேவேந்திரன்.

என்றுமகிழ்ந்தேகிவிண்ணோ ரிடையூருற்றி யிலங்கிய சிங்காசனத்திலிருந்தான்பின்னவர், கொன்றைமுடி பணிமலையின் றன்மதீர்த்தங் குளித்தவர்க்குண்டாம்பலன் குறிக்குவேதக், கன்றருளிச் செய்தபடி யடியேன் பெற்றே னம்புயத்தவர்த்தநாரீசனுக், குன்றுலக மூன்றினுக்குங் குறைகளைக்குங் கோவெனலாமெனவுரைத்துக் குழாத்தமீண்டான்.

(இ-ள்) பின்பு மனமகிழ்ச்சியுடனே தேவலோகஞ்சேர்ந்து தேவர்களினிடையூறெல்லாந் தீர்த்துப் பிரகாசிக்கின்ற சிங்காசனத்தில் இருந்தருளினான் தேவேந்திரன் பின்னையுங் கொன்றைமாலையணிந்த அர்த்தநாரீசனெழுந்தருளி இருக்கின்ற திருநாககிரியில் தன்மதீர்த்தம் மூழ்கினவர்களுக்குண்டாகும் பலனைக்குறித்துப் பிரமா எனக்குச் சொன்னார். அப்படியே அடியேனுந் தன்மதீர்த்தத்திலே மூழ்கிப் பாவ[illegible]னமாகி நல்ல பலன் பெற்றேன். அந்தத்தலம் மூன்றுலோகத்துக்கும் உதவியாயிருப்பது, யாதொரு குறைகளையுந் தீர்க்குஞ் சகலதலங்களுக்கு மேலானதலம் அதுவென்று சொல்லித் தேவர்கூட்டங்களினின்று மீண்டுவந்தான்

மீண்டுங்கிரியடைந்துதன்பேர்விளங்கத்தீர்த்தம்வெறுப்பினிலொன் றுதவியவேண் டேவினுனென், நீண்டுமறை பகருமகவானுந்தேவர் முடிகளுங்கந்தருவர் யாருங்கூடி, நீண்ட தன்மதீர்த்தத்து நிலையுமிந்த னெடுந்தீர்த்



[illegible]மவர் நிகழ்த்துவாறுஞ் சேண்டிகழுஞ் சூதருரைத்தனர்பாங்கற்கு செகத்தவர்க்குச் செப்புவன்சீர் சிறக்கமாதோ.

(இ-ள்) மீண்டுவந்து திருநாககிரியில் சேர்ந்து இந்திரன் தன் பெயர் விளங்கவொருதீர்த்தமுண்டாக்கினுனென்று வேதங்கள் சொல்லும். அந்தத்தேவேந்திரனும், தேவர்களும், மிருடிகளுங் கந்தருவர்களும் யாவருங்கூடி நெடியதன்மதீர்த்த நிலைமையும், பெரிய இந்திர தீர்த்தத்தின் மகிமையும், அவர்கள் சொன்னபடியே மேன்மையாகிய சூதமுனிவர் சொன்னார். அவ்வொழுக்கந் தப்பாமல் பூலோகத்தார்க்குச் சொல்லுகிறேன் சீருஞ்சிறப்புமுண்டாக.—எ-று. ([illegible])

தன்மதீர்த்தப்படிந்திந் திரதீர்த்தத்தில் தாழ்ந்துகனையாடிலன் றாயிரங்கோதானம், நன்மறையோர்க்கிந்தபல னயக்குமென்று நாகநகத்துலாபுருடநலமீமென்று, பன்னுமுள நந்தவன வாவிநீர்ச்சால் மயேசுரர்க்கனமசுவமி யானை தேனுக், கன்னிதருபல னனைத்துங்காட்டும் வெப்பிற் கனதீர்த்தந் தனைக்கண்ணுற் கண்டார்க்கென்றும

(இ-ள்) யாதாமொருவர்வந்து தன்மதீர்த்தத்தில் மூழ்கி இந்திரதீர்த்தத்தில் மூழ்கினார்களாகில் அன்றைக்காயிரங் கோதானம் பிராமணருக்குக் கொடுத்தபலனுண்டாகுமென்றுந் துலாபுருடதான பலனிலும் நலமதிகம் பெறுவார்களென்றும், அந்தத்தீர்த்தங்களைக் கண்ணில் கண்டபேர்களுக்குத் திருக்குளம்,நந்தவனம், வாவிகள், தண்ணீர்ப்பந்தல், மயேசுரபூஜை, அசுவதானங், கஜதானங், கோதானங், கன்னிதானப்பலனெல்லாம் உண்டாகும்.—எ-று. (௧0)

தன்மனெனுமுனிவன்மகா தவஞ்செய்தந்தத் தீர்த்தத்தி லர்த்தநாரீசன்றன்னை, முன்வணங்கப்பரனுனக்கு வேண்டிற்றென்சொல் மொழியெனத் நின்பதமுண்டகத்தைநீங்கார், சின்மயத்தின் சுமந்திருப்பச்சிந்தை கூர் சேயிழைபங்காளவெனத் தேனுவான்பாலின்னலங்கொண்டடைச்சுமந் திக்கிரியின்மீதே யிருந்தி யென்று வெனவிரும்பி னியம்பினாரால்.

(இ-ள்.) தன்மனென்னும் முனீசுரன் மஹாதவஞ்செய்து அந்தத்தீர்த்தத்தில் அர்த்தநாரீசுரரைப் பூசித்து வணங்கிப், பரமசிவம் உனக்குவேண்டியதென்ன சொல்வாய் முனிவனேயென்ன, சுவாமி உன்பாதாரவிந்தத்தைவிட்டுப் பிரியாமல் சின்மய ரூபமாகச் சுமந்திருக்கும்படிக்கு வரங்கிருபைசெய்யும், உமையொருபாகனே! யென்ன, அப்படியே இடபரூபமாக வடிவுகொண்டு நம்மைச் சுமந்திருந்த தலத்தில் இருப்பாயாகவென்று விருப்பமாகச் சொன்னார்சுவாமி.—எ-று. (௧௧)

தன்மமுமிந்திரனுமெய்கடவுத்தாற்கண்ட சுனைதீர்த்தந்தனிலே யபர்ந்தார்தோய்ந்தார், மன்மதனைச்செயித்தவோர்குருக்களசங்க மத்தலிங்கத்தியல்வரங்கள்கூடி, யின்பபலன் வேண்டுமென்றெய்திநன்சீ ரிகபரத்துமுதவியதாயிறைவனல்கி, நன்மைதருசெனவானைவரங்கொண்டுய்த்தார் நவின்றவர்க்குங் கேட்டவர்க்கு நல்குமாமே.

(இ-ள்.) அப்படிச்சுவாமியையச் சுமந்திருக்கின்ற தர்மமுனிவனுந் தேவேந்திர[illegible]ண்டருளிய குளிர்ந்த சுனைதீர்த்தம் நான்செய்த புண்ணியபலன் போலும் [illegible]த்தவர்கள், கண்டவர்கள், மூழ்கினவர்கள் மன்மதனைச்செயித்துக் குருலிங்க[illegible]மாக வரங்கள் கைகூடி இஷ்டகாமியப் பலன்பெற்று நல்லசீருஞ் சிறப்பும் இகபரசாதக உதவியாகக் கிருபை செய்தருளுமென்று சிவனைத் தோத்தரித்து

வந்தித்து நல்ல வரங்கள்பெற்று வாழ்ந்தார்கள், அம்மகிமையைச் சொன்னவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் அப்பலன் கிடைக்கும்.—எ-று. (கஉ)

இந்திர தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்.—கூஎ.

---

## வயிரவ தீர்த்தச் சருக்கம்.

—(※)—

புண்ணியதீர்த்தமந்தப் புரந்தரதீர்த்தமென்று
நண்ணியவிரண்டுமூழ்கி நவில்வயிரவதீர்த்தத்தி
லண்ணிலமகவான்போல்வா ருளவரந்தத்தீர்த்தம்
பண்ணியபடியுங்காட்டும் பயன்களும்பகரலுற்றும்.

(இ-ள்.) தன்மதீர்த்தம், இந்திரதீர்த்தம் இவ்விரண்டிலு மூழ்கினபின்பு வயிரவ தீர்த்தத்தில் யாதாமொருவர்வந்து மூழ்கினார்களாகில் இந்திரனைப்போல மேலுலகத்தை யாழ்வார்கள். அந்தத்தீர்த்தம் வந்தவரலாறும் அதின் பலன்களும் சொல்லுகிறோம்.—எ-று. (க)

அதிகவுச்சேனபாடிக் கதிபன்விக்கிரமாதித்தன்
மதியுறுமரபிற்பெற்ற மனோசயனெனும்மோர்வேந்தன்
புதுநலன்வேதசாஸ்திரம் புராணமும்முறையினீங்கா.
விதியுறுசெங்கோனீதி மேதினியினிதிலாண்டான்.

(இ-ள்.) நகரங்களில் விசேஷமான உச்சினிநகரத்திற்கு அதிபதியாகிய விக்கிரமாதித்தனுடைய மரபிலுதித்த மனோசயனென்னும் ஒருராஜன் வேதசாஸ்திர புராணங்கள் சொன்னமுறை வழுவாமல் மனுநீதியாகச் செங்கோல்நடத்தி இனிதாக விந்தவுலகத்தை யாண்டிருந்தான்.—எ-று. (உ)

விப்பிரர்வேள்வியீட்ட வேதியர்வேதந்தீட்ட
மைப்புயல்மழைகள்கூட்ட மணவொலிமுரசங்கொட்ட
வப்பொழுதணிகள்பூட்ட வாடவர்மாலைசூட்ட
விப்படியனந்தகால மினிதுமன்புரந்தான்மன்னே.

(இ-ள்.) விப்பிரஜனங்கள் வேள்விசெய்ய, வேதியர்கள் வேதம்படிக்க, மாதமூன்று மழைபெய்ய, மணமுரச வாத்தியங்கள் முழங்கச் சகலஜனங்களுஞ் சர்வாபரணங்களும் பூட்டி அலங்கிரதஞ்செய்ய, ஸ்திரிஜனங்களும், புருஷர்களும், மணமாலைசூட்ட இந்தப்படி அநேககாலம் இந்தவுலகத்தை யாண்டிருந்தான் மனோசயராசன்—எ-று. (ங)

முனைவிதியிடர்வந்தெய்தி முயலவத்திவற்றையெல்லாம்.
நினைவறமறந்தான்றெய்வ நிலைமையோடனந்தராளைத்
தனதநம்பொருளைக்கொண்டு தருமங்களொழிந்துநல்ல
வினைபலதவிர்ந்துநீதி விட்டனன்கொடுங்கோல்கொண்டான்.

(இ-ள்.) பூர்வசென்மாந்திரவிதியினால் மனதினைவும் புத்தியும்வேறாகி தாமத குணத்தினாலே மந்தனாமாக நடத்திவந்த சுபகருமங்களைச் சற்றும் நினையாமல் மறந்து தேவதாயம், பிரமதாய முதலாகிய மானியங்களைத் தவிர்த்து, புண்ணியக்



[illegible]மாக்களுடைய பொருள்களை யெல்லாங்கவர்ந்து, தருமத்தை யொழித்து அதர்மத்தை மேற்கொண்டு மனுநீதியை விட்டுக்கொடுங்கோலரசு செலுத்தாநின்றான்மனோசய ராஜன்—எ-று. (ச)

தயங்குமுச்சேனநாடு தன்மநாடாகையாலிப்
பயநகொளுங் கொடுங்கோலாட்சி பண்பலவெனவுங்கேளான்
வியந்தவிக் கொடுங்கோல்வாணாள் மேதினியிழக்குஞ் சான்றோர்
கயந்துரைசாபம்வீடு கடிந்தரசழிக்குமன்னே.

(இ-ள்) பிரக்கியாதியாகிய, உச்சினிதேசம் தர்மபூமி யாகையினாலே, யாவர்களும் பயப்படும்படி கொடுங்கோலாசாட்சி செய்வது நன்மையல்லவென்று பெரியோர்கள் சொல்லவுங் கேளாமல், மென்மேலும் கொடுங்கோலரசு செலுத்தும் அரசனை, மந்திரிகள் நோக்கி, பெரியோர்கள் சாபத்தினாலேயும், அவர்கள் மனககுறைவினாலேயும் வாணாளும், பூமண்டலமு மிழந்துபோவாய் அரசாட்சிக்கழிவு வரும். இந்தத் துற்புத்தி நினைவை விட்டுவிடுமென்று சொன்னார்கள்.—எ-று. (ரு)

என்பவன் கேளான்சற்று மிரங்கிலன் கொடுங்கோன்மென்மேல்
வன்புடன் புரிந்தானந்த மாநகர்மறையோர்யாருந்
தன்புகழ் வழுவாத்தன்ம சகன்றிருநாட்டிற்சென்றே
பின்புறவடைந்தாரிற்றைப் பேசினர்வேந்தன்கேட்டான்.

(இ-ன்.) என்றிப்படிச் சொல்லவுங்கேளாதவனாகிச் சற்றுமிரக்கமில்லாமல் அநீதியாக அரசாட்சி செலுத்திநின்றான் மனோசயராஜன், அதுகண்டு அந்நகரத்தில் மறையோர் முதல் யாவருந் தன்னுடைய கீர்த்திவழுவா நீதிமானான தன்மசகராஜன் திருநாட்டிற்குச் சென்று, இன்பமாக விருந்த அந்நாட்டரசனுக்குத் தெரிய மனோசயராஜன் செய்யுங்கொடுங்கோன் முறையைச்சொன்னார்கள். அதுவெல்லாங்கேட்டான் தன்மசகராஜன்—எ-று. (சு)

தாரணிபுரக்குந்தன்ம சகன்றராதலத்தையெல்லா
மோரணிக்குடைக்கீழ்வைத்த வுரவணியாகையாலே
பாரகின்பாங்கிதென்று பகர்ந்தனம்பரிப்பாயென்ன
வாரகொல்வனும்வேத மகிபனையழைத்தான்மன்னே.

(இ-ன்.) பூமண்டலத்தையெல்லா மொருகுடைக்கீழடக்கி சக்கரவர்த்தியாய் ஆளப்பட்ட தன்மராஜனை உம்மை வந்து அண்டினோம், எங்களை ரட்சிப்பது உன்பாரமென்று வேதியர்கள் முதலான புண்ணிய சனர்கள் சொல்லக்கேட்டு மனதிரங்கி உடனே கோல்வனென்னும் வேதமகிபனை யழைப்பித்தான் தன்மசகராஜன்

கோலவன்சதுரசேனை சூழக்கொளக்கடிதினேகி
மாலுறுமனத்தனாப மனோசயன்பதியைச்சூழ்ந்தா
னாலகாலத்போராற்றே யறுமகிச்சமர்செய்தீண்ட
மேலுறுபுரிசைவிட்டு வெவ்வினைப்பயனிற்போந்தான்.

(இ-ன்.) தன்மசகராஜன் உத்தரவின்படி கோலவனென்றவன் சதுரங்கசேனைகளுஞ் சூழ்ந்துவரச் சென்றுமதோன்மத்தமான மனத்தையுடைய மனோசயராஜன் நகரத்தைச்சுற்றி வளைந்துகொண்டு ஆலகாலம் போர்சீறிச் சேனைகளுடனே யுத்தஞ்செய்து மேற்கொண்டு வருகிறதுகண்டு கோட்டையை [illegible]மாதம் யுத்தஞ்செய்து மேற்கொண்டு வருகிறதுகண்டு கோட்டையை [illegible]வழியில் புறப்பட்டுப்போனான் மனோசயராஜன்—எ-று. (எ)

[illegible]த்திரைமாதுஞ்சக்கிர காந்தனுஞ்சுதனுஞ்சேனைச்
[illegible]ங்கித் தரித்த தந்தாசினோடு

மயித்திரனெழிலான் றியோர்பொருளுமின்றி
வயித்திரவிபினகான வன்மனோசயன் போய்ச்சேர்ந்தான்.

(இ-ள்.) தன்னுடைய சேனைசமுத்திரத்தையெல்லாம் விட்டுநீங்கி பட்டஸ்திரீயான சமுத்திராதேவியோடு சந்திரகாந்தனென்னும் புத்திரனுந் தானுமாக உடுத்திய பட்டாடைகளுடனே வேறொரு பொருளும் எடுக்காமல் மூவருமாகப் புறப்பட்டு அந்தகாரமான ஆரணியத்திற்குப் போய்ச்சேர்ந்தான் மனோசயராஜன்

போனபின் னுச்சயப்பேர் புரத்திற்செங்கோணீதி
யானதிப்புரந்து தேவ ரந்தணர்நெருக்கையேத்தி
மாநகரனைத்தும்வாழ மறைமுறைதழைப்பத்தெய்வக்
கோனகரிதென்றேத்தக் கோனகரிருந்தான்மன்னே.

(இ-ள்.) மனோசயராஜன் இப்படி வனத்திற் போனபின்பு உச்சினிநகரத்தில் செங்கோல் நீதியாக சிங்காசனத்திலிருந்து அரசாட்சி செய்து தேவர்கள், பிராமணர்கள், புண்ணியசனர்கள் அனைவரும் சுகமாக வாழத்தக்கதாக முடியேற்றி, அந்நாடு தழைத்தோங்க வேதநீதிப் பிரகாரம் தேவேந்திர புரமிதுவென்று யாவரும் புகழும்படியாக ஆண்டுக்கொண்டிருந்தான் கொல்லமகிபன்—எ-று. (௰)

யாங்கிதுநிலைமையாய்வேந் தரியவாரணித்தெய்தி
யேங்கியவ்விளைப்பினோடு மிருந்தனனிருந்தகாலை
பாங்குறுசந்திரகாந்தன் பதைத்திடுபசியால்வீழத்
தாங்கினரவற்றைநோக்கித் தளர்ந்தவனிருந்தான்வேந்தன்.

(இ-ள்.) அங்ஙனமிம்முறையாக விளங்கியவவை நிற்க, ஆரணியத்திற்புகுந்த ராஜன் நடந்த இளைப்பினால் அவ்வாரணியத்தலோரிடத்திலிருந்தான். அப்போது சந்திரகாந்தனென்னும் பிள்ளை பசிதாகத்தினாலே பதைபதைத்து மயங்கிவிழ, இராஜனுந், தேவியும், பிள்ளையைத் தாங்கி யணைத்துக்கொண்டு அவன் மயக்கத்தைப்பார்த்து மிகவும் மனது தளர்ந்து விசாரப்பட்டிருந்தான் அரசன்—எ-று. (கக)

மனோசயன்சேனையாக வனமிலங்கனந்தஞ்சூழக்
கனோதயமிலங்கினேனைக் கனமுளவெளியினீண்டப்
பினேவுறுபுலிபோமிடண்கு பெருங்கொடுங்கொல்வர்போல
வனேதனேவுடனீடந்த காரமாமனத்தனானன்.

(இ-ள்.) அவனுடைய சேனையைப்போல அந்தவனத்தில் அனேகமிருகங்கள் வந்துசூழ அந்தமிருகங்களின் ஓசைமுழக்கமே முரசவாத்தியமாக எங்குஞ்சிலையோடக் குரூரமான புலி, கரடி, சிங்கங்கள், ஆரவாரஞ் செய்வது பகைவனுடைய கோலவயகிபன் போலத்தோன்ற மனோசயராஜன் வியாகுலத்துடனே அந்தகாரமான மனத்தையுடையவனாயினன்—எ-று. (கஉ)

சாற்றியசந்திரகாந்தன் றனித்தழல்பசியின்றாக
யாற்றிடவொன்றுங்காணுன் மாதொடுமன்னன்சொல்வான்
பாற்றருமுன்னாட்செய்த பாதகப்பாலன்றாக
மாற்றுதற்கரிதாயாமிவ் வடவியிலடைந்ததென்றான்.

(இ-ள்.) தன் பிள்ளையான சந்திரகாந்தன் பசிதாகத்தினாலே மயங்கும் வருத்தத்தைத் தீர்க்க, ஒருபொருளுங்காணுமல் வினைத்தோடு சமுத்திராதேவியுடனே இராஜன் சொல்லுகிறான், நாம் முன்செய்தபாதகம் இப்போதுவந்து சம்பவித்த



குழந்தையினுடைய பசிதாபந் தீர்ப்பதற்கரிதாக இந்தவனத்தில்வந்து சேர்ந்தோம் என்றான்—எ-று. (கங)

அப்பிறப்பினிலொன்றீயோ மறஞ்சிறிதறியோமீசன்
டைப்பூசலவண்ணன்பாதம் வணங்கிலோங்கன்னாற்சென்றே
றொப்புறுதிவசம்பண்ணுஞ் சூலந்திமைறைபோர்கட்கு
மிப்புவிபூரிகாரி யிந்திலமல்லபோனும்.

(இ-ள்.) அந்தப்பிறப்பிலாவது ஒருவருக்கொன்றைக் கொடுத்தோமல்லோஞ் சற்றுந் தர்மஞ் செய்தறியோம், சிவபூஜை விஷ்ணுபூஜை செய்து வணங்கினவர்களுமல்லோம், தென்புலத்தார் ஒப்பம்படியாகத் திவசஞ் செய்தறியோம், பிராமணபோசனம், பூமிதானம், பூரிதானம், கன்னிகாதானங் கொடுத்தறியோம். ஆகையாலிவ் விதிவந்ததென்று சொல்லினன் மனோசயராஜன்—எ-று. (கச)

சித்திரைத்திங்கடிங்க ணிறைவினிற்கறிகாய்பானங்
கைத்திடக்கொடுத்தோமல்லோங் கந்தம்பாதாலவட்டஞ்
சத்திரஞ்சைவர்க்கேற்றத் தருமங்கள்செய்தோமல்லோ
மத்தனாலயம்பொன்மாய னாலயமடுத்தோமல்லோ.

(இ-ள்.) சித்திர பௌர்ணமியில் பிராமணர்களுக்குக் கறிகாய்கள், அன்ன பானாதிகள் புசிக்கும்படியாகத் திருப்தியாகக் கொடுத்தோமல்லோம், குளிர்ந்த சந்தனம், பாதுகம், ஆலவட்டம், விசிறி, குடை இவைகளைச் சைவர்களுக்குத் தத்தஞ் செய்தோமல்லோம், சிவாலயம், விஷ்ணுவாலயம் அடுத்து மற்றுஞ் சிவ புண்ணிய மொன்றுஞ் செய்தோமல்லவென்றான்—எ-று. (கரு)

அரசமாவத்திநெல்லி யால்விளாயிலுப்பைநிம்பம்
பரவணிவில்வம்வாழைப் பலாமகிழ்நாளிகேரங்
காமுறச்செறித்தேமல்லம் காவனமெடுத்தேமல்லம்
வரம்புனற்றடாகநந்த வனங்களமெடுத்தேமல்லம்.

(இ-ள்.) அரசமரம், மாமரம், அத்திமரம், நெல்லிமரம், ஆலமரம், விளாமரம், இலுப்பைமரம், வேப்பமரம், சிவனணியப்பட்ட வில்வமரம், வாழைமரம், பலாமரங்கள், மகிழமரம், தென்னைமரங்கள், இவையெல்லாம் நமது கைகளால் வைத்துப் பயிர்செய்து வளர்த்தினோர்களுமல்ல, சுவாமிக்குக் காவனம் எடுத்தோமல்ல, தடாகங்கள் நந்தவனங்கள் தண்ணீர்ப் பந்தல்கள் முதலான தர்மங்களெல்லாஞ் செய்தோமல்லோம்—எ-று. (கசு)

கன்னிமாதத்திற்றந்தை கடன்கழித்தனமல்லந்
தென்னகர்சிராத்தநைமிக் கிரமமாச்செய்தேமல்லம்
பன்னுமாதோபவாதம் பதினொருதிவசத்துண்டி
மன்னுவித்தேமுமல்ல மகம்பலசெய்தேமல்லம்.

(இ-ள்.) புரட்டாசி மாத மாளயபட்சத்தில் பிதிராகிய தந்தைக்கடன் கழித்தோமல்லோம், பிதிர்ஜனங்களுக்கெல்லாந்தென்றிசை நோக்கிச் சிரார்த்தங்கள் செய்தோமல்லோம், நைமிக்கிரமென்னும்படி யொன்றுஞ் செய்தோமல்லோம், சொல்லுதற்கரியசாந்திராயண விரதமும், ஏகாதசி விரதமும் செய்து அன்னதானங் கொடுத்தோமல்லோம், பலயாகாதி கிர்த்தியங்களுஞ் செய்வித்தோமல்லோம்.—எ-று. (கஎ)

தனுமதிதன்னிலீசன் றனைவணங்கினேமல்லேம்
மனமுறவினைத்தேமல்லேம் மகிழ்வுறப்புகழ்ந்தேமல்லேம்

நினைவுறச்செயங்களைத நினைத்திலன்கூபநீர்ச்சா
லெனவொருதருமஞ்செய்தற் கியன்றிலேன்கொல்பாவாய்.

(இ-ள்.) தனுர்மாதத்தில் சிவபூஜை செய்து வணங்கினவர்களுமல்லோம், மனத்தில் பக்தியுடனே துதித்தவர்களுமல்லோம், ஒரு தியான செபதபம் நினைத்தோமல்லோம், கூபம் நீர்ச்சாலென்று சொல்லப்பட்ட தருமங்களில் யாதொரு தருமமுஞ் செய்ய மனமிசையாத பாவியானேம், பெண்ணேயென்று சொல்லி விசனப்பட்டான் மனோஜயராஜன்.—எ-று. (கஅ)

அனந்தபுண்ணியங்கடன்னி லணுவுஞ்செய்திலமென்றன்றே
வனந்தனிற்சந்திரகாந்தன் மயங்கிவீழ்பசிமைநோக்கி
முனஞ்சுமுத்திரையைப்பார்த்து மொழிமனோஜயனும்வேந்தன்
கனந்தருசோகத்தோடு கடிதுமூர்ச்சித்துவீழ்ந்தான்.

(இ-ள்.) அளவில்லாத புண்ணிய தருமங்களில் அணுவத்தனை செய்திலோம் ஆகையாலிவ் விதிவந்ததென்று நினைத்தும், பின்னை சந்திரகாந்தன் பசிதாகத்தினாலே மயங்கி வீழ்ந்ததைப் பார்த்தும் முன்செய்த விதியோவென்று சுமித்திரா தேவியுடன் சொல்லி மனோஜய ராஜனும் மிகுந்த சோகத்துடனே கடிதாக மூர்ச்சித்து வீழ்ந்தான்.—எ-று. (க௯)

வீழ்ந்ததன்கொழுனனை விறன்மனோஜயனையோடித்
தாழ்ந்திருகையாற்கட்டித் தடங்கணீர்த்தாரைசோரச்
சூழ்ந்ததிப்பவமோமுன்னர்த் தொல்வினைப்பிலையோய்யா
வாழ்ந்தனமெனவேவிம்மி மங்கரின்வாரியாழ்ந்தாள்.

(இ-ள்.) அப்படி வீழ்ந்த தன்கொழுனன் மனோஜயராஜனைச் சீக்கிரமோடிச் சென்று தாழ்ந்து இருகைகளாற் கட்டித்தழுவிக் கொண்டு கண்களில் நீர்த்தாரை கள் சோர இந்தவிதிவந்து சூழ்ந்தது முற்பிறப்பில் செய்தவினையோ அய்யகோ! நல்லவாழ்வு வாழ்ந்தோமென்று விம்மிச் சுமித்திராதேவி துக்கசாகரத்திலமிழ்ந்தி ஞள்.—எ-று (உ0)

அவ்வழியணிந்தநீறு மரையில்வற்கலையுடக்க
மெய்வழிவடமும்வீக்கும் வேணியும்நீறுக்கிற்றுங்
கைவளிதண்டும்பின்னற் கசுமுமருமநாலும்
பொய்வழிபுகலாதாங்கு புயல்பராசரர்நேர்வந்தார்.

(இ-ள்.) அவ்வழியாக விபூதிதுளிகரும் வற்கலையுடையும், ருத்திராட்சமாலை களுங், கட்டிய சடைமுடியும், திரிபுண்டரமும், கைகளிற்றண்டு கமண்டலமும், எக்கியோப வீதமும் இவ்வாறழகிய திருமேனியுடைய நிச்சயம் விளங்கிய பராச முனிவன் அங்ஙனம் வந்தார்.—எ-று. (உக)

வந்துளந்தளர்ந்துவீழ்ந்த மன்னனைமன்னனீன்ற
மைந்தனைமைந்தன்றாயை வனத்திடைவரவுநோக்கிச்
சிந்தனையிரங்கிநிற்பத் திகழ்சுமுத்திரைகண்டேத்தி
யெந்தவப்பேறெபொங்க ளிடரொழித்தருளியென்றாள்.

(இ-ள்.) அப்படி வந்த பராசமுனிவர் அந்த வனத்தில் வந்திருந்து அங்கே மனங்கலங்கி வீழ்ந்த ராஜனையும் ராஜகுமாரனையும், சுமித்திராதேவியையும் பார்த்து மனதிரங்கி நின்றார் அவரைக்கண்ட சுமித்திரையானவள் வணங்கித் தோத்திரஞ்செய்து யெங்கள் தபோபலனைப் போலும் தேவரீர் யெழுந்தருளி வந்தீர் இங்ஙனம் எங்களுடைய இடுக்கண்களைத் தீர்த்தருளுமென்று சொன் ஞள்.—எ-று. (உஉ)



சுமுத்திரைவணங்கிக்கண்டு துளங்கல்நீர்யாரென்றோத
வமித்திரரொருவரான்றி வேந்துவிக்கிரமாதித்த
னமித்திரையகிலங்காப்ப வளித்தவனிவனென்காந்த
னமித்திரனையாயின்றோன் மனோஜயனெனுநாமத்தான்.

(இ-ள்.) சுமுத்திராதேவி வணக்கத்தைக்கண்டு அஞ்சலியாஸ்தஞ்செய்து துயரப்படவேண்டாம், நீங்கள் யாரெவரென்று கேட்க, எங்களுக்கு உதவி யொருவருமில்லாமல் இந்தவனத்தில் வந்தோம் விக்கிரமாதித்தராசன் மாபில்வந்த அரசன் யென்னுடைய கணவன், மனோஜயனென்னும் பெயரையுடையவன், எங்களுக்கு மித்திர பாந்தவ்வியம் போலுந் தேவரீரிங்கே எழுந்தருளியதால் (உ௩)
நாங்களுய்ந்தோமென்றாள்.—எ-று.

கோலவனெனுமோர்வேதக் கொற்றவனெமதுசெல்வன்
ஞாலவெம்பதியைக்கொண்டா னுங்கள்மூவருங்கான்சேர்ந்தோம்
பாலனுக்குற்றசோகப் பசியைக்கண்டெனதுகேள்வன்
மாலுறமூர்ச்சித்தேங்கி மயங்கினனென்கொலையா.

(இ-ள்.) வேதக்கொற்றவனை கோலவமகிபன் எங்கள் நாட்டையும் அர சாட்சியையும் வலிமையிற் கவர்ந்து கொண்டான். ஆகையால் நாங்கள் மூவரும் வனத்தில்வந்து சேர்ந்தோம். அதுவேளையில் இந்தப்பிள்ளை பசியினால் மயங்கி னதுகண்டு என்பத்தாவானராஜன் கிலேசத்தினாலே யேங்கிமூர்ச்சித்து வீழ்ந்தார் (உச)
இனியென்னசெய்வேன் சுவாமியென்று சொன்னாள்.—எ-று.

எனச்சுமுத்திரைநின்றோதுஞ் சுமித்திரையியம்பக்கேட்டு
மனத்துறவுணர்ந்துணண்பன் மனோஜயன்றுயரந்தீர்ந்த
தினத்தொருகணத்திற்சோகந் தெளிகுவன்வருந்தலென்ன
நினைத்தோர்மந்திரத்தையோதி நெடுங்கைமென்சிரமேற்சேர்த்தான்.

(இ-ள்.) என்றிப்படிச் சுமுத்திரை வணங்கிச்சொல்லிய துயர்மொழியைக் கேட்டுப் பராசமுனிவன் மனதிற்றெரிந்து உன்பத்தாவான இந்தமனோஜயராஜன் மூர்ச்சைதீர்ந்து ஒரு கணப்பொழுதில் சுகமாக வெழுந்திருப்பான் மனங்கலங்க வேண்டாமென்று நினைவுடனே யொருமந்திரத்தை யுச்சரித்து அரசனுடைய (உ௫)
சிரசிலே நெடிய கையை வைத்துச்சேர்த்தான்.—எ-று.

சேர்த்தபின்றுயரமாறித் திகழ்மனோஜயனும்வேந்தன்
பேர்த்தொருபிறவிபோன்று பிரள்பராசரரைக்கண்டான்
தார்த்துணைச்சரணம்போற்றிச் சாற்றினன்முன்னர்வாறு
நூற்றிருமார்பன்கேட்டு நுவலுவான் மன்னன்வாழ்க.

(இ-ள்.) அப்படி அவர் கைவைத்தவுடனே சோகந்தீர்ந்து மனோஜய ராஜன் மறுபிறவி-போலெழுந்திருந்து மஹானுபாவரான பராசமுனிவரைக்கண்டு அவர் பாதாரவிந்தங்களை வணங்கிப் போற்றிசெய்து முன்னடந்த வரலாறெல்லாஞ் சொன்னான். முன்னூல் மார்பனை முனிவர் கேட்டு, அவ்வரசன் வாழத்தக்க (உசு)
தாகச் சிலவசனஞ் சொல்லுகிறார்.—எ-று.

நுங்கள்வன்பசிகள்மாறும் நோவரும்பவங்கடீர்க்கும்
பொங்குநன்பலத்தைச்சேர்க்கும் புவனைமந்திரத்தையோதென்

றிங்கிதத்துபதேசஞ்செய் தேந்தல்சந்திரகுமார
னக்கைவன்பசிகள் மாற்றி யவரிருவரையுந்தேற்றி.

(இ-ள்.) வாராய் மனோசயராஜனே! உங்கள் பசிமூர்ச்சையுந்தீரும், மனோநோயும் நிவாரணமாகும், பாவங்கள் விமோசனமாகும், பொங்கலாகிய நல்ல சுகபலனைக் கொடுக்கும். இந்தப்புவன மந்திரத்தை உச்சரித்தோதுவாயென்று கருணையாய் உபதேசஞ் செய்தருளிப் பிள்ளை சந்திரகாந்தன்பசிதாக மயக்கத்தையுந்தீர்த்து அவர்களிருவரையும் மனந்தெளியத் தேற்றினர்.—எ-று. (௨௭)

அர்த்தநாரீசனுக வசலத்திற்சென்றால்நீங்காப்
புத்தியுமுத்தியாவும் புரப்பதோர்தீர்த்தமுண்டால்
வித்தகமன்னகேண்மின் வியன்வயிரவதீர்த்தப்பேர்
சித்தியிற்பெற்றதென்று தெளிவுறவுரைத்தான்மிக்கோன்.

(இ-ள்) அர்த்தநாரீசருடைய திருநாககிரியிற் சொல்வழுவாத புத்தியு முத்தியுங் காமியார்த்தங்களுங் கொடுத்திரட்சிப்பதாக ஒரு தீர்த்தமுண்டு. அரசனே! கேட்பாய். சித்திகளையுடைய அந்தத்தீர்த்தத்தின் பெயர் வயிரவ தீர்த்தமென்று விளங்கியிருக்கும் அங்ஙனம் சேர்வீராகவென்று மனந்தெளியத்தக்கதாகச் சொன்னார். தவசிரேஷ்டராகிய பாராசமுனிவர்.—எ-று. (௨௮)

வருபராசரனன்றோதும் மகிழ்வுரைகேட்டன்னோர்கள்
தருகிழப்பெற்றுமெலனைச் சாற்றியமுனியைப்போற்றிச்
செருமனோசயனுங்கற்பிற் றேவியுஞ்செல்வச்சேயுங்
குருவருளதனால்நாகக் குவட்டினிற்சென்றார்சென்றே.

(இ-ள்.) பாராசமுனிவன் சொன்ன சந்தோஷ வார்த்தையைக்கேட்டு அங்ஙனமவர்கள் இந்திரபோகம் பெற்றதுபோலுமகிழ்ந்து அவ்வாறு சொன்ன முனிவரைப் போற்றி அவர் கிருபையினாலே வெற்றியுடைய மனோசயராஜனுங், கற்புடைய சுமுத்திராதேவியுஞ், செல்வக்குமாரனான சந்திரகாந்தனென்னும் பிள்ளையும் இம்மூவருங் குருகடாக்ஷமாக அங்கிருந்து புறப்பட்டுத் திருநாககிரி தலத்திலப்போதே சேர்ந்தார்கள்.—எ-று (௨௯)

வயிரவதீர்த்தங்கண்ட வளவினில்மாற்றான்சிற்றச்
செயிரெலாந்தொலைந்ததாகச் சிந்தையிற்றோற்றிற்றம்மா
வயிரவகண்ணிபாலன் காவலனிவரைத்தக்கோன்
பயின்மறைமுறைமைதீர்த்தம் படிப்படிமூழ்குவித்தான்.

(இ-ள்.) வயிரவதீர்த்தத்தைக் கண்டளவில் பகைவருடைய குரோதங்களெல்லாந் தீர்ந்ததாக மனதில் தோற்றப்பட்டு தேலோர்ப்பல புட்பம் போன்ற கண்களையுடைய வவள்பாலன். இராஜனியர்களைத் தகைமையுடைய பாராசமுனிவர் சொல்லப்பட்ட வேதமுறைமையை வழுவாமல் வயிரவ தீர்த்தமுதலிய தீர்த்தங்களைத் திலுமூழ்கு வித்தான்.—எ-று. (௩௦)

திங்கள்மூன் றங்கண்மூழ்கிச்சென்றபினி ராமபந்தாங்
தங்கருணையினாற்சற்றே மனோசயன்றனக்குப்போதித்
திங்கிதம்புரிந்தான்வேந்த னினிதினிற்செபித்தகாலை
மங்கைசேர்மார்பனவில்லும் வாளியுங்கொடுத்தான்மன்னோ.

(இ-ள்.) அப்படி மூன்று மாதம் அந்தத்தலத்தில் தீர்த்தங்களெல்லாமூழ்கி இருந்தார்கள். அதன்பின்பு முனிவன் கிருபையினாலே இராம மந்திரத்தை



சற்றே மனோசயராஜனுக்குப் போதனைசெய்து இன்பமுண்டாகவியருளினர் அவ்வாறே ராஜன் இனிதாகச் செபித்தபோது திருமகள் பொருந்திய மார்பாகிய இராமர் வில்லும் அம்புங்கொடுத்தார்.—எ-று. (௩௧)

தேருமந்திரவத்தேவ ரகுபதிதோஞ்சங்கு
மாமுமகுடப்பந்தி யணியும்பொற்கவசமொன்றும்
பாரசேனைகளுமீந்தான் பராசரர்முனிவன்பாதம்
வாரிசம்வணங்கவன்னோன் மலரயன்கணையுமீந்தான்.

(இ-ள்) மனோசயராஜன் செபித்த மந்திரத்தினாலே தெய்வீகமான இரதபதிதமும், வெற்றிச்சங்கமும், ஆரங்களும், மகுடவரிசையுஞ், சர்வாபரணங்களுமொருமசான்ன வச்சிரக்கவசமும் பாரியசேனைகளுங் கொடுத்தருளினர் அப்போது பாராசமுனிவர் பாதத்தாமரையை அரசன் வணங்க வவனொரு பிரமாஸ் (௩௨)
திரங் கொடுத்தார்.—எ-று.

இவைபிவைபெற்றுவேந்த ரியற்றிறையில்லையென்னக்
கவனமெம்பரித்தேரோடுங் கனபடையுடனும்போற்றுங்
தவமுறு முனிவன்பாங்காச் சங்கரிவரங்களீயச்
சிவனையுந்தொழுதுதன்பொற் றிருநகரடைந்துசூழ்ந்தான்.

(இ-ள்.) இவையாவுங் கைப்பலனாகப் பெற்று அரசனானவன் இவனுக்கொருவருமிணையில்லை யென்னத்தக்கதாகக் கவனமெம் பரித்தேரோடும்மிகுந்த சேனையோடுந்தலமுனிவனைப் போற்றிசெய்து அவன் பட்சமாக உமாதேவி நல்வரங்கள் கொடுக்கச்சிவனையுங் கைதொழுது போற்றிச்சொன்னமயமான அழகிய (௩௩)
தன் நகரை யடைந்து வளைந்து சூழ்ந்தான் மனோசயராஜன்.—எ-று.

தன்பதிபெறுகோலவனும்பெறு தலத்துவானத்
தின்பதியிகுளின்சிங்க நாதங்க ளெழுப்பிபார்த்தான்
வெண்புதுந்தவனுஞ்சேனை வீரருமெதிர்வந்தீண்ட
முன்பொருதனருமங்ஙன் முத்தினமூரண்போர்செய்தார்.

(இ-ள்.) அவ்வாறு சூழ்ந்த மனோசயராஜன் தன்பதி யாசாட்சியைக் கவர்ந்து கொண்ட கோலவன் சேவித்த தலங்களில் வானத்திடிமுழக்கம்போலும் வெற்றிச்சங்கம் முழங்கியார்த்தான். அங்ஙனம் அவனும் சேனைப் படைத்தலைவரும், வீராதி வீரரும், நெருங்கிமுனைந்து போர்க்களத்தி லங்ஙனம் மூன்று நாள்மூயற்சியான யுத்தஞ் செய்தார்கள்.—எ-று. (௩௪)

ஈரிருதினத்தில்வேக னிகர்கணையதனாற்சேனை
சோவேகளத்தில்வீழ்த்திச் செயிர்த்தகோலவனைக்காய்ந்து
பாரெலாங்குடைகீழாண்டு பராசார்முனிவன்பாதஞ்
சேர்வையாற்சிறந்துசிங்கா சனத்திடைசிறந்துவாழ்ந்தான்.

(இ-ள்.) நாலாந்தினத்தில் பிரமாஸ்திரம் பிரயோகஞ்செய்து அதனால்சேனைகளனைத்தையும் அமர்க்களத்தில் வீழ்த்தி வந்த கோலவனையுஞ் செயங்கொண்டு வெற்றிபெற் றிவ்வுலகமெல்லாம் ஒருகுடைக்கீழடக்கி யாண்டு பாராசமுனிவன் பாதசேர்வையால் மிகுந்தசிறப்பும் பொருந்தி சிங்காசனத்தி லிருந்தோங்கி வாழ்ந்தான்மனோசயராசன்.—எ-று (௩௫)

ஆயிரம்வருடஞ்செங்கோ லதிபதியாயபின்னர்
சேயெனுஞ்சந்திரகாந்தன் றிருமுடிபுனையவைத்து

நேயமின்சுமுத்திரைகூட நெறிமனோசயனும்வேந்தன்
றூயநாகவரையிற்சென்று தொழுதருந்தவத்தினின்றான்.

(இ-ள்.) ஆயிரவருஷஞ் செங்கோல் நீதியதிபதியாக அரசாட்சி செய்திருந்தான். பின்பு தன்குமாரனான சந்திரகாந்தனுக்கு முடிசூட்டி யுலகாளும்படியாகச் சிம்மாசனத்தில்வைத்து அன்புடைய சுமுத்திராதேவியுடனே நீதிபரனான மனோசயராஜன் தூயதாகிய திருநாககிரியிற்சென்று சேர்ந்து சுவாமியைத் தொழுது வணங்கி யங்ஙனம் அரிய தவஞ்செய்திருந்தான்.—எ-று. ()

நின்றுசெங்கோட்டன்பாதம் நிலையினிற்பெறுதல்வேண்டு
மென்றவனருளைப்பெற்றா னேந்திழை யுமைதாள்பெற்றாள்
வன்றிறற்சேய்க்குச்சேயின் வரங்கொடுத்தருளாநின்றார்
கொன்றையஞ்சடிலத்தானுங் கோதையுங்கோதைமீதே.

(இ-ள்.) திருச்செங்கோட்டில் சிவனுடைய பாதம் நிலைமையாகப் பெறவேண்டுமென்ற அங்ஙனமனோசயராஜன சிவனருளைப்பெற்றான், வந்திழையாகிய சுமுத்திரையுமைபவள் பாதம் பெற்றாள், வலியதிறனுடைய குமாரனுக்குக், குமாரர் வரங்கொடுத்தருளாநின்றார். இவையெல்லாங் கொன்றை மாலைசூடிய சடையுடையவன் கோதைமலைமீதில் மேவிநின்று சிவனுமை கிருபையினால்.—எ-று. ()

இவ்வயிரவதீர்த்தத்தி லீசுரன் பூஜைமாயோன்
மெவ்வியன்பூஜையாகம் வேதியர்தானஞான
மவ்வியன்மகேசர்பூஜை யறம்பலபுரிவோர்க்கெல்லாஞ்
செவ்வியபுபன்மாலீசன் செய்திருப்பதங்களுண்டாம்.

(இ-ள்.) அங்ஙனம் வயிரவதீர்த்தத்தில் சிவபூஜை விஷ்ணுபூஜை யாகங்கள் வேதியர்க்குத் தானதருமங்கள் மகேசுரபூஜை மற்றும் பலதருமங்கள் செய்தவர்களுக்கெல்லாஞ் செவ்விதாகிய பிரமபதம் விஷ்ணுபதம், சிவபதம், கந்தர்பங்களும் உண்டாகும் —எ-று. ()

சத்தியமென்றுன்சூதா தவத்தவர்க்குரைத்ததெல்லா
மித்திரமறைநூல்சொல்ல யானுமக்குரைத்தகாதை
சித்திபிற்படிப்போர்கேட்போர் செழுந்தனங்கொடுப்போர் தங்கள்
பத்தியிற்பெருவருற்ற பலன்களும்பதமுமென்றார்.

(இ-ள்.) இவையெல்லாஞ் சத்தியஞ் சத்தியமென்று சூதமுனிவர் முனிவர்களுக்குச் சொன்னதெல்லா மெப்படியென்றால் வித்தகமான வேதநூல் வாக்கியபடியே யானுங்களுக்குச் சொன்னேன். இந்தப் புராணத்தை மகிமையென்று சொல்லிச் சித்தியாக இதனைப் படிப்பவர்கள், கேட்பவர்கள், செழுமையுடையத் தனங்கொடுப்பவர்கள். தங்கள் தங்கள் மனோபக்தி நினைவின் பிரகாரம் பலன்களும் நல்ல பதங்களும் பெற்றுவாழ்வார்கள்.—எ-று.

வயிரவதீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்.—கூ௱௯கூ.

---

## வாண தீர்த்தச் சருக்கம்.

—(✻)—

செருவிழந்தமனோசயனுக் கருள்புரிந்தவயிரவ தீர்த்தத்தையாடி
மருவெழுந்தமலர்க்கமல வாணவிடதீர்த்தத்தின்மருவவேண்டின்



தருவெழுந்தமலர்க்கரமா யிரத்தாலுந் தாழ்ந்தவளைத்தாங்குமாலா
லுருவிழந்தநாளினில்வந் துமாபதியைவேண்டிநதி யுதவினானால்.

(இ-ள்.) அரசாட்சியை மனோசயராஜனுக்குக் கிருபைசெய்தருளிய வயிரவ தீர்த்தத்தில் தீர்த்தமாடின பின்பு யாதாமொருவர் வந்து வாசனைமிகுந்த தாமரை மருவிய வாணதீர்த்தத்தில் மூழ்கவேண்டும். அந்த வாணாசுரனானவன் விஷ்ணுவினாலே வடிவிழந்தநாளில் கற்பகத்தருக்களைப் போலும் ஆயிரங்கை மலர்களாலும் சிவனை அர்ச்சித்து உமாபதியை வேண்டிவந்து பணிந்து தன்பெயரால் விளங்கவொரு தீர்த்தமுண்டாக்கினான்.—எ-று. (௧)

உதவியந்தப்புனல்மூழ்கி யுமாபதியர்ச்சனைபுரிந்தைங் கரத்தான்றன்னைப்
பதியினிலங்கப்பிரதக் கணமல்லையை முருகனையப்பரனைவேத
விதியைமலருந்திதந்த விண்டுவைநாகேசுரனை வியப்புத்தேளிர்க்
கதிகவர்ந்ததேவரைமாமுனிவரை யாலயபுறத்தன்புடன்வந்தானால்.

(இ-ள்.) அப்படி உண்டாக்கிய தீர்த்தமாடி உமாதேவியை அர்ச்சித்து வணங்கி விநாயகமூர்த்தியையும் போற்றிசெய்து குமாரச்சுவாமியை, அர்த்தநாரீஸ்வரனைப்பிரமனைப்பெற்ற ஆதிகேசவ முகுந்தனை. நாகேசுரனை, தேவரை முனிவர்களைத்திருநாககிரியை இவர்களையெல்லாங்கண்டு தரிசித்து வணங்கி ஆலயப்புறத் திலங்கப்பிரதக்கணஞ்செய்து வணங்கினான்.—எ-று. (௨)

வந்துபரனைத்துதித்து மறையவருக்குயர்தானம் வழங்கிவெற்பில்
முந்துமகேசுர பூஜைசங்கமர்க்கு மொழிமறையின் முறையேசெய்து
எந்தைபராபரவிறைவ நாகமலைநடுமுளைத்த யீசனேசக்
கந்தரைப்பெற்றிமையவரைக் காத்தனையின்றெமைக்காத்துக்கனிகின்றபால்

(இ-ள்.) அப்படியங்கப்பிரதக்ஷணம் வந்து பரமசிவனைத்துதித்து வேதியர்களுக்குத் தானதருமங்களைச்செய்து நாககிரியில் முதன்மையான சங்கமர்க்கு வேதமுறைமையாக மகேசுரபூஜையுஞ்செய்து யெந்தையாகிய பராபரமூர்த்தியை இறைபவனே! கந்தசுவாமியைப்பெற்றுத் தேவர்களைரட்சித்தீர் இப்போதெங்களை ரட்சிப்பாயாக.—எ-று. ()

என்றுபலதுதிகூறி யிறைஞ்சுபவனோரகத்தி லிறைவர்கோதைக்
குன்றெனுஞ்செங்கோட்டின்முடிக் குவட்டினடுநதியினிற்கோகனகபீட
மன்றலுறவுமையவளை மணந்தசிவயோகபரர்மனத்தானோக்கி
யின்றுனக்குவேண்டுவன யாதுவரங்கேட்டியென வாணன்கூறும்.

(இ-ள்.) என்றிப்படித் துதித்த வாணாசுரனைப்பார்த்து திருவோரகத் திறைவனாகிய சுவாமி கோதைமலையென்னும் அழகியதிருச்செங்கோட்டில், கொடுமுடி நடுவில், தெய்வநதியில், சகஸ்திர பீடத்தில் திருமணக்கோலமாக உமையவளை இடப்பாகத்தில் வைத்துக் கலந்து மருவிய சிவயோகபரன் மனத்தினோக்கி வாணாசுரனே, யுனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்றார். அதற்கு வாணன் சொல்லுகிறான்.—எ-று. (௩)

என்றீர்த்தந்தெரிசித்தார்க் கிகபரங்கள்வேண்டுமென்றுமிழிந்துமூழ்கில்
வன்றீயப்பிறப்பொழித்து வடிவுனைப்போலருள்கியென்று மறையோர்தம்
கொன்றீடுபுரிதல்முதற் கொடும்பாவம்போவதென் றுங்குளிர்நீர்திரத் [மைக்
தொன்றியுப்பலன்கோடிகோடியாகப் பெருகவோங்கவென்றும்

(இ-ள்.) பரமசிவமே! யாவரேனும் வந்து தெரிசித்தார்களானால் அயர்களுக் குத்தீதாகிய சென்மங்களையொழித்து உம்மைப்போல வடிவு கொடுத்தருளுவீ ரென் பிரமஹத்தி முதலான கொடிய பாவங்களெல்லாம் விமோசனமாகவென்

றும், அத்தீர்த்தக்கரையில் தானதர்மங்களைச்செய்தால் ஒன்றொரு கோடிபலனு விர்த்திக்கவேண்டுமென்றுஞ் சொன்னான் வாணாசுரன்.—எ-று. (௫)

எனதுகரந்தாலர்ச்சித்த தேத்தியலிங்கம்புவியில் யாருங்கைக்கொண்
டுனைபருச்சித்திடவதனுலுன்னடியேன் றனைநிகர்க்கு மூன்றுமென்றும்
முனைவருநாளாளிடத்து வரங்கொண்டானப்படியேமுக்கணனும்
தனதருளிற்கொடுத்தனன்வாணன் தீர்த்தமெனும்பெருந்தகைமைத்தம்மா

(இ-ள்) சுவாமி! என்கைகளாலே உம்மைப் பூசித்த லிங்கங்களை இந்தப்புவியில் யாவராகிலும் பூசிப்பார்களாகில் உன்னடியனை வெனக்குணைப்போலும் உரம்பெற்ற வாழ்க்கைடாக்ஷஞ் செய்யீரென்று முன்வந்தநாளில் இப்படிக்கொத்த வரங்களெல்லாங் கேட்டுக்கொண்ட வாணனுக்கு அப்படியே திரிநேத்திரனை பரமேசுவரன்றமது கிருபையினாலே சகலவரமுங் கொடுத்தருளினர். அந்தத்தீர்த்தம் வாணதீர்த்தமென்னும் பெயராய் விளங்கியது.—எ-று. (௬)

வாணலிங்கபூஜைசத வருடமருச்சனைபுரிந்து வணங்கிப்போற்றும்
வாணர்வரம்பலபெற்றொருநாட் செங்கொட்டிலிறைவனைவந் திறைஞ்சுபாங்காற்
சேணுலகப்புகழ்வாண தீர்த்தக்கரையிற்பூஜை செய்தோளார்க்குக்
காணுமவர்தமைக்கண்ட காசினியுலோர்க்குமரன் கைலைசேர்க்கும்.

(இ-ள்.) வாணலிங்க பூஜை தேவாண்டில் நூறுவருஷம் அர்ச்சனைசெய்து வணங்கிப்போற்றி செய்து அநேகவரம்பெற்றருளிய வாணன் செய்த வாணதீர்த்தத்தில் மூழ்கிய பலனுண்டாக முன்னாளிலொருநாள் திருச்செங்கோட்டிலீசனை வந்தனைசெய்து வணங்கியபடியினாலே சொர்க்கலோகம் புகழப்பட்ட வாணதீர்த்தக்கரையிற் சிவபூஜைசெய்து வணங்கியவர்களுக்கு அநேக பலனுண்டாம். அவர்களைக்கண்ட மண்டலத்தார்களுக்குஞ் சிவன்வசிக்குங் கைலைமலையிற் சேர்க்கும்.

ஆயிரங்கிண்கரத்தினு லருச்சித்த வாணனருளசலதீர்த்தம்
போயிரந்துகாணவனந்தம்பாவம் போமருந்தும் புவனியோர்க்கு
மேயபலபிணிதீர்ந்து மெய்ப்பனைத்துந்தெய்வதிறம்விளங்காநிற்குங்
காயமுறமுழுகிடினுங் காயசித்திமுழுகுநெறி கருதிக்கேண்மோ.

(இ-ள்.) வாணசூரன்றனது திண்ணிய ஆயிரங்கைகளாலுஞ் சிவனைப்பூசித்த அம்மலையில் அவன்செய்ததீர்த்தத்தை யாதாமொருவர் வந்துதரிசித்துப் புகழ்ந்து வணங்கினால் அநேகபாவங்கள் தீரும். அந்தத்தீர்த்தம்பருகின பேர்களுக்கெல்லாம் உண்டாகிய பலபிணிகளுந்தீர்ந்து மேனிதெய்வீகம் பொருந்தும். சர்வாங்கமும் குளிர்ச்சிபெற மூழ்கினாலுங் காயசித்தியாகும். அப்படி மூழ்கும் நெறிமுறைமையைச் சொல்லுகிறோம், கருதிக்கேண்மின்கள் முனிவர்களேயென்று சொல்லுகின்றார் சூதமுனிவர்.—எ-று. (௮)

கும்பமதியினிலமவாசையின முதலாய்மீனமதிருபோன்மெய்யோன்
தம்பரிவிற்கூடியநாளீறாகத் தினமுமந்தத் தடத்திற்றோய்ந்து
செம்பொன்மலையிற்றிரண சயனமுறச்செபமைந்துமாறுமெட்டு
மம்பையெழுத்தைம்பதுடன்மூன்றுமிதிற் றாரகமுமறையல்வேண்டும்.

(இ-ள்.) யாதாமொருவர் வந்து மாசிமாதத்தில் அம்மாவாசைத்தினமுதல் பங்குனிமாசத் தம்மாவாசைத் தினமீறாகத், தினமும் அந்த வாணதீர்த்தத்தில் மூழ்கி விரதமாகச் செங்கோட்டுமலையில் தெர்ப்பசயனஞ்செய்து பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், அஷ்டாக்ஷரம், சத்திமந்திரம், அன்பத்துமூன்றக்ஷரங்களும் இவைத் தாரகமுங்கூட்டியுச்சரித்துச் செபஞ்செய்யவேண்டும்.—எ-று.



இவ்வாணதீர்த்தமிசையொருநாட்சென் றாடிவருமிகசதுளோர்க்குங்
கைவாணசிவலிங்கமொருவருடம் பூசித்தகதியைக்காட்டும்
மைவாணன்குவளைவிழிமங்கையருமகிழ்ந்துறும்போயுகந்துமூழ்கிப் [வார்.
பைவாணன்படியினிது பலர்படைத்துப்பின்னரந்தப் பரனைப்போல் வாழ்

(இ-ள்.) வாணதீர்த்தத்தில் ஒருநாட்சென்று தீர்த்தமாடிவரும் இகலோகத்தார்க்கெல்லாம் அவரவர்கைகளில வாணசிவலிங்கம் ஒருவருஷம் பூஜைசெய்தால் நற்கதியைக்கொடுக்கும். மைபொருந்தி வாள்போன்ற குவளைக்கண்களையுடைய ஸ்திரீசனங்களும் புருஷர்களுந் திருநாககிரியிற் சென்று அந்த வாணதீர்த்தத்தில் மூழ்கினார்களாகில் ஆதிசேடன் தாங்கிய பூமண்டலத்தில் அளவில்லாத பலனைப் படைத்து வாழ்ந்திருந்து பின்பு பரமேசுரனைப்போல வடிவுபெற்று வாழ்வார்கள்

வாணதீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்.—௯௪.

---

# தேனு தீர்த்தச் சருக்கம்.

—(*)—

ஐந்துகிரியரன்கொடுத்த வந்நாளிலரனருளாற் றிருச்செங்கோட்டிற்
சிந்தைமகிழ்ந்தருள்காம தேனுவின் றீர்த்தப்பெயரின் செப்பலாகு
மந்தமலையிற்பரனை யர்ச்சித்துமூழ்குசனை யகனீராட்டில் [மோ.
முந்துபலனிஃதெனயான் மொழிந்தடங்கச் சிறிதுலகின் மொழியக்கேண்

(இ-ள்.) அந்நாளில் காமதேனுவுக்கு பரமேசுவரன் ஐந்து கொடுமுடிச் சிகரங்கொடுத்தருள அவைகளை அங்ஙனம் கொணர்ந்துய்த்து திருச்செங்கோட்டில் மனமகிழ்ச்சியாக உண்டாகச் செய்தது காமதேனு அதன் பெயரால் விளங்கிய தேனுதீர்த்தத்தில் மூழ்கி அத்தலத்தில் பரமேசுரனை அர்ச்சித்து மேன்மை பெற்றது. யாதாமொருவர் அந்தத்தீர்த்தமாடினால் அவர்களுக்கு வரும்பலன் இவ்வளவென்று நான் சொல்ல முடியாது. சிலதெரிந்தமட்டும் இவ்வுலகத்திற் சொல்லுகிறோம் கேண்மின்கள் முனிவர்களேயென்று சூதமுனிவர்சொல்லுகிறார்.எ-று

ஆடகமேருவுக்கைந்து நாடிகளாயிருந்தமலை யரன்பாற்பெற்று [டின்
நீடகவெங்கோட்டினிடை நிறுப்பமீக்கொண்டுபணி நெடுஞ்செங்கோட்
பாடகத்தாட்பரையாகன் பதம்போற்றிப்பணித்தபாநப் பகத்தின்மீதி
ஞாடகத்துன்றுதவுசனை யொருகோடிதீர்த்தபல மேறுக்கும்பாங்கால்.

(இ-ள்.) மஹாமேருகிரிக்குப் பஞ்சநாடிகளாக விருந்த கொடுமுடிமலைகளைச் சிவனருளால் பெயர்த்தெடுத்து மேற்கொண்டுவந்துபெரிய நாககிரிச் செங்கோட்டில் வைத்துப் பதித்துப் பாடக பதத்தையுடைய உமையொருபாகர் பாதங்களைப் பூசைசெய்து போற்றி வணங்கிப் பேறுபெற்ற வந்நாள் காமதேனுவுண்டாக்கிய திவ்விய சுனைதீர்த்தமாகி பலன்களிலும் அதிக பலனைக்கொடுக்குந்தகைமையுடையது.—எ-று. (௨)

தேனுமலர்தீர்த்தமொரு தினத்தாடிலொருகோடி தீர்த்தமாடு
மானமுறுமொருபசுவைக் கரைதனிற்றானம்புரக்குமநாதர்யார்க்கு

மேனையொருங்கோடிபசு வீந்தபலனோக்குமிரு மரபினோர்க்கு
மானகடுநகரனைத்து மகற்று மகற்றும் பிறவி யகல்வார்மன்னோ

(இ-ள்.) அந்தத்தேனுதீர்த்தத்தில் ஒருநாள் முழுகினவர்கள் ஒருகோடி தீர்த்தமாடின பலன்களைப்பெறுவார்கள். அந்தசுனைக்கரையில் ஒரு கோதானஞ் செய்த பேர்களுக்குக் கோடிதானஞ் செய்தபலனும். அவர்களிரண்டுமரபிலும் பிதிர்க்களுக்கு யமலோகத்தில் கொடிய நரகவேதனைகளும் நிச்சயமாகத் தீருந் தீருஞ் சென்மசாபல்யமாகி வாழ்வார்கள்—எ-று. ()

பிறவியகன்றனந்தபுரந்தரகற்பம் பெருந்தேவர்பெருமானாக
உறவியலேந்தருநீழ லலவியசிங்காசனத்தி லுலகையாண்டு
மறைமுனிவர்க்கிடையூறுவாரா துமகிழ்ந்தரசு வழங்கிபெம்மான்
இறைகழல்பின்புகுதுவரென்றியற்றருமகதைபனைத்து மியம்புமாலோ.

(இ-ள்.) சென்பசாபல்லியமாகி அனந்த தேவேந்திர கற்பகால மேன்மையான தேவர்களுக்கதிபதியாச் சீருஞ்சிறப்புப்பும்பெற்று பஞ்ச தருநிழலிற்குலவிய சிங்காசனத்தில் அமர்ந்திருந்து இவ்வுலகையெல்லாம் அரசாட்சியாக ஆண்டு வேத முனிவர்களுக்கு இடையூறுவாராமல் பாதுகாத்து மனமகிழ்ச்சியாக அரசுபுரிந்து பின்பு எம்பெருமானான பரமேசுரன் பாதத்தாமரைகளிற் சேர்ந்துவாழ்வார்கள் என்று இயல்புடைய தர்மக்கதைகளனைத்தும் சொல்லும்.—எ-று. (௫)

அந்தேனுதீர்த்தமினி தாடியுமாபதிக்குமறு முகத்தினோர்க்குஞ்
சந்தேகறுசெங்கோட்டிற் சுயம்புநாகேசனுக்குஞ் சங்கநேமி
வைத்தேவுகர்த்தனுக்கு மறுவறுபாலபிஷேக மன்பிலாட்டி
மெய்த்தேசுதருக்கும்ப மிருகமதகற்பூரசந்தன மேற்சாத்தி.

(இ-ள்.) அந்த தேனுதீர்த்தத்தி லினிதாக தீர்த்தமாடி நேமத்துடனே செங்கோட்டில் உமையொருபாகர்க்குஞ், சுயம்பு நாகேசுவரருக்கும், ஆறுமுகக் கடவுளுக்கும், கரங்களிற் சங்குசக்கரந்தரித்த ஆதிகேசப்பெருமாளுக்கும் அன்புடனே பரிசுத்தமான பாலால் அபிஷேகஞ்செய்து திருமேனி யழகுபெற பரிமளத்தம்ப மிருகமத கர்ப்பூரம் விரவிய மேலான சந்தனஞ்சாத்தினபின்பு.—எ-று.

சற்கரைபாலமுதமந்தத் தண்டீர்த்தத்தாற்சமைத்துத் தயையோடேத்திச்
சொற்கரையமொழிமறையோர் துறவிளர்மகேசுரர்பாற் றுய்ப்பவிழ்ந்தார்
வற்கரையுந்தனத்தியரை மைந்தரைவண் மையிற்படைத்துவையங்காத்
பிற்கருத்துள்வேண்டுவன பதம்பெறுவாரிருமரபும் பிறவிநீண்டார். [து

(இ-ள்.) சற்கரைவிரவிய பாலமுதம் குளிர்ச்சியுடைய அந்த தேனுதீர்த்தத்தில் சமைத்து தயையாக நிவேதியஞ் செய்து வணங்கிவாழ்த்தி சொற்களின் மேலான மறைமொழி வேதியத்துறவியர் மகேசுரர் இவர்கள் புசிக்கும்படியாகக் கொடுத்தவர்கள் மேகலைபொருந்திய மூலைமாதர்களை மைந்தர்களை வண்மையாகப் படைத்திந்த உலகத்தை யாண்டபின்பு தங்கள் கருத்துள் நினைத்த பதங்களைப் பெறுவார்கள். அவர்களிருமரபுஞ் சென்ம சாபல்யமாவார்கள்.—எ-று. (௬)

தேனுநெடுஞ்சுனையதனைத் திரிபிரதக்கணம்வந்து தீர்த்தமாடி
ஞானமுறவச்சுனைநற் புனலதனாலத்தீர்த்த நயந்துவைகிப்



பூவிறையுங்குழலிபங்கன் கருணைகூர்ந்திடச்சிவபூ சனைசெய்தார்க்குத்
தானமுறுஞ்சாரூப மவர்க்கேவல்செய்தவர்சா லோகஞ்சார்வார்.

(இ-ள்.) அந்தக்காமதேனு தீர்த்தத்தை மூன்று பிரதட்சணஞ்செய்து தீர்த்தமாடி ஞானவறிவுடனே அத்தீர்த்தக் கரையிலிருந்து புட்பமாலைசூடிய கூந்தலையுடைய உமையொருபாகன் திருவுளமகிழ்ந்திடத்தக்கதாகச் சிவபூஜை செய்வார்கள். மேன்மையான சாரூபம் பெற்றுவாழ்வார்கள். அவர்களுக்கு ஏவல் செய்தவர்கள் சிவசாலோக பதவிசேர்வார்கள்.—எ-று. (௭)

அன்றிசமதக்கினியின் பொருட்டனந்தநிருபர்தன்னை யடர்ந்துசாய்த்துக்
கொன்றுமறைவசிட்டரிடங் கொண்டரசர்தமைவெம்மைக் கொலையின்கூர்ந்து
நின்றவன்றன்பிழைபொறுத்தற் காகநினைக்காமதேனு நிலைத்தாள்போற்றி
மன்றலஞ்செங்கோட்டிலருள் பலர்தீர்த்தம்வழங்குபலன்வழங்கற்பாற்றோ.

(இ-ள்) அக்காலத்தில் சமதக்கினி பொருட்டாக அநேக ராஜர்களைக் கொன்றும் வேதவசிஷ்டனிடஞ் சேர்ந்தும் அங்ஙனமனேகராஜர்களைக்கொன்று வெவ்விய எனது பிழையைப்பொருத்து ரட்சிக்கவேண்டுமென்று காமதேனுவானது சிவனுடையபாதங்களைப் பூசைசெய்து போற்றி நிலைமையானமணங்குலவிய செங்கோட்டிற்செய்தருளிய பஞ்சுனைத்தீர்த்தம் தரும்பலன்களை இவ்வளவென்றுவகுத்துச்சொல்லும் தகுதியல்ல.—எ-று. (௮)

காமதேனுவைநினைந்து கண்ணொருமூன்றுடையானைக் கருத்துளாக்கி
சேமவடிவேற்கரத்தான திருவமவைத்தியானித்தா றெழுத்துமைந்தும்
நாமவெழுத்தும்பகர்ந்து நறும்புனலிற்படிவார்க்கு நயந்தவெல்லா
மாமதெதினிற்காமித் தருள்வதற்குத்தாதையின்மெய் யருளுஞ்சேரும்.

(இ-ள்.) யாதாமொருவர் அந்த தலத்தில்வந்து காமதேனுவைநினைத்துத் திரிநேத்திரனை சிவனைக் கருத்துட்கொண்டு கூறியவடிவேல்பிடித்த கரத்தராகிய முருகர் திருவடியை ரூபத்தியானஞ்செய்து சடாக்ஷரம், பஞ்சாக்ஷரம், இவைகளை யுச்சரித்து உரியதேனு தீர்த்தத்தில் மூழ்கினோர்களாகில் நயப்புடைய பலன்களென்றால் அவரவ ரிஷ்டகாமியார்த்த பலன்பெற்று வாழ்ந்துபின்புசிவனருளால் மேலான பதஞ்சேர்வார்கள்.—எ-று. (௯)

தேனுதீர்த்தச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம் ௩௰௧-க்கு விருத்தம் ௮௱௮௰௮.

---

# க்ஷீரதீர்த்தச் சருக்கம்.

———SSS———

செங்கோட்டின்வடகீட்பாற் பாற்சுனையென்றொருவமுதத் தீர்த்தமேவும்
வெங்கோட்டநதிகள்முனி வாவியாநவதீர்த்தம் விளங்காநிற்கும்
சங்கோட்டுங்கரமாயன் மருகருக்குப்பாற்கடலைத் தந்தபோலும்
மங்கோட்டுநெடுங்காம தேனுமுலையாற்சுரந்த வாவியாமால்.

(இ-ள்.) திருச்செங்கோட்டினுடைய வடகீழ்ப்பாரிசத்தில் பாற்சுனையென் னொரு அமுதமயமான தீர்த்தம் விளங்கியிருக்கும். வெவ்விய குற்றந்தீர்ந்தருளிய முனிவர்களால் புகழப்பட்ட நவதீர்த்தமுழுவதும் முழுகினபலனைத் தருவதாகிய

சங்கமேந்திய விஷ்ணுவானவர் தனது மருமகனாகிய முருகருக்குப் பால்க்கடலைக் கொடுத்ததுபோலும் அழகிய கொம்புகளையுடைய நெடியகாமதேனுமுலையிற்சுரந்தருளிய பாலூறி வருவதாகையால் பால்தீர்த்தமென்று பெயராயிற்று.—எ-று. (௯)

முன்னரன்னையெனவுலக முற்றுமுழுதகட்டடக்கிப் பெற்றபேதை [னால்
தன்னைபொருகணப்பொழுதிற் றுதிப்பார்க்குத்தருங்கருணைச் சலதிக்கண்
மன்னுமைவரைவரை மணந்தகன்றுகாஞ்சியிடம் வைகிமேற்பால்
பன்னுமறைநாகமலைப் பாற்கறையைக்காண்பதற்குப் படர்ந்தவேலை.

(இ-ள்) முன்னாளில் உலகமாதா வென்னத்தக்கதாக அண்டபுவனங்கள் முழுதுந்தன்வயிற்றில் அடக்கிப்பெற்றருளிய மஹாசக்தி தன்னைநினைத்தபேர்களுக்கு ஒருநிமிடத்தில்வந்து வரங்கொடுக்கப்பட்ட கிருபைகூர்ந்த கண்களையுடையவள் கைலாசத்தில் மணம்பொருந்திய பரமேசுவரனைவிட்டு நீங்கிக் காஞ்சிபுரத்தில் சிவபூஜைசெய்து தென்மேற்பாரிசத்தில் வேதங்கள் துதிக்கப்பட்ட திருநாககிரியில் புத்திரனைக் காணுங்கருத்தாக அப்போது பிலத்துவாரவழியே வந்தாளாம்.

தமதுகருணைப்பெருந்தாய் வருநெறிகண்டறுமுகவர் சரணம்போற்ற
வெமதுயிருக்குயிரனையா யெனைப்பரிவினணைத்துமலை யிணைத்தபார
வுமையவள்கன் றிருமுலைப்பா லொழுகியதனிடைபரந்து முலைகையின்றாள்
விமிதமுளதிதுதிருப்பாற் சுனையெனறும்விளம்பியப்பேர் விளங்கிற்றாமே.

(இ-ள்) அப்படி உமாதேவியாகிய கருணம்பிகையென்னும் தாயார்வருகிற நெறிமுறைமைதெரிந்து சண்முகக்கடவுளெதிர்சென்றுகண்டு உமையவள் பாதங்களை வணங்கிப்போற்ற மிகுந்தவன்புடனே என்னுயிருக்குயிராகிய குமாரக்கடவுளே யென்று இரக்கமாக மார்போடணைத்து மலையினைப்போலும் பாரிய தனபாரங்களையுடைய உமையவள் திருமுலைப்பால் சுரந்தொழுகி மலையெங்கும் ஊறிப் பாய்ந்து வீழ்ந்து பெருகாநிற்கும். அற்புதமாகிய உமையவள் திருமுலைப்பால் சார்ந்தூறி அமுதநிறமாக விளங்கியபடியினாலே அன்றுமுதல் அதற்குப் பெயர் திருப்பாற்சுனை யென்று விளங்கிற்று.—எ-று. (௧௦)

அன்னாகமலைமிசைக் கமுதசுனையெனும்பெயரு மறைதலாகும்
பொன்னாகவானவரும் புரந்தரனுமுனிவரும் பொய்கைசேர்ந்தார்
தன்னாகத்துள்ளிருக்குந் தாயளித்ததீர்த்தமென்றுந் தருமத்தேனும்
றன்னாகமலையானை பாலபிடேகம்புரிந்த நலமீதென்றும்

(இ-ள்) நாககிரியில் அந்தத் தீர்த்தமானது அமுதசுனை தீர்த்தமென்னும் பெயரும்பெற்று திகழ்ந்திருக்கின்றது. பொன்னுலகத்துத்தேவர்களும், இந்திரனும், முனிவர்களும், அங்ஙனம்பிரியாமல் வசித்திருக்கின்றார்கள். தன்னுடைய திருமேனியுள்ளிருந்தூறிய முலைப்பாலானபடியால் மாதாவாகிய உமையவள் திருவையினாலே அமுததீர்த்தமென்றும் புண்ணியரூபமாகிய காமதேனு நாகேசுரரைத் தமது சுரப்பாலால் அபிஷேகம்புரிந்த வண்மையினால் பால்தீர்த்தமென்றும், பிரசித்தியாக இருக்கின்றது.—எ-று. (௧௧)

முத்தமெல்லாங்கொழிந்துநவ ரத்நமணியருவிநீர் முதிராநிற்கும்
சுத்தமெனும்பெயரதற்கே யலதுவேறொருதீர்த்தஞ் சொல்லலாமோ
வத்தகபமன்றுதொடுத் தின்றளவுமமரமுத நிறமதாகு
நித்தனணிதிருமேனி நிகரென்ட்தலத்தொருபேர் நிகழ்த்தலாமோ.

(இ-ள்) முத்துமணிகளைக்கொழித்து நவரத்தினமணிகளையுடைய மலையருவிநீர் ஊறிப்பெருகி வாராநிற்கும், ஆகையால் சுத்தோதகமென்னும் பெயரதற்கே



சொல்வதல்லாமல் வேறொரு தீர்த்தங்களைச் சொல்லலாமோ அத்தன்மையால் அன்றுமுத லின்றளவுந் தேவாமுத நிறமாயிருக்கும். நித்தனான பரமேசுவரன் அழகிய திருமேனியை ஒப்புச்சொல்லுவதேயன்றி மற்றொருபேர் சொல்லக் கூடுமோ கூடாது.—எ-று. (௧௨)

அத்தீர்த்தந்தனில்கங்கை யமுனைகோதாவரிவந் தாடியாடித்
தைத்தீர்த்தந்தனிற்பூச நாளிலெவர்க்குந்தீர்த்தம் தலக்குதிலீயும்
கைத்திநெற்கண்டனங்கமெனக் காமனைவெல்லாதுவிழிக்கனலால்வென்றோர்
மெய்த்நீர்மைபெனலாகும் பானிறத்தாற்பாற்றீர்த்தம் விளங்கிற்றாமால்.

(இ-ள்) அந்தத்தீர்த்தத்தில் கங்கை, யமுனை, கோதாவரிமுதலான தீர்த்தங்களெல்லாம் தைப்பூசத்தில்வந்து தீர்த்தமாடி யாவர்க்குமூழ்கப் பருகத்தீர்த்தம் பாலிக்கும். மன்மதனை நெற்றிக்கண்ணாலெரித்த பரமேசுவரனுக்குப் பால்வண்ணனென்று பெயராகையால் சிவன்திருமேனி நிறம்போலும், பால்நிறமாயிருக்கிறபடியினாலே பால்தீர்த்தமென்று உலகில் விளங்கியதாம்.—எ-று. (௧௩)

பாலமுதநெடுஞ்சுனையிற் பனித்தீர்த்தமெடுத்ததனைப் பாலன்றன்னை
மேலமுதபிரளயத்தை நிகராகப்பொழிந்திறைஞ்சும் விரதப்பாலோ [க்கும்
ராலவிடமருந்தினுபாரா வமுதமெனலாகு முளத்தயாவுந்தீரும்
கோலமுறுமிருத்தியுவுங் கொடும்வவமுங்கொங்கனன்முன் குவிபஞ்சேசர்

(இ-ள்) நெடிய பாற்சுனையில் குளிர்ந்ததீர்த்தமெடுத்துக் குமாரக்கடவுள் திருமேனியில் அமுதபிரளயத்தைநிகராகப்பொழிந் தபிஷேகஞ்செய்துபோற்றிவணங் யாதாமொருவர் ஆலாலம்போலும் விஷபக்ஷணம் பண்ணினாலும், அத்தீர்த்தமுட்கொள்ள அமுதபானஞ் செய்ததுபோலாகும் மனமயக்கமுந்தீரும் பலவிதமாகிய அவமிருத்தியுவுங் கொடியபாவங்களும், வடவாக்கினியிலிட்ட பஞ்சமலைபோலும் நிவர்த்தியாகும்.—எ-று. (௧௪)

அரியானுமரியுடன்வந் தவளானுமானனு பளித்ததீர்த்தம்
விரியாடல்நாகமணி வெற்பருவியநகவிழும் வினைவுகேட்பார்
பரியாதபாதகச்சொற் படர்கோளார்பவத்துயரப் படவமுள்ளா
ரெரியாடல்நமன்படைப்போ ரிகல்கொளார்கேட்பவன்வா ரணங்களாமால்.

(இ-ள்) விஷ்ணுவாலும், விஷ்ணுவுடன் பிறந்தவளாலுஞ் சிவனாலுங் கருணைசெய்துண்டாக்கிய தீர்த்தம் படம் விரித்தாடப்பட்ட நாகமாணிக்க மணிநிறமழகிய நாககிரி யருவியாகப் பெருகியிரங்கும் வினைவாகிய பாற்சுனையினுசைசெய்க் கேட்பவர்கள் மஹாபாதகச்சொல்லுகளையும், பொய்மொழிகளையுங் கேளார்கள். ஜெனனமரண துக்கசாகரத்திலு முழுகார்கள் எரிகின்ற நெருப்புப்போலும், குரூரத்தையுடைய இயமன் படைப்போரில் வினைவுங்கேளார்கள். கேட்பது வேதாகம புராணப் பிரசங்கமாம்—எ-று. (௧௫)

மயதீர்த்தந்தனில்மூழ்கிப் பயந்தபிதிர்க்கன்னமறெப் படியேசெய்து
கயதீர்த்தமுடன்கொண்டு நான்மறையோர்க்கேதேனு நல்குந்தானஞ்
செயதீர்த்தமுடியுடன்வாழ் திண்கயிலைநிலையாகுஞ் சேயோன்வெற்பும்
[illegible]போற்றுதலு மனத்துநினைத்தனவுமரன் வரமுஞ்சேர்க்கும்.

(இ-ள்) அப்படிக்கொத்த திருப்பாற்சுனைத் தீர்த்தத்தில் மூழ்கிப்பெற்ற [illegible]க்கு வேதமொழிப்பிரகாரம் அன்னமுதலாகிய பதார்த்தங்கள்படைத்து திருப்திசெய்து தீர்த்தமுட்கொண்டு சதுர்மறை வேதியர்களுக்கு யாதானுமொரு

பொருளிபன்றமாத்திரம் தானங்கொடுத்தவர்கள் தெய்வதீர்த்தமுடியுடைய பரமேசுரன் வாழ்வுற்ற திருக்கயிலை நிலைபெற்றவாழ்வார்கள். கந்தகிரிபதமும் பெறுவார்கள். தேவர்கள் புகழ்ந்து துதிக்க, மனதில் நினைத்தகாரியமுஞ் சித்திக்கும். சுவாமிவரப்பிரசாதமும் பெற்று வாழ்வார்கள்.—எ-று. (க)

இக்கிரதீர்த்தக்கை யிருவிழியிற்கண்டுண்ட விகத்துளோர்கள்
மொய்க்கிளமொழிக்காயார் முலைக்கீரமுணவறியார் முகுந்தனுரின்
மெய்க்கிரமுடன் றுயில்வார் மிடைத்துயிலினடைத்தபவ விளைவின்றேயார்
கைக்கிருமழுவுமொருகைக்கிளையுதாற்புயமுங் கவினிற்சேர்வார்.

(இ-ள்) அந்தக் கிரதீர்த்தத்தை இரண்டு கண்கள் குளிரக்கண்டு தீர்த்தம்பருகிய இக்லோகத்தார்களனைவருங் கிளிபோலு மொழியுடைய தாய்மார்கள் முலையமுதமுண்ண வறியார்கள் விஷ்ணுபள்ளிகொண்ணுந் திருப்பாற்கடலில் விஷ்ணுசரூபம் பெற்று யோகநித்திரைசெய்வார்கள் மிடையாகிய மயல் துயர்க்கேதுவாகவுடைய பாவவினைக்கடலில் மூழ்கார்கள். ஒருகையில் மழுவும்ஒருகையில் நாணும், அசைபயவாத மிரண்டுமாகச் சதுர்ப்புயமும் பெற்றழகுபெற விளங்காநிற்பார்கள்.

புண்டரிகபுரத்திலந்தப் புண்டரிகப்பாதர்மைந்தன் புலம்பலுக்கி
யண்டரிகத்தருள்கூர வழைத்தனர்பாற்கடலரியு மரன்பாங்காளும்
விண்டலத்தேதனுவுங்குமரர் விருப்பாலக்கிரியதனில் விதித்ததென்றே
திண்டகைசேர்புணர்முன்னூற் செயல்வழியிற்செப்பியனை சேர்ந்துநீங்கார்.

(இ-ள்) வியாக்கிரமபுரியில் வியாக்கிர பாதர்குமாரன் அழுதபலம்புவதைப் பார்த்து இரபராசாதமாகச் சிவன்கருணைசெய்து திருப்பாற்கடலை யழைத்துண்ணக்கொடுத்தார். விஷ்ணுவும், உமையவளும், தேவலோகத்துக் காமதேனுவுங் குமாரர் விரும்பும்படியாக நாகிரியிலுண்டாக்கிய தீர்த்தமென்னத்தக்கதாகத் திண்மைத்தகைமையுடைய நெடியபுராண முன்னூல்கள் சொல்லுஞ் செயல்வழியாகச் சொல்லியபிரகாரம் திருமாலானவர் எப்போதுஞ்சேர்ந்து பிரியாமலிருப்பார்.—எ-று. (கக)

எழுவகைதீர்த்தமுந் தினந்தமிறைஞ்தீர்த்தமெனமூழ்கற் கியலுந்தீர்த்தம்
வழுவறக்காவிரிநதியெப் பொழுதும்பாதாளவழி வந்தும்தோயுஞ்
செழுமலர்க்கொன்றைச்சடையான் றிருமுடியிலொருபங்கு மிதன்றேர்பங்கும்
வழுவறவேநிற்றலின்றல மலைபொழிகிரச்சுனையாம் வழங்கற்பாற்றே.

(இ-ள்) சப்தமஹாதீர்த்தங்களுந் தினமுந் தங்களுக்கு மேலான தீர்த்தமென்றுவந்து மூழ்குவதற்கு விசேஷமகிமையுடையது பால்தீர்த்தம் வழுவில்லாமல் காவேரிநதி யெப்போதும் பாதாளவழியாகவந்து தோய்ந்துநிற்குஞ் செழுமையுடைய பொற்கொன்றை மாலைசூடிய சடையனுனபரமசிவன் திருமுடியில்மருவிய கங்கை சிவன்சடையி லொருபங்கும் அந்தப் பால்தீர்த்தத்தி லொருபங்குமாகப் பிரியாமல் கலந்துநிற்கும். ஆகையால், நாகமலை பொழியப்பட்ட கிரதீர்த்தத்தின் பெருமையை நம்மாற்சொல்லும் பகுதியல்லவென்று சூதமுனிவர்சொன்னார்எ-று.

பாலாழியிடைபயில்பண் ணவனளந்தபடியனைத்தும் பரிவாரச்சுற்றி
மேலாயதீர்த்தத்தின் விரும்பியமாகந்தோய்ந்து மிந்தத்தன்ம
மாலாலமுண்டபிரா னர்த்தநாரீசனரா மலையைச்சுற்றிச்
சேலாறும்புனற்கிர தீர்த்தமொருக்கால்மூழ்கிற் சித்தியாமால்.

(இ-ள்) பாற்கடலிற் றுயில்பயின்ற விஷ்ணுவானவர் அளந்த மண்டலமெல்லாம் பரிவாரகச்சுற்றி மேலானதீர்த்தங்களில்மூழ்கிவிருப்பமாக மாமாங்கத்தீர்த்த



குளித்தும் அநேக தானதன்மங்கள்செய்தும் இகலோகத்தார்கள் ஆலகால விடமுண்டருளிய வெம்பிரானுன அர்த்தநாரீசுரர் பிரியாமலிருக்கின்ற திருநாககிரியைச் சுற்றி கயல்பொருந்திய புனலுடைய கிரதீர்த்தத்தி லொருதரமுழுகினால் அந்தப்
பலனிக்கணம் சித்தியாகிவாழ்வார்கள்.—எ-று. (கரு)

கோதானமாடகக்க னப்பரிதானங் குலகன் னிகையாதானம்
பூதானம்பாற்சுனையிற் படிந்துகரையிற்கொடுத்த புனிதோர்க்கெல்லா
மாதானவானுலகு மரபடலார்சூழலுஞ்சா பளபாய்பாவுஞ்
சேதாவுன் றுயிர்காம தேனுவுடபெற்றரசிருப்பர்தேவர்போற்ற.

(இ-ள்) கோதானஞ், சொர்ன்னதானம், அசுவதானங் குலவுசிதமான கன்னிகாதானம், பூமிதானம், இவையெல்லாம் திருப்பாற்சுனையின்மூழ்கி தீர்த்தக்கரையில் மறையோர்களுக்குக் கொடுத்தருளிய உலகத்தார்க்கெல்லாம் உயர்ந்ததானமான தேவலோகமும், அரமகளிர்சூழலும் விரைந்துபாய்கின்ற நீலவர்ணக்குதிரையுந் தெய்வப்பசுவென்று சொல்லப்பட்ட காமதேனுவுஞ் சொந்தமாகப்பெற்று அரசாட்சிசெய்து தேவர்கள் போற்றிசெய்ய வீற்றிருப்பார்கள்.எ—று. (கசு)

கிரதீர்த்தச்சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் கஎஉ.

## சண்முகதீர்த்தச் சருக்கம்.

ஆறெனுந்தண்சினையினரும் பலனுரைப்பன்தன்மசக னுயவேந்தன்
கூறனந்தகாலநெடுங் குவலயமெல்லாம்புரந்தான் குமாரனில்லா
தீறிலிங்கவகிலதலம் புரப்பதனுக்கியாரெனவேந் திரக்கங்கூர்ந்து
நூறுமடவியர்புணர்ந்தும் நொய்திலொருங்கவலையென நுவல்வதம்மா.

(இ-ள்) மிகவுங் குளிர்ச்சியுடைய ஆறுஞ்சுனைதீர்த்தத்தின் மகிமையும் அரிய பலன்களுஞ் சொல்லுகிறோம் தன்மசகாராஜனானவன் அளவில்லாதகாலம் இப்பெரிய பூமண்டலமுழுதும் அரசாட்சிசெய்து பிற்காலத்திற்கு இந்த மண்டலத்தை ஆளும்படியாகப் புத்திரசந்தானமில்லாதபடியினாலே இராஜா மனங்கரைந்துருகி நூறுபெண்களை மணஞ்செய்து புணர்ந்தும் ஒருபிள்ளை இல்லாமற்போச்சுதே இனி என்னசெய்வேனென்று துக்கித்தான்.—எ-று. (க)

எனுங்காலைமணமடவா ரிதற்கானதருமமியற் றுகிரென்ன
தனங்கானும்புருடர்துலா பாரமசுவமேதயவித் தருமயாகம்
தினங்கானும்பிதிர்முறையோர் சிறப்பவறுவகையிரதச் சிரார்த்தமற்றும்
மனங்கானுந்தருமங்கள் மந்திரசெபமனந்தவகை மகிழ்ந்துகூற.

(இ-ள்) தன்மசகாராஜன் பிள்ளை இல்லையென்று துக்கித்தபோது தேவிமார்கள் சொல்லுகிறார்கள். புத்திரசந்தான முண்டாகும்படியாக அதற்கான தானதருமங்[illegible]ச் செய்வீராகவென்றுசொல்ல அப்படியே சொர்ன்னபுருட துலாபாரதானமும் அசுவமேதயாகம் தென்புலத்தாராகிய பிதிர்க்கள் மனங்களிகூரத் தினசரி[illegible]ல் ஆறுவகை இரச பதார்த்தங்களாலுந் திருப்தியாகும்படி சிரார்த்தங்கள் மற்றும் பல தானதருமங்களுஞ்செய்து அநேகவித மந்திரசெபங்களும் மனமகிழ்ச்சியாகக் கருணைகூர்ந்து செய்தான்.—எ-று. (உ)

அத்தருமத் தாற்றன்மசகன்றேவி முதற்கொடியோ ரசைபீன்றாள்
புத்திரற் குச்சந்திரகுமாரப் பெயரைப் பொருத்தினரப்புதல்வன் றன்னை [றி
யுத்தமத்தாற்றொண் ணூற்றொன்பதின் மாதர்களு மாகருணையுவப்பிற்போற்
வைத்திடு நாளொருசேதளம் மகவினைத்தீண்டியதனை மார் வருந்தங்கூற

(இ-ள்) அப்படிச்செய்த புண்ணிய தபோபலத்தினாலே தன்மசகராஜன் தேவி மார்களில் முந்தின பட்டஸ்திரிதேவி ஒருபுத்திரனைப்பெற்றாள். அந்தப்பிள்ளை க்கு சந்திரகுமாரனென்னும் பெயரிட்டு மற்றும் தொண்ணூற்றொன்பது தேவி மார்களும், உத்தமகுணமான தங்கள் கருணைப்பிரியத்தினாலே நன்றாய்ப்போற்றி வைத்து வளர்க்கின்றநாளில் ஒருநாள் அந்தப்பிள்ளை வருத்தப்படத்தக்கதாகத் தேள்கொட்டியது.—எ-று. (ரு)

மதலைவருந்தும்படியால் மங்கையர் நூற்றுவருமிகவருந்துமோசை
யதனையறிந்தரசனன் றுபடுந்துயரத்தனைவிதென்னவரைநகன்மோபா
சதமணிமந்திர அவிடதத்தினாற் சணப்பொழுதிற்றணிப்பித்தான்பின்
னுதவருமைந்தன் பேறுபோன்றே மற்றையர்க்குமுறுஞ்செய்வேண்டும்.

(இ-ள்) அந்தப்பிள்ளையானது தேள்கடியால் வருத்தப்படுவதுகண்டு பெண் கள்நூறுபேரும் மனதுநொந்து அழுகின்ற சத்தத்தை தன்மசகராஜன் அறிந்து அந்தப்பிள்ளையின் வருத்தத்தை சதவிதமணிமந்திர ஒளஷதங்களால் ஒருவினாடி ப்பொழுதில் தணிப்பித்தான் பின்பு இப்போதுண்டாகியஒருபுத்திரனைப் பெற்ற பேறு பேறல்ல இந்தப்பெண்களுக்கெல்லாம் புத்திரசந்தானமுண்டாக வேண்டு மென்றுசொல்லிப் பின்னையும் அரசன்சொல்லுகிறான். (சு)

யானும்விருத்தாதிபனு மேந்திழைநூற்றுவருமுதிர் வெய்தினார்யான்
றானுதவுபலனனந்தந் தாபதர்சொற்படியமைத்தேன் மறையோர்கேண்மி
னேனையிவரிவர்க்குமக வெய்தவொருப்பனிலையோ வியம்புகென்ன
ஞானவானொருவன்மன்ன னூறுகுமாரன்பெறுவீர் ஞாலங்காப்பார்.

(இ-ள்.) தன்மசகராஜன் தன்சமுகத்திலிருந்த வேதியர் கூட்டங்களைப்பார் த்து யானும்விரத்த ராஜனானேன். தேவிமார்கள் நூறுபேரும் முதிர்ச்சியடைந் தார்கள் யான்செய்த தானதர்ம பலன்கள் அநேக விதமாகத் தபோதவர்களான பெரியோர்கள் சொற்படியாகச் செய்தமைத்தேன். அதனாலொரு புத்திரனைப்பெற் றே, மற்றுமிந்தப் பெண்களெல்லாம் புத்திரசந்தான முண்டாகத்தக்க தபோபல னில்லையோ சொல்லுவீர்களென அங்ஙனமவர்களில் ஞானவானொருவன் ஓஒஅர சனே நீர் நூறுபிள்ளைகளைப்பெறுவீர் அவர்கள் இந்த உலகத்தையாள்வார்கள் இத ற்கு விபாஞ்சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறேன்.—எ-று. (எ)

சேடகிரியெனுமர்த்த நாரீசர்வெற்பில்மறை தேவர்கூடி
நீடுதவப்புரிகுவரன் னெடுங்கிரியிற்சுனையாறொன் றாகக்கூடி
யோடுமதனுறுபகுப்பா முறுபுனற்றீர்த்தந்திருக்கார்த் திகையாமின்னா
ராடியதுநீருமவண் சென்றாடினுமக்குமக வனந்தம்வேண்டும.

(இ-ள்.) சேஷகிரியென்று பெயர்விளங்கும் அர்த்தநாரீசுரர் எழுந்தருளி ரிதலத்தில் வேதியர் தேவர்கள் கூடி கொடியதவஞ் செய்தார்கள். அந்த த்தில் ஆறுசுனை ஒன்றாகக்கூடி அதனுட் பகுப்பாகி யுற்றிருக்கும் அந்தகுளிர்ந்த தீர்த்தத்தில் திருக்கார்த்திகைப் பெண்கள்வந்து நீராடி பேறுபெற்றார்கள். நீரும்



தலத்தில் சேர்ந்து அந்தச்சுனைத் தீர்த்தமாடினால் உமக்குவேண்டிய புத்திரர்களு முண்டாகுமென்று சொன்னார்.—எ-று. (சு)

வேண்டுமெனவுரைத்தமறைப் புரோகிதனும்மெல்லியல் நூற் றுவருமீண்டி
கூண்டரவமலைபிடதகதிற் குறித்தவாறுதீர்த்தசுனைக் குழுக்கொண்டுய்த்
சேண்டகையவேதியரும் தெய்வமகபூசைசிவ பூசைமாறு [தார்
தாண்டகையிற்புரிபவரு மாசிமொழிந்தருந்தவர்கா டன்வந்தாரால்

(இ-ள்) என்றிப்படிச்சொன்ன வேதபுரோகிதனும் ராஜஸ்திரீகள் நூறுபே ரும் நாகரிதலத்தில்வந்து குறிப்பாகிய ஆறுசுனைத் தீர்த்தக்கரையில் கூட்ட மாகச்சூழ்ந்தார்கள். அங்ஙனம் மேலோரான பெரியோர்களும, மறையோர்களுந் தெய்வமகபூஜை சிவபூஜை வழுவாமல் தவஞ்செய்பவர்கள் அனைவரும் ஆசீர்வ தஞ்சொல்லி அரியதவமுனிவர்களுடனே வந்தார்கள்.—எ-று. (எ)

மிக்கபுரோகிதரில்மறை வியந்தசதுர்வேதாங்கி யென்பான்றன்சொல்
தக்கசுனைநீராடித் தன்மசகாயனுஞ்சந்திர குமாரன்றானும்
மைக்கணழகியநூறு மடவியருமுடனிருத்தி மகயாகஞ்செய்
தொக்கவறுசுனைமூழ்கி யுயர்ந்தோர்க்கு மாதான முதவுகின்றான்.

(இ-று) மேன்மையான புரோகிதரில் வேதவேதாங்கியாகிய சதுர்வேதாங்கி யென்பவன் சொற்படியே தகைமையான சுனைகளில் தீர்த்தமாடி தன்மசகராஜ னும், பிள்ளை சந்திரகுமாரனும் மைதீட்டிய கண்களழகிய நூறுபெண்களுடன் வந்து புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து ஆறுசுனைத்தீர்த்த மூழ்கி பெரியோர்க ளுக்கு மகாதானங்களுதவினான்.—எ-று. (அ)

உதவிசெய்யவ்வோமத்தி னுய்த்தருளுஞ்சுதையமுத மொருநூற்றன்ன
விதநடைவெண்ணகைநூறு மெல்லியலாருக்களித்த வேதவோமத்
திதமுளவேதாங்கியெனும் தேசிகனப்படியருளச் சிறந்தநூறு
மதகயத்துவிளங்களிறு போலுதித்தார்வளர்ந்துலக மன்னரானார்.

(இ-ள்) அப்படிச்செய்த புத்திரகாமேஷ்டியாக ஓமகுண்டத்திலுதித்தசுதை யமுதத்தை அன்னம்போன்ற நடையும் வெள்ளிய நகையுமுடைய ராஜ ஸ்திரீ கள் நூறுபெண்களுக்குங் கொடுத்தருளச்செய்து வேதமந்திரவோமம் உசிதமாகச் செய்துமுடித்த சதுர்வேதாங்கியென்னுந் தேசிகனுடைய கிருபையினாலே சிறப் புடைய ராஜன் நூறுபெயரிடத்திலும் மதோன்மத்தமான இளங்களிறுகள்போ லும் நூறுபுத்திரர்கள் பிறந்து வளர்ந்து உலகமன்னர்களானார்கள்.—எ-று (கூ)

எனச்சூதருரைத்தபின்னரி லகுநைமி சாரண்யத் திருந்தோர்கேட்ப
தனச்சூதககுயினடைச்சொ லப்பிகைபங் கடைந்தபிரா னகலாதோங்கப்
புனச்சூதமுலைக்குறப்பெண்பொருந்துகுகனிருப்பவராப்பொருப்பில்வேதக்
கனச்சூதவதீர்த்தந் தனிலிகுது மகவுதவுங் கதையாதென்றார்.

(இ-ள்) என்றிப்படிச்சூதமுனிவர்சொன்னபின்பு விளங்கிய நைமுசாரணிய முனிவர்களனைவருங் கமலமுகில்போன்ற தனபாரமுங் குயில்போன்ற மொழி யையுமுடைய அழகிய உமாதேவிக்குத்தமது வாமபாகங்கொடுத்து அர்த்தநாரீக ளாக எழுந்தருளிப் பிரியாமலுயர்ந்தோங்கித் தினைப்புனத்தில் மருவிய வள் ளிநாயகியை மணந்த குமாரக்கடவுளும் விளங்கியிருக்கின்ற நாகரிரியில் வேதமொழி களையுடைய சூதமுனிவரே! அந்த ஆறுசுனைத்தீர்த்தத்தில் புத்திரசந்தா னப்பேறு தருங்கதையாதென்று முனிவர்கள் வினவிக்கேட்டார்கள்.—எ-று (ம)

முனிவர்கேட்பவருட் சூதர்மொழிவாறுப்முளைக்கதீர்த்தம்
கனிமுருகையரன்பயந்தவந்நாளிற்கார்த்திகைமங் கையர்கொங்கைக்கா
யினியவறு முகமெய்தி யிறைவனருட்படிவளர்ந்தவிகல்வேற்கந்தர்
துணியகலச்சூர்தடிந்துதோய்ந்தாறுமுகத்திறுக்குந் தொகைநீகண்டாய்

(இ-ள்) முனிவர்கள்கேட்கக் கிருபையுடைய சூதமுனிவர் சொல்லுகிறார். அந்தத்திருநாககிரியில் ஆறுசுனை பொருசுனையாக உதித்ததீர்த்தம். கனிவாகப்பா பேசுவரன் கந்தசாமியைப் பெற்றநாளில் கார்த்திகைப்பெண்கள் முலையமுத முண்ணவேண்டி ஆறுமுகவடிவுமாகி சிவனுடைய அருளினாலே வளர்ந்த வேலாயு தக்கடவுளால் தேவர்கள் துயரந்தீரச் சூரனைச் சங்கரித்தபாவதோஷம் நிவர்த்தி யாகவந்து தீர்த்தமாடும்போது ஆறுமுகத்துக்குக் கணக்காக அவர் கிருபையினா லே ஒரு சுனையிலாறுசுனை யாகும்படி விதித்தருளினார்.—எ-று. (கக)

கண்டமுகற்றொடங்கியது சண்முகதீர்த்தமென்றுங்கழறலாகும்
புண்டரிகன்முதற்றேவர்புகுந்து தினமூழ்கியங்கண்போற்றிநீங்கார்
பண்டருமாதவர்படவர்பட்டகலமூழ்கினர்கள்பாங்கினாலும்
திண்டலத்தின்கார்த்திகைதீர்த்தமென்றுஞ்செகமனைத்துஞ்செப்புமாதோ.

(இ-ள்) ஆறுமுகக்கடவுள் கண்டுண்டாக்கிய தீர்த்தத்தை அன்றுமுதலாகச் சண்முகதீர்த்தமென்றுஞ் சொல்லலாச்சுது. அத்தீர்த்தத்தில் பிரமதேவன் முத லான தேவர்கள் புகுந்து தினமும்மூழ்கி யங்ஙனம் சிவனைப்போற்றிசெய்து பிரி யாமலிருக்கின்றார்கள். முனிவர் பத்தினிகள் ஆறுபேரும்வந்து தங்கள் துயரந்தீர மூழ்கினபடியால் திண்மையுடைய இந்தத்தலத்தில் கார்த்திகை தீர்த்தமென்றும் செகமெல்லாம் விளங்கிற்று.—எ-று. (கஉ)

அந்தத்தீர்த்தப்பயனதனை யருளியநூற்றொருபால ரவனியாள
வைத்தீசன் பதம்பரவமன்னுவித்துமுருகனர்த்தனாரீசன்பேர்
முத்தீயிலந்தணரால் மொழிவித்துச்சிவபூஜை முறையும்பூட்டிச்
சத்திதுபின்னசத்தி தேவுணர்த்தித் தன்மசகன் றவமேற்கொண்டான்.

(இ-ள்) அந்தச்சண்முகதீர்த்த மகிமையினாலேவசித்த ராஜகுமாரர்கள் நூற் றொருபேரும் இந்தமண்டலத்தைப் போற்றிசெய்து முருகவேள் அர்த்தநாரீசு ரின் திருப்பெயர்கள், முத்தீவளர்க்கின்ற அந்தணர் மறைமுனிவர்கள் வாக்கினா லேசாற்றுவித்து சிவபூஜை முறைமையும்பூட்டி சத்து அசத்து இவ்விரண்டும் தெரியும்படி அறிவுண்டாக்கி மக்களை அரசாளவைத்து தவமேற்கொண்டிருந்தா ன் தன்மசகராஜன்.—எ-று. (கங)

புரிந்தருள்சண்முகதீர்த்தம் புகுந்தாடிப்பணிமொருப்பிற் றவங்கூர்போதந் தெரிந்துமங்கைபங்கனையுஞ் சேவைசெய்துமுற்றியனாட் டெய்வலோகம் புரிந்தனனப்பொழுதுமைந்தர் நூற்றொருவர்தந்தைக்குந் தாய்க்கும் விரைந்துபிதிர்க்கருமமுற்றி வெற்பிலிறையைத்தொழுது வியந்தார்வேந்தர்.

(இ-ள்) அந்தப்பிரகாரஞ் சண்முக தீர்த்தத்தில்புகுந்து தீர்த்தமாடி நாககிரி யில் வாசமாகவிருந்து தவங்கள்செய்து ஞானோதயம் பெற்று உமையொருபாக னையுஞ் சேவைசெய்து வணங்கி விரதமுற்றியநாளில் சொர்க்கலோகபதஞ்சேர்ந் தான் தன்மசகராஜன். அப்போதுபிள்ளைகள் நூற்றொருவரும்வந்து தங்களைப் பெற்ற தந்தை,தாய் இருவருக்கும் பிதிர்க்கருமங்கள் யாவுஞ்செய்து முடித்துநாக கிரீசுரனை இராஜகுமாரர்கள் வணங்கித்தோத்திரஞ்செய்தார்கள்.எ-று. (கச)



வியந்துபரனுமிக்க வேலவருமனந்தகயிங் கிரியமாக்கி
நயந்தசிவபூஜைமுற கேசருக்குநற்றிருநாள் நாகீசர்க்கு
வயந்திகள் வேதாகமத்தின் வண்ணமிகத்திருவிழா வளங்களாக்கி
நயந்துதன்மசகநூற்றி னொருவரெனப்புவிபுரப்ப நகரின்மீண்டார்.

(இ-ள்.) தோத்திரஞ்செய்து வணங்கிப் பரமேசுரனுக்கும் வேலவருக்கும் அனேக கய்ங்கிரியங்கள்செய்து பக்தியாக சிவபூஜைக் கட்டளை நடந்துவரும்படி செய்வித்து முருகருக்கும், நாகீசுரருக்கும், வேதாகமப்படி திருவிழாநடத்தி வள மையாக நயப்புடனே சிவனருள்பெற்று தன்மசகர் நூற்றொரு பெயர்களும் உல கத்தையாள மீண்டுபோய்த் தங்கள் நகரஞ்சேர்ந்தார்கள்.—எ-று. (கரு)

மீண்டிறைநாமந்தரித்த நூற்றொருவேந்தருநூற்றோர் வெற்புப்போலக் [குத்
காண்டகயவாலயமுங் கோபுரமும்மண்டபமு கமஞ்சூழ்சோலைச்
சேண்டிகழவியற்றினர் நூற்றொருவரில் முன்னுதித்தவந்தத்திறல்வேந்தற்
றூண்டுகதிர்மணிமகுடஞ் சூட்டினர்செங்கோல்நெறித்தொல் புவியில்வாழ்ந் [ந்தார்.

(இ-ள்.) இராஜகுமாரர்கள் சுவாமியினது பெயர்பெற்ற நூற்றொரு இராஜ குமாரர்களும், நூற்றொருமலைப்பாலத் திருக்கோபுரங்களுந் திருமதில்மண்டபங்க ளும் நந்தவனப்பூஞ்சோலைகளும், மேன்மையாய்விளங்கச் சிவபுண்ணியங்கள் செ ய்து சிவகிருபையினாலே நூற்றொருவரில் முன்பிறந்ததிறமையுடைய இராஜனுக் குப் பிரபைபொருந்திய மகுடஞ்சூட்டினார்கள். செங்கோனீதி நெறிமுறைமை யாக அரசாட்சிசெய்து பூமண்டலத்தில் வாழ்ந்திருந்தார்கள்—எ-று. (கசு)

சண்முகதீர்த்தச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம் உஎ-க்கு விருத்தம் கஅஅ.

---

# சருவதீர்த்தச் சருக்கம்.

—(✻)—

தீர்த்தராஜனென்றொருபெயர்விளங்கியுந் தீர்த்தசேகரனென்றும்
வார்த்தைகூறியசர்வதீர்த்தந்தனை மண்ணிடைநினைவாரோர்
பேர்த்தரும்பிறவிப்பெருஞ் சூதகப் பெருங் கடல்கடந்தேகச்
சேர்த்தயங்கிய திருக்கயிலாயமே திருமனையெனவாழ்வார்.

(இ-ள்.) தீர்த்தராஜனென்றுந், தீர்த்தசேகரனென்றும், யாவருக்குஞ் சொல் லப்பெயர்பெற்று விளங்கிய சர்வதீர்த்தத்தை மனதில நினைத்தவர்கள் மறுபிறவி யான பெருஞ்சூதகப் பவக்கடலைக்கடந்து சென்மசாபல்லியமாகி வளமையுடைய ஸ்ரீ கைலாசமே திருவீடாகச்சேர்ந்து வாழ்வார்கள்.—எ-று. (க)

அன்னதுக்தரக்கீட்புறத்தமைவுற வழகியசெழுந்தீர்த்த
மன்னெறிப்படவுரைத்தன மகனிடைமுறைமுறை யுறமூழ்கிற்
பின்னவன்குலப்பாதகமிலக்கமென் மந்தனிற் பெரிதோங்கி
மன்னுகின்றவெவ்வந் துயராறுஞ் சிவன்பாதம் வாழ்வினுக்குரித்தாவார்.

(இ-ள்.) அந்தச்சர்வதீர்த்தம் வடகீழ்ப்பாரிசத்தின் அமைவாக அழகுபொரு ந்தியிருப்பது செழுமையுடைய தீர்த்தமகிமைகள், நெறிமுறைமையாகச் சொன்

ளேமே யவற்றையெல்லாம் வரிசைவரிசையாக மூழ்கினபின்பு சருவதீர்த்தத்தில் மூழ்கினவர்கள் கொலைபாதகங்களெல்லாந்தீர்ந்து லட்சஞ்சென்மங்களிலும் பெருமைபெற்றோங்கி வெவ்விய துயரங்களெல்லாம் நிவாரணமாகிச் சிவன்பாதத்திற் சேர்ந்து வாழ்ந்திருப்பதற்கு மிகவும் உரியவர்களாவார்கள்.—எ-று. (௨)

என்றுரைத்தபின் சூதனைமாதவ ரிருடிகளனைவோருந்
தன்றுரைப்புனற்சர்வதீர்த்தத்தினிற் றகைமையைவிரித்தோதென்
றென்றுரைத்தனர்சவுனகர்கேட்டியென் றெண்மறைத்துறைச்சூதர்
குன்றிடாவகைகூறினர்பாரனது கூறுவன்சிலகேண்மோ.

(இ-ள்.) என்றிப்படிச் சூதமுனிவர் சொல்லக்கேட்ட மாதவரான முனிவர்கள் அனைவோரும் குளிர்ந்த புனலுடைய சர்வதீர்த்தத்தின் தகைமையை விரித்துச் சொல்லுமையாவென்று கேட்க அப்படியே சவுனகாதி முனிவர்களே கேண்மின்களென்று வேதநெறி முறைமையுடைய சூதமுனிவர் குன்றுதலில்லாமற் சொல்லியருளினார். அப்படியே உலகத்தார் கேட்கும்படியாகச் சொல்லும் புராணங்கள்.—எ-று. (௩)

கவுரிபங்கினன்கனிந்துறைபசலமே கவுரிபங்கினனேனும்
பவுரிவண்புனற்சர்வதீர்த்தந்திருப் பச்சைமால்வடிவென்று
மிவுரைதன்னிலோர் பேதமற்றெண்ணுவார்க் கிகபரமிரண்டெய்தி
யவுரியாடையன் பூடகவாடைய னருட்பதத்தடைவாரால்.

(இ-ள்.) உமையொருபாக ரெழுந்தருளிய, கிரியே! உமையொருபாகனென்றுஞ் சர்வதேவதைகளைத் தீர்க்கின்ற, வள்ளிய புனலுடைய சர்வதீர்த்தம் நீலமேகனை திருமால்வடிவென்றுஞ் சொல்லியவேத வாக்கியங்களைப் பேதகமில்லாத மனத்தையுடையவர்களுக் கெல்லாம் இகபரசாதக பலன்பெற்று வாழ்ந்து, பின்பு புலியுரியாடையனை சிவன்பதமும், பொன்னுடையவனை விஷ்ணுபதமும் அநுக்கிரகப்படி சேர்வார்கள்.—எ.று. (௪)

கெங்கையச்சுதன்வடிவுதன்கெங்கையே யீசன்மாமுடிக்காந்தை
சங்குசக்கரன்சங்கரனெனவிரு தகையலவதுகேண்மி
னெங்குமாலுறைநெய்யெனபூமரு வெனத்திலநெய்போலத்
தங்குபாங்கரின்தொன்றெனுங்கங்கையைச் சர்வதீர்த்தமதாகும்.

(இ-ள்.) கெங்காநதியே! விஷ்ணுவடிவமாகும். அதனாலந்த கெங்கையொருபொருளான பரமேசுரன் திருமுடியில் பெண்ணுருவமாக அமர்ந்து சங்குசக்கரபாணியென்றும், சங்கரனென்றும் இரண்டு தகைமைப்பொருளல்ல. அவைகேண்மின்கள். எங்கும் பாலிற் கலந்திருக்கும் நெய்போலும், பூவின்மணம்போலும், எள்ளுநெய்யும்போலும் தங்கிக்கலந்திருக்கின்றபான்மையால் அறிந்துணர்ந்த பெரியோர்களொன்றெனவெண்ணுவார்களாகையால், கங்கையேசர்வதீர்த்தம்

சருவதீர்த்தமென்றொருபெயரெடுத்தான் சருவமாநதிவிண்ணின்
சருவதீர்த்தம்வந்தாடவுமன்னவர் தங்கள்வெம்பிறப்பாய
சருவதீமையைத்தணிப்பவும்பணிமலைத் தடத்துநற்றடமாகிச்
சருவரூபமாய்ச்சருவதன்மங்களாய்த் தழைத்ததன்வடகீழ்பால்.

(இ-ள்.) சர்வதீர்த்தமென்றொருபெயர்விளங்கத்தக்கதாகச்சிவன் கிருபையினாலே சர்வமாநதிகளும், விண்ணுலகத்தில்சர்வதீர்த்தங்களும்வந்து தீர்த்தமாடவும் இந்தமண்டலத்தார்களுடைய வெய்யபிறப்பெனனுஞ் சர்வதீமைகளையுந்தணி



ப்பதாகவுந் திருநாககிரியின் தீர்த்தங்களில் மேன்மையாகிய தீர்த்தமாகிச் சர்வரூபமாய்ச் சர்வபுண்ணியங்களாய்க் கிரியின் வடகீழ்ப்பாரிசத்தில் தழைத்திருக்கின்றது.—எ-று. (௬)

சகலதீர்த்தமீசாடியபலனைகிற் றருகலால் நவதீர்த்தம்
பகவிடங்கமக் கெனத்தினம் புகுதலால் சகலபாதகதீமை
புகவினைக்கய மகற்றலாற்பணிமலை புச்சியுத்தரகீழ்பால்
தகுசனைக்குரம்பெரியவர்சருவதீர்த தப்பெயர்பகர்ந்தாரால்.

(இ-ள்) சர்வதீர்த்தங்களிலும் தீர்த்தமாடிய பலனெல்லாம் இந்தச் சர்வதீர்த்தம் கொடுக்கிறபடியால் உலகத்தில் நவதீர்த்தங்களும் புகலிடந் தமக்கிதுவென்று தினம் புகுந்து சேர்வதால் சகல பாதகத்தீமைகளும், வல்வினைக்கூட்டங்களுந் தீர்க்கின்றபடியாலும், நாககிரியுச்சிக்கும், வடகீழ்ப்பாரிசத்தில் விளங்கியிருக்கின்றது பெரியோர்கள் சர்வதீர்த்தமென்னும் பெயர்சொன்னார்கள்.—எ-று. (௭)

மூன்றுபத்துடன் மூன்றுகோடிச்சுரர் முறைமுறைமுதற்றேவ
மான்மதக்குடன் மூன்றுகோடிச்சனை முறைமுறைமுதற்றேவ
ரான்றுகங்கு வர்ச்சனைபிறலக்கனையாவையும் விதித்தார்பின்
றோன்றனிப்பொருட் பணிமலைத்தலத்தினிற் சகலதீர்த்தமுமொன்றாய்த்
தோன்றுறத்தினமமரர்யாவருமதிற் றோய்ந்தான்பணி கூர்ந்தார்.

(இ-ள்) முப்பத்துமூன்றுகோடி தீர்த்தங்களும் முறைமுறையே, முதலாகத் தேவர்கள் இப்பணியைத் தங்கள் தங்கள் அர்ச்சனைவிதியினால் சகல தீர்த்தங்களையும் விதித்தார்கள். பின்பு தனிப்பொருளென்னும் நாககிரிதலத்தில் சகல தீர்த்தங்களுமொன்றாய்த் தோன்றுவதாகியுமம்படிச் செய்தமைத்தார்கள். அதனில் தேவர்கள் யாவரும் தீர்த்தமாடிச் சிவபூசைபணிவிடைகள் செய்து சனி கூர்ந்திருந்தார்கள்.—எ-று. (௮)

மாதவர்க்குழாம் மறையவர்திருக்குழாம் மாநிலநரர்யாரும்
போதமுற்றவண் வந்துநாகத்தனிப் பெருப்பினைவலமாக
வாதரித்துமச்சனையனேகங்களி னுடியபினாகக்
கோதையம்பதிதுலவியசருவதீர்த் தத்தினிற்குளிப்பாரால்.

(இ-ள்) மாதவர்கூட்டங்களும் வேதியர்கூட்டங்களும் மண்டலத்தில் மனிதர்களெல்லாருஞ் சிவஞானபோதமுற் றங்ஙனம் வந்த திருநாககிரியை வலமாகச்சுற்றி அனேக தீர்த்தங்களிலுந் தீர்த்தமாடி நியமஸ்நானஞ்செய்து அன்புடனே அர்ச்சனைகள் அநேக செய்து பின் கோதைபாகர் குலாவிய சர்வதீர்த்தத்தில் குளிப்பார்களாக.—எ-று (௯)

இந்தவந்திரதீர்த்தமதாகிய வெழிற்கலைகனில்மூழ்கி
வந்துவந்தனை முற்றியமைந்தருபுற மனைக்கடாகனை வேற்கைக்
கந்தனைத்துணை நற்பதுமாக்கனைக் கைதொழுதகப்பஞ்செய்து
சிந்தையாலுயர்தென்புலத்தவர்கடன் செய்வதுசெயலென்றார்.

(இ-ள்) அப்படி அழகிய தீர்த்தமாடிச் சர்வதீர்த்தத்தில் யாவரும்வந்து மூழ்கி வந்தனை வழிபாடுசெய்து உமையிடப்பாகம்வலத்த அர்த்தநாரீசுரன் வேல்பிடித்த கைகளையுடைய கந்தசாமி இவர்கள் பாதாரவிந்தங்களைக் கைதொழுது போற்றித் தன்மதானங்கள்செய்து மனோசாமிருந்த தென்புலத்தாரான பிதிர்க்கள் கடனை செய்வது விதிமுறைமையென்று சூதமுனிவர் சொன்னார்.—எ-று. (௧௦)

முடிப்பட்டது விதிமுறைமையென்று சூதமுனிவர் திடத்தினிலினைந்தாடி
இப்பெருந்தடத்தீர்த்தமூழ்கிருக்கையர் மிடத்தினில்தினைந்தாடி
வெப்பெருப்புனலேலுமப்பலந்தினை வெளிதுனிற்றருமென்று

னுமே யவற்றையெல்லாம் வரிசைவரிசையாக மூழ்கினபின்பு சருவதீர்த்தத்தில் மூழ்கினவர்கள் கொலைபாதகங்களெல்லாந்தீர்ந்து லட்சஞ்சென்மங்களிலும் பெருமைபெற்றோங்கி வெவ்விய துயரங்களெல்லாம் நிவாரணமாகிச் சிவன்பாதத்திற் சேர்ந்து வாழ்ந்திருப்பதற்கு மிகவும் உரியவர்களாவார்கள்.—எ-று. (௨)

என்றுரைத்தபின்சூதனைமாதவ ரியாவரு மவனைநோக்கித்
தன்றுணைப்புனற்சர்வதீர்த்தத்தினிற் றகைமையைவிரித்தோதென
ஞென்றுரைத்தனர்சவுனகர்கேட்டியென் றெண்மறைத்துறைச்சூதர்
குன்றிடாவகைகூறினர்யானது கூறுவன்சிலகேண்மோ.

(இ-ள்.) என்றிப்படிச் சூதமுனிவர் சொல்லக்கேட்ட மாதவரான முனிவர்கள் அனைவோரும் குளிர்ந்த புனலுடைய சர்வதீர்த்தத்தின் தகைமையை விரித்துச் சொல்லுமையாவென்று கேட்க அப்படியே சவுனகாதி முனிவர்களே கேண்மின்களென்று வேதநெறி முறைமையுடைய சூதமுனிவர் குன்றுதலில்லாமற் சொல்லியருளினர். அப்படியே உலகத்தார் கேட்கும்படியாகச் சொல்லும் புராணங்கள்.—எ-று. (௩)

கவுரிபங்கினன்கனிந்துறைபசலமே கவுரிபங்கினனேனும்
புவுரிவண்புனற்சர்வதீர்த்தந்திருப் பச்சைமால்வடிவென்று
மிவுரைதன்னிலோர் பேதமற்றெண்ணுவார்க் கிகபரமிரண்டெய்தி
யவுரியாடையன் றிடகவாடைய னருட்பதத்தடைவாரால்.

(இ-ள்.) உமையொருபாக ரெழுந்தருளிய, கிரியே! உமையொருபாகனென்றுஞ் சர்வதோஷங்களைத் தீர்க்கின்ற, வள்ளிய புனலுடைய சர்வதீர்த்தம் மேலேகனை திருமால்வடிவென்றுஞ் சொல்லியவேத வாக்கியங்களைப் பேதகமில்லாத மனத்தையுடையவர்களுக்கெல்லாம் இகபரசாதக பலன்பெற்று வாழ்ந்து, பின்பு புலியுரியாடையனான சிவன்பதமும், பொன்னுடையவனான விஷ்ணுபதமும் அநுக்கிரகப்படி சேர்வார்கள்.—எ-று. (௪)

கெங்கையச்சுதன்வடிவுதன்கெங்கையே சென்மாமுடிக்காந்தை
சங்குசக்கரன்சங்கரனெனவிரு தகையலவதுகேண்மி
னெங்குமாலுறைநெய்யெனபூமரு வெனத்திலநெய்போலத்
தங்குபாங்கரின்றொன்றெனுங்கங்கையைச் சர்வதீர்த்தமதாகும்.

(இ-ள்.) கெங்காநதியே! விஷ்ணுவடிவமாகும். அதனலர்ந்த கெங்கையொருபொருளான பரமேசுரன் றிருமுடியில் பெண்ணுருவமாக அமர்ந்து சங்குசக்கரபாணியென்றும், சங்கரனென்றும் இரண்டு தகைமைப்பொருளல்ல. அவைகேண்மின்கள். யெங்கும் பாலிற் கலந்திருக்கும் நெய்போலும், பூவின்மணம்போலும், எள்ளுமெண்ணெயும்போலும் தங்கிக்கலந்திருக்கின்றபான்மையால் அறிந்துணர்ந்த பெரியோர்களொன்றெனவெண்ணுவார்கள் ஆகையால், கங்கையேசர்வதீர்த்தம்

சருவதீர்த்தமென்றொருபெயரெடுத்தான் சருவமாநதிவிண்ணின்
சருவதீர்த்தம்வந்தாடவுமன்னவர் தங்கள்வெம்பிறப்பாய
சருவதீமையைத்தணிப்பவும்பணிமலைத் தடத்தூற்றடமாகிச்
சருவரூபமாய்ச்சருவதன்மங்களாய்த் தழைத்ததன்வடகீழ்பால்.

(இ-ள்.) சர்வதீர்த்தமென்றொருபெயர்விளங்கத்தக்கதாகச்சிவன் கிருபையினாலே சர்வமாநதிகளும், விண்ணுலகத்தில் சர்வதீர்த்தங்களும்வந்து தீர்த்தமாடவும் இந்தமண்டலத்தார்களுடைய வெய்யபிறப்பெனுஞ் சர்வதீமைகளையுந்தணி



ப்பதாகவுந் திருநாககிரியின் தீர்த்தங்களில் மேன்மையாகிய தீர்த்தமாகிச் சர்வரூபமாய்ச் சர்வபுண்ணியங்களாய்க் கிரியின் வடகீழ்ப்பாரிசத்தில் தழைத்திருக்கின்றது.—எ-று. (௬)

சகலதீர்த்தங்கீசாடிபடியனைத்திற் றருகலால் நவதீர்த்தம்
பகலிடந்தமக்கெனத்தினம் புகுதலால் சகலபாதகதீமை
யகவினைத்தய மகற்றலாற்பணிமலை யுச்சியுத்தரகீழ்பால்
தகுசுனைக்குநம்பெரியவர்சருவதீர்த தப்பெயர்பகர்ந்தாரால்.

(இ-ள்) சர்வதீர்த்தங்களிலும் தீர்த்தமாடிய பலனெல்லாம் இந்தச் சர்வதீர்த்தம் கொடுக்கிறபடியால் உலகத்தில் நவதீர்த்தங்களும் புகலிடந் தமக்கிதுவென்று தினம் புகுந்து தோய்வதால் சகல பாதகத்தீமைகளும், ஊழ்வினைத்துயரங்களுந் தீர்க்கின்றபடியாலும், நாககிரியுச்சிக்கும், வடகீழ்ப்பாரிசத்தில் விளங்கியிருக்குஞ் சுனைக்கும் நமது பெரியோர்கள் சர்வதீர்த்தமென்னும் பெயர்சொன்னார்கள்.—எ-று. (௭)

மூன்றுபத்துடன் மூன்றுகோடிச்சுனை முறைமுறைமுதற்றேவ
ரான்றுதங்கவர்ச்சனைபுரிலச்சுனையாவையும் விதித்தார்பின்
மோன்றுகங்கவர்ச்சனைபுரிலச்சுனையாவையும் விதித்தார்பின்
றுன்றனிப்பொருட் பணிமலைத்தலத்தினிற சகலதீர்த்தமுமொன்றுப்
தோன்றுறத்தினைமாரியாவரு மதிற் றோய்ந்தரன்பணி கூர்ந்தார்.

(இ-ள்) முப்பத்துமூன்றுகோடி தீர்த்தங்களும் முறைமுறையே, முதலாகத் தேவர்கள் இயற்கையாய்த் தங்கள் தங்கள் அர்ச்சனைவிதியினால் சகல தீர்த்தங்களையும் விதித்தார்கள். பின்பு தானொருதனிப்பொருளென்னும் நாககிரிதலத்தில் சகல தீர்த்தங்களுமொன்றாய்த் தோன்றுவதாகியுமம்படிச் செய்தமைத்தார்கள். அதனில் தேவர்கள் யாவரும் தீர்த்தமாடிச் சிவபூஜைபணிவிடைகள் செய்து களிகூர்ந்திருந்தார்கள்.—எ-று. (௮)

மாதவர்க்குழாம் மறையவர்திருக் குழாம் மாநிலநரர்யாரும்
போதகமூற்றவண் வந்தநாகத்தனிப் பொருப்பினைவலமாக
வாதரித்துமச்சுனையனந்தங்களி னுடியபிரானகக்
கோதையம்பதிதலவியசருவதீர்த தத்தினிற்குளிப்பாரால்.

(இ-ள்) மாதவர்கூட்டங்களும் வேதியர்கூட்டங்களும் மண்டலத்தில் மனிதர்களனைவருஞ் சிவஞானபோதமுற் றங்ஙனம் வந்து திருநாககிரியை வலமாகச்சுற்றி நமஸ்கரித்து அன்புடனே அந்தச்சுனைகள் அநேக தீர்த்தங்களிலுந் தீர்த்தமாடியபின் கோதைநகர் குலாவிய சர்வதீர்த்தத்தில் குளிப்பார்களாக.—எ-று. (௯)

இந்தவந்திரதீர்த்தமசாகிப வெழிற்சுனைகளின்மூழ்கி
வந்துவந்தனை முற்றிமாதொருபுற மணந்தபாகனை நோற்கைக்
கந்தனைத்துணை காற்பதுமாந்தனைக் கைதொழுதவஞ்செய்து
சிந்தையாலுயர்தென்புலத்தவர்கடன் செய்வதுசெயலென்றார்.

(இ-ள்) அப்படி அழகிய தீர்த்தமாடிச் சர்வதீர்த்தத்தில் யாவரும்வந்து மூழ்கி வந்தனை வழிபாடுசெய்து உமையிடப்பாகங்கலந்த அர்த்தநாரீசுரன் வேல்பிடித்த கைகளையுடைய கந்தசாமி இவர்கள் பாதாரவிந்தங்களைக் கைதொழுது போற்றித் தன்மதானங்கள்செய்து மனோசாமிகுந்த தென்புலத்தாரான பிதிர்க்கள் கடன் செய்வதுசெயலென்று சூதமுனிவர் சொன்னார்.—எ-று. (௧௦)

முடிப்பட்டது விதிமுறைமையென்று சூதமுனிவர் திடத்தினில்நினைந்தாடி
இப்பெருந்தடத்தீர்த்தமூழ்கிருந்தகார் மிடத்தினில்நினைந்தாடி
வெப்பெருப்புனலேலுமப்பலத்தினை யெளிதினிற்றருமென்று

மெய்ப்பெறுந்துயரொழிப்பனவென்றுபல் வியவெனப் புகரென்று
மொட்பிலாமறைச்சூதரன்றேதினை யுரைப்பதற்கெளிதன்றே.

(இ-ள்) இப்படிப் பெருமையான சர்வதீர்த்தத்தை யாதாமொருவர் தாங்களுற்றிருக்குந் தலங்களிலுண்டாகியிருந்த ஜலங்களிலெல்லாவற்றிலும் அதுவே சர்வதீர்த்தமென்று நினைத்துத் தீர்த்தமாடினார்களாகில், அந்தப்பலன்களை எளிதிற்கொடுக்குமென்றும் அவர்களுடம்பில் பெரிய வினைத்துயரங்கள் தீருமென்றுஞ், சிவனுக்கன்புடையவர்களென்றுந் தமக்கொப்பில்லாத வேதியரான சூதமுனிவராதியர் சொன்னார். அதன்மகிமையைச் சொல்லுதற்கெளிதல்ல.—எ-று.

தீண்டினார்பலன்செங்கையுட்கொண்டோர் செய்பலனதன்மூழ்கி
மீண்டினார்பலனதனிடைப்புண்ணிய மியற்றினார்பலன்யாவு
மீண்டினுமனத்தெண்ணிடுமெனவுரைத் திடவொணாதனபாரம்
சேண்டருர்பிறைச் சென்னியலாலொரு தெய்வமேயறியாரால்.

(இ-ள்) அந்தச் சர்வதீர்த்தத்தைப்பரிசித்தவர்கள்பலனுஞ், செவ்விய கைகளிலெடுத்து உட்கொண்டவர்கள்பலனும், அதில் தீர்த்தமாடவென்று வந்துசேர்ந்தவர்கள்பலனும், மூழ்கினவர்கள்பலனும் அங்ஙனந் தர்மதானாதிகள் செய்தவர்கள் பலனும் இவையாவும் இவ்வளவென்று நமது மனதில் எண்ணிச் சொல்லவொண்ணாது. அதனைப் பெருமையை, யோங்கிய விளம்பிறையைத்தரித்த முடியழகிய பரமேசுரன்பாதமேயறிய வேறொரு தேவர்களும் அறியார்கள்—எ-று. (௰௨)

சருவதீர்த்தச் சருக்கம் முற்றும்.

ஆக சருக்கம் ௩அ-க்கு திருவிருத்தம் ௪000.

# தீர்த்தநிலைச் சருக்கம்.

இந்திரன்றிரு தீர்த்தமிந் திரன்றிசை யிந்திரன்றிசைகாட்டு
முந்துபாவகன் றீர்த்தமக்கினித்திசை யுறுவினைபல தீய்க்குஞ்
சிந்தைகூர்யம தீர்த்தமத் திசைகனத் தாயுவின் சிறப்பாக்கும்
பந்தமானிரு திச்சுனையத்திசை பகைத்தவர்பகைமாற்றும்.

(இ-ள்) கிழக்குத்திசையி லிந்திரதீர்த்தமிருக்கும், அதில் மூழ்கின லிந்திரபோக பலனுண்டாம். தென்கிழக்குத்திக்கில் அக்கினிதீர்த்தமிருக்கும், அதில் மூழ்கினால் பல பல வினைகளையுந் தீர்க்கும். தெற்குத்திசையில் யமன்தீர்த்தமிருக்கும், அதில்மூழ்கினவர்களுக்குச் சிறப்பாகிய ஆயுசுவிர்த்திக்கும். தென்மேற்குத்திக்கில் நிருதி தீர்த்தமிருக்கும், அதில் மூழ்கினால் பகைத்துக்கொண்டவர் பகையைமாற்றிவிக்கும்.—எ-று. (௧)

வருணதீர்த்தமத் திசையெலாம் வான்மழைபொழிவாக்கும்
விரவுவாயுவின் றீர்த்தமப்படி யிறந்தவர்க்குயிர்காட்டுங்
குரவர்சூழ்வட குபேரதீர்த்தந்தனக் குலைவதவடகீழ்பால்
சுரர்வணங்கு மீசானதீர்த்தம்பல பலநலந்தருமேலோய்.

(இ-ள்) மேற்குதிசையில் வருணதீர்த்தமிருக்கும், அதில்மூழ்கினால் அவர்களிருக்கின்ற திசைகளெல்லாம் நல்லமழைவளஞ்சுரக்கும், வடமேற்குத்திக்கில் வாயு



வுதீர்த்தமிருக்கும் அதில்மூழ்கினால் இறந்தவர்களுக் குயிர்கொடுக்கும், வடக்குத்திசையில் குபேரதீர்த்தமிருக்கும் அதில்மூழ்கினால் அவர்களுக்குத் திரவியக்குவியலுண்டாகும். வடகிழக்குத்திக்கில் ஈசானதீர்த்தமிருக்கும், அதில்மூழ்கினால்பல நன்மையுந்தரும் முனிவர்களேயென்று சூதமுனிவர் சொன்னார்.—எ-று. (௨)

பொருவில் சூரியன்றருசுனைச் சூரிய புட்கரணித்தீர்த்தம்
வெருவுவெம்பிணி குட்டமென் பனவெலாம் விடவருடருஞ்சோமன்
றருஞ்சுனைச் சந்திரபுட்கர ணிப்பெயர்த்தனைப்பூணுட
பருகுமோரமுதந்தருஞ் சுரப்விடப் பாறவேகியதாமால்.

(இ-ள்) ஒப்பில்லாத சூரியனுண்டாக்கினசுனை சூரியபுட்கரணி தீர்த்தமென்றும் பெயராய் விளங்கியிருக்கும். அதில்மூழ்கியவர்களுக்குப் பயங்கரமானவெவ்விய பிணி பீடை குட்டமுதலாகிய சகலரோகங்களுந்தீரும். சந்திரனுண்டாக்கிய சுனை சந்திரபட்கரணி தீர்த்தமென்றும் பெயராய் விளங்கியிருக்கும். அதில் மூழ்கினவர்களுக்கு அமுதபானஞ்செய்ததுபோலுயர் கொடிதாகிய சுரங்களும் விஷபங்களும், விட்டோடிப்போகும்—எ-று. (௩)

பற்றதீர்த்தமப்பங்கயத்திருவிடாப் பதிமகிபுனைவோனைக்
கற்பினானி தன்னைத்தினங்கைதொழுங் கனிவுறத்தவஞ்செய்யும்
பொறபுநீர் புகுந்தாடினார் நினைத்தன புரக்குமாவநள்பூட்டுங்
தற்பெருந்தலை முறையெலாந்தனக்குலை மனக்கவைபறச்சேர்வார்.

(இ-ள்) பதுமதீர்த்தமென்றொருதீர்த்தம் அது பங்கயத்திருவாகிய லட்சுமிதேவி கிருபையாலுண்டாக்கியது. அந்த லட்சுமியானவள் பரமேசுரனையும், உமாதேவியையும், தினந்தினங் கனிவுடனே தொழுதுவணங்கித்தவஞ்செய்திருக்கின்றாள். அழகிய லட்சுமிதீர்த்தத்தில் மூழ்கினவர்கள் நினைத்தகாரியங்கூடிவரக் கருணைசெய்து ரட்சிக்கும், விஷ்ணுகடாக்ஷம் பெறுவார்கள் அவர்கள் தலைமுறையெல்லாந் தனக்குலிதலுண்டாகச் சற்றுஞ் சிந்தையில்லாமல் வாழ்வார்கள்.-எ-று. (௪)

சத்தகன்னியர் தருந்திருத்தீர்த்தமா சத்தியுந்தவப்பேறு
மெத்தவசிய முந் தருமெழுமுனிவரர் விரவியபெயர்தீர்த்த
முத்தியோகமோடாகமமுறையும வேதாந்த சித்தியுமாக்குஞ்
சித்தருமஞ் சக்கருடித்தடந் தீர்த்தமென்றுரைசாற்றும்.

(இ-ள்) சத்தகன்னிகளுண்டாகிய திருத்தீர்த்தம், பிரசித்தியாய் விளங்கியிருக்கும். அதில் மூழ்கினால் அநேக சத்துவமுந் தபோபலனும். வசியங்களுமெளிதிலுண்டாகும். எழுமுனிவர்கள் செய்ததீர்த்தம் பிரசித்தியாய் விளங்கியிருக்கும். அதில். மூழ்கினால் வேதாகமமுறை தெரிகின்றவறிவும், வேதாந்தசித்தியும், யோகசித்தியும் முத்தியுங்கொடுக்கும். அதற்குப்பெயர் சித்திகளையுடைய சத்தவிருடியர் தீர்த்தமென்று மேனூல்கள் சொல்லும்.—எ-று. (௫)

இராமதீர்த்தமென் றொருதிருத்தீர்த்தம தெண்ணினிபதஞ்சேர்க்கும்
பராவிலன்றுதாரகப்பிரமந்தன்னைப் பபக்குமப்பதிக்கூட்டு
மிராவணப்பகை தடிந்துசானகியுடனிராமனுதனைத்தாபித்
தராமலேப்பர மனைப்பணிந் தன்றுகண்டருளிய சுனையாமல்.

(இ-ள்) இராமதீர்த்தமென்றொரு திருத்தீர்த்தம். அதுவந்த வரலாறு யாதெனில், இராவணனைச் சங்கரித்து இராமர் சீதாதேவியுடன்வந்து சேதுவிலிராமலிங்கத்தைத்தாபித்துப் பூஜைசெய்து பின்பு திருநாககிரியில்வந்து நாகேசுரனைக்

கண்டு பணிந்து தோத்திரஞ்செய்து உண்டாக்கியதீர்த்தம், அதில்மூழ்கினல் அவர்களுக்குத் தாரகப்பிரமபோதகமுஞ் சிவலோகப்பலனுஞ் சிவசாயுச்சியமும்பெற்று வாழ்வார்கள்.—எ-று. (௬)

மயேந்திரச்சுனை பொன்றுளவதுமயங் மலைப்புயவிலங்கேசன்
வியந்தகப்பதி யனுமர் தீயிலைக்ததை வியல்பற வழித்ததைக்காக்க
நயந்துவைத்தொரு கணத்திலொன் றன்னது நன்கியற்றுதற்காகிப்
பயந்துவந்து செங்கோடனைப்பணிந்தநாட் பயந்தகனைச்சுனை தீர்த்தம்.

(இ-ள்) மயேந்திர தீர்த்தமென் றொருதீர்த்தம் பிரசித்தியாய் விளங்கியிருக்கும் மலைபோலும் புயங்களையுடைய இராவணனிருந்த இலங்காபுரிமுழுதும் அனுமார் தீசுட்டு அழிந்தநகரத்தை நயப்பாக நிலைப்பதுவும், வசனத்திலுனும் முன்போல ஒரு நொடிப்பொழுதில் அழகுபெற உண்டாகும்பொருட்டு, மயனென்பவன் மிகுந்தவன்புடனே செங்கோட்டீசுரனைக்கண்டு தெரிசித்து வணங்கி சுவாமிகிருபையினலே சிருஷ்டிக்குஞ் சத்தியெல்லாம் பெற்றுக்கொண்டநாளில் உண்டாக்கியது குளிர்ந்த சுனைதீர்த்தம்.—எ-று. (௭)

அம்மயேந்திரச்சுனைபடி பவர்நினைக்கன முடித்தருளக்கும்
விம்முசித்திர விசித்திரத்தொழில்பல விளைந்திடு மதற்கப்பாற்
செம்மலாயசாம்புவச்சுனை யதிற்சில வெண்கினந்தினமேழ்ந்து
மம்மனுளமுமுழுகினர் மறையும்போ ராண்மை யுறுகருணைதாய்ந்தால்.

(இ-ள்) மயேந்திர தீர்த்தச்சுனையில்படிந்து மூழ்கினவர்களுக்கு நினைத்தவெல்லாம் கைகூடிவரும். சகல சித்தியும்பலிக்கும். விசித்திரத்தொழில்களெல்லாம் தற்செயலாயுண்டாகி விர்த்திக்கும். அதற்கப்புறம் அறிவையுடைய சாம்பவன் செய் தீர்த்தம், சம்பவதீர்த்தமென்றபெயராய் விளங்கியிருக்கும். அதிற்சில காடியினங்கள் தினந்தினம் வந்துமுழுகும். அந்தச்சுனையில் மூழ்கினவர்களுக்கு ஆண்மைப்பெருமை அதிசயமான வேதாந்த மெஞ்ஞானவறிவுண்டாய்ப் பேரின்பமுத்தியுங்கிடைக்கும்.—எ-று. (௮)

தீர்த்தவன்னிலை செப்புவர் மால்சுனைச் சிவாலயக் குடக்கம்மேற்
கார்த்தடங்கயத் தீர்த்தமவ்விடைவரு ணன்சுனையதன்மேல்பா
லேர்த்தசத்தகன்னியர் சுனைசந்திர புட்கரணியு மேல்பாற்
றூர்த்தடம் புனலிதன் குடவகற்குள சத்தமாரிஷித் தீர்த்தம்.

(இ-ள்) இனிஇவ்வாறு மகிமைவிளங்கித் தீர்த்தங்களிலிருக்கும் நிலைகளைச் சொல்லுகிறோம். சிவன் சன்னதிக்கு மேற்குப்புறத்திலிருப்பது விஷ்ணுதீர்த்தம். அதற்கு மேற்காகவிருப்பது செங்கமலத்தீர்த்தம். அதற்கு மேற்பக்கத்திலிருப்பது வருணதீர்த்தம். அதற்கு மேற்பாரிசத்திலிருப்பது சத்தகன்னியர்தீர்த்தம். அதற்கு மேற்பாகத்திலிருப்பது சத்தமஹாரிஷிதீர்த்தம்.—எ-று (௯)

ஆதிகோயிலின் கிழக்கு நாகச்சுனை யதன்கிழக்கறுதீர்த்த
மீதுவாணதீர்த்தங்குமரன்சுனை விசாலைப்புறங்கீழ்பா
லோதமிச்சுனைக் கோர்கணைத்தூர மாதவன்றரு சூரியர்தீர்த்தங்
காதலீரிதன் றென்கிழக்காகுங் காளிதந்தருமுதீர்த்தம்.

(இ-ள்) ஆதிமூர்த்தியாக சுவாமி சந்நிதிக்குக்கிழக்கு திசையில் நாகதீர்த்தம் அதற்குக் கிழக்காகவிருப்பது சண்முகதீர்த்தம் (ஆறுமுகனை அதன்மேல் வா



தீர்த்தம். அதற்குங் கிழக்கே சிலதூரத்திலிருப்பது குமாரதீர்த்தம். அதற்குக் கிழக்கே ஒரு அம்பிடுதூரத்திலிருப்பது சூரியபுட்பகரணிதீர்த்தம். அதற்குத் தென்கிழக்காகவிருப்பது காளிதீர்த்தம்.—எ-று. (௰)

அதற்குமோர்கணைத் தூரமக்கினிச்சுனை வடக்கயனருமர்த்த
மிதற்கரன்றிருச் சுற்றுளாமிதன்வடக் கிந்திரன் சுனைத்தீர்த்தம்
மதித்த கீழ்மயேந் திரமதன்கீழிக் கசாம் புவச்சுனையதன்கீழா
யிதத்தனக்குப்போன் சுனைவட கிழக்கெய்து மைங்கரன்தீர்த்தம்.

(இ-ள்) அந்தக்காளிதீர்த்தத்திற்குந் தென்கிழக்காக ஓரம்பிடுதூரத்திலிருப்பது அக்கினிதீர்த்தம். அதிற்க சிவன் கோவிலுக்கு வடக்குப்புறந் திருமதிற் சுற்றுக்குள்ளாகவிருப்பது பிரமதீர்த்தம் அதற்கு வடக்காகவிருப்பது இந்திரதீர்த்தம். அதற்குங்கீழாகவிருப்பது மயேந்திரதீர்த்தம். அதற்குங்கீழாகவிருப்பது சாம்புவதீர்த்தம். அதற்குங்கீழாகவிருப்பது குபேரதீர்த்தம். அவைநிற்க சுவாமிகோவிலுக்கு வடகிழக்குப்புறத்திலிருப்பது கணபதி தீர்த்தம்.—எ-று. (௧௧)

அன்னதீர்த்தத்தி னடுக்கம்பாந்தி யதற்கபலினிற்பவநாச
மன்னிதன்கிழக் கிற்சிவதீர்த்தமிவ் வாயுனற்கிழக்காகத்
தன்னலந்தரு சருவதீர்த்தமுந்தன்ம தீர்த்தமுமதன்றற்கீ
ழென்னுமிங்கிதன் கீழ்வயிரவச்சுனை யெனுங்கனதிருத்தீர்த்தம்.

(இ-ள்) அந்தக்கணபதிதீர்த்தத்துக்குப் பக்கமாகவிருப்பது அம்பாநதித்தீர்த்தம் அதற்குக்கிழக்குப் பக்கமாகமாகவிருப்பது சிவதீர்த்தம். அதற்குக்கிழக்காகவிருப்பது தன்மதீர்த்தம். அதற்குங்கீழாகவிருப்பது சருவதீர்த்தம். அதற்குக்கீழாகவிருப்பது வயிரவ தீர்த்தம்.—எ-று. (௧௨)

வடகிழக்கினி னடிமலையதிலொரு நிரைதரு மலர்தீர்த்தம்
நடவுகங்கையும் யமுனையுஞ் சரஸ்வதி நதியுமங் கவண்மோன்று
மிடமிதற்குமே லீசன்வாவிப்புன லிதற்மேகா ரம்பிடுதூரங்
கடவுள் பாற்சுனை யதன்குடக் காவருள் காமதேனுவின் றீர்த்தம்.

(இ-ள்) திருக்கோவிலுக்கு வடகிழக்குப்புறம் அடிமலையில் ஒரொழுங்காக விளங்கிநிறைநிறையாயிருப்பது கங்கை, யமுனை, சரஸ்வதியென்று மூன்றுதீர்த்தம். அதற்கு மேலிருப்பது ஈசானதீர்த்தம். அதற்குங் கிழக்கே ஒரு அம்பிடுதூரத்திலிருப்பது பாற்சுனைத்தீர்த்தம். ஈசானதீர்த்தத்துக்கு மேற்பாரிசத்திலிருப்பது தெய்வப்பசுவதலிய காமதேனுதீர்த்தம்.—எ-று. (௧௩)

தீர்த்தநிலைச் சருக்கம் முற்றும்.

ஆக சருக்கம் ௧௩-க்கு திருவிருத்தம் ௧௦௧௩.

## சிங்கவன்மர் சருக்கம்.

வேதவியாசர் விளம்பின வெல்லாஞ்
சூதர் பகர்ந்தனர் துறவினருட்கொண்
டூதுவிடக்கது யினிதிலே முனிவோர்
நாதபிழைத்தன மெனவுரை நவில்வார்.

(இ-ள்) முற்காலத்தில் வேதவியாசர்சொன்ன புராண கதையளைத்தும் சொன்னவற்றையெல்லாம் முனிவர்கள் முறைமையாகச் சூதமுனிவர்சொன்னர்.

சேட்டு உள்ளத்தில் மகிழ்ச்சிகொண்டு பத்தியாக இதைவிட இனிதான கதிவே றில்லை சுவாமி! முனிவரே நாங்களனைவரு முய்ந்தோ முய்ந்தோமென்றசொல் லிப் பின்னையுஞ் சொல்லுகிறார். (க)

கணபணிவரையே காந்த பிருப்பே
ரணிதருவிழவு மணிநகர்வைபோர்
பணிருவ மிவையிவை பகருதியெனவே
மணிபுனைசூதர் வகுத்துரை செய்வார்.

(இ-ள்) அந்தத் திருநாக கிரித்தலத்தில் ஏகாந்தமாக எழுந்தருளியிருக்கின்ற சிவனது திருவிழா அலங்காரமும், அழகிய நகரலங்காரமும், அந்நகரில் வசிப்போர் செயலும், அனைத்தும் கைதொழத்தக்கதாகச் சொல்லுமையாவென்று முனிவர் கள்கேட்க? அக்குமணி வடம்புனைந்த திருமேனியழகிய சூதமுனிவர் வகுத்துச் சொல்லுகிறார் —எ-று. (உ)

வடநிலை யரசர் வயங்கு மணச்சீர்
நடவியரேவை யெனத்திகழ் நதியின்
புடைசெறி மணியொளிர் பொன்னகரன்ன
திடநகரெனவோர் செயங்கல முளதால்.

(இ-ள்) வடதேசத்தரசர்கள் மங்களகரமாக அரசாட்சி செய்யும்படியான அழகிய நகரங்களில் உசிதமாகித் திகழ்ந்து விளங்கிய, ரேவைநதி புடைசூழ்ந்து செறிந்த பிரபைவீசிய இரத்தின தீபிகைநிறைந்த பொன்னகர்க்குச் சமானமா னது திடம்பொருந்திய செயங்கல நகரமென்றொரு நகரம் விளங்கியிருக்கின்றது.

அன்னசர் வடநகரென்னக ரெனவாம்
பொன்னகரெனவும் புனைமதிப்பாம்
நன்னகர் வணிகர் குபேரனில் நவில்வர்
மன்னர் புரந்தர ரெனும்வளமையினார்.

(இ-ள்) அந்தச் செயங்கல நகரமானது குபேரனிருக்கின்ற அளகாபுரிதா னே! பொன்னகராகிய இந்திரபுரிதானே என்றிந்தப் பூமண்டலத்தவர்களால் மதிக்கப்படாததாய் விசித்திரமாக இருக்கின்றது. அந்நகரத்தில் மன்னவர்களெ லாம் இந்திரபோக வளமையுடைத்தானவர்கள். வைசியர்களெல்லாந் தனசம்பத்தில் குபேரனிலும் மேன்மையாக வாழ்ந்திருப்பார்கள்.—எ—று. (ச)

கயிலையு மேருவு மக்கடி நகரி
லியலுளவெள்ளியு மேமுநிறைவாம்
புயலுளதிங்களின் மும்மழை பொழியு
மியலுறும வடகலை தென்கலையெல்லாம்.

(இ-ள்) அந்நகரத்தில் கைலையங்கிரியும் மேருகிரியும், அங்ஙனம் வந்திருப் பதுபோல வெங்கும் வெள்ளியும், பொன்னும் நிறைந்து குவிந்திருக்கும். மேகங் கள் மாதம் மூன்று மழைபொழியும் வடகலை, தென்கலை முதலான பலபாஷைக ளும் இயல்பாக விளங்காநிற்கும்.—எ-று. (௫)

நாடக மாடவ ரங்கனடிப்பப்
பாடகபாதம ரம்பையர் படர்வார்



சூடக வங்கையர் சுருதி யிசைப்பார்
நீடகர் விஞ்சையர் நெஞ்ச நெகிழ்ப்பார்.

(இ-ள்) அந்நகரத்தி லரங்கமண்டபத்திலும் பாடகம்பொருந்திய பாதங்களை யுடைய ரம்பாஸ்திரீகள் அநேக விசித்திரமான கீர்த்தனஞ்செய்வார்கள். சூடகம் பொருந்திய கையழகிய சிலபெண்கள் சித்திரமண்டபங்களில் வாசிக்கும் வீணை யொலிகானங்களைக்கேட்டு விஞ்ஞையர்கள் மனதுருகி மோகிப்பார்கள்.—எ-று. (௬)

வரைபொரு மாட மணித்தல மீதே
தரைபொரு மங்கையர் தம்விளையாட்டா
நிரைபொரு கந்துகம் நீள்மதியைப் போய்
மரைமுக மென்றனர் வடுவென நகுமால்.

(இ-ள்) மலைபோலுமுயர்ந்த மாடமாளிகைமீதில் பூலோக மங்கையர்கள்விளை யாடும் இரத்தினமணிப்பந்துகள் சந்திரமண்டலத்தைத்தாக்கி அங்ஙனம் வருகின் றபூரணச்சந்திரனைப்பார்த்து ஸ்திரீ ஜனங்களுடைய முகத்துக்கு ஒப்பென்று மேலோர்கள் சொல்லுவார்கள். ஆ! ஆ! இதில் களங்கமிருக்குதென்று நகைத்துப் பழிப்பதுபோலும் பிரகாசிக்கும்.—எ-று. (எ)

சித்திரமுத்தொளி சிந்திய பந்து
கைத்தலம் வந்த களின்கதிர் மதியம்
வத்திர மொத்தில வடுவுற வவர்பா
லத்திர முறுகை யடைபென லாமால்.

(இ-ள்) சித்திரமெழுதி யலங்கரித்த மேனிலைகளில் சில பெணகள் விளை யாட்டாக முத்து மணிகளாற்செய்த அழகிய பந்தடிக்கும்போது எகிறி மேலே பட்டு மீண்டுவந்த பந்துகள் அந்தப்பெண்கள் கையில் வந்துசேர்தல், குளிர்ந்த நில வானது கதிருடனேவந்து உங்கள் முகத்துக்கு ஒப்பாகாததால் அதன் களங்கமறும் படியாக அவர்கள் கைச்சேர்ந்து அடைக்கலம் புகுந்ததுபோலும்.—எ-று. (அ)

இரேவைநதிப்புன லின்விளையாட்டின்
பாவையனையக் கன்னிப் பணிமொழியார்
தாவுநதிப்பொரு டனையெதிர் நல்கிப்
பூவவர் தாளிற் போடுவதிரைநீர்.

(இ-ள்) பின்னுஞ் சில பெண்கள் அந்நகரஞ்சூழ்ந்த ரேவைநதிச்சலத்தில் குளித்து விளையாடும்போது ஜலக் கன்னிகையர்கள் நதிப்பொருளை எதிர்வைத்து வணங்குவதுபோலும், பொன்மணிகளையுங் கொண்டுவந்து புட்பங்களையும், விளையாடும் பெண்கள் கால்களிற் போடாநிற்கும் நதி நீர்த்திரையலைகள்.—எ-று

குங்கும சந்தனம் வண்களை முழைந்த
மங்கையர் தங்கள் மணவாளரோடு
பிங்கித மன்பத னிரதியொடேகி
யங்கனை கண்டுத னாண்மை வெறுப்பான்.

(இ-ள்) குங்குமகளபந்தியணிந்த ஸ்திரீ ஜனங்களெல்லாந் தங்கள் தங்கள் பிரா ணநாயகரோடுங் கூடிப்பிரியாமல் சீராடுவார்கள். அவர்களின்கிதமான அழகும் பிரிவில்லாமையுங் கண்டு மன்மதவேள் இரதிதேவியுடனே அங்ஙனஞ்சென்று திகைத்துநின்று தன்னுடைய ஆண்மையை வெறுப்பான்.—எ-று. (௯)

சோலைகள்வானந் தொடநிமிரவை டவின்
காலையு மாலையு மிந்துவுங் காணு
ராலயதீப மு மார மு மணியும
ஞாயிறை விலக்குவ நகரதி னொளியால்.

(இ-ள்) அந்த நகர்சூழ்ந்த கற்பகச்சோலைகள் அண்டத்தையளாவி யுயர்ந் தோங்கிச் செறிந்திருக்கின்றதினாலே நிழல்களாற் காலைப்போதும் மாலைப்போதுஞ் சந்திர சூரியப் பிரபைகளுங் கண்டறியார்கள். தேவாலயங்களில் விளங்கிய தீப வொளிகளும், முத்தாரங்களும், மாணிக்கமணிகளும், பூமியில் சுடர்விளக்கக் கதிர் பிரபை பொருந்தியது.—எ-று. (கக)

ஆரமு பாரமு பாரமு நிறையும்
பாரமும் பாரமுங் கடைகடை காட்டுங்
கோரமுங் கோரமுங் கொற்றவர் மேற
வீரமும் வீரமும வெற்புயங் காட்டும்.

(இ-ள்) அந்நகரத்தில் ஆரமாகிய முத்துமணிகளும், ஆரமாகிய சந்தனக்குறடுகளும், ஆரமாகிய மணிமாலைகளும், எங்கும் நிறைந்திருக்கும். பாரமாகிய துலா நிறைத் தராசுகளும், பாரமாகிய பலபொருள் வியாபாரங்களும், அழகிய அங்காடிக்கடைகளெல்லாவற்றிலும் விளங்கியிருக்கும் கோரமாகிய ஆண்மையுடனே, கோரமாகிய குதிரைகள் மேற்கொண்டு வீதிகள்தோறும் உலாவிவருவார்கள். அரசர் மக்கள்புயங்களில் வீரமாகிய சவுரியமும் வீரமாகிய வெற்றிகளும் விளங்கும்.

இவ்வளமேவு செயங்கை யிறைவன்
துய்வளமேவிய சூரிய குலமன்
கைவளமேவிய காரிணைகொண்டோன்
மைவளமேவிய மால்சிங்கவன்மன்.

(இ-ள்) இப்படி வளமைபொருந்தியபூமியசெயங்கல நகரின்ராஜனானவன் இந்திரபோக வளம்பெற்ற சூரியகுலவுசிதன் பொழிகின்ற மேகம்போலும், பொழியாநின்ற தியாகக் கைகளையுடையவன் நீலமேக வண்ணனான விஷ்ணு மூர்த்தியைப்போலும், அழகுடையவன் சிங்கவன்மராஜன்.—எ-று. (கஉ)

நீதியினாலர சர்நெறி முறையால்
வேதபுராண வியனெறுழில் முறையால்
யாதருமப்பெயர் மிதமக மதனால்
மேதினியிற்பொரு விலன்ற னுடையோன்.

(இ-ள்) நீதியினாலரசாட்சி நெறிமுறைமையாலும், வேதாகமபுராண வித்தியர் கோஷ்டியினாலும், உத்தமசனங்களுக்குத் தானதர்மங்கள் செய்வதினாலும், யாகங்கள், வேள்விகள், நிறைவேறச் செய்வதினாலும், ஆண்மையினாலும் இந்தப் பூமண்டலத்தில் ஒருவருஞ் சமானக்கொப்பில்லாதவன் வீரபராக்கிரமத்தையுடையவன் அந்தச்சிங்கவன்மராஜன்.—எ-று. (கங)

மூவிரு மன்னரில் முன்னவனன்னோன்
காவலினுமியலவ காவலர்தொழிலதல்



மாவருகானக மாளிகைநீண்ட
மேவருமவேட்டையி லேகுத லுற்றான்.

சிங்கவன்மராஜன்
(இ-ள்) ஆறுவகைச் சக்கரவர்த்திகளிலும், முதன்மையான
ஆராஜர்
இந்தப் பூமண்டலத்தைப் பரிபாலனஞ்செய்து ரட்சிப்பது சகலமாகிய
தஷ்டர்கள் தொழின்முறைமையானபடியால் உலகத்தில் புலி, கரடி முதலான
மிருகங்களால் உபத்திரவஞ்சுந்தபடியினாலே சொல்லுதற்கரிய மிருகவேட்டையாடச் சேனை பரிவாரத்துடனே புறப்பட்டுப்போவதற்கு யெத்தனித்தான்.—எ-று.

காழ்புட்டிய காலுடைகொண்டான்
சூழ்முடியம்பொன முவர்த்துகில் வேய்ந்தான்
தாழ்பய பாதுகை சன்னவிசித்தான்
வீழ்மைமீது வியன்படை சேர்த்தான்.

(இ-ள்) வச்சிர கவசந்தரித்துச், சொர்ன்னமுடிசூட்டிச், சிவந்த பட்டாடை தொட்டுடுத்து, ரத்தினக்கச்சைகட்டிக், கால்களில் வீரக்கழல்பூட்டி, மேற்கவசந் தொடுத்து, யுமிழ்ந்தில்லமுடிறுக்கி, யிடையி லுடைவாள்கட்டி, கைகளில் மேலான வில்பிடித்து, முதுகிலம் புறாத்தூணியுங் கட்டினான்.—எ-று. (கரு)

வெளியிடை வேல்வதொ ரிவுளியும் வெங்கான்
றளிபவை யெதிரெதிர் தாண்ட வோர் மாவு
மளியொடுபாங்குற வவையவ வைவே
லொளிதிகழ் படையோ டுயர்ந்தன ஆரவோன்.

(இ-ள்) வெளியிடங்களில் மிருகங்களைச் செயிப்பதாகக் கற்காடு, வேலி, ஆறுகளுந் தாண்டிப்பாய்கின்ற ஒரு குதிரையும் பிரியாமல் பக்கத்தில் சூழ்ந்துவர நீலவர்ண்ணக்குதிரை மேற்கொண்டு வெற்றிமாலைசூடி மின்னப்பட்ட கூரியவேல் கையிலேந்தி ஓங்கிய சிங்கவன்மராஜன் அலங்கிரதமாகப் புறப்பட்டான். எ-று.

கண்ணியும் வலையு மெடுக்கக் கடாவுந்
திண்ணிய கரியுடல் வேடுவர் திரளு
மெண்ணில வெண்ணில வீசனை யெண்ணார்
விண்ணிடை யடர்நமன் விளைவினெழுந்தார்.

(இ-ள்) கண்ணிகளும், வலைகளும் சுமந்துகொண்டு வரப்பட்ட எருமைக்கடாக்களும், திண்மையாக உயர்ந்தோங்கிய யானைகளும், வேட்டைக்காராகிய அனந்தம் வேடர், வேட்டுவர் கூட்டங்களும் இவ்வளவென்றெண்ணுதற்கரிதாகிய காலாட்படைகளும் எதிர்த்து போர்செய் வீராதிவீரர்களும், பலஆயுதங்களெடுத்த வெற்றிக்கொடிகள் ஆகாசம்நெருங்கி அடர்ந்துவந்த ஈசுரனையும் எண்ணாதவர்களாய் வெளியாகப் புறப்பட்டார்கள்.—எ-று. திவரப்பட்ட எமக்கூட்டங்கள்போலும்,

வேலம்பொடுபிறை வாய்விசிகத்தோ
டாலம்பொதிவெறு மரவம் புறனோர்
கோலுங்குந்தங் குறியகதைக்கப்
பாலங்கொண்டவர் பலரொடு சென்றான்.

(இ-ன்) மூவிலைவேல்களும், வில்லம்புகளும், பிறைபோன்ற சிறுக்கம்புகளும், விஷம்பூசிய பட்டாக்கத்திகளும், கேரிசங்களும், ஈட்டிகளும், குறுந்தடிகளும், வளைதடி சக்கரங்களும், கவண்களும், பிண்டிபாலங்களும் கைக்கொண்டு

அணியணியாய் வரப்பட்ட பதாதிகளுடனே மிருகங்கள் சஞ்சரிக்கின்ற கானகங்களில் வேட்டை செயற்குச் சென்றான் சிங்கவன்மன்.—எ-று. (௧௯)

அடவியில் விலைமிருகங் களடர்ந்த
கடனிலை யினையடு மைகள் வகுத்தான்
தடவினை மிருக மடப்பலசாய்த்தான்
படையிலே சேனையர் யாறு சென்றான்.

(இ-ள்) கானகத்திற்புகுந்து துஷ்டமிருகங்கள் வெளிப்படும்படி பதாதிகளைக்கொண்டு காட்டைக் கலைத்துவிடச்செய்து கடல்சூழ்ந்த உலகத்தனிடத்தில் சேனைகளை யணிவகுத்து அங்கங்கே கட்டாகநிறுத்தி வலைகள்கட்டி வில்லம்புமுதலான பல ஆயுதங்களாலும், அடர்ந்து வரப்பட்ட மிருகங்களைச் சங்கரித்தான். அந்தவேளையில் வடதிசைத் தேசாதிபதியான சிங்கவன்மராஜன் அங்ஙனம் யாவருக்குஞ் சிக்காமல் தப்பித்து விரைந்தோடுகின்ற ஒரு மானைத்தொடர்ந்து சென்றான்.—எ-று. (௨௦)

மானையம்மானினி மேலறி மறித்தான்
கானகமுறு கடாங்கு டுகைத்தான்
சேனைக ளேனையர் வேட்டை செயிர்த்தா
ரேன மொன்றெதிர்ச்சிங்க வன்ம னெதிர்த்தான்.

(இ-ள்) கோரமாகிய குதிரை மேலேறிச்சென்று விரைந்தோடுகின்ற மானை எய்தான. இன்னம் வனங்களில் திரியப்பட்ட மும்மதம்பொருந்திய அனேக யானைகளையுங் கொன்றான் சேனைவீரர்கள் அங்கங்கே விரைந்தோடுகின்ற மிருகங்களையெல்லாங்கொன்று வேட்டை செயிர்த்தார்கள். அதுவேளையில் குரூரமாக எதிர்த்துப்பாயவருகிற ஒரு காட்டுப்பன்றியுடனே சிங்கவன்மராஜன் அடர்ந்தெதிர்த்தான். —எ-று. (௨௧)

மண்டலமண்டம் வலங்கணடுங்கக்
கொண்டெடன் வந்து மிடைந்த கோசனங்
கண்டவன் வில்லிடு கணை யோட்டாக்கி
மண்டியவன் மண்ட விரைந்து பாய்ந்தா.

(இ-ள்) அண்டங்கள் புவனங்களெல்லாம் நடுநடுங்கத்தக்கதாக கார்மேகம் போலும், கெர்ச்சித்தடர்ந்து வந்து எதிர்த்த ஒரு பன்றியை அரசன் வில் விற்பூட்டிய மூனையம்புகளா லெய்து யண்டிப்போராடினான். அப்படி யடர்ந்து தன்னைக் கொல்லவருவதுகண்டு சவுரியமான பன்றி அங்ஙனம் விரைந்தோடியது.

விரைந்து விரைந்து விழுந்து விழுந்தே
பரந்தரமோடிய பன்றிபுறம்போய்
நெருங்கவகப்படு மாறென நின்றே
தராங்கமன் னுடமுன் றாண்டியதம்மா.

(இ-ள்) விரைந்து வேகமாக ஓடியும் விழுந்து யெழுந்தும் அகப்படாமலோடிய பன்றி அங்கொரு சார்பில்போய் நெருங்கி அகப்படும்போல் யெதிர்த்து நின்றும் ராஜனுடனே போராடிப் பன்றி தாண்டிற்று.—எ-று. (௨௨)

கூடவிளைந்த கொடுந்தொழில் வீர
ராடவ ரங்ஙன மங்ஙனே நின்றார்.



வாடலில் சிங்கவன் மன் பின் விடாதே
வோடினானிளிய வுடற்றுவ னென்றே.

(இ-ள்) கூடத்தொடர்ந்து விரைந்தோடிவந்த வீரர்களெல்லாமிளைத்து அங்கங்கே நின்றுவிட்டார்கள். சற்றும் வாட்டமில்லாத சிங்கவன்மராஜன் அந்தப் பன்றியைப் பின்றொடர்ந்து விடாமலோடி பன்றியை எவ்விதத்திலும் கொல்லுவேனென்று முடுக்கினான்.—எ-று. (௨௪)

அன்னிலைகேழ லறிந்து செறிந்து
மன்னியசுதிர் மங்கி வரவறியாது
நன்னிழலடவியி னண்ணி நடுங்கி
முன்னியபிருகு முனிக்கெதிர் போய்த்தால்.

(இ-ள்) சிங்கவன்மராஜன் தன்னைக்கொல்லும்படியாகத் தொடர்ந்துவருவது கண்டு அந்தப்பன்றியானது நெருங்கி வமர்செறிவையுடைய சந்திராதித்தர் வரவறியாத நிழலாக விருண்ட ஒரு கானகத்திற்படிந்து நடுங்கி அங்ஙனந் தவஞ்செய்திருந்த பிருகுமுனிவனுக்கெதிராகச்சேர்ந்தது.—எ-று. (௨௫)

போயுடையெனந்த வானவிப்பூப
னேயமேவார் வாளியிலெய்த றுணித்தான்
நாயகமுனிவனின் னளினமலர்த்தாள்
மேய வடைந்தவென் னெம்முயிர் காப்பாய்.

(இ-ள்) சேர்ந்த பன்றியானது சுவாமி! இந்த ராஜனானவன் என்னை ஓம்பிலெய்து கொல்லுவதாகத் தொடர்ந்துவந்தான். தவநாயகனாகிய முனீசுரரே! என்னைக்காத்தாளும்முடைய பாதத்தில் அடைக்கலமாக வந்தடைந்தேன். என்னைக்காத்து ரட்சிப்பாயாக வென்று சொல்லியது.—எ-று. (௨௬)

என்றுவராக மிறைஞ்சியடைந்த
வன்றபயத்தை யளித்தருள் முனிவன்
றுன்றியெம்மிடநஞ் சூழலடைந்தா
ரொன்றுமில் வினையென் றுறுதி மொழிந்தான்.

(இ-ள்) என்றந்த வராகமானது வணங்கி சரணாகதியென்றடைந்ததுகண்டு அபயஸ்தங்கொடுத்துக் கிருபையுடன் பிருகுமுனிவன், வாராய் பன்றியே! அடைக்கலமாக நம்மிடத்தில் அடைந்த வுனக்கு ஒரு அபாயமான வினையொன்றுமில்லை. உன்னைக்காத்து ரட்சிக்கிறோம் பயப்படாதே யென்றுறுதிவார்த்தை சொன்னார்—எ-று. (௨௭)

பிருகு மஹாமுனி பெட்புரை யேனந்
தெருமவர் வேதிர செப்பியகாலை
வரிசிலையொடுசிங்க வன்மன் விரைந்தே
யருகுற வடியி லடைந்தன னந்தோ.

(இ-ள்) பிருகு மஹாமுனிவன் உறுதியாய்ப் பிரியவசனஞ்சொல்லிப் பன்றியினது பயத்தைத் தீர்த்தவேளையில் அம்புபூட்டிய வில்லுடனே சிங்கவன்மராஜன் ஓடிவந்து முனிவனருகில் பக்கமாயடைந்து நின்ற பன்றியைக். கொல்வதற்கேவாக அங்ஙனம் வந்து சேர்ந்தான்.—எ-று. (௨௮)

அடைந்த முனிக்க ணடைந்தவவ்வேன
முடைந்திட வாளி யுடற்றுதனெக்கி

மிடைந்த மனத்தகாவ் வியன் முனிமன்ற
தொடர்ந்திக்கைப்பொரு ஆட்சினை விடுவாய்

(இ-ள்) முனிவன் பக்கத்தினின்ற பன்றி சாகும்படியாக அம்புதொடுத்தெய்யாநின்றான். சிங்கவன்மராஜன் அதுகண்டு கலங்கிய மனத்தனாகி முனீசுரன் சொல்லுகிறான். ஓய் அரசனே! நீ தொடர்ந்துவந்திந்தப் பன்றியை எய்துகொல்லுகிற வினையை விட்டுவிடுவாயென்று முனிவன் சொல்லுகிறான்.—எ-று. (௪௯)

எவரேனு மடைக்கலமென்று
மையுயிர் கவர்க லறத்தொழி லன்றால்
நவையிதாவிடுகென நன்னெறி மண்ணைல்
கவர்மனமாகியோர் கணையில் வகுத்தான்.

(இ-ள்) எவராகிலும் அடைக்கலமென்று வந்தடைந்தால் அவர்களை உயிர்க்கொலைசெய்வது தர்மநீதியல்ல, ஆகையால் இந்தப் பன்றியைக்கொல்லுந் தினைவிட்டுவிடு, உனக்கு நல்லதல்லவென்று முனிவன்சொல்ல, அவர்சொற்கேளாமல் மூர்க்கமாகக் கோபத்துடனே கொலைசெய்யு மனத்தனாகி ஒரு சுடுகணைதொடுத்தெய்து சிங்கவன்மன் பன்றியைக்கொன்றான்.—எ-று. (௫௦)

கணைப்படுகேழல் கலங்கியம்முனியின்
றுணைபடிக்கீழ்விழு துன்ப முணர்ந்தே
யணையெமகாகா வென்படர்த்தா
யிணையிலையுன்தற மின்றென்றான்.

(இ-ள்) இராஜனெய்த அம்புவந்துபட்டு கொடுருவப் பன்றியானது மிகவுங் கலங்கி முனிவனது துணையடிக்கீழ் வீழ்ந்த துன்பத்தையறிந்து ஓய் அரசனே! நம்மிடத்தில் அடைக்கலமாக வந்தடைந்த பன்றியைக்கொன்றுபோட்டாய்; உனக்கொருவருமிணையில்லை, உன்னுடைய தர்மநீதியும், தயையும், நன்றாயிற்றென்று சொல்லுகிறார்.—எ-று. (௫௧)

என்றுடன்பிருகு வெறுந்தவன்விசய
மன்றல்கொள்சிங்கவன் மன்மனம்வெதுளா
வென்றியபுலியுரு வாகியிம்மிருகந்
தன்றசை பெறுதிநீ யென்றுசபித்தான்.

(இ-ள்) அரியதவத்தையுடைய பிருகுமுனிவன் இப்படிச் சில வார்த்தை சொல்லி வெற்றியுடைய சிங்கவன்மராஜனைப்பார்த்து மிகவுங்கோபித்து, ஓய் அரசனே! நீ இந்தக்கணமே ஒரு புலிவடிவாகி இந்த மிருகத்தின மாமிசத்தைக் கொள்வாய் நீயென்று சபித்தார்.—எ-று. (௫௨)

பிருகுவிளம்பிய பேதமில்சாபம்
வருவனபின்சிங்க வன்மனறிந்தே
யிருடிகளைப்பெரி யவரையகழ்ந்தா
ரரிதரிதுய்குவ தென்றயர்வுற்றான்.

(இ-ள்) பேதமில்லாமல் பிருகுமுனிவன் சொல்லியசாபம் தன்னைப் பின்பற்றி வருவதுகண்டு சிங்கவன்மராஜன் யோகத்துத் தவமுடைய இருடிகளையும், பெரியோர்களையும் இகழ்ந்தவர்கள் பிழைப்பது மிகவும் அரிதரிதென்று சொல்லிக் கவர்ச்சியுற்றயர்தான்.—எ-று. (௫௩)



அய்யமேவாரேனத் தருள்புரிகருணை
வய்யகமன்னரில் வைத்தருளடியே
னய்யமேவார் வாழ்வினி யுதவுதி யெனவோர்
வெய்பெரும்புலி வெவ்வுருவானான்.

(இ-ள்) அய்யா முனீசுரரே! ஒரு பன்றிக்கு மனதிரங்கிக் கருணைசெய்த கிருபையை இந்த மண்டலத்தரசர்பேரில் வைத்திரட்சியும். இப்போது அடியேன் உய்யும்படியாக வாழ்வெனக்குத் தயைசெய்து காத்து ரட்சிப்பீராகவென்று சொல்லிச் சிங்கவன்மராஜன் வெய்தாகிய ஒரு பெரும்புலி வடிவமானான்.—எ-று.

அவ்வுருவாகிய வரசன் விளம்பும்
வெவ்வுரை முனிவர் வியன்றவமவன்வா
யுய்வாமிருக முடற்று மிருந்தால்
வவ்வும வென்றிது வேட்டையில் வந்தேன.

(இ-ள்) அப்படிப் புலிவுருவான சிங்கவன்மராஜன் வெய்தாகிய வார்த்தை சில சொல்லுகிறான். இந்த அகோரமான காட்டிடத்தில் வசித்துத் தவஞ்செய்யும் முனிவர்களுக்கு மிருகங்களால் மிகுந்த விடுக்கணுண்டாகுமென்று அது நிமித்தமாக முனிவர் தவம் நிறைவேறும்படியாக மிருகவேட்டைக்காவந்தேனென்று சொல்லுகிறான்.—எ-று. (௫௫)

வந்திகல்மன்னரில் மாறுவிளைத்தே
யுந்தியசேனை யுடன்றனைகொன்றே
முந்தியெழுந்தனை முனிவனுகண்டு
சிந்தைவெகுண்டா சிபலொடுசென்றே.

(இ-ள்) பகைமன்னர்போலும் இந்தப் பன்றியானது வந்தெதிர்த்து சேனைவீரர்களநேகம் பேர்களைக்கொன்று பின்னையும் குரூரமாகக் கொல்லவருவதுகண்டு நான் மனவெகுட்சியுடனே ராஜ வீரம் விடாமல் முடுக்கித்தொடர்ந்து வந்தேன்.—எ-று. (௫௬)

சென்றவர்சென்றவர் சோவிழுந்தார்
நின்றிடில்வன்றவ நிலையிதுகொலுமென்
றென்றிமுனிந்தன துறையுனின்வந்தேன்
வன்றிறலேன மடைந்ததுமறியேன்.

(இ-ள்) என்னுடன் தொடர்ந்தோடிவந்த வீரர்களெல்லாம் அங்கங்கே விழுந்துவிட்டார்கள் நாமும் பின்னிட்டுநின்றால் வனத்தில் முனிவர்கள்தவநிலைகுலைத்துக்கொல்லுமென்றெண்ணி ஒரு பிடியாக வயிரங்கொண்டு கோபித்து உம்முடைய ஆச்சிரமத்தில் வந்தேன். முனீசுவரரே வலிய திறமையுடைய இந்தப் பன்றி உம்மிடத்தில் அடைக்கலமாக வந்து சேர்ந்ததுமறியேன் என்றான்.—எ-று.

விதிவலியாலுன துரைசெவிகேளே
னதுபிழையாற்புலி யிதுவுருவானேன்
மதியிலியுன்சர ணங்கொள்வாரகஞ்
சதிபடவெய்வது தவறுளதாமால்.

(இ-ள்) விதிவசத்தால் உமது வார்த்தையைச் சற்றுங் காதில் கேளாதவனானேன். அது பிழையினால் நீர் சபித்தபடியே இந்தப்புலியுருவானேன் சுவாமி முனீசுவரரே! உம்மைச்சரணமென்றடைந்த பன்றியைச் சதியாகக்கொன்றது தவறாம்.—எ-று. (௫௭)

ஆகையிலென்னை யருந்தவகோபித்
தோர்கனைசாப முரைத்தனெவகுண்டாய்
பாகனமாதவர் மறையவர்பெரியோர்
சேகுறுவாயிர்புனல் செல்கணையெனுமால்

(இ-ள்) ஆகையால் அரியதவ முனீசுவரரே! மிகவுங்கோபித்து ஒரு பெரிய சாபம் கொடுத்தீர். மஹாபெருமையுடைய தபோதனர்கள், வேதியர்கள், பெரியோர்கள் கோபித்துச்சொல்லுகிற வசனம் கூர்மையுடைய வச்சிராயுதத்திலும் மிகவும் கொடிதென்று சொல்லினன்.—எ-று. (௧௯)

என்குலம்யாரொரு வனுமகவிலையால்
நின்குலகருணையி னீணிலம்வாழ்க
நன்கடைவிழியினோர் நலகயநல்கென்
றின்கலைபிருகுமு னியிணையடி வீழ்ந்தான்.

(இ-ள்) என்னுடைய வம்சத்தில் அரசன் நானொருவன்றான். எனக்குச் சந்ததியுமில்லை. உமது கிருபையினாலே நெடிய புவனங்கள் வாழ்க. முனீசுவரரே! நன்மையாக உமது கடைக்கண் கிருபை நலம் என்னத்தனை பொருந்தச்செய்து என்னை ரட்சியுமென்று இனிய கலை தெரிந்த பிருகு முனிவனின் யிணையடித்தாமரையில் சிங்கவன்மராஜன் வீழ்ந்துவணங்கினன்.—எ-று. (௨௰)

வீழ்ந்துபுலம்பி யலம்வரும்வேந்தை
வாழ்ந்திடவோருள் மாமுனியுற்றே
சூழ்ந்துதியானச் சுடரொளிநோக்கி
யாழ்ந்தமனத்தினொ டங்கணிருந்தான்.

(இ-ள்) அப்படி வீழ்ந்து புலம்பித் துயரப்படுகிற சிங்கவன்மராஜனை உய்ந்து வாழும்படியாக பிருகுமுனிவ னொருவாறு கடாக்ஷஞ்செய்து ரட்சிக்கும்படியாய் மனத்திலெண்ணி யோகசாதனையினாலே தியானசமாதியாகவிருந்து மனதொருமிப்பாகப் பரஞ்சுடர் சோதியைநோக்கி அங்ஙனம்ஞானதிருஷ்டியினுலுசாவியிருந்தான்.—எ-று. (௨௧)

இருந்தொருபஞ்ச கிரித்தலமிமையத்
திருந்திழைகூடிய சிவனையுணர்ந்தா
னருந்தவனாக மலைச்சிகரத்திற்
பிரிந்தகலாவகை பிருகுவறிந்தான்.

(இ-ள்) அப்படியிருந்து ஞானதிஷ்டியினால் கண்டறிந்தொரு பஞ்சகிரிஸ்தலமான நாககிரிச்சிகரத்தில் உமையவள் அரியதவஞ்செய்து சிவனிடப்பாகம் கொடுக்கப்பெற்று வாமபாகம் பிரியாமல் எழுந்தருளியிருக்கின்றதை பிருகுமுனிவன் அறிந்துணர்ந்தான்.—எ-று. (௨௨)

அவ்வசலத்தறு முகவசுரரைவென்
றெவ்வெவரும்வந் திணையடிபரவக்
கொவ்வையிதழ்க்கொடி கூடியபாகன்
செவ்வடிபரவுசெங் கோடுமுணர்ந்தான்.

(இ-ள்) அந்தத் திருநாககிரியில் ஆறுமுகக்கடவுள் அசுரர்களைக்கொன்று வெற்றிகொண்டு தேவர்முதலாகிய அனைவரும்வந்து தன்னிரண்டு பாதங்களை வணங்கிப்போற்றக் கோவைக்கனிபோலும், அதரமழகிய உமையொருபாகரது அழகிய பாதங்களைப் பரவிப்பணிந்து வாழ்ந்திருக்கும் திருச்செங்கோட்டின் மகிமையும் பிருகுமுனிவன் அறிந்துணர்ந்தான்.—எ-று. (௨௩)



மாதவனும்பிர மாவும்வணங்கித்
தீதறுகணபதி தீர்த்தமுன்னாக
வோதுமெண்ணாயிர தீர்த்தமுமுளதென்
றூதரவில்பிரு கவ்வுமுணர்ந்தான்.

(இ-ள்) மஹாவிஷ்ணுவும், பிரமதேவனும் வந்து சுவாமியைப்பூசித்துப் பாவவிமோசனமாகிய முறைமையும் கணபதிதீர்த்தமுதலாகச் சொல்லப்பட்ட வெண்ணாயிர தீர்த்தங்களும், அந்த நாககிரித்தலத்தில் விளங்கியிருக்குதென்றும், அன்புடனே யவையெல்லாம் பிருகுமுனிவன் அறிந்துணர்ந்தான்.—எ-று. (௨௪)

அத்தலமுற்ற வரும்பொருளெல்லாந்
சித்தறிவிற்சில நாடியுணர்ந்தான்
முத்திவியாக்கிர சுரூபமன்னவனை
யெய்த்திளையேலென யினிதுரைபகர்வான்.

(இ-ள்) அந்தக் கிரித்தலத்திலுண்டாகிய அருமைப்பொருள்களெல்லாந் தன்னுடைய ஞானவறிவினாலே சில நாடியுணர்ந்து இனிதாக பிருகுமுனிவன் சில வசனஞ்சொல்லுகிறான்.—எ-று. (௨௫)

மன்னவசிங்கவன் மாவுலம்வருந்தே
லுன்னிதுசாப மொழிந்திருமரபு
மன்னியமகவொடும வாழ்ந்திறையடியின்
பன்னியபதமுறு பரிசுறவாழ்வாா.

(இ-ள்) ஓய் சிங்கவன்மராஜனே! இனி யுன்மனதில்வருத்தப்பட வேண்டாம் உன்னைப்பற்றிய சாபம் நிவர்த்தியாகி உனதிரண்டு குலமரபும் புத்திரசம்பத்துடனே வாழ்ந்து சிவனிணையடிவணங்கிச் சொல்லுதற்கரிய மேலான பதம்பெற்று மேன்மையாக வாழ்ந்திருப்பாய். இனி பயப்படாதேயென்று பிருகுமுனிவன் சொன்னான்.—எ-று. (௨௬)

சிங்கவன்மர் சருக்கம் முற்றும்

ஆகச் சருக்கம்-௨௰-க்கு திருவிருத்தம், ௲௫௧.

# சிங்கவன்மன் சாபவிமோசனச் சருக்கம்.

காவற்றீவிற் றென்றிசையிற்றெய்வ ஞாலந்தனில்மேலா
மாவற்பகிரதி யதனினுமினியதோ ராறுளதவைகேண்மோ
மாவிற்பரவையில் வளமுளவவையவை வான்வருருவாதுங்
கோவைத்தவர மடவியரென்றுங் கொழுனரோடாடுவதால்.

(இ-ள்) பிருகு முனிவன் தன்சாபத்தினாலே புலிவடிவாகிய சிங்கவன்மராஜனைப்பார்த்துச் சொல்லுகிறார். வாய் சிங்கவன்மராஜனே! சாப விமோசனபடிச் சொல்லுகிறோம். கேட்பாயென்று நாவலந்தீவிலும், தட்சண பூமி தெய்வலோகத்திலும், மேன்மையாகிய ஒரு தலமிருக்கிறது. அங்ஙனம்

கங்காநதியைப்பார்க்கிலும் சிரேஷ்டமான ஒரு நதியுள்ளது. மிருகஜாதிகள், இவையெல்லாம் தெய்வவடிவாக விளங்கியிருக்கும். இரத்தினக்கோவையணிந்த தனங்களையுடைய வாமகளீரெல்லா மெந்நாளுந் தங்கள் தங்கள் நாயகருடனே கூடி தீர்த்தமாடுவதாய் இருப்பது.—எ-று. (௪)

குடநதியெனவே பஞ்சவரைக்குட் கூடினகுறுமுனிவன்
கடமுறுபுனலது கணபதியருளின காரணநதியெனலாய்ப்
படர்பவநிரையும் பாதகமகலப் படர்வன திவலைக்காற்
றுடல்படும்வாசிவ லோகந்தமதென வோடுவர்நீடுவாரே.

(இ-ள்) அந்த நதி குடகுதேசத்திலுற்பத்தியாய்ப் பஞ்சகிரி பஞ்சகுரோசத் தெல்லைக்குள் பெருகிவரும். அகத்தியமுனிவன் கைக்கமண்டலச்சலம், கணபதியார் சிவனுத்தாரப்படிக்குக் காகவுருக்கொண்டு கவிழ்த்துவிடப்பட்டது. மஹா மகிமையுமுள்ளது. தீராதபாவமும், நரகவேதனைகளுந் தீர்க்கப்பட்டது. சிறகாற் றினாலே அதன் திவலைதெறித்து ஒருவர்மேனியிற் பரிசித்தவுடனே அவர்கள் சிவலோகந் தமது லோகமென்று விரைந்து செல்வார்கள். அங்ஙனம் நெடிய காலம் வசித்திருப்பார்கள்.—எ-று. (௫)

காவிரிநதியின் கீட்டிசையோசனை காண்பதோர்வரைநாமம்
மூவுலகிற்றெய்வ நதியொடுந்தவொடு முத்திமுளைத்தனவாய்க்
காவுலவியபல கற்பகமுளவாயக் காய்த்தனவுளதாய்ப்
பூவுலகிற்பொன் மலையாயதுசெங் கோடதுபுதுமலையே.

(இ-ள்) அந்த நதிக்குப்பெயர் காவேரி நதியென்று யாவரும் புகழப்பட்டது அந்நதியின் கிழக்குத்திசை யோசனைதூரத்தில் காணப்பட்டதொரு கிரிஸ்தலம். அதனுக்குப்பெயர் அனந்தம். திரிலோகத்திலுமுண்டாகிய தீர்த்தங்களியாவுஞ் செறிந்திருப்பதாய், தேவாதிதேவன் எழுந்தருளியிருப்பதாய், சகல பாவங்களையுந் தீர்த்து முத்தி மோக்ஷங் கொடுப்பதாய், பலபல கற்பகம் புட்பகாவனங்கள் நிறைந்திருப்பதாய் இஷ்டகாமியார்த்தந் தருவதாய்ப் பூலோகத்தில் பொன் மலையாகிய மஹாமேருகிரியின் கொடுமுடிச்சிகரமானது புதுமையாய் பிரபலமாயிருப்பது திருச்செங்கோட்டு மலையென்றும் பெயருடையது —எ-று. (௬)

மரகதவடிவென மணியொளிநிறமென மலைவளிதையோர்புறமாய்ப்
புரகனமொடுநிறை புதியவெண்ணிறமொடு புரிகுழையொடுதோடுங்
கரகதைகரதொடி கனதனமிதழிகொள் கனவுரவதளாடை
யரவணிபதபரி புரவணிமணிமுடி யளகமோடொளமானார்.

(இ-ள்) மரகதமணியொளி வடிவாகவும், மாணிக்கமணியொளி நிறமாகவும், பார்வதாதேவி இடப்பாகங்கலந்து பிரியாமல் சாமளவர்ணமாகவும் நிறைந்த பால் வர்ணமாகவும், நாககுண்டலமும், கனகூடகம் பொருந்திய செவிகளுந், தெண்டாயுதம் பிடித்த கரமும், தொடிவளைய லணிந்த கையும், கொன்றைமாலை சூடிய மார்பும், முலைமார்பும், வியாக்கிரசருமாம்பரமும், பீதாம்பரமும், வீரக்கழலணிந்த பாதமும், சிலம்பணிந்த பாதமும், நாகாபரணங்களும், ரத்னாபரணங்களுந் தரித்த திருமேனியும், ரத்தினமகுடந்தரித்த சடைமுடியும், ஆர்ந்தொழுகிய கரிய கூந்தலுமாக அழகிய சிவனு முமையு மொன்றாய்க்கூடி அர்த்தநாரீசுரராக அந்தத் திருநாககிரியிலெழுந்தருளி இருக்கின்றார்.—எ-று. (௭)

நாகீசரரெனப் போகீசரரென நமதீசரைவாழ்த்தி
யாகீசரருட் சுனைபலகோடியி னவரவர்தினமூழ்கிப்



பாகீர்மொழியுமை பங்கரொடறுமுக பாலன் றனையேத்தி
மாகீதமுமுறும் மந்திரவானவர் மாதவர்தொழுவாரால்.

(இ-ள்) நாகீசுரரென்றும், யோக போகீசுரரென்றும், நமது பரமேசுரனை நினைத்து வாழ்த்தி வணங்கிச் சிவன்கிருபையிலுண்டாகிய பலகோடி சுனைகளிலும் அவரவர் நித்தமூழ்கி பாலபோன்ற மொழியையுடைய உமையொருபாகனையும், சண்முகக்கடவுளையும், கண்டு தரிசித்துப் பணிந்து தோத்திரஞ்செய்து சாமவேத கானங்களால் கீதங்கள்பாடி புட்பாஞ்சலியிட்டுத் தேவர்களும், முனிவர்களும் நிறைந்து சேவிப்பார்கள்.—எ-று. (௮)

இதுமூவுலகையு மீடேற்றும்படி யெய்திப்பணிவெற்பில்
மதமேவியபுலி வடிவாகியசிங்க வன்மாவினைமானங்
கதமீதறநல் லறிவிற்சென்றே கணபதிசுனைமூழ்கிச்
சுதைமேனியனைச் சோதியையுன்னித் தொல்வரைவலமூன்றாய்.

(இ-ள்) இப்படித்திரிலோகமு மீடேற்றும்படியாகத் தோன்றியிருப்பது திருநாககிரிஸ்தலம் அந்த ஸ்தலம் தொன்மைத்தமான புலிவடிவாகிய சிங்கவன்மரானவன் இந்தக்கொடிய சாபவிமோசனமாகத் தெள்ளிய வறிவினாலே நீ அங்கனஞ் சென்று கணபதி தீர்த்தத்தில் மூழ்கிச் சோதிப்பிரகாசமாகி அமுதானந்தத் திருமேனியழகிய உமையொருபாகனை மனத்தியானஞ் செய்துக்கொண்டு அந்தத் திருமலையை மூன்றுதரம் வலமாகவருவார் —எ-று. (௯)

பணிமலைதனை மூவலம் வந்தேகனை பதிதண்சுனைமுதலா
மணிபெறுநாரா யணதீர்த்தங்கொண் டறுமுகவன் றீர்த்தந்
தணிவறமூழ்கிப் பலபலதீர்த்தந் தனையுட்கொண்டுபரன்
றணிவுளகுருவுப தேசத்துறுநிலை தொடங்கிமுடித்தனபின்.

(இ-ள்) திருநாககிரியை மூன்றுதரம் வலமாகவந்து குளிர்ந்த கணபதிதீர்த்த முதலாகிய அழகுபெற்ற விஷ்ணுதீர்த்தம், சண்முகதீர்த்தம் மூழ்கியுட்கொண்டு மற்றும் பலபல தீர்த்தங்களும் புரோட்சித்துட்கொண்டு அணிவாகப் பரமசற்குரு உபதேசமுறைமை விதிப்படியே தொடங்கி அதன் பின் நியதிகள் முடிப்பாராக.

ஒற்றைமருப்பனை யுற்றுமகிழ்ந்தகன் குவபூசனையாக
முற்றுபலாக்கனி மாங்கனிதேங்காய் முதிர்கதலிக்கனியோ
டற்றைபின்மோதக மமுதஞ்செந்தே னபிஷேகத்துடனே
நற்றருடருசோ டசகணபதியி னற்றியானங்கொண்டே.

(இ-ள்) ஒற்றைக்கொம்புடைய யானைமுக விநாயகமூர்த்தியைக்கண்டு தரிசித்து மகிழ்ச்சியாய் அங்ஙனம் அவர்திருவுள மகிழும்படி பூசார்ச்சனையாகக் கனிந்த பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம், தேங்காய் மற்றும் பல கனிவர்க்கத்துடனே அற்றையில் சமைத்த மோதக மமுதம் மிருதுவாகிய தேனபிஷேகஞ் செய்து ஷோடச உபசாரங்களும் நிறைவேற்றித்தொழுது கணபதி மந்திரத்தியானஞ் செய்வாயாக.—எ-று.

பின்குமரன்றீர்த் தந்தனிலாடிப் பெறுசண்முகனையுளத்
தன்புறவெண்ணி யெழுத்தாறும்பக ரஞ்சலிபுரிமுருகர்க்
கன்புறுபூசனை யபிஷேகத்துட னைவேத்தியமேதகு
நன்புலமாக மகேசுரர்மறையவர் நன்போசனமுதவி.

(இ-ள்) பின்பு குமாரதீர்த்தத்தில் தீர்த்தமாடி நேமத்துடனே அன்புகொண்டு சண்முகக்கடவுளை மனதில் நினைத்து சடாக்ஷர மந்திரங்களை உச்சரித்து அஞ்சலி

யஸ்தனுக முருகரைத்தொழுது வணங்கி அபிஷேக நிவேதனம் நிறைவேற்றிச் சோடச உபசாரத்தால் பூசித்து நல்லறிவுடைய பிராமணர்களுக்கும், மகேசுரருக்கும் போசனங் கொடுத்தருள்வாயாக.—எ-று. (௯)

சத்திரதீர்த்தந் தனிலுறமூழ்கித் தண்கரைமிசை முருகோர்
சித்தியில்வைகுங் கற்பகமுளவி சுவதேவர்தினங்காவல்
பத்தியிலவரைப் பாதம்போற்றி பைங்கருநீழலினின்
றுத்தமர்மறையோர்க் குறுதானஞ்செய் துமைபாகரைப்போற்றி.

(இ-ள்) பின்பு சத்திரதீர்த்தத்தின்மூழ்கி அதன் சமீபத்தில் முருகர் செயலால் வந்த கற்பக விருட்சத்தினிழலிலங்ஙனம் நித்தியம் விச்சுவதேவர் காவலாக இருப்பார் பத்தியினாலே அவரை வணங்கிப் போற்றிசெய்து பசும்பொன்னிறமான அந்தத் தருவினுடைய சாய்கையில் நின்று உத்தமரான வேதியர்களுக்கு தானதர்மஞ்செய்து வணங்கி உமையொருபாகரைக் கண்டு தரிசித்துப் பணிந்து போற்றிசெய்வாயாக.—எ-று. (௰)

தேனுவிதென்றே செழுமைக்கீரந் திகழ்கோதானமறைக்
கானமுளராய்க் கடிமனையோமங் கையாடருமறையோர்க்
கேனைபசிலவிர ணிபமுடனீ குதி யிப்புலிவடிவம்போய்
சேனையுமரசுஞ் செல்வருமுதைந் சேருதிசேருதியே.

(இ-ள்) பின்பு காமதேனுவிதுவே யென்று மனத்திலெண்ணி செழுமையுடைய பால்சுரப்புத்திகழ்ந்த கோதானம், சாமவேதகானஞ் செய்கின்ற வேதியர்க்குக்கொடுத்து மங்களாகரமாக சதாநித்தியங் கரகங்களில் ஓமதர்ப்பணஞ் செய்கின்ற ஒழுக்கமுடைய மறைமுனிவர்களுக்கும், மற்றும் பெரியோர்களுக்குஞ்சில பூரிதானஞ் செய்வாயாகில் இந்தப் புலிவடிவம்போய் அழகிய இராஜவடிவாகி உன்தேசத்திற்சென்று சேனைகள் சூழ புத்திராதிகளுடனே செங்கோல் செலுத்திச் சுகமாக வாழ்ந்திருப்பாயாக.—எ-று. (௧௧)

வாரித்துகிலுடை மண்மகளின் றனிவண் குடைநிழல்வாழ்கப்
பாரித்துலகொரு செங்கோலாளுதி பணிமலை முருகேசர்க்
காரத்திருவிர ழமுமைபாகர்க் கணிதருதிருநாளுஞ்
சேரத்தெய்வப் புரிபினையருளிச் செல்வருடன்வாழ்வாய்.

(இ-ள்) கடலாடையுடுத்த பூமிதேவியானவள் அழகியவுனதொரு குடைநிழலில் அடங்கி மகிழ்ச்சியாக வாழ்க மனுநீதி முறைமையாக உலகத்தை யாண்டிருப்பாயாகையால் நாககிரி முருகருக்கும், உமையொருபாகருக்கும் திருவுளமகிழும்படியாகத் திருநகருண்டாக்கி அலங்கரித்து திருத்தேர்கள் சமர்ப்பித்து ரமணிதமாகத் திருநாளுந் திருவிழா நடத்துவையாகில் நல்ல சற்புத்திரரைப்பெற்று வாழ்ந்திருப்பாய்.—எ-று. (௧௨)

நாககிரிவரு நாகேசனையும் நங்கையிடத்தனையும்
யாகத்தொடுபணி யயனையுமாலையு மின்பமுறப்போற்றி
மாகத்தொழிலுடன் மைந்தர்புவிக்கு வளந்தரவைத்தாவோய்
யோகத்தலையோ டுமையொருபங்கனை தலையடிதஞ்சேர்வார்.

(இ-ள்) திருநாககிரியி லுதித்த நாகேசுரனையும், அர்த்தநாரீசுரனையும் யாகத்தொழிலுடனே பூசித்த பிரமதேவனையும், ஆதிகேசவ விஷ்ணுவையும் இன்பமாகத் தரிசித்து வணங்கிப்போற்றிசெய்து நின்னகரத்திற் சேர்ந்து அனேக வேள்விகளைச்செய்து நெடியகாலம் அரசுசெய்து வாழ்வுற்றிருந்தபின்பு புத்திரருக்கு



முடிசூட்டி வளமாக உலகாளவைத்துநல்லஞான வறிவுடனே சிவயோகத்தகைமையோடு தவம் புரிந்துதேவிபாகருடைய உபயபாதஞ்சேர்வாயாக—எ-று. (௧௩)

எனபவாபிருகு மஹாமுனிபுற்சிங்க வன்மன்னெதிர்காண
முனையிற்பயிபன் றியையுயிராக மொழிந்தானஃதுடவிழ்ந்
தினமுறவிருளவன் மீதுபுகுந்தபின் னியல்முனிவன்பகர்வான்
கனமுற்றடைவார் சரணென்பாளரைக் காப்பதுகடனென்றான்.

(இ-ள்.) என்றிப்படிப் பிருகு மாமுனிவன் சொல்லிப் புலிவடிவான சிங்கவன்மராஜன் காணும்படியாகஅவனெய்த அம்புமுனையிற் பட்டிறந்த பன்றியையுமுயிருண்டாய் எழுந்திருக்கும்படிச்சொன்னார் அப்படியே அந்தப்பன்றி எழுந்து முனிவன்பாதத்தில்வீழ்ந்து வணங்கித் தன்இனத்துடனே சேர்ந்து நெடிய இருட்கானகத்திற் புகுந்து போயிற்று.பின்புஇயல்பையுடைய முனிவன்சொல்லுகிறான். வந்தடைக்கலம் புகுந்து சரணாகதியடைந்தவர்களைக் காத்துரட்சிப்பது நல்லோர்களுக்குக் கடனென்று சொன்னார்—எ-று. (௧௪)

ஆதுலர் தன்னை யடுத்தவர் பேதைய ரந்தணர் வந்தடைவோர்
மாதவர் வந்து விலங்கின மயலோர் மருவினர் பாலரிவர்க்
கேதமுறுத்தப ரெண்ணிலி னெரிநர கெய்துவரிவைகாப்போர்
வேதியனச்சுத னரனிவர் மூவர் விரும்பு பதஞ்சேர்வார்,

(இ-ள்.) இரவலர்கள்,தன்னையடுத்தவர்கள், பெண்கள் பிராமணர்கள் வந்தடைக்கலம் புகுந்தவர்கள், மஹாதவமுனிவர்கள், வந்துசேர்ந்த மிருகக்கூட்டங்கள் அயல் தேசத்தார்கள், சினேகிதர்கள், சிறுபிள்ளைகள் இவர்களுக்கெல்லாம் யாதோரிடுக்கண் செய்தவர்கள் அளவில்லாத எரிநரகத்தில் வீழ்ந்து கெடுவார்கள் இவர்களைக் காத்து ரட்சிக்கின்றவர்கள் பிரமா, விஷ்ணு, ருத்திரர், இம்மூவர்பதங்களில் விரும்பிய பதங்களிற் சேர்வார்கள் என்று பிருகுமுனிவர் சொன்னார்.

என்றென்றோதிய பிருகுவை வெம்புலி யேந்தலிறைஞ்சியடும்
பன்றிஎழும்பிய பரிவுங்கண்டு பழவினை யிரிதனவுற
கான்றிரவேசனை செயங்கல நகர்விட் டுயர்புலிவடிவாகத்
தென்றிசை யிற்செங் கோட்டுமைபாகன் சேரவேதெனவுற்றான்.

(இ-ள்.) என்றிப்படிச்சொன்ன பிருகுமுனிவனை வெய்ய புலிவடிவான சிங்கவன்மராஜன் வணங்கித் தோத்திரஞ்செய்து பட்டிறந்தபன்றியை எழுப்பியபரிவைக்கண்டு பூர்வ கர்ம்மமிதுவென்று தன்னுடைய சேனைகளைச் செயங்கலநகரத்துக் கனுப்பிவிட்டு உயர்ந்த புலிவடிவுடனே தெற்குதிசையி லுமையொருபாகரெழுந்தருளிய திருச்செங்கோட்டுக் கிரிஸ்தலம் எதுவென்று தேடிச்சென்றார்.

தானந்தவநிறை ஞானதருமன் றன்மைய சிங்கவன்மன்
கானந்தடவரை கானர்தருநதி கன்பால் செறி நெறியூ
டேனந்தனையட ரிறைவன்புலியு வினிதினிமேலிநடந்
தானந்தம் மிகுந்தா ரிமைபக்கின ரணிபலைமுடி கண்டான்.

(இ-ள்.) தானதர்ம்மந் தவம்நிறைந்த ஞானமிகுந்த கருணையறிவுண்டாகி மனதொருமித்துச் சிங்கவன்மராஜன் புறப்பட்டு வனங்கள், மலைகள், ஆறுகளும் கல், மணல், பாலைவனங்கள் செறிந்த வழியூடே நடந்துபோய் அப்பன்றி டர்ந்து கொண்டமையாலாகிய புலிவடிவுடனே இனிதாக நெடியதூரம் நடந்து மகோரம்மியமாக ஆனந்த பாஷ்பத்துடனே உமையொருபாகர் எழுந்தருளியிருக்கின்ற அழகிய நாககிரிமுடியைத் தன்கண்குளிரக்கண்டான்.—எ-று.

கண்டான்காணு வருநிதி யெய்திய கனமிடி வறியவர்போற்
கொண்டான் மன்னிடை கொள்ளா வரவங் கோபுரமுடி தோன்றி
பண்டாகிய வடிவெய்தினர்போலப் பாவித்தான் முனிவன்
றண்டாதுறை புரி காவிரிநதியின் றண்புனல் மூழ்கினனால்.

(இ-ள்) கண்டவுடனே காணாத அருமையான நிதியைக்கிடைக்கப்பெற்ற மிகுந்த மிடியையுடைய தரித்திரவான்கள்போலு முட்கொண்டு மனதில் அடங்காத ஆவல்கொண்டான். அங்ஙனம் திருக்கோபுர முடி தோன்றக்கண்டு முன் தனக்கான புலிவடிவமாறிப் போனதுபோலும் பாவித்தான். பிருகு முனிவன் சொன்னபடியே சிங்கவன்மன் திருக்காவேரி நதியிற் குளிர்ந்த தீர்த்தத்தில் மூழ்கினான்.—எ-று. (கஅ)

தண்காவிரி நீராடிப்பணிமலை தனைவலம் வந்து முன்னீர்
பண்காவலர் திருவட்டப்பிள்ளையின் வண் சரணம் போற்றி
விண்காதல ருமை பாகனை வேலனை வியன்மன முட்கூர்ந்து
பண்காவிய செங்கோட்டிற் பெரியவர் பாதப்பரவினனால்

(இ-ள்) குளிர்ந்த காவேரி நீராடித் திருநாககிரியை வலமாகச்சுற்றிவந்து கடல்சூழ்ந்த உலகத்துக் கதிபதியானவர் திருவட்டப்பிள்ளையாருடைய பாதங்களைப் போற்றிசெய்து சிற்சபாநடராஜரான உமையொரு பாகரையும், வடிவேற்குமரனையும் நினைத்து மனத்துட்களிகூர்ந்து பண்களோடுங் காவியங்களை ஓதப்பட்ட திருச்செங்கோட்டில் பெரியோர்களைக்கண்டு சேவித்தவர்கள் பாதங்களைச் சிங்கவன்மன் பாவித்துதித்தான்.—எ-று. (ககூ)

பாவிப்பிருகு பகர்ந்துள படிகண பதிதீர்த்தந் தோய்ந்து
காசத்திசைக் கைதொழுதருள்விச் சுவதேவர்க்கரமுற்
றாசத்திரநதி குமரன் றீர்த்தத் துறுபுனல் மூழ்கியாரா [தான்.
வரையைச் சுற்றினன் மும்முறை யம்முறை வாவிகள் பலதோய்ந்

(இ-ள்.) தனக்குப் பிருகுமுனிவன் சொன்னபடியே கணபதிதீர்த்தத்தில் மூழ்கி நேமத்துடனே கையில் சத்திவேல்பற்றிய குமாரரைக் கைதொழுது மிகுந்த பக்தியுடனே கற்பகத்தருநிழலில் காவலாகியிருக்கின்ற விச்சுவதேவரைத் தொழுது வணங்கி ஆசையுடனே சத்திரதீர்த்தத்திலும் குமாரதீர்த்தத்திலுந் தீர்த்தமாடி ஆசாரமாகத்தினமும், நாககிரியை வலமாக மூன்றுபிராகாரம் சுற்றிவந்து பலபலசுனை தீர்த்தங்களிலும்படிந்து சிங்கவன்மன் மூழ்கினான்.—எ-று. (உ0)

எண்ணுபிரதீர்த்த தங்களுமிப்படி யினிதினி துறமூழ்கி
யெண்ணேரியைபங் கனைநாகீசனை யிணையடி தொழுதேத்தி
பண்ணுரணர்சங் கமர்பெறுதானம் பாலித் தனதனுற்
றிண்ணுடற்புலி யுருவமொழிந்தொளிர் தெய்வவுருப்பெற்றான்.

(இ-ள்.) எண்ணுயிரதீர்த்தங்களிலு மிந்தப்படி இனிதாகமூழ்கி நியதித்தொழில்முடித்து மனோபத்திபாக அர்த்தநாரீசுரரையும், நாகீசுரரையுங்கண்டு, உபயபாதங்களைத்தொழுது தோத்திரஞ்செய்து பண்புடைய பிராமணர்கள், மயேசுரர்கள் மனமகிழும்படி தானங்கள்கொடுத்தான். அதனாலே திண்மையாகிய புலியுருவமாறிச் சிங்கவன்மராஜன் பிரகாசிக்கப்பட்ட தெய்வ வடிம்பெற்றான்.—எ-று,

புலியுருவாபொரு புருஷன்வரையிற் பொன் னுருவானதான்
வலியெனநாகீ சரையுமைபங்கரை மைந்தரைவாழ்த்தினாற்



பலனுயர்சிங்கவன் மன்பிருகுமறையின் படிவரமுற்றனனிவ்
வுலகிலவ்வானுக் குயர்தாயுற்சவ முதலவிரும்பினனால்.

(இ-ள்.) புலிவடிவாய்ந்த ஒரு புருடனான சிங்கவன்மராஜன் திருநாககிரித் தலத்தில் சிவனது கிருபையினாலே பொன்னிறமானவடிவமானான். இது சுவாமி மகிமையென்று நாகீசுரரையும், உமையொருபாகரையும், குமாரசுவாமியையும் வாழ்த்தி வணங்கினார்கள். அப்பலன் பெற்றுயர்ந்த ராஜனானவன் பிருகுமுனிவன் சொன்னபடியே வரங்களும்பெற்றான். இவ்வுலகம் புகழும்படி நாககிரியீசுரருக்குப் பிரியமிக் குயர்ந்த வுற்சவமுஞ்செய்யத்தக்கதாக விரும்பினான்.—எ-று, (உஉ)

அன்னவர் திருடனை முரிசிபொயங்கன ரம்மையோர் பங்குடனே
யின்னில் வன்னில பெண்ணில மீதினு மிகுநிகர் வரையுளவோ
மன்னவனின்புலி வடிவமகற்றிய வரைபிது தலதுளவோ
நின்னு நுவாழிநின் னகிலமும்வாழிநின் னிதியும் வாழிபவே.

(இ-ள்.) அந்தத்தலத்தில்வசிக்கும்பெரியார்களெல்லாஞ் சிங்கவன்மராஜனைப்பார்த்து ஆசீர்வதித்தார்கள். உமை இடப்பாகம்பெற்றயச்சிவனுடனே யேகபாகவிருக்கின்ற மஹாஸ்தலம். இந்தலோகம், அந்தலோகம் எந்தலோகத்திலுமிந்தலோ கத்துக்குச் சமானமான கிரிஸ்தலம்இருக்குமோ இல்லையே? சிங்கவன்மராஜனே! யுன்புலிவடிவத்தைமாற்றி நல்ல வடிவுசந்தருளியது இந்தக் கிரிஸ்தலமல்லவோ! ஆசையாலுன்னுடைய வடிவமும்வாழி, உன்னுடைய திரவியங்களனைத்தும் நெடிது வாழி வாழியென்று புகழ்ந்து வாழ்த்தினார்கள்.—எ-று. (உங)

எனமறைபவரொடு குரவருந்தவ ரினிது மகேசர்கண்
ணனவரதமுமிவ் வழகமன்விழிபட ராமதனன்போலக்
கனமுறவாழுக விழாவுநடத்துக கன்னுகலுக் கதுதேகள்
நினதுருமரபினு முறுகதி நிலைமை நிகழ்த்துவ தரிதென்றார்.

(இ-ள்.) என்றிப்படிபிராமணருடனே குருக்கண்மார்கள், அரியதபோதனர்கள், இனிதாகிய குருலிங்க சங்கமரான மகேசுரர்கள் இவர்களெல்லாம் சிங்கவன்மனைப்பார்த்து ஓய்! சிங்கவன்மராஜனே! நீயனவரதகாலமும் சிவனுடைய நெற்றிக்கண் நெருப்பி லழியாத அழகிய மன்மதனைப்போலப் பெருமைபொருந்தி வாழ்க. உற்சவத்துக்குத் திருவிழாவும்நடத்தினால் உன்னிரு மரபிலுள்ளவர்கள்பெரும் பலனைச்சொல்லுவதரிதென்று சொன்னார்கள்.—எ-று. (உச)

என்பனமன்னவ னுட்கொண்டுகதம திடமாதுவகென்றே
மன்புகழ்கூர்சிங்க வன்மன்றனது செயங்கலமாபதியிற்
பொன்பொருள் கரிபின பிடர்பலதிரள்வரு புரிவுபுகன்றனனன்
றன்புடனந்தணர் பூசுரர்தேசிக ராசிவிளமபினமேர.

(இ-ள்) என்றிப்படிப் பெரியோர்கள் சொல்லக்கேட்டு மகிழ்வாய் மனதிலுட்கொண்டு அவையெல்லாம் நம்மாலே செய்யலாகுமென்று சகலருக்கும் புகழ்கின்ற சிங்கவன்மராஜன் வேலையாளரை அனுப்பித் தன்னுடைய செயங்கல நகரத்திலிருந்தும் அளவில்லாத சொர்ணத்திரவியங்கள் யானைகளின்மேலே வைத்து மகா ஜனங்கொண்டுவந்து சேர்க்கும்படியாக வுத்திரவுசெய்தான். அதுகண்டு மகா

சந்தோஷமாகிப் பிராமணர்கள், தாஸிகர்கள், குருக்கள்மார்கள் அனைவரும் ஆசிர்வாதஞ் சொன்னார்கள்.—எ-று. (௨௫)

சிங்கவன்மர் சாபவிமோசனச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம்-௩௰௧-க்கு திருவிருத்தம், ௧௮௰௪.

---

# திருவிழாச் சருக்கம்.

அச்செயங்கலத்துநின் றனந்தவானைவன்பிடர்
மெச்சுமந்த வியமழும் விளங்கு பாரமணிகளுங்
கொச்சை யங்குறத்திசேர் குமாரர் சூரர்வீரனார்
செச்சையம் புயத்தர்பொற் சிலம்பெனக் குவித்தனன்.

(இ-ள்) சிங்கவன்மராஜனுத்தாவின்படி அந்தச் செயங்கல புரத்திலிருந்து அளவில்லாத ஆனையின்மேரிமேல ஏற்றிக்கொண்டு வரப்பட்ட சொர்ன்னங்களையும், துலக்கமாகிய நவரத்தின மணிகளையும் குறவள்ளி மணவாளனும்மேனும். வெட்சிமாலைசூடிய புயங்களையுடைய குமாரதீரருடைய பொன்மலைகள் போலுங்குவித்தார்கள்.—எ-று. (௧)

குவித்தவாடகங்களும் குவித்த பச்சை நீலமுங்
குவித்தவார மணியுமூன்று குன்றமொத்த தென்றிடில்
நவித்தடர்க்கையார்விளங்கு நாகவெற்புமேவரு
முவத்துவைத்திறைஞ்சுகாட்சி யென்னவோதுமுலகமே.

(இ-ள்) அப்படிக் குவித்துவைத்த சொர்ன்னங்களும், குவித்துவைத்த நீலமாதக மணிகளும், குவித்துவைத்த முத்துமணிகளும் மூன்றுமலைபோலத் தோற்றஞ்செய்தது மான்மறியேந்தியபெரிய கைகளையுடைய பரமேசுவரனெழுந்தருளிய திருநாககிரிக்குத் திருமூர்த்திகளுங் காணிக்கையாகக் குவித்துத் தொழுது வணங்கிய காட்சிபோலுமென்று உலகம் சொல்லுகின்றது.—எ-று. (௨)

வாருசிக்குநிகர்படித்த கணிதவாணர்மருவினார்
சூரவரிற்றெளிந்தவாகமத்தர் வந்துகூடினார்
திரமயற்குநிகர்கொளோ வியத்தர்வட்செறிந்தனர்
புரவடுக்கடுக்கவல்ல புயபலத்தர்சூழ்மினார்

(இ-ள்) அப்போதங்ஙனம் வாருசிமுனிக்குச் சமானமான கல்வியுடைய கணிதசாஸ்திரவாணர்கள் வந்துசேர்ந்தார்கள். குருக்கள்மார்களில் தெளிந்த அறிவையுடைய ஆகமர்கள்வந்து கூடினார்கள். திரமான தெய்வமயனுக்கு நிகரான சிற்பாசாரிகள்வந்து செறிந்தார்கள். வரிசையாக எடுத்து அடுக்கி யடுக்கி வைக்கத்தக்க வல்லவர்களான புஜபலமுடைத்தான பேர்களும் வந்துகூட்டமிட்டார்.—எ-று.

மலைபிணித்தபோதும்வெண் ணுகத்திழுப்பவல்லதா
மலைபிணித்தபோதும்வெம் மகட்டுவெள்ளமார்த்தன



சிலைபிணித்தநுதலியங்கர் தேசிரும்புகொல்லர்க்க
ளுலைபிணித்துநன்முகூர்த்த மொன்றுசெய்வமென்னவே.

(இ-ள்) மலையைக் கட்டிவைத்தபோதிலும், பிடரிகளிலங்கங்கள்வைத்துப் பூட்டியவுடனே இழுத்துக்கொண்டு வரப்பட்ட வலிவுடையதாய்ச் சரிய மலைகளைக் கட்டினதுபோலும் குரூரமானகடாக்கள் கட்டினகூட்டங்கள் பண்டிகளை இழுத்துக்கொண்டுவந்து ஆர்பரித்துவிற்போன்ற நுதலழகிய வுமையொருபாகர்தேருக்குசேர்க்கும் இரும்புகள் நீட்டியடிக்கத் தக்கதாகக்கருமார்களால் உலைகள் சேர்த்து நல்லதொருமுகூர்த்தஞ் செய்வோமென்று சிங்கவன்மன்நினைத்தான்—எ-று.

அர்த்தநாரிகணபதிக் கருச்சனைத்தொழிற்புரிந்
தத்தகூடத்தினைத்துவைப்ப வோங்குதேர்தொடங்கினார்
சித்திரச்செழும்பொனாலும் வெள்ளியாலுஞ்செப்பனார்
முத்துரதனவச்சிரமிட் டிழைதிழைத்துமுற்றினார்.

(இ-ள்.) முந்தி அர்த்தநாரிகணபதியாருக்குச் சோடசவுபசாரங்களால்பூசித்து வணங்கிஉத்தமசபதினத்தில்முகூர்த்தமிட்டுவைத்துஉபாங்கஸ்தர்கள்செய்யத்தொடங்கினார்கள். விசித்திரமாகச்செழுமையுடைய பொன்னினாலும், வெள்ளியினாலும் முத்துமணிகள் வச்சிரமணிகள் வைத்திழைத்து முடித்தார்கள். (௩)

முற்றுமாமணிக்கொடிஞ்சில் முகுளமிந்துசூரியன்
பற்றுதாவரத்தழற்று படாகனறவைகலாய்த்
தெற்றிவாழிப்பாதலத்துச் சேடனுச்சிசெறிதலாய்ச்
சுற்றுதேர்விலாசமெண் டிசைக்குமவீறுகொற்றமே.

(இ-ள்.) அப்படி அழகிய தேர்கள் செய்துமுடித்துத் தெய்வமணிகளால்முகுளிதமான கொடிஞ்சில்களும். ரத்தனக்கலசங்கள் சூட்டிய ரவணிதங்களும், சந்திரசூரியப்பிரபைகள்போலஇருபொழுதுமிருட்படலைநீக்கியெப்பொழுதும் பகற்காலமாகவே தோன்றப்பாதலத்தில் ஆதிசேடனுச்சி மகுடஞ்சேர்வதாக வுயர்ந்த வண்டில்கள்பூட்டிய வட்டமாகச் சுற்றுப் பிரகாரம் பொருந்திய தேர்களினுடைய விசாலந் திக்குகளெல்லாம் நிறைந்து பரவியிருப்பதாய்ச்சீர்கொடிகளுமேற்றிவைத்து அலங்கிரதமாகத் தோற்றச்செய்துமுடித்தார்கள். (௬)

மகரசூரியன்விளங்கி மருவுகைகமதிக்குளிர்
திகழுற்று வளர்திணத் திரேவதிக்கடுத்தநா
ளுகம்விளங்கயிகபர்விளங்க வுயிர்விளங்க மறைவலோ
ரகம்விளங்க வருள்விளங்க வணிவிழா தொடங்கினான்.

(இ-ள்.) மகாராசியில்சூரியன மருவிவிளங்கத், தைமாதத்தில் சந்திரன் வளர்கலைபொருந்தியநாள்களில் விகாதமில்லாத ரேவதிநட்சத்திரத்தில் யுகதர்மமும் இகலோகமும், சகலசீவஆத்துமாக்களும், மறைவல்லோருமானவேதியர்கூட்டங்களும்விளங்கச்சுவாமியினதுதிருவருளமுதலாகியயாவும் அலங்காரம்பொருந்திய திருத்தேர் திருவிழாசெய்யச்சிங்கவன்மராஜன்தொடங்கினான்.—எ-று. (௭)

இம்முகூர்த்தமீதுநா ளிவற்றினுசுவீசுரன்
விம்மிதஞ்சிறந்தவா லயம்விளங்கவேறவே

செம்மல்வென்றிபேறவீறு செல்வமேறநல்வரு
ளம்மைபங்கரேறவோ ரணிப்பதாகையேற்றினான்.

(இ-ள்.) இந்தநாள்முகூர்த்தத்தில், கொடியேற்றம்இருந்தநன் முகூர்த்தத்தில் ரதோற்சவமென்று யாவருமறியும்படி விதிவிதானமும் கிராமசாந்தியுஞ்செய்து நாககிரீசுரர், மகோற்சவமாரம்பமாக விளங்கச்சிறந்த திருவாலயங்கள் விளங்கி மேன்மையாக விஜயங்களும், மிகுந்த செல்வங்களுந் தழைத்தோங்க நன்மையான அருளுடைய உமையொருபாகரேறவழகிய வொருமணிப்பதாகைக் கொடியேற்றஞ்செய்வித்தான் சிங்கவன்மன்.—எ-று. (௮)

ஐங்கரற்கோ ரிரதமுந்தொல் லறுமுகற்கோரிரதமுஞ்
சங்கரற்கோ ரிரதமுஞ், சமைந்தமூவமைத்திர
ளிங்கிதங்கொள்கைலைமேரு விமையமென்னவிமையவர்
பொங்குகண்புகங்கநின்று புட்பமாரிபொழியவே.

(இ-ள்.) ஐந்துகரங்களையுடைய யானைமுகப்பிள்ளையாற்கு ஓர் இரதமும், சண்முகற்கோர் இரதமும் அர்த்தநாரீசுவரற்கோர் இரதமுமாகச் சமைப்பித்த இரதங்கள்மூன்றும், கைலாசகிரிமகாமேருகிரி இமயமென்னப்பட்ட மூன்று கிரிகள் போலுந்தோன்றிவிளங்கத் தேவர்கள் மனோகரமாய்ப்புட்பமாரிபொழிந்து புகழ்ந்தார்கள்.—எ-று. (௯)

காவணங்க ளாவணங்கள் கனகதோரணம்பெறக்
கோவினங்குபொற்குடைக் கொடித்திரட்குழீஇவர்ப்
பூவணங்கினட்டமங் கலந்திருப்பொருந்தநல்
லேவணங்கவோகத்தை யேரகங்களாக்கினான்.

(இ-ள்) எங்கும் கவணப்பந்தரிட்டு வீதிகளெல்லாங்கனகமயமானதோரணங்கள்கட்டித், தேவநகரம்போலத்தோற்ற நகரெங்கும் பூரணக்கும்பம், கவரிசொர்ன்னக்கொடி, குடைகண்ணாடி, சந்தனக்கோலங்கள், கமுகு கரும்பு, வாழை தென்னம்பாளைகள் தொங்கவிட்டு அஷ்டமங்களங்களால், லட்சுமீகரம்பொருந்த திருவோகநகரத்தை மிகுந்தஅழகுபெறஅலங்கிரதஞ்செய்தான.—எ-று. (௰)

ஒருமருப்பருக்குநாழி குமரருக்குகளிநீ
ளிருமருப்பணிக்கடம்ப ரினியபூசைநனிபுரிந்
தருமருப்பருக்கவேணி வடுகரர்ச்சனைக்குளாய்
வருமருப்பருட்கமன்ன வாத்துபூசையேத்தினான்.

(இ-ள்) ஒற்றைக்கொம்புடையயானைமுகத்துவிநாயகமூர்த்திக்குத் தேங்காய்களுடைத்து நிவேதனஞ்செய்து, வாசனையுடைத்தான கடம்பமலர் மாலைசூடிய பன்னிரெண்டு புயக் குமாரருக்கு இனிதாகப்பூஜைபுரிந்து அருமையான வெள்ளெருக்கமலர்மாலைசூடிய சடையுடையபரமேசுவரனுக்கும் பூஜையும் வயிரவார்ச்சனையுஞ்செய்து பகைஞரைச்செயித்த மன்னவனை சிங்கவன்மராஜன் வாத்துப்பூஜையுஞ்செய்து வணங்கித்துதித்தான்.—எ-று. (௰௧)

இந்திராதிலோகபால ரெய்துபூசைசெய்துநாற்
புந்திவேதரால்விளங்கு புண்யயாகநண்ணவே



தந்திரங்களால்தொனிப்ப யாகசாலைதருந்தொழிற்
சிந்தைமுற்றியுந்திலங்க திசைபுகழ்ப்பணிந்தனர்.

(இ-ள் இந்திராதி அஷ்டதிக்குப்பாலகருக்கும் பூஜைபுரிந்து போதமாகிய வேதியரால் விளங்குமட்டியாக புண்ணியயாகசாலை செய்து யாகங்கள் சமைமேல வேதாகம மந்திர தந்திரங்களால்ஓசைமுழக்கமாக யாகசாலையிற் செய்யுந்தொழில் முறைமை யாகுதிகளெல்லாந் தேவர்கள சந்தோஷமாகும்படி நிறைவேற்றித் திருமாலுந்தியில்வந்த சதுர்முகப்பிரம்மாவையும் பூசித்து வணங்கினான். (௰௨)

பிரமபோசனங்கள்கோடி கோடியிற்பெருக்கினான
வரமடேசுரர்குமா படத்தருக்குமாண்ணினான்
றெருநிறைந்தகளபகுங்கு மப்பன்னீர்பனித்தறினா
னிரவிபோலமணிகடீப மேற்றியேற்றமேற்றினான்.

(இ-ள்) கோடி கோடி பிராமணர்களுக்குப் பெருக்கமாகப் போசனங்கள் சமர்ப்பித்து மகேசுரருக்கும், மடாதிபதிகளுக்கும், அப்படியே போசனஞ்செய்வித்துத், தெருவெங்கும் நிறைந்து மணக்கமழுங் களப குங்குமம், பன்னீர்க்குழம்புகளிறைத்து, சூரியப்பிரகாசம்போல ரத்தினமணித் தீபங்களும் அளவில்லாத நெய் தீபங்களுமேற்றிவித்தனன்.—எ-று. (௰௩)

முப்பயற்கன்முப்பழங் கரும்புபாகுமுறிகொட்ட
னப்பபப்புறப்பரப்பி லாரவாரவருளினை
னிப்படிச்சிறப்புநல்கி யிப்படிச்சிறப்பமே
லொப்பறச்சிறந்ததேர்க ளொளிவடந்தொடங்கினான்

(இ-ள்) மூன்றுவகை வர்க்கங்கள், முப்பழங்கள், கரும்புகள், பால், தயிர், உசிதமான சர்க்கரை, தேன், அப்பவர்க்கம், வடை, பருப்பு, பாயசங்கள், முதலான பதார்த்தங்களெல்லாஞ் சமர்ப்பித்துச் சுவாமிகளுக்குத் திருப்தியாக நிவேதனஞ்செய்வித்தான். பரிபூரணமாகச் சகல சிறப்புஞ்செய்து மண்டலமெல்லாம்புகழ ஒப்பிலாம லுயர்ந்த ரதங்களில் ஒளிபொருந்திய வடங்கள்பூட்டி நடத்தத்தொடங்கினான் சிங்கவன்மராஜன்.—எ-று. (௰௪)

கனகசோபிதந்தயங்கு கனகசல்லிசல்லியிற்
புனையுமாரவாரமாலை பொற்சதங்கைகிண்கிணி
நினைவிதத்ததண்டையோடு நிறைபதாகைமாலிகை
புனைபோராழிபிரதமீ தெனக்கனப்புதுக்கினான்

(இ-ள்.) சொர்ன்னப்பட்டாடைகள் கனகசல்லி சங்கிலிகள் விசித்திரமான ரத்தினமாலை, முத்துமாலைகள், சொர்ன்னச் சதங்கைகள் கிண்கிணிகள் விதவிதமான தண்டை, சொர்ன்னச்சரிகை நிறைந்த துவசங்கள், சாப்பணிமாலைகள், புட்பமாலைகள், இவைகளெல்லாஞ்சூட்டிச் சூரிய னொற்றையாண்டில் தேரிது மென் இம்படியாகக் கனம்பொருந்தப் புதுமையாக அலங்கிர்தஞ்செய்தான்.—எ-று.

பாம்பணிந்தநாகவீச ரொன்றுடன்படர்ந்தபொற்
காம்பணிந்தவாலவட்டக் கணமடாந்தநிறைநிலாக்
கூம்பணிந்தெனத்தனர் குடைகள்கோடிகுழுமியாழ்த்
தேம்பணிந்தளங்கள்பாடல் தேவர்கின்னரகதரே.

(இ-ள்.) நாகாபரணந்தரித்த நகேசரொன்று உடன்படர்ந்து வருவதுபோலச் சொர்ன்னக்காம்பணிந்த ஆலவட்டத்திரட்சிகளும், பூரணச்சந்திரன் குவிந்தது

போலும் குளிர்ந்த வெள்ளைக்குடைகள். கொடி அடர்ந்து பிடித்துவா தேன்போலுமாதுரியமான பண்வரிசை, பாடல்கள், நாககீதங்கள், தேவர் கின்னரர்கள்போலும், அநேக சனங்கள் பாடிவரவும்.—எ-று. (௰௬)

கவரியாலவட்டமுங் கலந்துசாலசைப்பதின்
றிவரியாசனப்பாற் கியாம்பகைப்ப தில்லெனை
வுவரியாரணக்கனேடும் வந்துமாருதஞ்செறிந்
தவறியாழிவிழியோர்பங்க நறிகுவீரெனபோலுமால்.

(இ-ள்) வெண்சாமரைகளும், ஆலவட்ட விசிறிகளும், சுவாமி முன்பு இடைவிடாமல் சாற்றண்டாகத் திருவடியார்கள் வீசிவருவது சிங்காசனாதிபதியான பரமசிவனுக்கு நாங்களிருவரும் பகைத்துக்கொள்வதில்லையென்று சொல்வதுபோலுங் கடல்சூழ்ந்த வுலகத்தைத்தாங்கிய அனந்தனேடும்வந்து மாருதியோடு கலந்து செறிந்து செவ்வரி பொருந்திய வேலைப்போன்ற கண்களையுடைய வுமையொருபாகரே! நீரறிவீரகவென்று சொல்வதுபோலுமிருந்தது.—எ-று (௰௭)

சங்கைதங்குரன்வணங்க வண்கைசங்கம்போலுமா
மங்கவெங்குமிங்கிதங் கடந்துமுன்றமுழங்குமா
லெங்கள்மங்கைபங்கர் முன்றி லின்பமன்றலன்பவே
பொங்குமங்கலங்தலங்க ளெங்கணும்பொருந்தவே.

(இ-ள்) மஹாலட்சுமி தங்கிய மார்பனை விஷ்ணுதேவர் கைச்சங்கம்போலு மெங்கெங்கும் அனேக சங்களுதங்கள் அனேகர் முழக்கஞ்செய்துவர, எங்களர்த்தநாரீசுவரசுவாமிக்கு இங்கிதவின்பமான திருக்கல்யாணத் திருவிழாவென்று சகல சனங்களும் சந்தோஷமாகவும் சருவாபரணாலங்கிரத விசேஷவினேதராகவும் சுவாமி திருமுன்பு தொழுதுவரத் தலங்களெல்லாம் பொங்கமாகச் சுபசோபன மங்களாகரம்பொருந்தி விளங்கிற்று.—எ-று. (௰௮)

சேனமேறமாயன்வேத சீலனேகியேறநால்
யானையேறுவானராசன் யாருமூர்திமேறவே
மானமேறமேளதாள வாளகோடமேறவாழ்
வேனைஞாலமேறவேல ரீசர்தேரிலேறினர்.

(இ-ள்) ஆதிகேசவ மாயவன் கெருடவாகனமேறிவர, பிரமதேவன் அன்னவாகனமேறிவர தேவராஜன் வெள்ளை யானையின் மேலேறிவர மற்றுஞ் சகல தேவர்களும் அவரவர்வாகனங்களில் அவரவரேறிவர அண்டமுகடு மேளதாளவாத்திய கோஷடங்களேறப் பூமண்டலகளெல்லாஞ் சுகமுண்டாகிவாழ செங்கோட்டுவேலரும, அர்த்தநாரீசுவரரும் இரதமேறினர்கள்.—எ-று. (௰௯)

பொற்றடம் வடந்தசைப் புயங்கசேடனென்னமே
லுற்றதேர்கள் மேருநின்ற வன்னதக்கை யுண்ணவூர்
பெற்றியாழி யோசையாழி பெற்றவோசை பற்றவே
செற்றிலாது தேர்நடத்து திருவிழா நடத்தினன்.

(இ-ன்) அப்போது பொன்னாற்செய்த வடங்கள் எட்டும்பிடித்து சகலஜனங்களும் வணங்கித் தொழுது வடந்தொட்டிழுப்பது அஷ்டமாநாகங்கள் போலுந் தோற்றப்பட்டது. மேலுயர்ந்தோங்கிய தேவர்களினுடைய வன்னதங்களைப்பார்த்து இவை மார்க்கங்களெல்லாம் பொன்மேறுவென்று சொல்லிபுகழ்ந்து வணங்க



தேர்நடக்கிற வண்டி ஓசைகள்சமுத்திரகோஷம்போலும் முழங்கிவிளங்கமனோ பக்தியாகச் சர்றம் இடையூறில்லாது சிங்கவன்மராஜன் திருத்தேர் திருவிழா நடத்தினன்.—எ-று. (௨௰)

கொங்குமண்டலங்கள்செய்து கொண்ட புண்ணியங்கள்பா
ரெங்கு மண்டலங்களுக்கு மண்டருக்கு மில்லையால்
சங்கரற்கு வந்தசங்க மத்தர்வேத முனிவர்போர்த்
துங்கமன்னர் தேவர்மேவு தொல்விடங்களானதால்.

(இ-ள்) கொங்குமண்டலஞ் செய்துகொண்ட புண்ணியங்கள் பூமண்டலங்களுக்குமில்லை, தேவர்களுலகதிற்குமில்லை, சங்கரமூர்த்திக்கு உகந்த குருவிலிங்க சங்கமங்களும், வேதமுனீசுவரர்களும், போர்த்தொழில் வீரமுடைய அரசர்களுந் தேவர்களுமருவி நிரைந்திருந்தால் பூர்வபுண்ணியஸ்தலமாணதென்று சூதமுனிவர் சொன்னர்.—எ-று. (௨௧)

பணிமலைப் பரப்புரத்த பாரவோரகங்களின்
மணியணிக்கொள் சிங்கவன்பர் வண்செயங்கலத்தினில்
தணிவிலாத் தலகளாத் தலந்தனிற் கொணர்ந்துநீ
ளணிகொள்சங்க மர்க்கும்வேதி யர்க்குமாக வருளினன்.

(இ-ள்) அந்தநாககிரி அடிவாரச் சாரலில் தேவபுரம்போலும் அழகிய திருச்செங்கோட்டுத் திருவோரக நகரத்தில் வந்துவசித்து திருவிழா நடத்திய மணிப்பணியணிந்தழகிய சிங்கவன்மராஜன் தன்னுடைய செயங்கல புரத்திலிருந்து குறைவில்லாமல் வெகு தனங்கள் வரவழைத் த்தனை யிருக்கின்ற நீறுபூசியசங்கமற்கும் பிராமணருக்கும் மகாதானங் கொடுத்தருளினன்—எ-று. (௨௨)

அன்ன சத்திரங்களன்ன நன்மடங்க ளாலயந்
தென்னூல்வேத கூட்டம் வேதியர்க்கும் வான்மனைத்திரள்
மன்னு செல்வ வகரநாவ லர்க்கிருக்கை நால்வகை
வன்னவீதி கோடி கோடி மாநகர்ப்படுத்தினன்.

(இ-ள்) அன்னச்சத்திரங்களும், அநேக திருமடங்களும், திருவாலயங்களும் தென்கலையோதுவார் திருக்கூட்டங்களும், சேர்ந்ததிருமாளிகைகளும், பிராமணருக்கு வாழ்வுபொருந்திய மனைகளனேகங்களும், செல்வம் நிறைந்த அக்கிராரங்களும், நாவலர்களுக்குத் திருமாளிகைகளும், சமர்ப்பித்தருளி நால்வகை வருணத்தார்கள் விளங்கிய வீதிகள் கோடி கோடி திருச்செங்கோட்டு மஹாஸ்தலத்தில் விளங்கியிருக்கச் சிங்கவன்மராஜன் செய்தமைத்தான்.—எ-று. (௨௩)

பாவைமார்முன் னூறோடாறு பத்தர் சித்திரத்தார
யாவலாலய த்தினுக் கமைத்தன னெந்நாளினும்
பூவினோடு நானகற் புரங்கதம்ப குங்குமந்
தேவிபங்கருக்கும்வே லவர்க்குமிக்க செய்தனன்.

(இ-ன்) மனோபக்தியோடு கட்டழகான பெண்கள் முன்னூற்றறுபதுபேர் சுவாமி திருவாலயத்தில் சதாகாலமுஞ் சேவித்துக்கொண்டு வாழ்ந்திருப்பதாகவும், எந்தக்காலத்திலும் நடந்துவரும்படி திவ்யசந்தனங், கர்பூர, குங்கும, கதம்ப, வர்க்கங்களும் அநேகபுட்பமாலைகளும் உமையொருபாகருக்கும் வேலவருக்கும் மிகுந்த சிறப்பாகச்செய்தமைத்தனன்.—எ-று. (௨௪)

அனந்த சத்திரங்களங் கனங் கனங்கு ளாக்கினு
னினைந்த போது நாளிலாயிராவெரனின குடங்களால்
வனைந்த காவிரிப்புனல் கிரிப்புனலொன்றாயிர
மனந்தாங்கவலைர்க்குமத்த நாரிபர்க்கு மாட்டினன்.

(இ-ள்) அனந்தஞ் சத்திரசாலைகள் அங்கங்கே உண்டாக இவைதான் நினைத்தபோதே யெல்லாம் நாளொன்றுக்கு ஆயிரஞ் சொர்ணக் குடங்களால் புனிதமான காவேரி தீர்த்தங்களும் கிரிதீர்த்தங்களும் ஆயிரங்குடஞ்ஜலங்களாகவே பெருகும் அர்த்தநாரீசுரருக்குத் திருமேனி குளிர சிங்கவன்மன் அபிஷேகஞ்செய்தான்-எ-று.

புழுகு குங்குமங்கள் சந்தனங்கள் கர்ப்புரங்கள் மேல்
முழுகிவெள்ளம் வெற்பிலோட முழுமணித் துகிற்புனைந்
தெழுபராயு கந்நகிக் கிரத்நச்சோதிமேலிட
முழுதுமின்னிமிற்களிப்ப முக்கணற் களித்தனன்.

(இ-ள்) புனுகு, குங்குமங்கள், சந்தனம், கர்ப்பூரங்கள், குழம்புகளெல்லாஞ் சுவாமிகள் திருமேனிமுழுகி மலையெங்கும் பெருகி ஓடும்படியாக அபிஷேகஞ் செய்து நவரத்ன மணிச்சோலைத் துகில்கள் தரித்துப் பனிரெண்டு சூரியருதித்த சோதிப்பிரபையைப் போலுங் கதிர்விரிகின்ற ரத்தினாபரணங்கள் புனைந்து நவரத்தின மழுத்திய சொர்ணக்கிரீடமுந் திரியம்பகனை பரமேசுவரனுக்குத் தரித்தருளினன்.—எ-று. (உசு)

வாலிசுக்ரீவசுராசுரர்மேனா வரகணங்கள்பலேபினுற்
பாலின்வேலைகடைபவந்த பாரவாரவமுதெனத்
தாமென்னமணிகனோம தாலமாயிரத்தினி
லேமமாநெய்வேத்தியங்களை த்தியேத்தியேத்தினன்.

(இ-ள்) வாலி, சுக்கிரீவன், சுராசுரர்கள் எல்லாங்கூடி திருப்பாற்கடலை மந்திரகிரியினால் மர்த்தனஞ்செய்தபோது அங்ஙனம் உதித்தெழுந்துவந்த தேவாமிர்தம் போலுந் திவ்விய அமுதபோஜனமுதலாகிய சகல பதார்த்தவர்க்கங்களும் பொன்மணித்தாலங்கள் ஆயிரந்தாலங்களில் நிறைய அமைத்து மஹா நிவேதனஞ் செய்து தாம்பூலஞ்சமர்ப்பித்து சோடச உபசாரஞ்செய்து புட்பாஞ்சலியிட்டு வணங்கித்துதித்தான்.—எ-று. (உஎ)

ஏற்றிபத்தநாரிலிங்க போற்றியெந்தைபோற்றிவெங்
கூற்றுதைத்தசரணே போற்றி குன்றபோற்றிகொன்றையாய்
போற்றிநாகவெற்பபோற்றி புனிதபோற்றிபுலிகளிர்த்
தாற்றரந்தவைய போற்றி பைம்முகத்தபோற்றியே.

(இ-ள்) அர்த்தநாரீசுரனே! போற்றி என் பிராணேசுரனே போற்றி கொடிய காலனையுதைத்த சமலபாதனே! போற்றி, கொன்றைமாலைசூட்டிய சடைமுடியுடையவனே! போற்றி, திருநாககிரிக்கர்த்தனே! போற்றி, நிஷ்களங்கசுத்தனே! போற்றி யென் பவியுருவத்தைத் தவிர்த்து நல்லவடிவு தந்தருளிய அய்யனே! போற்றி ஐந்துமுகமழகிய சிவனே! போற்றி போற்றியென்று தோத்திரஞ்செய்தான்.—எ-று. (உஅ)

கந்தபோற்றிபன்னிரண்டு கைத்தலத்தபோற்றிவேற்
குந்தபோற்றிதெய்வசேனைக் கொழுனபோற்றியறுமுகத்



தெந்தை போற்றிசிந்துரத் தெழிற்புயத்தபோற்றிமா
மைந்தபோற்றிவள்ளிபங்க மயிலிடத்தபோற்றியே.

(இ-ள்) கந்தசுவாமியேபோற்றி, பன்னிரண்டு கையனேபோற்றி, வேளாயுதக்கடவுளேபோற்றி, தெய்வசேனை மணவாளனேபோற்றி, குமாரசுவாமியே போற்றி, சிந்தூர சந்தன களபந் தரித்தழகிய மார்பனேபோற்றி, சிவனுமைமைந்தனேபோற்றி, வள்ளிபங்காளனே, மயில்வாகனக்கடவுளே! போற்றி போற்றி யென்று சிங்கவன்மராஜன் குமாரசுவாமியைப் போற்றிசெய்து வணங்கினன்.

எனவணங்குசிங்கவன்ம னிமையபாகண்புணர்ந்தநா
கனகவர்த்தநாரிநாதர் கந்தனைப்பயந்தநீ
தவன்கர்கொங்குநாடர்கோதை யைமுகத்தராருள்புரிந்
துனதுசிந்தையுற்றநல்வ ரங்கள்கேளென்றோதினர்.

(இ-ள்.) என்றிப்படி வணங்கிப்போற்றிசெய்த சிங்கவன்மராஜனுடையமனோபக்தியறிந்து நாககிரி யர்த்தநாரீசுர சுவாமியார், கந்தசுவாமியைப்பெற்றருளியஅனகர், கொங்குநாட்டதிபர் கோதைநகர்க்கிரியிலெழுந்தருளிய ஐந்துமுகக்கடவுளான உமையொருபாகர் கிருபைசெய்து உன்னுடைய மனத்தில் நன்மையான வரங்கள் கேளும் அரசனே யென்று சுவாமிசொன்னார்.—எ-று. (௩௰)

அன்னகாலைசிங்கவன்ம னடியன்மண்டலந்தனி
லென்னில்வேறோரதிபரின் றெனக்கோர்மைந்தனுதவென
மன்னசத்தியவன்மனென்னு மைந்தனித்தலப்புரந்
துன்னில்வீறுமீறுமெம் முபயசாரெனச்சொன்னார்.

அப்போது சிங்கவன்மராஜன், சுவாமீ! யடியேன் அரசாட்சியாக ஆளப்பட்ட மண்டலத்தில் பிற்காலத்தில் அரசாளும்படியாக வேறொரு மன்னவர்களில்லை ஆதலாலெனக்கொரு சற்புத்திரனைக் கொடுத்தருளுமென்றான். அப்படியே சுவாமியும் வாராய் சிங்கவன்மராஜனே, சத்தியவன்மனென்றொரு பிள்ளையுண்டாகி யுன்னிலும் அதிகமாக இந்த வுலகத்தை யாண்டிருப்பான். பிற்காலத்தில் நமது உபயபாதஞ் சேர்வானென்று சுவாமி சொல்லியருளினார்—எ-று. (௩௧)

அத்தநாரிமுக்கரீயு மவ்வரங்கள்பெற்றபின்
சித்தமிட்டகாமியஞ் சிவனடியாரோர்க்
குத்தமத்திறுதவிதாக வோங்கவேரகத்துவாழ்
முத்தர்தாள்வணங்கிநின்று மொழியுமாசிவேண்டினன்.

(இ-ள்.) அர்த்தநாரீசுவரர் கொடுத்தருளிய வரங்களெல்லாம் பெற்றுக்கொண்ட பின்பு சிவனடியாரான பெரியோர்களுக்கு இஷ்டகாமியார்த்தங்களெல்லா முதவிசெய்து உத்தமசித்தனாகி நாககிரிசூழ்ந்த திருவேரகத்தில் முத்தராகிய பெரியோர்கள் பாதங்களை வணங்கிநின்று அவர்கள்சொல்லும் ஆசீர்வாதங்கள் விரும்பி வேண்டினன் சிங்கவன்மராஜன்.—எ-று. (௩௨)

ஆசிகூறவளவிலாத வன்னசொன்னநிதிநந்
தேசமீதுசேருமென்று சேனையானைபுரவிதே

ரேசில்சேனையென்ரோர்வெள்ள மீறிலாதுசூழ்கவே
மாசில்தீரசிங்கவன்மன் மாநகர்ப்படர்ந்தனன்.

அந்தத்தலத்திலிருக்கும் குருக்கள்மார்முதலாகிய மேலோர்கள் யாவரும்ஆசீர்வதிக்க, அவர்களுக்கு அளவில்லாத அன்னதானங்கள்கொடுத்தருளியபின்புநமது தேசத்திற்குப்போய்ச் சேருவோமென்று யானை, குதிரை சதுரங்கசேனை ஒரு வெள்ளம் அளவில்லாமல் சூழ்ந்துவரத்தனதுதேரின்மீதேறி நிஷ்களங்க சுத்தனை சிங்கவன்மராஜன் தனது மஹா நகரத்திற்குச்சென்றான்—எ-று. (கக)

படந்துஞானபிருகுதாள் பணிந்திவ்வாறெலாமுரைத்
தடர்ந்தபாதவம்புயந்த னணிமுடிக்கணிந்துபார்
திடந்தயங்குசோலைசூழ் செயங்கலந்தடைந்துபொன்
னிடங்கொள்சிங்க வாகனத்திருந்துபார்புரந்தனன்.

(இ-ள்.) அப்படிச்சென்று ஞானமூர்த்தியான பிருகுமுனிவரைக்கண்டவர் பாதத்தை வணங்கி இங்ஙனம் நடந்தவரலாறெல்லாஞ் சொல்லி அவர்பாதாம்புயத்தைத்தன்னழகிய முடிக்கு முடியாகவணிந்து மிகவுந்திடம்பொருந்தி விளங்கியசோலைநதிசூழ்ந்த செயங்கலபுரத்திற்சேர்ந்து லட்சுமி தேவிக்கிடமான சொர்ண சிங்காசனத்திலிருந் திவ்வுலகத்தை ஆண்டிருந்தான் சிங்கவன்மராஜன்.—எ-று.

புரந்தரனிருக்கைபொற் புரந்துபார்நிரந்தரம்
வரந்தயங்குசத்யவன்ம மைந்தனைப்பயந்துதன்
னுரந்கரத்தன்னுலகையாள வுதவியத்தநாரிதாள்
சிரந்தரப்பொருந்திநல்ல செல்வமெய்திவாழ்ந்தனன்.

(இ-ள்.) நிரந்தரமாக இந்தப்பூமண்டலத்தைத் தேவேந்திரனைப்போல அரசுபுரிந்து வாழ்ந்திருந்தான். அதுகாலத்தில் சிவனுடைய வரப்பிரசாதத்தினால் சத்தியவன்மன் என்னும் புத்திரனைப்பெற்று வளர்த்து பருத்தரிவுண்டாக்கிய பக்குவத்தில் தன்னுலகத்தை அவனாளும்படியாக முடிசூட்டிவைத்து நாககிரி அர்த்தனாரீஸ்வர சுவாமி பாதங்களைச் சிரத்தினும் மனத்தினும் பொருத்தி சிங்கவன்மராஜன் வாழ்ந்திருந்தான்.—எ-று. (கஎ)

சிங்கவன்மர்காதையைத் தினந்தினம்படித்துளோ
ரிங்கிதத்துவந்துகேட்கு மினியரத்தனாரியார்
துங்கநல்வரம்படைப்பர் சோதிவேலராருளினா
லெங்கணுஞ்சிறந்திருப்ப ரிடர்களன்றிவாழ்வரே

(இ-ள்.) இந்தசிங்கவன்மராஜன்கதையைத்தினம் படித்தபேர்களும்மனதன்புடனே ஆசையாகக்கேட்கின்றவர்கள் யெல்லாம் அர்த்தநாரீஸ்வரசுவாமி கடாக்ஷத்தினாலே மேன்மையாக நல்லவரப்பிரசாதங்களைப் பெறுவார்கள். சோதிப்பிரகாசமான வேலருடைய திருவருளினாலே யெங்கெங்குஞ் சிறப்பு பொருந்தி யிருப்பவரு மன்றி சகலமான இடர்களுந்தீர்ந்து வாழ்வார்கள்.—எ-று. (கஅ)

திருவிழாச்சருக்கம் முற்றும்.

ஆகச் சருக்கம் சஉ-க்கு திருவிருத்தம் காஉ0.

# பாண்டவச் சருக்கம்.

நாகாசலம்நா னிலம்வந்தனவும் நாகீசன்
மாகாரணமும் பூசைபுரிந்தார் வளமுற்று
மோகாதரவன் னிக்கினிதாகிய முருகேசன்
சேகார்வினையென் றனவும்வரவுஞ் செயல்யாவும்.

(இ-ள்.) அந்தத் திருநாககிரி கொங்குமண்டலத்தில்வந்த வரலாறும், சுவாமி உமைக்கு அர்த்தபாகங்கொடுத்ததும் அர்த்தநாரீசுரராக எழுந்தருளிநின்றகாரணங்களும், பூஜை புரிந்து நல்லவரங்கள் பெற்றவர்கள் வளமைமுழுதும் வள்ளியம்மனுக்கு ஆசையுடைய முருகவேள், வயிரவர்க்கமான சூரர்களை வென்றிகொண்டதுவும் அவர் அங்ஙனம் எழுந்தருளிநின்ற செயல்களனைத்துஞ் சொன்னீரென்று முனிவர்கள் சொல்லுகிறார்.—எ-று. (க)

தெய்வக்கிரிபோற் செங்கோடுதவுந்தெண்டீர்த்த
முய்வித்தனவுஞ் சிங்கவன்மக்கோ வுயர்சாபம்
நய்வித்தனவு மவனருள்வளமும் நவில்கின்றீர்
மெய்வித்தகமி னியாதெனமுனிவன் வியந்தோதும்.

(இ-ள்.) தெய்வகிரியான பொன்மேருகிரி திருச்செங்கோடுமலைத்தலத்திலுண்டாகிய தெள்ளிய தீர்த்தங்களினுடைய வரவுமகத்துவமும், சிங்கவன்மராஜனுடைய புலியுருவமானசாபம் நிவாரணமும், அவன்செய்த கைங்கிரியங்களனைத்தும் எங்களுக்குத்தெரியப்படச் சொன்னீர். இனி மெய்வித்தகமான மகிமைகள், என்ன சொல்வீரென்று முனிவர்கள்கேட்கச்சூதமுனிவர்மகிழ்ச்சியுடனே சொல்தொடங்கினர் —எ-று. (உ)

வெண்ணிறமன்னன் வியந்தருளைவரை வெம்பூசற்
குண்ணிறையுறநின் றக்கடச்சூதுறவாடிக்
கண்ணிறைநகருஞ் சதுரங்கத்தினிற் கையாவும்
பெண்ணிறையுங்கொண் டார்நீதகமன் பெருவேந்தர்.

(இ-ள்) வெண்ணிறமேனியான பாண்டு ராஜன் அருமையாகப் பெற்றபுத்திரர்கள் ஐவரையும் வெம்மையாகிய போர்பொருதி வெல்லும்படியாக வலிமையும் அறிவுமில்லாமல் கபடமாகச்சூதாடி அவர்களுடையநகரங்களையுஞ் சகலபொருள்களையுஞ் சதுரங்கசேனைகளையுங் கவர்ந்துக்கொண்டு பெண்கள் சிரோன்மணியான கற்புடைய திரௌபதையை மானபங்கமுஞ்செய்தார்கள், திருதிராட்டிரராஜன் பெற்ற புத்திரரான துரியோதன ராதியர்கள்—எ-று. (௩)

அக்காலையில்வீ மனுமர்ச்சுனனு மமரிற்போ
யக்காலையர்நூற் றுவரைத்துஞ்சப் பொருவோமென்
றிக்காரணமுற் றனர்தருமன்கண் மனிதாற்றித்
தக்கான்பெரிதொரு தந்தைகருத்தே தெனவுற்றான்.

([illegible]ள்.) அக்காலத்திலே பீமசேனனும் அர்ச்சுனனும் மஹாகோபத்துடனே [illegible]ப் பொய்ச்சூதாடின நூறுபேரையும்இறக்கும்படியாகப்போர்பொருது

சொல்லுவோமென்றெழுந்திருக்கண்ட தர்மராஜன் தம்பிமார்கள் கோபத்தைத் தணித்துத்தகைமையுடைய பெரியதகப்பனுருடையமனத்தை யறிவோமென்று அவனிடத்திற்சேர்ந்தான்.—எ-று. (௪)

பன்னிருவருடங் கானமுறைந்தும் பதிநீங்கிக்
கன்னிறைசுரமுக லுறைகுவிர்சிறிதே கண்டாலும்
முன்னுரைநாள்விட வந்திலை முதலாய் முயல்கின்றே
மன்னியதந்தை யுரைத்தனன்மாறு வனமுற்றார்

(இ-ள்.) பன்னிரண்டு வருஷம்நீங்கள்நாட்டைவிட்டுக்கானகமே வனவாசஞ் செய்வீராக அப்போதுங்களையாரொருத்தர்கண்டாலும் அன்றுமுதல்பன்னிரெண்டுவருடம் கானகத்திற்குப்போக வேண்டும்என்று பெரியதகப்பனர் சொன்னர் அப்படியே பாண்டவர்கள் வனவாசம்போனார்கள்—எ-று. (௫)

வெவ்வனமுற்று மடைந்துமிடைந்துடல் விழிவார்போற்
செவ்வனநயனன் செங்கோட்டியல்கண் டினிதேறி
மெய்வனமொழியும் வதிர்ப்புமகன்றவ் வெற்பேறிக்
கய்வனநிறையுங் கணபதிசுனையின் கண்ணுற்றார்.

(இ-ள்.) வெவ்வியவனங்களெல்லாஞ்சென்று சஞ்சரித்துஉடல்மெலிந்துவீழ்வார்களைப்போல வனவாசஞ்செய்து வரும்போது செவ்வன்னமான அக்கினிக்கண்ணையுடையசிவனது திருச்செங்கோட்டினழகுகண்டு இனிதாக மலைமேலேறி மெய்வன்னங்குன்றிய துக்கங்களுந்தீர்ந்து அம்மலையிடத்திற் குளிர்ந்தபுனலுடைய துதிக்கை கணபதியார் செய்தமைத்த கணபதித்தீர்த்தத்தைக் கண்குளிரக்கண்டார்களனைவரும்.—எ-று. (௬)

கணபதிதீர்த்த முதற்சிலதீர்த்தங் கண்டாடிக்
குணபதிமுதல்வரு மவ்வலன்வந்தார் குளிர்வெற்பில்
விணர்பதிமுருகுடை மெய்ச்சுனைமூழ்கிய வேலோன்று
ணுணர்வொடுவனவிண் டினைற்றீர்த்தத் துறைகின்றார்.

(இ-ள்.) கணபதிதீர்த்தமுதலாகச்சிலதீர்த்தங்களைக்கண்டுதீர்த்தமாடி நேமத்துடனே வலப்பிரதக் கணமாகச்சுற்றிவந்தார்கள் பின்னுங் குளிர்ச்சியுடைய மலையிடத்தில்தேவர்சேனாபதியான முருகவேள் செய்த குமாரச்சுனைத்தீர்த்தத்தில்மூழ்கிவேலவர் பாதங்களைத்தியானித்துக்கொண்டு பின்பு விஷ்ணு தீர்த்தக்கரையில் வசித்திருந்தார்களனைவரும் — எ-று. (௭)

அறிதருசுனையிற் பரிவொடுமூழ்கி யரன்பாதந்
தெரிவுறநின்று வணங்கியபின்னைத் தீர்த்தத்துட்
புரிதருகட்கம் புகல்வனதும்போ ரிலைமாற்றார்
சரிவுறவங்ஙனம வருகுதும் யானெனச்சாற்றிற்றால்.

(இ-ள்.) விஷ்ணுதீர்த்தத்திலும் அன்புடனேமூழ்கிசிவனுடையபாதங்களைத் தெரிசித்துவணங்கி நின்றபின்பு அந்தவிஷ்ணு தீர்த்தத்திலுட்புகுந் திருக்கின்ற கட்காயுதஞ் சொல்லுகின்றது, நீங்கள் பகைவருடனேபோர் செய்யும்போதுங்கள்



மாற்றார்களனைவருஞ் சரிந்து சாயும்படியாய் அங்ஙனம் உங்களுக்குதவியாக வருகின்றேனென்று சொல்லியது.—எ-று. (௮)

ஐயபாண்டவரும் ததிசெயமெனநின் றருளேத்தி
நய்பாலொருவயி ரவதீர்த்தம்பொன் னகமீதுற
செய்பாதியுமென் னுயிரதீர்த்தந் செறிவாமென்
றெம்பால்வேதவி யாதருரைத்தன ரிதுவாமால்.

(இ-ள்) அதுகேட்ட பஞ்சபாண்டவர்களனைவரும் இதுமகா அதிசயமென்று மனத்திலெண்ணி இதுவுஞ் சிவன் கிருபையென்று தோத்திரஞ்செய்து பொன்மலையான செங்கோட்டு மலைமீது அர்த்தநாரீசுரர் எழுந்தருளி இருக்கின்றாரென்றும் நம்போலவர்க்கு வெற்றிவிஷயங் கொடுக்கின்றது, வயிரவ தீர்த்தமொன்றிருக்கிறதென்றும் கிரியெங்கும் எண்ணாயிரந் தீர்த்தங்கள் செறிந்திருக்கிறதென்றும் நம்மிடத்திலே வேதவியாசர் முன்னே சொல்லியிருந்தார். அதுவே இதுவாமென்று தெரிந்து களிகூர்ந்தனர். —எ-று. (௯)

எனவயிரவதீர்த் தத்திலிழிந்தோ ரைவேந்தர்
கனமுறுகோலவ னைப்பொருபடைபலகண்டாரால்
புனையுறமூவுல கினுமிதுபுதிதெம் போர்வென்றே
வினையகலும்மிவ வெற்பினிலெய்திவ் விறல்பெற்றோம்.

(இ-ள்) என்றிப்படிச்சொல்லி வயிரவதீர்த்தத்தில் இறங்கி மூழ்கி அங்ஙனம் வசித்திருந்தார்கள். பாண்டவர்களனைவரும் பெருமையுற்ற மனோசாரஜன் முன் புகோலவனைச் ஜெயித்தபடியே பலபடைகளுங் கண்டார்கள். அழகிய இந்தத்தலமும், தீர்த்தமகிமையும், திருலோகத்திலுமிது புதுமையென்று மெச்சிக்கொண்டு இனி நம்முடைய பகைவரைப் போர்க்களத்தில் ஜெயித்து வெற்றிகொள்ளலாம். இந்த மலையில் வந்துசேர்ந்து இவ்வளவு சவுரியம் பெற்றோமென்று மகிழ்ச்சியுற்றார்கள்.—எ-று. (௰)

நாகமலைத்தீர்த் தத்தினிலிப்பல னமதானல்
யோகமலைச்சிவ னைப்போற்றிற்பல னுயர்வாமென்
றேகமனத்துட னைவரும்விரதற் கினிதாய்மின்
பாகமலைக்கரு ளர்த்தநாரீசரைப் பணிகுற்றார்.

(இ-ள்) இந்த நாககிரி தீர்த்தங்களில் இவ்வளவு பலன் நமக்குண்டானலும் யோகமிருந்த கிரியிலெழுந்தருளியிருக்கின்ற சிவனைக்கண்டு வணங்கினல் அதிக பலனுண்டாகுமென்றெண்ணி யேகாக்கிரசித்தமாக ஐவரும் இனிதாக விரதஞ் செய்துக்கொண்டு உமையவளுக் கிடப்பாகங்கொடுத்தருளிய அர்த்தநாரீசுரரைக் கண்டு தெரிசித்தும் பணிந்தார்கள்.—எ-று. (௰௧)

வேதியர்முனிவோர் வேதமுரைக்கும் விளைவெய்தி
வேதவியாசர் விளம்பியபடிவிர தம்பூண்டு
சோதிகொள்பதினெண் மூர்த்தமுதற்றண் சுனைமூழ்கி
மாதொருபங்கனை வடிவேலனையர்ச் சனைசெய்வார்.

(இ-ள்) வேதியர்கள் முனீசுரர்கள் வந்து சூழ்ந்து வேதங்களோதவிளைவுற்று முன் வேதவியாசர் சொன்னபடியே விரதங்கள் செய்து சோதிப்பிரகாசமாக

விளங்கிய பதினெண் தீர்த்தமுதலாகக் குளிர்ந்தசுனைத்தீர்த்தங்களெல்லாம் மூழ்கி நேமத்துடனே உமையொருபாகரையும், வடிவேலரையுங் கண்டுதரிசித்து அர்ச்சனை செய்தார்களனைவரும்.—எ-று. (க௨)

வந்தனைசெய்தவன் வருமுமைபங்கன் வாகோயிற்
குந்திபசிழ்பாற் றெற்பசயனத் தூடல்வைகி
சிந்தையராகிச் செங்கோட்டிறையைத் தினமேத்திச்
சந்ததமாயிர நாமத்தா லர்ச்சனைசெய்வார்

(இ-ள்) வந்தனை வழிபாடுசெய்தங்ஙனம் உமையொருபாகர் திருக்கோவிலுக்குத் தெற்குப்பாரிசத்தில் தெற்பசயனஞ்செய்து நேமத்துடனே வசித்து பஞ்சாக்ஷர தியானமுடையவர்களாய்ச் செங்கோட்டீசுவரரைத் தினமுந்தரிசித்து வணங்கித் தோத்திரஞ்செய்து சதாகாலமும் சகஸ்திரநாமங்களால் அர்ச்சனை செய்தார்களனைவரும் —எ-று. (க௩)

அர்ச்சனைசெய்து கிரிப்பிரதக்கண மவர்வந்தால்
நற்சனகன்சொல் சனற்குமரன்றென் னகமிதோன்
பொற்சகமேத்து புலத்தியன்விஞ்சையர் புகுசித்தர்
சொற்சதுர்வேத வியாதமோடாசிகள் சொல்கின்றார்.

(இ-ள்) அப்படி அர்ச்சனைசெய்து கிரிபிரதக்ஷணம் அனைவரும் வந்தார்கள் அங்ஙனம் ஜனகன், சனற்குமாரன், தென்மலையகத்தியன், பொன்றுலகம் புகழப்பட்ட புலத்தியன், விஞ்சையர்கள் வசிக்குஞ் சித்தர்கள் சொல்லுதற்கரியசதுர்வேதவியாசருடனே முனிவர்களனைவரு ஆசீர்வாதஞ் சொல்லுகின்றார்கள்.—எ-று.

அன்னவராசியோ டம்பிகைபங்கனை யடிபோற்றித்
தென்னகர்போயப் பிதிர்க்கடன்முற்றுஞ் செய்தார்க
ளுன்னியமுருகீசுரனை வணங்கிச் சுரர்வேதற்
கன்னங்குருபூ சனைசங்கமர்பூ சனைசெய்தார்.

(இ-ள்) அவர்கள்சொல்லுகிற ஆசீர்வாத வாக்கியத்துடனே அம்பிகைபாகனைக்கண்டவர் பாதங்களைப் போற்றிசெய்து தென்புலம்போய்ச்சேர்ந்திருக்கின்ற பிதுர்கடன் செய்துமுடித்தார்கள். பின்பு வளஞ்செறிந்த முருகீசுரனைக்கண்டு வணங்கி பூசுராகிய வேதியர்க்குச் சமாராதனை செய்வித்து குருபூஜை சங்கமபூஜையும் அனைவரும் செய்தார்கள்.—எ-று. (க௪)

செய்துமைபாகன் செயலாற்சேனைத் திருநாடு
மெய்திகழத்தனு புரியும்பெறவருள் விளைவானூர்
பய்திகழ்மலையிற் றம்பெயரென்றும் பகர்தீர்த்த
முய்தருப்படியுமை பங்கனைவேண்டி யுறக்கண்டார்.

(இ-ள்) அப்படி அர்ச்சனைசெய்து உமையொருபாகருடைய திருவுளச்செயலால் சேனையுந், திருநாடும், மெய்திகழ்ந்த அஸ்துபுரியும் பெற்றுக்கொள்ளும்படியருள்விளைவுண்டார்கள். திருநாககிரியில் தங்கள்பெயரால் என்றைக்கும் புகழ் விளங்குவதாகவும் உய்யும்படியாகவும் உமையொருபாகரைவேண்டி யனைவரும் ஒரு தீர்த்தங்கண்டார்கள்.—எ-று. (க௫)



கண்டபெருஞ்சுனை மறையவர்களொடு பணிவெற்பைத்
தெண்டனுகந்து வியாதரிராசர் தியானமந்திரமோதத்
தண்டுறைமூழ்கியோ ராயிரமந்தணர் தங்கட்கமுதூட்டிக்
கொண்டலெனத்தானங்கள்கொடுத்தவர்குகனைத்தொழுகின்றார்.

(இ-ள்) அங்ஙனம் கண்ட பெரிய சுனைத்தீர்த்தம்வேதியர்கூட்டங்களுடனே திருநாககிரியை நமஸ்கரித்து உகந்து வேதவியாசர் தியானமந்திரமோதக் குளிர்ந்தஜலத்தில்மூழ்கி விரதமாக ஆயிரம் பிராமணருக்கு அமுதபோஜனமும், மேகம் பொழிவதுபோலப் பலதானங்களுங்கொடுத்து பாண்டவர்கள் குமரனையுந்தொழுது துதித்தார்கள்....எ-று. (க௬)

திசைமுகனைச்சிர மீதுபுடைத்தருள் சிறுவிரலின்போற்றி
குசலையர்க்குப தேசந்தருபொரு குருநாயகபோற்றி
கெசமுகனுக்கிளை யவகாங்கேய கிரிக்கிழவபோற்றி
விசையவினைத்தா ருகனைப்படவிடு வேலவபோற்றி.

(இ-ள்) திசைமுகனை பிரமதேவனைச் சிரசின்பேரில் குட்டியருளிய சிறுவிரல்களை யுடையவனே போற்றி, யூகப்பொருளைச்சிவனுக்குபதேசஞ்செய்த குருசுவாமியே போற்றி. யானைமுகப்பிள்ளையார்க் கிளையவனே, காங்கேயனே, குறிஞ்சிக்கிழவனே போற்றி. வெற்றிவினையையுடைய தாருகாசூரன் விழும்படியாக விடுத்த வேலாயுதக்கடவுளே! போற்றியென்னும் தோத்திரஞ்செய்தார்கள்—எ-று

சூரன்மாயத் தொல்வினைவாரித் தொலைத்தருள்குகபோற்றி
கோரந்தருமயில் வாகனகோழிக் கொடியுடையவபோற்றி
வீரந்தருகிர வுஞ்சந்தெறிபட விடுவேலவபோற்றி
சீரன்புளவள்ளிக் கினிதாகியபன் னிருசெம்புயபோற்றி.

(இ-ள்) சூருடைய மாய வல்வினைக்கடலைத் தொலைத்தருளிய குகமூர்த்தியேபோற்றி கோரமாகிய தோகை மயில்வாகனனே கோழிக்கொடியை உடையவனேபோற்று. வீரவலிமையையுடைய கிரவுஞ்சகிரிதெறித்து தீர்த்தூளியாகும்படி விடுத்தருளிய விசயவேலவனே போற்றி. சீருஞ் சிறப்புமிகுந்த பத்தியுடைய வள்ளியம்மைக்கினிதாகிய பன்னிரண்டு புயக்குமரனே! போற்றிபோற்றியென்று துதித்தார்கள்.—எ-று. (க௭)

விண்ணவர்சிறைகள் விடுத்தவபோற்றி விசாலம்புயபோற்றி
நண்ணியவாசவ னல்குயிர்நாயகி நாயகசேய்போற்றி
வண்ணவோராறு முகாம்புயபோற்றிமணிக் குண்டலபோற்றி
புண்ணியவிந்திரபுத ராதிபபோற்றிக் கதிர்ப்புயகுகபோற்றி.

(இ-ள்) தேவர்கள் சிறையைவிடுத்தருள் புரிந்தவனேபோற்றி. விசாலமாயழகிய மார்பை யுடையவனேபோற்றி. தேவேந்திரன் புத்திரியாகி மணங்கலந்த [illegible] தெய்வசேனை நாயகி நாயகச்சேய்போற்றி, சுடர்பொருந்திய ஓராறுமு[illegible]வனேபோற்றி, மணிக்குண்டலங்கள்தரித் தழகிய பன்னிரண்டு செவிய[illegible]ற்றி புண்ணிய புரமான இந்திர புராதிபனேபோற்றி. கதிர்த்த புயாசலத்தனே! போற்றி போற்றியென்று தோத்திரஞ் செய்கின்றார்கள்.—எ-று.

ஐந்துகரத்தினை நால்வாயின்மூன் றனல்விழியின் போற்றி
யுந்துபயக்கிரி யன்னிருதாளின் னொருகொம்பின போற்றி
மைந்துறுபாரத மேருவரைந்தகல் மதகயமுக போற்றி
யெந்தைகரக்கனி கொண்டவ கயமுக னிறுசமரின போற்றி.

(இ-ள்) ஐந்து கையனே, நால்வாயனே, திரிநேத்திரனே போற்றி. உந்தி யுயர்ந்த வுபயமலை போலு மிரண்டு பாதங்களுடையவனே. ஒன்றைக்கொம்பண்ணலே போற்றி. வியாசபாரதத்தை மேருகிரியிலெழுதிய மதயானை முகத்தனே போற்றி எந்தையாகிய சிவனது கைக்கனி பெற்றுக்கொண்டவனே! கசமுகாசுரனைச் சங்காரஞ் செய்தவனே போற்றி —எ-று. (உக)

தெசவவதார மெடுத்தடியார்க்கருள் திருவுளவரி போற்றி
வசையறநாங்கள் வளம்பெறவாயரில் வளர்கரியவ போற்றி
திசைமுகனைச்சிலை வேளைத்தருமொரு திருவுந்திய போற்றி
குசலவரைப்பெறு கொற்றவராகவ கோகனகை போற்றி.

(இ-ள்) தசா அவதாரமெடுத்து அன்பர்களுக் கருள்புரிந்த லட்சுமி மணாளனே! அரி ஹரி போற்றி, இகழ்வில்லாமல் நாங்கள் நல்வளம்பெற் றுய்யும்படியாக ஆயர்பாடியில் வந்துவளர்ந்த கார்மேகவண்ணனான கிருஷ்ண மூர்த்தியே போற்றி. சதுர்முகப் பிரம்மாவையும், கருப்புவில் மன்மதவேளையும் புத்திரராகப்பெற்ற திருவுந்திக்கமலனே போற்றி போற்றி, குசலவர்களைப் பெற்றருளிய கொற்றமுடைய இராமமூர்த்தியே போற்றி போற்றி, சகலதிர இதழுடைய தாமரை மலர் மகளே லட்சுமிதேவியே போற்றி போற்றி.—எ-று. (உஉ)

ஐந்துநிறத்தினோ டைந்துமுகத்தினோ டழகெழுசிவபோற்றி
யைந்துபுலத்திறை யைந்துபலிக்கிறை யைம்பூதகபோற்றி
யைந்துபணப்பணி யைந்துமுடிக்கணி றாதபநிறபோற்றி
யைந்துதொழிற்பெறு மைம்பகவர்க்கிறை யாஹரபரபோற்றி.

(இ-ள்) ஐந்துநிறமும், ஐந்துமுகமும், அழகும் பொருந்திய சிவசிவா போற்றி. ஐம்புலன்களுக் கிறையவனே! ஐந்துவகைப் பலிக்கிறைவனே! ஐம்பூதநாயகனே போற்றி. ஐந்துபடமுடைய பாம்பினை ஐந்துமுடிக்குந் தரித்தருளியகோடிசூரிப் பிரகாசமான திருமேனியனே பேற்றி. ஐந்தொழிலைச் செய்யும் பஞ்சகர்த்தாக்களுக்கிறையவனே! அரஹர பராபராபோற்றி போற்றி யென்று பஞ்சபாண்டவர்கள் துதித்தார்கள்—எ-று. (உ௩)

என்றுகணபதியை யீராறுபுயவனை யிந்திரைமணவெந்தை
மன்றல்செய்நாகக் கிரியுமைபாகனை வந்தனையிற் போற்றி
வென்றிகொளவர் வரம்பலபெற்று வியாதனோடேகினபின்
நன்றிகொளவர்தரு தீர்த்தநலங்களி னபமிகுதெனநவில்வார்.

(இ-ள்.) என்றிப்படிக் கணபதியையும் பன்னிரண்டு புயக்கடவுளையும் லட்சுமிமணவாளனையும், திருமணம் பொருந்திய திருநாககிரி யுமையொருபாகனையும் வந்தனையாக வணங்கிப் போற்றிசெய்து வெற்றிகொள்ளப் பட்டபஞ்சபாண்டவர்களனைவரும் பலபலவரங்களும் பெற்று வேதவியாசருடனே சென்றார்கள். பின்பு நன்மைச்செயலுண்டானவர்கள் செய்ததீர்த்தமகிமை நலங்களை இன்னபடியென் றுசூதமுனிவர் சொல்லுகிறோமென்றார்.—எ-று. (உ௪)



பாண்டவதீர்த்தந் தனிலாடும்படி பார்த்திபமந்திரமுற்
றீண்டியவாச ரியல்படவேணியி லிந்தணியெம்பரனே
ராண்டசிவன்றிரு மந்திரமைந்தா லவர்கடந்தோய்ந்து
பூண்டபெரும்புர மேபடைநான்கும் பொலிகுவர்வலிகூர்வார்.

(இ-ள்) பாண்டவதீர்த்தத்தில் நீராடும்படி பார்த்திபமுற் றங்ஙனஞ் சென்று அரசர்களியல்பாகச் சடையில் இளம்பிறையைத் தரித்த எம்பிரானும், எம்மையாண்டருளியவனுமான சிவனது பஞ்சாக்ஷர மந்திரதியானத்தாலவர் தீர்த்தத்தில் மூல்கினால் அவர்களுக்குரிய பெரிய நகரங்களும், சதுரங்கசேனைகளும் பொலிவுண்டாகப்பெற்று வலிமையோடு வாழ்வார்கள்.—எ-று. (உ௫)

போயபெரும்பொருள் போயபெரும்பதி போயபெருந்தானை
யாயமுதற்படி யதனினுமீமிசை யதிகம்பலனுமால்
மாயவனருடரு மன்பரிவிந்திரன் வரமாருதிநேயஞ்
சேயமருத்துவர் சீர்பெறவென்றவர் தீர்த்த வரங்கொண்டார்.

(இ-ள்.) பின்னையும் அரசர்கள்இழந்துபோன பொருளும்,பெரியநகரங்களும் அகன்றுபோன பெரும்படைகளும் முன்னிருந்ததினும் மேலானபலனுண்டாகும் விஷ்ணுவினருளும் பெறுவார்கள்.திரிலோக மன்னவனானதேவேந்திரன் மாருதி நேயமுஞ், செவ்விதாகிய தெய்வமருத்துவர்சீருந் தீர்த்தவரங்களும் பெற்று வாழ்வார்கள்—எ-று. (உ௬)

அவ்வவர்பாவுமைம்பாண்டவர்சுனையினிலாடி னருக்குண்டாய்ச்
செவ்விதினுறுதிரு விம்மையுமறுமைச் சேரவுஞ்சேர்ந்துமைபங்
கெவ்வமறப்புண ரீசன்பதமுமீ ராறுபுயன் சேர்வும் [ரால்.
கவ்வையிலிகிதுதடை குவர்வியாதருக்குமோர் கண்ணெனவளர்வார்.

(இ-ள்.) பெரியோர் துதிக்கும் பஞ்சபாண்டவ தீர்த்தத்தில் தீர்த்தமாடினவர்களுக்குச் செவ்விதாகச் சகலசெல்வங்களும் இம்மையினும்,மறுமையிலும் சற்றுமிடையூறில்லாமல் வாழ்ந்து, பின்பு உமைசமேதரான பரமேசுவரன் பதமும் பன்னிரண்டு புயக்கடவுள் பதமுஞ் சேர்ந்து வேதவியாதருக்கு மொருநேத்திரம் போல வாழ்வார்கள்.—எ-று. (உ௭)

திருச்சிற்றம்பலம்.

பஞ்சபாண்டவச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம்-௪௩-க்கு திருவிருத்தம் ௲௱௪௦௭.

## பாண்டசுரர்ச் சருக்கம்.

வரபாண்டவர் வனமீண்டவர் மகிழ்விண்டுமை பங்கன்
திசமீண்டடி மலர்பூண்டுதிண் ணகராண்டன ரிப்பாற்

பரபாண்டியன் வரவும்பணி பாண்டீசுரன்வரவு
மூராமீண்டிய முனிவர்க்கினி தியர்சூத ருரைப்பார்.

(இ-ள்) சிவனது வரப்பிரசாதம் பெற்ற பஞ்சபாண்டவர்களைவரும் வனவா சம்விட்டு மீண்டு தங்கள் தேசம் போய்ச்சேர்ந்து நிரம்பவும் மனமகிழ்ச்சியாக அர்த்தநாரீசுரருடைய திறமாகிய பாதாரவிந்தங்களை இருதயங்களில் வைத்துத் தியானித்துக்கொண்டு சத்துருசயஞ் செய்து திண்ணிய நகரையாண்டிருந்தார்கள். இப்பால் திருநாககிரி தலத்தில் மானபரனை பாண்டியராஜன் வந்ததவும், அவனர்ச்சிக்கப்பட்ட பாண்டீசுவர சுவாமி வந்தவரலாறும் இவையெல்லாம் அறிவுமிகுந்த முனிவர்களுக்கு இனிதாக உயர்ந்த சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.—எ-று. (க)

சோன்பர னடிபோற்றிய தெளிவுந் திகழ்நீதி
பாரந்திகழ் வளவன்புகழ் படியாச்சியு மாறன்
சேரம்புவி முறையுப்படி திகழ்வஞ்சியுறைந்த
நேருந்தமிழ் மதுரைப்பதி நெறியேயய சுற்றுர்

(இ-ள்) சோராஜனும், பாண்டியராஜனும், சிவனைப்பூசித்து அரசாட்சி செய்த நீதியும், பூமி புகழப்பட்ட சோழராஜனும் அரசாட்சியையு, மூரையுங், கருவூர், உறையூர், தமிழ்விளங்கிய மதுரை நகரமும் சிம்மாசனதிகளாயிருந்து நெறிமுறைமையாக அரசாட்சிசெய்து வாழ்ந்திருந்தார்கள்.—எ-று. (உ)

இம்முப்பதி மூவேந்தரு மிறைமாட்சிகள் புரிநாள்
செம்மைப்பெறு மனுநீதிகள் சிறிதே முறை பிறழ்வால்
வெம்மைத்திற லாழுசோழனும் விமலா கினிதெண்ணான்
மம்மற்பெறு செவ்வந்திநன் மலர்மேல்மனம் வைத்தான்.

(இ-ள்) இந்த மூன்று நகரத்திலும் மூன்று ராஜாக்கள் நீதிமுறைமையாக அரசாட்சிசெய்து வரும் நாளில் செவ்விதாகிய மூவரசர்களின் மனுநீதிகள் சற்றே முறை பிறப்பித்து வருவதால் வெற்றித்திறலுடைய சோழராஜன் பரமேசுவரனுக்குப் பிரீதியான திவ்வியபுட்பங்களென்று சற்றுமெண்ணாதவனாய் கன்மயக்கத்தினால் அழகிய செவ்வந்திப் பூவின்மேலே ஆசைவைத்தான். (ங)

வைத்தைம்முதற் கலரர்ச்சியா மன்னன் முடிகொண்டான்
முத்தந்தருநகைவேல்விழி முகிழுத்தன மனையாள்
நித்தந்தன திறைவன்செயல் நெறியன்றென வருள்பூச்
சித்தன் பினின் மலரன்பணி சித்தம்புரிகுவளால்.

(இ-ள்) உசிதமான அந்த செவ்வந்திப் புட்பங்களை ஐம்முகனாகிய பரமேசுவரனுக்குச் சாத்தாமல் சோழராஜன் முடித்துக்கொண்டான். அதுகண்டு முத்து நிறைபோன்ற பல்வரிசையும், வேல்போன்ற கண்களுங், கமலமுகிழ்போன்ற தனபாரங்களையுடைய அழகியராஜதேவியானவள் ராஜனைப்பார்த்து இது நீதியல்லவென்று சொல்லதுங் கேளாததனால் தனக்குக்கொடுத்த புஷ்பங்களை முடிக்கப் பயந்து மனதன்பினாலே சிவனுக்குப்பிரீதியென்று அதுகாலத்தில் கமலையிலர்ச்சித்து விடுவாள்.—எ-று. (ச)



அன்னாளினி லுமைபாங்கர்சி ராப்பள்ளியி லானார்
பன்னாளினில் வளவன்புரி படிதீதென வுணரா
வொன்னார்புர முனியென்ப வுணர்ந்தே யவனூரின்
பின்னாடனின் மண்மாரிகள் பெய்வித்தனபெயரால்.

(இ-ள்.) அக்காலத்தில் திரிசிரபுரம் மலையிடத்தில் யெழுந்தருளிய உமையொருபாகராகிய பரமேஸ்வரனும் பலனாளுஞ் சோழராஜன் செய்யும் அநீதி யறிந்து சத்துருக்கள் நகரங்களைக் கோபித்தழிப்பதே மனுநீதி யென்றெண்ணி திரிபுராந்தகராணபடியால் அவனிருக்கும் உறையூர் நகரத்தில் சிலநாளின் பின்பு மண்மாரிபொழிவித்தார்.—எ-று, (ரு)

வள்வன்றிகழ் கோரப்பரி வயன்மீதுதன் மனைமோ
டுளவன்பொடு வெரின்மீதுற வுய்த்தே குதலுற்றான்
தளமென்கொடை சிவனுக்கருள் தருமக்கொடி வரலால்
விளைமண்புயல் பரிமீது விழாதே புடைவிழுமால்.

(இ-ள்.) மண்மாரிபொழிவதுகண்டு சோழராஜன் தனது கோரமென்னுங் குதிரையின் மேலேறிக்கொண்டு தேவிமார்களுடனே வேறாய்ப் புறப்பட்டு விரைந்துபோகா நின்றான். அங்ஙனம் புண்ணியஸ்ரீ கூடிவருகிறபடியினாலே பொழியப்பட்டமண்மாரியானது குதிரைமேல் விழாமல் சுற்றுப்பக்கங்களில் விழுந்தது.

செவ்வந்தி முடித்தேனினை செய்வந்திபடித்தோ
னவ்வந்தி பதித்தண்முக வமுதைத்தறை யிட்டான்
பவ்வந்திரை யுட்புக்கெனப் பரிபோ டரசமிழா
மொய்வந்திடு மண்மாரிகள் மூடிற்றவர் விளியா.

(இ-ள்.) சாமிக்கிஷ்டமான திவ்விய செவ்வந்திப் புஷ்பங்களைத் தானுந் தன் சாமான்யஸ்ரீகளுமாக முடித்துக்கொண்டு அநீதி செய்யப்பட்ட சோழராஜனை வன்விரைந்து போவதற் கெண்ணி பூரணச்சந்திரன் போலுமுகமழகியதனதுபட்டஸ்ரீ பூமியில்விழத்தள்ளிவிட்டுக் கடிதாகக் குதிரையை நடத்தினன். அப்போது குதிரையும் ராஜனும் அமுழ்ந்தியிறந்து போவதாக மென்மேலு மண்மாரி பொழிந்து மூடிற்று-எ-று (எ)

தனமச்சுரு வப்பெண்கொடி தண்காவெரிநெறியி
னன்மைத்தருபுனைபற்றியந் நதியின்கரை சேர்ந்தாள்
வென்மைத்திரு வுதரத்துறு மகவைக்கண்ட மறையோன்
றன்மைக்கழைத் தேகிக்கொடு தனதூரிலாதரித்தான்.

(இ-ள்) புண்ணியசொரூபியான இராஜதேவி குளிர்ந்த புனலுடைய காவேரியினின்று ஒருபுணையைப்பற்றிக்கரைசேர்ந்தாள். லட்சுமிபோன்றவள் வயிற்றில் புத்திரனிருப்பதுகண்டு, அங்ஙனமொருபிராமணன் இராஜதேவியை யழைத்துக் கொண்டுபோய்த்தன்னகரத்தில் வைத்துப் பரிபாலனஞ் செய்துவந்தான்—எ-று.

வைத்தப்பதி யரசன்றிரு மனையின் றிருபயிலே
யெய்த்துத்தம மகவைப்பெறு வித்தான் விறல் மகவைக்

கைத்துண்ட நெடுங்கோட்டொரு கரிவந்தனபிடர்மீ
துய்த்தன்னக ருக்கேதர வரவேணி லுயர்ந்தான்

(இ-ள்) அப்படிப் பரிபாலனம்பண்ணின பிராமணன் தன்னகத்தி லுத்தம குணமான இராஜதேவி கெற்பமுதிர்ந்து புத்திரனைப்பெற்றாள். பெற்று வளர்த்துக்கொண்டிருந்த நாளில் நெடியதுதிக்கை அழகிய கிம்புரிக்கோட்டுப் பட்டத்தியானை வந்து ராஜகுமாரனை யெடுத்துத் தன் மத்தகத்தில் வைத்துக்கொண்டு போய் நகர சிம்மாசனத்தில் சேர்த்தியது. அங்ஙனஞ் சிம்மாசனாதிபதியாக அந்த சோழராஜ குமாரன் தனது தேசத்தையாண்டிருந்தான்.—எ-று. (அ)

தருமந்திர னொருவொன்று தழைத்தன்னவோர் சேரன்
வருமர்ச்சனை வகையாலரன் வண்டாமரை யடியுட்
செருமக்கன மலரஞ்சலி செய்தேயிரு பொழுது
மருமைத்தவ முழுசுந்தர ரவரோ டுறவானார்.

(இ-ள்) தருமமே வோருருவாய்த் தழைத்தோங்கிய சேரமான் பெருமான் அன்பினால் சிவனிருபாதார விந்தத்தில் அளவில்லாத புட்பங்களைத் தூவி அர்ச்சித்து அஞ்சலியஸ்தனாகத் திரிசந்தியா காலமுந்தொழுது தோத்திரஞ்செய்து தவம் புரிந்து சுந்தரமூர்த்தி நாயகருடனே பிரியாத நேயமாயினான்.—எ-று. (௯)

திரசுந்தர ரொடுசேரமான் சிவலோக மடைந்தே
வரசந்தன வுலாவென்றொரு வண்பாவுட னின்று
பரசென்பன வஞ்சிக்கும வரிகாவிருநகரும்
விரசுந்தவ மிறைமாட்சிகள மெலிவானது புவிமேல்.

(இ-ள்) சுந்தரப்பெருமான் நாயனாருடனே சேரமான் பெருமான் நாயனார் கைலாசத்திற் சேர்ந்து தான் அழகியதாகப்பாடின ஞானவுலாப் பிரபந்தத்தை சுவாமி செவிக்கின்பமாக அரங்கேற்றிவைத்துச் சிவனது பணிவிடை செய்திருந்தார். இங்ஙனஞ் சோழதேசஞ் சேரதேச மிரண்டுக்கும் அரசில்லாமல் அரிதாகக் கருவூர், உறையூர் இந்த இருநகரங்களும் அழகு குறைந்து தவந்தானந், தெய்வந், திருவிழா, மழைமாரிகள், வெள்ளாண்மைகள் குறைந்து ஜனங்கள் மிகவும் மெலிவானது இருவர் மண்டலங்களும்.—எ—று. (௰)

சேரன்பதி சோழன்பதி சேருஞ்செய லிதுபின்
னாருந்தமிழ் மதுரைச்செழி யன்கண்ணகை முனிவால்
நேருங்கன விடையூறுகள் நிகழ்ந்தேபதி மூன்றுஞ்
சோரும்புயல் பொழியாவது துளங்கிற்றுலகம்மா.

(இ-ள்) சேரமான் தேசமும் சோழதேசமும் இவ்வாறு மெலிவுற்றிருந்தது, நிறைந்த தமிழ் சங்கத்தையுடைய மதுரையில் பாண்டியராஜன் கண்ணகை கோபித்திட்ட சாபத்தினாலே மிகவுமிடையூறுண்டாய் அரசற்றிருந்தது. இராஜர் மூவர் தேசங்களும் மனுநீதி முறைமையிலலர்தபடியினால் பெய்யப்பட்ட மழை வளக்குன்றி விளைவுகுன்றி சுகமில்லாமல் தயங்கிற்றுலகம்.—எ-று. (கக)

வஞ்சிக்கிறை சோழிக்கிறை மதுரைக்கிறை மூவர்
நெஞ்சத்துறு கனசஞ்சல நிலையாண்டழை வேண்டி



மஞ்சிற்கிறை மகவானிடம் வந்தாரிரு வரும்வான்
விஞ்சைப்புர மகவானடி வணவித் தொழுதனரால்

(இ-ள்) மழைவளங்குன்றி உலகந் தயங்குவது கண்டு கருவூர்க்கிறைவனாகிய சேரனும், உறையூர்க்கிறைவனான சோழனும் மதுரைக்கிறைவனான பாண்டியனும் ஆக இந்த மூன்று அரசர்களும் மனதுகளில் சஞ்சலமாகிய அங்ஙனம் மழை பெய்யவேண்டி மேகத்துக் கதிபதியான தேவேந்திரனிடத்திற்கு வந்தார்கள். சேரன் சோழனிருவருந் தேவராஜனான இந்திரன் பாதத்தில் வணங்கித் தொழுதார்கள்.—எ-று. (க௨)

எழின்பாறன் வணங்காமுடி யெனலால் மலரவனின்
பொழிமாமல ரனவேயிரு பொற்செங்கை விரித்தான்
மொழிசோரனு முடிக்கிள்ளியு முன்னங்கை குவித்தா
ரிழிபாதக மிதுமுற்செய்த தெனவிந் திரனுற்றான்.

(இ-ள்) அழகிய பாண்டியராஜன் வணங்காமுடி வேந்தனானபடியினாலே முகிழ்தபட்பம் அலர்வதுபோலும் இரண்டு கைகளையும் விரித்தான். சொல்லப்பட்ட சேரனும் சோழனும் நடமுன் கை குவித்தார்கள். அதுகண்டு இழிவான பாதகமிது முன்செய்த தீவினை யென்று இந்திரன் தெரிந்துணர்ந்தான்.—எ-று.

வலையப்புய வில்லன்வள வனையும்வருகென்றே
யலையிற்புகு புரானுப்பதி யடைவேபொழி குகவென்
றிலையிற்பிள வொடுநல்கியவ் விருவர்க்குநன் களித்தான்
சிலையிற்பொலி செருவெற்றிகொள் செழியர்க்கு வெறுத்தான்.

(இ-ள்) கேயூரந்தரித்த புயங்களையுடைய சேரனையுஞ் சோழனையும் வாருங்களென்று ஆசனங்கொடுத்துபசரித்து பிரியவசனங்கள் சொல்லிக் கடலில் வசிக்கின்ற மேகங்கள் உங்கள் தேசங்களுக்கெல்லாம் அடைவாக மழை பொழியச் செய்கிறோமென்று அவ்விருவருக்கும் விநயமுடனே தாம்பூலங் கொடுத்தருளினான். வில் வலிமையிலே பகைஞரை வெற்றிகொண்டருளிய பாண்டிய ராஜனுக்கு மழை உதவாமல் இந்திரன் மிகவும் வெறுத்தான்.—எ-று. (கங)

பின்னாள்மழை யுன்னாட்டிடை பெய்விப்பன மன்னி
...ண்டீகுநி யெனமேனாமுழ நீங்கா
முன்னாக விருந்தானடி முன்னாக துழைந்தான் [டான்.
பொனனுடன் வெகுண்டான் பின்னர் தென்னாடன் வெகுண்

(இ-ள்) வாராய் வணங்காமுடிப் பாண்டியனே! உன் தேசங்களுக்கெல்லாம் பிற்காலத்திலே மழை பெய்விக்கிறோம். இப்போதிருக்கின்ற திரவியங்களை எல்லாஞ் செலவு செய்துக்கொண்டிருவென்றான். அது கண்டு பாண்டியன் கோபித்து இந்திரனுக்கு முன்னாகவிருந்து மடிபிடித்தான். இந்திரனுமெழுந்திருந்து கிரகத்திலுழைந்தான், பாண்டியன் தொடர்ந்தான். தொடர்வதுகண்டு பொன்னாடிந்திரன் கோபித்தான். பின்பு தென்னாட்டுப் பாண்டியன் கோபித்தான்.—எ-று.

யாமூவரு நின்பால்வர விருவர்க்குமை யுதவிக்
காமுடிய புயலின்பொழி கார்த்தந்திலை யென்னென்

றேமூடிய விற்கொண்டானை யெய்யும்பெரும் கடைகொண்
டோமூடமர் செய்தாரவ னுபர்வச்சிரம்விட்டான்.

(இ-ள்.) நாங்கள் மூன்றுபேரும் உன்னிடத்தில் வந்துமழைவேண்டிக் கேட்டால் சேரசோழ னிருவருக்கு மழையுதவி யெனக்குப் பொழியப்பட்ட மழை கொடுத்தாயில்லை அதுவென்ன காரணமென்று இருவரும் வெகுண்டு போர் செய்யத்தொடங்கித் தங்கள் தங்கள் வில்லுகளை வளைத்து சரமாரிகள் பொழிந்து தோர்வையில்லாமல் அமர்செய்தார்கள். அவ்வேளையில் பாண்டியன்பேரில் தேவேந்திரன் வச்சிராயுதத்தை விட்டான்.—எ-று. (கஎ)

அந்தப்படை கண்டேபன தகமீதுள சொக்கே
வந்தித்துன தருளென்கையில் வளையாழியில் விடுகென்
றிந்தப்படை யுன்னைப் படையெங்கேவின னிடும்பாய்
முந்தப்படை படவிந்திரன் முடியிற்பட நொந்தான்.

(இ-ள்) அந்த வச்சிராயுதம் வருகிற அதிர்ச்சியைக் கண்டு பாண்டியனென் னிருதயத்திற் பிரியாமலிருக்கின்ற சொக்கேசுவரா! என்று வந்தனை செய்து உம்முடைய கிருபையினாலே என் கைவளையைச் சக்கரமாகச் சுழற்றிவிடுகிறேன் இதுவும்முடைய கைப்பாயுதம். இதுபோய் இந்திரனைச் செயிக்கவேண்டுமென்று ஏவிவிட்டான். அது சக்கரமாகத்தானே வந்து தேவேந்திரன் மகுடமுடியிற்படவே மிகவும் நொந்தான்.—எ-று. (கஅ)

கூடற்பதி யரசுந்தெய்வ கோலப் பதியரசு
பாடற்றிற முறலாலம ரரும்மாமுனிவாரும்
வீடிச்செரு வென்னுமிது நீதிச்செய லன்றென்
றோடிப்பகை தவிரும்படி யுரைகூறி விடுத்தார்.

(இ-ள்) தென்கூடப்பதி அரசனும் தேவலோகத்து அரசனும் முனைந்து யுத்தஞ்செய்வது கண்டு தேவர்களும் முனிவர்களும் மிச்சமர் எவ்வாறுமோ வென்று பயங்கரமாய் ஓடிச்சென்று நீங்களிருவருமிப்படி யுத்தஞ் செய்வது நீதியல்லவென்று பகைதீரும்படியாகச் சமாதானஞ் செய்யச் சமரைவிடுத்தார்கள்.

அருள்காவன முடையான்செழி யன்மண்டல முழுது
மொருகால்மழை பெய்யாவண மொழி கென்றுமறித்தான்
வருகாசினி வையைக்கிறை மதுராபுரி வந்தாங்
குருகாதர முடனேயழ கியசொக்கரை யுற்றான்.

(இ-ள்) அழகிய கற்பகப் பூங்காவனமுடைய தேவேந்திரன், பாண்டியன் மண்டலமுழுதும் எந்தக்காலத்திற்கு மழைபெய்யாது விடுக்கவென்று மேகத்தை தடுத்து மறித்தான். பூமண்டலத்தில் வைகைக் கிறைவன் மதுரை புரியில்வந்து சேர்ந்து மனதுருகி யன்புடனே அழகிய சொக்கரை யுற்றுவணங்கிச் சொல்லுகிறான்.—எ-று. (உ0)

அன்றென்பதி யரசின்றென வப்போதர சாகிக்
கன்றும்பகை வென்றேயறு காற்பீட மமைந்தீ



ரின்றிந்திரன் முடிமேல்வளை யெறியும்படி யதனால்
துன்றும்புயல் மழைநப்பதி சொரியாது தடுத்தான்.

(இ-ள்.) அந்தக்காலம் யென்னுடைய நகரத்தில் அரசிஇல்லை யென்று அனைவருந் தயங்கும்போது தேவரீர் அரசாய் மறு பகைஞரை வென்று பாண்டியமண்டலத்தை ஆண்டு அறுகாற் பீடத்தி லெழுந்தருளியிருந்தீர் இப்போது தேவேந்திரன்முடிமேற்பட்ட கைவளை சக்கரமாக யெறியும்படி கிருபைசெய்தருளினீராகையால் இந்தப் பாண்டிய மண்டலமுழுதும் மழைபெய்யாமல் படுத்தான், சுவாமி! யென்று பாண்டியராஜன் சொன்னார்.—எ-று. (உக)

புலிவெங்கொடி யதிபன்பதி போந்தாதிபன் காம
வலிதின்வள முற்றூர்ப்பொழி வான்யாறி வழங்கி
நலியும்பது கூடற்பதி நன்மாமழை சிறிது
மில்லையென் றுதொன் மறைநாலவர் யாருப்படா கின்றார்.

(இ-ள்.) புலிக்கொடி யுடைய சோழ தேசங்களும், பனைமாலை யுடையசேரமாந்தேசங்களும் நல்லமழை பொழிந்து செழித்திருக்கின்றது. இந்தபாண்டிய மண்டலமானது மழைஇல்லால் மெலிந்து சுகமில்லாம லிருக்கின்றது என்று மனவியாகுலத்துடனே பூருவகாலந்தொடங்கி யிருக்கின்ற வேதாகம புராணிகர் யாவரும் யென்னிடத்தில்வந்து அந்தத் தேசங்களுப் போகிறோமென்றுசொல்லுகிறார்களென்று பாண்டியராஜன் சொன்னார்.—எ-று. (உஉ)

பொதியக்குறு முனிவன்வன் றருபொற்சங்கமிழந்தால்
மதியிற்பெறு தமிழ்மண்டல மென்னும்வளமையுமொழியும்
விதியிப்படி பிறவாவகை மென்கூடலினரசே
யதிகப்பல னருளாயழ கியசொக்கனே யெனவே.

(இ-ள்) பொதிமலையி லெழுந்தருளிய அகத்திய முனிவன்செய்த சங்கமிழந்துவிட்டால் அதிக விவேகம் விளங்கிய தமிழ் மண்டல மென்னும் புகழ் வளமையுமொழிந்துவிடும். அச்செயல் நேரிடாமல் மதுரைக் கதிபதியான சுந்தரேசுரரை அதிகமான வளம் பொருந்தும்படி வரப்பிரசாதங் கொடுத்தருளுவீர் அழகியசொக்கேசரேயென்றான் பாண்டியன்.—எ-று. (உங)

என்றென்றடி முடிபற்றி யிறஞ்சுஞ்செழி யனையே
நன்றும்பது நலைதீர நலம்பெற்றிட முகிலுன்
குன்றல்வர வுன்சொற்படி கொண்டற் புயல்பொழிய
வின்றென்று விளம்பும்படி னெம்மைத் துனகேணமோ.

(இ-ள்) என்றிப்படிப் பலவிதமாகச் சொல்லி சுவாமிபாதங்களிரண்டையும் தனது முடியிற்றரித்து வணங்கின பாண்டியனைப் பார்த்து சுவாமிசெல்லுகிறார் அப்படியேயல்லது! உன்னுடைய மதுரை தேசங்கள் வறுமை தீர்ந்து நல்லவளம் பெறும்படி மேகங்கள் வந்து உன்மலையாகிய பொதியத்தில் வசிக்கவும், உன்சொற்படியே மாதம் மும்மாரி மழை பெய்யவும், இப்போது நாமொன்று சொல்லுகிறோம். நம்முடைய மைத்துனனான பாண்டிய ராஜனே கேட்பாயாகவென்று சுவாமி சொல்லுகிறார்.—எ-று. (உச)

யாரம்பிகை யிடமாக விருந்தோறு முகவ
னேமந்தரு திருக்காதிபர். யாரும்பட விகலி
வாயந்தர வெம்மோடு மருவித்தினம் வைகிச்
சேமந்தர வுறைகின்றதோர் தெய்வக்கிரியுளதால்.

(இ-ள்) நாம் பார்வதிக்கு இடப்பாகங் கொடுத்தருளி அர்த்தநாரீசுரராக இருக்கின்றோம். சூரர்களை எல்லாஞ் சங்கரித்தருளிய ஆறுமுகக் குமாரக்கடவுளும் அங்ஙனம் நம்மோடு மருவித்தினமும் வசித்திருக்கின்றார். அப்படி எமக்கிடமாகிய தெய்வக் கிரியொன்றிருக்குதென்று சுவாமி சொன்னார்.—எ-று. (உ௫)

பிரிவற்றிடு நவகோடி பொருஞ்சித்தரி ருந்தே
குருபத்தியி லுறைவார்நவ கோடிச்சுனை யுளதால்
வருபுத்தியு முத்திச்செயல் வகையுந்தரு மசலம்
நராபத்திகொள் செங்கோடெனு நாமத்தினை யுளதால்.

(இ-ள்) அங்கே நவகோடி சித்தர்களும் பிரியாமல் குருபக்தியாகவிருந்து வசிப்பார்கள். புதுமையாக அளவில்லாத சுனைத்தீர்த்தங்களும் இருக்கின்றன. அங்ஙனம் வந்தபேர்களுக்குப் பக்தியு முத்தியுங் கொடுக்கின்ற கிரிஸ்தலம். மானிடஜனங்கள் பக்தியாக வணங்கித் துதிக்கப்பட்டது, செங்கோடென்னும் பெயரை உடையது.—எ-று. (உ௬)

மலையுச்சியில் வளசம்புவி தனிலற்புத முளதால்
நிலைபெற்றிடு பணிவெற்பதில் நீடுச்சியில் நதிநீர்
தொலைவற்றதோர் பொற்றாமரை சூழ்மன்பொகு டதன்மேல்
நலமுற்றுமை யுடனேமினி துறைவந்தமிழ் நாடா.

(இ-ள்) இந்தப்பூமண்டலத்தி லற்புதமாக நிலைபெற்றிருக்கின்ற திருநாககிரியுச்சியில் தெய்வ நதி நீரில் அழியாத தாமரை மலரின் பொகுட்டின்மீது இனிதாக அழகிய உமையுடனேகூடி வாழுறைந்திருக்கின்றோம். தமிழ் நாட்டையுடையபாண்டியனே.—எ-று. (உ௭)

அந்தடப்பணி மலைமீதினி லரசர்க்கர சேநஞ்
சிந்தைக்கினி தாமைத்துனன் செழியா தமிழ் மொழியான்
வந்தித்தெமை யர்ச்சித்துநம் மைந்தன்றனை வந்தித்
திந்தத்தொழில் செய்தேதவ மினிதிற்புரி கென்றார்.

(இ-ள்) ஓய், அரசர்க்கரசே! என்மனதுக்கினிய மைத்துனனான தமிழ்மொழியையுடைய பாண்டியராஜனே! நீயந்தத் திருநாககிரியிற் சென்று சேர்ந்து நம்மையும் நமது திருக்குமாரரையும் கண்டு பூசித்துவணங்கி இனிதாய்த்தவஞ் செய்வாய்.—எ-று. (உ௮)

எனவுங்கயல் நயனைக்கொடி யிடமுற்றருள் சொக்கர்
தனதன்புட னருளத்தமிழ் தருபஞ்சவன் விரவித்
தினமும்பணி மலையிற்சுனை சென்றாடியைங் கரனை
நினைவிற்றொழு தசலந்தனை நெறியின்வலம் வந்தான்.

(இ-ள்) என்றிப்படி அங்கயற் கண்ணுமை யிடப்பாகரான அழகிய சொக்கநாயகர் தமது கருணையினா லருளிச்செய்தபடியே தமிழ் நாட்டதிபனான பாண்டியராஜன் அந்தத் திருநாககிரித் தலத்தில் வந்து தினமும் சுனைகளிற் தீர்த்தமாடி நேமத்துடனே யானைமுகப்பிள்ளையாரைக்கண்டு தொழுது தோத்திரஞ்செய்து நெறி முறைமையாகப் பாண்டியராஜன் கிரிப்பிரதக்ஷணம் வந்தான்.—எ-று. (உ௯)



வந்தாதர நாகீசர் மலர்ப்பதம் வணங்கி
யுய்ந்தானறு முகனைத்தொழு துமைபாகனை யேத்தி
நந்தாழி யெடுத்தோனடி நளினத்தை யிறைஞ்சிச்
சிந்தாகுல மறஞான தியானத்தோ டிருந்தான்.

(இ-ள்) அப்படி கிரிப்பிரதக்ஷணஞ் செய்து வந்து பத்தியர்நாகீசுர சுவாமி மலர்ப்பாதங்களை வணங்கி வணங்கி உய்யும்படியாக ஆறுமுகக் கடவுளைக் கண்டு தொழுது உமையொருபாகனையுந் தெரிசித்து வணங்கிச் சங்கு சக்கரரான ஆதிகேசவ மூர்த்தியின் பாதாம்புயங்களை இறைஞ்சி வந்தித் தன்னுடைய சிந்தாகுலமெல்லாந் தீரும்படியாக ஞானதியானஞ் செய்திருந்தான்.—எ-று. (௩௰)

கூடற்புரி யரசன்றவ குறிகண்டுமை யொருபங்
கூடற்றிற மறவேவிய வுலகத்தொரு முதல்வன்
நீடுட்டுணி வெனவேண்டிய நினைவேதரு ளதுமென்
றூடற்பதி மதுரேசனை யருளிவ்வின வினரால்.

(இ-ள்) மதுராபுரிக் கரசனான பாண்டியராஜன் செய்யுந் தவங்களைக்குறிப்பினாலே கண்டு மகிழ்ச்சியாக உமைக்கிடப்பாகங் கொடுத்தருளிய, உலகங்களுக்கெல்லாம் ஒரு முதல்வனான அர்த்தநாரீசுர சுவாமியார் உன்னுடைய துணிவென்ன? உனக்குவேண்டிய காமியார்த்தமென்ன? அவையெல்லா முனக்குப்பாலிக்கிறோஞ் சொல்வாயென்று பரிமளவுடைய மதுராபுரிக் கரசனான பாண்டியனைக் கிருபையாக சுவாமி வினவினார்.—எ-று. (௩௧)

அக்காலையில் மதுராபுரி யதிபன்புக லுதல்நீள்
மைக்கார்மது ரையின்மண்டல மியாவும்மழை தாவு
மிக்காமறு வகைமந்திரம் விபவானறி வுறவுந்
திக்காயிரஞ் சுனையிற்கிரி சேர்ந்தோயருளடர்ந்தே.

(இ-ள்) அப்போது மதுராபுரிக் கரசனான பாண்டியன் சொல்லுகிறான். சுவாமீ! மதுரை சூழ்ந்த பாண்டிய தேசமுழுதும் மழை பெய்யும்படியாக பெரிய கார்மேகங்கள் நினைத்தபோது வரும்படி அறுவகை மந்திரமும் நான் தெரிந்துக்கொள்ளவும் அனுக்கிரகஞ் செய்தருளும். திக்குக்காயிரஞ் சுனையுடைய திருநாககிரி அர்த்தநாரீசுரனே! கிருபை செய்தருளுவீரென்றான், பாண்டியராஜன்.

அனைவேலவ முதல்வென்றபின் னிருமைக்கொரு சித்தன்
றனையேறு வகையாகிய தன்மைக்கொரு வகையை
மனமாயுரை யெனவோதினன் மதுரேச னுணர்ந்தே
யெனமாமுகி றனையேதர யிடம்வித்தை படித்தான்.

(இ-ள்) இந்தவரங் கொடுத்தருளுமென்றான். பின்பு சுவாமி! அங்ஙனம் யிருமைக்கும் வசித்திருக்கின்ற ஒரு சித்தனைப்பார்த்து நீ யாறு வகையான வசீகர

மந்திரத் தொகைவகை விதியெல்லாம் நன்மனதுடனே சொல்லென்ன! அவரா யாவுந்தெரிந்துணர்ந்து இனத்துடனே மேகங்களை வரவழைத்து தளையிட்டு பொதியமலையில் வசிக்கும்படி வசியமந்திரவித்தை எல்லாம் மதுரை ராஜனான பாண்டிய ராஜன் படித்துக்கொண்டான்.—எ-று. (௩௩)

காரைத்தளை யிடும்வித்தை படித்தேதுகை தவர்கொண்
பாரிற்பல கற்றானியல் பகர்கொற்கைய நிறையாய்
வாரிப்புவி தனையோர்குடை வைத்தான் மகவருளென்
றூற்புத குமரத்தட வடியிற்றவ முயல்வான்,

(இ-ள்) மேகங்களை யழைத்து விலங்கிட்டு வைக்கும் வித்தையெல்லாம் படித்தோதி வசிகர மந்திர முதலான பலவித்தைகளு மியல்பாகக் கற்றான். வைகதவற்கோனாகிய பாண்டியராஜன் சொல்லுதற்கரிய கொற்கையருக்கெல்லா மிறைவனாகிக் கடல் சூழ்ந்த பூமியெல்லாம் ஒரு குடைக்கீழடக்கி அரசாட்சி செய்திருந்தான். பின்பு புத்திரசந்தானம்பெற்றுக்கொள்ளும்படியாக அற்புதமாக நீர்நிறைந்த குமார தீர்த்தக்கரையருகில் தவ முயலாநின்றான்.—எ-று. (௩௪)

வந்திச்சிலை மீதேயொரு லிங்கத்தினை வருக
வந்திப்பிறை பணிவோன்றனை யாவாகன நிறுவிச்
சிந்தைப்படி பெறவர்ச்சனை செய்தேவலம் வந்தா
னந்துக்குழை யுமைபாகர் நயந்தார்வர மீந்தார்.

(இ-ள்) அங்ஙனம் வந்திச் சிலையின்மீது ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டைசெய்து சந்திரசேகரனை பரமேசுரனை ஆவாகனஞ்செய்து நிறுவி மனதொருமிப்பாக அர்ச்சனைசெய்து பிரதக்ஷணம் வந்து வணங்கி வாழ்த்தினான். அப்போது சங்குக்குழையரான உமையொருபாகர் கிருபைகூர்ந்து பாண்டியனுக்கு நல்ல வரங்களைக் கொடுத்தருளினார்.—எ-று. (௩௫)

அப்போதினி துமைபங்கரை யம்பொற்பதம் வந்தித்
தெப்போதின மென்னுவகை மிகவே பெறவருளி
மெய்ப்பாகிய பாண்டீசுரன் வியலந்திருநாமந்
தப்பாதுல கேழும்புகழ் தலமொன்றும தளதால்.

(இ-ள்) அப்போது அர்த்தநாரீசுரரை வந்தித்து வணங்கி காலவேற்றுமையில்லாமல் எக்காலத்திலும் இகலோகத்தில் யாவருஞ் சந்தானம் பெறும் வரப்பிரசாதங்கள் தரும்படி அனுக்கிரகஞ் செய்தருளினார். அங்ஙனம் பாண்டியன் பூசித்தபடியினாலே பாண்டீசுரமென்று திருப்பெயர் ஏழுலோகமும் விளங்கச்சொல்லுந் தலமென்றார்.—எ-று. (௩௬)

வரபாண்டியன் முருகீசன் மலர்த்தாளினை போற்றி
யுரபாங்குறு தன் றீர்த்தமு மொன்றங்ஙனெடுத்தான்,
திரபாண்டிய தீர்த்தப்பெயர் செப்பும் மதில்மூழ்கில்
வரபாங்குறு வசியம்முத லாறும்பல வருமால்,

(இ-ள்) மேன்மையான வரப்பிரசாதமெல்லாம் பெற்றுக்கொண்ட பாண்டிய ராஜன் முருகீசர சுவாமி பாதங்களைப் போற்றிசெய்து பாங்கரயுயர்ந்த மலையிடத்தில் தன்பெயரா லொருதீர்த்த முண்டாக்கினான். அதின்பெயர்பாண்டிய தீர்த்தமென்றுலகஞ் சொல்லும். அந்ததீர்த்தத்தில் மூழ்கினவர்களுக்குவசியமுதலான ஆறுவகை மந்திரசித்தியும், பலசித்திகளும் வசிகரிக்குமென்றவாறு. (௩௭)



அவ்வித்தைக ளத்தப்பரை யானேதவறின்றே
சவ்வைத்துய ரறவேமுறை கற்றான ருள் பெற்றான்
செவ்வித்தமிழ் மதுரைக்கன செழியன் குரவின்கீழ்
மெய்வித்தகர் மறையோர்பெற மிகுதானமளித்தான்

(இ-ள்) அந்தவித்தைகளெல்லாம்அர்த்தநாரீசுர சுவாமி அனுக்கிரகஞ்செய்ய சற்றுஞ்சாஞ்சல்லிய மில்லாமல் மனத்திலமையும்படி கற்றான். சுவாமிகிருபையும்பெற்றான். அழகிய தமிழ்மதுரைப்பதியரசனான பாண்டியராஜன் அங்ஙனங் குராமரத்தின்கீழ் நித்தியரான பெரியோர்களும் மறையோர்களும்பெறும்படிக்கு அளவில்லாத தருமங்கொடுத்தான்—எ-று. (௩௮)

வரசங்கமர் மறையந்தணர் மகிழ்போசனமடவீ
டரசன்சதுர் மறைவேதியர் கட்காம்பலவுதவித்
திரசங்கநற் றமிழ்த்தென்னவர் திலதன்புகழ்ச் செழியன்
புரசங்க நெடுங்கூடல் புகுந்தானிறை யருளால்.

(இ-ள்.) நல்லவரமுடைய குருலிங்க சங்கமான மகேசுரர்கள், வேதப்பிராமணர்கள்மகிழ்ச்சியாகும்படி திருத்தியாக அமுதபோசனங்கொடுத்தருளிமடங்கள் கிரகங்கள் அமைத்தவைத்து சதுர்மறை வேதியர்களுக்கெல்லாம் அகாரங்கள் செய்தமைத்து ஸ்திரமான சங்கத்தமிழ் நாட்டுத்தென்னவர் குலத்தில் அன்புகள் விளங்கிய செழியனென்னும் பாண்டியராஜன் சங்கபுரமான நெடியமதுரை நகரிற் சென்று சேர்ந்து சிவனருளினால் அரசுசெய்து வாழ்ந்திருந்தான் —எ-று,

சென்றிப்பணி மலையனகர் செயலின் செழுமுகில்வந்
தொன்றத்தரு மொருமந்திர வுரையாலெழு முகிலை
வென்றிச்செழி யன்கட்டி விலங்கிட்டவ னாட்டில்
நின்றெப்பொழு துந்திங்கள் மும்மாரி நிகழ்வித்தான்-

(இ-ள்.) அங்ஙனம்தருநாககிரியீசுரன் அருளினால் சப்த மேகங்களையு மொருவசிகர மந்திரசாபத்தினாலே வரவழைத்துக்கட்டிவிலங்கிட்டு வைத்துக்கொண்டு தென்னாடுமுழுதும் நினைத்த பொழுதெல்லாம்மாதம்மூன்று மழைபெய்யும்படியாக நிகழ்வித்தருளினான் விசைய வெற்றியுடைய சோழிய னென்னும் பாண்டிய ராஜன்—எ—று (௪0)

மனறயோர்மன்னர் வணிகேசர்பின் வருமாநிலநரர்தங்
குறையோர்தின முமைபாகர் செங்கோட்டிற் புகுங்காட்டில்
நிறைமோதியவரமும் மொரு நிலையுமின்பநெறியும்
பிறையோடொளிர் சடிலன்கதிபிறழ் பாதமுமடைவார்

(இ-ள்)பிராமணர்கள்,அரசர்கள்,வைசியர்கள் சூத்திரர்கள் இந்நாலுவருணத்தாரும்வந்து தினந் தினந் தங்கள் மனக்குறையெல்லாந் தீரும்படிக்குச் சிவனது

திருச்செங்கோட்டில் வந்து புகுந்த மாத்திரத்திலே நிறையாகச்சொன்ன அறங்களு,மொருமனநிலையும். பேரின்பநெறியும் இவையெல்லாம் பெற்றுப்பிறையொளி பொருந்திய செஞ்சடைச்சிவனுடைய பதங்களிற் சேர்வார்கள்.—எ-று. (௪௧)

வைகைத்துறை வன்கானரிய வாவிப்புனல்மூழ்கி
யுய்கைக்குயர் பாண்டீசா நுளமுற்றவர் கடல்சூழ்
செய்கைப்புவிபாள்வாரவர்சேர்விற்புயனுாதாம்
பொய்கைச்சர வணனன்புளர் பொன்னுநுபுரப்பார்.

(இ-ள்) வைகைத் துறைவனுன பாண்டியராஜன் கண்டருளியசுனையில்மூழ்கியுய்யும்படி யுயர்ந்த பாண்டீசுரரை உள்ளத்தில் நினைத்துத் தியானித்தவர்கள் கடல் சூழ்ந்த இந்தப்பூமண்டல முழுதும் அரசுசெய்து வாழ்வார்கள். அவர்களிருக்குமிடத்து நல்லமழை பெய்யும் குமாரருக்கு அன்புடையவர்களாகி பின்பொன்னுட்டிலெய்தி சொர்க்க போகம் அனுபவித்திருப்பார்கள்—எ-று. (௪௨)

திருச்சிற்றம்பலம்.

பாண்டீசுரச்சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம் ௪௨-க்கு திருவிருத்தம் தூாஉய.

---

# பணிமலைகாவலர்சருக்கம்.

சூதர்சவு னகர்முதலாஞ் சுருதிமறை யவர்க்குரைத்த
காதைகெழு மாழிந் தனமிப்பாற் கன்னியங்கன் றிருவிளையாட்
டிடிகனச்செங் கோட்டிருந்த விருந்தவதபோதா ரியம்பவுணர்ந்
தோதுவன்சிற் றிவைறிந்த தாகவரைச்சிவனருளால்.

(இ-ள்.) சூதமுனிவர் சவுனகாதிமுனிவர்களுக்குச்சொன்ன புராணத்தைச்சொன்னேம். அதன்பின்பு உமையொருபாகன் திருவிளையாட்டிது வென்று திருச்செங்கோட்டிலிருந்த தவமுனிவர்கள் சொல்ல வறிந்துணர்ந்து நாககிரியீசுரர் அனுக்கிரகத்தினுல் யாம் சிலதெரிந்த மட்டுஞ்சொல்லுகின்றேம். —எ-று

கடையுகத்தில் வானவருங் காரணமீதெனவனைந்தப்
படையுயர்ச்சி யசுவபதி பதிவேந்தா மிடைவதனுற்
கொடையுயர்ச்சி கொடியுயர்ச்சி கொண்டவிற் றுபதைக்குபளக்
தொடையுயர்ச்சி யெணமருநுந் தோற்றுங்கற் பெருமிறமையால்.

(இ-ள்) கடையுகமான கலியுகத்தில் தேவர்களினெவரு மிதவொரு காரணமென்று ஆச்சரியப்பட அளவில்லாத சேனைமிகுதியுடைய அசுவபதி [illegible] னனப்பட்ட இராஜர்கள் உலகமெல்லாம் [illegible] க்கதாக [illegible] ஆம், நக்ஷத்திரப் பந்திகள் [illegible], [illegible] மாலைகள், [illegible] கூடி உலகத்தார் மருளும்படி காட்சியாகத்தோன்ற அரசு புரிந்துவந்தார்கள்—எ-று. (௨)



சீறிமட மாமுகம்போற் றென்றிசைப்பிற் பரந்துலகை
நூறிவருஞ் படைவடக்கின் ஞென்படைகள் கனந்துகைத்து
மீறுவதந் சமயமன்றி வேறுசமை யம்புவிமே
லேறவிடே மெனவனந்த யவுனர்படை யெழுந்துளவால்.

(இ-ள்) வடவா முகாக்கினி கொதித்தெழுந்தது போலும், வடதிசையிலிருந்து புறப்பட்டு தென் தேசங்களெல்லாம் பரந்து நிபிடிகரமாக உலகமெல்லாம் நிர்த்தூளியாகும்படி மிகுந்த ரதகஜதுரக பதாதி யென்னும் சதுரங்க சேனைகளும், கணக்கில்லாத ஆயுதசமூகத்துடனே நிறைந்து புறப்பட்டுத் தங்கள் சமய மலாகும்படியாக மற்ற சமயங்களை எல்லாம் மீரவிடோம். இந்தப் பூமண்டலத்திலெனறு அனந்தங்கோடி யவுனர்கள் படைகளை எழுப்பித் தொடர்ந்து நடந்தார்கள்.—எ-று. (௩)

வடகடறென் றிசையெழுந்த வாறெனலெண் கிரியமிழக்
குடகடலு மெழுந்ததெனக் குடதிசையின் மிசையீண்டத்
தடகடல்சூ ழகிலதலந் தனிலுள ரிதோயீனரந்
தடல்கடவு மரிவிளையாட் டெனவவன ரார்ப்பரித்தார்.

(இ-ள்) வடசமுத்திரங் கொதித்தெழுந்து, பிரளயகால வெள்ளம் பரந்து, இக்குத் திசையெங்கும் பெருகிவருவதுபோலும், அஷ்டகுல பருவதங்களும் பூமியில் மீளும்படி மேற்கடலும்,கீழ்க்கடலும் பிரளயமாக வந்ததுபோலும், எட்டுத்திக்குஞ் சூழ்ந்து எங்கும் பரவி சேனு சமுத்திரத்தின் பெருமைக்கடல் சூழ்ந்த உலகத்தில் யாவரும், பத்தாவது-கலிக்கஅவதாரமாக மஹாவிஷ்ணு திருவிளையாட்டிதுவென்றனைவரும் புகழ மேகமெற்சிதம் போலும் வீராதி வீராகிய யவனர்கள் ஆர்ப்பரித்தார்கள்.—எ-று. (௪)

வில்லவனும் வளவனும்நன் மீனவனும் புறஞ் சாய்ந்து
கொல்லியினும் பொதியினுங்கோ நேரியினுங்குடியேற
நல்லருணம் பரனன்றி நம்வலியால் முடிவிலவென்
றெல்லையில்வன் றுயரீண்டி யெழுவணகேட் டழுங்குவரால்.

(இ-ள்) சேரன், சோழன், பாண்டிய னென்னும் அரசர்களும் பெருக்கத்தைக்கண்டு தங்கள் சேனைகளுடனே அவரைச் சாய்ந்து முறிந்தோடிக் கொல்லிமலையிலுங் கோநேரிமலையிலும், பொதியமலையிலுங் குடியாகச்சென்றார்கள். மற்ற ஜனங்களெல்லாஞ் சங்கிக் கிருபா மூர்த்தியான பரமசிவன் செயலன்றி நமது வலிமையினுலொன்று முடியாதென்று அளவில்லாத துயரத்துடனே யவனர்ப் பரித்து வரும் தொனிகள் கேட்டு நலிந்தார்கள்.—எ-று. (௫)

வேறு.

காஞ்சீனமல்லி கார்ச்சுனங்கள கச்சிமெச்சுமே காரநீ
டாசில்தென்கயி லாயம்வேங்கட மருணைதில்லையோ டானுறைந்
தேசிலாலைய முற்றுமொற்ற வெழுந்ததூசு கொழுந்துபோய்
வீசுதெற்கி னடைந்துதென் றிசை மேவினார்விறலவனரே.

(இ-ள்) [illegible] நகர், மல்லிகார்ச்சுன பருவதம், காஞ்சீபுரம். இ[illegible]கரம், [illegible], டவேங்கடம், அருணசலஞ் சிதம்பரம் இவைமுதலான சிவஸ்தலங்களின் பழமையுங் கெடுப்பதாக வெழும்பிவந்த யவனர் சேனை முன்னணிகள் போய்த் தெற்குத்திசையில் நெருங்கி மகாஸ்தலங்களெல்லாஞ் சின்னபின்னஞ் செய்து வெற்றிகொள்ளவோமென்று வந்தார்கள்.—எ-று. (௬)

கூடல்மாநகர் மீதுபோயெதிர் கூடலார் கமைவோடவே
யாடலாடின ஆலவாயினர் கோயிலுள்புகுவினார்
நீடுவேதியர் நீள்புராணிகர் நேமியாதிபர் நேமியோர்
நாடிநீடுசெய் வீகவீறுமா நாடிநீர்வரல்தீதென.

(இ-ள்) மதுரைத்தலத்தில் வந்து சூழ்ந்து எதிராளிகளெல்லாம் ஓடும்படியாகக் கூக்குரலிட்டு பற்பல ஆயுதங்களையும் வீசி யுத்தந் தொடங்கித் திருவாலவாய்ச் சொக்கநாதர் கோவிலுட்புகுந்தார்கள். அங்ஙனமிருந்த வேதியர்கள் ஆகமீக புராணிகர், மன்னவர்கள் மற்றும் அனைவர்களுங்கூடி யவனர்களைத் தடுத்து மறித்து இந்தத்தலத்தில் சுவாமி காரணமகிமையுண்டு. இங்ஙனம் நீங்கள் நாடிவருவது மஹா குற்றமென்று சொன்னார்கள்.—எ-று. (எ)

எனவுரைத்தபின் மனநடுக்குற யவனருக்கிறை வெகுளியுற்
றுனதுபத்தியு முனதுசத்தியு முலகினிப்பொழு துணர்கவென்
புனைகொள் சொக்கர்த மருள்விளைத்திடு புதுமையிற்சிலவறியநு
மனனுறத்தெய்வ வலியுணர்த்திடில் மதுரையிற்பதிகுறுகிலேம்.

(இ-ள் அப்படி அவர்கள் சொன்னதைக்கேட்டுச் சற்றே மனம் நடுக்கமாகி யவனருக்கிறையாகிய இராஜன் மகாகோபத்துடனே நல்லது உங்கள் பத்தி உங்கள் சுவாமி சத்தியும்இப்போது நாமறிகிறோம். அழகிய சொக்கநாதசுவாமியருள் விளைவை புதுமையாக நாங்கள் சற்றேயறியும்படி தெய்வீக மகிமை காரணந்தெரியப்படுத்தினால் இந்த மதுரைத் தலத்தைவிட்டு அப்பால் போகிறோமென்று சொன்னார்கள்.—எ-று. (அ)

என்றுரைத்தபி னன்றுசொக்கரை யின்பமுற்று வணங்கியே
யொன்றெமக்குற னின்றசித்தியி னொன்றவுற்றருள் கென்றபி
னன்றெனச்சகலங்கள்கற்றவோர் நன்குறுஞ்சித்தர் வந்தொன்
றின்றுசொற்றதுவென்றியிற்செய்வமென்றிசைத்தனனெம்பிரான்.

(இ-ள்) அப்படி அவர்கள் சொன்னபின்பு வேதியர் முதலானபேர்கள் அன்புடனே சொக்கநாதர் பாதத்தில் விழுந்து வணங்கிச் சுவாமி தேவரீரொரு சித்தியானகாரண மகிமை யிப்போது செய்தருளுவீரென்று சொல்ல, நல்லது! அப்படியேசகல கலைக்கியானமுங் கற்ற ஒரு எல்லாம் வல்லசித்தரென்னும் பெயரையுடைத்தாய் எழுந்தருளி வருகிறோம். ஒன்றாகிய யவனர்கள் சொன்ன காரியஞ்செய்து முடித்து வெற்றிமாலை சூடுகிறோம் யென்றுசொல்லி சொக்கலிங்கமூர்த்தி அபஸ்தங் கொடுத்தருளினர்.—எ-று. (௯)

வேறு.

எல்லாம்வல சித்தரெனப்பெய ரினிதோதிச்
சொல்லானுபர் சுரர்முதலானையர் சூழ்போதக்
கல்லாரவ லங்கலிலங்கறு காற்பீடத்
தெல்லார்கள் மயங்கவிருந்தன ருமைபாகர்.

(இ-ள்) அப்போதங்ஙனம் தேவர்கள், முனிவர்கள் சூழ்ந்துவர செங்கழுநீர் மாலைசூடிக்கொண்டு பகைவர் மயங்கும்படி ஆறுகாற் பீடத்திலே எல்லாம் வல்ல



சித்தரென்னும் பெயருடனே எழுந்தருளி யிருந்தார், உமையொருபாகரான சொக்கநாதர்—எ-று. (௰)

யவனர்க்கிறை யும்படைவீரரு மிகல் கூறிக்
கவனப்பரி யேறியசொக்கர் கனம்பார்த்துப்
பவனத்தெழு பூளைகள்போ லிப்பதி யாவுஞ்
செவனற்கிடு வங்கொடுவஞ்சிவ பொருளென்றார்.

(இ-ள்.) அப்போது யவனர்க்கதிபதியான இராஜனும்,படைத்தலைவர்களான வீரர்களும் பகைவார்த்தை சொல்லிக் கவனமாய்ப் பரியேறிவந்த சொக்கருடைய பெருமையைப் பார்த்துச் சீக்கிரம் ஒருதெய்வ மகிமை காரணமெங்களுக் கறியப்படுத்தினால் சரி, இல்லாவிட்டால் சூறைக்காற்றில் பூளைப்பூ பறந்தது போலு மிந்தத்தலத்தை யெல்லாம் அக்கினிப்பிரவேசஞ் செய்துசிவப்பொருளையெல்லாங் கவர்ந்து கொள்வோமென்று சொன்னார்கள்.—எ-று. (கக)

என்னும்பகை மன்னர்முன்னெல்லாம் வலசித்த
ருன்னும்பலயே தெனவுமுயர்ந்த கல்யானை
முன்னெங்கள் கரும்புகொடுப்பது முன்வாங்கித்
தின்னும்பொழு திந்நகர்க்கிடர் செய்யேமால்.

(இ-ள்.) என்றிப்படிச்சொன்ன சத்துருக்கள் முன்னே, எல்லாம் வல்லசித்தர் உங்கள் நினைவென்ன? என்னகாரணஞ் செய்யவேணுமென்று வினவ, உங்களுடைய கல்யானைக்கு நாங்கள் கரும்பு முறித்துக்கொடுக்க அதுவாங்கித்தின்றால் இந்தத்தலத்துக்கு இடர் செய்வதில்லை என்று சொன்னார்கள்.—எ-று. (கஉ)

எனமேவலரோத லுமிக்கு முறித்திட்டார்
கனமேவுகல் யானையருந்துங் கணநோக்கிச்
சினமேவிய யவனர்பயந்து நடுக்குற்று
நினைமேவிய தென்றிசைநோக்கின ரெழுகின்றார்.

(இ-ள்) என்றிப்படிப் பகைஞர் சொல்லிக் கரும்பு முறித்திட்டார்கள். பெருமையாயுயர்ந்த கல்யானை துதிக்கையை நீட்டி, யவனரிட்ட கரும்பை வாங்கித் தின்றது. அது கண்டு சினம்பொருந்திய யவனர்கள் பயந்து மனநடுக்கமுற்றுத் துணுக்கமாகத் தங்களினங்களுடனே தெற்குத் திசையைவிட்டுவடதிசைநோக்கி எழும்பிவருகிறார்கள்.—எ-று. (கங)

வருகின்ற செருத்தொழில் யவனர் மலைந்தோரைப்
பொருகின்றவர் செங்கோடெங்கும் புகவேண்டித்
திருகின்றன ரவ்வளவிற்சிவன் முருகேச
னுருகின்றன சிந்தையரிற்சில ருற்றார்.

(இ-ள்) அமரில் வலிமையாக வந்தெதிர்த்தபேர்களைப் பொருது ஜெயிக்கின்ற வீரர்கள். திருச்செங்கோடு முதலாகிய ஸ்தலங்களைப் புகுந்தழிக்க வேண்டுமென்று யெண்ணி வருகின்றார்கள். அதுவேளையில் நாககிரியில் பரமேசுரன்,

குமாரக்கடவுள் இவர்களுக்கு மனதுருக்கமாகி பத்தி சிரத்தையுடையவர்களாகிய அன்பர்கள் சிலபேர் அநேகனம் வந்து வசித்துநிற்கிருக்கின்றார்கள்.—எ-று. (கச)

அன்னார்மலை நாடளாவகப் பொருடேடி
மின்னாரொடும் வெம்பலசேனை யிடைந்தீண்டப்
பன்னாக பணிக்காரணிபா கன்பாங்கில்
பொன்னாகி வரைக்கணிருந்தனர் புகழ்மிக்கார்.

(இ-ள்) அப்படிக்கொத்த அன்பர்கள் மலையாளதேச பரியந்தஞ் சென்று பொருள் தேடிக்கொண்டு ஸ்த்ரீ ஜனங்களுடனேயுங், கொடிதாகிய பலசேனைக் கூட்டத்துடனேயும் மீண்டுவந்திப்பனம் நாககிரியில் உமையொருபாகர் மலைத்தலச்சாலில் வந்திருந்தார்கள். கீர்த்தியிலும், வலிமையிலு மொப்பாருமிக்காருமில்லாத சுத்தவீரர்கள்.—எ-று. (கரு)

அப்போது துலுக்கர் மலுக்க ரமர்க்கேகு
மெய்ப்பாதக வினைகளறிந்தனர் விறல்வேந்த
ரொப்பாருமில் வீமணனேவண னுமைநீங்கா
திப்பாரில் மெறுங்கணன் மூவரு மெதிர்சென்றார்.

(இ-ள்) அதுகாலையில் துலுக்கர், மலுக்கர்முதலாகிய யவனர்படைகள் கடல்போலும் வந்து நிறைந்த தலத்தைச் சூழ்ந்து இப்பக்கண் செய்யப்பட்ட பாதக வினைகளை அறிந்தார்கள் வெற்றியுடைய வேந்தர்களாகிய ஒப்பிலாத வீமணன், ஓவணன், மெறுங்கணனென்னும் பெயரையுடைய மூன்று வீரர்களும், யவனர் சேனைக்கெதிர் சென்று மலைந்தார்கள்.—எ-று (கசு)

சென்றாரெதிர் வந்ததுலுக்கர் செருச்சேனை
முன்றாவிய வேல்கொடும் வாள்கொடு முனைசெய்தே
கொன்றார்மரு வாரைமுறிந்து குலைந்தோடி
பொன்றாகவிழுந்த பிணக்கா டொருகோடி.

(இ-ள்.) சென்ற வீரர்கள் மலைந்தெதிர்த்துவந்த துலுக்கச்சேனைகள்மேற் பாய்ந்து வேல், வாள் முதலாகிய பலவாயுதங்களெறிந்து வீசிப் பகைவர் சேனைகளில் அளவில்லாத பேர்களை வதைசெய்தார்கள். மற்றுள்ள சேனைகளெல்லா முறிந்து குலைந்தோடி ஒருவர் பேரிலொருவர் வீழ்ந்து பிணக்காடாக யிறந்தார்கள் ஒருகோடி யவனர்கள்.—எ-று. (கஎ)

யானைப்படை வாளிப்படைபட வளறுநின்
றேனைக்குதி ரைப்படைமெய்பி ளவொத்தோடிற்
சேனைத்தலை வன்பாசறையுஞ் சிதைவாக்கி
யேனைப்படை வீரருமோட்ட மெடுத்தாரால்.

(இ-ள்.) ஆனைக்கூட்டங்களெல்லாம் அஸ்திரங்கள்பட்டுருவி விழுந் திறக்கவும், பின்னணிக்குதிரைப்படையானது சின்னபின்னமாகச் சிதைந்தோடும்படி அஸ்திரப்பிரயோகஞ் செய்து சேநாதிபதிநிற்கின்ற டேரணி முழுதுங் கலைத்துப் பாடிவீடெரித்தூளி செய்தபின்,மற்றுள்ள வீரர்களெல்லா முறிந்தோடிப் போனார்கள்.—எ-று. (கஅ)



மலைபோல்வரு கரிகள் முறிந்திடும் வகைகூறி
னலைபோரிடை பணிமலையார்முன் னுரித்தாரென்
றலைபோல்மத வெள்ளமடங்கிட வமரோர்ந்து
சிலைபோல்வரு தன்படைமுறியச் செருவாடும்.

(இ-ள்) மலைபோல்வருகின்றயானைக்கூட்டங்கள் சின்னப்பட்டுத்தெறிகெட்டோடு முறைமையைச் சொல்லுமிடத்து முற்காலம் போர்க்களத்தில்நாககிரியீசர்நம்மை யுரித்துப்போத்தாரென்று பயந்து கடல்போலும்பெருகப்பட்டமும்மதப்பிரவாகம் அடங்கச் சமர்சாய்ந்து தமதுகூட்டத்தணி யெல்லாமுறியச் செருக்களத்தில் கையோய்ந்து வீழ்ந்துவாடி மயங்கி இறந்துபோனது போலும் —எ-று,

கைபற்றனர் காலகடுணிந்தனர் கணையாலே
மெய்யற்றனர் கம்பிகொளச்சிள விழுகின்றார்
மொய்யப்பட வம்பொடு சாய்பவர் முள்ளேனம்
வையத்து விழுந்தனபோல மடிந்தார்கள்.

(இ-ள்) காலாட்படைகளெல்லாம் மூவரசர்கள்விடும் அஸ்திரப்பிரயோகத்தினாலே கைகளற்றவர்களுங்,கால்களற்றவர்களும்.உடம்பெல்லாம் அம்புகள் ஊடுருவித்துளைபட்டு கம்பியச்சுகள்போல் விழுகின்றவர்களும், அனந்தங்கோடி, அம்புகள் உடம்பெல்லாம் தைத்து சாய்ந்து விழுபவர்கள் முட்பன்றி பூமியில் வீழ்ந்தது போலும் அனேகம்பேர் யவனர்கள் மடிந்துவிழுந்தார்கள் —எ-று. (உ0)

துண்டம்படு கின்றவர் சென்னி துணிந்தோர்க
ளண்டம்புக நின்று தமங்க மெனக்கூறி
விண்டங்கினர் மண்டலமெங்கும் விழுந்தோர்பால்
கொண்டுந்திய குருதியின்வேலை கொதித்தோடும்.

(இ-ள்) கண்டதுண்டமாக விழுகின்றவர்கள் தலைகளற்று விண்ணிற்போய்த் தங்கள் தங்கள் தேகம் இதுவென்று சொல்லி விண்ணுலகம் அடைந்தார்கள். பூமியில் விழுந்தபேர்கள் மேனியில் பொங்கிவழிந்து கடல்போலுங் கொதித்துப்பெருகினது ரத்தவெள்ளங்கள்.—எ-று. (உக)

வேறு.

கூளிகளெமக்கிவை கொடுத்தன ரெனப்போய்
வாளிகள் பறித்தவர் நிணத்திணை மடுக்கும்
காளியை வணங்குவர் களத்துமிவை காணே
மீளிகடமக்குளிவர் மிக்கென விளம்பும்.

(இ-ள்.) அப்படிமடிந்த போர்க்களத்தில் வந்து கூட்டமிட்ட பசாசுகள்நமக்கெல்லாம் நல்லவிருந்துசெய்தார்கள். வீரர்களென்று பாடிக்கொண்டுபோய் அம்புகளைப்பிடுங்கி இரத்தங்களைக்குடித்து நிலங்களைப் புசிக்குங் காளிகாதேவியை வணங்கிச்சிலபேய்கள் சொல்லுவது. முற்காலத்தரசர் யுத்தங்களில் இவ்வளவுபுசிப்பும் நாமறியோமிந்தப்போர்களத்தில் நிறைப்புசித்தோம். வெற்றிவீரர்கள்மஹாசத்தவீரர்களென்று புகழ்ந்து சொல்லுஞ்சிலபேய்கள்.—எ-று (உஉ)

தக்க னமரிற்பொரு சமர்க்கள மடைந்தே
யொக்கவே மிசைந்தெம துறும்பசி தணிந்தெ
மக்களமிதற்கு நிக ரன்றுய ரணங்கின்
விக்குணவு பெற்றனமிவ் வீரர்வடி வர்களால்.

(இ-ள்.) தக்கன்செய்த யாகத்தைவீரபத்திர சுவாமிவந்தழித்தசமர்க்களத்துக் குப்போயினேம். அனைவரும்பிணங்கள் புசித்துப்பசிதீர்ந்தோம். அந்தப்போர்க்களமும், இந்தச்சமர்க்களத்திற்கு நிகரல்ல. இங்கே குருதி மாமிசங்கள் நிறையப்புசித்தோ மிந்தவீரர்களாகிலும் ஆண்மையிலு முயர்ந்தவர்களென்று பேய்களெல்லாங் கொண்டாடிப்பாடிக் கொம்மையடித்தது. (உக)

குருவற்றன ரகுதிப்பிண குவையிற்றிரடரவே
வருதுர்ச்சன யவனப்படை மடிவுற்றிடைமுழுகி
செருவற்றனர் புறமற்றனர் திசைகெட்டவராஞர்
கருவற்றனர் திருவற்றனர் கதியற்றனரெனவே.

(இ-ள்.) திக்கற்றுவிழுந்த அகுதிப்பிணங்கள் மலைபோலுங்குவிய துர்ச்சனராகிய யவனர்படையாவுமடிந்து இடையுராமூழ்கவேஉயுத்தமடங்கிற்று. தெறிகெட்டுதிசைகெட்டோடிப் போனவர்களனந்தங்கோடி. யவனர்கள் கருவற்றுக்குருவற்றுக் கதியுமற்றார்கள்.—எ-று. (உச)

அதுகண்டுள வவனர்க்கிறை யணிவெம்படையுடனே
பதிகொண்டமர் செய்யும்பணி பணிவெற்பை யடைந்தான்
மதிகொண்டுய ரொருமூவர் மலைத்தாள்வரை யாண்டா
ரெதிர்கொண்டுயர் வெற்பேற வெழுந்தார் யவனேசர்.

(இ-ள்.) அவ்வாறுனதுகண்டு யவன ராஜன் மகாகோபத்துடனே கையில்பிடித்த வாளாயுதங்களை வீசிக்கொண்டு மலைத்தலத்தை வளைந்து, மூவர்ாவீரகளுடனே மலைந்து போர்பொருதி செயித்தார்கள். அப்போதங்ஙனம் அமர்சாய்ந்தனர் வீரர்கள்.யவனர்கள் ஆர்ப்பரித்து உயர்ச்சியுடையமலையின்பேரி லேரும்படியாக யவனராஜர்கள் யெழுந்துநடந்தார்கள்—எ-று. (உ௫)

இகல்வீமண னெழிலோவண னிடையாமிரங் கணனோ
டகலாதபுர் செய்தேபணி யணிமாமலை யடியின்
மிகவாவிகள் விடலாலமர் விண்ணாடு புரக்கு
மகவானறி கின்றான் வெள்ளை மதயானையின் வந்தான்.

(இ-ள்.) வெற்றியுடைய மவீணன்,அழகிய ஓவணன், இரங்கணன் இவர்களுடனே பிரியாதபடி யுத்தஞ்செய்து அணிபொருந்திய பணிமலை யடிவாரத்தி லுசிதமான உயிர்களைவிட்டபடியினாலே தேவலோகாதிபதியான தேவேந்திரன் அறிந்து வெள்ளையானையின்மீது வந்தான்.—எ-று. (உ௬)

வந்தன்புடன் மூவோரையு மகிழ்வா லெதிர் கண்டே
சிந்தும்படி யவனர்ப்பெரு திரள்சாய வெறிந்தான்



முந்துங்கணை வச்சிரப்படை மூாண்முற்று முருக்கிப்
பிந்துஞ்சில யவனப்படை பெரிதந்தக ரானார்.

(இ-ள்.) அப்படிதேவேந்திரன்வந்து அன்புடனே மூன்றரசரையும் மகிழ்ச்சியாக யெதிர்கொண்டு கண்டு மலையேரிவருகிற யவனர் கூட்டங்களெல்லாஞ்சாய்ந்துவிழும்படியாகத் தனது வச்சிராயுதத்தைவிட்டு சருவசங்காரஞ்செய்து யவனராஜாக்களையுஞ் செயித்துவெற்றிகொண்டான். பின்னணியில்வந்த யவனர்படைகளெல்லா மிகவும் அந்தகராய்ப்போனார்கள்—எ-று. (உஎ)

அந்தோபணி மலைதன்னை யடைந்தோமிது பட்டோம்
நொந்தோமினி யிடமேதென நொய்யாகி மடிந்தார்
பைந்தோடொரு குழைபங்கர் பணிக்கார்வரையுடையார்
முந்தோகையின் மூவர்க்குமோர் முத்தித்திற மருள்வார்.

(இ-ள்.) அப்படி யந்தகாரகி விழுந்த யவனர்கள் அய்யகோ! நாமிந்த நாககிரி தலத்தில் வந்துசேர்ந்து அதற்கிடையூறுசெய்தபடியினாலே மிகவும்நொந்துமுறிந்தோம். இனி நமக்குப் பிழைக்க விடமில்லையென்று மனவியாகுலத்துடனேமடிந்துபோனார்கள். அப்போ தங்ஙனம் உமையொருபாக ரெழுந்தருளி யடி மலையிற்சேர்ந்தருளிய மூவரசர்க்கும் யோகவின்பமான மோக்ஷசாம்பிராச்சியம் அருளும்படிக்குக் கருணைகூர்ந்தார்.எ-று. (உஅ)

படுவாருறும் முயிரும்பல தனமுந் தருகின்றோ
முடுமாபதி முகவல்லிய ருடனும்பதி யும்வீ
விடுமாவிகள் பெறுவீரென விமலன்புக லுதலுங்
கடுவாணவ முண்டோயிரு கழல் வேண்டுது மென்றார்.

(இ-ள்.) சமர்க்களத்திற் பட்டிறந்துபோன படைவீரர்களனைவரையும், உங்களுயிர்களையும், பல நிதிகளையுந் தருகிறோம். சந்திரன்போல் முகமழகிய ஸ்திரீகளுடனேகூடி உங்கள் நகரங்கள் சேர்ந்து வாழ்வீர்களாக. இறந்துபோன ஜனங்களுடனேகூடி உங்கள் நகரங்கள் சேர்ந்து வாழ்வீர்களாக. அப்படி வரந்தருகிறோமென்று சுவாமி சொல்ல உயிர்களெல்லாம் பெறுவீர்கள். அப்படி வரந்தருகிறோமென்று சுவாமி சொல்ல வுமின்னமுங் கடிதாகிய ஆணவமுண்டோ, தேவரீருடைய சீர்பாதங்களே எங்களுக்கு வேண்டியதென்று வீரர்கள் சொன்னார்கள்.—எ-று. (௩0)

அவ்வாறு பணிக்கார்வரை யானுள்ள முகந்தே
மைவாள்பணி மலைகாவல னென்றே பெயர் வினவிக்
கைவாள்படை யுடனேயடி யார்வல்வினை கடிந்தே
இவ்வார்பணி மலைகாத்தரு ளென நல்வர மீந்தார்.

(இ-ள்.) அந்தப்பிரகாரம் திருநாககிரி ஈசுரன் திருவுள மகிழ்ச்சியாகி முகில் சூழ்ந்த பணிமலை காவலனென்று பெயரிட் டெழுந்தருளி நின்று வந்து அடியார்கள் நல்வினைகளெல்லாந் தீர்த்தருளி நமது அன்பாக அழகிய பணிமலைத் தலத்தைக் காத்தருளுவீரென்று நல்ல வரங்கொடுத் தருளினார் சுவாமி.எ-று. (௩௧)

என்றன்றுமை பாகன்கிரு பையினா லினி தருள
வன்றின்று தொடங்கிப் புவி யழிகாலமு மழியா

வன்றன்பிற லொடுமீசன் மலர்த்தாளிணைவணங்கி
நின்றன்புடை யடியார்கள் நினைத்தந் திருவருள்வார்.

(இ-ள்.) என்றிப்படி யுமையொருபாகர் கிருபாகனுக்கிரகஞ் செய்தருள அன்றுமுதலின்று வரையில் உலகமழிகின்ற காலத்திலும், அழியாமல் வலிய திறம் பொருந்திச் சிவனது பாதார விந்தங்களை வணங்கித் துதித்துக் கொண்டு மலைகாவலராக வெழுந்தருளிநின்று அன்புடைய அடியார்கள் நினைவின் பிரகாரம் திருவருள் கொடுத்தருளுகின்றார்கள்.எ-று. (௩௧)

அறுமாமுக னருளாலுமைம் முகநாயக னருளின்
பெறுகாரண வகையாலுமெய் பேராவகை யுற்ரு
ருமாறணை மிதுவென்றிவ் வுலகோர் பகருகையால்
மறுகாரணம் வேண்டாமிவர் வரமே நல்ல வரமே.

(இ-ள்) ஆறுமுகக் குமாரருடைய திருவுளக் கிருபையினாலும், ஐந்துமுகப் பரமேசுரன் றிருவருட் காரணமகிமையினாலும், அழிவில்லாமல் விளங்கி யிருக்கின்றார்கள். இது வொரு காரணம். சிவனது கிருபையினா லுண்டாகியதென்று உலகமெல்லாஞ் சொல்லுகிறபடியினாலே வேறொரு காரணார்த்தங்களும் வேண்டாம். இந்தப்பணிமலை காவலருடைய வரமே நன்மையானவரம்.—எ-று. (௩௨)

வேறு.

அணிமலைகாவல னரும்பொற் கொங்கையாள்
பணிமலைகாவலர் பதங்க ணோக்கியே
துணிமலை வெம்பவந் தொலையவாண்டவர்
றணிமலர் வேந்தனு மிகுதுவேண்டுமால்.

(இ-ள்.) அழகிய மலை அரசன்மகளை வாமபாகத்திற் சேர்த்தருளிய அர்த்தநாரீசுரருடைய பாதாரவிந்தங்களையும் பணிமலைகாவலருடைய பாதங்களையும் யாதாமொருவர் கண்ணாரத் தெரிசனஞ் செய்து வணங்கித் தோத்திரஞ்செய்து பிறப்புத் தோறும் வந்து போராடுகின்ற வெய்யபாவங்களெல்லாந் தொலைந்து போக ஆண்டுரட்சித்தருள்வது கண்டு மலர்வேந்தனுமிந்தப் பதம்வேண்டுவார்.

இங்கிதுகாதைகேட் டினிதுபோற்றினோ
ரங்கவர்க்கருளுவோ ரறிவிற் கற்றுளோர்
பொங்கு பாவங்கள்போய்ப் புகழுஞ் செல்வமுந்
தங்கிய சங்கரன் சரணஞ் சேர்வரே.

(இ-ள்.) இங்ஙன மிந்தப்புராணக் கதையைக்கேட்டு இன்பமாகப் போற்றி செய்பவர்கள், அவர்களுக்குக் கொடுப்பவர்கள், அறிவினாலே கற்றவர்கள் இவர்களு[illegible] பாவங்களெல்லாந்தீர்ந்து கீர்த்தியுஞ் செல்வமும் பொருந்தி யிம்மையில் வ[illegible] ழ்ந்து[illegible] மறுமையில் பரமேஸ்வரனுடைய பாதாரவிந்தங்களிற் சேர்வார்கள்.

பணிமலை காவலர் சருக்கம் முற்றும்.

[illegible]க சருக்கம் ௬௰-க்கு திருவிருத்தம் ௲௨௱௨௰௧.

திருச்சிற்றம்பலம்.

அர்த்தநாரீசுரர் துணை.

120797